ONE TIME ASSISTANCE.

# அருளின் ஆற்றல்

(வாழ்வும் தொண்டும்)

தி. சு. அவினாசிலிங்கம்

ADU LIB
102229

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
கோயமுத்தூர் - 641 020

வெளியிடுபவர்

© செயலர்
ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
கோயமுத்தூர் - 641 020

102229

V441 36w AVI

31N1

முதல் பதிப்பு

இந்நூலை வெளியிடுவதன் முழு செலவையும் வித்யாலய முன்னாள் மாணவர் சங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

விலை ரூ. 60/-

அச்சிட்டவர் :
ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்
பிரிண்டிங் பிரஸ், கோயமுத்தூர் - 641 020

ONE TIME ASSISTANCE

# முகவுரை

அனைவராலும் 'அய்யா' என்று அன்புடன் அழைக்கப்படும் வித்யாலய நிறுவனர் திரு. தி. சு. அவினாசிலிங்கம் தமது 'The Sacred Touch' என்ற நூலை 1986-ல் வெளியிட்டார். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேர்ச் சீடரான சுவாமி சிவானந்தரின் அருளாசியைப்பெற்ற அய்யா, தாம் ஆற்றிய தொண்டுகள் அனைத்தும் குருமஹராஜின் அருளையே அடிப்படையாகக் கொண்டது என்று அடிக்கடிக் கூறுவார். இந்நூலின் தமிழாக்கம் 'அருளின் ஆற்றல்' என்ற தலைப்போடு வெளிவருவது மிகப் பொருத்தமானதே!

அவர் ராமகிருஷ்ண சங்கத்துடன் தொடர்பு கொண்டது, சுவாமி சிவானந்தரின் அருள் பெற்றது, மகாத்மா காந்தியடிகளின் தேசத் தொண்டினால் கவரப்பட்டது, நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டது, வித்யாலயத்தைப் படிப்படியாக வளர்த்தது போன்றவைகள் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன. ஆங்கிலப் பதிப்பிற்கு எழுதிய தமது முன்னுரையில் ராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷன் உபதலைவர் ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதானந்தர், ''இந் நூலாசிரியர் அவர்தம் சுயசரிதையை எழுதினாலும், இந்நூலைப் படிப்பவர்களை அவர், நம் தாய் நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியத்திற்கே அழைத்துச் செல்கிறார். பகவான் ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தியடிகள் போன்ற ஆன்றோர்கள் நமது பண்டைய பண்பாட்டை நவீன காலத்திற்கேற்ப மாற்றியமைத்ததைப் பற்றியும், குழந்தைகள் உட்பட லட்சக்கணக்கான மக்களிடம் உயர்ந்த ஒழுக்கம், நாட்டுப் பற்று, தியாக மனப்பான்மை தொண்டுள்ளம் ஆகிய சீரிய பண்புகளைத் தோற்றுவித்த சுதந்திரப்போராட்டம் பற்றியும் இந் நூலிலிருந்து அறிந்து கொள்கிறோம்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

அய்யா அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவரும், வித்யாலய வளர்ச்சியில் ஆரம்ப காலத்திலிருந்து ஈடுபட்டவரும் தற்போது மகாராஷ்டிர மாநில ஆளுனருமான திரு. C. சுப்பிரமணியம் அவர்கள் இந்நூலுக்கு அளித்த தமது மதிப்புரையில், "Sacred Touch" (அருளின் ஆற்றல்) என்ற இந்நூல் தனிப்பட்ட ஒருவரின் சுயசரிதத்தைச் சொல்லுவதோடு இதன் ஆசிரியரின் அரை நூற்றாண்டு காலத்திற்கும் அதிகமான சிறப்பான தியாக வாழ்க்கையையும் படம் பிடித்துக் காட்டுகிறது. நெஞ்சை

V44136ய AVI
31N1
102229
LIBRARY

நெகிழ்விக்கும் வாழ்க்கை நிகழ்ச்சிகள், சோதனைகள், இடர்பாடுகள், போராட்டங்கள், தியாகங்கள், உன்னத உணர்ச்சி அனுபவங்கள் ஆகியன நிரம்பிய ஒரு தேசபக்தர், சமூக சீர்திருத்த வாதி, கர்மயோகியின் வாழ்க்கையை இந்நூல் விளக்குகின்றது'' என்று கூறியுள்ளார்.

ஆங்கில நூலைப் படித்த பல அன்பர்கள் இந்நூல் தமிழில் வெளிவந்தால். தமிழ் மக்கள் மிகவும் பயனடைவார்கள் என்று அடிக்கடிக் கருத்துத் தெரிவித்தார்கள். வித்யாலயம், வைர விழா கொண்டாடும் இச்சமயத்தில் வித்யாலயத்தின்பால் ஆழ்ந்த ஈடுபாடுகொண்ட முன்னாள் மாணவர்கள், அய்யா அவர்கள் மீது தாங்கள் கொண்டுள்ள அன்பையும், மரியாதையையும் வெளிக்காட்டும் விதத்தில் இந்நூலை வெளியிடுவதற்கான செலவு முழுவதையும் தாங்களே ஏற்றுக்கொண்டது மிகவும் பாராட்டுக்குரியது. வித்யாலயத்தின் சார்பாக அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்நூல் வெளி வருவதில் பலரும், பல வகைகளில் உதவியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

வித்யாலய உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. K. அண்ணாமலை அவர்கள் பல அலுவல்களுக்கிடையே, சிரமம் பாராது, அன்புடன், குறுகிய காலத்திலேயே இந்நூலை மொழிபெயர்த்துத் தந்துதவினார். அவருக்கும் எமது நன்றி.

தமிழ் மக்கள், குறிப்பாக மாணவ சமுதாயம், இந்த நூலை ஆழ்ந்து படித்து இதிலுள்ள சீரிய கருத்துக்களை நன்கு உணர்ந்து தங்கள் வாழ்க்கையை, பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் காட்டிய லட்சியப் பாதையிலே அமைத்துக் கொள்வார்களேயானால் இந்நூலை வெளியிடுவதன் நோக்கம் நன்கு ஈடேறும். எல்லாம் வல்ல இறைவன் நமக்கு அருளையும், ஆற்றலையும் அளிப்பானாக!

வித்யாலய தினம்
3-2-1991
வித்யாலயம்

அன்புடன்,
இறை பணியில்,
**சுவாமி தன்மயானந்தர்**

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அருளின் ஆற்றல் | ... | 1 |
| 2. | ஆன்ம எழுச்சி | ... | 12 |
| 3. | விவேகானந்தரும், காந்தியடிகளும் | ... | 20 |
| 4. | ராமகிருஷ்ண மடமும், ராமகிருஷ்ண மிஷனும் | ... | 27 |
| 5. | கல்வி—சுவாமி விவேகானந்தரின் கருத்துக்கள் | ... | 37 |
| 6. | இளமைப் பருவமும், குடும்பப் பின்னணியும் | ... | 48 |
| 7. | ராமகிருஷ்ண வித்யாலயத்தை நிறுவுதல் | ... | 58 |
| 8. | பொதுத் தொண்டிற்காக யாசித்தல் | ... | 80 |
| 9. | சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுதல் | ... | 86 |
| 10. | சிறை வாசம் | ... | 99 |
| 11. | இரண்டாவது சிறை வாசம் | ... | 110 |
| 12. | காந்தியடிகளுடன் ஒரு வாரம் | ... | 124 |
| 13. | வித்யாலயத்தில் காந்தியடிகள் | ... | 139 |
| 14. | மத்தியச் சட்டசபையில் | ... | 146 |
| 15. | இமயமலைப் பயணம்—ஓர் ஆன்மிக அனுபவம் | ... | 154 |
| 16. | முதல் பத்தாண்டுகளின் அனுபவங்கள் | ... | 167 |
| 17. | 'செய் அல்லது செத்து மடி'—கடைசி அறைகூவல் | ... | 179 |
| 18. | அற்புதக்காட்சியும், ஆறுதலும் | ... | 190 |
| 19. | சுதந்திரம் புலர்ந்தது | ... | 195 |

| | | | |
|---|---|---|---|
| 20. | சேவா கிராமத்தில் | ... | 207 |
| 21. | 1948 ஜனவரி 30 | ... | 215 |
| 22. | இந்தியா ஒன்றுபடுதல் அல்லது இந்திய சுதேச அரசுகளின் இணைப்பு | ... | 224 |
| 23. | கல்வி அமைச்சராக | ... | 229 |
| 24. | தமிழ்க் கலைக்களஞ்சியம் | ... | 238 |
| 25. | பெண்கல்விக்கு ஓர் அறக்கட்டளை | ... | 246 |
| 26. | காந்தி நூல்களின் தமிழ் வெளியீடு | ... | 251 |
| 27. | சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா | ... | 259 |
| 28. | திருக்குறள் ஆராய்ச்சி | ... | 264 |
| 29. | வித்யாலயம் வளர்கிறது | ... | 273 |
| 30. | மனையியல் கல்லூரி | ... | 287 |
| 31. | நாடாளுமன்றத்தில் | ... | 294 |
| 32. | உலகப் பயணம் | ... | 305 |
| 33. | அமெரிக்கக் கல்வி முறை | ... | 321 |
| 34. | கிராம வளர்ச்சி மையம்-விவேகானந்தபுரம் | ... | 327 |
| 35. | வித்யாலயப் பொன் விழா | ... | 333 |
| 36. | மனையியல் கல்லூரி வெள்ளி விழா | ... | 342 |
| 37. | ஸ்ரீ ராமகிருஷ்ணர் குருபூஜை | ... | 347 |
| 38. | வித்யாலய வைர விழா | ... | 352 |
| 39. | இந்தியத்தாய் அழைக்கிறாள்! | ... | 358 |



பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்



தூய அன்னை சாரதாமணி தேவியார்

# 1. அருளின் ஆற்றல்

அது 1921-ஆம் ஆண்டு. அப்பொழுது எனக்கு வயது பதினாறு, சென்னையில் இளங்கலை வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அச்சமயத்தில் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. அவரை சுவாமி விவேகானந்தரின் குரு என்றளவில் மட்டும் அறிந்திருந்தேன். அதற்குமேல் அவரைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஒரு நாள் எனது நண்பர் சின்னு (பிற்காலத்தில் சுவாமி சித்பவானந்தர்*), சென்னையில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் இருப்பதாகவும், ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேரடித் துறவிச் சீடர்களில் இருவர் சமீபத்தில் அங்கு வருகைதர இருப்பதாகவும் என்னிடம் கூறினார். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேரடி சீடர்களாகவும், சுவாமி விவேகானந்தரின் சகோதரத் துறவிகளாகவும் விளங்கும் இருவரை தரிசிப்பதென்பது மிகவும் சாதாரணமானதன்று என்பதனால் என் மனத்துள் மிகுந்த ஆர்வம் தோன்றியது. ஆகவே நாங்களிருவரும் மடத்திற்குச் செல்லத் தீர்மானித்து, அவ்வாறே ஒரு நாள் மாலை கல்லூரி முடிந்ததும் அங்கு சென்றோம்.

அவ்விரு சீடர்களும் 'ராஜா மஹராஜ்' என்று மரியாதையுடன் அழைக்கப்பெறும் சுவாமி பிரம்மானந்தரும், 'மஹாபுருஷ் மஹராஜ்' என்று மதிப்புடன் அழைக்கப்பெறும் சுவாமி சிவானந்தரும் ஆவர். அச்சமயம் அவ்விருவரும் முறையே ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தின் தலைவரும், துணைத்தலைவருமாக விளங்கினர். அவர்களைத் தரிசிக்க மடத்தில் ஒரு சிறு கூட்டமே காத்திருந்தது. மற்றவர்களோடு சேர்ந்து நாங்களும் சுவாமிகளின் திருவடிகளில் வணங்கி எழுந்தோம். அவர்கள் எளிமையாகக் காணப்பட்டார்கள்; மிகுந்த அன்புடன் அனைவருடனும் உரையாடினர். சுவாமி பிரம்மானந்தர் மட்டும் அதிக அகமுகப்பட்டவராகக் காணப்பட்டார் ; அதிகம் பேசவில்லை. ஆனால் சுவாமி சிவானந்தர் தடையின்றிப் பேசினார். எங்கள் பெயர், எங்கள்

---

* சுவாமி சித்பவானந்தர் 1985 நவம்பர் 14-ஆம் தேதி மறைந்து விட்டார்.

கல்லூரி, நாங்கள் பயிலும் வகுப்பு, நாங்கள் தங்கியுள்ள இடம் ஆகியவற்றைப் பற்றி அன்புடன் விசாரித்தார். நாங்கள் அவரிடம் விடைபெற்றபொழுது, எங்களைத் திரும்பவும் வருமாறு கூறினார். ஆகவே நாங்கள் மறு நாள் மாலையிலும், தொடர்ந்து அடுத்த நாள் மாலையிலும் அவரைத் தரிசிக்கச் சென்றோம். அவரிடம் எங்களுக்கு ஏற்பட்ட கவர்ச்சியின் காரணத்தை எங்களால் அறிய முடியவில்லை. அக் கவர்ச்சியின் காரணமாகத் தொடர்ந்து ஆறு மாதங்கள் அவரைத் தரிசிக்கச் சென்றோம். அது மழைக்காலம். மழையில் நனைந்து கொண்டு நீரைக் கடந்து செல்லவேண்டும். இருப்பினும் அது ஒரு பொருட்டாக இருக்கவில்லை. எங்களைக் கண்டதும் மலர்ந்த முகத்தோடு வங்க மொழியில் ''பாலோ?'' (நலமா?) என்று வினவு வார். மட்டற்ற மகிழ்ச்சியோடு நாங்களும் 'ஆம் மஹராஜ்!' என்போம். இதற்கு மேல் பெரிய உரையாடல் ஒன்றுமிருக்காது. ஆனால், ஆச்சரியமாக, இதுவே எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை யும், மன நிறைவையும் அளித்தது. அவருடன் இங்ஙனம் ஏற்பட்டத் தொடர்பு, 1934-ஆம் ஆண்டு அவர் மகா சமாதியடை யும் வரைத் தொடர்ந்தது.

1923-ஆம் ஆண்டு நான் என் இளங்கலைப் பட்டத்தேர்வை எழுதி முடித்தேன். அப்பொழுது மஹாபுருஷ் மஹராஜ் அவர்கள் புவனேஸ்வரத்தில் தங்கியிருந்தார். அவரது அன்பும், பரிவும், கம்பீரமும், ஆன்மஒளியும் அவர்பால் என்னை வெகுவாக ஈர்த்தன. ஆகவே கோடை விடுமுறைக்கு வீட்டிற்குச் செல்வதற்குப் பதிலாக நான் புவனேஸ்வரம் சென்றேன். அவரைத் தரிசித்ததும் எனக்கு மிக்க மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர் என் உடல் நலம் பற்றியும், படிப்பைப்பற்றியும் அன்புடன் விசாரித்தார். பார்ப்பதற்கு சிறுவ னைப்போல் நான் காணப்பட்டதால் என்னால் எப்படித் தனியாக புவனேஸ்வரம் வரமுடிந்தது என வினவினார். இங்குதான் அவர் எனக்கு மந்திரோபதேசம் அளித்து அருளினார். இச்சமயத்தில்-தான் நான் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றேன். சில நாட்கள் கழித்து, புனிதத்தலமான பூரியைத் தரிசித்துவரும்படிக் கூறினார். நான் அவரிடம் விடைபெற்றபொழுது, ''நான் உனக்கு என்ன கொடுக்கட்டும்?'' என்று கூறியவாறு, பக்தர் ஒருவர் அவருக்கு அளித்திருந்த தங்கப்பூண்போட்ட பென்சில் ஒன்றை எடுத்து, ''இதை வைத்து நான் என்ன செய்யப்போகிறேன். நீ வைத்துக்கொள்'' என்று கூறி அதை ஏற்றுக்கொள்ளுமாறு என்னை வற்புறுத்தினார். ஏற்கனவே நான் தங்கமோதிரம் ஒன்றைத் தொலைத்திருக்கிறேன். ஆகவே விலையுயர்ந்த பொருள் எதையும் வைத்துக் கொள்ள விரும்பாத நான், ''இல்லை மஹராஜ்! இதை

நான் தொலைத்து விடக்கூடும். எனக்குத் தங்கள் ஆசிகள் மட்டும் இருந்தால் போதும்'' என்று கூறினேன். ''சரி'' என்று கூறி அவர் என்னை ஆசீர்வதித்தார். அன்றிலிருந்து அந்த நல்லாசிகள் என்றும் எனக்கு உறுதுணையாய் இருந்து வருகின்றன. எனக்குப் பல துன்பங்களும், தொல்லைகளும், பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன. ஆனால் அவருடைய நல்லாசிகள் எனக்கு அவற்றை எதிர்த்து நிற்கக் கூடிய வலிமையை அளித்துள்ளதை நான் உணர்கிறேன்.

இதற்கிடையில் சின்னு (சுவாமி சித்பவானந்தர்) துறவு வாழ்க்கையை ஏற்று ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் சேர்வதற்காக கல்கத்தாவின் அருகிலுள்ள பேலூரிலிருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைமையகத்திற்குச் சென்றிருந்தார். அவரைச் சந்திக்க நான் கல்கத்தாவிற்குச் சென்றேன். அதுதான் நான் முதன் முதலாக பேலூர் மடத்திற்குச் சென்றதாகும். அங்கு கங்கைக் கரையில் திகழ்ந்த புனித சூழ்நிலையும், அங்கிருந்த பல சாதுக்களும், பிரம்மச்சாரிகளும் தங்களுடைய காரியங்களில் பக்தியுடனும், ஈடுபாட்டுடனும் மூழ்கியிருந்த காட்சியும் என்னை மிகவும் கவர்ந்தன. என் வாழ்க்கையில் மடத்துடன் எனக்கு ஏற்பட்ட நீண்ட தொடர்புக்கு அதுவே தொடக்கமாகும்.

மஹாபுருஷ் மஹராஜ் அவர்களைப் புவனேஸ்வரத்தில் சந்தித்தபிறகு தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் பேலூர் மடத்திற்குச் சென்று ஐந்து அல்லது ஆறு வாரங்கள் அவருடன் நான் தங்குவதுண்டு. சில ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் அவருடன் நீண்ட நாட்கள் தங்கி அவருக்குச் சேவை செய்யும் பேற்றை நான் குன்னூரிலும், உதகையிலும் பெற்றேன். இவ்விரு இடங்களிலும் அவர் பல மாதங்கள் தங்கியிருந்தார். அப்பொழுது அவருடன் தங்கி அவரை அடிக்கடி காணவும், அவருடன் உலாவச் செல்லவும், அவர் மக்களுடன் பழகும் விதம், சந்தர்ப்பங்களைக் கையாளும் முறை-இவற்றை அறியும் வாய்ப்பினையும் பெற்றேன். அவருக்கு உணவு பரிமாறுதல், பாத சேவை செய்தல் போன்ற பல அரிய சேவைகளைச் செய்யும் பேறினையும் பெற்றேன். அவருடன் நெருங்கிப் பழகப் பழக அவரது ஆன்மிக நிலையின் மகத்துவத்தை என்னால் உணர முடிந்தது.

சுவாமி விவேகானந்தரின் 'சந்நியாசி கீதம்' என்ற பாடலை நான் விரும்பிப் படிப்பதுண்டு. அது எழுச்சியூட்டும் ஓர் அற்புதப் பாடலாகும். அதிலிருந்து சில பகுதிகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :

''வாழிய மங்களம்'' என உலகில்
வாழ்பவர்களெல்லாம் சொல்லுங்கள்.

''பாழுறு தீமைகள் என் வழியாய்ப்
பரவிடவேண்டாம்'' என்னுங்கள்.
சீலம் விளங்கும் நெஞ்சத்தில்
சிதையா உறுதிகொள் நற்றுறவீ !
''மேலோர் கீழோர் என்பவரில்
மேவியிருப்பவன் நானேதான்.
இங்கே, அங்கே, இந்த நிலம்
இழிந்த நகரம் எழிற்சொர்க்கம்
பொங்கும் கலக்கம் மனத்துக்குள்
பூக்கும் விருப்பம் நான்வேண்டேன்''
எனநீர் சொல்லி உமை நித்தம்
இறுக்கும் தளைகளை அறுத்தெறிக.
தினமும் ஓம் தத் ஸத் ஓம் என்று
செப்பி மகிழ்ந்து திளைத்திடுக.

ஓம் தத் ஸத் ஓம் என நீங்கள்
உள்ளம் உருகச் சொல்லுங்கள்

எப்படி உடலம் இருக்கிறது?
எப்படி மறைகிற தென நித்தம்
கப்பிய கவலை பெருகிவரக்
கருதிடவேண்டாம் இனிமேலே.
உரிய பணி முடித்ததின்பின்
ஓடும் கர்ம நதிப்புனலின்
பெருக்கில் மிதந்து போகட்டும் !
பெரிதாய் இதற்கொரு சிந்தனை ஏன் ?
மேனியில் மாலைகள் போட்டாலும்
மெத்த வருத்தி உதைத்தாலும்
ஏனென நினைந்து வீணாக
இதயம் துன்பப்பட வேண்டாம்.
புகழ்பவர், புகழைப் பெற்றிடுவோர்
புழுதியை வாரி வாரிநிதம்
இகழ்பவர் இகழப் பட்டிடுவோர்
எல்லாம் ஒருவர் எனும்போதில்
புகழ்ச்சி இகழ்ச்சி என்பதெலாம்
புவியில் என்றும் ஒன்றேதான்
அகத்தில் இதனை உணர்ந்தினிய
அமைதியதனைக் கொள்ளுங்கள்

உறுதியை உடைய நற்றுறவீ !
ஓம் தத் ஸத் ஓம் சொல்லுங்கள்.

இப் பாடலில் சுவாமிஜி குறிப்பிட்டு இருக்கும் நற்பண்புகளைக் கொண்ட மனிதர்கள் இவ்வுலகில் என்றாவது வாழ்ந்திருப்பார்களா என்று நான் வியந்ததுண்டு. ஆனால் மஹாபுருஷ்ஜி அவர்களின் வாழ்க்கையை நுணுகி அறிந்தவர்கள் அத்தகைய மாமனிதர் ஒருவர் நம் கண்முன்னே ஊனோடும், உயிரோடும் வாழ்ந்துகொண்டிருப்பதை அறிவர். அவர் குன்னூரில் இருந்த பொழுது நாட்டின் முக்கியமான பிரமுகர்கள் பலர் அவரைக் காண வந்தனர். கொச்சி மஹாராஜா அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கியதை நான் கண்டேன். அப்போதைய சென்னை மாநில அரசுத் தலைவர்கள் பலரும் அவரைக் காண வந்தனர். ஆனால் இத்தகைய உயர்ந்த தலைவர்கள் தம்மைக் காண வந்தபோதிலும் மஹாபுருஷ்ஜி அவர்களின் இயல்பில் எவ்விதப் பெருமிதமோ, மாற்றமோ தோன்றவில்லை. மாருக, வழக்கமாக கேட்கும், ''எப்படி இருக்கிறீர்கள்? நலம்தானே?'' என்னும் அன்பு வார்த்தைகளினால் அவர்களை விசாரித்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். அங்கிருந்த தோட்டக்காரர்களும், மற்றப் பணியாளர்களும் அவரைத் தரிசிக்க வந்தபோது அவர்களையும் அதே அன்புடனும், பரிவுடனும், மரியாதையுடனுமே நடத்தினார். ஒரு சமயம், செல்வந்தர் ஒருவர், மஹாபுருஷ்ஜி அவர்களுக்கு நல்ல வேலைப்பாடு மிக்க, விலையுயர்ந்த சால்வை ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார். மஹாபுருஷ்ஜி, அபூர்வமான பரிசு ஒன்றைப் பெறும் சிறுவனைப்போல, மிக்க மகிழ்ச்சியுடன் அந்த அன்பளிப்பைப் பெற்றுக்கொண்டார். அச்சால்வையைப் பிரித்துப் பார்த்து, ''ஆ! எவ்வளவு அழகாகவும், அற்புதமாகவும் இருக்கிறது!'' என்று வியந்தார். இதைக் கண்ட அச்செல்வந்தர் மன நிறைவுடன் திரும்பிச் சென்றார். சிறிது நேரம் கழித்து சிறுமி ஒருத்தி மஹாபுருஷ் மஹராஜைத் தரிசித்து வணக்கம் செய்ய அங்கு வந்தாள். அந்தச் சிறுமி மிகுந்த விருப்பத்துடனும், வியப்புடனும் அச்சால்வையையே பார்த்துக்கொண்டிருந்தாள். அச்சிறுமியின் ஆவலைப் பார்த்த அவர் அது அவளுக்கு வேண்டுமா என்று கேட்டார். அச்சிறுமி ஆவல் பொங்கும் விழிகளுடன், ''ஆம்'' என்று கூறினாள். உடனே அவர் அச்சால்வையை அவள் மேல் போர்த்திவிட்டு மிக்க மகிழ்ச்சியுடன்' ''நீ இதை வைத்துக்கொள்ளலாம்'' என்று கூறினார். களிப்பு மிகுதியால் துள்ளிக்கொண்டே அச்சிறுமி வெளியே ஓடிச்சென்ருள். இதைப் பற்றி பின்னர் யாருக்கும் எதுவும் தெரியாது. மக்கள் வந்து சென்றனர்; பணம் குவிந்து செலவிடப்பட்டது.; வந்த பரிசுப் பொருட்கள் பிறர்க்குக் கொடுக்கப்பட்டன. ஆனால் அவர் மட்டும் இவை எதனுலும் பாதிக்கப்படாமல் எப்போதும் அதே அருளுடன்,

குழந்தையைப் போன்று, அன்பும், பரிவும் மிகுந்தவராய் அனை வரையும் நேசித்துத் திகழ்ந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மார்பளவு திருவுருவப் படம் ஒன்றை என் மேசைமேல் வைத்துக்கொள்ள விரும்பினேன். அதற்காக நல்ல புகைப்படச் சட்டம் ஒன்றை வாங்கினேன். குருதேவரின் முழுஉருவப்படம் ஒன்றை வாங்கி அதை மார்பளவுவரைக் குறைத்து அச்சட்டத்தில் அழகாகச் சொருகி வைத்தேன். பின்னர் அதை மஹாபுருஷ் மஹராஜிடம் எடுத்துச் சென்றேன். அதைக் கண்டு அவர் என்னை போற்றிப் புகழ்வார் என்று சந்தேகமின்றி எண்ணி னேன். ஆனால் அதைப் பார்த்தவுடன் அவர் திடீரென்று சினம் கொண்டார். ''இந்த மார்பளவுப் படம் எனக்கு வேண்டாம். குரு தேவரின் புனிதத்திருவடிகள் எங்கே? அவருடைய திருவடிகள்தாம் நமக்குத் தேவை'' என்றார். இந்நிகழ்ச்சி குருதேவரின் மேல் அவருக்கிருந்த அளவற்ற பக்தியையும், ஈடுபாட்டையும் தெளி வாக்குகிறது. பல சமயங்களில் பக்தர்கள் பழங்களையும், மலர் களையும், பிற பொருட்களையும் கொண்டு வந்துகொடுப்பார்கள். அவற்றைக் கண்டு புகழ்ந்து அவர், ''இவற்றை குருமஹராஜுக்குக் காணிக்கையாக்குங்கள்'' என்பார். தம்மையே இறைவனின் திரு வடிகளில் சமர்ப்பித்துக் கொண்ட ஒருவர்க்கு இது அவருடைய இயல்பாகவே அமைந்து விடுகிறது.

ஒரு சமயம் நான் பேலூர் மடத்தில் இருந்தபொழுது ஒருநாள் கல்கத்தா செல்ல விரும்பினேன். மஹாபுருஷ் மஹராஜின் அனு மதிபெற்றபின் காலை உணவுக்கு முன்பே நான் புறப்பட்டேன். நான் சைவ உணவு உண்பவன் முட்டை கூட நான் உண்பதில்லை. பொதுவாக சைவ உணவு உண்பவர்கள், தாங்கள் புலால் உணவு உண்ணாமலிருப்பதைப் பற்றி மிகவும் பெருமைகொண்டு, மற்றவர்களைக் காட்டிலும் தங்களை உயர்ந்தவர்களாகக் கருதிக் கொள்கிறார்கள். அன்று நான் கல்கத்தா நகரை அடைந்த பொழுது எனக்கு மிகுந்த பசி. ஓர் உணவகத்திற்குச் சென்று ரொட் டியும் வெண்ணையும் கொண்டுவரச் சொன்னேன். வெண்ணை யைப் போன்று மஞ்சள் நிறத்தில் தோற்றம் கொண்ட பொருள் ஒன்று தடவப்பட்ட இரண்டு ரொட்டித் துண்டுகளைக் கொண்டு வந்தனர். அவற்றை உண்டுமுடித்தபின் அவற்றிற்குரிய தொகை யைச் செலுத்தியபோது நான் என்ன சாப்பிட்டேன் என்று கேட் டார்கள். ''ரொட்டியும், வெண்ணையும் சாப்பிட்டேன்'' என்று நான் கூறினேன். ''நீங்கள் சாப்பிட்ட ஆம்லெட் என்னாவது'' என்று பரிமாரியவன் என்னிடம் கேட்டான். இதைக் கேட்டவுடன் நான் மிகவும் அதிர்ச்சியுற்றேன். உண்ணக்கூடாத ஏதோ ஒன்றை

உண்டுவிட்டதாக எண்ணி மிகவும் மனவேதனைப் பட்டேன். நான் மடத்திற்குத் திரும்பிச் சென்றவுடன் மஹாபுருஷ்ஜியிடம் இதைப் பற்றிக் கூறினேன். என்மேல் பரிதாபப்படுவதற்குப் பதிலாக அவர் கைகளைக் கொட்டிச் சிரித்தவாறே, ''நல்லது! நல்லது! உன் அகங்காரம் போயிற்றா?'' என்று என்னைக் கேட்டார். இவ்வார்த்தைகள் என் கண்களைத் திறந்தன. தாம் சைவ உணவு உட்கொள்ளுபவர் என்று கர்வம் கொள்ளுவது எவ்வளவு அறிவீனமானது என்று உணர்ந்தேன்.

பேலூர் மடம், சென்னை, குன்னூர், உதகை ஆகிய இடங்களில் அவர் தங்கியிருந்தபொழுது நாள்தோறும் காலை வழிபாட்டிற்குப் பின் அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கச் செல்வோம். அப்பொழுது ஒரு சமயம் அவர் ''குருமஹராஜிடமும் சுவாமிஜியிடமும் வருபவர்கள் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள். அம்மகான்கள் உங்களுக்கு வழங்கியுள்ள கொள்கையில் உறுதியுடன் நில்லுங்கள். அவை உங்களுக்கு மன உறுதியை அளித்து நல்வழி காட்டும்'' என்று கூறினார்.

எளிமையும், பரந்த நோக்கும், ஈடிணையற்ற அன்பும் கொண்ட அவருடன் நான் இருந்த நாட்கள் மிகவும் புனிதமானவை. பனித்துளியின் தூய்மை கொண்ட அந்த அருள்மலர்கள் என் வாழ்க்கைக்கு புதிய நெறி ஒன்றைக் காட்டி என்னை ஓர் உயர்ந்த இலட்சிய வாழ்க்கைக்கு மாற்றியமைத்தது.

தவத்திரு மஹாபுருஷ் மஹராஜ் அவர்களுடன் இருந்த, மற்ற பல சாதுக்களுடனும் நெருங்கிப்பழகும் பெருவாய்ப்பு எனக்குக் கிடைத்தது. உதகை ராமகிருஷ்ண ஆசிரமம் தொடங்கிய நாளன்று எடுக்கப்பட்ட புகைப்படம் இன்று அங்கு மாட்டப் பெற்றுள்ளது. அதைக் காணும் போதெல்லாம் மஹாபுருஷ் மஹராஜ், மற்றும் பலருடன் அங்குப் பழகிய பலரின் நினைவும் மனதில் படர்கின்றது. அப்பொழுது சென்னை மடத்துத் தலைவராயிருந்து, பின்னர் பெங்களூர் ஆசிரமத்தின் தலைவரான சுவாமி யதீஸ்வரானந்தா, சுவாமி சாஸ்வதானந்தா, சுவாமி கங்கேசானந்தா, என் நண்பர் சின்னு (சுவாமி சித்பவானந்தா) ஆகியோரும், சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் இல்லத்தை நிறுவியவர்களுள் ஒருவரான திரு சி. ராமானுஜாச்சாரியார், திருவாளர்கள் கந்தசாமிப்பிள்ளை, கிருஷ்ணமாச்சாரி, சலவைத் தொழிலாளி மாமுண்டி, (அவர் உறவினர்தான் உதகை ஆஸ்ரமத்திற்கு நிலம் வழங்கியவர்) ஆகியோரும், என் வாழ்நாள் முழுவதும் அரசியல், கல்வித்துறைகளில் எனக்கு உறுதுணையாயிருந்து வரும் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும்

அப்புகைப் படத்தில் இடம்பெற்றிருக்கின்றனர். அப்படத்தில் நான் மஹாபுருஷ் மஹராஜின் திருவடிகளுக்கு அருகில் அமர்ந்துள்ளேன். இவர்களுள் உதகை ஆசிரமத்துத் தலைவராயிருந்து பின்னர் திருப்பராய்த்துறையில் ராமகிருஷ்ண தபோவன நிறுவனங்களை நிறுவிய சுவாமி சித்பவானந்தரைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். என் இளமைப் பருவத்தில் அவர்தம் அன்பும், நட்பும் என் ஆன்மிக வாழ்க்கைக்குப் பெரிதும் துணைநின்றன.

சுவாமி சிவானந்தஜி மஹராஜின் அன்பு அளப்பரியது. அவர் அன்பின் காரணமாக நாங்கள் எப்பொழுதும் அவரது அறிவுரைகளுக்கும், வழிகாட்டுதலுக்கும் அவரை நாடினோம். அவருடைய நல்லாசியும், தூண்டுதலுமே என்னைச் சேவை வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்தின.

ஏழைக்குழந்தைகளும், வசதிபடைத்த குழந்தைகளும் ஒன்றாகப் படிக்கும் ஒரு கல்வி நிறுவனத்தைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அதைப் பற்றி நான் சுவாமி சிவானந்தஜிக்கு எழுதினேன். அவர் 1929 நவம்பர் 19-ஆம் தேதி எனக்கு எழுதிய பதில் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு எழுதினார்: ''அனாதை இல்லம் தொடங்குவது ஒரு சிறப்பான காரியம் என்பதில் ஐயமில்லை. ஆனால் அதற்குத் தேவையான நிதிவசதியிலும், மாணவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிப்பதிலும் இடையறாத கவனம் தேவை. இப்பணியைத் துவங்கும் முன், இப்பணிக்கு உன் முழு ஆற்றலையும் செலுத்திச் செயல்பட உன்னால் முடியுமா? உன் நண்பர்கள் பொறுப்புள்ளவர்களா? உன் பணியில் உதவுவார்களா? என்பனவற்றைக் குறித்து நீ தீவிரமாக சிந்திக்க வேண்டும். இப்பணியில் உன்னால் சுயநலமின்றி ஈடுபட இயலுமானால் இதற்கு வேண்டிய பணம் தானாக வரும்''. இவ்வாறு அவரது நல்லாசிகளுடன், தற்சமயம் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம் என்று அழைக்கப்படும் நிறுவனம், 1930 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இன்று நம் நாட்டிலே முன்னோடியாய்த் திகழும் கல்வி நிறுவனங்களுள் ஒன்றாக வித்யாலயம் சிறந்து விளங்குவதற்கு மஹாபுருஷ் மஹராஜின் நல்லாசிகளே காரணமாகும்.

காந்தியடிகள் சுதந்திரப் போராட்டத்தைத் தொடங்கியபொழுது நான் அதில் தீவிரமாக ஈடுபட்டேன். ராமகிருஷ்ண மிஷன் ஒரு சமய நிறுவனமாதலால் அரசியலில் அது ஈடுபடக்கூடாது என்பது அதன் கொள்கையாகும். ஆகவே என்னை அரசியலில் ஈடுபட வேண்டாம் என ராமகிருஷ்ண மிஷனின் சாதுக்கள் பலர் கூறினார்கள். ஆனால் என் ஆர்வத்தைக் கண்ட மஹாபுருஷ் மஹராஜ்

அவர்கள் நான் சரி என்று நினைப்பதைச் செய்ய எனக்கு அனுமதி அளித்தார். அவர் எனக்கு, 'என் அருமை இளைஞனே! பயப் படாதே! நீ எங்களுடன் நீண்டகாலம் பழகியிருக்கிறாய். என் அன்பும், ஆசியும் உனக்கு என்றும் உண்டு. நீ எங்கிருந்தாலும், எந்தச் சூழ்நிலையில் நீ இருக்க நேரிட்டாலும், இவ்வுலக ஆசைகள் உன்னை ஈர்க்க மாட்டா. நீ குருதேவரை என்றும் மறக்கமாட்டாய் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவர் என்றும் உன்னுடனே இருப்பார். அவரே உனது வழிகாட்டியும், இலட்சியமும் ஆவார்' என்று எழுதினார். அன்பு என்பது, ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வதாகும். இதை நான் மஹாபுருஷ் மஹராஜ் அவர்களின் வாழ்விலிருந்து தெளிவாகப் புரிந்துகொண்டேன். தாம் நல்லது என்று நினைப்பவற்றைக்கூட அவர் மற்றவர்களின் மேல் திணித் ததில்லை. மற்றவர்களின்இயல்பினை அறிந்து அதற்கேற்ப அவர் களின் வளர்ச்சிக்கு உதவினார். நான் சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டதே இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

ராமகிருஷ்ண மிஷன் மீதும், அதன் கொள்கைகள், அது ஆற்றும் பணிகள் மீதும் எனக்கு எப்பொழுதும் ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. ஆனால் காந்திஜியிடமிருந்து தேசப்பணிக்கான அறை கூவல் வந்தபொழுது என்னால் அதில் ஈடுபடாமல் இருக்க முடிய வில்லை. மிஷனின் பணியில் ஈடுபடும் நான் அரசியலில் கலந்து விடக் கூடாது என்று யாரும் எளிதில் கூறிவிடலாம். (மிஷனில் இருந்த பலர் கூறினர்) இவ்விஷயத்தை மற்றவர்கள் இந்தக் கண்ணோட்டத்திலேயே பார்த்தனர். ஆனால் அரசியலில் நான் ஈடு படாமலிருந்தால் மனதுக்குள் ஒரு போராட்டம் தோன்றி என்னைச் சிதைத்திருக்கும். ஆனால் மஹாபுருஷ்ஜியிடமிருந்து எப்பொழுதும் எதிரிடையான அறிவுரைகள் வந்ததில்லை. என் உணர்ச்சி களையும், உறுதிப்பாட்டினையும் நன்கு அறிந்திருந்த அவர் தம் கருத்துக்களை என் மேல் திணிக்கவில்லை. மாறாக, எவ்வகையான தியாக வாழ்க்கையும், உயர்ந்ததும், நல்லதுமே ஆகும் என்று ஊக்கப்படுத்தினார். நான் சிறைப்படுவதை அவர் அனுமதித்தார்; ஆனால் எந்த ஆன்மிகக் கருத்துக்களுக்காக ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாழ்ந்தாரோ அவற்றை நான் என்றும் நினைவில் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

உண்மையை என்றும் போற்றியவர் காந்தியடிகள் என்பதை மஹாபுருஷ்ஜி அறிந்திருந்தார். மேலும் சுவாமி விவேகானந்தர் விட்டுச் சென்ற பணியை, அதாவது தேச விடுதலைப் பணியை, நிறைவுசெய்ய வந்தவர் காந்தியடிகள் என்றும் அவர் கருதினார். 1932 ஆம் ஆண்டு நான் சிறையிலிருந்தபொழுது மஹாபுருஷ்

மஹராஜ் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கை யானார். தம் உடலின் ஒரு பக்கம் செயலிழந்தும், பேசும் சக்தியை இழந்தும் அவர் இருந்தார். நான் விடுதலை பெற்றதும் அவரைக் காண பேலூர் மடம் விரைந்தேன். அவர் படுத்த படுக்கையாயிருந் தார். என்னுடன் அவரால் பேச இயலவில்லை. ஆனால் விழிகளில் அன்பும், பரிவும் ததும்பின. அவை என்னை அன்பால் பிணைத்தன. நான் அவரது ஆன்மிகப் பெருமிதத்தை முன்னெப்போதையும் விட அதிகமாக இப்போது உணர்ந்தேன். உடலுக்கு அப்பாற்பட்ட ஆன்மாவாக அவரை உணர்ந்தேன். எதனாலும் அவர் பாதிக்கப் படவில்லை. எதைப்பற்றியும் அவர் கவலைப்பட்டதாகத் தெரிய வில்லை. அந்த நிலையிலும் அந்த ஆன்மிக சக்திதான் அவரை அப்பொழுது ஆட்கொண்டிருந்தது. அவர் அப்படியே அமைதியில் ஆழ்ந்திருந்தார்.

உடலும், உடலைப்பாதித்த நோயும் அவரை எள்ளளவும் பாதிக்கவில்லை. கீதையின் கருத்தை அவர் பிரகடனப்படுத்துவது போன்று இருந்தது.

தேஹினோSஸ்மின் யதா தேஹே கௌமாரம் யௌவனம் ஜரா।
ததா தேஹாந்தரப்ராப்திர்தீரஸ்தத்ர ந முஹ்யதி ॥

'ஆன்மாவுக்கு இவ்வுடலில் இளமையும், யௌவனமும், மூப்பும், உண்டாவதுபோல் வேறு உடல் எடுப்பதும் அமைகிறது. தீரன் அதன் பொருட்டு மயங்கான்.'

வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய
நவானி க்ருஹ்ணாதி நரோSபராணி ।
ததா சரீராணி விஹாய ஜீர்ணானி
அன்யானி ஸம்யாதி நவானி தேஹீ ॥

'பழுதுபட்டத் துணிகளைக் களைந்துவிட்டு மனிதன் புதியவை களைப் போட்டுக் கொள்வதுபோன்று ஆத்மா பழைய உடலங் களை நீத்துப் புதியன புகுகிறது.'

ந ஜாயதே ம்ரியதே வா கதாசித்
நாயம் பூத்வா பவிதா வா ந பூய: ।
அஜோ நித்ய: சாச்வதோSயம் புராணோ
ந ஹன்யதே ஹன்யமானே சரீரே ॥

'இவ்வாத்மா ஒருபோதும் பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை. இது இல்லாதிருந்து பிறகு பிறந்ததல்ல. (இருந்து பிறகு இறந் ததல்ல). இது பிறவாதது, இறவாதது, தேயாதது, வளராதது. உடல் கொல்லப்படுமிடத்தும் ஆன்மா கொல்லப்படுவதில்லை.'

நான் ஒரு தத்துவ ஞானியோ, அறிஞனோ அல்லன். ஸ்ரீ ராமகிருஷ்ணரையும், அவரது சீடர்களையும் மக்கள் எப்படி நினைக்கிறார்கள் என்றும் எனக்குத் தெரியாது. ஆனால் உலகுக்கு வழிகாட்டி அதை உய்விக்கப் பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் அவதாரங்களுள் ஒருவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்றால், அவருடன் இருந்த மற்றவர்களும் சாதாரண மனிதர் களாக இருக்கமுடியாது. உண்மையிலேயே நான் மிகவும் பேறு பெற்றவன். எப்படியெனில் ஆன்மீகப் பேரொளிகளாகத் திகழ்ந்த பெருமக்களுடன் பழகும் வாய்ப்பும், அவர்களுடன் பேசுகின்ற வாய்ப்பும், அவர்களின் பரிவைப்பெறும் பேறும், அனைத்திற்கும் மேலாக அவர்கள் செய்து முடிக்க வந்த பெரும்பணியில் எனக்கும் ஒரு சிறு பங்கு கிடைத்ததும்தான்.

மஹா புருஷ் மஹராஜ் போன்ற மகான்கள் இவ்வுலகிற்குச் சாரமாக இருக்கின்றார்கள். எந்தவிதமான ஆரவாரமும், விளம் பரமும் இன்றி அவர்கள் இவ்வுலகில் அவதரிக்கின்றனர். ஆனால் இரவு நேரத்தில் தோன்றும் பனித்துளியினைப் போன்று அவர்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் மலர்ச்சி பெறவும், பயன்மிக்க வாழ்வை வாழவும், அன்பும் பரிவும் பெற்றுச் சிறக்கவும் துணையாக இருக்கின்றனர்.

அவர் தம் பூத உடலை நீத்து அரை நூற்றாண்டு சென்று விட்டது. ஆனால் அவரது திருவடிகளின் புனித ஸ்பரிசம், அன்பும் ஆர்வமும் ததும்பும் விழிகள், அனைத்திற்கும் மேலாக அவரது அருள்மிக்க நல்லாசிகள் எனக்கு என் வாழ்நாள் முழுவதும் துணையாக இருந்து வருகின்றன. அவை எனக்கு மன அமைதி யையும், சக்தியையும் எல்லாச் சமயங்களிலும் நல்கி என்னை நற்பேறு பெற்றவனாகச் செய்து வருகின்றன.

## 2. ஆன்ம எழுச்சி

சுவாமி சிவானந்தருடன் ஏற்பட்ட உறவின் காரணமாக, பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், மற்றும் சுவாமி விவேகானந்தர் மீது எனக்கு அளவற்ற ஈடுபாடு தோன்றியது. இவ்விருவருடைய முதற் சந்திப்பு உணர்ச்சியூட்டும் ஓர் இதிகாசமாகும். அது, கீழை நாடுகளின் ஆன்மிகப் பாரம்பரியமும், மேலை நாடுகளின் விஞ்ஞான அறிவும் சந்தித்துக் கொண்ட நிகழ்ச்சியாகும். விஞ்ஞான ஆராய்ச்சிகள் சமய நம்பிக்கைகளின் வேர்களை அசைத்துக் கொண்டிருந்த காலம் அது. இந்தச் சந்திப்பிலிருந்து, உயிரூட்டும் புதிய செய்தியொன்று உலக மக்களனைவருக்கும் கிடைத்தது. அவர்களின் முதல் சந்திப்பைப் பற்றி சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்: 'அவர் (ஸ்ரீ ராமகிருஷ்ணர்) ஒரு சாதாரண மனிதரைப் போலக் காணப்பட்டார். அவரிடம் தனிச்சிறப்பேதும் இருக்க வில்லை. மிகவும் எளிய சொற்களையே அவர் பேசினார். ஆகவே என் மனதில், 'இந்த மனிதர் சிறந்த குருவாக இருக்க இயலுமா?' என்ற ஐயம் தோன்றியது. என் வாழ்வில் பலரிடம் கேட்ட அதே வினாவை நான் அவரிடம் கேட்டேன், 'ஐயா, தாங்கள் கடவுளைக் கண்டதுண்டா?'. 'ஆம்' என்றார் அவர். 'அதைத் தங்களால் நிரூபிக்க இயலுமா?' என்று நான் கேட்டேன். 'முடியும்' என்று பதில் வந்தது. 'எப்படி?' என்று கேட்க, 'எப்படியென்றால், நான் இங்கு உன்னைக் காண்பது போலவே கடவுளையும் காண்கிறேன். இன்னும் தெளிவாக நான் அவரைக் காண்கிறேன்' என்று சொன்னார். அவரது பதில் என்னை மிகவும் கவர்ந்தது. அதற்குக் காரணம், அதுதான் நான், முதன்முறையாக ஒருவர், தாம் கடவுளைக் கண்டதாகவும், சமயம் என்பது உண்மையென்றும், இவ்வுலகத்தை உணர்வதை விடத் தெளிவாகவும், ஆழமாகவும் கடவுளை உணரமுடியும் என்றும் கூறக்கேட்டது. ஒவ்வொரு நாளும் நான் அவரிடம் போகத்தொடங்கினேன். சமயம் என்பதை அளிக்க முடியும் என்பதைக் கண்டேன். புத்தரைப் பற்றியும், இயேசுவைப் பற்றியும், முகமதுவைப் பற்றியும், பண்டைகாலத்து பல்வேறு ஞானிகளைப் பற்றியும் படித்துள்ளேன்.



சுவாமி விவேகானந்தர்



சுவாமி சிவானந்தர்

'உன்னையே நீ அறிவாய்' என்று அவர்கள் அருளியவுடன் மக்கள் ஞானத்தைப் பெற்றதைப் பற்றி நான் அறிவேன். இப்பொழுது அதனை நான் உண்மை என்று அறிகிறேன். நான் இந்த மனிதரைக் கண்டவுடனேயே என்னிடம் இருந்த அவநம்பிக்கை, ஐயப்பாடு ஆகியவை மறைந்துவிட்டன. என் குருநாதர் சொல்வதுண்டு : 'உலகில் மற்ற எந்தப் பொருளைக் காட்டிலும் சமயத்தை அதிகத்தெளிவாகவும், உண்மையாகவும் பெறவும், கொடுக்கவும் இயலும்'.

ஸ்ரீ ராமகிருஷ்ணரும், சுவாமி விவேகானந்தரும் முதன்முறையாகச் சந்தித்துக்கொண்ட இந்த நிகழ்ச்சி என் மனத்தில் ஆழப் பதிந்தது. ஆகவே முதலில் நான், 'ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசங்கள்' என்ற புத்தகத்தையும், பின்னர் சுவாமி விவேகானந்தரின் நூல்களையும் படிக்கத்தொடங்கினேன். அதன் பின் அவ்விருவரைப்பற்றி பிரஞ்சு அறிஞர் ரோமன் ரோலண்ட்டும், சகோதரி நிவேதிதையும் மற்றவர்களும் எழுதிய நூல்களைப் படித்தேன். முதன்முதலில் நான் படித்த சுவாமி விவேகானந்தரின் நூல், 'இந்தியப் பிரசங்கங்கள்'. சுவாமிஜி இந்தியாவில் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பே இந்த நூலாகும். என் இளம் உள்ளத்தில் இந்த நூல் ஆழ்ந்த பதிவை ஏற்படுத்தியது. இதற்கு முன்பு வேறு எதனாலும் செய்ய முடியாத புதியதொரு சிந்தனையையும், புதியதோர் ஆற்றலையும் ஏற்படுத்தி என்னுள் புதிய வேகத்தைத் தோற்றுவித்தது இந்த நூல். இந்த வேகத்தால் உந்தப் பெற்ற நான் அவரது மற்ற நூல்களையும் படித்தேன். அச்சமயத்தில் சுவாமிஜியின் கருத்துக்கள் அடங்கிய நூல்கள் ஏழு தொகுதிகளாக வெளியிடப்பட்டிருந்தன. இந்த நூல்கள் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உணர்ச்சியும், உத்வேகமும் ஊட்டியது போலவே எனக்கும் எழுச்சிமிக்க எண்ணங்களையும், அருஞ்செயல்களை ஆற்றுவதற்குரிய ஆர்வத்தையும் நல்கின.

சுவாமி விவேகானந்தர் கூறுகிறார் : 'நவீன உலகத்திற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணரின் செய்தி இது: சமய விதிகளைப்பற்றியோ, சமயச்சடங்குகளைப்பற்றியோ, ஆலயங்களைப்பற்றியோ கவலைப்பட வேண்டாம். மனிதனுள் உறையும் ஆன்மாவோடு ஒப்பு நோக்கும் போது இவை அவ்வளவு முக்கியமானவை அல்ல. இந்த ஆன்மா உயர்வடையும்போது மனிதனும் உயர்ந்து வலிமை பெறுகிறான். ஆகவே அதனை முதலில் பெறுங்கள்; அதனை உங்களுடையதாக்குங்கள்; மற்றவர்களை விமர்சிப்பதை விட்டுவிடுங்கள். ஏனெனில் எல்லாச்சமயங்களும் தம்முள் நல்லன பலவற்றைக் கொண்டுள்ளன. சமயம் என்பது வெறும் சொற்களோ, பெயர்களோ, பிரிவுகளோ அல்ல என்பதையும், சமயம் என்பது ஆன்ம

அனுபூதியே என்பதையும் உங்கள் வாழ்க்கை மூலம் காட்டுங்கள். ஆன்ம அனுபூதி பெற்றவர்களே, அதனை மற்றவர்களுக்கு எடுத்துக் கூற முடியும். அவர்களே மனித சமுதாயத்தின் ஆன்மிக ஆசான்களாகத் திகழ முடியும். அவர்களே ஆற்றல் மிக்க அருட் சோதிகளாகத் திகழ முடியும்'.

சுவாமி விவேகானந்தர் இவ்வகையான ஆன்மிக அனுபூதியை ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் கண்டார். அவர் கூறுகிறார்: 'மனிதன் இந்தச் சரீரத்திலேயே முழு நிறைவு பெற்றவனாக விளங்க இயலும் என்பதை என் குருநாதரின் வாழ்விலிருந்து தெரிந்து கொண்டேன். அவர் யாரையும் கடிந்து கொண்டது இல்லை; யாரையும் விமர்சித் ததுகூட இல்லை. அவர் விழிகள் தீயன எவற்றையும் கண்ட தில்லை; அவர் திருவுள்ளம் தீயன பற்றிக் கடுகளவும் நினைத்தது இல்லை. எங்கும் எதிலும் அவர் நல்லதையே கண்டார். அத்த கைய அற்புதமான அளவற்ற தூய்மை, மிக உயர்ந்த துறவு வாழ்க்கை ஆகியவை அவரது ஆன்மிக வாழ்வின் இரகசியமாகும்'.

'செயல்களினாலோ, பிரஜைகளினாலோ, செல்வத்தாலோ ஒருவர் என்றும் அழிவற்ற ஆன்ம வாழ்வைப் பெறமுடியாது; துறவினால் மட்டுமே அதனைப் பெற இயலும்' என்று வேதங்கள் கூறுகின்றன.

இந்தியாவின் பண்டைய ஆன்மிகப் பாரம்பரியத்தை அதன் மக்கள் அறியவும், அந்த உலகளாவிய ஆன்மிகக் கருத்துக்களை உலகம் அறியும்படிச் செய்யவும் சுவாமி விவேகானந்தரை அவரது குருநாதர் பணித்தார். சுவாமிஜியின் உள்ளார்ந்த ஆற்றல், அறிவுத் திறன், நசுக்கப்பட்ட மக்களிடமிருந்து வரும் துன்ப முனகல்களை உணரக்கூடிய இளகிய மனம் இம்மூன்றும், இந்தியாவின் பழம் பெருமையையும், இன்று இருக்கும் அதன் அவல நிலையையும், எவ்வாறு பண்டைய ஆன்மிக நிலையில் அதனை நிலைநிறுத் தலாம் என்பதனைப் பற்றியும் அவரைச் சிந்திக்கச்செய்தன. இந்திய மக்களின் துன்பங்களையும், துயரங்களையும் நேரில் கண் டறிந்து அவற்றைப் போக்க வழி காண்பதற்கு இந்தியா முழுவதும் அவர் புனிதப்பயணம் மேற்கொண்டார்.

அவர் தம் பயணத்தில் முதன்முதலாக இமயமலைக்குச் சென்று அங்கு ஆழ்ந்த தவத்தில் ஈடுபட்டார். அதன் பின் அவர் இந்தியாவின் வடமேற்குப் பகுதிக்குச் சென்றார். மஹாராஜாக் களும், பிரபுக்களும் நிறைந்த ராஜபுதனத்தைக் கடந்து சென்று குஜராத், மஹாராஷ்டிரம், மைசூர் ஆகிய இடங்களுக்குச் சென்று பின் தமிழ்நாடு, கேரளம் ஆகிய பகுதிகட்கு வந்தார்.

இப்பயணத்தின் போது, பல நூற்றாண்டுகளாக அரசியல் அடிமைத்தனத்தால் மக்களிடம் ஏற்பட்டிருந்த அவலநிலையைக் கண்டார். அந்த அரசியல் அடிமைத்தனம், பொருளாதாரச் சுரண்டலையும், வறுமையையும் தோற்றுவித்திருந்ததோடு நம் அற்புதமான பண்பாட்டிலும் வீழ்ச்சியைத் தோற்றுவித்திருந்தது.

நம் வீழ்ச்சிக்கான காரணங்களை அவர் ஆய்ந்து கண்டறிந்தார். 'நான்குகோடி ஆங்கிலேயர்கள், முப்பது கோடி இந்திய மக்களை அடிமைப்படுத்தி ஆட்சிசெய்யக் காரணம் என்ன? இதற்கான மனோதத்துவ அடிப்படைதான் என்ன? இந்த நான்குகோடி ஆங்கில மக்களும் தங்கள் மன உறுதியில் ஒன்றுபட்டு இருந்ததால் அவர்களிடம் அளவற்ற சக்தி இருந்தது. ஆனால் முப்பது கோடி இந்தியர்களான நம்மிடம் அப்படிப்பட்ட ஒற்றுமை இருக்கவில்லை. எதிர்காலத்தில் இந்தியாவை ஏற்றமடையச் செய்ய வேண்டுமென்றால் அதன் ரகசியம் நாம் ஒன்றுபட்டு, நம் சக்திகளைச் சிதறவிடாமல் ஒருங்கிணைப்பதுதான். 'உங்கள் மனங்கள் ஒன்றுபடட்டும், உங்கள் எண்ணங்கள் ஒன்று படட்டும்' என்று ருக்வேத சம்ஹிதை கூறுகிறது. 'ஆரியன்' 'திராவிடன்' 'பிராம்மணன்' 'பிராம்மணர் அல்லாதார், 'உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி', 'வடக்கு, தெற்கு' போன்ற அற்ப விஷயங்களில் சக்தியைச் சிதறவிடாது, ஒன்றுபட்ட தேசிய உறுதிப்பாட்டை வளர்க்கும் பொழுது இந்தியா விழித்தெழும்'.

இவ்வாறு பயணம் செய்த அவர், மனதில் துயரநெருப்போடு கடைசியில் இந்தியத்தாயின் மலரடியான கன்யாகுமரியை அடைந்தார். அங்கு அவர், கொந்தளிக்கும் மூன்று கடல்களின் சங்கமத்தையும், கரையிலிருந்து சிறிது தள்ளியிருந்த ஒரு பெரிய பாறையையும் கண்டார். காற்றின் சீற்றம் அதிகமாக இருந்ததால் அந்தப் பாறைக்கு அவரை ஏற்றிச் செல்ல எந்தப் படகோட்டியும் முன்வரவில்லை. ஆனால், இந்த நாட்டு மக்களின் அவலநிலையை எண்ணியும், அதற்கான தீர்வு ஒன்றைக் காண வேண்டியும் அவர் மனமும் கொந்தளித்துக் கொண்டு இருந்தது. ஆகவே கொந்தளிக்கும் கடலில் நீந்திச் சென்று அந்தத் தனியான பாறையை அடைந்தார். அங்கு அவர் தியானத்தில் அமர்ந்தார். அந்தப் பாறையில்தான் தற்போது விவேகானந்தர் நினைவாலயம் கம்பீரமாக நிற்கின்றது. தியானத்தில் அமர்ந்ததும் அவர் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருக்கெடுத்தது. ரிஷிகளின் பரம்பரையில் வந்த இந்தியக் குழந்தைகள் வறுமையில் வாடி அழியும் நிலையை எண்ணி அழுதார்.

இந்தியாவின் ஏழ்மையை எண்ணி அவர் உள்ளம் ஆறாத்துயரால் கசிந்துருகிற்று. பாமரர்களின் பசியைப் போக்காத சமயம் ஒரு சமயமா? என்று எண்ணினார். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அதிகார வர்க்கத்தினரால் இந்தியாவின் ஏழைமக்கள் சுரண்டப்பட்டு அநீதிக்கு ஆளாகி வருவதை அவர் எண்ணினார். புரோகிதர்களின் கொடுமை, கீழ்ச் சாதியினர்க்கு இழைக்கப்படும் அநீதி, இதனால் சமூகத்தில் ஏற்பட்ட பிரிவுகள் ஆகியன இந்த நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதைச் சுவாமிஜி அறிந்தார். ஏழைகளுக்காக அவரது இதயம் கசிந்துருகிற்று. இந்திய நாட்டின் சமயக் காவலர்கள் என்று தங்களைச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டவர்கள், ஆண்டாண்டு காலமாகப் பாமரர்களை நசுக்கிக் கொண்டு வந்ததை நினைத்தபோது அவரது உள்ளம் வெதும்பிற்று. சில மாதங்கள் கழித்து அவர் எழுதிய ஒரு கடிதத்தில் கீழ்க்கண்டவாறு கூறுகிறுர்: ‘மக்களின் வறுமை, அறியாமை ஆகியவை பற்றி எண்ணும்போது எனக்கு உறக்கம் வருவதில்லை. இந்தியாவின் தென்கோடியில் இருந்த பாறை மீது அமர்ந்திருந்தபோது என் மனத்தில் திட்டம் ஒன்று உருவாயிற்று. நாடு முழுதும் சுற்றியலைந்து மக்களுக்குத் தத்துவத்தைப் போதிக்கும் துறவிகள் பலர் உள்ளனர்; இது பைத்தியக்காரத்தனமாகும். நம் குருதேவர் நமக்கு மீண்டும் மீண்டும், ‘பசியால் வாடுபவர்களுக்குச் சமயம் உகந்ததாகாது’ என்று போதிக்கவில்லையா?’

கன்னியாகுமரியில், தம் உள்ளத்தைத் திறந்து அன்னையை வழிபட்டார். அந்த விநாடி முதல் அவர் தம் வாழ்க்கையை இந்தியாவின் சேவைக்காக அர்ப்பணித்தார்; குறிப்பாக, பசியால் வாடும் எண்ணற்றவர்களுக்கும், தாழ்த்தப் பட்டவர்களுக்கும் ஒடுக்கப் பட்டவர்களுக்கும் தம் வாழ்க்கையைத் தியாகம் செய்ய முடிவு செய்தார்.

ஏழைகளைப் புறக்கணித்ததே நம் தேசியப் பெரும் பாவம் என்று சுவாமிஜி கருதினார். ஆகவே இந்திய இளைஞர்கள் இந்த நாட்டிற்காக உழைக்கத் தம்மைத் தியாகம் செய்ய வேண்டும் என்று தம் உரத்த குரலில் வேண்டுகோள் விடுத்தார். அவர் சொன்னார் : ‘இந்த நாடு குடிசைகளில் வாழ்கிறது என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள். தற்போது கிராமம் கிராமமாகச் சென்று, சோம்பிக் கிடப்பதால் பயனேதும் இல்லை என்பதை மக்கள் உணருமாறு செய்வதே உங்கள் கடமை. அவர்கள் தங்கள் உண்மையான நிலைமையை உணருமாறு செய்யுங்கள். ‘என் அன்புச் சகோதரர்களே! எழுங்கள்! விழியுங்கள்! எத்தனை நாட்கள் உறங்கிக் கிடப்பது?’ என்று சொல்லுங்கள். அவர்கள் தங்கள் நிலையை

உயர்த்திக் கொள்ளும் வழிகளை அவர்கட்கு அறிவுறுத்துங்கள். தூய்மையையும், வலிமையையும் போதிக்கும் நமது சாஸ்திரங்களின் உண்மைகளைப் புரிந்து கொள்ளும்படிச் செய்யுங்கள். உயர்ந்த சாதியினரைப் போலவே தங்களுக்கும் சமயத்தைப் பின்பற்றும் உரிமை உண்டு என்பதை அவர்கள் உணரச் செய்யுங்கள். சுடர்விட்டெரியும் மந்திரங்களால் சண்டாளர்களுக்கும் தீட்சை அளியுங்கள். அதேபோன்று வாழ்க்கைத் தேவைகளான வாணிபம், விவசாயம் போன்றவற்றிலும் முன்னேற வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்துங்கள்.

'அருட்சோதியே வழிகாட்டிடு' என்று நாம் பிரார்த்திப்போமாக! அப்போது இருளைக்கிழித்து ஓர் ஒளி வெளிவரும். நம்மை அழைத்துச் செல்ல ஓர் அருட்கரம் வழிகாட்டும். வறுமையிலும், அறியாமையிலும் மூழ்கிக் கிடக்கும் லட்சக்கணக்கான மக்களுக்காக நாம் ஒவ்வொருவரும் இரவும் பகலும் பிரார்த்தனை செய்வோம். சமூகத்தில் மேல்நிலையிலிருப்பவர்கட்கும், பணக்காரர்களுக்கும் போதிப்பதை விட அவர்களுக்கே போதிக்க விரும்புகிறேன். நான் ஒரு தத்துவஞானியல்லன்; மந்திரவாதியும் அல்லன்; மகாத்மாவும் அல்லன். ஆனால் நான் ஏழைகளை நேசிக்கிறேன். வறுமையிலும் அறியாமையிலும் மூழ்கித் துன்புறும் முப்பது கோடி மக்களுக்காக யார் கவலைப்படுகிறார்கள்? அவர்களுக்காக வீடு வீடாகச் சென்று கல்வியளித்து அவர்கள் வாழ்க்கையில் ஒளியூட்ட யார் விரும்புகிறார்கள்? இவர்களே நீங்கள் வழிபடும் தெய்வங்களாகட்டும்! இவர்களைப் பற்றியே சிந்தியுங்கள்; இவர்களுக்காகவே உழையுங்கள், இவர்களுக்காகவே இடைவிடாது பிரார்த்தனை செய்யுங்கள். இறைவன் உங்களுக்கு வழிகாட்டுவது உறுதி!'

சமயம் என்பதற்குப் புதியதொரு புரட்சிகரமான விளக்கத்தைக் கொடுத்தவர் சுவாமி விவேகானந்தர். அவர் கூறினார்: 'கடவுள் மேல் நம்பிக்கை இல்லாதவர்களை நாத்திகர்கள் என்று பழைய மதங்கள் கூறின. ஆனால் 'தன்னம்பிக்கை இல்லாதவனே நாத்திகன்'. இந்த உலகவரலாறு என்பது தன்னம்பிக்கை கொண்ட ஒரு சில பெருமக்களின் வரலாறுதான். மனிதனுக்குள் புதைந்திருக்கும் தெய்வத்தன்மையை வெளிக்கொணர்வது இந்தத் தன்னம்பிக்கைதான். இத்தகைய பலத்தால் நீங்கள் எதையும் சாதிக்க முடியும். உன்னிடம் மகத்தான சக்தி புதைந்திருக்கிறது. மிகுந்த முயற்சியுடன் செயல்படாத போது தான் நீ தோல்வியடைகிறாய். நம்பிக்கையை இழக்கும் போது தான் ஒரு நாடு மரணத்தை நோக்கிச் செல்கிறது. நம்பிக்கை, நம்பிக்கை,

நம்பிக்கை. நம்மிடம் நம்பிக்கை, இறைவனிடம் நம்பிக்கை. இதுவே வெற்றியின் ரகசியம். புராணங்கள் கூறும் முப்பத்து முக்கோடி தெய்வங்களிடமும், நம்மிடையே அந்நியர் புகுத்திய தெய்வங்களிடமும் நம்பிக்கை வைத்து, உங்களிடம் நீங்கள் நம்பிக்கை வைக்கவில்லையென்றால் உங்களுக்கு விமோசனமே இல்லை.

'ஆன்மாவால் செய்ய இயலாதது எதுவுமே இல்லையென்று நினையுங்கள். இவ்வுலகில் பாவம் என்று ஒன்று இருக்குமானால் அது நீங்கள் உங்களையும், மற்றவர்களையும் பலவீனர்கள் என்று நினைப்பதுதான். எண்ணம்போல் வாழ்வு என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் உங்களைப் பலவீனர்கள் என்று நினைத்தால் நீங்கள் பலமற்றவர்களாகிறீர்கள்; நீங்கள் உங்களைச் சக்தி வாய்ந்தவர்கள் என்று நினைத்தால் சக்தி வாய்ந்தவர்களாகிறீர்கள். நீங்கள் கடவுளின்குழந்தைகள், என்றும் புனிதமான, முழு நிறைவு பெற்ற, என்றும் அழியாத சச்சிதானந்த வடிவங்கள். என் இளஞ்சிங்கங்களே! விழித்தெழுங்கள்! நீங்கள் செம்மறியாடுகள் என்ற எண்ணத்தைத்தூக்கி எறியுங்கள்! என்றும் அழியாத, ஆன்மாக்கள் நீங்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்; 'இதுதான் மிகப் பெரிய உண்மை. பலமே வாழ்வு; பலவீனமே மரணம். பலமே ஆனந்தம்; என்றும் அழியாதது. பலவீனமே துன்பம்; அதுவே மரணம். வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டுமென்றால் உங்களிடம் விடா முயற்சியும், மனஉறுதியும் இருக்கவேண்டும். 'இந்தச் சமுத்திரத்தையே என்னால் குடிக்கமுடியும்' என்று சொல்லும் முயற்சி அவசியம். மனஉறுதியால், 'என்னால் மலைகளை நொறுக்கமுடியும்' என்று சொல்லுங்கள். அத்தகைய நம்பிக்கையும், மனஉறுதியும், சக்தியும் பெறுங்கள்; கடுமையாக உழையுங்கள். உங்கள் லட்சியம் கைகூடும். அறியாமையில் உழன்று வாழ்வதைவிடச் சாவதே மேல். தோல்வியுற்று வாழ்வதைவிடப் போர்க்களத்தில் வீரமுடன் சாவதே மேல். இந்த உலகில் மகத்தான காரியங்கள் அனைத்தும் கடுமையான முயற்சியினாலேயே நிறைவேறியுள்ளன. சிங்கம் போன்ற மனஉறுதியும், செயல்திறனும் கொண்டவர்களையே செல்வத் திருமகள் நாடி வந்தடைவாள். எதிலும் தளர்ச்சி கொள்ளாதீர்கள். முன்னேறிச் செல்லுங்கள், நமக்கு வேண்டியன எல்லையற்ற சக்தியும், எல்லையற்ற உற்சாகமும், எல்லையற்ற ஆண்மையும், எல்லையற்ற பொறுமையுமேயாகும். இவற்றால் மகத்தான காரியங்கள் கைகூடும்'.

சுவாமி விவேகானந்தரின் இச்சொற்கள் என் மனத்தில் திரும்பத்திரும்ப ஒலித்தன. இத்தகைய எழுச்சிமிக்க சொற்களைக்

கேட்ட எவரும் செயலற்று இருப்பது அரிது. அவை ஆயிரக் கணக்கான இளைஞர்களை உணர்ச்சியும் செயல்வேகமும் கொள்ளச் செய்தன. இந்தியாவையும் உலகத்தையும் பெருமைமிக்க தொரு மகத்தான வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்த அவர் விரும்பினர். அதற்காக ஆண்மையும், வீரமும், ஏழைமக்களின்பால் இரக்கமும் கொண்டு அவர்களுக்குச் சேவை செய்யத் தயாராக இருக்கும் ஆயிரம் இளைஞர்கள் வேண்டும் என்று நினைத்தார்.

குருதேவர், சுவாமிஜி ஆகியோரின் சக்திமிக்க செய்தியால் தூண்டப்பெற்ற நான், அந்த ஆயிரம் இளைஞர்களில் ஒருவனாக இருந்து தொண்டாற்ற விரும்பினேன்.

# 5. விவேகானந்தரும், காந்தியடிகளும்

தற்கால இந்தியாவை உருவாக்கியதில் சுவாமி விவேகானந்தர் மற்றும் மகாத்மா காந்தியடிகள் இருவருக்குமே பெரும்பங்கு உண்டு. இந்தியாவின் விடுதலையில் இருவருமே ஆர்வம் கொண்டிருந்தனர். சுவாமிஜி இந்தியாவின் ஆன்மிகச் சிறப்பை வலியுறுத்தினாரெனில், காந்தியடிகள் அந்த ஆன்மிகத்தின் அடிப்படையில் இந்தியாவின் விடுதலைக்காகப் போராடினார்.

ஏழைகளையும், தாழ்த்தப்பட்டவர்களையும் நினைத்து சுவாமிஜியின் உள்ளம் வெதும்பியது. 'இலட்சக்கணக்கான மக்கள் பசியிலும், வறுமையிலும் உழலும்போது யாருடைய உழைப்பினால் ஒருவன் கல்விகற்று உயர்ந்தானோ அந்த ஏழைகளுக்காக அவன் இரங்காவிடில் நான் அவனைத் துரோகி என்பேன். பாமரர்களைப் புறக்கணித்ததே நம் தேசியப் பெரும் பாவமாகும். அதுதான் நம் வீழ்ச்சிக்குக் காரணமாகும். பாமரர்கள் கல்விபெறாதவரை, அவர்கள் வயிறு நிரம்பாதவரை, அவர்கள் கவனிக்கப்படாதவரை அரசியலில் எவ்விதப் பயனும் இல்லை'. என்றார் அவர்.

தீர்க்கதரிசிகள், மகான்கள் ஆகியோரது புனிதமான ஆழ்ந்த எண்ணங்கள் மற்ற மகான்களின் மனதில் ஆழ்ந்து பதிகின்றன. இந்தியநாட்டின் ஏழைமக்களுக்காக உருகிய சுவாமி விவேகானந்தரின் அன்பும், அருளும் காந்திஜியின் உள்ளத்திலே ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தின. சுவாமிஜி 'ஏழைகளுக்காக எவருடைய இதயம் ரத்தம் சிந்துகிறதோ அவரையே நான் மகாத்மா என்பேன்' என்றார். என்ன ஆச்சரியம்! அவ்வார்த்தைகளை நிரூபிப்பதைப்போல ஒருவர் தோன்றினார் இந்த மண்ணிலே. அவர்தான் காந்தியடிகள். அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த உலகத்தலைவர்கள் அனைவரிலும் தலைசிறந்தவர் காந்தியடிகள். உலக மக்களில் பெரும்பான்மையோரின் இதயங்களைக் கவர்ந்து அவர்

களது வாழ்க்கையைச் சிறப்பாக்கியவர்களுள் அவர் முதன்மை யானவர். மக்கள், உன்னத வாழ்க்கையை வாழவும், சுகாதார வழிகளைப் பின்பற்றவும், குறித்த நேரத்தில் காரியங்களைச் செய்யும் பயிற்சி பெறவும், அனைத்திற்கும் மேலாக பலத்தையும், ஆண்மையையும் பெறவும் வழிகாட்டியவர் அவரே.

இந்திய நாட்டுப் பாமரமக்களின் அச்சத்தைப் போக்குவதே காந்தியடிகளின் தலையாய பணியாக இருந்தது. பல நூற் றாண்டுகளாக அந்நியர்களாலும் இந்த நாட்டின் பணக்காரர் களாலும் இழைக்கப்பட்ட கொடுமைகளால் அவர்கள் சமூகத்தின் மிகத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். அதனால் அவர்கள் நாளடைவில் தன்னம்பிக்கையை முழுவதும் இழந்து விட்டிருந்தனர். சுதந்திரப் போராட்டத்தில் நுழைந்த போது முதலில் இதனைத்தான் காந்தியடிகள் கண்டார். ஆகவே, பாமரர்களுக்குத் தைரியத்தை ஊட்டுவதே தமது முதற்பணி என்று நினைத்தார். எனவே நாட்டின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் அவர் பயணம் மேற்கொண்டார். அவரது அப்பழுக்கற்ற சுயநல மின்மையையும் ஈடுபாட்டையும் மக்கள் கண்டனர். அனைத்து இடங்களிலும் அவர், 'நண்பர்களே, அஞ்சாதீர்கள்,' என்று கூறினார். அவர்கள் தங்கள் சுயமரியாதையைப் பாதுகாத்துக் கொள்ள எத்தகைய எதிர்ப்பையும் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நம் கொள்கைகளைப் பாதுகாக்க நாம் சிறைசெல்லவும் தயங்கக்கூடாது என்று கூறினார். ஆயிரக்கணக் கானோர் அவரைப் பின்பற்றி அவருடன் சிறைசென்றனர். இவ் வாறாக மக்களின் சிறைப் பயம் நீங்கியது. மேலும் அடுத்த இரு பது ஆண்டு காலத்தில் நாட்டு விடுதலைக்காக, இலட்சக் கணக்கான ஆண்களும், பெண்களும் தங்கட்கு இழைக்கப்பட்ட எத்தகைய கொடுமைகளையும் தாங்கிக் கொள்ளவும், துப்பாக்கிக் குண்டுகளை எதிர்கொள்ளவும் தேவையான ஆண்மையைப் பெற் றனர்.

சுவாமி விவேகானந்தர் கூறினார்: 'உண்மையை அஞ்சாது சொல்லுங்கள். உண்மை என்றும் சாசுவதமானது. அனைத்து ஆன்மாக்களின் இயல்பே உண்மைதான். இதோ உண்மைக்கு ஓர் உரைகல்: உங்கள் உடலையும், உள்ளத்தையும், ஆன்மாவை யும் எது பலவீனப்படுத்துகின்றதோ, அதை நஞ்செனெ ஒதுக்குங் கள். அதில் வாழ்வு இல்லை, அது உண்மைக்கு மாறுபட்டது; உண்மை என்பது வலிமை அளிக்கவேண்டும்; ஒளிதரவேண்டும்; ஆண்மை அளித்து உணர்ச்சியூட்டவேண்டும்; இது உங்கள் தத் துவமாகட்டும். இவ்வுலகில் பெரிய உண்மைகள் அனைத்தும்

எளிமையான பொருள் கொண்டதாகும். நீங்கள் உயிர் வாழ்வது எத்தகையதோ அத்தகையதுதான் உண்மையும். உண்மையைக் கடைப்பிடியுங்கள்; உண்மையோடு வாழுங்கள்; உங்களுக்கு விமோசனம் உறுதி'. இக்கொள்கைகளின்படித்தான் காந்தியடிகள் வாழ்ந்தார். உண்மையே தெய்வம் என்று கருதினார்.

ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் அன்பு செலுத்துவதுதான் காந்தியடிகளின் உயிர் மூச்சாக இருந்தது. ஹரிஜனங்கள் மற்றும் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டோருக்காக அவர் அயராது உழைத்தார். அவர்களுடன் தம்மை முழுதும் ஐக்கியப்படுத்திக் கொண்டார். கதர் வளர்ச்சி, தீண்டாமை ஒழிப்பு, கிராமத்தொழில் வளர்ச்சி, முதியோர் கல்வி ஆகியவற்றைப் பரப்ப அவர் தொடங்கிய இயக்கங்கள் அனைத்தும் ஏழைகளின் மறுமலர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டிருந்தன.

அவர் எழுதியும், பேசியும் வந்த கருத்துக்கள் வெறும் தத்துவங்கள் அன்று. அன்றாட வாழ்க்கையில் நடைமுறையில் பின்பற்றத்தக்க செயல் முறைகளாகும். மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகள், அரசியல்வாதிகள், பொதுத்தொண்டு செய்வோர், வியாபாரிகள், மருத்துவர்கள், மற்றும் பல்வேறு துறைகளில் பணியாற்றுவோர் தங்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய வாய்மை, நேர்மை ஆகியவற்றை அவர் நன்கு வலியுறுத்தினார். எத்தனை துன்பங்கள்வரினும், எவ்விலை கொடுத்தேனும் வாய்மையைப் பின்பற்றவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். நம் நோக்கம் சுதந்திரம் பெறுவதே; அதற்காக நாம் பின்பற்றும் வழியைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை என்று அப்போது பலர் கூறினர். ஆனால் இக்கருத்தைக் காந்தியடிகள் அடியோடு ஏற்றுக்கொள்ளவில்லை, குறிக்கோள் எவ்வளவு முக்கியமானதோ அவ்வாறே அதனை அடையும் வழிகளும் தூயனவையாக இருத்தல் வேண்டும் என்று கூறினார். நமது குறிக்கோள் தேசவிடுதலை. அதை அடையும் வழி உண்மை, அன்பு, அகிம்சை, சத்தியம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். இந்தக் கொள்கைகளை ஒரு சிலரால் மட்டுமே பின்பற்றமுடியும், பாமரமக்களால் பின்பற்றுவது பொதுவாகக் கடினம் என்று பலர் நினைத்தனர். ஆனால் பெரு வியப்பான உண்மை என்னவெனில், காந்தியடிகள் இக்கொள்கைகளைத் தாம் உறுதியாகப் பின்பற்றியதோடு மட்டுமின்றி எண்ணற்ற ஆண்களையும், பெண்களையும் பின்பற்றுமாறு செய்தார் என்பதேயாகும்.

தனிமனிதர்களை எழுச்சிபெறச் செய்ததோடு, சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஏற்ற புதியதோர் வாழ்வுமுறையையும் அளித்ததுதான் காந்தியடிகளின் தனிப்பெருமையாகும். மக்களும், நாடுகளும் சகோதர நேயத்துடன் சமானமாக வாழ்வதும், மனிதனுக்கு மனிதன் அன்பு செலுத்துவதும்தான் காந்தியப் பொருளாதாரம் என்பதாகும். பகைமைக்கும், பொறாமைக்கும் காரணமான பொருளாதார ஏற்றத்தாழ்வினைப் போக்க அவர் விரும்பினார். பணக்காரர்கள் பெற்றிருக்கும் செல்வம் அவர்கட்கு உரியது அல்ல என்றும், ஏழைகளின் தர்மகர்த்தாக்களாக அவர்கள் இருக்க வேண்டும் என்றும் அவர் பணக்காரர்களுக்கு அறிவுறுத்தினார். கதர் மற்றும் கிராமக் கைத்தொழில்களால் உருவாகும் பொருள்களையே மக்கள் வாங்கவேண்டுமென்று கூறினார். அவற்றின் விலை சற்றுக் கூடுதலாக இருப்பினும் அவற்றை வாங்குவதன் மூலம் ஏழைகளை நாம் நேசித்தவர்கள் ஆகிறோம். உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள் ஹரிஜனசேவையில் ஈடுபட வேண்டும் என்று அவர் வேண்டுகோள்விடுத்தார்.

தம் வாழ்க்கையின் மூலம் அவர் உழைப்பின்மேன்மையைப் போதித்தார். கூட்டுழைப்பு, மக்களிடையில் அன்பையும், நல்லுறவையும் ஏற்படுத்துவதற்கான ஒரு சிறந்த சாதனம் ஆகும். சமூக ஏற்றத்தாழ்வுகளையும், சுரண்டலையும் நீக்கவேண்டும் என்றால் மக்கள் ஒன்று கூடி உழைக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆகவே ஒவ்வொருவரும் சிறிது நேரமாவது உடல் உழைப்பில் ஈடுபட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். எளியோரை வலியோர் வதைக்கும் நிலைமையற்ற சமுதாயத்தைக்காண அவர் விரும்பினார். இந்தியச் சமுதாயத்தின் சாதி வேறுபாடுகளும், அந்நியரால் அமைக்கப்பட்ட இந்தியக் கல்வி முறையும் இக்கொள்கைகளுக்கு முரணானவை. கல்வி கற்றவர்கள் உடலுழைப்பை வெறுத்தார்கள் என்பது பெரிய உண்மையாகும்.

இளைஞர்களுக்கு உழைப்பிலும், சமூக நலனிலும், முயற்சியிலும், நம்பிக்கையை ஏற்படுத்தும் புதியதொரு கல்வித் திட்டத்தை உருவாக்க அவர் விரும்பியதில் வியப்பில்லை. அவரால் ஏற்படுத்தப்பட்ட ‘ஆதாரக் கல்வித் திட்டம்’ இந்த உயர்ந்த கல்விக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வகுக்கப்பட்டதேயாகும். எல்லா போதனாமுறைகளும் உடலுழைப்பை மையமாகக் கொண்டிருத்தலே இப்புதிய கல்விக்கருத்தின் அடிப்படையாகும். இவ்வுடலுழைப்பு பலதரப்பட்டதாக இருக்கலாம். இதில் தனி மனித மற்றும் பொது சுகாதாரத்தை வளர்க்கும் பணிகளும் உள்ளடங்கியுள்ளன. ஆதாரக்கல்வி என்பது ஒரு புதிய கல்விமுறை மட்டு

மின்றி, ஒரு புதிய வாழ்க்கைத் தத்துவமும் ஆகும். காந்தியடிகளின் சொற்களில் கூறுவோமானால், 'இப்புதிய கல்விமுறையின் முடிவான குறிக்கோள் முழுமையான ஆளுமை வளர்ச்சி பெற்ற தனி மனிதனும், அத்தகைய ஒரு சமுதாயமும் ஆகும். இச்சமுதாயத்தில் ஏழை - பணக்காரர் வேறுபாடு இருக்காது. ஒவ்வொரு குடிமகனும், உழைத்து வாழவும் சுதந்திரத்தை அனுபவிக்கவும் உறுதியளிக்கப்படுகிறார்கள்'.

தூய வாழ்க்கையை அடிப்படையாக வைத்துதான் நல்லதொரு கல்விமுறையை ஏற்படுத்த முடியும் என்று சுவாமி விவேகானந்தரைப் போலவே காந்தியடிகளும் நம்பினார். அவர் சொன்னார்; 'சொந்த வாழ்க்கையில் தூய்மையைக் கடைபிடித்தல் என்பது ஒரு நல்ல கல்விமுறையின் தவிர்க்கமுடியாத நிபந்தனையாகும்'.

தூய வாழ்க்கை வாழாத எந்த ஆண் அல்லது பெண்ணும் இறைவன் சந்நிதியை அடைய இயலாது என்ற அடிப்படையான உண்மையையே உலகத்தின் சமயங்கள் அனைத்தும் போதிக்கின்றன. தூய இதயம் இல்லாவிடில் வேதங்களை கற்று ஓதுவதோ, சமஸ்கிருதம், தமிழ், லத்தீன், கிரேக்கம் போன்ற மொழிகளில் ஆழ்ந்த புலமை பெற்றுத் திகழ்வதோ எந்தப்பயனையும் உண்டாக்காது. ஒழுக்கத்தையும் நற்பண்புகளையும் வளர்ப்பதே கல்வியின் நோக்கமாகும்.

ஒவ்வொரு மனிதனும் தன் தலைவிதியைத் தானே நிர்ணயிக்கிறான் என்ற சுவாமிஜியின் கருத்துக்குக் காந்தியடிகளின் வாழ்க்கை ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். நம்முடைய தற்போதைய நிலைமைக்கு நாம்தான் முழுப்பொறுப்பு. அதற்காக மற்றவர்களைப் புகழ்வதோ குறைகூறுவதோ கூடாது. இந்த மகத்தான செய்திதான் நாம் காந்தியடிகளின் வாழ்க்கையிலிருந்து தெரிந்து கொள்வதாகும்.

காந்தியடிகள் நம் கண்முன்னால் வாழ்ந்தவர். அவர் தம் இளமையில், அறிவாற்றலிலோ அல்லது வேறு எந்த வகையிலோ மற்ற சாதாரணச் சிறுவர்களைப் போன்றே இருந்தார். மற்றச் சிறுவர்களிடமிருந்த பலவீனங்கள் அவரிடமும் இருந்தன. ஆனால் சில ஆண்டுகளிலேயே அவர் தமக்கென ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு அதை மிகவும் ஈடுபாட்டோடும், உண்மையோடும் பின்பற்றினார். தம் பலவீனங்களை மறைக்காமல் தம் சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். மனிதன், விலங்குநிலைக்குத் தாழ்ந்து செல்லவும் முடியும்; தெய்வநிலைக்கு உயரவும் முடியும்.

தமது இடைவிடாத முயற்சியாலும், தவத்தாலும், விரதங் களாலும், அனைத்துக்கும் மேலாகத் தம் நேர்மையான வாழ்க் கை, தன்னலமற்ற தொண்டு ஆகியவற்றாலும் அவர் தம் பல வீனங்களை வென்று தெய்வநிலைக்கு உயர்ந்தார். அவரிடம் இருந்த கடவுள் நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் பல சோதனை களைக் கடந்து வெற்றி பெற உதவின. அதனால் அவரைப்பற்றி ஜவஹர்லால் நேரு குறிப்பிடும்போது, அவர் அமர்ந்த இடம் ஆலயம் என்றும், அவர் நின்ற இடம் புனிதமானது என்றும், அவர் பேசிய மொழிகள் வேதம் என்றும் கூறியுள்ளார். அவர் ஒரு வீரனைப்போல இறைவன் திருப்பெயரை ஓதியவாறே உயிர் நீத்தார்.

உணர்விலும் நோக்கிலும் ஒன்றுபட்டவர்களாகவே விளங் கினர் சுவாமி விவேகானந்தரும், காந்தியடிகளும். இருவரும், பண்டைய இந்தியப் பண்பாட்டில் ஊறித்திளைத்தவர்களாய், இந்த நாட்டின் மகத்தான எதிர்காலத்தை உருவாக்கும் வேட்கை கொண்டவர்களாக இருந்தனர். இந்தியா உலகிற்கு ஓர் ஆன்மிகச் செய்தியினை அளிக்க வேண்டும் என்று இருவரும் விரும்பினர். ‘இந்தியாவின் எதிர்காலம் மேலை நாட்டு வன்முறைகளின் அடிப் படையில் அன்றி, கடவுள் வழியான அன்புவழியிலும், அகிம்சை வழியிலும்தான் உள்ளது. மற்றவர்களின் குறிக்கோள்களிலிருந்து இந்தியாவின் குறிக்கோள் வேறுபட்டதாகும். சமயத் துறையில் முன்னோடியாக இருப்பது இந்தியாவே!! தனது நாகரிகத்தின்மேல் மற்ற நாடுகளின் ஆதிக்கத்தைத் தடுக்கும் பலம் இந்தியாவுக்கு இருக்குமானல் உலக அமைதிக்கும், உலக முன்னேற்றத்திற்கும் நீடித்த செய்தியை அது தரமுடியும்’. காந்தியடிகளின் இச்சொற் கள் சுவாமிஜியின் சொற்களை அப்படியே எதிரொலிக்கின்றன. அதே போல, நன்மை பயக்கும் பலவற்றை மேலை நாடுகளி லிருந்தும் நாம் கற்றுக்கொள்வதற்கு நிறைய இருக்கிறது என்று இருவரும் நம்பினர். அறிவு என்பது ஏதோ ஒரு கண்டத்திற்கோ அல்லது ஓர் இனத்திற்கோ சொந்தமானது அன்று.

இந்த நாட்டின் பாமரர்களைப் பீடித்திருந்த வறுமையின் கொடுமையை இருவரும் தெளிவாக உணர்ந்திருந்தனர். முன்னேற் றத்திற்கு முதல் வழி வறுமையை ஒழிப்பதே என்று அவர்கள் எண்ணினர். ஏனென்றால் பசித்த வயிற்றுக்கு ஆன்மிகச் செய்தியை அளிப்பது கடினம்.

தங்கள் செய்திகளை மக்களிடையே பரப்புவதில் சுவாமிஜியும், காந்திஜியும் மேற்கொண்ட வழிகளில் வேறுபாடுகள் இருந்தன. உலக வரலாறு அதுவரை கண்டிராத பெரியதொரு விடுதலை

இயக்கத்திற்குத் தலைமை தாங்கினார் காந்தியடிகள். இலட்சக் கணக்கான மக்கள் அவரைப் பின்பற்றி அவ்வியக்கத்தில் ஈடுபட்டனர். அவருடைய இயக்கம் நாடு தழுவிய ஒன்றாக மிகப் பரந்ததாக இருந்தது. பலர் சுதந்திர வேட்கையால் ஆட்கொள்ளப் பட்டு அதற்காகவே தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்ய முன்வந்தனர். இந்தியாவின் முதல் பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு, முதல் ஜனாதிபதியாக இருந்த ராஜேந்திர பிரசாத் போன்ற பெருந்தலைவர்கள் முதல், சாதாரணத் தொண்டர் வரை அனைவரையும் சுதந்திர இயக்கத்தில் ஈடுபட வைத்ததே காந்தியடிகளின் ஒப்பற்ற பெருமையாகும். இவ்வாறு காந்தியடிகள் அரசியலை ஆன்மிக நெறிக்கு உட்படுத்தினார்.

இதற்கு மாறாக, சுவாமி விவேகானந்தரும், அவருடைய குருநாதர் ஸ்ரீ ராமகிருஷ்ணரும், ஆர்வமிக்க ஒரு சிறு குழுவினரைத் தம் பணிக்கு உருவாக்கினர். அவர்களின் எண்ணிக்கைச் சிறியதாக இருந்தது. அவர்கள் அனைவரும் துறவையும், தொண்டையுமே தங்கள் வாழ்க்கையின் இலட்சியங்களாகக் கொண்டு தங்கள் குருநாதரின் மகத்தான செய்தியைப் பரப்பத் தங்கள் அனைத்தையும் தியாகம் செய்தனர். இதன் விளைவாக அரை நூற்றாண்டுக் காலத்திலேயே ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருட் செய்தி இந்தியாவின் மூலை முடுக்குகளிலும், உலகம் எங்கிலும் பரவிற்று.

காந்தியடிகளின் தலைமையின் கீழ் சுதந்திர இயக்கத்தில் ஈடுபடும் பேறு எனக்குக் கிடைத்தது. அத்துடன் ராமகிருஷ்ண இயக்கத்தில் ஈடுபட்டுப் பணியாற்றும் அருட்பேறும் எனக்குக் கிட்டியது.

# 4. ராமகிருஷ்ண மடமும் ராமகிருஷ்ண மிஷனும்

புத்தர், இயேசுநாதர் போன்ற அவதார புருஷர்களின் வரலாறுகளைப் போன்றே, ஸ்ரீ ராமகிருஷ்ணர் மற்றும் ராம கிருஷ்ண இயக்கத்தின் வரலாறுகளும் உலக சமய வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. உலக மக்களின் உய்விற் காகப் பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் சமய இயக்கங்களில் ஆர்வம் உள்ளவர்களுக்கு, ராமகிருஷ்ண இயக் கத்தின் வரலாறு, ஆன்ம எழுச்சியை ஊட்டக்கூடிய ஒன்றாகும்.

மனிதகுலத்தை மேம்படுத்தும் ஆக்கபூர்வப்பணிகளில் மக்களை வழிநடத்திச் செல்லக்கூடிய இயக்கம் ஒன்றைத் தொடங்கவேண்டி, 1897 ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் தம் சகோதரத் துறவிகளுடனும், அன்பர்களுடனும் கலந்தாலோ சித்தார். அதன் விளைவாகத் தோன்றியதே ராமகிருஷ்ண மிஷன் ஆகும். அதன் முதல் தலைவர் சுவாமி விவேகானந்தர் ஆவார். அவரைத் தொடர்ந்து சுவாமி பிரம்மானந்தரும், சுவாமி சிவானந்தரும், பின்னர் மற்றத் துறவிகளும் ஒருவர் பின் ஒருவராக இச்சங்கத்திற்குத் தலைமைப் பொறுப்பேற்றனர். சுவாமி விவேகானந்தரின் மறைவிற்குப் பின் இச்சங்கம் சட்டப்படிப் பதிவு செய்யப்பட்டது.

இச்சங்கத்தின் குறிக்கோள்கள் :

அ) ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாழ்ந்து அருளிச் செய்த வேதாந்தக் கருத்துக்களைப் பரப்புதலும், மதங்களின் ஒற்றுமையைப் பரப்புதலும்.

ஆ) கலை, அறிவியல், தொழில் ஆகியவற்றை வளர்த்தலும், ஊக்குவித்தலும்.

இ) மேற்கண்ட துறைகளில் ஆசிரியர்களைப் பயிற்றுவித்து, அவை பாமரரைச் சென்றடையச் செய்தல்.

ஈ) பாமரர்களிடையே கல்விப்பணியில் ஈடுபடுதல்.

உ) பள்ளிகள், கல்லூரிகள், அனாதை இல்லங்கள், தொழிற் கூடங்கள், ஆய்வகங்கள், மருத்துவமனைகள், சுகாதார மையங்கள், உடல் ஊனமுற்றோருக்கும், பாதிக்கப்பட்டோ ருக்குமான இல்லங்கள், பஞ்ச நிவாரணப் பணிகள் மற்றும் பிற அறநிலையங்களை நிறுவுதலும், அவற்றைப் பேணிக் காத்தலும்.

ஊ) தன் குறிக்கோள்களைப் பரப்ப வேண்டி, வார, மாத இதழ் கள், நூல்கள், துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றை வெளி யிடல்.

எ) மேலே கூறப்பட்ட நோக்கங்களை நேரடியாகவோ, மறை முகமாகவோ செயல்முறைப்படுத்தத் துணைபுரியும் மற்றச் செயல்களையும் இச்சங்கம் தன் சக்திக்கேற்பச் செய்தல்.

இச்சங்கத்தின் அங்கத்தினர்கள், கீழ்க்கண்ட உறுதிமொழி களை ஏற்றுக் கையொப்பமிட்டனர்.

அ) என்றும் நிலைத்த சனாதன தர்மத்தின் விளக்கமாகவும், உருவ மாகவும் ஸ்ரீ ராமகிருஷ்ணரை நான் கருதுகிறேன். அவரது வாழ்வும் வாக்கும், உலகச் சமயங்களின் நோக்கத்தையும் அமைப்பையும் அறியவும், அவற்றின் ஒருமைப்பாட்டை உணரவும் பெரிதும் உதவுகின்றன.

ஆ) அனைத்துச்சமயங்களும் இறைவனை அடைதற்குரிய பல்வேறு வழிகள் என்றுணர்ந்து, அச்சமயங்களைப் பின்பற்றுவோ ருடன் நான் சகோதர நேயத்துடன் வாழ்வேன்.

இ) ராமகிருஷ்ண மிஷனின் குறிக்கோள்களை நான் மனப்பூர் வமாக ஏற்று அதன் பணிகளில் முழுமனதோடு ஈடுபடுவேன். சாதி, இன வேறுபாடின்றி, இக்குறிக்கோள்களில் ஆர்வ முள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் இச்சங்கத்தில் உறுப் பினர் ஆகலாம்.

தங்கள் குடும்பத்தையும், செல்வத்தையும் துறந்து, எளிமை, துறவு, தொண்டு ஆகியவற்றைத் தங்கள் வாழ்க்கைக் குறிக் கோளாக ஏற்ற துறவிகள் மட்டும் அடங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் என்ற அறநிறுவனமும் இத்துடன் தொடங்கப்பட்டது. சுவாமி விவேகானந்தர் இவ்வியக்கத்தின் குறிக்கோளை விளக்குகிறார்: ''இந்நிறுவனத்தின் நோக்கம் மனிதர்களை உருவாக்குவதே. முனிவர்கள் போதித்ததைக் கற்றுக்கொண்டால் மட்டும் போதாது. நீங்கள் முனிவர்களாகவே ஆகவேண்டும். வெறும் புத்தக அறி வினால் என்ன பயன்? மந்திரங்களும், தந்திரங்களும் என்ன

செய்யும்? நீங்கள் சுயபலத்தினால் நிற்க வேண்டும். மனிதனை உண்மையான மனிதனாக்கும் புதுமுறையை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். வலிமையே வடிவானவனும், அதேசமயம் பெண்ணின் இளகிய இதயத்தைக் கொண்டவனுமே உண்மை யான மனிதன். உங்களைச் சுற்றியுள்ள இலட்சக்கணக்கானவர் களுக்காக நீங்கள் இரக்கப்படவேண்டும். ஆனால் அதேசமயம் வலிமையுடையவர்களாகவும், எதற்கும் அசைந்து கொடுக்காதவர் களாகவும் இருக்கவேண்டும். இது ஒன்றுக்கொன்று முரண்பட்ட தாகத் தோன்றலாம். ஆனால் இவ்வாறு முரண்பட்டதாகத் தோன்றும் பண்புகளை நீங்கள் பெற்றே ஆகவேண்டும். கீழ்ப் படியும்தன்மையும் உங்களிடம் இருக்கவேண்டும். கட்டளை தவறாக இருப்பினும் முதலில் கீழ்ப்படிந்தபின்னரே அதனைப்பற்றி விவாதிக்கவேண்டும்.

இவ்வாறாக, கீழ்க்கண்ட சிறந்த அம்சங்களைக் கொண்ட ஒரு துறவிகள் மடம் முதன் முதலாக இந்தியாவில் அமைக்கப் பட்டது.

அ. தன்னலமின்றிச் செய்யப்படும் எல்லாச் செயல்களும், கடமை களும் புனிதமானவை. எனவே, செய்யும் தொழிலே தெய்வமாகும்.

ஆ. சாதுக்கள், ஜபத்திலும், தியானத்திலும் ஈடுபடுவதோடு ஏழை களுக்கும், துன்பப்படுபவர்களுக்கும், கீழ்நிலையில் உள் ளோர்களுக்கும், சேவை செய்ய வேண்டும்.

இ. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சமய ஒருமைப்பாட்டைப் போதிப்பது இதன் மூன்றாவது சிறப்பம்சமாகும். ஆகவே, பல நாடு களையும், பல சமயங்களையும் சேர்ந்தவர்கள், அதாவது இந்துக்கள், கிறிஸ்துவர்கள், முஸ்லீம்கள், பார்சிகள் முதலி யோர் ஒன்றுக வாழ்ந்து, ஒன்றுகத் தொண்டு செய்து ஆன்மிக இன்பம் பெறுவதை ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்க நிறுவனங் களில் காண முடிகின்றது.

குருதேவரின் சீடர்களான சுவாமி பிரம்மானந்தர், சுவாமி சிவானந்தர் ஆகியோருடன் எனக்கு ஏற்பட்ட முதல் தொடர்புக் குப்பின், அவர்கள் எனக்குக் கொடுத்த ஆர்வத்தினால் நான் தொடர்ந்து மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திற்குச் சென்று வந்தேன். அங்கு நான் சந்தித்த சாதுக்கள் பலரின் அன்பையும் பரிவையும் அறுபது ஆண்டுகளுக்குப் பின் இன்றும் நினைவுகூர் கிறேன். இவர்களில் பலர் பல்கலைக்கழகங்களில் பட்டமேற் படிப்பை முடித்துச் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றபின் துறவுவாழ்க்கை

மேற்கொண்டு தொண்டுசெய்ய ராமகிருஷ்ண இயக்கத்தில் சேர்ந்தவர்கள் ஆவர். சுவாமி அசோகானந்தர், சுவாமி அகிலானந்தர், சுவாமி சித்தேஸ்வரானந்தர் ஆகியோரை நான் அங்கு சந்தித்தேன். இவர்கள், பின்னர் சான்பிரான்சிஸ்கோ, போஸ்டன், பிராவிடன்ஸ், பாரிஸ் ஆகிய இடங்களில் தலைமைப் பொறுப்பு ஏற்றிருந்தனர். சுவாமி சித்பவானந்தர், சுவாமி ருத்ரானந்தர், சுவாமி சர்வக்ஞானந்தர், சுவாமி கேதாரேஸ்வரானந்தர் ஆகியோரைக் காணும் சிறப்பான வாய்ப்பையும் பெற்றேன். சுவாமி சித்பவானந்தரை நான் கல்லூரி நாட்களிலிருந்து அறிவேன். இவருடன் கொண்ட தொடர்பு தொடர்ந்து நீடித்தது. இதேபோன்று, சுவாமி ருத்ரானந்தர் தஞ்சை மாவட்டத்தில் 1924-ம் ஆண்டு வெள்ள நிவாரணப் பணியாற்றிய போது அவருடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. பின்னர் அவர் பிஜியிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மையத்திற்குத் தொண்டாற்றச் சென்றார். அந்த நாட்டின் வளர்ச்சியில் சிறப்பான பங்கு பெற்ற ஒரு தலைவராகத் திகழ்ந்தார். அங்கு அவர் கல்விக்காகவும், கிராம வளர்ச்சிப் பணிகளுக்காகவும் பெரியதொரு நிறுவனத்தைத் தோற்றுவித்தார். சுவாமி சர்வக்ஞானந்தர் தம் வாழ்நாள் முழுதும் உதகை, சென்னை, நாட்டறம்பள்ளி போன்ற பல்வேறு இடங்களில் உள்ள ராமகிருஷ்ண மிஷன் நிறுவனங்களில் தொண்டாற்றினார். ஆறு ஆண்டுகள் அவர் வித்யாலயத்தில் தங்கி என்னையும், வித்யாலயக் குழந்தைகளையும் மிகுந்த அன்புடன் கவனித்துக் கொண்டார். நாட்டறம்பள்ளியில் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஓர் அழகான ஆலயத்தைக் கட்டியதோடு, அந்தப் பகுதி மக்களுக்கு மருத்துவச் சேவையும் ஆன்மிகச் சேவையும் செய்து வந்தார். அங்கு அவர் தலைமைப் பொறுப்பு ஏற்றிருந்தபோது அமரரானார்.

தன்னலமற்ற சமூக சேவை என்பதன் உண்மைப் பொருளை நான் சென்னை மடத்தில்தான் கற்றுக்கொண்டேன். இத்தகைய சேவை, வித்யாலயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் குருபூஜையின்போது நடக்கும் அன்னதானத்திற்காக நன்கொடை வசூல் செய்வதில் தொடங்கிற்று. ஒரு சமயம் தஞ்சாவூர் மாவட்டத்திலும் கேரளாவிலும் வெள்ளம் ஏற்பட்டது. இவ்விரு இடங்களிலும் மிஷன் உடனடியாக நிவாரணப்பணிகளில் ஈடுபட்டு ஏழைகளுக்கு உதவிற்று. இச்சேவையில் ஈடுபடத் தொண்டர்கள் அழைக்கப்பட்டனர். பின்னால், நியூயார்க் மையத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற சுவாமி பவித்ரானந்தர் அப்போது வெள்ள நிவாரணப் பணிக்குப் பொறுப்பேற்றிருந்தார். அப்பொழுது நான் சட்டக் கல்லூரியில் முதலாண்டு வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அவர் என்னைப் பார்த்து, ''கேரளாவில் இப்பணியில் ஈடுபட நீ

முன்வருவாயா?'' என்று கேட்டார். நான் மிகவும் ஆர்வத்துடன் ஒப்புக்கொண்டேன். உடனே என்னைக் கேரளாவில் உள்ள திருப் பிரையார், எடாத்துருத்தி ஆகிய இடங்களுக்கு அனுப்பினார். 'பிரியதா' என்று அன்புடன் எங்களால் அழைக்கப்பட்ட சுவாமி ஆத்மபிரகாசானந்தா அவர்களின் ஆர்வமிக்க தலைமையின்கீழ் நான் அப்பணியில் ஈடுபட்டேன். நான் அங்கிருந்தபொழுது நடந்த நிகழ்ச்சி ஒன்றை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். மக்க ளுக்கு விநியோகிக்கத் தொலைதூரங்களிலிருந்து உப்பங்கழிகள் மூலம் அரிசி கொண்டுவர வேண்டியிருந்தது. ஒரு நாள் நள்ளிரவில் அவ்வாறு படகுகளில் அரிசி கொண்டுவரப்பட்ட பொழுது திடீரென ஒரு சப்தம் கேட்டது. எப்பொழுதும் விழிப்புடன் இருக்கும் சுவாமி ஆத்மபிரகாசானந்தர், அது என்னவென்று உரக்கக்கேட்டார். அரிசிமூட்டைகள் சிலவற்றைத் திருடிக் கொண்டு போக வந்தவர்கள் சுவாமிகளின் குரலைக் கேட்டவுடன் அவற்றைத் தண்ணீருக்குள் போட்டு விட்டு ஓடிவிட்டனர். சுவாமிகள் உடனே படகுக்காரனைப் படகை நிறுத்தக் கூறி, தண்ணீருக்குள் மூழ்கி அம்மூட்டைகளை எடுக்கும்படிக் கூறினார். அச்சத்தினால் அவன் மறுத்து விட்டான். உடனே சுவாமிகள் தம் உடைகளைக் களைந்து விட்டுத் தண்ணீ ருக்குள் மூழ்கி அம்மூட்டைகளைத் தம் தோளில் சுமந்து மீட்டுக் கொணர்ந்தார். அவருடைய தைரியத்தைக் கண்டு உடன் இருந் தவர்கள் பெருவியப்படைந்து, இந்த ஆபத்தைச் சுவாமிகள் ஏன் ஏற்கவேண்டும் என்று கேட்க, அவர், ''இவை குருமகராஜின் பொருள்கள்; குருமகராஜின் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டியவை. அதனால் அவற்றைப் பத்திரமாகக் காப்பாற்ற வேண்டும்,'' என்று சொன்னார். இத்தகைய சேவையுணர்வுதான் தம் பணிகளைச் செய்யச் சாதுக்களுக்கு ஊக்கம் ஊட்டி வந்தது.

சென்னை ராமகிருஷ்ண மடத்துடன் எனக்கிருந்த தொடர்பைப் பற்றிக் கூறும்போது, அச்சமயம் சுவாமி ருத்ரானந்தர் சமூக சேவையில் கையாண்ட புதியதொரு சோதனையைப்பற்றியும் நான் குறிப்பிடவேண்டும். சமூக சேவையிலும், ஏழைகளுக்குத் தொண்டு செய்வதிலும் அவருக்கு அளவு கடந்த ஆர்வம் இருந்தது. ஆர்வ மிக்க சில இளைஞர்களைத் திரட்டி, 'தொண்டர் சங்கம்' என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினார். ஏழைகளுக்கும், திக்கற்ற ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கும் தொண்டாற்றுவதே இறைபணியாகும் என்ற உணர்ச்சியை ஊட்டி அவர்களைச் சேவையில் ஈடுபடச் செய்தார். அதற்கென அண்மையில் இருந்த சேரிப்பகுதிகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அங்கு, சுகாதாரப் பணிகள், இரவுப் பள்ளிகள் நடத்துதல், குடிப்பழக்கத்தை நீக்குதல், மாலை வேளைகளில் முதியோர் கல்வி வகுப்புகள் நடத்துதல் ஆகிய

ADU LIB
102229

பணிகளில் ஈடுபடச் செய்தார். அம்மக்களிடம் நற்பண்புகளை வளர்த்து அவர்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தினார். அவர்களில் பலர் சென்னைமடத்தின் ஆலயத்திற்கும் வரத் தொடங்கினர். அவர்களிடம் சிறுசேமிப்புப் பழக்கத்தை வளர்த்து அவர்கள் சிறுதொழில்கள் தொடங்கும் அளவுக்கு அவர்களின் சேமிப்பை வளர்த்தார். தொண்டர் சங்கத்தில் அங்கத்தினர் ஆவதற்குச் சந்தா வசூலிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, அதில் உறுப்பினர் ஆக விரும்புவோர், வாரம் குறைந்தது மூன்று மணி நேரமாவது தொண்டு செய்யவேண்டும். இந்தப் புதிய முறையால் பணவசதியற்றவர்களும் உறுப்பினர் ஆகும் வாய்ப்புக் கிடைத்தது. அத்துடன் உழைப்பின் மேன்மையையும் அவர்கள் உணர்ந்தனர். சுவாமி ருத்ரானந்தரும், சுவாமி சர்வக்ஞானந்தரும் அங்கு இருந்த வரை அப்பணி தொடர்ந்து நடந்தது. அப்பணி, சேரிவாழ் மக்களுக்கு நன்மை செய்தது மட்டுமன்றி, சாதுக்களுக்கும், பிரம்மச்சாரிகளுக்கும், நாட்டில் நிலவும் ஏழ்மையையும் அறியாமையையும் அறியும் வாய்ப்பை நல்கியது. அதோடு, அப்பணி அவர்கட்கு அத்தகைய சேவையின் மூலம் தங்களது ஆன்ம வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள உதவியது.

ராமகிருஷ்ண மிஷன் நிறுவனங்களுள் மிகச் சிறந்த ஒரு கல்வி நிறுவனமான சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் இல்லத்தைப்பற்றியும் அறிந்து அதனுடன் நான் தொடர்பு கொண்டேன். திரு C. இராமசாமி அய்யங்கார், திரு C. இராமானுஜாச்சாரியார் ஆகியோரின் சேவை இங்குக் குறிப்பிடத் தக்கது. அந்த மாணவரில்லத்தைப் பார்த்துத்தான், வித்யாலயத்தைத் தொடங்கவேண்டும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றிற்று. மேற்குறிப்பிட்ட இருவரும் இல்லறத்தில் இருந்தவர்கள்; அரசாங்கத்தின் முழுநேர ஊழியர்கள். இருப்பினும் மாணவர் இல்லத்தை வளர்ப்பதற்கும் அவர்கள் நேரம் கொடுத்தனர். தங்கள் சொந்த நலன்களையும் குடும்பங்களையும் பெரிதாக எண்ணாமல் மாணவர் இல்லத்தையும் அதன் குழந்தைகளையுமே பெரிதென எண்ணிச் சேவை செய்தனர். வேலையில் உயர்வு தாழ்வு பார்க்கவில்லை. கோயில், மாணவர் தங்குமிடம், வகுப்பறைகள், அலுவலகம், ஆகிய அனைத்தும் மிகவும் துப்புரவாகவும் தூய்மையாகவும் இருந்தன. அவர்களின் அன்பு மகத்தானது.

சென்னை மடத்துடன் நான் கொண்ட தொடர்பு என் ஆன்மிக வாழ்க்கைக்குப் பெரிதும் ஊக்கமும், உற்சாகமும் ஊட்டின, ஆனால் எனக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு, சுவாமி சிவானந்தர், நெடுந் தொலைவிலிருந்த பேலூர் மடத்தில் இருந்தார். அவரது தெய்விக

அன்பாலும், அருளாலும் கவரப்பட்ட நான் ஒவ்வொரு கோடை விடுமுறையிலும் அவரைத் தரிசிக்கக் கல்கத்தாவுக்குச் சென்றேன். அங்கு உணவும் மற்ற வசதிகளும் எனக்கு ஏற்றனவாக இல்லை. அங்குள்ளவர்களின் மொழியை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இத்தகைய வசதிக்குறைவுகளையும் மீறி அங்கிருந்த ஏதோ ஒன்று எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஒவ்வொரு நாளும் காலையிலும், இரவில் உறங்கச் செல்லுமுன்னும், மஹாபுருஷ்ஜி என்று மரியாதையுடன் நாங்கள் அழைத்த சுவாமி சிவானந்தரின் ஆசிகளைப் பெற்றோம். அங்கு, குருதேவரின் நேரடிச் சீடர்களுள் மற்றொருவரான சுவாமி சாரதானந்தரைக் காணும் பேற்றையும் பெற்றோம். அவர் மிகவும் அமைதியான ஆன்மிக இமயம். ராமகிருஷ்ண மிஷன் தோன்றிய நாளிலிருந்து அவர் அமரரான 1927-ஆம் ஆண்டு வரை அதன் செயலாளராக இருந்து அதனை வளர்த்தவர். சுவாமி சிரத்தானந்தர், சுவாமி விரஜானந்தர், சுவாமி மாதவானந்தர், சுவாமி வீரேஸ்வரானந்தர் போன்ற மற்ற முக்கியமான சாதுக்களையும் நான் அங்குக் கண்டேன். இவர்கள் பின்னாளில் ராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவற்றின் தலைவர்களாகப் பணியாற்றினர். மிஷனைச் சார்ந்த, முதலாவதும், மிகப் பெரியதுமான மருத்துவமனையை நிறுவிய சுவாமி தயானந்தரையும் நான் கண்டேன். சுவாமி தயானந்தரும், மிஷனின் அப்போதைய உதவிச் செயலருமான அமிர்தேஸ்வரானந்தரும் என்னிடம் மிகுந்த அன்பும் பரிவும் கொண்டிருந்தனர்.

பேலூர் மடத்திற்குச் செல்லும் ஒருவர் காணவேண்டிய இடங்கள் பல அங்கு உள்ளன. அவற்றுள், ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் ஆன்மிகச் சாதனைகளைப் புரிந்த இடமும், அவரது முக்கியமான சீடர்கள் பலர் அவரைச் சந்தித்த இடமும், அவர் தமது ஆன்மிக கருத்துக்களைப் போதித்த இடமுமான தட்சிணேஸ்வரம் மிகவும் முக்கியமானதாகும். இந்தக் காலத்தின் மிகப் புனிதமான இடம் அதுவேயாகும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் வழிபட்ட பவதாரிணி ஆலயம் அங்குத்தான் உள்ளது. அவர் வழிபட்ட சிவ ஆலயங்களும் அங்குத்தான் உள்ளன.

தட்சிணேஸ்வர ஆலயத்தின் ஒரு மூலையில் அவரது சிறிய அறை ஒன்றுள்ளது. பரவசநிலையில் பலமுறை மூழ்கியிருந்ததும், தம் சீடர்களைச் சந்தித்ததும், 'ம' என்ற மகேந்திரநாத குப்தரால் தொகுக்கப்பட்ட 'ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அமுத மொழிகள்' என்ற புத்தகத்தில் அடங்கியுள்ள அவரது அருள் மொழிகள் அருளப்பட்டதுமான இடம் அது. ஸ்ரீ ராமகிருஷ்ணரின்

அமுத மொழிகளின் ஆசிரியரான திரு மகேந்திரநாத குப்தாவை அவரது இல்லத்தில் சந்திக்கும் நல்வாய்ப்பையும் நான் பெற்றேன். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தங்கியிருந்த அறைக்குப் பக்கத்தில், அவரது துணைவியாரான தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் தங்கியிருந்த கட்டிடம் இருக்கிறது. அதற்குச் சற்றுத் தொலைவில் பஞ்சவடி உள்ளது. அங்குள்ள ஐந்து மரங்களும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் கரங்களாலேயே நட்டவை. அவற்றின் கீழ் அமர்ந்துதான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் பல்வேறு சாதனைகளையும் செய்தார். அவர் ஒரு வில்வ மரத்தின் கீழ் அமர்ந்து தாந்திரிக சாதனைகளில் ஈடுபட்ட இடம் அதற்குச் சற்றுத் தொலைவில் உள்ளது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் நிர்விகல்பசமாதியில் ஆறு மாதம் மூழ்கியிருந்த சிறிய குடிசையும் பஞ்சவடிக்கு அருகில் உள்ளது. குருதேவர் நீராடிய குளங்களும், அவர் உலாவிய பகுதிகளும் அருகில் உள்ளன. அருகில் கங்கை கம்பீரமாக ஓடிக்கொண்டிருக்கிறாள். ஸ்ரீ ராமகிருஷ்ணரைத்தவிர மேற்கூறிய அனைத்தும் அவர் வாழ்ந்த காலத்தில் எப்படி இருந்தனவோ இன்றும் அப்படியே உள்ளன. குருதேவர் பிருந்தாவனத்திற்குச் சென்றபோது 'ஓ, கிருஷ்ணா, நீ விளையாடிய யமுனை நதி, நீ மாடுகளை மேய்த்த புல்வெளிகள், நீ விளையாடிய இடங்கள் - அனைத்தும் இங்கு உள்ளன. ஆனால் நீ மட்டும் இல்லை.' என்று மனத்துயர் பட்டுக் கதறி அழுதார். இதுபோன்ற எண்ணம் தான் நாம் தட்சிணேஸ்வரத்திற்குச் செல்லும்போது நம் உள்ளங்களில் எழுகின்றது. அவர் இருப்பது போன்ற உணர்வை நாம் அங்குப் பெறுகிறோம். அவர் வாழ்ந்த வாழ்க்கை நிகழ்ச்சிகளும் அவர் கூறிய அருள் மொழிகளும் நம் உள்ளத்தில் நினைவு அலைகளாக எழுகின்றன.

கல்கத்தாவிலிருந்து 80 மைல் தொலைவில், குருதேவர் பிறந்த ஊரான கமார்ப்புகூர் உள்ளது. அங்கிருந்து இரண்டு மைல் தொலைவில் தூய அன்னையார் பிறந்த ஜெயராம்பாடி உள்ளது. குருதேவர் பிறந்த சிறு குடிசை பல ஆண்டுகள் அப்படியே பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்சமயம் அங்கு அழகானதோர் ஆலயம் எழுந்துள்ளது. அங்குச் செல்பவர்கள் குருதேவர் வாழ்வையும் வாக்கையும் நினைவுகூர்ந்து புனிதமடைகின்றனர்.

கல்கத்தா நகரிலேயே ராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவற்றுடன் தொடர்புடைய பல புனித இடங்கள் பரவியுள்ளன. அவற்றுள் தூய அன்னையார் வாழ்ந்த 'உத்போதன்' என்னும் இல்லம் மிகவும் புனிதமான ஒன்றாகும். அங்குதான் சுவாமி சாரதானந்தர் அன்னையாருக்குப் பணிவிடை புரிந்தார். குருதேவரின் இல்லறச் சீடரான பலராம் போஸின் இல்லமான 'பலராம் மந்திர்' மற்றோர்

புனித இடமாகும். இங்குக் குருதேவர் அடிக்கடிச் சென்றுவந்த துண்டு. பிற்காலத்தில் இன்னும் பல மடங்கள் கல்கத்தாவில் தோன்றின. அவற்றுள் அத்வைத ஆஸ்ரமம் மிகவும் குறிப்பிடத் தக்க ஒன்றாகும். அங்குதான் சுவாமி விவேகானந்தரின் நூல்கள் வெளியிடப்படுகின்றன. அதுதான் ராமகிருஷ்ண மிஷ னின் மிகப்பெரிய ஆங்கில வெளியீட்டு நிலையமாகும்.

தற்காலத்தில் நாடுமுழுதும் ராமகிருஷ்ண நிறுவனங்கள் பரவி யுள்ளன. கல்கத்தாவைத் தவிர, வாரணாசி, லக்னோ, பிருந்தா வனம், பாட்னா, கங்கல், பம்பாய், புவனேஸ்வரம், பூரி, ராஜமகேந்திரம், ஹைதராபாத், காஞ்சிபுரம், சென்னை, காலடி, கோயமுத்தூர், திருவனந்தபுரம் மற்றும் பல இடங்களிலுமாக மொத்தம் 118 நிறுவனங்கள் (1982-ல்) உள்ளன. இவற்றுள் 52 மிஷன் நிறுவனங்கள், 22 மடமும் மிஷனும் இணைந்த நிறுவ னங்கள், 44 மடங்கள் ஆகும். இவற்றைக் காண்பவர்கள் இவை மிகவும் எளிய நிலையில் தோன்றியதையும், தொடக்க நிலையில் இவற்றின் வளர்ச்சிக்கு, கடுமையான உழைப்பு, தியாகம், துன்பம் ஆகியவை இருந்ததையும் மறந்துவிடக்கூடும். எடுத்துக்காட்டாக, வாரணாசியில் தற்போதுள்ள மிகப்பெரிய மருத் துவமனை 25 பைசாவைக் கொண்டு தொடங்கப் பெற்றதாகும். அதே போன்று கன்கல் சேவாஸ்ரம மருத்துவமனையும் ரூ. 28/- முதலீட்டுடன் தொடங்கப்பெற்றதாகும். கோயமுத்தூரில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம் ரூ. 5.75 மூலதனத்துடன் தொடங்கப்பெற்றது. இவை அனைத்தும் பல்வேறு நிலைகளில் தோன்றி, பலவேறு முறைகளில் வளர்ந்து சிறந்துள்ளன. ஆனால் அனைத்திற்கும் அடிப்படையாக இருந்தது ஒன்றுதான். அதுதான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் உணர்ச்சிமிக்க செய்தியான 'மக்கள் தொண்டே மகேசன் வழிபாடு' என்பது. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வாக்கும் வரலாறும், அணு ஆயுதங் களால் போர் மேகங்கள் சூழும் இத்தருணத்தில் இவ்வுலகில் அமைதியையும் ஒருமைப்பாட்டையும் தோற்றுவித்து உலக வரலாற்றில் ஒரு மகத்தான இடத்தைப் பெற்றன. இந்தச் செய்தி உலகெங்கும் பரவுவதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ண மடமும், மிஷனும் சிறந்த கருவிகளாக அமைந்தன.

இத்தகைய பெருஞ்சிறப்பு வாய்ந்த நிறுவனத்தில் நானும் என் சிறு பங்கை ஆற்றும் பெறற்கரிய பேற்றைப் பெற்றேன். இல்லம் என்பது சகோதர பாவத்துடன் பலரும் சேர்ந்து வசிக்கும் இடமாகும். நான் முதன்முதலில் சென்னை மடத்திற்குச் சென்ற நாளிலிருந்து, ராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவற்றின் நிறுவ

னங்கள் எனக்குச் சொந்த இல்லங்கள் ஆயின. என் நேரத்தின் பெரும் பகுதியை நான் அந்த இடங்களில் கழித்தேன். 1928-ல் சுவாமி அமிர்தேஸ்வரானந்தரின் அறிவுரைப்படி ராமகிருஷ்ண மிஷனின் உறுப்பினன் ஆனேன். இவ்வாறு நான் என்னை மிஷனுடன் ஒன்றுபடுத்திக்கொண்டது, கோயமுத்தூரில் ஸ்ரீ ராம கிருஷ்ண மிஷன் வித்யாலயத்தைத் தோற்றுவிக்க எனக்குத் துணை புரிந்தது. பின்னால் வரும் ஓர் அத்தியாயத்தில் இதைப்பற்றி விரிவாக அறியலாம்.

# 5. கல்வி

## சுவாமி விவேகானந்தரின் கருத்துக்கள்

நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு நல்ல கல்விமுறை இன்றியமையாததாகும் என்று சுவாமி விவேகானந்தர் நம்பினார். ஒரு நல்ல கல்விமுறை, நாட்டின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்; நாட்டின் உயர்ந்த இலட்சியங்களைக் காப்பாற்ற வேண்டும்; சமுதாயத்தின் கேடுகளை நீக்க வேண்டும்; சாதி, சமய, பொருளாதார வேறுபாடின்றி அனைவர்க்கும் நம்பிக்கையும், வலிமையும், ஒருமைப்பாடும் ஊட்டவல்லதாக இருக்க வேண்டும்.

### தேசியப் பின்னணி

சுவாமி விவேகானந்தர், இந்தியா முழுதும் பயணம் செய்த போது நாட்டு மக்களின் வாழ்க்கைமுறை, கலாச்சாரப் பின்னணி, சமயச்சம்பிரதாயங்கள், பொருளாதார நிலை ஆகியவற்றைக் கூர்ந்து கவனித்தறியும் வாய்ப்பைப் பெற்றார். மக்களிடம் நிலவிய பலவீனங்களே நம் நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணம் என்பதை உணர்ந்தார். நல்லதொரு கல்வி முறையை அமைக்க வேண்டுமெனில் மக்களின் பலவீனங்களை நன்கு அறிய வேண்டும். அப்பொழுதுதான் அவற்றைப் போக்குவதற்கான வழி முறைகளை அமைக்க இயலும்.

1. விவேகானந்தர் கூறினார் ''பாமரர்களைப் புறக்கணித்ததே நம் தேசியப் பெரும் பாவம். நம் நாட்டின் கல்வியும், அறிவுத் திறனும் ஒரு சிலரின் ஆதிக்கத்தில் இருந்ததுதான் நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணம். ஆகவே நம் நாடு மீண்டும் புத்துயிர் பெற்று எழவேண்டுமென்றால் பாமரர்களிடம் கல்வியைப் பரப்பவேண்டும். அவர்களுக்கு நல்ல கருத்துக்களைக் கொடுங்கள்; அவர்களின் அகக் கண்களைத் திறந்து விடுங்கள்; தங்களைச் சுற்றிலும் என்ன நடக்கிறதென்று அவர்கள்அறிந்து கொள்ளட்டும். அப்போது தங்களின் விமோசனத்திற்குத் தாங்களே வழி காண்பார்கள் அவர்கள்''.

2. நம் நாட்டின் வீழ்ச்சிக்கு இரண்டாவது காரணமாக, சுவாமிஜி கருதுவது பெண்களின் தாழ்வுற்ற நிலை. ''அனைவரிடத்திலும் உறைவது ஒரே ஆன்மாதான் என்று நம் சமயம் சொல்கிறது. அத்தகைய நாட்டில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே ஏன் இந்த வேறுபாடு? சாத்திரங்களையும், ஸ்மிருதிகளையும் எழுதிய ஆண்களே, பெண்களுக்குரிய விதிகளைக் கடுமையாக்கினர்; பெண்களைக் குழந்தைகள் பெறும் இயந்திரங்கள் என்ற நிலைக்குக் கொண்டுவந்தனர். வேத, உபநிடதக் காலங்களில் மைத்ரேயி, கார்க்கி போன்ற பெண்மணிகள் ஞானமிக்க முனிவர்களின் அளவுக்குக் கல்வி-கேள்விகளில் உயர்ந்திருந்தனர். பெண்களுக்கு உயர்ந்த நிலை கொடுத்த நாடுகள் அனைத்தும் உன்னதநிலை பெற்றுள்ளன.''

3. சிரத்தையின்மையும், தன்னம்பிக்கையின்மையுமே நம் நாட்டின் வீழ்ச்சிக்கும், தனிமனித வீழ்ச்சிக்கும் காரணங்களாகும் என்று சுவாமிஜி எடுத்துரைக்கிறார். ''நம்மிடம் தன்னம்பிக்கை மீண்டும் புத்துயிர் பெற்று எழ வேண்டும். அப்பொழுது நம் நாட்டின் பிரச்சனைகள் அனைத்திற்கும் நாமே வழிகாண்போம். நமக்கு வேண்டுவது சிரத்தையே. மனிதனுக்கும், மனிதனுக்கும் உள்ள வேறுபாடு அவர்களிடம் இருக்கும் சிரத்தையின் வேறுபாடு தான்''.

4. ''உடல்வலிமையின்மையே நம் பெரும்பான்மையான இன்னல்களுக்குக் காரணம். கிளிகளைப்போல் நாம் பல விஷயங்களைப் பற்றிப் பேசுகிறோம். ஆனால் அவற்றைச் செய்வதில்லை. சொல்வது போல் செய்யாததே நம் பழக்கமாகிவிட்டது. இதற்கெல்லாம் காரணம் நம் உடலின் வலிவின்மையே! இத்தகைய உடலிலிருக்கும் வலிமையற்ற மூளையால் எதையும் சாதிக்க முடிவதில்லை. ஆகவே நம் உடலை வலிமைபெறச் செய்யவேண்டும்''.

5. ''ஒருமித்த மனத்துடன் செயல்படுவதுதான் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி பெற வழி. 'ஆரியன்' 'திராவிடன்', 'பிராம்மணன்' 'பிராம்மணன் அல்லாதான்' போன்ற அற்பக் காரணங்களுக்காக நீங்கள் உங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வீர்களானால் உங்கள் சக்தியையும், ஆற்றல்களையும் திரட்ட இயலாதவர்கள் ஆவீர்கள்; உங்களால் மகத்தான இந்தியாவை உருவாக்க இயலாது. ஆகவே இத்தகைய வேற்றுமை உணர்வுகளை விட வேண்டும்''.

6. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பது சுவாமிஜியின் மற்றொரு மகத்தான செய்தி. அவர் சொன்னார்:

''கடவுளைத் தேடி எங்கே அலைகிறீர்கள்? உங்களைச் சுற்றி யிருக்கும் உயிருள்ள ஜீவன்களிடம் கடவுள் உறைவதில்லையா? ஏழைகளின் வடிவிலும். இன்னல்படுவோர்களின் வடிவிலும், நோயுற்றோர் வடிவிலும், தாழ்வுற்றோர் வடிவிலும் இறைவன் வந்துள்ளான். அவர்களுக்குப் பணிவோடு சேவை செய்யுங்கள்; அவர்களுக்காக உழையுங்கள். அதுதான் உண்மையான கடவுள் வழிபாடாகும்''.

7. சமயமென்பது வெறும் சடங்குகளாகவும், அர்த்தமற்ற சம்பிரதாயங்களாகவும் தாழ்ந்துவிட்டதைச் சுவாமி விவேகானந்தர் உணர்ந்தார். நம்மைப் பலவீனர்களாக்கிப் படுகுழியில் தள்ளியுள்ள நீண்டகால மூட நம்பிக்கைகள், நம்மைக் குறுகிய மனப்பான்மை கொண்டவர்களாக்கிவிட்ட நம் சாதிக் கட்டுப்பாடுகள், சமூகப்பழக் கங்கள் ஆகியவற்றை நாம் கைவிடவேண்டும் என்று சுவாமிஜி உரத்த குரலில் கூறினார். தூய்மை, வலிமை, ஆண்மை ஆகிய வற்றை அளிப்பதே உண்மையான சமயமாகும்.

8. நம் நாட்டை, குறிப்பாக கிராமப் பகுதிகளைத் துன்பத்தில் ஆழ்த்தியுள்ள பயங்கரமான வறுமையைக்கண்டு சுவாமிஜி அளவற்ற துயருற்றார். வயிற்றுக்குச் சோறின்றி வாடும் மக்களுக்கு எந்தவிதமான உயர்ந்த கருத்துக்களையும் ஆன்மிகத் தையும் போதிக்கமுடியாது. பசிக்கு உணவு கொடுக்க இயலாத எந்தச் சமயத்தையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியா மறு மலர்ச்சி பெறவேண்டுமென்றால் ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும்; பாமரர்களுக்குக் கல்வியளிக்கவேண்டும்.

ஆகவே, ஏழைகளின்மேல் அன்பு, அவர்களுக்குச் சேவை செய்யும் ஆர்வம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஆன்மிகச் சமத்துவம் தோன்றவேண்டுமென்றும் அதன் மூலம் சாதி, சமய, இனப்பாகுபாடுகள் மறைந்து அனைவரும் தங்கள் ஆளுமை யையும், பலத்தையும் வளர்த்துக் கொள்ளச் சம வாய்ப்புக்கள் பெற்று, அதனால் நாடும் உலகும் பயன்பெற வேண்டுமென்றும் சுவாமிஜி பெரிதும் விரும்பினார்.

9. தற்கால நவீன அறிவியலிலும், தொழில் நுட்பத்திலும் இந்தியர்கள் திறமை பெற்று இந்த நாட்டை வளமுள்ள நாடாக மாற்றவேண்டும் என்று சுவாமிஜி கூறினார். அறிவியலும், ஆன்மிகமும் இணைந்ததாக நம் கல்வி அமைய வேண்டுமென்று அவர் விரும்பினார். ஆனால் ஆன்மிகம்தான் இந்திய வாழ்க்கையின் அடித்தளமாக அமையவேண்டுமென்று வலியுறுத்தினார்.

10. உலகச் சமயங்கள் அனைத்தும், மக்களின் வாழ்க்கைச் சூழல், அவர்களின் வரலாறு, பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றுக் கேற்ப அவர்களின் தேவைகளை நிறைவு செய்யத் தோன்றிய வையே என்பதை சுவாமிஜி நன்கு உணர்ந்திருந்தார். உலக நாடுகளுக்கிடையேயுள்ள இடைவெளி குறைந்து, அவற்றுக் கிடையேயுள்ள தடைகள் மறைந்து, அவை நாளுக்கு நாள் ஒன்றை ஒன்று நெருங்கிக் கொண்டிருக்கும் இக்காலத்தில் மக்களை இணைக்கும் அடிப்படைச் சமய உண்மைகளுக்கு இடம் கொடுக்க வேண்டியது தவிர்க்கமுடியாததாகும். ஆகவே சமயச் சகிப்புத் தன்மை என்பதைவிட, சமய ஏற்புத்தன்மை மேலானது என்று சுவாமிஜி கருதினார்.

### சுவாமிஜியின் செய்தி

நமது மறுமலர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் கல்வி ஒரு சிறந்த கருவியும், வழியும் ஆகும் என்பது சுவாமிஜியின் கருத்து. கல்வியின் அடிப்படைத் தத்துவத்தையும், கல்வித்திட்டத்தின் வடிவ மைப்புப் பற்றியும் அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். தற்காலக் கல்வியாளர்களுக்கு, சுவாமிஜியின் கல்விக் கருத்துக்கள் புத்துணர்ச்சியை ஊட்டவல்லன.

சுவாமிஜியின் கல்விக் கருத்துக்களைக் கீழ்க்கண்டவாறு பகுத்து விளக்கலாம்:

1. *மனிதனுக்குள் புதைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிக் கொணர்வதே கல்வி:*

அனைத்து மக்களிடமும் தெய்வத் தன்மை ஆழ்ந்து மறைந் துள்ளது. கல்வியென்பது மனிதனுக்குள் புதைந்திருக்கும் பூரணத்தை வெளிக்கொணர்வதேயாகும். குழந்தைகளிடம் புதைந் திருக்கும் பூரணத்துவம் வெளிப்பட ஆசிரியர் ஒரு சிறந்த கருவியாக அமைய வேண்டும். குழந்தைகளுக்கு உடன்பாட்டு முறையில் வழிகாட்டி அவர்களது தேசியப் பாரம்பரியத்தையும், ஆன்மிகப் பாரம்பரியத்தையும் உணருமாறு செய்து அதை அடைய அவர் களுக்கு உதவ வேண்டும்.

2. *கல்வியென்பது வெறும் செய்திகளை மூளையில் திணிப் பதன்று; ஆனால் கருத்துக்களைத் தன்வயப்படுத்தல்:*

'கல்வியென்பது ஒருவனுடைய மூளையில் பல செய்திகளைத் திணிப்பதன்று. அப்படித் திணிக்கப்படும் விஷயங்கள் வாழ்நாள் முழுதும் அவனுடன் ஒன்றாமல் தொல்லை கொடுத்துக் கொண்டே இருக்கும். கற்கும் விஷயங்கள் நன்றாக உட்சென்று தன்வயப்

படவேண்டும். அவை உயிர் ஊட்டுவனவாய், மனிதத்தன்மை அளிப்பனவாய், ஒழுக்கம் அளிப்பனவாய் இருத்தல் வேண்டும். நீங்கள் ஐந்தே ஐந்து கருத்துக்களை நன்றாகக் கிரகித்து அவற்றை உங்கள் வாழ்க்கையிலும், நடத்தையிலும் ஊன்றி நிற்கும் படிச் செய்வீர்களானால் ஒரு நூல்நிலையம் முழுவதையும் மனப் பாடம் செய்தவனை விடப் பெரிய கல்விமானாவீர்கள்.

3. *மனிதனாக்கும் கல்வி; வலிமையளிக்கும் கல்வி தேவை*

கல்வி, பயிற்சி ஆகியவற்றின் முடிவான நோக்கம் மனிதனை மனிதனாக்குவதே. அனைத்துப் பயிற்சிகளின் நோக்கமும் மனித வளர்ச்சிக்கு உதவுவதே. மன வலிமையைத் தன் வயப்படுத்தி, தக்கவழியில் செலுத்துவதே கல்வி எனப்படும். இரும்பு போன்ற தசைநார்களும், எஃகு போன்ற நரம்புகளும், எதனாலும் தடுக்க முடியாத அளவற்ற மனஉறுதியும் உள்ளவர்களே நம் நாட்டிற்கு இப்போது தேவை. அவர்களின் ஆற்றல் எதற்கும் அஞ்சாததாய், அண்டசராசரங்களின் ரகசியங்களையும் ஊடுருவிச்சென்று அறிய வல்லதாய், எவ்வகையிலேனும், நோக்கத்தைப் பூர்த்தி செய்ய வல்லதாய், அவசியமானால், சாவையும் கண்டு அஞ்சாமல் கடலின் அடியிலும் செல்ல வல்லதாய் இருத்தல் வேண்டும்.

4. *மன ஒருமைப்பாடு*

மன ஒருமைப்பாடே கல்வியின் சாராம்சம் என்பது சுவாமிஜி யின் கருத்து. கல்வி பெறுவதற்கு ஒரே ஒரு சிறந்த வழி மன ஒருமைப்பாடேயாகும். மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள வேறு பாடு அவனிடத்திலுள்ள மனத்தை ஒருமுகப்படுத்தும் சக்தியில் தான் உள்ளது. மிகத் தாழ்ந்த மனிதனை மிக உயர்ந்த மனிதனு டன் ஒப்பிட்டுப் பாருங்கள். மன ஒருமைப்பாட்டின் அளவில்தான் அவர்களின் வித்தியாசம் இருக்கிறது.

பிரம்மச்சரியத்தைச் சரிவரப் பின்பற்றாத காரணத்தினால் தான் நம் நாடு இவ்வளவு சீர்குலைந்துள்ளது. பிரம்மச்சரியத்தைச் சரிவரக் கடைப்பிடிப்பதன் மூலம் குறைந்த காலத்தில் நிறையக் கற்கமுடியும். ஒரு முறை கேட்டதை நீண்ட நாள் மனத்தில் இருத் திக்கொள்ளும் அளவற்ற நினைவாற்றலையும் அவன் பெறுகிறான். தூய்மையான மனம் ஒருவனுக்கு மனத்திட்பத்தையும் சக்தியையும் அளிக்கிறது. பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்தவர்கள் சமுதாயத் தில் மகத்தான செல்வாக்கைப் பெறுகிறார்கள். ஆன்மிகத் துறை யில் தலை சிறந்து விளங்கிய அனைவரும் பிரம்மச்சரிய வாழ்க்கை வாழ்ந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள். இத்தகைய வாழ்க்கையே அவர்களுக்கு அளப்பரிய ஆற்றலை அளித்தது.

### 5. ஒழுக்கம் அளிப்பதே கல்வியின் நோக்கம்

சிறந்த ஒழுக்கம் அளிப்பதே கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். ஒரு மனிதனுடைய ஒழுக்கம் எனப்படுவது அவனுடைய மனப்போக்குகள் அனைத்தும் சேர்ந்து உருவாவது; அதனை அவனது மனோவிருத்திகளின் தொகுதி என்றும் சொல்லலாம். இன்பமும் துன்பமும் ஒருவனது மனத்தில் பலவகையான பதிவுகளை உண்டாக்குகின்றன. அப்பதிவுகளின் தொகுதியே அவனுடைய பண்பு அல்லது குணமாகிறது. நம் எண்ணங்களே நம் இயல்பை உருவாக்குகின்றன. இரும்பின்மேல் சம்மட்டியால் விழும் ஒவ்வோர் அடியும் அதன் உருவத்தைத் தீர்மானம் செய்வது போல் நம் ஒவ்வோர் எண்ணமும் நம் பண்பைத் தீர்மானம் செய்கிறது. சொற்கள் அவ்வளவு முக்கியமானவை அல்ல. எண்ணங்களே முக்கியமானவை. அவற்றுக்கு ஆழ்ந்த சக்தி உண்டு. நெடுங்காலத்திற்குப்பின் நிகழக்கூடியதை அவைதாம் தீர்மானிக்கின்றன. ஆதலால் நாம் நினைக்கும் நினைவுகளைப்பற்றி விழிப்போடு இருக்க வேண்டும். ஒருவன் நல்லெண்ணங்களை எண்ணி, நற்செயல்களையே செய்வானாயின், அவன் மனத்தில் நற்பண்பும், நல்லியல்பும் உண்டாகும். அதன் பயனாக அவன் தன்னையும் அறியாமல் நற்செயல்களில் ஈடுபடுவான். அவன் நீண்ட நாட்கள் நற்செயல்களையே செய்து நல்லெண்ணங்களையே மனத்தில் கொண்டிருப்பானாயின் அவன் எப்பொழுதும், எந்நிலையிலும் நற்செயல்களையே செய்வான்.

### 6. ஆளுமை வளர்ச்சி

சிறந்த ஆளுமை வளர்ச்சியின் அவசியத்தைப்பற்றி, சுவாமிஜி வற்புறுத்திக் கூறியுள்ளார். ஆளுமை என்றால் என்ன? ஒரு மனிதன் நல்ல ஆளுமை பெற்றிருக்கிறான் என்று சொல்லும் போது அவனுடைய உடல் தோற்றமே நம் நினைவுக்கு வருகிறது, ஆனால் உடல் தோற்றம் மட்டும் ஆளுமையாகாது. உலகின் தலைசிறந்த பெரியோர்கள் பலருக்கு நல்ல உடல்தோற்றம் இருந்ததில்லை. நெப்போலியன் சராசரி உயரமுடையவன். ஆபிரகாம் லிங்கனை அழகிய தோற்றமுடையவர் என்று கூற இயலாது. உலகத்தார் அனைவரின் உள்ளங்களிலும் குடிகொண்ட காந்தியடிகளும் சிறந்த உடல்தோற்றம் கொண்டவர் அல்லர். உலகக் கவிஞர் மில்டன், பார்வையற்றவர்; தாமர்லேனும், ரூஸ்வெல்ட்டும் உடல் ஊனமுற்றவர்கள்.

ஆகவே ஆளுமை என்பது வெறும் உடல்தோற்றம் அன்று. மனிதனின் பல்வேறு குணங்களின் கூட்டமைப்பே அது. வலிமை, அஞ்சாமை, மனஉறுதி, போன்றவை சிறந்த ஆளுமையின்

கூறுபாடுகள். நல்ல ஆளுமையை வளர்த்துக்கொள்வது அனைவர்க்கும் இன்றியமையாதது.

## 7. *நல்ல மாணவனின் இயல்புகள்*

அறிவு வளர்ச்சியில் உண்மையான ஆர்வமும், விடாமுயற்சியும், தூய்மையுமே நல்மாணாக்கனின் பண்புகளில் முக்கியமானவை. எண்ணம், சொல், செயல் ஆகியவற்றில் முழுத்தூய்மை இன்றியமையாதது. கருதிய கருமம் கைகூடும் என்பது ஆன்றோர் அருள்மொழி. அதற்கு ஏற்ப, மாணவனுக்குக் கல்விபெறுவதில் நிறைந்த ஆர்வம் இருக்க வேண்டும். நாம் முழு மனதுடன் முயன்றால் அன்றி நாம் விரும்பும் பொருளை அடைவது அரிது. அதற்காக இடைவிடாது முயல வேண்டும். நம் மனத்திலிருக்கும் தாழ்ந்த குணங்களையொழிக்க ஓயாது போர் செய்ய வேண்டும். தாழ்ந்த குணங்கள் முற்றிலும் அகன்று, உயர்ந்த பண்புகள் வெற்றிபெறும்வரை இப்போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும். இவ்வகையான ஊக்கத்துடன் முயலும் மாணவன் வெற்றிபெறுவது உறுதி.

## 8. *குழந்தையின் வளர்ச்சியிலுள்ள தடைகளை நீக்குதல்*

குழந்தையின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவற்றை நீக்குவதே ஆசிரியர்களின் பணி என்று சுவாமி விவேகானந்தர் கருதினார். ஒரு செடியை அதன் இயற்கையை மீறி வளரச்செய்ய முடியாது; அதைப்போன்றதே குழந்தைக்குக் கல்வி புகட்டுதலும். செடி தன் இயல்புக்கு ஏற்ப, தானே வளர்கிறது. அவ்வாறே குழந்தையும் தன் இயற்கைக்கு ஏற்பத் தானே கற்றுக்கொள்கிறது. ஆனால் நாம் ஒன்று செய்யமுடியும். குழந்தை தன் இயல்புக்கு ஏற்றவாறு வளர நாம் உதவி செய்ய முடியும்; அதன் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவற்றை நீக்க முடியும். அதற்குமேல் அது பெறும் அனுபவத்திலிருந்துதான் அறிவு வளர்ச்சி உண்டாகும். ஒரு செடியின் வளர்ச்சிக்கு உதவியாய் இருக்கும் பொருட்டு, பூமியைக் கிளறிவிடலாம்; சுற்றிலும் வேலியிட்டுக் காப்பாற்றலாம். அது வளர்வதற்குத் தேவையான எரு, தண்ணீர், காற்று முதலியவற்றை அதற்குக் கொடுக்கலாம். இவையனைத்தையும் கொண்டு செடி தானாக வளர வேண்டும். அதுபோலத்தான் குழந்தைகளின் கல்விக்கு ஆசிரியர் செய்யும் உதவியும்.

## 9. *நல்லாசிரியரின் இயல்புகள்*

ஆசிரியர், மறைகளின் மெய்ப்பொருளை உணர்ந்தவராய் இருத்தல் அவசியம். எல்லோரும் தங்கள் மதத்தின் வேத

நூல்களைப் படிக்கிறார்கள். ஆனால், அவர்கள் பெரும்பாலும் அவற்றிலுள்ள இலக்கண, இலக்கிய நயங்களைப்பாராட்டுவதோடு நின்றுவிடுகிறார்கள். வேதத்தின் மெய்ப்பொருளை உணர்வது தான் உண்மையான ஆசிரியரின் இலக்கணம். ஆசிரியரின் இரண்டாவது பண்பு, அவர் மாசற்றவராக இருக்க வேண்டும் என்பதாகும். 'ஆசிரியருடைய ஒழுக்கத்தையும், நடத்தையையும் பார்ப்பது ஏன்? அவர் சொல்வது சரியாயென்று பார்த்தால் போதாதா?' என்று கேட்பவர் பலருளர். இது சரியன்று. சத்தியத்தை, முதலில் தான் உணரவும், பின்னர் அதை மற்றவர் களுக்குப் போதிக்கவும் இதயபூர்வமான தூய்மை அவசியம். அவர் முற்றிலும் தூய்மையானவராக இருந்தாலன்றி அவர் சொல்லுக்கு மதிப்பும் பயனும் இரா. ஆசிரியராக இருப்பவர் மாணவனின் அறிவை வளர்ப்பது மட்டுமல்லாமல், இயன்ற அளவு தன் ஆற்றலையும் அளித்து உதவுபவராக இருக்க வேண்டும். மூன்றாவதாக, ஆசிரியர் எவ்வகைப் பயனையும் எதிர்பாராமல் கற்பிக்க வேண்டும். பணத்துக்காகவோ, புகழுக் காகவோ, பெயருக்காகவோ அவர் கற்பிக்காமல், மாணவன் பேரிலும், மனித சமுதாயத்தின் பேரிலும் உள்ள அன்பின் காரணமாகவே அவர் தம் பணியை ஆற்றவேண்டும். அன்பின் மூலம்தான் ஒருவர்க்கொருவர் ஆன்மிக உணர்ச்சியை அளிக்க இயலும்.

## 10. *சமயமே கல்வியின் சாரம்*

சமயமே கல்வியின் உட்கரு என்று சுவாமிஜி கருதினார். சமயக்கல்வி என்பதில் என்னுடைய சமயத்தைப்பற்றிய கருத் தையோ, அல்லது வேறு ஒருவருடைய சமயத்தைப்பற்றிய கருத்தையோ நான் குறிப்பிடவில்லை. மனிதவாழ்க்கைக்கு என்றும் அடிப்படையாய் இருந்துவரும் நிலையான ஆன்மிக உண்மைகளை மக்கள் அறியுமாறு எடுத்துச்சொல்ல வேண்டுமென் பதே என் கருத்து. முதலில், ஆன்மிக உண்மைகளை உய்த்துணர்ந்த ஞானிகளின் வழிபாட்டை மக்களிடையே அறிமுகப்படுத்த வேண்டும். அந்த ஞானிகளை, வாழ்க்கையின் உயர்ந்த லட்சியங்களாக மக்கள் அறிந்து போற்றும்படிச் செய்ய வேண்டும்.

## 11. *ஒற்றுமைக்கான கல்வி*

இனிமேல் நாடுகள் தனித்தனியே வாழ்வது கடினம் என்று சுவாமிஜி கருதினார். உண்மையான நாட்டுப்பற்று உலக ஒற்றுமைக்கு வழிகாட்டவேண்டும். இருபதாண்டுகளுக்கு முன் தேசிய அளவிலிருந்த அரசியல் மற்றும் சமுதாயப் பிரச்னைகள்,

இன்று உலகப் பிரச்னைகளாக மாறியுள்ளன. தேசிய அளவில் மட்டும் அவற்றைத் தீர்க்க இயலாது.

நாம் மற்றவர்களுக்குக் கொடுத்தால்தான் பிறரிடமிருந்து நாமும் பலவற்றைப் பெற இயலும். நம் நாடு விடுதலைபெற்ற இந்த நாற்பது ஆண்டுகளில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையில் மற்றவர்களுக்கு உதவும் நிலையில் உயர்ந்துள்ளோம். ஆயினும் விண்வெளி ஆராய்ச்சி, சூரிய சக்தியைப் பயன்படுத்தல், அணு ஆராய்ச்சி போன்ற அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் மேலும் நாம் முன்னேற வேண்டியுள்ளது. இவற்றை நாம் வெளி நாடுகளிலிருந்து பெற்று, பதிலாக நம்மிடம் இருக்கும் சமயம், தத்துவஞானம் போன்ற ஆன்மிகச் செல்வங்களை நாம் அவர்களுக்கு வழங்கமுடியும்.

## 12. *தேசிய ஒருமைப்பாட்டுக்கான கல்வி*

ஒன்றுபட்ட வலிமைமிக்க இந்தியாவை உருவாக்க வேண்டு மென்றால் தேசிய மற்றும் சமூக ஒருமைப்பாடு இன்றியமையாதது. இதற்கு, கல்வி ஒரு முக்கியமான சாதனம். தேசிய அளவிலான ஒரு நல்ல கல்வித் திட்டத்தினாலேயே இதனைச் சாதிக்க முடியும். இத்தகைய தேசியக் கல்வித்திட்டம் இரண்டு முக்கியக் கூறுபாடு களைக் கொண்டிருக்க வேண்டும். முதலாவதாக, மக்கள் மனத்தில் ஆழ்ந்த தேசிய, சமூக, ஆன்மிக உணர்வுகளை வளர்ப்பது; குறுகிய, பிராந்திய, சமய, இன உணர்வுகளைத் தவிர்த்து தேசிய நீரோட்டத்துடன் மக்கள் தங்களை ஒன்றுபடுத்திக் கொள்ளும் குடிமையுணர்வு பெறுவது. இரண்டாவதாக, ஏழை-பணக்கார வேறுபாடு, படித்தவர்-பாமரர் வேறுபாடு, கிராம-நகர வேறுபாடு ஆகியவற்றைக் களையத் தீவிர முயற்சிகள் மேற்கொள்வது.

## 13. *ஆன்மிக எழுச்சிக்கான கல்வி*

சுவாமிஜி மேலும் கூறினார்: ''நமக்கு உயிர் கொடுக்கும் ரத்தம் வலிமையானதாகவும், தூய்மையானதாகவும் இருக்கும் வரை நம் உடலில் நோய்க்கிருமிகள் வாழமுடியாது. நம் உயிர் - ரத்தம் ஆன்மிகமேயாகும். அது தெளிவாகவும்,வலிமையும் தூய்மையும் நிறைந்ததாகவும், உத்வேகம் கொண்டதாகவும் இருக்கும்வரை மற்ற அனைத்தும் சரிவர அமையும். நம் ஆன்மிக ரத்தம் தூய் மையாக இருந்தால் நம் அரசியல், சமூகம் மற்றும் அனைத்திலும் தீமைகளும் நீங்கும்; நம் வறுமையைக் கூட அதனால் நீக்கி விடலாம்.''

14. *கல்வியின் மூலம் அறநெறி, சமூக, ஆன்மிக நல்லுணர்வுகளை வளர்த்தல்*

நமது கல்விமுறையானது சமூகக் குறிக்கோள்கள், கூட்டுறவு உணர்வு, உடல் உழைப்பு, செயல்திறன், நல்லொழுக்கம் ஆகிய வற்றைப் புறக்கணித்துவிட்டு, போட்டி, பொறாமை, குறுகிய மனப் பான்மை, வெறும் மொழியறிவு, நூலறிவு ஆகியவற்றுக்கே சிறப் பிடம் அளிக்கிறது என்று கோத்தாரி கல்விக்குழு தன் அறிக்கை யில் குறிப்பிட்டுள்ளது. கல்வியில் ஆன்மிக நல்லுணர்வுகளின் போதனைக்கு இடமளிப்பதன்மூலம் இக்குறைபாட்டை நீக்க முடி யும். ஆன்மிக நல்லுணர்வுகள் என்பன வெறும் சடங்குகளிலோ, சமய நூல்களைப் படிப்பதிலோ இல்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இதயத்தை வளர்ப்பதன்மூலம் மனிதனை உயர் நிலைக்குக் கொண்டு செல்லலாம். அது வெறும் அறிவு நிலையைத் தாண்டி உயர்ந்த ஆன்ம நிலைக்கு மனிதனை உயர்த்தி அவனிடம் நல்லுணர்வுகளை வளர்க்கின்றது என்பது சுவாமிஜியின் கருத்து.

ஆகவே தற்போது நம்முன் உள்ள பெரும்பணி, மக்களிடம் அறநெறி, சமூக, ஆன்மிக நல்லுணர்வுகளை வளர்ப்பதன்மூலம் நாட்டை வலிமைபெறச் செய்வதுதான்.

சுவாமிஜியின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, 'கல்வியில் அறநெறி, சமூக, ஆன்மிக நல்லுணர்வுகள்' என்ற பொருளில் கருத்தரங்கு ஒன்று 'ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யால யத்தில்' நடைபெற்றது. அக்கருத்தரங்கின் அறிக்கையில், குழந்தைப்பள்ளி, தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகிய பல்வேறு நிலைகளில் மாணவர்களிடம் இத்தகைய நல் லுணர்வுகளை வளர்ப்பதற்குரிய விரிவான பாடத்திட்டம் மற்றும் செயல் திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

15. *உனது கடமையைச் செய்*

மனிதன் தன் கடமையைச் செவ்வனே செய்யவேண்டும் என்று சுவாமிஜி வலியுறுத்தியுள்ளார். அனைத்து வேலைகளும் புனிதமானவை; அவற்றுள் உயர்வு-தாழ்வு இல்லை என்று சுவாமிஜி குறிப்பிட்டுள்ளார். ஒரு மனிதனின் உயர்வு அவன் எந்த வேலையைச்செய்கிறான் என்பதைப் பொறுத்ததன்று; அவன் அதை எத்தகைய மனப்பான்மையுடன் செய்கிறான் என்பதைப் பொறுத்ததேயாகும். அனைத்து வேலைகளையும் நாம் வழிபாடாகக் கருதி, தன்னலமின்றியும், பயன் கருதாமலும் செய்ய வேண்டும் என்று அவர் கூறுவார். இவ்வாறு செய்யப்படும்

கடமைகள், உயர்ந்த தவம் ஆகின்றன. மலைகளிலும், குகைகளிலும் சென்று கடும் தவம் புரிந்து பெறும் ஆன்மிக உயர்வை அவை அளிக்கின்றன.

## 16. *நாட்டுப்பற்றை வளர்ப்பதற்கான கல்வி*

சுவாமி விவேகானந்தரின் எழுத்துக்கள் படிப்பவர் மனதில் ஆழ்ந்த நாட்டுப்பற்றைத் தூண்டிவளர்க்கும் வலிமையுடையன. இந்தியா தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு, பாழ்பட்டு நின்ற நிலையில் சுவாமி விவேகானந்தர் கணீரென்ற உரத்த குரலில், நீ ஓர் இந்தியன் என்பதில் பெருமை கொள்', என்று முழங்கினார்.

நாட்டுப்பற்று என்பது அழகிய சொற்களிலோ, மேடைப் பேச்சிலோ இல்லை என்பதும், நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் ஒருவரின் இதயத்தில் கொழுந்துவிட்டெரியும் நெருப்பு அது என்பது சுவாமிஜியின் கருத்தாகும். இந்த நாட்டின் வறுமை, அறியாமை, இன்னல்கள் ஆகியவற்றை ஒழிக்கவேண்டும் என்ற தீவிர உணர்வே நாட்டுப்பற்று. உண்மையான நாட்டுப்பற்றுள்ள ஒருவர் தம் நாட்டிற்காக எதையும் தியாகம் செய்யத் தயங்கமாட்டார்.

சுவாமிஜியின் கல்விக்கருத்துக்கள் பற்றி நான் எழுதிய நூலில்* (கல்வி) கல்வியின் நோக்கங்கள், உடன்பாட்டு அணுகுமுறை, ஆசிரியரின் பணி, மன ஒருமைப்பாடே கல்விக்கு உகந்த வழி, சிந்தனைப் பயிற்சி, அன்பின் ஆற்றல், பணிசெய்வதன் மூலம் உள்ளத்தைச் சீர்படுத்தல், தியானம், மனக்கட்டுப்பாடு, தேசிய ஒருமைப்பாட்டுக்கும் உலக நேயத்திற்குமான கல்வி, கிராம வளர்ச்சி, கல்வியில் ஆன்மிக நல்லுணர்வுகள் போன்ற பல தலைப்புகளில் சுவாமி விவேகானந்தரின் கல்விக் கோட்பாடுகளை விவரித்துள்ளேன். நான்கு பதிப்புகள் வெளிவந்துள்ளதே, ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும் அதற்கிருக்கும் வரவேற்பைக் காட்டுகிறது.

---

* Educational Philosophy of Swami Vivekananda by T. S. Avinashilingam, Published by Sri Ramakrishna Mission Vidyalaya, Coimbatore - 641 020.

# 6. இளமைப் பருவமும் குடும்பப் பின்னணியும்

1903-ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் நாள் திருப்பூரில் ஒரு பெரிய செல்வந்தர் குடும்பத்தில் நான் பிறந்தேன். என் தாயார் திருமதி பழனியம்மாள் ஆழ்ந்த இறைபக்தி உடையவர். அவர் எங்கள் குடும்பத்தை நன்கு பராமரித்து வந்தார். என் தந்தையார் திரு. K. சுப்பிரமணிய செட்டியார் ஒரு பெரிய வணிகர்; வங்கி நடத்தி வந்தார். மிகுந்த தர்மசிந்தனை உடையவர். நான்கு குடும்பங்கள் சேர்ந்த பெரிய கூட்டுக்குடும்பம் எங்களுடையது. இக்கூட்டுக் குடும்ப வாழ்க்கை, மற்றவர்களின் தேவைகளை மதித்தல், மற்றவர்களின் விருப்பு வெறுப்புகளை உணர்ந்து நடத்தல், அன்பு, பரிவு போன்ற பல நற்குணங்களை என்னிடம் வளர்த்தது.

எங்கள் குடும்பம் மிகப் பழமையானது; மிக மதிக்கப் பெற்றதும்கூட. எங்கள் முன்னோர்கள் நன்கு பொருளீட்டிச் சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்தனர். அவர்கள் தங்கள் குடும்பப் பொறுப்புகளைச் செவ்வனே செய்ததோடு, சமூகத்திற்கும் தொண்டு செய்தனர். திருப்பூர், பல்லடம், அவினாசி, பேரூர், திருமுருகன்பூண்டி போன்ற திருத்தலங்களில் பெரிய தர்ம சத்திரங்களைக் கட்டியதோடு புனிதப்பயணம் செல்லும் யாத்திரிகர்களுக்கு அங்கு உணவளிக்கவும் ஏற்பாடு செய்திருந்தனர். பல ஆலயங்களில் அன்றாட வழிபாட்டிற்கு வழிவகை செய்திருந்தனர்.

என் தந்தையார் மிகவும் அன்பானவர். கோயில்களுக்குச் செல்வதிலும், விரதங்களை அனுஷ்டிப்பதிலும் ஈடுபாடு உடையவர். அவர் தமது மக்களை அன்புடன் நேசித்தபோதிலும், அவர்கள் தவறு செய்தபோது அவர்களைக் கண்டிக்கத் தவறியதில்லை. ஒரு நிகழ்ச்சி என் நினைவிற்கு வருகிறது. எனக்கு அப்போது ஏழு அல்லது எட்டு வயதிருக்கும். எங்கள் வீட்டில் வயதான வேலைக்காரர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் வெங்கடாசலம். என் தந்தையும், மற்ற மூத்தவர்களும் அவரைப்

பெயர் சொல்லி அழைத்தனர். ஒரு நாள் நானும் அவ்வாறே அவரைப் பெயர் சொல்லி அழைத்தேன். உடனே என் தந்தை என்னைக் கண்டித்து அவரை 'அண்ணா' என்று அழைக்கும்படிக் கூறினார்.

என் தாயார் இடைவிடாத ஆஸ்த்மா நோயினால் அவதிப்பட்டார். இவ்வாறு நோயுற்றிருப்பினும் அவர் தமது குடும்பக் கடமைகளைச் செய்யத் தவறியதில்லை. நாள்தோறும் அருகிலுள்ள சிவன் கோயிலுக்கு எண்ணெய் கொண்டு செல்வார். தான் நோயுற்ற நாட்களில் கோயிலுக்கு என்னை எண்ணெய் கொண்டு போகச் சொல்லுவார். அவர் மிகவும் எளிமையானவர். ஏழை உறவினர்களுக்கும், துன்பப்படுவோர்க்கும், தம்மிடம் இருக்கும் பணத்தைச் சிறிதும் தயங்காது கொடுத்துதவுவார்.

இன்று என் தாய் தந்தையரின் நினைவைப் போற்றும் வகையில், திருப்பூரில் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் தனித்தனியாக இரு உயர்நிலைப்பள்ளிகள் உள்ளன.

நான்கு சகோதரர்களையும், நான்கு சகோதரிகளையும் கொண்ட பெரிய குடும்பம் எங்களுடையது. என் மூத்த தமையனார் திரு கந்தசாமி செட்டியார் அன்புள்ளம் கொண்ட சிறந்த மனிதர். திருப்பூரில் எங்கள் குடும்ப வங்கியை நிர்வகித்து வந்தார். அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடமும், காந்தியடிகளிடமும் மிகுந்த பக்தி பூண்டிருந்தார், அவரிடமிருந்துதான் நான் முதன் முதலில் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், மற்றும் காந்தி யடிகளைப் பற்றித் தெரிந்து கொண்டேன். எனது அடுத்த மூத்த தமையனார் திரு T. S. திருஞானசம்பந்தம் செட்டியார், கோவை நகரில் இருந்த எங்கள் சொத்துக்களை நிர்வகித்து வந்தார். என் தம்பி திரு T. S. தண்டபாணி என் கல்விப் பணிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார். தன்னலமற்ற அவர், திருமணம் செய்து கொள்ளாமல், என்னுடன் வித்யாலயத்திலேயே வாழ்ந்து, அதன் வளர்ச்சிக்குப் பலவழிகளில் உதவி வருகிறார்.

என் பெற்றோரைத் தவிர என் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி யவர் என் சிறிய தந்தையார் திரு T. A. இராமலிங்கம் செட்டியார் அவர்கள். அவரது நூற்றாண்டு விழா அண்மையில் கொண்டாடப் பட்டது. அவர் சிறந்த வழக்குரைஞர். முதலில் திருப்பூரிலும், பின்னர் கோவையிலும் அத்துறையில் பெரிய பொறுப்புகளை வகித்தவர். பலமுறைகள் தொடர்ந்து கோவை நகராட்சியின் தலைவராகவும், கோவை ஜில்லா போர்டின் தலைவராகவும்

விளங்கினார். சென்னை சட்டமன்ற மேலவைக்கும் பின்னர் மத்திய அசெம்பிளிக்கும், நாடாளுமன்றத்திற்கும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். கூட்டுறவுத்துறையில் மிகச் சிறந்தபணி யாற்றி, 'கூட்டுறவுத் துறையின் தந்தை' என்று புகழப்பட்டார். அவரது நினைவைப் போற்றும் வகையில், கூட்டுறவுத்துறை இயக் கத்தினர், அவரது மார்பளவுச் சிலை ஒன்றை, கோவை மத்திய கூட்டுறவு வங்கியில் அமைத்துள்ளனர். தவிர சென்னை, கூட்டு றவுத்துறை அலுவலகக் கட்டிடத்திற்கும், பெருந்துறை காசநோய் மருத்துவமனைக்கும் அவரது பெயரைச் சூட்டியுள்ளனர். கோவை யில் அவரது பெயரில் ஓர் உயர்நிலைப்பள்ளியும் உள்ளது. நான் கோவைக்கு வந்தபின்னர் அவரிடம் வழக்குரைஞர் தொழில் பயின்று அவருடனேயே தங்கியிருந்தேன். அவர் என்னைத் தன் சொந்த மகனாகவே எண்ணி அன்பு பாராட்டினார். அவரது அஞ்சாமை, நேர்மை, பொதுவாழ்வில் அவருக்கிருந்த உயர்ந்த நெறிகள் ஆகியன என்னை மிகவும் கவர்ந்தன. வித்யாலய வளர்ச்சியிலும், எனது அரசியல் வாழ்விலும் அவர் ஒரு சிறந்த வழிகாட்டியாக இருந்தார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

எனது வாழ்க்கையை நெறிப்படுத்துவதில் பெரும்பங்கு கொண்ட இன்னொரு பெருமகனார் திரு V. C. வெள்ளிங்கிரிக் கவுண்டர் ஆவார். அவர் கோவை மாவட்டத்தில் மிகவும் புகழ் பெற்ற ஒருவர். நற்பண்புகள் உடையவர். அதிகம் கல்வி பெறா விடினும், பொது வாழ்க்கையில் பல பெரிய பொறுப்புகளை வகித்தவர். தொடர்ந்து பல ஆண்டுகள் கோவை ஜில்லா போர்டின் தலைவராகவும், சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், மத்திய மாநில அவையின் உறுப்பினராகவும் இருந்தார். அவர் காந்தியடிகளின் கொள்கைகளில் உறுதியுடையவர். காந்தியடி களின் மதுவிலக்குத் திட்டத்தால் கவரப்பட்டு, தனது தென்னந் தோப்புகளைக் கள் இறக்கக் குத்தகைக்கு விட மறுத்தார். அதனால் ஏற்பட்ட பெரும் இழப்பையும் அவர் பொருட்படுத்த வில்லை. அவர், என்னைத் தம் மகனாகவே கருதினார். காந்தி யடிகளின் நிர்மாணப் பணிகளைச் செயல்படுத்துவதிலும், என் அரசியல் வாழ்விலும், வித்யாலய வளர்ச்சியிலும் எனக்குப் பெரிதும் உதவினார். அவர் நினைவைப் போற்றும் வகையில் வித்யாலய அப்பர் நிலையத்தில் ஒரு பட்டயம் வைக்கப்பட்டுள்ளது.

என்னுடன் நெடுங்காலம் இருந்து வித்யாலய வளர்ச்சிக்குத் துணை புரிந்த பெருமகனார் திரு டி. எஸ். கல்யாணசுந்தரம் அவர்களைப் பற்றி அவசியம் இங்குக் குறிப்பிடவேண்டும். அவருடைய தாயார் என் சிற்றன்னையாவார். இருவரும் வித்யாலய வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்தனர்.

திருப்பூரில் நான் இருந்த சமயம் என்னைக்கவர்ந்த என் தொடக்கப்பள்ளி ஆசிரியர் திரு. வெங்கடசுப்பிரமணியம் அய்யர் அவர்களைப்பற்றியும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். அவரது மாத ஊதியம் ரூ. 6/- மட்டுமே. ஆனால் அவர் தமது மாணவர்களிடமிருந்து பெற்ற அன்பும் மரியாதையுமே அவரது மிகப் பெரிய செல்வங்களாகும். அவர் தம் அன்பால் மட்டுமின்றித் தம் அற்புத ஆளுமையாலும் மாணவர்களைக் கவர்ந்தார். மாணவர்கள் அவரைத் தெய்வமாக வழிபட்டனர். பல சமயங்களில் நாங்கள் அவரது இல்லத்திற்குச் சென்று அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்குவோம். நான் இளைஞனாக வளர்ந்து, கல்லூரியில் படித்துப் பட்டம்பெற்ற பின்னரும் அவர்மேல் மிகவும் அன்பும் மரியாதையும் கொண்டிருந்தேன்.

நான் ஐந்தாம் வகுப்பை முடித்தபின் கோவையில், அப்போது லண்டன் மிஷன் உயர்நிலைப்பள்ளி என்று அழைக்கப்பட்ட பள்ளியில் சேர்ந்தேன். அங்கு அப்போது பணியாற்றிய ஆசிரியர்களான சத்யவாகீஸ்வர அய்யர், ராம அய்யர், தமிழ்ப்பண்டிதர் சொக்கலிங்கம்பிள்ளை மற்றும் எங்கள் தலைமையாசிரியர் தேவ சகாயம் ஆகியோரிடம் நான் கொண்டிருந்த மதிப்பை இன்றும் நினைவு கூர்கிறேன். அவர்கள் ஆசிரியப்பணியை வெறும் ஊதியம் பெறும் தொழிலாகக் கருதாமல் அதை ஓர் அறப்பணியாகவே கருதினர். சென்னையில் நான் பச்சையப்பன் கல்லூரியில் பயின்றேன். அங்கு வரலாற்றுப் பேராசிரியராகப் பணியாற்றிய திரு C. S. சீனிவாசாச்சாரியாரையும், கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய திரு M. ரத்தினசாமி அவர்களையும் நான் நன்றியுணர்வுடன் நினைவு கூர்கிறேன். மேற்குறிப்பிட்ட அனைவரும் தங்கள் பணிக்கு உயர்வைத் தேடித் தந்தனர்.

சட்டப்படிப்பை முடித்ததும் நான் வழக்குரைஞர் பணிக்குப் பதிவு செய்து கொண்டு முதலில் திருப்பூரிலும், பின்னர் கோவையில் என் சிறிய தந்தையாருடனும் பணியாற்றினேன். கோவையில் என் பணி சிறந்த முறையில் தொடங்கிற்று. இத்துறையில் எனக்குச் சிறப்பான எதிர்காலம் உண்டு என்று மற்றவர்கள் எண்ணினர். ஆனால் வழக்குரைஞர் பணியில் எனக்கு மகிழ்ச்சியோ மனநிறைவோ இருக்கவில்லை. சுவாமி விவேகானந்தரின் உணர்ச்சியூட்டும் சொற்களான, 'நீ மகத்தான செயல்களைச் செய்யப் பிறந்திருக்கிறாய். உன் சொந்த நலனுக்காகவும், பணத்திற்காகவும் சாதாரணச் செயல்களில் நீ உன் வாழ்க்கையை வீணாக்கக் கூடாது' என்பவை தொடர்ந்து என் நினைவுக்கு வந்தன. இதைப்பற்றி நான் மஹாபுருஷ்ஜி அவர்களுக்கு எழுதிய

போது அவர், 'நீ எந்தப் பணியில் ஈடுபட்டாலும், நீ குருமஹராஜின் குழந்தை என்பதை எப்பொழுதும் நினைவில் கொள். நீ இவ்வுலகில் பிறந்தது கடவுளுக்குச் சேவை செய்யவும், கடவுளின் குழந்தைகளை நேசிக்கவும், கடவுளின் பொருட்டுப் பணியாற்றவுமே என்பதை மறந்து விடாதே. அதுதான் உன் வாழ்வின் குறிக்கோள். நான் உனக்கு நல்லாசி கூறுகிறேன். இறைவனின் அருள் என்றும் உனக்கு உண்டு,' என்று அன்புடன் எழுதினார். பின்னர் மீண்டும் எழுதும்போது, 'என் மகனே! எதற்கும் அஞ்சாதே, மனித வாழ்வின் நோக்கமும் பயனும் எவை என்பதை நீ நன்கு அறிவாய். வாழ்க்கையில் நீ எங்கிருந்து எந்தப் பணியை ஏற்றாலும், எந்தச் சூழ்நிலையிலும் எதுவும் உன்னை உலகப் பந்தத்திற்கு இழுத்து, குருதேவரை மறக்கும்படிச் செய்து விடாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவர் உன்னுடன் என்றும் இருந்து உனக்கு வழி காட்டுவார்!' என்று எழுதினார்.

ஏறக்குறைய இந்தக் காலக்கட்டத்தில் என் ஆன்மிக வாழ்க்கைக்குத் தூண்டுகோலாக அமைந்த மற்றொரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. 1924-ல் மஹாபுருஷ் மஹராஜ் அவர்கள் உடல்நலம் குன்றியதால் அவர் அமைதியான ஓரிடத்தில் இருந்து ஓய்வெடுக்க வேண்டியதாயிற்று. அவர் குன்னூரில் தங்குவது நலம் என்று கருதப்பட்டது. அச்சமயம் ராமகிருஷ்ண மிஷனுக்கு நீலகிரிப் பகுதியில் ஆசிரமம் எதுவும் இருக்கவில்லை. நீலகிரியில் ஸ்பிரிங் பீல்ட் என்ற இடத்தில் மஹாபுருஷ்ஜி தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்குச் சுவாமி சித்பவானந்தரின் சகோதரரான திரு. ரத்தினசபாபதிக்கவுண்டர் இசைந்தார். அங்கு மஹாபுருஷ்ஜி ஏறக்குறைய ஆறு மாதங்கள் தங்கினார். அவருடன் தங்கி அவருக்குச் சேவை செய்யும் பெரும்பேறு எங்களுக்கு வாய்த்தது. மஹாபுருஷ்ஜியின் உடல்நலம் சிறப்பாக முன்னேறியது. 1926 ஆம் ஆண்டு மறுபடியும் அவர் நீலகிரியில் ஓய்வெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. இப்பொழுது அவர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான T. பிரகாசம் அவர்களுக்குச் சொந்தமான ஹத்திராம்ஜி மடம், கோதாவரி இல்லம் ஆகிய இடங்களில் தங்கினார். மஹாபுருஷ்ஜி அவர்களுடன் நாங்கள் தங்கியிருந்த நாட்கள் அற்புதமானவை. வழக்கம்போல் அவர் அதிகம் பேசவில்லை. அவர் எங்களுடன் இருப்பது, அவரது அன்பு, பரிவு ஆகியன எங்களின் ஆன்மிக வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டன.

அவர் நீலகிரிக்கு வந்த சமயத்தில்தான் உதகையில் ராமகிருஷ்ண ஆசிரமம் உருவெடுத்தது. மஹாபுருஷ்ஜி அவர்கள் நீலகிரியை மிகவும் விரும்புகிறார் என்று அறிந்ததும்,

ஸ்ரீ ராமானுஜாச்சாரியின் தலைமையில் பக்தர்கள் ஓர் ஆசிரமத்தை நிறுவ விரும்பினர். அவர்கள் அதற்கென உதகையில் நல்லதொரு இடத்தைத் தேடினர். அழகிய காட்சியை நல்குமிடம் ஒன்றை பிஷப்ஸ் டவுன் என்ற பகுதியில் தேர்ந்தெடுத்தனர். அச்சமயம் சில சலவைத் தொழிலாளிகள் அவ்வழியாகச் சென்று கொண்டிருந்தனர். அந்த இடத்திற்கு உரியவர் யார் என்றும், ஆசிரமம் அமைக்க அவ்விடம் கிடைக்குமா என்றும் பக்தர்கள் அவர்களைக் கேட்டனர். அவர்களை வியப்பால் ஆழ்த்தும்படியான பதில் கிடைத்தது. அவர்களில் ஒரு சலவைத்தொழிலாளி, அந்த இடம் தமக்குரியது என்றும், முந்திய இரவில்தான் அவரது குல தெய்வம் அவரது கனவில் தோன்றி அந்த இடத்தைச் சாதுக்கள் வசிக்கும் ஓர் ஆசிரமத்திற்கு அளிக்கும்படிச் சொல்லிச் சென்றது என்றும் கூறினார். தனக்குச் சொந்தமான விலைமதிப்புமிக்க அந்த இடத்தில் இரண்டு ஏக்கர் நிலத்தை ஆசிரமம் அமைக்க நன்கொடையாகக் கொடுப்பதென அப்பொழுதே ஒப்புக் கொண்டார். இவ்வாறுதான் அந்த இடத்தில் ஆசிரமம் அமைந்தது. மஹாபுருஷ் ஜி புறப்படுவதற்குமுன் 1926-ல் ஆசிரமம் தொடங்கப்பெற்றது.

நாட்கள் செல்லச் செல்ல வழக்குரைஞர் தொழிலில் என் ஆர்வம் குறைந்தது. அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தது. என் சிறிய தந்தையின் குடும்பத்தார் என் மீது மிகுந்த அன்பு காட்டினர். ஆயினும் நான் மேன்மேலும் ஆசிரம வாழ்க்கையிலேயே ஆர்வம் காட்டினேன். என் நண்பர் சுவாமி சித்பவானந்தர் பொறுப்பு வகித்த உதகை ஆசிரமத்திற்கு அடிக்கடிச் செல்வேன். என் எதிர்காலப் பணியைப்பற்றி நாங்கள் நீண்ட நேரம் உரையாடுவோம். அமைதியான தியானத்திற்கும், உள்ளார்ந்த சிந்தனைக்கும் அதிகநேரம் கிடைத்தது. கடைசியாக, ஓர் அனாதை இல்லத்தைத் தொடங்கிப் பணி செய்யலாம் என்ற முடிவுக்கு வந்தோம். உடனே அதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

1929 ஆம் ஆண்டு விஜயதசமி நன்னாள். உதகை ஆசிரமத்தில் அன்னைக்குப் பூஜை நடந்தது. வழிபாட்டை முடித்துக்கொண்டு நாங்கள் திண்ணையில் அமர்ந்திருந்தோம். அந்த விஜயதசமி நன்னாளிலேயே அனாதை இல்லத்திற்கான பணியை ஏன் தொடங்கக் கூடாது என்ற எண்ணம் எனக்கு உதித்தது. சுவாமி சித்பவானந்தரிடம் என் எண்ணத்தைத் தெரிவித்தேன். அவரும் இசைந்தார். அதன் தொடக்கத்தின் அடையாளமாக நான் ரூ 5/- கொடுத்தேன். சுவாமிகள் எட்டணா (50 பைசா) கொடுத்தார்.

சாலையில் கண்டெடுத்த நாலணா நாணயம் (25 பைசா) இருந்தது. ஆகமொத்தம் ரூ 5.75 உடன் வித்யாலயம் எங்கள் எண்ணத்தில் உருவாயிற்று. ஆனால் வித்யாலயத்தை முறையாகத் தொடங்க நாங்கள் மேலும் சில மாதங்கள் காத்திருந்தோம்.

இதைப்பற்றி நான் மஹாபுருஷ்ஜிக்கு எழுதினேன். வழக்கம் போல் அவர்தம் அன்பான நல்வாழ்த்துக்களை எனக்கு அனுப்பினார். அந்தச் சமயத்தில் சுவாமி யதீஸ்வரானந்தர் சென்னை ராமகிருஷ்ண மடத்தின் தலைவராக இருந்தார். எங்கள் திட்டத்தை அவர் மிகவும் உற்சாகமாக வரவேற்றார். 1930 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ஆம் நாள் வித்யாலயத்தைத் தொடங்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

வித்யாலயத்தின் தொடக்க விழாவிற்கு வருமாறு சுவாமி யதீஸ்வரானந்தரை நான் அழைத்திருந்தேன். அவரும் அதற்கு இசைந்து அதற்கு முந்திய நாள் அதிகாலையில் கோயமுத்தூர் வந்து சேர்ந்தார். அன்று மாலையில் எங்கள் திட்டத்தைப்பற்றிக் கலந்தாலோசிக்க ஒரு சிறு கூட்டம், என் சிறிய தந்தையாரின் இல்லத்தில் நடைபெற்றது. சுவாமி யதீஸ்வரானந்தர், என் சிறிய தந்தையார், வித்யாலயத்தின் நெடுநாள் தொண்டராக இருந்த என் சகோதரர் திரு T. S. கல்யாணசுந்தரம் ஆகியோர் அடங்கிய சிறு கூட்டமே அது. அனாதை இல்லத்தில் யாரைச் சேர்த்துக் கொள்வது, அதை எவ்வாறு நடத்துவது என்பதைப் பற்றி விவாதித்தோம். அனைத்துச் சாதிகளையும் சேர்ந்த குழந்தைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் யோசனை கூறினேன். இந்தக் கருத்தை அந்தக்காலத்தில் நினைத்துப்பார்க்கக் கூட இயலாது. காந்தியடிகள் அரிஜன இயக்கத்தைத் தொடங்குவதற்குச் சில ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் அது. என் கருத்தை அனைவரும் மறுத்தனர். தீண்டத் தகாதவர்களைச் சேர்த்துக்கொண்டால், உயர்ந்த சாதியைச் சேர்ந்த யாரும் வந்து சேரமாட்டார்கள் என்று அவர்கள் கருதினர். இது மிகவும் அவசரமான முடிவென்று அனைவரும் கூறினர். எது வேண்டுமானாலும் நிகழட்டும்; தீண்டத்தகாதவர்களை நாம் கட்டாயம் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று இளைஞனான நான் உறுதியுடன் கூறினேன். அவர்கள் என் கருத்துக்கு இசைய வேண்டியதாயிற்று. ஆனால் பெரியவர்கள் சொன்ன கருத்து உண்மையாயிற்று. நீண்டநாட்கள் அந்த நிறுவனத்தை மக்கள் புறக்கணித்தனர்; அதைக் கண்டு நகைத்தனர். சமூகத்தின் இந்த மூடநம்பிக்கையை அகற்ற நீண்டநாட்கள் ஆயின.

அடுத்த நாள் பொழுது புலர்ந்தது. மற்றவர்களுக்கு அது சாதாரணமான ஒருநாள். ஆனால் எனக்கு அது ஓர் உற்சாக மானதும், நம்பிக்கைமிக்கதும், அச்சம் கலந்ததுமான நாளாகும். ஏனெனில் அன்பும் தொண்டும் நிறைந்த புனிதப்பணியில் ஈடுபட வேண்டும் என்ற என் நீண்ட நாள் வேட்கை நிறைவேறிற்று. குருமஹராஜின் திருவருளால் அது சிறப்புற நிறைவேறும் என்ற நம்பிக்கை மிக்க நாளாகும்; அது அச்சமும் கலந்த நாளாகும்; ஏனெனில் அந்த நிறுவனத்தின் எதிர்காலம் எப்படி அமையுமோ என்ற எண்ணம்தான் அதற்குக் காரணம். அப்போது சுவாமிஜி அவர்களின் சொற்கள் என் செவிகளில் ஒலித்தன. 'பெரிய சாதனைகளை நிறைவேற்ற மூன்று விஷயங்கள் தேவை. முதன் முதலாக இதயபூர்வமான உணர்ச்சி இருக்க வேண்டும். வெறும் அறிவினால் என்னபயன்? அது சிறிது தொலைவு சென்றவுடன் நின்றுவிடும். உணர்ச்சி, இதயத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும். சாதிக்க இயலாதவற்றையெல்லாம் அன்பால் சாதித்துவிடலாம். அதனால் என் எதிர்காலத் தேசபக்தர்களே, உங்களுக்கு இந்த உணர்ச்சி இருக்கிறதா? தேவர்கள், முனிவர்கள் ஆகியோரின் வழித்தோன்றல்களான கோடானுகோடி மக்கள் இன்று விலங்குகளுக்குச் சமமாக வாழ்கிறார்கள் என்பதை உணர்கிறீர் களா? கோடிக்கணக்கான மக்கள் பட்டினியால் வாழ்வதையும், பல நூற்றாண்டுகள் அவர்கள் பட்டினியால் வாடிக்கொண்டி ருப்பதையும் நீங்கள் உணர்கிறீர்களா? இந்த நாட்டை அறியாமை என்ற கருமேகம் கவ்விச் சூழ்ந்துகொண்டிருப்பதை நீங்கள் உணர்கிறீர்களா? அது உங்களை உறக்கமற்றவர்களாக ஆக்கிவிட்டதா? அது உங்களை நிலைகுலையச் செய்து விட்டதா? இந்த உணர்ச்சி உங்கள் ரத்தக்குழாய்களில் புகுந்து, உங்கள் இதயத்துடிப்புடன் ஓயாமல் ஒலித்துக் கொண்டுள்ளதா? அது உங்களை ஏறக்குறையப் பித்தர்களாக்கிவிட்டதா? நாட்டின் துன்பம், சீர்கேடு என்ற கவலை உங்கள் உள்ளம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டதா? இதனால் உங்கள் பெயர், புகழ், மனைவி, மக்கள், உடைமை ஆகிய அனைத்தையும் மறந்து விட்டீர்களா? உங்கள் உடலைக் கூட மறந்து விட்டீர்களா? நீங்கள் இந்த நிலைக்கு வந்துவிட்டீர்களானால் அதுவே தேசபக்தராவ தற்கு முதற்படியாகும்'.

'இந்த உணர்ச்சி உங்களிடம் இருப்பதாகவே வைத்துக்கொள் வோம். இருப்பினும் வெறும் வசைமொழிகளிலும், பயனற்ற பேச்சுக்களிலும் உங்கள் சக்தியை எல்லாம் செலவிடாமல் செயல்படுவதற்கு உரிய வழியைக் கண்டுபிடித்தீர்களா?

மக்களின் துன்பங்களைச் சிறிதளவாவது தணிப்பதற்கு உரிய செயல் ஏதேனும் செய்யவும், நடைப்பிணங்களாகிக் கிடக்கும் மக்களை, அந்த அவல நிலையிலிருந்து விடுவிக்க ஏதேனும் ஒரு வழியைக் கண்டுபிடித்தீர்களா? இவை மட்டும் போதா. நீங்கள் மேற்கொள்ளும் பணியில் இடையூறுகள் மலைபோலத் திரண்டு வரினும் அவற்றைத் தயங்காமல் எதிர்த்து வெற்றிகொள்ளும் உறுதியான மனவலிமை உங்களிடம் இருக்கிறதா? உலகம் முழுதும் சேர்ந்து கையில் கத்தியை ஏந்தி எதிர்த்து நின்றாலும், நீங்கள் சரி என்று நினைக்கும் செயலைச் சற்றும் பின்வாங்காமல் செய்யும் தைரியம் உங்களிடம் இருக்கின்றதா? உங்கள் மனைவி மக்களே உங்களை எதிர்த்து நிற்பினும், உங்கள் பொருள் எல்லாம் இழக்க நேரினும், அதனால் உங்கள் பெயரே கெடுவதாயினும், மற்ற எல்லாச் செல்வங்களும் போய்விடுவதாயினும், அந்த நிலையிலும் நீங்கள் எடுத்த காரியத்தில் விடாமல் உறுதியாக நிற்பீர்களா? எல்லாவற்றையும் துறக்க நேரிடும் அந்தச் சமயத்திலும் நீங்கள் கருதிய லட்சியம் கைகூடும் வரை இடைவிடாமல் உறுதியுடன் தொடர்ந்து முன்னோக்கிச் செல்வீர்களா? இந்த உறுதி உங்களிடம் இருக்கிறதா? புகழ்மிக்க அரசர் பர்த்ருஹரி சொல்வதுபோல், 'முனிவர்கள் உங்களைப் போற்றினாலும் தூற்றினாலும், அதிர்ஷ்டதேவதை உங்களிடம் வந்தாலும், அல்லது அது விரும்புமிடத்திற்குச் சென்றுவிட்டாலும், மரணம் இன்றே வந்தாலும், நூறு ஆண்டுகள் கழித்து வந்தாலும் யார் ஒருவன் தான் கொண்ட கொள்கையிலிருந்து, உண்மையிலிருந்து அணுவளவும் பிறழாமல் இருக்கிறானோ அவனே நிலையான புத்தியுடையவன் ஆவான்'. இந்த உறுதி உங்களிடம் உள்ளதா? இந்த மூன்று விஷயங்களும் உங்களிடம் இருந்தால் நீங்கள் ஒவ்வொருவரும் அற்புதங்களைச் செய்வீர்கள். ஆகவே, 'அருட்சோதியே வழிகாட்டிடு' என்று மனதாரப் பிரார்த்திப்போமாக! 'இருளைக்கிழித்து ஓர் அருட்கரம் வெளித்தோன்றும்; நமக்கு வழிகாட்டிச்செல்லும்!'*

சுவாமி விவேகானந்தர், அழகிய சிங்கப்பெருமாளுக்கு எழுதிய கடிதம் ஒன்று, அப்பொழுது எனக்கு எழுதியதுபோன்று இருந்தது. 'இது ஒரு நாளில் முடியும் பணியல்ல; அந்தப்பாதை முட்கள் நிறைந்தது. ஆனால் பார்த்தசாரதி நம் சாரதியாக இருக்க

* Pages 74-75 in Education by Swami Vivekananda.

ஆயத்தமாக உள்ளார். நம்பிக்கை, இரக்கம்-தீவிரமான நம்பிக்கை தீவிரமான இரக்கம். வாழ்வு ஒன்றுமில்லை; சாவு ஒன்றுமில்லை; பசியும் நோயும் ஒன்றுமில்லை. இறைவனின் புகழ்பாடி முன்னேறிச் செல்லுமின்'.*

---

* Complete Works of Swami Vivekananda.

# 7. ராமகிருஷ்ண வித்யாலயத்தை நிறுவுதல்

வித்யாலயத்தின் தொடக்கவிழா 1930-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ம் நாள் காலை 6-30 மணிக்கு மிகவும் எளிமையாக நடந்தது. இவ்விழா, கோவை நகரில் ரேஸ்கோர்ஸ் பகுதியில் எங்கள் குடும்பத்திற்குச் சொந்தமான ஓர் ஓட்டுக்கட்டிடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பத்துப்பன்னிரண்டு பேர் வந்திருந்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் சென்னை ராம கிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி யதீஸ்வரானந்தர் அவர்கள். அவர் என் அழைப்பை ஏற்று இவ்விழாவிற்காகவே வந்திருந்தார். என் சிறிய தந்தையார் திரு. T. A. இராமலிங்கம் செட்டியார், திரு. V. C. வெள்ளிங்கிரிக் கவுண்டர், திரு. R. ராமகிருஷ்ணன், திரு. T.S. கல்யாண சுந்தரம் செட்டியார் ஆகியோரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர். வித்யாலய வளர்ச்சியில் இவர்கள் எனக்குப் பெரிதும் துணை நின்றவர்கள். அப்பொழுது கோவை நீதிமன்றத்தின் துணை நீதிபதியாகப் பணியாற்றிய, பக்தியும், நற்பண்பும் நிறைந்த திரு. குண்டுப்பணிக்கர், கோவை நகரின் முக்கிய பிரமுகரான திரு. C. B. ரத்தினசபாபதி முதலியார், சிறந்த கல்வியாளரான திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் ஆகியோரும் விழாவில் கலந்துகொண்டனர். முதன்முதலாக வித்யாலயத்தில் சேரவிருந்த அரிஜனச் சிறுவனும் விழாவில் இருந்தான். குரு மஹராஜ் படத்தை நடுவிலும், அதற்கு இருபக்கங்களிலும் சுவாமிஜி, மஹாபுருஷ்ஜி மஹராஜ் ஆகியோரின் படங்களையும் வைப்பதற்கு ஏற்ப ஒரு பீடத்தை என் சகோதரர் திரு. கல்யாணசுந்தரம் அமைத்திருந்தார். அத்திருவுருவப்படங்கள் மலர்களால் அலங்கரிக்கப்பெற்றன. நான் கற்பூர ஆரத்தி காண்பித்துப் பூஜை செய்தேன். சுவாமி யதீஸ்வரானந்தர் அவர்களும், நானும் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தோத்திரப்பாடலான 'ஓம் ஹ்ரீம்' பாடினோம். இத்தோத்திரப் பாடல் ராமகிருஷ்ண சங்கங்கள் அனைத்திலும் மாலை வழிபாட்டின்போது பாடப்படுகின்றது. சில மாணவர்கள் இப்பாடலைப்பாடும் பயிற்சி பெறும்வரை பல மாதங்கள்

தொடர்ந்து நானே ஆரத்தி செய்து இப்பாடலைப் பாடினேன். ஆரத்திக்குப்பின் ஆரத்தியில் கலந்து கொண்டவர்களை ஊக்கு விக்கும் வகையில், சில ஆசிமொழிகள் மட்டும் கூறப்பட்டன.

தொடக்க விழாவிற்குப்பின் நான் தனிமையில் விடப்பட்டேன். புதிய நிறுவனம் ஒன்றைத் தொடங்கி நடத்துவதில் இருந்த சிரமங்கள் வெளிப்படத் தொடங்கின. அரிஜன மாணவன் ஒருவனைச் சேர்த்துக்கொண்டதால் பலரும் இந்நிறுவனத்தைப் புறக்கணித்தனர். இதில் சேரும் மாணவர்களுக்கு உணவு, உறைவிடம், துணிமணிகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், பென்சில்கள், படிப்பு முதலியன இலவசமாகவும் விடுமுறையில் அவர்கள் ஊர் சென்று திரும்பிவரத் தேவையான போக்குவரத்துச் செலவும் கொடுக்க இந்நிறுவனம் முன்வந்த போதும் நீண்ட நாட்கள் மாணவர்களே வந்து சேரவில்லை. இருப்பினும் இச்சூழ்நிலை மாறிற்று. நாங்கள் கொடுத்த இலவச வசதிகளால் கவரப்பட்டு, பல ஏழைக் குழந்தைகள் வந்து சேர்ந்தனர். தொடக்கத்தில் நான் தனிமையில் விடப்பட்டதாகக் கூறினேன். இல்லை! என்னுடன் வேறொருவர் துணையாக நின்று, எனக்கு அறிவுரை கூறி, தைரியப்படுத்தி, வழிகாட்டி என்னைப் பாதுகாத்து வந்தார். அவர்தான் ஸ்ரீ ராமகிருஷ்ணர். இது வெறும் புகழ்ச்சிச் சொல் அல்ல. இதை நிரூபிக்கும் வகையில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஐம்பத்திரண்டு ஆண்டுகளாகப் பல்வேறு சோதனைகளுக்கும், இன்னல்களுக்கும் இடையில் இந்த நம்பிக்கை என்னிடம் தொடர்ந்து இருந்து வருகின்றது.

ஆரம்ப நாட்களில் என் கருத்தைப் பலரும் எள்ளி நகையாடினர். முதிர்ந்த வழக்குரைஞர் ஒருவர் (அவர் பெயரைக் குறிப்பிடுவது நாகரிகத்திற்கு உகந்ததன்று) ''என்ன அவினாசிலிங்கம்! நீ ஒரு பள்ளி தொடங்கியிருப்பதாக அறிந்தேன். இதுவும் திறந்து மூடுவதற்குத்தானா?'' என்றார். இந்துக்களின் பழக்க வழக்கங்களையும், இந்து சமயத்தையும் நான் கெடுக்க வந்திருப்பதாகப் பழமைவாதிகளான சிலர் கூறினர். ஆனால் நான் மேற்கொண்டிருக்கும் இந்த முயற்சி அறிவீனமானது என்று நினைத்தாலும் பலர் என்மேல் அமைதியாகப் பரிவுகாட்டினர் என்று நான் நம்புகிறேன்.

இப்பணிக்குத் தேவையான நிதி பற்றிய வினா எழுந்தது. எந்தவொரு நிறுவனத்திற்கும் நிதி அவசியம். அதைத் திரட்டியே ஆகவேண்டும். எங்கள் குடும்பம் மிகவும் வசதி மிக்கதாக இருந்ததால் எதற்கும், எவரிடமும் உதவிகேட்டுச் சென்ற நிலையே ஏற்பட்டதில்லை. நான் சென்னையில் படித்துக்கொண்டிருந்த போது

எனக்கு நிரம்பப் பணம் வருவதுண்டு. அப்பணத்தில் ஒரு பகுதியை என் ஏழை நண்பர்களுக்காகச் செலவழித்தேன். ஆகவே ஒரு நற்பணிக்காகக்கூட மற்றவர்களிடம் சென்று கை யேந்துவதை நான் சிறிதும் விரும்பவில்லை. ஆனால் குழந்தை களுக்காக இறைவனின் பெயரில் இதனைச் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தொடர்ந்து பல ஆண்டுகள் இதைச் செய் தேன். ஒரு நிறுவனம் நன்கு வளர்ந்து வருவதைக் காண்பவர்கள் அதற்கெனப் பண உதவி செய்ய முன்வருவார்கள். ஆனால் அப் போதுதான் தொடங்கப்பட்ட நிறுவனத்திற்கு உதவிசெய்யச் சற்று ஐயமுற்றனர். தொடக்கக் காலத்தில் என் நண்பர்களும், நல்ல மனம் கொண்ட பலரும் எனக்குச் செய்த உதவியை நினைக்கும் போது என் இதயம் நன்றிப் பெருக்கால் நிரம்புகின்றது. இதற் கான முதல் நன்கொடையான ரூ 100/- என் தந்தையாரின் நண்பரான திரு. C.V. வெறிவாடசெட்டியாரிடமிருந்து வந்தது.

ஆனால் இத்தகைய சிறு தொகைகள் ஒரு பெரிய நிறுவனத்தின் வளர்ச்சிக்குப் போதா. என் தந்தையார் என்மீது மிகவும் அன்பு கொண்டவராக இருப்பினும், நான் வழக்குரைஞர் தொழிலை விட்டு, குடும்பத்தின் வசதிகளைத் துறந்து இப்பணியை மேற் கொண்டதை விரும்பவில்லை. ஒரு நாள் நான் அவரிடம் சென் றேன். எங்கள் குடும்பத்தில் பெரியவர்களை மிகவும் மதித்து நடந் ததால் அவர்கள் முன் உட்காரமாட்டோம். நான் அவர் அருகில் சென்று நின்று பேச விரும்பினேன். என்ன விஷயம் என்று அவர் கேட்டார். பெரிய நன்கொடைகளைக் குறித்து வைக்க ஒரு வசூல் புத்தகத்தை வைத்திருந்தேன். அதை நான் அவரிடம் கொடுத் தேன். ''நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று அவர் என்னைக் கேட்டார். நன்கொடைத் தொகை ரூ 10000/- ஐக் குறிப்பிட்டுக் கையொப்பமிடுமாறு கேட்டுக் கொண்டேன். அவர் ரூ 10001/- என்று எழுதி வசூல் புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்தார். அவர் என்னைக் கடிந்து கொள்வார் என்று முதலில் நினைத்தேன், மாறாக அவரது அளவற்ற அன்பு, என் மீது அவர் கொண்டிருந்த அதிருப்தியைப் போக்கிற்று. அவர், ''குழந்தாய்! இத்தொகை பெரிதல்ல. இன்னும் அதிகமாகவே எங்களால் கொடுக்க முடியும். இறைவன் உனக்கு அருள் புரிவானாக!'' என்று ஆசீர்வதித்தார். உண்மையிலேயே எங்கள் குடும்பம் தன் வாக்கைக் காப்பாற்றித் தன் பங்கைச் சிறப்பாகவே செய்தது.

ரூபாய் பத்தாயிரம் என்பது அக்கால மதிப்பின்படி மிகவும் பெரிய தொகையாகும். மற்றவர்களை அணுகி நன்கொடை கேட்கும் தைரியத்தை இது எனக்கு அளித்தது. நான் ஏற்றிருந்த

பெரும் பணியின் காரணமாகவும், எனக்கிருந்த சமூக அந்தஸ்து காரணமாகவும் பலர் என்மீது கனிவும் பரிவும் கொண்டு எனக்கு உதவ முன் வந்தனர். இருப்பினும், இந்தப் பல ஆண்டுகளிலும் இத்தகைய பெருந்தொகை வழங்கியவர்கள் பத்துப் பன்னிரண்டு பேர்களுக்கு மேல் இருக்க மாட்டார்கள். ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கான பொருள் உதவி இவ்வாறு தான் இருக்கவேண்டும் என்பது இறைவனின் விருப்பம் என்று நான் நம்புகிறேன். பெரிய தொகைகளை நன்கொடையாகப் பெற்று வளர்ந்த பல நிறுவனங்களை நான் கண்டிருக்கிறேன். அத்தகைய பெரிய தொகையைக் கொடுத்தவர்கள், அந்த நிறுவனத்தைத் தொடங்கிச் சிறப்பாக நடத்திவரும் ஊழியர்களின் மேல் தங்கள் சொந்தச் செல்வாக்கைச் செலுத்தியதால் அவை தரமிழந்து போயின. ஒரு சிலர் அளித்த பெரிய நன்கொடைகளால் வித்யாலயம் வளர வில்லை. மாறாக, பெருந்திரளான நண்பர்கள் அன்புடனும் அடக்கத்துடனும் வழங்கிய சிறு சிறு தொகைகளால் தான் வளர்ந் துள்ளது. ஒரு நிறுவனம் சிறப்பாக வளர்ந்து, தன் உயர்ந்த கொள்கைகளையும், குறிக்கோள்களையும் நிலை நிறுத்த வேண்டு மெனில், அதன் நலனில் அக்கறை கொண்ட நூற்றுக்கணக்கானவர் களின் ஆதரவைப் பெறுவது மிகவும் இன்றியமையாததாகும்.

ஆனால், நன்கொடை திரட்டச் செல்வதென்பது எளிய பணி யன்று. பல சமயங்களில் தூற்றுதல்களை ஏற்றுப் பொறுத்துக் கொள்ளவேண்டியிருக்கும். ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. ஒரு சமயம் நானும் திரு C. சுப்பிரமணியம் அவர்களும் பெரிய மனிதர் ஒருவரிடம் உதவி கேட்டுச் சென்றோம். எங்களை அவர் மிகவும் வெறுப்புடன் கடிந்து கொண்டதுடன் தம் வீட்டை விட்டு வெளியே சென்றுவிடும்படியும் கூறினார். இத்தகைய தூற்றுதல் களைப் பொறுத்துக் கொண்டு, இறைவனின் பெயரால் நாங்கள் ஏற்றுள்ள பணியைத் தொடர்ந்தோம். 'சன்னியாசியின் கீதம்' என்ற பாடலில் சுவாமி விவேகானந்தர் 'ஒருவர் உன்னைப் போற்றி உனக்கு மாலையணிவித்தாலும், மற்றொருவர் உன்னை எட்டி உதைப்பினும் உன் அமைதியை இழந்து விடாதே!' என்று கூறி யிருப்பதற்கேற்ப நாங்கள் நடந்துகொண்டோம். இந்த மனப் பான்மையை வளர்த்துக் கொள்வது எளிதன்று. ஆனால் அதுதான் கர்மயோகம். சமூகப்பணியும் ஓர் ஆன்மிகச் சாதனையாக உரு வெடுக்கப் பற்றின்றிப் பணி செய்தல் அவசியம்.

அனைத்துப் பணிகளுக்கும் பணம் மிகவும் அவசியம். ஆயினும் மனிதர்கள் அதைவிட முக்கியம் என்பதை நாம் மறக்கக்கூடாது. ஏனென்றால் பெரிய நிறுவனங்களை வளர்ப்பவர்கள் மனிதர்களே.

அவர்கள் தங்கள் சிறப்பான வாழ்க்கையால் நிறுவனத்திற்குத் தேவையான பொருளைப் பெற இயலும். தூய்மையும் நற்பண்புகளும் மிக்க மனிதர்களே மிக மிக முக்கியம். சுவாமி விவேகானந்தர் கூறினார்: 'நாட்டிற்காக அனைத்தையும் துறந்து தியாக வாழ்க்கை மேற்கொள்ளும் இளைஞர்களான ஆண்களும், பெண்களுமே தேவை. புனிதப் பணிகளில் கொழுந்து விட்டெரியும் ஆர்வமும், ஏழை மக்களின்மேல் இரக்கமும், சிங்க ஏறுகள் போன்று தைரியமும் கொண்ட ஒரு லட்சம் இளைஞர்கள் தேவை. அவர்கள் இந்த உலகத்தில் புரட்சியை உண்டாக்குவார்கள்' என்று. உலகத்தில் நிகழ்ந்துள்ள பெரும் சாதனைகளின் வரலாறு, இத்தகைய ஆண்-பெண்களின் வரலாறேயாகும். வித்யாலயத்தின் வளர்ச்சிக்கும் இத்தகையவர்களே தேவைப்பட்டனர்.

வித்யாலயத்தின் நற்பேற்றாலும் நான் செய்த புண்ணியத்தாலும் இத்தகையவர்கள் ஒருவர் பின் ஒருவராக வித்யாலயத்திற்கு வந்தனர்.

முதலில், திரு M. P. பெரியசாமித்தூரன் அவர்கள் வந்தார். அவரை எனக்கு முன்பின் தெரியாது. திரு C. சுப்பிரமணியம், டாக்டர் L. K. முத்துசாமி போன்ற நண்பர்கள் அவரைப் பற்றிக் கூறினர். அவர் கொள்கைப்பிடிப்பு உள்ளவர் என்றும், வித்யாலயத்தில் பணியாற்ற மிகவும் பொருத்தமானவர் என்றும் கூறினார். அப்போது அவர் கோபிச்செட்டிப்பாளையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். வித்யாலயத்தில் பணியாற்ற நான் அவரை அழைத்தேன். என் அழைப்பிற்காகக் காத்திருந்தவர் போல் அவர் உடனே வந்தார். அவருக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். அவர் ஓர் இலட்சியவாதியாகவும், சேவையில் ஆர்வம் கொண்டவராகவும் இருந்தார். அவர் நற்பண்பும் செயலார்வமும் கொண்டவர். அவர் சிறந்த அறிஞர்; நல்ல தமிழ்க் கவிஞர். வித்யாலயத்தின் முதல் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்று வித்யாலயத்தின் அப்போதைய தேவையை நிறைவு செய்தார். ஒவ்வொரு நிறுவனத்திற்கும் இத்தகையவர்கள்தாம் தேவை. தமிழ்க்கலைக்களஞ்சியப் பொறுப்பினை ஏற்க அவரை நானாகவே, சென்னைக்கு அழைத்த வரையிலும் பல ஆண்டுகள் சீரிய பணியாற்றி வித்யாலயத்தை வளர்த்தார். (கலைக்களஞ்சியத்தைப் பற்றிப் பின்னர் கூறப்படும்).

அவரைத் தொடர்ந்து திரு K. அருணாசலம் அவர்கள் வித்யாலயத்தில் பணியாற்ற வந்தார். மதுரை மாவட்டத்தில் ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர் அவர். அவரைப்பற்றி முன்பு எனக்குத் தெரியாது. வித்யாலயத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த அவர்

அதைப்பார்க்க வந்தவர் இங்குத் தங்கிவிட்டார். வித்யாலயத்திற்கு வந்த பொழுது அவர் இளைஞர்; எளிமையானவர்; தூய வெள்ளைக் கதராடை அணிந்திருந்தார். ஊதியம் பெறும் பணி எதையும் விரும்பாத அவர் கிராமப்பணியில் ஈடுபட முன்வந்தார். காந்தியக் கொள்கையில் பற்றும், ஆர்வமும் கொண்டிருந்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர் அவர். வித்யால யத்தில் ஓர் ஆதாரப்பள்ளியைத் தொடங்க நான் விரும்பிய போது அதன் தலைமையாசிரியராகப் பணியாற்ற முன் வந்தார். அதற்காக அவர் பி. டி. பயிற்சியைப் பெற்றுப் பின் அப்பள்ளியின் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்றார். பின்னர் அவர் வித்யாலயத்தில் காந்தி ஆதாரப் பயிற்சிப்பள்ளியின் தலைமை யாசிரியர் ஆனார். அந்த நிறுவனத்தில் 22 ஆண்டுகள் பணியாற்றி அதனை ஓர் ஒப்பற்ற நிறுவனமாக வளர்த்தார் அதற்குப் பின் அவர் கல்வித்துறையில் முதுகலைப்பட்டம் பெற அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்றார். அங்கிருந்து திரும்பியதும் வித்யாலயத்தில் ஆசிரியர் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றி னார். அதன்பின், முழுநேரமும் பொதுத்தொண்டு செய்ய விரும்பிய அவர் உரிய காலத்திற்கு முன்பே முதல்வர் பொறுப்பைத் துறந்து தம் சொந்த மாவட்டத்தில் சேவை செய்யச் சென்றார்; தற்சமயம் அவர் காந்தி நினைவு நிதியின் தலைவராகப் பணி யேற்று இந்தியா முழுவதும் பணி செய்து வருகிறார். தமிழகச் சட்டமன்ற மேலவையின் நியமன உறுப்பினராகவும் பணி யாற்றினார்.

மூன்றாவதாக, திரு. K. வேங்கடாசலம் அவர்களைக் குறிப்பிட வேண்டும். கோவைக்கு அருகில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த அவர் திரு. C. சுப்பிரமணியம் அவர்களின் உறவினர். ஆகவே வித்யாலயத்தைப் பற்றி அவர் அறிந்திருக்க வேண்டும். வித்யாலயத்திற்கு வந்து சேர்ந்தவுடனேயே அவர் வித்யாலயக் கொள்கைகளுடன் ஒன்றிவிட்டார். திரு. M. P. பெரியசாமித் தூரன் அவர்களுக்குப்பின் வித்யாலயத்தின் தலைமையாசிரியர் பொறுப்பை ஏற்று மிகுந்த பக்தியுடன் பணியாற்றினார். அவர் குருதேவரிடம் ஆழ்ந்த பக்திகொண்ட நல்ல பண்பாளர். ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் தம்மைச் சேவையில் அர்ப்பணித்த பின் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். தற்சமயம் அவர்தம் சொந்த ஊரில் வாழ்கிறார். தம் நேரத்தில் பெரும்பகுதியை ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் பக்தி செலுத்துவதில் கழித்துவருகிறார்.

அடுத்து திரு. N. M. R. சுப்பராமன் அவர்களைப் பற்றிக் கட்டாயம் குறிப்பிட வேண்டும். மதுரை மாவட்டத்தின்

தலைசிறந்த அரசியல்வாதியும், முக்கியப் பிரமுகருமான அவர் வித்யாலயம் தொடங்கிய நாள் முதல் அதன் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தார். 1932-ஆம் ஆண்டில் மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசியல் மாநாட்டில் முதன்முறையாக நான் அவரைச் சந்தித்தேன். உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டுச் சிறைசென்ற நாங்கள் அப்பொழுதுதான் சிறையிலிருந்து விடுதலை செய்யப் பட்டிருந்தோம். அவர் பெருஞ்செல்வர், பண்பாளர். அவரைப் போல் பல பண்புகள் ஒருங்கிணைந்தவர்களைக் காண்பது அரிது. ராஜாஜியின் தலைமையில் இயங்கிய தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் பொருளாளராக அவர் இருந்தார். நாங்கள் சந்தித்தது முதல் ஒருவரையொருவர் பெரிதும் விரும்பினோம். சுதந்திரப் போராட்டத்தைப்பற்றி எழுதும்போது அவரைப்பற்றி விரிவாகக் குறிப்பிடுவேன். அவர் என் மீது காட்டிய அன்பும், வித்யாலயத்தின் பால் அவர் கொண்டிருந்த பக்தியும், வித்யாலயத்திற்கு அவர் ஆற்றிய சேவையும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்தன. ஏறக்குறைய இருபது ஆண்டுகள் அவர், வித்யாலயத்தின் நிர்வாகக்குழுவின் தலைவராக இருந்தார்.

திரு. N. இராமகிருஷ்ண நாயுடு, அத்திப்பாளையத்தைச் சேர்ந்த ஓர் எளிய விவசாயி. தொடக்கப்பள்ளிக் கல்வி மட்டும் பெற்றிருந்தார். ஆனால் அவரிடம் காணப்பட்ட அப்பழுக்கற்ற பண்புநலன், தியாக உணர்வு, நற்காரியங்களின் மேலும் குருதேவர் மீதும் கொண்டிருந்த அளவற்ற பக்தி ஆகியன அவரைச் சிறந்த மனிதராக ஆக்கியிருந்தன. அவரும் ஏறக் குறைய அறை நூற்றாண்டுக்காலம் வித்யாலய வளர்ச்சிக்குத் தன்னலமற்ற சேவை செய்தார்.

திரு. T. S. கல்யாணசுந்தரம் அவர்களைப்பற்றி அவசியம் குறிப்பிட வேண்டும். அவர் ஒரு வகையில் எனக்குச் சகோதரர். அவரது தாயார் எனக்குச் சிற்றன்னை. அவரது இல்லம், என்னை வளர்த்ததில் பெரும்பங்குபெற்றது. அவரது வீட்டில்தான் நான் உண்டேன், உறங்கினேன், நோயுற்றபோது அன்புடன் கவனிக்கப் பட்டேன். அவர் மிகவும் நேர்மையானவர். வித்யாலயத்தின் பாலும், வித்யாலய ஊழியர் மற்றும் குழந்தைகள் பாலும் அன்பும் உள்ளார்ந்த ஈடுபாடும் கொண்டவர். வித்யாலயம் தொடங்கிய நாள் முதல் 1952-ல் அவர் அமரராகும் வரை அவர் அதன் செயலாளராகப் பணியாற்றினார். அவர் மறைவினால் வித்யாலயம், நம்பிக்கையும், பக்தியும் மிக்க சிறந்த ஊழியர் ஒருவரை இழந்தது. இத்தகைய ஊழியர்கள்தாம் வித்யாலயத்தின் நிரந்தரச் சொத்துக்கள்.

1930 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ஆம் நாள் வித்யாலயம் தொடங்கப்பெற்றது. தொடங்கி நான்கு மாணவர்கள் தான் அதில் சேர்ந்திருப்பார்கள். அதற்குள்ளாகவே தேசத்தின் அழைப்பும், காந்தியடிகளின் அழைப்பும் விடுதலைப் போராட்டத்தின் அழைப்பாக வந்தன. அந்த அழைப்பை என்னால் தவிர்க்க இயலவில்லை. அவ்வழைப்பையேற்று நான் விடுதலைப் போராட்டத்தில் குதித்தேன். ஜூலை 4-ம் நாள் நான் கைது செய்யப்பட்டுச் சிறை சென்றேன். வழக்கறிஞரான என் நண்பர் கூறியிருந்த சொற்கள் உண்மையாயின என்றும், வித்யாலயம் மூடப்பட்டுவிடும் என்றும் என் நண்பர்கள் பலரும் கருதினர். ஆனால் எதிர்பாராத ஓர் உதவிக்கரம் வந்தது. வித்யாலயத் தொடக்க விழாவில் கலந்துகொண்ட திரு R. ராமகிருஷ்ணன் என்பவர் அடிக்கடி வித்யாலயத்திற்கு வந்து செல்வார். மாவட்டக் கல்வி அலுவலரின் அலுவலகத்தில் அவர் எழுத்தராகப் பணியாற்றி வந்தார். என்ன செய்வது என்று நான் திகைத்துக் கொண்டிருந்தபோது அவர், ''கவலைப்படா தீர்கள். தாங்கள் இல்லாத சமயம் ஆறு மாதங்களுக்கு நான் வித்யாலயத்தைக் கவனித்துகொள்கிறேன். குழந்தைகள் காலையில் பள்ளிக்குச் சென்று மாலையில் இங்குத் திரும்பி வருகின்றனர். நான் இங்கேயே அவர்களுடன் தங்கிப் பகலில் அலுவலகம் சென்று மாலையில் திரும்பிவந்து அவர்களைக் கவனித்துக்கொள்வதோடு பூஜையும், வழிபாடும் ஒழுங்காக நடப்பதையும் கவனித்துக் கொள்கிறேன்,'' என்று அன்புடன் கூறினார். அப்பொழுது ஆறு மாதம் மட்டுமே நான் சிறை செல்ல வேண்டியிருந்தது.

நான் டிசம்பர் மாதம் சிறையிலிருந்து திரும்பி வந்தேன். முதலில் நாங்கள் ஓர் உறைவிடப் பள்ளியைத் தொடங்கவே திட்டமிட்டிருந்தோம். அதை நாங்கள் கோவை நகரில் தொடங்க விரும்பவில்லை. திரு V. C. வெள்ளிங்கிரிக் கவுண்டர் தமக்குச் சொந்தமான தோட்டத்தில் 4 ஏக்கர் நிலத்தை இதற்கெனக் குத்தகை ஏதுமின்றிக் கொடுக்க முன்வந்தார். அது கோவையிலிருந்து மேட்டுப்பாளையம் சாலையில் ஏறக்குறைய ஆறாவது மைலில் இருந்தது. அதில் பண்ணை வீடு ஒன்று இருந்தது அத்துடன் ஓலை வேய்ந்த கட்டிடம் ஒன்றையும் கட்டினோம். அங்குப் பள்ளி தொடங்கப்பட்டது. அப்போது 49 மாணவர்கள் இருந்தனர். ஆசிரியர்கள் இருவரும், நானும் அங்குக் குழந்தைகளுடன் தங்கினோம். அந்தப் பண்ணை வீட்டில் சமையலறையும் உணவுக் கூடமும் செயல்பட்டன. ஆனால் சில மாதங்களில் எங்களுக்கு வேறு ஒரு பெரிய சோதனை வந்தது. இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்ட காந்தியடிகள் இந்திய

சுதந்திரத்திற்கான முயற்சியில் தோல்வியடைந்து இந்தியா திரும்பினார். மேலும் தீவிரமான சுதந்திரப் போராட்டத்தைத் தொடங்கவேண்டியிருந்தது. இந்தச்சமயம் ஆங்கிலேயரின் அடக்கு முறைகள் கடுமையாகிப் பல தலைவர்கள் சிறைசெல்ல நேரிடும். அப்பொழுது நான் கோவை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் தலைமைப் பொறுப்பேற்று மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் செயலாற்ற வேண்டியிருந்தது. ஆகவே நான் கைது செய்யப் படுவது உறுதி. அந்த நிலையில் நாம் என்ன செய்வது, எப்படிப் பிரச்சனைகளைச் சமாளிப்பது என்பன பெரிய கேள்விக்குறியாக இருந்தன. ஆனால் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. ரங்கூனில் அரசு அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றிருந்த திரு மாணிக்கசாமி முதலியார் என்பவர் சென்னையில் குடியேற வந்திருந்தார். அவர் வித்யாலயத்திற்கு வந்தார். அவர் குருதேவரின் பக்தர். நான் ஓர் ஆசிரமப்பள்ளியைத் தொடங்கியிருப்பதாகக் கேள்வியுற்று அதனைப் பார்த்துச் செல்ல அவர் வந்தார். வித்யாலயத்தையும், அதன் குழந்தைகளையும் அவர் பெரிதும் விரும்பினார். நாங்கள் மிகவும் கவலையுற்றிருப்பதைக் கண்ட அவர், ''கவலைப்படாதீர்கள். ஓர் ஆண்டுக் காலத்திற்கு நான் பள்ளியையும், குழந்தைகளையும் கவனித்துக் கொள்கிறேன்,'' என்று கூறினார். இறைவனின் சித்தமோ என்னவோ? அந்த முறை என் சிறைவாசமும் ஓராண்டுக் காலம் தான்! அவரைப் பற்றி முன்னர் எனக்கு எதுவும் தெரியாது; அவரைப் பற்றிக் கேள்விப்பட்டதுக் கூட இல்லை. அவர் வருகையை, ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருட்கருணை என்று கூறுவதைவிட வேறு எவ்வாறு கூற இயலும்? விழிகட்குப் புலனாகாத ஓர் அருட்சக்தி வித்யாலயத்தின்பால் என்றும் இருந்து வருகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

சிறையிலிருந்து நான் 1933-ஆம் ஆண்டு திரும்பினேன். திரு V. C. வெள்ளிங்கிரிக் கவுண்டர் மிகவும் உதவியாகவும், பரிவுடனும் இருந்தார். அவருடைய தாயார் பார்வதி அம்மாள் வித்யாலயக் குழந்தைகளின்பால் மிகவும் அக்கறை கொண்டு அடிக்கடி வந்து குழந்தைகளுக்குப் பலகாரங்கள் கொடுத்துப் பார்த்துச் செல்வார். ஆனால் அந்த இடத்தில் பாம்புகள் அதிகம். ஒவ்வொரு நாளும் குழந்தைகள் ஓரிரு பாம்புகளையாவது அடித்துக் கொல்வார்கள். இது எங்கள் மனத்தில் அச்சத்தைத் தோற்றுவித்தது. அங்கு, தண்ணீர்த் தட்டுப்பாடும் அதிகம். ஆகவே வித்யாலயத்திற்கு நாங்கள் வேறோர் இடத்தைத் தேடிக் கொண்டிருந்தோம். போத்தனூரில், திரு A. கந்தசாமி செட்டியார் அவர்களுக்குச் சொந்தமான ஒரு வீடும், திரு G. D. நாயுடு அவர்களுக்குச் சொந்தமான விசாலமான இடம் கொண்ட ஒரு பங்களா

வும் இருந்தன. எங்கள் மாணவர்களையும் பள்ளிப் பொருள்களை யும் இரண்டு லாரிகளில் ஏற்றிக் கொண்டு போத்தனூருக்குச் சென்றோம். ஆனால் போத்தனூரிலும் மிகவும் அதிகமான தண் ணீர்த் தட்டுப்பாடு. குளிப்பதற்கு அரைமைல் தொலைவு செல்ல வேண்டியிருந்தது. ஆகவே வித்யாலயத்தை வேறு எங்கு அமைப் பது என்பது எங்களுக்குப் பெரிய வினாவாக இருந்தது. வடக்கே வெள்ளக்கிணறும், தெற்கே போத்தனூரும் வித்யாலயத்திற்குப் பொருந்தாப் பகுதிகளாயின. கிழக்கே நூற்பு நெசவு ஆலைகள் நிறைந்து புகையும், புழுதியும் மிகுந்திருந்தன. மேற்கே பேரூர்ப் பகுதியில் ஆண்டுதோறும் காலராத் தொத்துநோய் வந்து கொண்டிருந்தது. வேறு எங்குச் செல்வது? இதைப் பற்றி நாங் கள் மிகவும் கவலையுடன் விவாதித்துக் கொண்டிருந்த போது மீண்டும் ஓர் அற்புதம் நிகழ்ந்தது!

ஓர் ஒற்றை மாட்டு வண்டியில் இருவர் வந்தனர். அவர்கள் திரு என். ராமகிருஷ்ண நாயுடு அவர்களும், அவர் மைத்துனர் திரு ஆர். ராமகிருஷ்ண நாயுடு அவர்களும் ஆவர். நாங்கள் கவலையுடன் எதைப் பற்றி விவாதித்துக் கொண்டுள்ளோம் என்று கேட்டார்கள். எங்கள் பிரச்னைகளை அவர்களிடம் விவரித்தோம். அவர்கள், ''திரு R. ராமகிருஷ்ண நாயுடு அவர்கட்குச் சொந்த மான 14 ஏக்கர் புன்செய் நிலம் பெரியநாயக்கன்பாளையத்தில், மேட்டுப்பாளையம் சாலை ஓரத்தில் உள்ளது. அதை நாங்கள் நன்கொடையாக அளிக்கிறோம்,'' என்று கூறினார்கள். கோவை யிலிருந்து 11 மைல் தொலைவில் இருந்த அழகான ஓர் இடம் அது. ஆனால் அக்காலத்தில் போக்குவரத்து வசதிகள் குறைவு. ஒரு மைல் தொலைவிற்குப் பக்கத்தில் கிராமங்களே இல்லை. இதைப்பற்றி நான் திரு V. C. வெள்ளிங்கிரிக்கவுண்டர், திரு T. A. இராமலிங்கம் செட்டியார் மற்றும் நண்பர்களிடம் கூறினேன். அவர்கள், ''இவ்வளவு தொலைவான இடத்திற்கு எவ்வாறு செல்ல? அங்கு யார் வருவார்கள்? உன் அரசியல் வாழ்க்கை என்ன ஆகும்? மருத்துவ வசதியோ, மற்ற வசதிகளோ இல்லாத அந்த இடத்தில் குழந்தைகளோடு எவ்வாறு தங்கமுடியும்?'' என்று கேட்டனர். கோவை நகருக்கு மிக அருகில் அதன் எல்லையில் கிராஸ்கட் சாலைக்கு அருகில் 5 ஏக்கர் நிலம் மொத்தம் ரூ 5000/-க்குக் கிடைக்க இருந்தது. அதை வாங்கி ஏன் வித்யா லயத்தை அங்கு நிறுவக்கூடாது என்றும் கேட்டனர்.

ஆனால் பெரியவர்களின் எதிர்ப்புக்கு இடையில் பெரியநாயக் கன்பாளைய நிலத்தை ஏற்று வித்யாலயத்தை நிறுவ நான் முடிவு செய்தது ஸ்ரீ ராமகிருஷ்ணரின் விருப்பம் போலும்! பெரியநாயக்

கன்பாளையத்தில் வித்யாலயத்தின் தொடக்க நாட்கள் மிகவும் கடினமாக இருந்தன. அங்கும் கடுமையான தண்ணீர்த் தட்டுப் பாட்டை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இன்றும் இங்கு அப் பிரச்சனை உள்ளது. ஆனால் அப்போது செய்தமுடிவு எதிர் காலத்தில் மிக நல்லதாக அமைந்தது. தற்சமயம் இங்கு வித்யா லயத்திற்கு 300 ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது. ஒரு நகரத் திற்கு அருகில் இவ்வளவு அதிகப் பரப்புள்ள நிலத்தைப் பெறுவது தற்காலத்தில் கற்பனை கூடச் செய்து பார்க்க இயலாது. வித்யா லயத்தில் பல்வேறு கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ளன. வித்யாலயத்தைப் பெரியநாயக்கன்பாளையத்திற்கு மாற்ற நான் முடிவு செய்தபோது எனக்கு அனுபவம் போதாது என்றும், நான் அவசரப்பட்டதாகவும் மக்கள் கருதினர். ஒரு வேளை நான் அனுபவம் இன்றி அவசரப்பட்டிருக்கக் கூடும்; ஆனால் நான் செய்த முடிவு நானாகச் செய்தது அல்ல என்பதையும் அது என்னையும், வித்யாலயத்தையும் வழி நடத்திச் செல்லும் இறை வனின் திருவுளம் என்பதையும் அவர்கள் அன்று அறிந்திருக்க வில்லை.

திரு R. ராமகிருஷ்ண நாயுடு அவர்களுக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வித்யாலயத்தின் முதல் அறிக்கை 1933-ல் வெளிவந்தது. அப்புதிய நிறுவனத்தின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் அது கூறுகிறது. அதில் கூறப்பட்டுள்ள செய்திகள் இன்றும் எவ்வளவு பொருத்தமாக உள்ளன என்பது வியப்புக்குரியது.

> ''மற்ற நிறுவனங்களைப் போல் இதையும் ஒரு சாதாரண நிறுவனமாகத் தொடங்குவதில் நியாயம் இல்லை. மாணவர் களை வலிமையுள்ளவர்களாகவும், தற்சார்பு உடையவர் களாகவும் வளர்த்து அவர்கள் எப்பொழுதும் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் தொண்டு செய்ய முன்வருபவர்களாக ஆக்கக் கூடிய கல்வியை அவர்களுக்கு அளிக்க நாங்கள் முயன் றுள்ளோம். இந்தக் குறிக்கோளை மனதில் கொண்டு இந்த நிறுவனத்தின் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்தக் காரணத் திற்காகவே வித்யாலயத்தின் அனைத்துப் பணிகளையும் மாணவர்களே செய்கின்றனர்.
>
> வித்யாலயத்தின் செயல்கள் யாவும் பலபகுதிகளாகப் பிரிக்கப் பட்டு, ஒவ்வொரு பகுதியும் ஒரு மாணவக்குழுவின் தலைவனிடம் ஒப்படைக்கப்படும். அப்பகுதியின் செயல்கள் யாவற்றுக்கும் அத்தலைவனே பொறுப்பு. தன் கீழ் உள்ள

மாணவர்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்வதை அவன் கவனித்துக் கொள்வான். இதனால் மாணவர்களிடம் தலைமைப் பண்பும், ஒற்றுமையுடன் பணி செய்யும் பண்பு களும் வளர்கின்றன. இவ்வாறு வித்யாலயத்தின் பணிகள் யாவும் வேலைக்காரர் எவருமின்றி மாணவர்களாலேயே செய்யப்பெறுகின்றன. சமையல் வேலையையும் அவர்களே செய்கின்றனர்.

வித்யாலயத்தில் சாதி வேறுபாடுகள்' மதிக்கப்பெறுவதில்லை. வித்யாலயத்தின் மாணவர்களுள் அரிஜனங்கள் உட்பட இந்து சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் அடங்குவர். அவர்கள் தங்களுக்குள் உடன்பிறந்த சகோதரர்களைப்போலவே பழகு கின்றனர். தங்கள் சாதிகளை மறந்து அனைவரும் இந்தியச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்று நினைக்கின்றனர்.

அவர்களிடம் ஏழை - பணக்கார வேறுபாடு இல்லை. அனை வரும் சமமாக நடத்தப்படுகின்றனர். பணத்தின் அடிப் படையில் அவர்களுக்குள் பாகுபாடு இல்லை. இது ஏழை-பணக்காரர் இருவர்க்கும் நன்மை பயக்கின்றது. பணக்கார மாணவர்களிடம் எளிமை, பணிவு, சகோதரநேயம், உழைப்பை மதித்தல் ஆகியவை வளர்கின்றன. ஏழை மாணவர்களிடம் தைரியம், தற்சார்பு ஆகிய பண்புகள் வளர்கின்றன.

வித்யாலயத்தில் அளிக்கப்படும் கல்வியில் தொழிற்பயிற்சிக்கு இடம் அளிக்கிறோம். கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக எந்தவித நல்ல நோக்கமும் அற்ற கல்வியால் வெறும் குமாஸ்தாக்களே உருவாகியுள்ளனர். வழக்கமான பாடத் திட்டத்தைப் பின்பற்றினால் அதில் தொழிற்பயிற்சிக்கு அதிக நேரம் ஒதுக்க முடியாது. இந்தச் சிக்கலுக்கு இடையில் நாங்கள் தையல் பயிற்சியும், காய்கறித் தோட்டம் அமைக்கும் பயிற்சியும் தொடங்கியுள்ளோம். வேறு என்ன தொழிற் பயிற்சிகளைத் தொடங்கலாம் என்று சிந்தித்துக் கொண்டுள்ளோம். உண்மையிலேயே மாணவர்களுக்கு ஒரு தொழிலில் திறமையான பயிற்சி அளிக்க வேண்டுமென்றால் அதற்கு மாணவர்கள் அதிக நேரம் ஒதுக்க வேண்டும். இந்தக் குறிக்கோளுடன் நாங்கள் பல திட்டங்களைப் பற்றி நினைத்து வருகிறோம்.

தேசியக்குறிக்கோள்களுடனும், தெய்வீகக் கொள்கைகளுடனும் மாணவர்கள் வளர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

தேசியப் பாடல்கள் மூலம் அவர்களுக்குத் தேசபக்தியும், தேசப் பணியும் கற்பிக்கப்படுகின்றன வாய்ப்பு நேரும்போதெல்லாம் அவர்கள் சேரிகளுக்கும், அவை போன்ற மற்றப்பகுதிகளுக்கும் சென்று துப்புரவு செய்து வருகின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ணரும், சுவாமி விவேகானந்தரும் அருளிய வண்ணம் அவர்களுக்குக் கதைகள் மூலம் சமயக்கருத்துக்கள் போதிக்கப்படுகின்றன.

மனிதனின் வளர்ச்சிக்கு, குறிப்பாகக் குழந்தைகளின் வளர்ச்சிக்குச் சுதந்திரமும், மகிழ்ச்சியும் முதல் தேவைகள். கல்வியின் முழுப் பயனையும் மாணவர்கள் பெற வேண்டுமெனில் அவர்களுக்குச் சுதந்திரமான மகிழ்ச்சி மிக்க சூழ்நிலை தேவை. வித்யாலயம் தங்களுடையது என்று அவர்கள் உணர வேண்டும். இந்த நோக்கத்தை மனதில் கொண்டு வித்யாலயத்தின் பணிகளில் பெரும் பகுதி அவர்களின் யோசனைகளுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்பவே முறைப்படுத்தப்பட்டு செயல்படுகின்றது. மாதம் ஒருமுறை மாணவர்கள் கூட்டத்தில் அவர்களின் யோசனைகள் கேட்கப்படுகின்றன. அவர்களின் யோசனைகள் புத்திசாலித்தனமானவையாகவும், நடைமுறைக்கு சாத்தியமானவையாகவும் இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் கூறுகிறோம். சுதந்திரத்துடனும், பொறுப்புணர்வுடனும் செயல்படும்போது மனிதனிடம் செயல்திறன் வளர்கின்றது என்பதற்கு இது ஒரு சான்று.

தங்களுக்குள் எழும் பூசல்களை அவர்களே தீர்த்துக் கொள்கின்றனர். அவர்களாகவே தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகள் அடங்கிய மாணவர் நீதிமன்றம், வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கின்றது. ஒவ்வொரு வகுப்பும் தன் சார்பாக ஒரு நீதிபதியைத் தேர்ந்தெடுக்கிறது. வகுப்பில், படிப்பில் நல்ல திறமை பெற்றவர்களும், தவறுகள் செய்யாத மாணவர்களுமே நீதிபதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மாணவர்களின் குற்றங்கள் பதிவேட்டில் குறிக்கப்படுகின்றன. வாரம் ஒரு முறை நீதிமன்றம் கூடி வழக்குகளைத் தீர்க்கின்றது. மாணவர் நீதிமன்றம் செயல்படும்விதம் மிகவும் சுவையானது. சாதாரணத் தவறுகள் எச்சரித்துவிடப்படுகின்றன. பெரிய தவறுகள் தண்டனைக்குள்ளாகின்றன. வாதப் பிரதி வாதங்கள் முற்றிச்சிக்கலடையும் போது சாட்சிகள் மூலம் விசாரணை நடந்து நீதி வழங்கப்படுகின்றது.

1934 ஆம் ஆண்டு அறிக்கையில் கீழ்க்கண்டவையும் அடங்கும்:

**மருத்துவச் சோதனை :** ஒவ்வொரு நாளும் பள்ளி

தொடங்கும்முன் மாணவர்களின் உடைகள் பரிசோதிக்கப்பட்டு அவற்றின் சுத்தத்திற்கு மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் மாணவர்களின் பெட்டி, படுக்கைகள் சுத்தமாக உள்ளனவா என்பது சோதிக்கப் படுகின்றது. நகங்கள், பற்கள் ஆகியவற்றின் சுத்தத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. மாணவர்களின் சுத்தம் பல்வேறு நிலைகளிலும் கணிக்கப்பட்டு மிக அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவனுக்கு வாரப் பதக்கம் கொடுக்கப் படுகின்றது. மாதம் ஒரு முறை மாணவர்களின் எடையும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அவர்களின் உயரம், மார்பளவு ஆகியவை எடுக்கப்படுகின்றன. ஆண்டுக்கு இரண்டு முறை மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை நடைபெறுகிறது. அவர்களின் உடல் வளர்ச்சி பற்றிய விளக்க அட்டைகள் பேணப் படுகின்றன.

***பாலபாரதி :*** மாணவர்களின் கதைகள், கட்டுரைகள், ஓவியங்கள் ஆகிய படைப்புக்கள் அடங்கிய 'பாலபாரதி' என்ற கையெழுத்து இதழ் ஒன்று வித்யாலயத்தில் தொடங்கப்பட்டது. இதன் மூலம் மாணவர்களின் இலக்கியப் படைப்பாற்றல்களும் கற்பனைத் திறனும் வெளிக் கொணரப்பட்டு வளர்க்கப் படுகின்றன.

***வித்யாலய மாணவர் கடை :*** மாணவர்களுக்குத் தேவைப் படும் பென்சில், ரப்பர், பொத்தான், கிளிப்பு, சோப்பு, அஞ்சல் அட்டை, துணிகள் போன்ற பொருள்களை விற்க ஒரு கடை தேவைப்பட்டது. மாணவர்களின் இத் தேவைகளை நிறைவு செய்யவும், அவர்களுக்குக் கணக்கு வைக்கும் பயிற்சி கொடுக்கவும் வித்யாலயத்தில் கடை ஒன்று தொடங்கப்பட்டது. மாணவர்களில் இருவர் இக்கடைக்குப் பொறுப்பாக உள்ளனர். இக்கடைக்கு மூலதனமாகச் சிறு தொகை ஒன்று அவர்களிடம் கொடுக்கப் பட்டது. கடைக்குத் தேவையான பொருள்களை அவர்களே வாங்கி, அவர்களே விற்று அவற்றுக்கான வரவு செலவுக் கணக்கு களையும் அவர்களே எழுதுகின்றனர். இந்தக் கடையை ஒரு மாணவர்களின் கூட்டுறவுக் கடையாக மாற்றும் எண்ணமும் உண்டு.

***கல்விப் பயணங்கள் :*** சமூகத்தில் நன்மக்களாக நடந்து கொள்ளும் பயிற்சியைக் கொடுப்பதற்கு அவர்களுக்குப் பொது அறிவுப் பயிற்சியும், சமூகப் பயிற்சியும் கொடுப்பது அவசியம் என்று நாங்கள் நம்புகிறோம். இக்குறிக்கோளை மனதில் கொண்டு, பாடத் திட்டத்தில் உள்ள பாடங்களுடன் பொது அறிவு

பற்றிய பேச்சுக்களும் இடம் பெறுகின்றன. நூற்பு நெசவாலைகள், விவசாயக் கல்லூரி, வனவியல் கல்லூரி, சிறுவாணி குடிநீர்த் திட்டம் போன்ற இடங்களுக்குச் சென்று வருவதால் மாணவர்களின் பொது அறிவு விரிவடைகின்றது. இந்த அறிக்கை ஆண்டில், மாணவர்கள் பல்வேறு இடங்களுக்குக் கல்விப் பயணம் சென்று வந்தனர். மாணவர்கள், மேட்டூர் அணைக்குச் சென்று வந்தனர். இது அவர்களுக்குப் பெரும் உற்சாகத்தையும், கல்விப் பயனையும் கொடுத்தது. வேறொரு சமயம் அவர்கள் மதுக்கரை சிமெண்ட் ஆலையைக் கண்டு வந்தனர். ஒரு சர்க்கரை ஆலையையும், ரயில் எஞ்ஜின் தொழிற்சாலையில் எஞ்ஜின் ஒன்றினையும் அவர்கள் பார்த்து வந்தனர். தேவாரப் பாடல்களைக் கற்று வர நான்கு மாணவர்கள் வேதாரண்யம் சென்றனர். வேதாரண்யம் சென்று திரும்பும் வழியில் அவர்கள் பழனி, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் போன்ற இடங்களையும் கண்டு வந்தனர்.

**கிராம சேவை :** சுற்றுப்புறக் கிராமங்களுக்குச் சென்று சேவை செய்யும் மையமாக வித்யாலயம் திகழ வேண்டும் என்பது எங்கள் மனப்பூர்வமான விருப்பமும், ஆர்வமும் ஆகும். இக்குறிக் கோள்களுக்கு ஏற்ப, எந்தெந்த வழிகளில் கிராமப்பணி செய்யலாம் என்பதைப் பற்றிச் சிந்தித்து முயன்றோம். இயேசுநாதரின் "உண்மையில் அறுவடை அதிகம்; ஆனால் உழைப்பவர்களோ சிலர்." என்பதற்கு ஏற்ப, கிராமங்களில் பிரச்னைகள் மிகுதி. கிராம மக்களின் கூட்டுறவுடன் எங்களைச் சுற்றியுள்ள சில கிராமங்களில் நாங்கள் ஓரளவுக்குச் சேவை செய்தோம்.

கிராம மக்களில் பெரும்பாலோர் விவசாயிகள் அல்லது தொழிலாளர்கள். தங்கள் பணிக்கு ஊறு நேராமல் அவர்களால் பகல் நேரத்தில் பள்ளிக்குச் செல்ல இயலவில்லை. அவர்களுக்குக் கல்வியளிக்க நாங்கள் பெரியநாயக்கன்பாளையம், வீரபாண்டி, அத்திப்பாளையம் ஆகிய கிராமங்களில் இரவுப் பள்ளிகளை நடத்தி வருகிறோம்.

இவ்வறிக்கையில், பொதுச் செயலாளர்கள் என்ற நிலையில் திரு. T. S. அவினாசிலிங்கம், திரு. N. M. R. சுப்பராமன் ஆகியோர் கையொப்பம் இட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. பொறுப்பாளர்கள் என்ற நிலையில் திரு. C. சுப்பிரமணியம், திரு. கிருஷ்ணபோயர், திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், திரு. T. S. கல்யாணசுந்தரம் ஆகியோரும் மற்றவர்களும் கையொப்பம் இட்டனர். இவர்களுள் திரு. C. சுப்பிரமணியம் என்னுடன் விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டவர். பின்னர் மாநில

அரசிலும், மத்திய அரசிலும் பல பொறுப்புக்களை வகித்தவர். இன்றும் அவர் வித்யாலயத்தின்பால் அன்பும் அக்கரையும் கொண்டு அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகிறார். திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், திரு. கிருஷ்ணபோயர், திரு. T. S. கல்யாணசுந்தரம் ஆகியோர் மறைந்து விட்டனர்.

இந்தக் காலக்கட்டத்தில் வரலாற்றில் இரு முக்கிய நிகழ்ச்சிகள் நடந்தன. அவற்றுள் ஒன்று, வித்யாலயத்திற்குக் காந்தியடிகள், 1934-ஆம் ஆண்டு பிப்ரவரி 7-ஆம் நாள் அஸ்திவாரக் கல் நட்டதாகும். இது பற்றிப் பின்னர் நாம் விரிவாகத் தெரிந்து கொள்வோம். இரண்டாவது நிகழ்ச்சி மிகவும் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1935-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ஆம் நாள், ராமகிருஷ்ண மிஷனின் தலைமையகத்திலிருந்து எனக்குக் கீழ்க்கண்ட தந்தி வந்தது: ''Congratulations, Recognition Mission Branch Centre Yesterday'' (நல்வாழ்த்துக்கள். மிஷனின் கிளை மையமாக வித்யாலயம் நேற்று அங்கீகரிக்கப்பட்டது.) இந்தத் தந்தி அப்பொழுது மிஷனின் பொதுச் செயலாளராக இருந்த சுவாமி சாஸ்வதானந்தா அவர்களால் அனுப்பப்பட்டிருந்தது. இந்தத் தந்தியைத் தொடர்ந்து, 1935-ஆம் ஆண்டு ஜனவரி 7-ஆம் நாள் நடைபெற்ற ராமகிருஷ்ண மிஷனின் நிர்வாகக் குழுக் கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல் ஒன்றும் எனக்கு வந்தது. அதில்:

போத்தனூர் வித்யாலயத்தின் இணைப்பைக் குறித்து T. S. அவினாசிலிங்கம், சுவாமி அமிர்தேஸ்வரானந்தா ஆகியோரின் கடிதங்கள் பரிசீலிக்கப்பட்டன.

(அ) ராமகிருஷ்ண மிஷனின் ஒரு கிளை மையமாக, ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தை ஏற்றுக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) திரு. T. S. அவினாசிலிங்கம் அதன் செயலாளராக நியமிக்கப்படுகிறார்.

சுவாமி மாதவானந்தரால் முன் மொழியப்பட்டது.
சுவாமி ஆத்மப்பிரகாசானந்தரால் வழிமொழியப்பட்டது.

(ஒப்பம்) சுவாமி வீரேஸ்வரானந்தா
கூட்டத்தின் தலைவர்.

இந்தத் தீர்மானத்துடன் அங்கீகாரத்திற்கும், நியமனத்திற்குமான முறையான சாசனம் அனுப்பப்பட்டிருந்தது. என் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை என்பதைக் கூறவும் வேண்டுமோ?

அந்த நாளிலிருந்து வித்யாலயம், ராமகிருஷ்ண மிஷனின் பிரிக்க வியலாத ஓர் அங்கமாகிவிட்டது. எதிர்கால வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அதற்கு வழி கிடைத்துவிட்டது.

இந்த இணைப்புக்குப்பின் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நூற்றாண்டு வந்தது. 1936-ஆம் ஆண்டு, ராமகிருஷ்ண மிஷனின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஓர் ஆண்டாகும். ஏனெனில் அந்த ஆண்டில் தான் குருதேவர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிறந்த நூற்றாண்டு விழா, கோலாகலமாகக் கொண்டாடப்பெற்றது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் வாழ்நாளான ஐம்பது ஆண்டுக் காலத்தில் உலகின் ஆன்மிகச் சாதனைகள் அனைத்தையும் சாதித்து முடித்தார். அவருடைய சாதனைகளும், அனுபூதிகளும் நிறைவுற்ற பின், உலகிற்குத் தாம் வழங்கவேண்டிய அருட்செய்தி ஒன்று இருப்பதை உணர்ந்தார். வாழ்க்கையின் பல்வேறு துறைகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரின் அமுத மொழிகளை அருந்த அவரிடம் திரண்டு வந்தனர். ஆனால் அவர், தம் செய்தியின் மகத்துவத்தை உணர்ந்து, அதை உலகெங்கும் பரவச் செய்வதற்கான தகுதிகளைப் பெற்ற சில தூய ஆன்மாக்களைச் சந்திக்க ஏங்கிக் காத்திருந்தார். அவர்கள் ஒருவர்பின் ஒருவராக வந்தனர். ராக்கால், தாரக், யோகின், பாபுராம், சரத், சசி ஆகியோரும், இவர்கள் அனைவரிலும் தலையாயவருமான நரேனும் வந்தனர். இவர்களே பின்னாளில் முறையே பிரம்மானந்தர், சிவானந்தர், யோகானந்தர், பிரேமானந்தர், சாரதானந்தர், ராமகிருஷ்ணானந்தர், விவேகானந்தர் என்று திகழ்ந்தனர். குருதேவர் மகா சமாதி அடைந்தபின் அவரது மறைவால் திக்குத் தெரியாத அனாதைகளாகத் திகைத்தனர். தூய அன்னையார் ஸ்ரீ சாரதாதேவியின் அன்பும், வழிகாட்டுதலும் இவர்களுக்குப் பலத்தை அளித்தன. இல்லற பக்தர்களான சுரேந்திரர், பலராம் மற்றும் பலர் அவர்களுக்கு ஆறுதலும், உதவியும் அளித்தனர். வராக நகரில் இருந்த கோவிலின் பொறுப்பைச் சுவாமி ராமகிருஷ்ணானந்தர் ஏற்றார். மற்றவர்கள் பல இடங்களுக்கும் செல்லும் பரிவ்ராஜகர்களாக வாழ்ந்தனர். சிகாகோ சர்வ சமய மாநாட்டில் பெரும் வெற்றிபெற்ற சுவாமி விவேகானந்தர் இந்தியா திரும்பியபின் ஆங்காங்கே பல இடங்களில் இருந்த சுவாமிகள் பேலூர் மடத்திற்குத் திரும்பினர். அது தான் ராமகிருஷ்ண மடத்தின் தொடக்கமாகும். அதற்குப்பின் மிஷன் நிலையான வளர்ச்சியைப்பெற்றுக் கம்பீரமான ஒரு நிறுவனமாக வளர்ந்தது. அதன் வளர்ச்சியில் தோன்றிய ஆனந்தத்தையும், பெருமிதத்தையும் வெளிப்படுத்தும் ஒரு வாய்ப்பாக ராமகிருஷ்ணரின் நூற்றாண்டு விழா அமைந்தது. குருதேவரின் அருட்செய்தியான அன்பையும்,

சமய ஒருமைப்பாட்டையும் பரப்பும் ஒரு வாய்ப்பாகவும் அது அமைந்தது.

1936-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் நாளில் தொடங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நூற்றாண்டு விழா அதற்கடுத்த ஆண்டு பிறந்தநாளுக்குப்பின் ஒரு வாரம் கழித்து 1937-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21-ஆம் நாளில் நிறைவுபெற்றது, இந்த நூற்றாண்டு விழாவில் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர். இந்தியாவிலும், வெளிநாடுகள் பலவற்றிலும் பல்லாயிரக்கணக் கான ஆண்களும், பெண்களும் நூற்றாண்டு விழாவின் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டனர். இந்த விழாவிற்கென அப்பொழுது மிஷனின் தலைவராக இருந்த சுவாமி அகண்டானந் தரின் தலைமையில் ஒரு குழு கல்கத்தாவில் அமைக்கப்பட்டது. கவிஞர் ரவீந்திரநாத் தாகூர், பிரான்சு நாட்டு ரோமன் ரோலண்டு, ராஜேந்திரப் பிரசாத், T. P. சாப்ரு, அறிவியல் மேதை J. C. போஸ், தத்துவமேதை டாக்டர் S. ராதாகிருஷ்ணன், பர்மாவின் U. செட், ஸ்ரீலங்காவின் S. W. தாசநாயகே, பாயின், இத்தாலியைச் சேர்ந்த கியோவன்னி ஜெண்டில், பிரான்சைச் சேர்ந்த சில்வியன் லெவி ஆகியோரும் மற்றப் பல பிரமுகர்களும் இக்குழுவில் துணைத்தலைவர்களாகவும், சுவாமி சம்புத்தானந்தா, T. R. சர்க்கார் ஆகியோர் செயலாளர்களாகவும் இருந்தனர். நூற்றாண்டு விழாவின் தொடக்க விழா 1936-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ஆம் நாள் பேலூர் மடத்தில் நிகழ்ந்தது. விழா நிகழ்ச்சிகள் ஒரு வாரம் தொடர்ந்தன. குருதேவரின் பெயருக் கிருந்த மகிமை ஒவ்வொரு நாளும் பெருந்திரளான மக்களை விழாவில் கலந்துக் கொள்ளக் கவர்ந்தது. தொடக்க விழாவிலும், நிறைவு விழாவிலும் எதிர்பாராத அளவில் கட்டுக் கடங்காத மக்கள் கூட்டம் விழாவில் கலந்து கொண்டது. விழாவின் புனிதமான சூழல், பக்தர்களின் பக்திப் பெருக்கு, ஒவ்வொருவர் இதயத்திலும் ஆன்மிக உணர்வையும், ஆனந்தத்தையும் நிறைத்தன. மேலும், மடத்தில் விழாக்கள் நடந்த அதே சமயத்தில் நாட்டின் பல இடங் களிலும், உலகின் பல பகுதிகளிலும் விழா நிகழ்ச்சிகள் நடை பெற்றன. வாரணாசி, அலகாபாத், பம்பாய், சென்னை, நாகபுரி, கராச்சி மற்றும் இந்தியாவின் பல இடங்களிலும், நியூயார்க், சிகாகோ, பிராவிடன்ஸ்', போஸ்டன், சான்பிரான்சிஸ்கோ போன்ற அமெரிக்க நகரங்களிலும், பியூனஸ் அயர்ஸ், டோக்கியோ, கொழும்பு, லண்டன் போன்ற மற்ற நகரங்களிலும் விழா நிகழ்ச்சிகள் சிறப்புற நிகழ்ந்தன. இந்தியா முழுதும், மற்ற பல உலக நாடுகளும் குருதேவருக்குத் தங்கள் அஞ்சலியையும், ஆனந்தத்தையும் தெரிவித்துக் கொண்டன.

நூற்றாண்டு விழாவின் நிறைவு நிகழ்ச்சியாக, கல்கத்தா நகர மண்டபத்தில் 1937-ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நாளிலிருந்து எட்டு நாட்கள் சர்வதேச சமய மாநாடு நடைபெற்றது. அதில் கலந்து கொள்ளும் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக உலகின் பல பகுதிகளிலிருந்தும் இருபால் அறிஞர் பெருமக்கள் பலர் இந்திய மண்ணில் ஒன்று திரண்டனர். அங்கு நடந்த பதினைந்து கூட்டங்களுக்கும் அர்ஜண்டினா சீனா, செக்கோஸ்லோவாக்கியா, இங்கிலாந்து, ஈரான், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய நாடுகளிலிருந்து வந்த அறிஞர் பெருமக்கள் ஒவ்வொருவரும் தலைமையேற்றனர். இவ்வாறு தலைமை தாங்கிய இந்திய அறிஞர்கள் சர். ராஜேந்திர நாத் சீல், ரவீந்தரநாத் தாகூர், காகா கலேல்கர், டாக்டர். T. R. பண்டார், டாக்டர் A. P. துர்வா ஆகியோர் ஆவர். விழாவில் வாசிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஆற்றப்பட்ட சிறப்புரைகள் மொத்தம் நூற்றுப்பத்து ஆகும். இந்தச் சிறப்புரைகளும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் முழுமையாக அல்லது சுருக்கவடிவில் ''உலகச் சமயங்கள்'' (Religions of the World) என்ற தலைப்பில் சுவாமி ஞானானந்தரால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

இந்த நூற்றாண்டு விழாவையொட்டி வந்த மற்றொரு குறிப்பிடத்தக்க வெளியீடு, ''இந்தியாவின் பண்பாட்டுப் பாரம்பரியம்'' (Cultural Heritage of India) என்பதாகும் இது மூன்று தொகுதிகளைக் கொண்டது. கலைகள், கட்டிடக்கலை, அறிவியல், இலக்கியம், தத்துவஞானம், சமயம் ஆகிய துறைகளில் இந்தியாவின் சாதனைகளைப் பற்றி நூறு அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள் இவற்றில் உள்ளன. அக்கட்டுரைகளுடன் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வாழ்க்கையைப்பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் முதல் தொகுதி, நெடுங்காலம் நிலவி வரும் இந்தியப் பண்பாட்டின் பாரம்பரியத்தைப்பற்றித் தெளிவாக விளக்குவதால் அந்நூல் உலகப் பண்பாட்டு வரலாற்றில் ஒப்பற்ற ஒரு படைப்பு எனக் கருதப்பட்டது. இரண்டாண்டுகளில் முதல் பதிப்பின் பிரதிகள் யாவும் விற்கப்பட்டு விட்டன. அதன் இரண்டாம் பதிப்பை ராமகிருஷ்ண மிஷன் பண்பாட்டு நிறுவனம் (Ramakrishna Mission Institute of Culture) நான்கு தொகுதிகளாக விரிவுபடுத்தி வெளியிட்டுள்ளது.

நூற்றாண்டு விழாவின் நிறைவாக, பேலூர் மடத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அழகான கோயில் ஒன்று கட்ட முடிவு செய்யப்பட்டது. கோயில் எவ்வாறு அமைய வேண்டுமெனச் சுவாமி விவேகானந்தர் திட்டமிட்டிருந்தார். கோயில் மிகப்பெரியதாகவும்,

கலையழகு நிரம்பியதாகவும் அமைய வேண்டுமென்பது அவரது பேரவா. அதற்குப் பெருந்தொகை தேவைப்பட்டதால் நாற்பது ஆண்டுகள் காத்திருக்கவேண்டியநிலை ஏற்பட்டது. ஆலயத் திற்கான அஸ்திவாரம் 1929-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13-ஆம் நாள் சுவாமி சிவானந்தரால் இடப்பட்டது. ஆனால் அதற்குரிய பெருந்தொகைக்கு என்ன செய்வது என்பது அப்போது தெளிவாக வில்லை. 1934-ஆம் ஆண்டு, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பிராவிடன்ஸ் நகரிலிருந்த வேதாந்த சங்கத்தின் தலைவர் சுவாமி அகிலானந்தர் ஆலயத்திற்கான செலவுகளை ஏற்க முன் வந்தார். 'பக்தி' என்று அழைக்கப்பட்ட அவருடைய சீடர் செல்வி ஹெலன் எஃப்ரூபிள் என்பவரின் கொடைத் தன்மையே ஆலயத்திற்கான செலவின் பெரும்பகுதியை ஏற்க அவரை ஊக்குவித்தது.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நூற்றாண்டு விழா வித்யாலயத்திலும் எளிய முறையில் கொண்டாடப் பெற்றது. அப்பொழுது வித்யாலயம் தன் ஆரம்ப ஆண்டுகளில் இருந்தது. தனது நிரந்தர இடத்தில் குடியேறியிருந்தது. வித்யாலயத்தில் கொண்டாடப்பட்ட முதல் பெரிய விழா குருதேவரின் நூற்றாண்டு விழாவாகும். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவுருவப் படம் அலங்கரிக்கப் பெற்று பூஜை நடைபெற்றது. சில நூறு பக்தர்கள் குழுமியிருந்தனர். பஜனை நடைபெற்று, எளிய பிரசாதம் வழங்கப்பெற்றது. நூற்றாண்டு விழாவின் நினைவாக, சுற்றுப்புறத்தில் உள்ள தொடக்கப்பள்ளிக் குழந்தைகட்கு விளையாட்டு விழா ஒன்று நடந்தது. வார்தாவில் உள்ள இந்துஸ்தானி தாலமி சங்கத்தின் (ஆதாரக்கல்வி) செயலாளர் திருமதி ஆஷாதேவி அரியநாயகம் அவர்கள், விளை யாட்டு விழாவைத் தொடங்கி வைத்தார்கள் அப்பொழுது தொடங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நூற்றாண்டு நினைவு விளை யாட்டு விழா அன்றிலிருந்து இன்று வரை ஆண்டுதோறும் வித்யாலயத்தில் தொடர்ந்து நடந்து வருகின்றது. ஆண்டுதோறும் இவ்விழாவில் சுற்றுபுறத்திலுள்ள இருபது பள்ளிகளிலிருந்து ஏறக் குறைய மூவாயிரம் குழந்தைகள் கலந்து கொள்கின்றனர்.

வித்யாலயம் அப்பொழுது தன் குழந்தைப் பருவத்தில் இருந்தது. மூங்கில் தட்டிகளைச் சுவர்களாகக்கொண்ட ஓட்டுக் கட்டிடங்களில் வகுப்புகள் நடைபெற்றன. வித்யாலயத்தின் வாழ்க் கைமுறை மிகவும் எளியது. ஆனால் வித்யாலயம் எனக்குப் புனித பூமி. அங்குதான் என் கனவுகள் பல நனவாகியுள்ளன. இந்தப் பல ஆண்டுகளில் வித்யாலயத்தின் பல்வேறு கல்வி நிறுவனங்களி லிருந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் கற்றுச் சென்றுள்ளனர். பல ஊழியர்கள் சிறப்பாகப் பணியாற்றியுள்ளனர். அவர்களுடன்

ஒன்றாக வாழ்ந்து அவர்களுக்காகப் பணிசெய்தபோது அவர்கள் என்மீது காட்டிய அன்பும், பரிவும்தாம் என்னை உருவாக்கி என் வாழ்க்கையைப் பயனுள்ள வாழ்க்கையாக அமைத்தன. எங்களுக்குப் பல கடுமையான இன்னல்களும், சோதனைகளும் வந்தன. ஆனால் இந்தச்சோதனைகள் எங்களுக்கு நம்பிக்கையை அளித்து, பலத்தைக்கொடுத்து, எங்கள் பண்பினை உருவாக்கின. வளமான வாழ்க்கையையும், மகிழ்ச்சியையும் காட்டிலும் துன்பங்களும், சோதனைகளுமே ஒருவனின் சீலத்தைச் சிறப்பாக வடிவமைக்கின்றன என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

பக்தியும், தியாகமும் கொண்ட பல ஊழியர்களின் தளராத உழைப்பால் ஒரு காலத்தில் வறண்ட நிலமாக இருந்த இடத்தில் வித்யாலயத்தின் பல்வேறு நிறுவனங்கள் உருவாயின. பதவி, அதிகாரம், பணம், கல்வித்தகுதி ஆகியவற்றைக்கொண்டு உண்மையான பெருமையை நாம் எடைபோடக் கூடாது; மாறாக, நேர்மை, பக்தி ஆகியவையே அதன் அடிப்படைகளாகும். நான் நோய்வாய்ப்பட்டபோது மாணவர்களின் அன்பான பராமரிப்பால் நலமடைந்தேன். மெலிந்த ஒரு உடலைக்கூடப் பெரிய கருவியாக்கும் சக்தி இறைவனின் அருளுக்கு உண்டு என்பதை நான் உணர்ந்தேன், மனிதர்கள் வரலாம்; போகலாம். தலைமுறைகள் மாறலாம். ஆனால் இறைவனின் பெயரால் நடைபெறும் புனிதப் பணியும் உயர்ந்த குறிக்கோளும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் தொடர்ந்து வாழும். அதனால் ஆயிரக்கணக்கான ஆண்-பெண் இளைஞர்கள் அன்புடன் சேவையில் ஈடுபட ஆயத்தமாவார்கள். வித்யாலயம் ஆண்களுக்கான நிறுவனம் ஆயினும், பெண் என்று நான் குறிப்பிடக்காரணம் கோவை அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியும், அதைச் சார்ந்த பெண்கள் கல்வி நிறுவனங்களும் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகிய மகான்களின் அருள் மொழிகளின் அடிப்படையில் தொடங்கப்பெற்றவை என்று நான் கருதுவதுதான்.

நம்நாடு மீண்டும் மறுமலர்ச்சிபெற்று உலகநாடுகளின் அரசியாகத் திகழ்வதற்கு இளைஞர்களுக்கு நல்ல கல்வி அளிப்பது அவசியம். வலிமையான உடல், நல்லுணர்ச்சி, தயாளசிந்தை, விரிந்த நோக்கு, சேவையில் ஆர்வம், மனிதனிடத்தில் காணும் நற்பண்புகளைப் போற்றும் திறன்—இவையனைத்தும் ஒரு சிறந்த மாணவனை உருவாக்கும். இந்த நோக்கங்களுடனேயே வித்யாலயமும், மிஷனின் மற்றக் கல்வி நிலையங்களும் முயல்கின்றன.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு எல்லையே இல்லை என்று சொல்வதுண்டு. அதேபோல் மக்களின் உயர்வுக்காகப் பணியாற்றும் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் எல்லையே இல்லை. ஒரு நாட்டின் தேவைகளையும், ஆவல்களையும் அந்நிறுவனங்கள் பல தலைமுறைகளில் நிறைவேற்றும். நாம் மறைந்துவிடுவோம். ஆனால் நிறுவனங்கள் என்றும் நிலைத்துநின்று ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் ஒப்பற்ற செய்தியை, தொடர்ந்துவரும் மாந்தர்களுக்குப் பல்லாண்டு காலத்திற்கு வழங்கிக்கொண்டே இருக்கும்.

# 8. பொதுத் தொண்டிற்காக யாசித்தல்

என் நண்பர் திரு C. P. சுப்பையா அவர்கள் என்னை கைதேர்ந்த யாசகர் (Professional beggar) என்று அழைப்பதுண்டு. இது என்னை ஏளனப்படுத்தும் நோக்கத்தில் அன்று. பண்டித மதன்மோகன் மாளவியாவை 'பிச்சைக்கார இளவரசர்' என்று காந்தியடிகள் குறிப்பிடுவார். ஏனெனில் இந்திய அரசர்கள் மற்றும் பெரிய தொழில் அதிபர்களிடமிருந்து அவர் காசி இந்துப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்காகப் பெரும் தொகைகளை நன்கொடையாக வசூலிப்பார். அவர்தான் இந்துப் பல்கலைக்கழகத்தை நிறுவி வளர்த்தவர். அதேபோன்று காந்தியடிகள் தம்மையும் ஒரு தொழில்ரீதியான பிச்சைக்காரர் (Professional beggar) என்று சொல்லிக் கொள்வார். அதே சொற்களைத்தாம் என்னைப்பற்றிக் குறிப்பிடவும் திரு. சுப்பையா அவர்கள் பயன்படுத்தினார். காரணம், வித்யாலயம் தொடங்கிய நாள் முதல் நாற்பது ஆண்டு கள் நான் அதன் வளர்ச்சிக்காகப் பலரிடமும் நன்கொடை வசூலிக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டேன். பொதுமக்களிட மிருந்து நன்கொடை வசூலிப்பதைப்பற்றிச் சமூக ஊழியர்களுக்கு என் அனுபவங்களைக் கூறுவது நல்லதென்று நான் கருதுகிறேன்.

காந்தியடிகளுக்குச் சத்தியம், அகிம்சையைக் காட்டிலும் முக்கியமானது. ஏனெனில் சத்தியம் என்பது ஒரு கொள்கை எனில், அகிம்சை என்பது ஒரு வழிமுறையே. பொதுநல ஊழியர்களும், நிறுவனங்களும், நேர்மையான கணக்குகள் வைப்பது என்பது தினசரி வாழ்க்கையில் உண்மையைக் கடைப்பிடிப்பதாகும் என்று காந்தியடிகள் கருதினார். அதாவது, நன்கொடை வசூலில் வரும் பணத்திற்கு அன்றாடம் தவறாமல் கணக்கு எழுதுவதும், அப்பணத்தை மிகவும் கவனமாகவும், சிக்கன மாகவும் பயன்படுத்துவதும், அது வசூல் செய்யப்பட்ட நோக்கத் திற்காக அதைச் செலவழிப்பதும் அவசியம். ஒருசமயம் காந்தி யடிகளின் சுற்றுப்பயணத்தின் போது, அவரது குழுவில் இருந்த சிலர் பசிக்கு உண்பதற்காக வெளிநாட்டு பிஸ்கட்டுகள் வாங்கினர். இதைக் காந்தியடிகள் ஆட்சேபித்து, ''நம்மால் வசூலிக்கப்படும்

பணம் ஏழை மக்களுக்கு உரியது. நாம் அதன் தர்மகர்த்தா. ஆகவே அதைச் செலவு செய்வதில் மிகவும் கவனமாக இருத்தல் அவசியம்'' என்று கூறினார்.

சரியான கணக்குகள் வைப்பது மட்டும் போதாது. நன்கொடைப் பணம் எங்கிருந்து வந்தது; எவ்வளவு வந்தது; எப்படிச் செலவழிக்கப்பட்டது என்பதை மக்கள் அறியுமாறு செய்து அவர்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும் ஆகவே கணக்கு களைத் தணிக்கை செய்து அதை வெளியிடுதல் மிகவும் அவசியம். இந்த நடைமுறையைப் பின்பற்றும் நிறுவனங்கள் மக்களின் நம்பிக்கையைப் பெறுகின்றன.

தொடக்க நாளிலிருந்தே வித்யாலயம் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு வரவு செலவுக் கணக்குகளை வெளியிடுகிறது.

இவ்வாறு வசூலாகும் நன்கொடைத் தொகைகள் எங்கு, எப்படி டிபாசிட் செய்யப்பட வேண்டும் என்பதையும் பொது நல ஊழியர் கள் அறிய வேண்டும். சிலர் தங்கள் சொந்தப் பெயரிலேயே இத் தொகைகளைப் போட்டு வைத்திருந்ததை நான் அறிவேன். இத் தகையவர்கள் நல்ல வசதி படைத்தவர்களாகவும், நேர்மையானவர் களாகவும் இருக்கலாம். ஆனால் இவ்வாறு செய்வது நல்லதல்ல. பொது நிதிகள், வங்கிகளில், நிறுவனங்களின் பெயர்களிலேயே வைக்கப்பட வேண்டும் என்பது காந்தியடிகளிடமிருந்து நான் தெரிந்து கொண்ட மற்றொரு கருத்தாகும். இக்கருத்தை விளக்கும் நிகழ்ச்சியொன்று, காந்தியடிகள் கோவை மாவட்டத்தில் ஹரிஜன யாத்திரை மேற்கொண்டபோது நிகழ்ந்தது. ஒரு நாடகக்குழு தனது ஒரு நாள் வசூல் தொகையை ஹரிஜன நிதிக்கு நன்கொடையாக வழங்குவதாக உறுதியளித்திருந்தது. காந்தி யடிகளை, நாடகக் கொட்டகைக்கு வந்து சில நிமிடங்கள் இருந்து வாழ்த்துக் கூறுமாறு அது கேட்டுக்கொண்டது. குறைந்தது என்ன தொகை அவர்கள் கொடுப்பார்கள் என்று காந்தியடிகள் என்னைக் கேட்டார். அவர்கள் ரூ 1500/- கொடுப்பார்கள் என்று நான் கூறினேன். காந்தியடிகள் கொட்டகைக்கு வருவதால் மேலும் அதிகத் தொகை வசூலாகும் என்று நாங்கள் நம்பினோம். ஆனால் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் உடனே காந்தியடிகள் கொட்டகைக்கு வந்தார். அதனால் அக்கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கொட்டகைக்கு வரப்போதிய நேரம் இருக்கவில்லை. ஆகவே மிகவும் குறைந்த தொகையே வசூலா யிற்று. ஆனால் நான் ரூ 1500/-க்கு உறுதியளித்திருந்தேன். ஆகவே அன்று வசூலான தொகையை என் சொந்தக் கணக்கில் டிபாசிட் செய்து 1500/-க்கு காசோலை (Cheque) கொடுத்து

விட்டேன். இதை அறிந்த காந்தியடிகள் என்னை மிகவும் கடிந்து கொண்டு, ''அவினாசி, பொதுப்பணத்தை நீ எவ்வாறு உன் சொந்தக் கணக்கில் போடலாம்?'' என்று கேட்டார். இது நான் கற்றுக் கொண்ட பெரிய பாடம்.

அப்போதிருந்து நான் பொதுத் தொண்டிற்கும், நிறுவனங் களுக்கும் நன்கொடை வசூலித்து வருகிறேன். வித்யாலயத்திற் காக மட்டுமின்றி, பல்வேறு பொதுப் பணிகளுக்காகவும் நான் வசூல் செய்துள்ளேன். அரிஜன நிதி, கஸ்தூரிபா காந்தி தேசிய நினைவு நிதி, காந்தி நிதி, சிறையிருந்த நண்பர்களின் குடும்பங் களுக்கு உதவி நிதி, தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கான நிதி போன்ற பல்வேறு நிதிகள் இவற்றுள் அடங்கும். அப்பொழு தெல்லாம் காந்தியடிகள் என்னைக் கடிந்து கொண்டதும், அவர் கூறிய அறிவுரையும் என் நினைவுக்கு வரும். வசூலாகும் தொகை எவ்வளவு சிறியதாக இருப்பினும் அந்த நிதியின் பெயரிலேயே தனிக் கணக்கில் அத்தொகை வைக்கப்பட்டது.

பொது நிறுவனங்களின் தொகைகள் எவ்வாறு முதலீடு செய்யப்பட வேண்டும் என்பதும் மனதில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அதிகமாக வட்டி கிடைக்கும் என்பதற்காகச் சில நிறுவனங்கள், தங்களுடைய பணத்தைச் சில தனியார்க்கும், வளர்ச்சியற்ற நிறுவனங்களுக்கும் கடனாக வழங்கி, பின்னால் அத்தொகைகள் சரிவரத் திரும்பி வராததால் பெரும் இழப்புக்கு ஆளானதுண்டு. இது, நிறுவனங்களுக்குப் பெரும் மனக் கவலையை உண்டு பண்ணுவதுடன், மக்களுக்கு அவற்றின் மீதுள்ள நன்மதிப் பையும் நம்பிக்கையையும் பெரிதும் குறைத்து விடும். ஆகவே, நன்கொடைத் தொகைகள் தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கி களிலோ, அரசு உத்திரவாதம் கொடுக்கும் நிறுவனங்களிலோ முதலீடு செய்து வைப்பது மிகவும் பத்திரமானதாகும்.

பொது நிறுவனங்களை நடத்துபவர்கள் மற்றொரு கருத் தையும் மனதில் கொள்ள வேண்டும். பெரிய நன்கொடையாளர் ஒருவரையோ அல்லது ஒரு சிலரையோ மட்டும் நம்பியிருப்பது நல்லதல்ல. இத்தகைய நன்கொடையாளர்கள் எப்பொழுதும் தங்கள் சொந்த விருப்பங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். மாணவர் சேர்க்கை, நியமனங்கள், பணி யுயர்வு போன்ற செயல்களில் இவர்கள் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றும்படி வற்புறுத்துவார்கள். தங்கள் விருப்பங்கள் நிறைவேறாதபோது கருத்து வேறுபாடு தோன்றி, நன்கொடை களை நிறுத்தி விடுவார்கள். ஆகவே, பொது நிறுவனங்கள்,

யாரோ ஒரு சிலரிடமிருந்து பெரிய தொகைகளைப் பெறுவதற்குப் பதிலாக, சிறு தொகையாயினும் பலரிடமிருந்து வசூல் செய்தல் நல்லது. இது, தேவையற்ற பல பிரச்சனைகளைத் தவிர்ப்ப தோடு, நிறுவனத்தின் நிலையான தன்மைக்கும் பெரிதும் துணை புரியும்.

இதைவிட முக்கியமானது நிறுவனத்தின் கொள்கைகளில் நம்பிக்கை கொண்டு பணிபுரியும் ஊழியர்களை உருவாக்குதலாகும். நிறுவனங்களுக்குரிய சிறந்த பாரம்பரியத்தை உருவாக்கி வளர்ப்பதும், அப்பாரம்பரியம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுவதும் மிகவும் முக்கியம். ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்குப் பொருள் அவசியம்; இருப்பினும், கொள்கைப் பிடிப்பு, சேவை மனப் பான்மை, தூய்மை, நேர்மை, கடும் உழைப்பு ஆகிய பண்புகள் கொண்ட ஊழியர்களே ஒரு நிறுவனத்தின் நீண்டகால வளர்ச்சிக்கு மிகமிக இன்றியமையாதவர்கள் ஆவர்.

நன்கொடை வசூல் என்பது எப்பொழுதும் ஓர் எளிய பணி யன்று. நற்பணிகளைப் போற்றி அதற்காக உதவும் மனப் பான்மை கொண்டவர்கள் மிகச் சிலரே. பணம் இருந்தும் மனம் இல்லாதவர்களிடம் செல்லும்போது அவர்கள் நம்மைத் தூற்றலாம். நிறுவனங்களின் வளர்ச்சிக்காகவும், பொது நன்மைக் காகவும் உழைப்பவர்களுக்கு இன்னல்களை எதிர் கொள்ள பொறுமையும், விடா முயற்சியும் தேவை. இறைவனிடம் நம்பிக்கையுடனும், சுவாமி விவேகானந்தர் தம் 'சந்நியாசி கீதத்'தில் கூறியுள்ளபடி ''உனக்கு ஒருவர் மாலையணிவித்துப் போற்றினும், மற்றொருவர் எட்டி உதைப்பினும், தளராதே'' என்ற சொற்களுக்கு ஏற்பவும், பொதுத் தொண்டில் ஈடுபடு பவர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

பொதுச் சொத்தினையும், பொது நிறுவனங்களையும் நிர்வகிப்பதைப் பற்றித் தம் வாழ்வில் தாம் பெற்ற அனுபவங் களின் அடிப்படையில் காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

> ''எந்தவொரு இயக்கமும் நிதியின்றித் தோல்வியடைந்தது இல்லை என்பதை நான் என் அனுபவத்தால் கற்றுள்ளேன். ஆனால் ஓர் இயக்கத்தின் வளர்ச்சிக்கு நிதி அவசியமில்லை என்பது இதன் பொருளல்ல, எங்கெல்லாம் நல்ல மனிதர் களால் இயக்கங்கள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் தேவையான நிதி தானாகவே வந்து சேரும். மாறாக, அளவுக்குமிஞ்சிய நிதி வசதி கொண்ட இயக்கம் தோல்வியை நோக்கிச் செல்வதையும் நான் கண்டுள்ளேன். ஒரு பொது

நிறுவனம் அதன் முதலீட்டிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு நடைபெறுமாயின் அதை ஒரு பாவம் என்று கூறத் தயங்கமாட்டேன். அனைத்துப் பொது நிறுவனங்களுக்கும் பொது மக்களே வங்கிகள். பொது மக்களின் விருப்பத்தை இழந்த மறுகணமே அது நீடிக்கக்கூடாது. சேர்த்துவைக்கப் பட்ட மூலதனத்தின் வட்டியினால் நடத்தப்படும் நிறுவனம் பொதுமக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்காது; மாறாக அது எதேச்சாதிகாரப் போக்குக் கொண்டதாகிவிடும். நேர்மை, திறமை, தியாகம் ஆகிய பண்புகள்கொண்ட ஊழியர்களற்ற நிறுவனங்கள் அழிந்துவிடுகின்றன. ஒரு நிறுவனம் மக்களின் நன்மதிப்பைப்பெற்று வளர வேண்டும் எனில், அது தன் குறிக் கோளை நிறைவேற்றிக் காப்பாற்ற வேண்டும்.

அனைத்துப் பொது நிறுவனங்களும், பொது அறநிலையங்கள் ஆகும். இவற்றில் பொறுப்பு வகிப்பவர்கள் அந்த நிறுவனங் களுக்கு வரவேண்டிய கடன் பாக்கிகளை வசூலிப்பதில் தயவு தாட்சண்யம் காட்டாத உறுதி படைத்தவர்களாக இருக்க வேண்டும். அறநிலையங்களை நிர்வகிப்பதில் தளர்வுக்கோ, சலுகைக்கோ இடமில்லை. அப்படிப்பட்ட தளர்ச்சி, மன்னிக்க முடியாத விதிமீறல் ஆகும்.

பொது நிறுவனம் என்பது பொதுமக்களின் ஒப்புதலுடன் பொதுப்பணத்தைக்கொண்டு நடத்துவதாகும். பொது மக்களின் நம்பிக்கையை இழக்கும்போது அந்த நிறுவனம் தொடர்ந்து நடைபெறுவதற்குத் தகுதியற்றதாகிறது. நிரந்தர நிதியினால் நடைபெறும் நிறுவனங்கள் அடிக்கடி பொது மக்களின் கருத்தை ஏற்றுக்கொள்வதில்லை. ஒரு நிறுவனம் ஆண்டு தோறும் பெறும் சந்தாக்களின் எண்ணிக்கையிலிருந்து அதன் நிர்வாகத்தின் நேர்மையையும், அதன் சிறப்பையும் அறிந்துகொள்ளலாம். ஆனால் இக்கருத்தைத் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. கட்டிடங்களின்றி நடத்த இயலாத நிறுவனங்களுக்கு இக்கருத்து பொருந்தாது. நான் குறிப்பிடு வது யாதெனில், நிறுவனங்களின் அன்றாடச் செலவுகள் ஒவ்வோர் ஆண்டும் அது வசூலிக்கும் சந்தாத்தொகையிலிருந்து செய்யப்படவேண்டும் என்பதேயாகும்''.

பொதுத் தொண்டு செய்பவர்கள் நல்ல மனப்பான்மை உள்ள வர்களாக இருக்க வேண்டும். சமூகத் தொண்டு செய்வதற்கு இருவகை மனப்பான்மைகள் தேவை.

சுவாமி விவேகானந்தர் கூறுகிறார் : ''அனைத்துப் பற்றுக் களையும் துறப்பதற்கு இரு வழிகள் உண்டு. ஒரு வழி கடவுள் நம்பிக்கையற்றவர்களுக்கு. அவர்கள் தங்கள் இயல்புக்கு ஏற்ற முறைகளைப் பின்பற்றலாம். மன உறுதியுடன் அவர்கள் பணி செய்ய வேண்டும். தங்கள் பகுத்தறிவால், 'நான் எதிலும் பற்று வைக்கக் கூடாது; யாரிடமும் எந்தப் பிரதிபலனையும் எதிர் பார்க்கக் கூடாது.' என்று தமக்கு அறிவுறுத்திக் கொள்ள வேண்டும். கடவுள் நம்பிக்கைக் கொண்டவர்களுக்கு உரிய வழி மிகவும் எளியது. அவர்கள் தங்கள் பணியின் பலன்களை இறைவனுக்கே அர்ப்பணித்துவிடுகின்றனர். அவர்கள் பணி செய்கிறார்கள்; பயனை எதிர்பார்ப்பதில்லை. அவர்கள் காண்பன, உணர்வன, கேட்பன, செய்வன யாவும் இறை வனுக்காகவே. நாம் எத்தகைய நற்பணி செய்தாலும் அதனால் வரும் புகழோ, பயனோ நமக்கு உரியது அன்று. அது இறை வனுக்கு உரியது. நாம் நம்மை இறைவனின் தொண்டர்கள் என்று கருதிக்கொள்ள வேண்டும்''.

> ''தன்னலம் கருதாமல் அறச்சிந்தனையுடனும் கருணையுடனும் பணிசெய்ய இன்னொரு வழியும் உண்டு. நாம் செய்யும் பணியை நம் வழிபடுதெய்வத்திற்குரிய வழிபாடாகச் செய் வதேயாகும். இப்படிச் செய்யும் பணியின் பயனை நாம் இறைவனுக்கே அர்ப்பணிக்கிறோம். அதேபோன்று மனித சமுதாயத்திற்கு நாம் செய்யும் தொண்டிற்காகவும் நாம் எதை யும் அதனிடமிருந்து எதிர்பார்க்கக்கூடாது. தாமரை இலைத் தண்ணீர் போன்று, தன்னலமற்ற தொண்டர்களும் உலகப் பற்றுகளால் பாதிக்கப்படுவதில்லை''.

சேவையின் இன்பத்தை ஒருவர் பெற வேண்டுமாயின் அவர் மக்களிடம் அன்பு கொள்ளவேண்டும். அதே சமயம் பலனை எதிர்பாராத பற்றின்மையும் அவரிடம் இருக்க வேண்டும். இத்தகைய கர்மயோகி மிகுந்த மகிழ்ச்சியையும், உயர்ந்த ஆன்மிக அனுபவத்தையும் பெற இயலும். பக்தன் இதனைப் பக்தியின் மூலமும், யோகிகள் பிராணாயாமத்தின் மூலமும், ஞானிகள் விவேகத்தின் மூலமும் பெறுகின்றனர்.

# 9. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுதல்

1930ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3ஆம் நாள் வித்யாலயம் தொடங்கியபோது அப்பணியிலிருந்து நான் திசை திரும்புவேன் என்று எள்ளளவும் நினைக்கவில்லை. ஆனால் இறைவனின் திரு வுளம் வேறாக இருந்தது. சுதந்திரப் போராட்டத்தில் அடக்க வியலாத ஆர்வத்துடன் நான் ஈர்க்கப்பட்டேன்.

காந்தியடிகளை நான் முதன் முதல் 1920ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தின்போது சென்னையில் சந்தித்தேன், அப்பொழுது நான் சென்னையில் இன்டர்மீடியேட் வகுப்பில் பயின்று கொண்டிருந்தேன். மற்ற பல மாணவ நண்பர்களுடன் நான் சென்னைக் கடற்கரையில் காந்தியடிகளும், மௌலானா சௌகத் அலியும் பேசிய கூட்டத்தில் கலந்துகொண்டேன். ஐம்பதாயிரம் மக்களுக்குமேல் கலந்துகொண்ட பெருந்திரளான கூட்டம் அது. அக்காலத்தில் ஒலிபெருக்கி வசதி இல்லை. காந்தியடிகள் மெல் லிய குரலில் அளவான சொற்களில் தம் உரையை நிகழ்த்தினார். ஜாலியன் வாலாபாக் படுகொலையின்போது மக்கள் அடைந்த துன்பங்கள், அவமானங்கள் ஆகியவைபற்றி அவர் கூறிய ஒவ் வொரு சொல்லும் மக்கள் மனத்தில் ஆழச்சென்று பதிந்தது. அவர், 'பொழுது புலரும் முன்பு தோன்றும் இருள் அது; மக்களது இன்னல்களே சுதந்திரம் விடிவதற்கான அறிகுறிகள்' என்று கூறி னார். அஹிம்சை முறையிலான ஒத்துழையாமை இயக்கத்திற்கு மக்களின் ஆதரவை வேண்டினார். மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவேண்டி அனைவரையும் கதராடையையே அணியும்படிக் கேட்டுக்கொண்டார். அவரது பேச்சால் நாங்கள் மிகவும் கவரப் பட்டோம். எங்களில் சிலர் இனிமேல் கதராடையையே அணிவது என்று உறுதிபூண்டோம். அந்தக் காலத்தில் கதராடை, இன்று இருப்பதைப்போன்று மெல்லியதாகவும், அழகானதாகவும் இருக்க வில்லை.

அப்பொழுது சுவாமி விவேகானந்தரின் எழுச்சியூட்டும் நூல் களை நான் படிக்கத் தொடங்கியிருந்தேன். அவரது சொற்கள்

என் உள்ளத்தில் நாட்டுப்பற்றையும், தேசசேவையையும் கொழுந்து விட்டெரியச்செய்தன. காந்தியடிகளின் சொற்கள், விவேகானந்த ரின் சொற்களான, 'இந்தியா ஒருபோதும் உடல் வலிமைகொண்டு உயரமுடியாது; அது ஆன்மபலத்தால் மட்டுமே உயரமுடியும். அழிவுக்கொடியினால் அல்ல; அன்பு மற்றும் அமைதிக்கொடியி னால் மட்டுமே அது உயரமுடியும். இந்தியத் தாய் மீண்டும் விழித்தெழுந்து புதுப்பொலிவுடனும், முன்னை இருந்ததைவிட அதிகப் புகழுடனும் தன் அரியணையில் வீற்றிருக்கிறாள்' என்பதைப் பிரதிபலித்தன.

நான் காந்தியடிகளை அடுத்தமுறை 1926ஆம் ஆண்டில் திருப்பூரில் சந்தித்தேன். அப்பொழுது அவர் இந்தியா முழுவதும் கதர் இயக்கத்தைப் பரப்பச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அன்பும், நற்பண்பும் நிறைந்த என் நண்பர் திரு. K. S. ராமசாமிக் கவுண்டரின் இல்லத்தில் அவர் தங்கியிருந்தார். அங்குக் காந்தியடி களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவ ருடன் உரையாடிக்கொண்டிருந்த நான், 'ஆலைத்துணிகளுடன் கதர் போட்டியிட முடியாது என்று பொருளாதார வல்லுனர்கள் கூறுகிறார்களே, ஆகவே கதர் தொடர்ந்து நீடிக்குமா?' என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்ன விடை இன்றும் என் நினை வில் உள்ளது. 'மிகுந்த செலவில் கட்டப்பெற்ற பெரிய ஆலயங் கள் இங்கே உள்ளன. அவை பொருளாதார அடிப்படையில் நிர் வகிக்கப்படுவதில்லை; மாறாக, பக்தர்களின் நம்பிக்கையாலும், தியாகத்தாலுமே நிர்வகிக்கப்படுகின்றன. ஏனென்றால் மனித வாழ்க்கையின் இன்றியமையாத் தேவையை அவை நிறைவுசெய் கின்றன. ஆகவே பொருளாதாரம் என்பது எல்லாமும் ஆகிவிட முடியாது. லட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கக் கதர் வழிவகுக்குமானால், தியாகம் செய்தாவது கதரை மக்களிடம் பரப்பவேண்டும்'.

சௌரி சௌரா படுகொலை நிகழ்ச்சிக்குப்பின் ஒத்துழையாமை இயக்கம் நிறுத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்துவந்த ஆண்டு களில் நாட்டின் அரசியல் நடவடிக்கைகளில் ஒரு தேக்க நிலை இருந்த சமயத்தில் நிர்மாணத்திட்டங்களில் கவனம் செலுத்தப் பட்டது. 1929ஆம் ஆண்டில் நடந்த லாகூர் காங்கிரஸ் மாநாட் டில் சுதந்திர இயக்கம் புதிய வேகம் பெற்றது.

லாகூர் காங்கிரஸ் மாநாட்டில், 'பூர்ண சுதந்திரமே' இந்திய தேசியக் காங்கிரசின் குறிக்கோள் என்று பிரகடனப்படுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1930 ஆம் ஆண்டுத் தொடக்கத்தின் நள்ளிரவில் 'இன்குலாப் ஜிந்தாபாத்', 'புரட்சி வாழ்க' என்ற பேரொலிகளுடன் இந்திய மூவர்ணக் கொடி ஏற்றப் பட்டது. அந்த ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் நாடு முழுதும் நடந்த பெருந்திரளான பொதுக்கூட்டங் களில் கீழ்க் கண்டவாறு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

> ''மற்ற நாட்டு மக்களைப்போலவே இந்திய மக்களுக்கும் சுதந்திரம் பெறவும், தங்கள் உழைப்பின் பயனை அனுபவிக்கவும் முழு உரிமை உண்டு. ஆங்கிலேய அரசு இந்திய மக்களின் சுதந்திரத்தைப் பறித்து, பாமர மக்களைச் சுரண்டியதோடு, இந்தியாவின் பொருளாதாரம், அரசியல், கலாச்சாரம், ஆன்மிகம் ஆகிய அனைத்தையும் அழித்து விட்டது. எனவே இந்தியா, ஆங்கிலேயருடன் உள்ள தொடர் பினை முற்றுமாக அறுத்துக்கொண்டு முழுச்சுதந்திரம் பெறுவ தற்கு வன்முறை சிறந்த வழியாகாது. எனவே நம் சினத்தைத் தூண்டிவிடும் நிலையிலும், வரிகொடா இயக்கம் உள்ளிட்ட சட்ட மறுப்பு இயக்கத்தை (Civil disobedience) நடத்துவோ மானால் மனிதப் பண்பற்ற இந்த அந்நிய ஆட்சியின் முடிவு நிச்சயம் என்று நாங்கள் நம்புகிறோம். எனவே காங்கிரஸ் எங்களுக்கு அவ்வப்போது விதிக்கும் கட்டளைகளை ஏற்று முழுச் சுதந்திரம் பெறப் பாடுபடுவோம்''.

இந்த உறுதிமொழியைப் பின்பற்றிக் காந்தியடிகள் நாடெங் கிலும் பல பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார். அவரது பேச்சு ஆயிரக்கணக்கான உள்ளங்களைத் தட்டியெழுப்பி, மக்களை அஹிம்சை முறையிலான போராட்டத்தில் ஆண்மையுடன் ஈடுபடச்செய்தது. குஜராத் வித்யாபீட மாணவர்களுக்கு உரை நிகழ்த்தும் போது அவர் கூறினார்:

> ''நீங்கள் மரணபயத்தை விட்டுவிடவேண்டும். இந்திய சுதந்திர வரலாறு எழுதப்படும்போது, எண்ணற்ற கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களின் பெயர்கள் அதில் இடம்பெறும். அவர்கள் வன்முறையில் ஈடுபட்டு உயிர்துறக்கவில்லை; ஆனால் வன்முறையைத் தாங்கிக்கொண்டு உயிர்விட்டார்கள் என்ற விவரம் அதில் குறிக்கப்படும். ஒருவனது தற்காப்பிற்கு, பிறரைக் கொல்வதற்குத் தேவையான அளவிற்குப் பலம் தேவையில்லை. இறப்பதற்கே ஒருவனுக்கு வலிமை தேவை. சாவதற்குத் தயாராக உள்ள மனிதன், வன்முறையில் ஈடுபடச் சிறிதும் விரும்பமாட்டான். இதயத்தில் தைரியத்துடனும், உதடுகளில் கருணையுடனும், இறப்பதன் மூலம் தங்கள் எதிரி களின் கொடிய உள்ளங்களையும் மாற்றியவர்களைப்பற்றிய வரலாறுகள் பல உண்டு''.

1930 பிப்ரவரி 27 அன்று வெளியிடப்பட்ட 'யங் இந்தியா' (Young India) இதழில் காந்தியடிகள், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடும் காங்கிரஸ் தொண்டர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப் பாட்டு விதிகளைக் கூறியுள்ளார்.

''சத்யாக்கிரகி சினம் கொள்ளக்கூடாது. மாறாக, மற்றவர் களின் சினத்தைத் தாங்கிக்கொள்ள வேண்டும். மற்றவர்களின் தாக்குதல்களைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்; ஆனால் திருப்பித் தாக்கக்கூடாது. ஆனால், தண்டனைபற்றிய அச்சத் தினாலோ, இதுபோன்ற வேறு காரணத்திற்காகவோ, முறை யற்ற எந்த ஆணைக்கும் அடிபணியக் கூடாது. எக்காரணம் கொண்டும் மற்றவர்களைத் தூற்றவோ, பழிவாங்கும் சொற் களைக் கூறவோ கூடாது. தன்னைக் கைதுசெய்யும்போது தடுக்கவோ, தன் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதை எதிர்க்கவோ கூடாது. ஆனால் பொதுச் சொத்துக்குத் தான் பொறுப்பாக இருக்கும்போது அதைச் சரண்செய்யக் கூடாது. அதனைக் காப்பதற்குத் தன் உயிரைக் கொடுக்கவும் தயங்கக் கூடாது. சிறைவாசம் அனுபவிக்கும்போது கண்ணியமாய் நடந்து கொள்ளவேண்டும். கருத்து வேறுபாடுகள் வந்து, தன் பொறுப்பை ராஜினாமாச் செய்யும் நிலைவரும் போது, தலை வர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும்.''

உப்புச் சட்டத்தை மீறுவதன் மூலம் சட்ட மறுப்பு இயக் கத்தைத் தொடங்க முடிவு செய்யப்பட்டது. 1930 மார்ச் 2 ஆம் நாள் காந்தியடிகள் தம் முடிவு பற்றிய இறுதிக் கடிதத்தை அரசப் பிரதிநிதிக்கு எழுதினார். சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கு வதற்கான காரணத்தை அதில் குறிப்பிட்டிருந்தார். உப்புச் சட்டத்தைக் காந்தியடிகள் மீறினால், சட்டத்தை மீறிப் பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாகக் கருதப்படும் என்று அரசப் பிரதிநிதி பதில் கூறினார்.

ஆயினும் உப்புச் சட்டத்தை மீறி 1930 மார்ச் 12 ஆம் நாள் புதன்கிழமையன்று தண்டியாத்திரை தொடங்கிற்று.

மார்ச் 9 ஆம் நாள் சுமார் 75000 பேர் அடங்கிய பெரியதொரு பொதுக் கூட்டம் அகமதாபாத் நகரில் நடைபெற்றது. அக்கூட்டத் தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ''நாடு சுதந் திரம் பெறும் வரை நாங்கள் ஓயமாட்டோம். இந்திய விடுதலை, உண்மையிலும், அகிம்சையிலும்தான் உள்ளது என்று நாங்கள் உளமார நம்புகிறோம். உப்புச் சத்தியாக்கிரகத்தின் முதல் குழுவில் இருந்தவர்கள் அனைவரும் காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமத்தைச்

சேர்ந்தவர்கள். இவர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆசிரமத்திற்கு வந்து தங்கியிருந்தவர்கள். அவர்கள் 16 வயது முதல் 61 வயதுவரை பலதரப்பட்ட வயதினர். அனைவரிலும் மூத்தவர் காந்தியடிகள். தண்டியாத்திரை தொடங்குமுன் காந்தியடிகள் கீழ்க்கண்ட செய்தியை வழங்கினார்:

''நாம் அனைவரும் கைது செய்யப்பட்டபோதிலும், அணுவளவுகூட அமைதிக்குப் பங்கம் விளையக்கூடாது. முழுக்க முழுக்க அஹிம்சா முறையில் நடைபெறும் இந்த முயற்சிக்கு நம் சக்திகள் அனைத்தையும் திரட்டியுள்ளோம். கோபத்தில் யாரும் எந்தவிதத் தவற்றையும் செய்துவிடக்கூடாது. இது தான் என் வேண்டுகோள். என் சொற்கள் இந்த நாட்டின் மூலை முடுக்குகளையெல்லாம் சென்று அடையவேண்டும். நானும் என் தோழர்களும் இறந்தால் கூட இப்பணி நடந்தே தீரும்.

''நான் கைது செய்யப்பட்டால் எனக்கும் காங்கிரசுக்கும் உள்ள தொடர்பு அற்று விடும். அவ்வாறான சூழ்நிலையில் தொண்டர்களின் எண்ணிக்கை குறையக் கூடாது. உப்புச் சட்டத்தை மீறும் சத்தியாக்கிரகங்கள் நாடெங்கும் தொடங்கப்பட வேண்டும். உப்புச் சட்டத்தை மீற மூன்று வழிகள் உண்டு. உப்புத் தயாரிக்க வசதிகள் இருக்கும் இடங்களில் உப்பு தயாரிப்பது குற்றமாகும். சட்டத்திற்குப் புறம்பாகத் தயாரிக்கப்பட்ட கடல் உப்போ, தரை உப்போ வைத்திருப்பதும் சட்டப் படிக் குற்றமாகும். இத்தகைய உப்பை வாங்குவதும் குற்றமாகும். அதேபோல் கடற்கரையில் உள்ள இயற்கை உப்பை எடுத்துச் செல்வதும் சட்டத்தை மீறுவதாகும். இதே போன்று தரை உப்பை எடுப்பதும் குற்றமாகும். இந்த வழிகளில் ஏதேனும் ஒன்றை அல்லது அனைத்தையும் பின்பற்றி நீங்கள் சட்டத்தை மீறலாம்.

''பெரும் பணியில் ஆங்காங்கே ஈடுபடும் தொண்டர்கள் தங்கள் தலைவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். இத்தகைய தலைவர்கள் இல்லாத பகுதியில் உள்ள தொண்டர்கள் சுயக்கட்டுப்பாட்டுடனும், தன்னம்பிக்கையுடனும் செயல்பட வேண்டும். அரசாங்கம் கைது செய்யும் தொண்டர்களின் எண்ணிக்கை பெருகும் அளவுக்கு மேலும், நம்பிக்கையும் இதயத்துடிப்பும் கொண்ட தொண்டர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

''இதை என் மரணசாசனமாக எடுத்துக் கொள்ளுங்கள். உப்பு யாத்திரைக்கு அல்லது சிறைக்குச் செல்லுமுன் நான்

உங்களுக்குக் கூறவிரும்பிய செய்தி இதுதான். நாளை காலை தொடங்கவிருக்கும் இந்தப் போராட்டத்தை ஒத்திப் போடுவதோ நிறுத்துவதோ ஒரு போதும் இல்லை. என் தலைமையில் உள்ள குழுவினர் கைது செய்யப்பட்டால், மேலும் பத்துக் குழுக்கள் ஆயத்தமாக உள்ளன என்ற நற்செய்தி எனக்கு வரவேண்டும். என்னால் தொடங்கப்படும் இப் பெரும் செயலை முடிக்க எண்ணற்ற இந்தியர்கள் தயாராக உள்ளனர் என்று நான் நம்புகிறேன். நம் குறிக்கோளின் நியாயத்திலும், அதையடைய நாம் பயன்படுத்தும் கருவியின் தூய்மையிலும் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. நாம் மேற்கொள்ளும் வழி தூய்மையாக இருந்தால், கடவுளின் அருள் என்றும் நமக்கு இருப்பது உறுதி.''

ஏப்ரல் மாதம் 5-ஆம் நாள் அவர் தண்டியை அடைந்தார். வழி நெடுகிலும் கிராமங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரைத் தரிசிக்கவும், ஆண்மையும் வேகமும் நிரம்பிய அவரது அருள்மொழிகளைக் கேட்கவும் குழுமியிருந்தனர். ஏப்ரல் 6-ஆம் நாள் நடைபெற்ற காலை வழிபாட்டுக் கூட்டத்தில் அவர், தம் கைதுக்குப்பின் போராட்டத்தை நடத்த, திரு. அப்பாஸ் தியாப்ஜி, திருமதி. சரோஜினி நாயுடு ஆகியோரை நியமித்தார். பிரார்த்தனை முடிந்ததும் அவர் கடலில் நீராடச் சென்றார். காலை 8-30 மணிக்குக் கீழே குனிந்து தம் கைகளால் உப்பை எடுத்து, உப்புச் சட்டத்தை மீறினார். இவ்வாறு உப்பை அள்ளி நாடு முழுவதும் சுதந்திரப் போரைத் தொடங்கி வைத்தார் அவர். மே மாதம் 4-ஆம் நாள் அவர் ஒரு புதுமையான முறையில் கைது செய்யப்பட்டார். அன்று நள்ளிரவில் 12-15 மணிக்கு, சூரத் மாவட்ட நீதிபதியும் இரண்டு போலீஸ் அதிகாரிகளும் ஏறக்குறைய முப்பது போலீஸ்காரர்களும் குழல் துப்பாக்கிகளுடன், தண்டியிலிருந்து மூன்று மைல் தொலைவில் காந்தியடிகள் தங்கியிருந்த அமைதியான கராடி முகாமிற்குள் திடீரென்று நுழைந்தனர். அவர் தங்கியிருந்த குடிசையை அவர்கள் சூழ்ந்து கொண்டனர். அந்த பிரிட்டிஷ் அதிகாரி காந்தியடிகளின் படுக்கையருகில் சென்று அவர்மேல் டார்ச் விளக்கின் ஒளியைப் பாய்ச்சி, ''நீங்கள்தானா மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி?'' என்று கேட்டான். ''என்னைத்தான் தேடுகிறீர்களா? தயவு செய்து எனது காலைக் கடன்களை முடிக்க எனக்குச் சற்று அவகாசம் கொடுங்கள்'' என்று மெல்லிய குரலில் காந்தியடிகள் கேட்டார். காந்தியடிகள் பல் துலக்கிக் கொண்டிருந்தபோது, கையில் கடிகாரத்தை வைத்துக் கொண்டு அந்த அதிகாரிகள் அவரையே கவனித்துக் கொண்டிருந்தனர். தொண்டர்கள் காந்தியடிகளின் அருகில்

வந்தனர். அவர்கள் காந்தியடிகளை நெருங்க விடாமல் போலீசார் அவரைச் சுற்றி நின்று கொண்டனர். ஆனால் உடனே விலகிக் கொண்டு, தொண்டர்களை அனுமதித்தனர். அப்பொழுது இரவு மணி ஒன்று. காந்தியடிகள் தம் தேவைக்கான பொருள்களை எடுத்துக் கொண்டு, தாம் எழுதி வைத்திருந்த தாள்களைத் தொண்டர்களிடம் கொடுத்தார். ''அன்பு கூர்ந்து எனக்குப் பிரார்த்தனை செய்யச் சிறிது நேரம் அவகாசம் கொடுங்கள்'' என்று அந்த அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார். தமக்கு மிகவும் விருப்பமானதும் தண்டி யாத்திரை தொடங்கும் போது பாடப்பட்டதுமான, 'வைஷ்ணவ ஜனதோ' பாடலைப் பாடுமாறு திரு. கரே என்பவரைக் கேட்டுக் கொண்டார். பாடலைப் பாடும் போது காந்தியடிகள் எழுந்து நின்று தம் விழிகளை மூடிச் சிரம் தாழ்த்திப் பிரார்த்தனை செய்தார். அதன்பின் தொண்டர்கள் அனைவரும் அவரது அடிபணிந்து வணங்கி அன்புடன் விடை கொடுத்தனர். இரவு 1-30 மணிக்குக் காந்தியடிகளை லாரி ஒன்றில் ஏற்றி ஏரவாடா சிறைக்குக் கொண்டு சென்றனர். ''நள்ளிரவில் அவர்கள் திருடர்களைப் போல் வந்து காந்தியடிகளைக் கவர்ந்து சென்றனர். அவர் மேல் கரம் பட்டால், கோடானுகோடி மக்கள் கொதித்தெழுவார்கள் என்ற அச்சத்தால் அவர்கள் அவ்வாறு செய்தனர்'' என்று மீராபென் கூறினார்.

உப்புச் சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து நடத்த, காந்தியடிகளால் நியமிக்கப்பட்ட திரு. அப்பாஸ் தியாப்ஜி (குஜராத் உயர் நீதி மன்ற முன்னாள் நீதிபதி) உப்பு யாத்திரையைத் தொடங்கக் கராடியில் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். 1930 மே 11-ல் அவருக்கு ஓர் எச்சரிக்கை வந்தது. அவர் மேற்கொள்ளவிருந்த போராட்டத்தினால் ஏற்படக்கூடிய கடுமையான விளைவுகளைப் பற்றிச் சிந்திக்குமாறு அந்த எச்சரிக்கை கூறியது. அடுத்த நாள் யாத்திரையைத் தொடங்கத் தொண்டர்கள் அணிவகுத்துத் தயாராக இருந்தனர். ஆனால் அவர்கள் சிறிது தூரம் சென்றதும் திரு. தியாப்ஜியும் மற்றவர்களும் கைது செய்யப்பட்டனர்.

தியாப்ஜியைத் தொடர்ந்து திருமதி. சரோஜினி நாயுடு போராட்டத்திற்குத் தலைமை தாங்கினார். மே 21-ல் அவர் 2000 தொண்டர்களுடன் தரசனா என்னும் இடத்திலுள்ள உப்பு மண்டியை முற்றுகையிட்டபோது அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். அவர் கைது செய்யப்படுமுன் தம் தொண்டர்களுடன் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றை நடத்தினார். அக்கூட்டத்தில் அவர் கூறியதாவது : ''காந்தியடிகளின் உடல்

மட்டும்தான் சிறையில் உள்ளது, அவரது ஆன்மா உங்களுடன் உள்ளது. இந்தியாவின் கௌரவம் உங்கள் கையில்தான் உள்ளது. எந்தவொரு சூழ்நிலையிலும் நீங்கள் வன்முறையில் இறங்கக் கூடாது. நீங்கள் அடிபடலாம்; ஆனால் அதனைத் தடுக்கக் கூடாது. உங்கள் மீது விழும் அடிகளைத் தடுக்க உங்கள் கைகளைக் கூட உயர்த்தக் கூடாது.''

காந்தியடிகளின் மகன் மணிலால் தலைமையில் சத்தியாக்கிரகிகளின் கூட்டம் உப்பளங்களை நோக்கிச் சென்றது. உப்பளங்களைச் சுற்றிலும் முட்கம்பி வேலியும் நீர் நிறைந்த பள்ளங்களும் அமைக்கப்பட்டிருந்தன. நானூறு போலீஸ்காரரும். பிரிட்டிஷ் அதிகாரிகள் ஆறு பேரும் கடுமையாகக் காவல் காத்து நின்றனர். போலீஸ்காரர்கள் கைத்தடிகளையும் இரும்புப் பூண் போட்ட கனத்த தடிகளையும் வைத்திருந்தனர். வேலியின் உட்புறம் துப்பாக்கி ஏந்திய இருபத்தைந்து காவலர்கள் தயாராக இருந்தனர். அமைதியாக அணிவகுத்துச் சென்ற தொண்டர்களின் மேல் என்றும் காணாத அளவில் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் தொடங்கிற்று. இதனை நேரில் கண்ட, அமெரிக்கப் பத்திரிகையாளர் திரு. மில்லர் கூறுவது:

''வேலியிலிருந்து சுமார் நூறு கெஜ தூரத்திலிருந்து, அஞ்சாமைமிக்க சத்தியாக்கிரகிகள் அணிவகுத்து முன்னேறினர். தண்ணீர் நிரப்பப்பட்ட பள்ளங்களைக் கடந்து முட்கம்பி வேலியை நெருங்கினர். அவர்களைக் கலைந்து செல்லுமாறு போலீஸ் அதிகாரிகள் ஆணையிட்டனர். இந்த ஆணையை மீறித் தொண்டர்கள் மெதுவாக முன்னேறினர். திடீரென்று அவர்களைத் தாக்குமாறு ஆணை வந்தது. உடனே எண்ணற்ற போலீஸ்காரர்கள் தொண்டர்களை நோக்கி வந்து இரும்புப் பூண் போட்ட தடிகளினால் அவர்களின் தலைகளின் மேல் கண்மூடித்தனமாகத் தாக்கினார்கள். தொண்டர்களில் ஒருவர் கூடத் தங்கள் மீது விழும் அடிகளைத் தடுக்கத் தங்கள் கைகளை உயர்த்தவில்லை. அடிபட்ட தொண்டர்கள் அடுக்கடுக்காகத் தரையில் சாய்ந்தனர். நான் இருந்த இடத்திலிருந்து இந்தக் கொடூரமான அடிகளின் சத்தத்தைக் கேட்டேன். இந்தக் கொடுமையைப் பார்த்துக்கொண்டிருந்த கூட்டமான மக்கள் துயரம் தாங்காது கதறினர். அடிபட்டவர்கள் மயங்கி விழுந்தனர். மண்டைகள் பிளந்து எலும்புகள் நொறுங்கக் கீழே சாய்ந்த தொண்டர்கள் வலியால் துடித்தனர். ஓரிரு நிமிடங்களில் உடல்கள் தரையை நிரப்பின. தொண்டர்களின் வெண்மையான உடைகளில் செங்குருதித் திட்டுகள் நிரம்பின. பிழைத்திருந்தவர்கள் அடிபட்டுச் சாயும் வரை அமைதியாக முன்னேறினர்.

''முதல் அணி அடிபட்டு விழுந்தவுடன் அடுத்த அணி முன்னேறியது. ஒரு சில நிமிடங்களில் தாங்களும் அடிப்பட்டுச் சாய்வது அல்லது சாவது உறுதியென்று தெரிந்திருந்தும் ஒருவர் கூட பயந்து பின் வாங்கியதை என்னால் காண முடியவில்லை. அனைவரும் தலை நிமிர்ந்து முன்னேறிச் சென்றனர். இரண்டாவது அணியையும் போலீஸ்காரர்கள் தங்களுக்கே உரிய கொடூரமான முறையில் ஈவு இரக்கமின்றி அடித்து வீழ்த்தினர், எந்தவித எதிர்ப்புமின்றி, எந்தவிதச் சலனமும் இன்றித் தொண்டர்கள் அடிபட்டு வீழும் வரை முன்னேறிச் சென்றனர். அடிபட்டவர்கள் பெரிதாகக் கதறவில்லை; வலியைபொறுக்க இயலாத முனகல்கள் மட்டுமே அவர்களிடம் வெளிப்பட்டன. அடிபட்டு விழுந்தவர்களை எடுத்துச் செல்லப்போதிய அளவு ஆட்கள் இல்லை. அடிபட்டவர்களில் 18 பேர் மட்டுமே உடனே எடுத்துச் செல்லப் பட்டனர். மற்ற 42 பேரும் தரையில் ரத்தம் சிந்திய நிலையில் கிடந்தனர்.

''அதற்குப்பின் தொண்டர்கள் தம் முறையை மாற்றிக் கொண்டனர். இருபத்தைந்து தொண்டர்கள் மட்டும் முன்னேறி, தங்கள் முறைக்காக அமர்ந்தனர். அவர்களின் மேல் போலீஸ்காரர்கள் தடியடிப் பிரயோகம் செய்தனர். மண்டை பிளந்து அவர்கள் தரையில் சாய்ந்தனர். இவ்வாறு தொண்டர்கள் குழுக் குழுவாகச் சென்று அமர்ந்து தடியடிபட்டு வீழ்ந்தனர். தங்களின் தடியடிக்குத் தொண்டர்களிடமிருந்து எள்ளளவும் எந்தவித எதிர்ப்பும் இல்லாததால் போலீஸ்காரர்களின் சினம் அதிகரித்தது. அமைதியாக அமர்ந்திருந்த தொண்டர்களின் அடி வயிற்றிலும், பீஜங்களிலும் போலீஸ்காரர்கள் காட்டு மிராண்டித்தனமாக எட்டி உதைத்தனர். வலிதாங்க முடியாமல் தொண்டர்கள் துடித்துத் துவண்டனர். இதனால் போலீஸ்காரர்களின் கோபம் அளவு கடந்தது. தொண்டர்களின் கை கால்களைப் பிடித்து மூர்க்கத் தனமாக இழுத்துச் சென்று பள்ளங்களில் எறிந்தனர். அவர்களில் ஒருவர் நான் நின்றிருந்த இடத்தின் அருகில் இருந்த பள்ளத்தில் வீசப்பட்டார். அதனால் வாரியிறைக்கப்பட்ட சேற்றுத்தண்ணீர் என் உடலை நனைத்தது. மற்றொரு தொண்டரைப் போலீஸ் காரர் ஒருவர் இழுத்து வந்து பள்ளத்தில் போட்டு அவர் தலையைத் தடியால் நொறுக்கினார்.''

முற்பகல் பதினொரு மணிக்கு அனைத்தும் முடிந்து விட்டன. தற்காலிகமாக அமைக்கப்பட்ட மருத்துவமனைக்கு மில்லர் சென்று அடிபட்டுக்கிடந்த தொண்டர்களைப் பார்த்தார். மொத்தம் 320 தொண்டர்கள் அங்குப் படுத்திருந்தனர். அப்பொழுதும் சிலருக்கு

நினைவு திரும்பவில்லை. சிலர் தாங்க முடியாத வலியால் துடித்துக் கொண்டிருந்தனர். அடிபட்ட தொண்டர்களுக்கு நீண்ட நேரம் சிகிச்சை கொடுக்காததால் அவர்களுள் இருவர் இறந்து விட்டனர். இதைப்பற்றிச் செய்தித்தாள்களுக்கு மில்லர் அறிக்கை அனுப்புவதைத் தடுக்க அரசாங்கம் எல்லாவித முயற்சியும் செய்தது. ''கடந்த பதினெட்டு ஆண்டுக்காலமாக நான் பத்திரிகை நிருபராக இருபது நாடுகளில் பணியாற்றிய அனுபவத்தில், எத்தனையோ உள் நாட்டுக் கலவரங்களையும், கலகங்களையும், தெருச் சண்டைகளையும், போராட்டங்களையும் கண்டிருக்கிறேன். ஆனால் தர்சனாவில் நிகழ்ந்த இதைப்போன்ற, உள்ளத்தை உலுக்கும் பயங்கரக் காட்சியை வேறு எங்கும் கண்டதில்லை'' என்று மில்லர் குறிப்பிட்டார். மில்லர் தெரிவித்த இச்சோகக்கதை 1850 செய்தித்தாள்களில் வெளியான போது உலகம் முழுதும் பெரியதொரு பரபரப்பு ஏற்பட்டது.

1930 மே 5-ஆம் நாள் நான் உதகை ராமகிருஷ்ண ஆசிரமத்தில் இருந்தேன். நண்பகல் உணவு முடிந்ததும் ஆசிரமத்தின் முன் பக்கத் திண்ணையில் நாங்கள் அன்றைய செய்தித்தாளைப் படித்துக் கொண்டிருந்தோம். செய்தித்தாளின் முதல் பக்கத்தில் ஏழு பத்திகளை உள்ளடக்கிய தலைப்புச் செய்தியாகப் பெரிய எழுத்துக்களில் ''காந்தியடிகள் கைது செய்யப்பட்டார்'' என்ற செய்தி இருந்தது. அதற்குமுன் பலமாதங்களாகவே சுதந்திரப் போராட்டம் பற்றிய செய்திகளை நான் படித்து வந்தேன். உப்புச் சத்தியாக்கிரகத்தில் தொண்டர்கள் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்ட செய்தி வந்தபோது, தேசத்தின் அழைப்பை என்னால் மறுக்க இயலவில்லை. சுவாமி சித்பவானந்தரிடமும், ஆசிரமத்திலிருந்த மற்ற சாதுக்களிடமும் விடை பெற்றுக் கொண்டு நான் கோவைக்கு வந்தேன். காங்கிரஸ்காரர்கள் யாரையும் எனக்குத் தெரியாது; காங்கிரஸ் அலுவலகம் எங்கிருக்கிறது என்றும் எனக்குத் தெரியாது. அந்த அலுவலகத்தைக் கண்டுபிடித்து, நான் காங்கிரஸ் உறுப்பினர் ஆக இயலுமா என்று கேட்டேன். அந்தச் சமயத்தில் காங்கிரஸ் உறுப்பினரானால் சுதந்திரப் போராட்டத்தில் குதித்து சிறைவாசம் போன்ற எண்ணற்ற இன்னல்களை அடைய வேண்டியது அவசியமாயிருந்தது. அங்கு நான் திரு. C. B. சுப்பையா அவர்களைச் சந்தித்தேன். உறுப்பினர் ஆவதற்குரிய விண்ணப்பப் படிவத்தை அவர் எனக்குக் கொடுத்தார். அவரும் திரு. K. சுப்பிரமணியம் அவர்களும் என்னுடன் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள்.

என்னுள் தீவிரப்பட்டிருந்த சுதந்திர வேட்கையைப் புரிந்து கொள்ளாத என் தந்தையும், தாயாரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். சுதந்திர இயக்கத்தில் ஈடுபடுவதால் நல்லதொரு வழக்கறிஞர் தொழிலை நான் இழந்து விடுவேன் என்று என் நண்பர்கள் கூறினர். உடனடியாக, கோவை நகர காங்கிரஸ் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அதன் தலைவராகப் பொறுப் பேற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பின்னர், கோயமுத்தூர் மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் நான் தேர்ந் தெடுக்கப்பட்டேன். சுதந்திரப் போராட்டக் காலம் முழுவதும் இப்பொறுப்பை நான் வகித்தேன். ஜூலை 5 ஆம் நாள் நானும் T. ராகவாச்சாரியும் வாலாங்குளத்தில் உப்புக் காய்ச்சினோம். அதற்கு அடுத்த நாள் நாங்கள் இருவரும் கைது செய்யப்பட்டோம். திரு. C. B. சுப்பையா, திரு. K. சுப்ரி மற்றும் நூற்றுக்கணக்கான கோவைத் தொண்டர்கள் எங்களைத் தொடர்ந்தனர். தமிழ் நாட்டின் மற்ற மாவட்டங்களிலும், இந்தியா முழுதும் சத்தியாக் கிரகங்கள் நடந்தன. அப்போது நாங்கள் ஆறுமாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை பெற்றோம். முதலில் நாங்கள் கோவை மத்தியச் சிறையிலும், பின்னர் வேலூர் மத்தியச் சிறையிலும் காவலில் வைக்கப்பட்டோம்.

கோவை மாவட்டத்திலிருந்து சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக என்னோடு தோளோடு தோள் கொடுத்துப் போராடியவர்களுள் கோவையைச் சேர்ந்த திருவாளர்கள் C. B. சுப்பையா, K. சுப்ரி, N. சுப்பிரமணிய அய்யர், C. சுப்பிரமணியம், T. ராகவாச்சாரி; கோபியைச் சேர்ந்த திருவாளர்கள் K. K. சுப்பண்ண கவுண்டர், R. S. ஸ்ரீகண்டய்யர், சாமிக் கவுண்டர், திரு. G. S. லட்சுமணன், ஈரோட்டைச் சேர்ந்த திருவாளர்கள், M. A. ஈஸ்வரன், K. S. ராமசாமிக் கவுண்டர், R. M. மகுடபதி, K. S. பெரியசாமி; தாராபுரத்தைச் சேர்ந்த திரு. வடிவேல்; பல்லடத்தைச் சேர்ந்த திரு R. M. குமாரசாமிக் கவுண்டர்; உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த திரு வேலப்ப நாயுடு; பவானியைச் சேர்ந்த திருவாளர்கள் P. K. நல்லசாமி, ரங்கசாமி ரெட்டியார் ஆகியவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

இவர்களுள் மூவரின் தனிச்சிறப்பான, சுதந்திர இயக்கப் பணியை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். திரு. C. B. சுப்பையா ஒரு சிறந்த மக்கள் தலைவர். அவரது நல்லொழுக்கமும் அவர் நாட்டுக்காகச் செய்த தியாகமும் குறிப்பிடத் தகுந்தவை. அவருக் கிருந்த மிகச் சிறந்த திறமை, சுதந்திர இயக்கத்தைப்பற்றிப் பொது மக்களுக்கு, அவர்களுக்கு ஏற்ற மொழியில் எடுத்துக்கூறும் அற்புத மான பேச்சாற்றலாகும். நகைச்சுவை கலந்து கண்ணியத்துடன்

மக்களைக் கவரும் வகையில் சொற்பொழிவாற்ற வல்லவர். அவரது அருமையான பேச்சுக்களால் கவரப்பட்டு இந்த மாவட்டத்தின் மூலை முடுக்குகளில் இருந்த ஆயிரக்கணக்கானவர்கள் சுதந்திரப் போரில் ஈடுபட்டனர்.

'சுப்ரி' என்று அன்புடன் அழைக்கப்பட்ட திரு K. சுப்பிரமணியம் இன்றும் நம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பவர். சுப்ரியின் தந்தை ஒரு புகழ்மிக்க வழக்கறிஞர். தம் அண்ணனைப் போலவே திரு சுப்ரியும் ஒரு வழக்கறிஞராக வந்திருக்க முடியும். அவரது குடும்பம் பெரியது. இருப்பினும் நாட்டு விடுதலைக்காக உழைக்க அவர் அனைத்தையும் துறந்தார். அப்பழுக்கற்ற ஒழுக்க சீலரும் மன உறுதி படைத்தவருமான அவர் இந்த மாவட்டத்தின் சுதந்திர இயக்கத்தின் ஒப்பற்ற தொண்டராக விளங்கினார். தம் மனைவி, குழந்தை உட்படத் தம் குடும்பத்தினர் அனைவருடனும் சிறை சென்ற தனிப்பெருமை அவருக்கு உண்டு. தற்பொழுது அவர் அரசியலிலிருந்து விலகி, பக்திப்பாடல்கள் இயற்றும் கவிஞராக வாழ்ந்து வருகிறார். K. K. சுப்பண்ண கவுண்டர் ஓர் அபூர்வ மனிதர். அவர் பெரும் செல்வந்தர்; செல்வாக்கு மிக்கவர். ஆனால் அமைதியானவர்; கண்ணியமானவர்; எளிமையானவர். திரு K. K. சுப்பண்ண கவுண்டர், திரு R. S. ஸ்ரீகண்டய்யர், திரு P S. நல்லாக்கவுண்டர் ஆகிய மூவரும் சேர்ந்து, கோபி தாலுகா முழுவதையும் சுதந்திர இயக்கத்தில் ஈடுபடச் செய்தனர். அவருடன் அவர் மனைவியும் சிறை சென்றார். சுதந்திரத்திற்குப்பின் சில காலம் அவர் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். ஆனால் பிற்காலத்தில் அவர் தம் முழு நேரத்தையும் சமயப்பணியில் செலவழித்தார். அவரால் புனருத்தாரணம் செய்யப்பட்ட பவானி கோயில் அவரது தன்னலமற்ற தொண்டிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

இத்தகைய நூற்றுக்கணக்கான தொண்டர்களை நண்பர்களாகப்பெற்றது என் நற்பேறாகும். அவர்களுடைய அன்பு, விசுவாசம், ஒத்துழைப்பு ஆகியவற்றை என்றும் மறக்கமுடியாது.

பல ஆண்டுகளாகப் பல வழிகளிலும் பயன்மிக்கதாக அமைந்த என் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போது, எனக்கு மனநிறைவும், ஆழ்ந்த அனுபவமும் கொடுத்த ஆண்டுகள் நான் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட ஆண்டுகளே என்பதை உணர்கிறேன்.

சுதந்திரப் போராட்டத்தில் விளைந்த நன்மைகள் எண்ணில. முதலாவதாக, அது இந்திய மக்களுக்கும், இந்திய நாட்டிற்கும் சேவையின் இன்பத்தைக் கொடுத்தது. ''வெற்றியில் இருக்கும்

மகிழ்ச்சியைக் காட்டிலும், அந்த வெற்றிக்காகப் பாடுபடும் முயற்சியிலும், சேவையிலுமே அதிக மகிழ்ச்சி இருக்கிறது''.

இரண்டாவதாக, பல நூற்றாண்டுகளாகச் சோர்வுற்றிருந்த இந்திய மக்களின் உள்ளத்தில் புதியதொரு நம்பிக்கையையும், ஆண்மையையும் அது வளர்த்துள்ளது. ஆயிரக்கணக்கான சிறுவர்களும் சிறுமியர்களும், ஆண்களும் பெண்களும் தமக்கென எதையும் கேட்காது நாட்டிற்காக உழைக்கின்ற மனப்பான்மையைப் பெற்றனர். தனிப்பட்டவர்களுக்கும், நாட்டிற்கும் புதியதொரு லட்சியத்தையும், புதியதொரு நம்பிக்கையையும், அளவற்ற வலிமையையும் கொடுத்துள்ளது.

அனைத்திற்கும் மேலாக, சுதந்திரப் போராட்டத்தின் ஒப்பற்ற ஆயுதங்களாக உண்மையையும், அகிம்சையையும் நாம் கொண்டது அரசியலையும், பொது வாழ்வையும் ஆன்மிகப்படுத்தியுள்ளது. இதுவரை உலகம் கண்டிராத புதுமையிது. நாடு முழுவதுமே உயர்ந்ததோர் அறநெறிக்கும், தன்னலமற்ற தொண்டிற்கும் தன்னை உயர்த்திக் கொண்டுள்ளது.

# 10. சிறை வாசம்

என் சிறை வாசம், வாழ்க்கையில் மறக்கவியலாத ஓர் அனுபவம் ஆகும். அங்கு வசதிகள் இல்லை; அத்தியாவசியத் தேவைகளும் கிடைக்கா. உற்றார் உறவினரைப் பிரிந்திருக்கும் பிரிவுத் துன்பம் இருந்தது. ஒருவர் தனியறையில் அடைக்கப்படும் பொழுது இவ்வேதனைகள் பொறுக்க முடியாதிருக்கும். தனியறைச் சிறைவாசம் என்பது, 8′×8′ அளவுள்ள சிறு அறையில் இரவும், பகலும் அடைக்கப்பட்டிருப்பதாகும். அதில், சிறுநீர், மலம் கழிக்கப் பானை ஒன்று வைக்கப்படும். இவ்வறை காலை, மதியம், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் உணவு கொடுப்பதற்காகவும், அங்குள்ள பானையைச் சுத்தம் செய்வதற்காகவும் திறந்து மூடப் படும். யாரையும் பார்க்கவோ, யாருடனும் பேசவோ முடியாது. 1932-ல் சட்ட மறுப்பு இயக்கத்தின்போது, எங்களில் சிலர் இவ்வாறு சிறு அறைகளில் தனியாக அடைக்கப்பட்டோம். அதன் கொடுமையைப் பொறுக்க முடியாது சிலர் அழுது, மன்னிப்புக் கேட்டு விடுதலை பெற்றனர். ஆனால் பலர் தங்கள் தன்மானத் தையும், நாட்டின் கௌரவத்தையும் காப்பாற்றவேண்டி, இந்த வேதனைகளை ஏற்றனர். பக்திப்பாடல்களை மனனம் செய்திருந் தவர்கள் அவற்றைப் பாடியும், இறைவனை நினைத்துத் தியானம் செய்தும் தங்கள் வேதனையை மறந்தனர்.

சிறை வாழ்க்கையால் பல நன்மைகளும் ஏற்பட்டன. பல அற்புத மனிதர்களைச் சந்தித்து அவர்களிடம் நட்புக் கொள்ளும் நல்வாய்ப்பு எனக்குச் சிறையில்தான் கிடைத்தது. சில நாட்கள் கழித்து, தாள், பேனா, நூல்கள் முதலியவற்றைப் பயன்படுத்திக் கொள்ள எங்களை அனுமதித்தனர். அதனால் நல்ல நூல்களை ஆழ்ந்து படிக்கவும், நற்கருத்துக்களைப் பற்றி எழுதவும் வாய்ப்புக் கிடைத்தது. திருக்குறள், கம்பராமாயணம், ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், சுவாமி விவேகானந்தரின் ஞான தீபம் போன்ற அற்புதமான நூல்களை ஆழ்ந்து படித்துச் சிந்திக்க எனக்கு அரிய வாய்ப்புக் கிடைத்தது. இவற்றுடன், மற்றும் பல பக்தி நூல்களையும் நான் படித்தேன். நாங்கள் அங்குப் பல

குழுக்களாகப் பிரிந்து திருக்குறள், இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் ஆகியவற்றில் வகுப்புகள் நடத்தினோம்.

அப்போதைய சென்னை மாகாணத்தில் தமிழ்நாடு, ஆந்திரா வைச் சேர்ந்த சர்க்கார் மற்றும் ராயல்சீமா பகுதிகள், கேரளாவின் மலபார் மாவட்டம், கர்நாடகத்தின் பெல்லாரி, தென் கன்னடப் பகுதிகள் அடங்கியிருந்தன. இப் பகுதிகளிலிருந்தும், குடகுப் பகுதியிலிருந்தும் பலர் எங்களுடன் சிறையில் இருந்தனர். இவர் களில் பலர் பிற்காலத்தில் சிறந்த அரசியல், சமூகத் தலைவர் களாகப் புகழ் பெற்றனர். இவர்கள் அனைவரிலும் தலைசிறந்தவர் இராஜாஜி அவர்கள். அவருடன் திரு. T. பிரகாசம், (இவர் பிற்காலத்தில் சென்னை ராஜதானி, ஆந்திரப் பிரதேசம் ஆகிய வற்றின் முதல் அமைச்சர் பொறுப்புக்களை வகித்தவர்) மதுரை யைச் சேர்ந்த திரு. A. வைத்தியநாத அய்யர், புகழ் பெற்ற பேச்சாளர் திரு. S. சத்தியமூர்த்தி, மங்களூரைச் சேர்ந்த கர்நாட் சதாசிவ ராவ், திரு. O. P. ராமசாமி செட்டியார், திரு. K. சந்தானம், சர்தார் A. வேதரத்தினம் பிள்ளை, திரு. V. V. கிரி, திரு. N. M. R. சுப்பராமன், திரு. M. பக்தவத்சலம், திரு. O. V. அழகேசன், திரு. P. S. குமாரசாமி ராஜா, திரு. L. கிருஷ்ணசாமி பாரதி, கொல்லப்பள்ளி திரு. சீதாராம சாஸ்திரி, திரு முத்னூரி கிருஷ்ணராவ், தென்னேட்டி திரு. விசுவநாதம், திரு. P. கோபால் ரெட்டி, திரு. T. சுப்பிரமணியம், திரு. U. கோபால மேனன், திரு. பூனாச்சா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர் களுள் திரு. N. M. R. சுப்பராமன், சர்தார் A. வேதரத்தினம் பிள்ளை, திரு. K. சந்தானம் ஆகியோர் என் வாழ்நாள் முழுதும் என் உற்ற நண்பர்களாக இருந்தார்கள். இவர்களைப் பற்றிப் பின்னர் விரிவாக அறியலாம்.

நாங்கள் சிறையிலிருந்தபோது நாடெங்கிலும் போராட்டம் கொழுந்து விட்டெரிந்தது. தலைவர்களைக் கைது செய்ததற்காக நாடு முழுதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. உப்புச் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டதற்காகவும், தடையுத்தரவை மீறியதற்காகவும் ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் சிறை சென்றனர். இவற்றுடன், நாடு முழுதும் அந்நியத்துணி பகிஷ்காரம், கள்ளுக் கடை மறியல் முதலியனவும் நடைபெற்றன. மாநிலத் தலைநகர் களில் ஆர்ப்பாட்டம் தீவிரமாக இருந்தது.

ஆரஞ்சு நிறக் கதர்ச் சேலையணிந்த பெண்கள் அந்நியப் பொருட்கள் விற்கும் கடைகளின் முன் மறியல் செய்தனர். யாரா வது கடைக்குள் நுழைய முற்பட்டால், பெண் தொண்டர் அவரது

கையைப் பிடித்து உள்ளே செல்ல வேண்டாமெனக் கெஞ்சிக் கேட்பார். அதனையும் மீறி அவர் உள்ளே செல்ல முயன்றால் குறுக்கே படுத்துத் தன் உடல் மீது நடந்து உள்ளே செல்லுமாறு கூறுவார். இதனால் பல கடைக்காரர்கள், அந்நியத் துணியையும், மதுவையும் தங்கள் கடைகளில் விற்பதில்லை என்று உறுதிமொழி கொடுத்தனர். பத்து வயதுக்கு மேற்பட்ட ஆயிரக் கணக்கான சிறுவர்கள் ஒன்று திரண்டு தங்களுக்குள் 'வானர சேனைகளை' ஏற்படுத்திக் கொண்டு ஆங்கிலப் பொருள் பகிஷ்காரத்திற்கு உதவினார்கள்.

இச்சமயத்தில் வைசிராய் இர்வின் பிரபு கூறினார்: ''சட்ட மறுப்பு இயக்கத்தை நாம் எவ்வளவு வேண்டுமானாலும் கண்டித்துக் கூறலாம்; ஆனால் இந்திய மக்களின் இதயங்களை இன்று ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் அதிதீவிரமான தேசிய உணர்ச்சியை நாம் குறைத்து மதிப்பிடுவதன் மூலம் பெரியதொரு தவற்றைச் செய்தவர்களாவோம்.''

1931 ஜனவரி 21-ல், சமரசப் பேச்சிக்காகக் காந்தியடிகளும், காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களும் விடுதலை செய்யப் பட்டனர். 26-1-1931 சுதந்திர தின முதலாண்டு நிறைவன்று நாடுமுழுவதும் மாபெரும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. சுதந்திர இயக்கத் தொண்டர்களின் தியாகங்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தின் சாரம்:

> ''நம் நாடு விடுதலை பெறவேண்டுமென்பதற்காகச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, எண்ணற்ற இன்னல் களை ஏற்றுத் தியாகங்கள் பலபுரிந்த லட்சக்கணக்கான இந்தியப் புதல்வர்களுக்கும், புதல்விகளுக்கும் இந்தியக் குடிமக்களாகிய நாம் நம் நன்றியுணர்வையும், பாராட்டுதல் களையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். நம் போராட்டத்திற்குரிய சிறந்த வழியைக்காட்டி, நமக்கு ஆர்வமும் உற்சாகமும் ஊட்டிய, அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய பெருந்தலைவர் மகாத்மா காந்தியடிகளுக்கு நம் நன்றியையும், கடப்பாட்டையும் தெரிவித்துக் கொள்கி றோம். சுதந்திர வேள்வியில் தம் உயிரைப் படையலாக வைத்த நூற்றுக்கணக்கான தியாக சீலர்களை நெஞ்சாரப் போற்றி வழிபடுகிறோம். அந்நியத்துணிகளையும், மற்ற ஆங்கிலப் பொருள்களையும் பகிஷ்காரம் செய்து, அதனால் சிறைபுகுந்து, எண்ணற்ற இன்னல்களை ஏற்ற இலட்சக்கணக்கான ஆண்

V44136ய AVI
31N1
INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION (DEEMED UNIVERSITY)
102229
LIBRARY

களுக்கும், பெண்களுக்கும் நம் இதயம் நிறைந்த நன்றி உரித்தாகுக. பேருக்கும் புகழுக்கும் ஆசைப்படாது, நாட்டின் சுதந்திரமே மூச்சாகக் கொண்டு அணுவளவும் மனம்தளராது, அமைதியுடன் துன்பங்களையும், துயரங்களையும் ஏற்று, சுத்த வீரனைப் போல் தியாகம் புரிந்த சாதாரணத் தொண்டனுக்கும் இந்த நாடு சிரம் தாழ்த்தி தன் நன்றிக்கடனைத் தெரிவித்துக் கொள்கிறது.

''நாட்டின் சுதந்திரத்திற்கு ஆபத்து வந்தபோது தங்கள் வீடு வாசலைத் துறந்து, அஞ்சாத நெஞ்சுடனும், தளராத உத்வேகத்துடனும் தங்கள் கணவன்மார்களுடன் தோளோடு தோள் கொடுத்து, அவர்களது தியாகங்களிலும், வெற்றி தோல்விகளிலும் பங்கேற்ற தாய்க்குலத்திற்கும் இந் நாட்டு மக்கள் தங்கள் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். சிறுவர்களும், சிறுமிகளும் 'வானர சேனைகளை' அமைத்துச் சுதந்திரப் போராட்டத்தில் தங்கள் பங்கை ஆற்றினர். அவர்களுக்கும் பாராட்டுக்கள்.

''இந்தியாவின் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை இனத்தவர்கள் அனைவரும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் பங்கைத் திறம்படச் செய்தார்கள். குறிப்பாக, முஸ்லிம்கள், சீக்கியர்கள், பார்சிகள் கிறிஸ்தவர்கள், போன்ற சிறுபான்மை இனத்தவர் மிகுந்த வீரத்துடனும், விசுவாசத்துடனும் தாய் நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடு பட்டனர். அவர்களுக்கும் நன்றி.

''இந்தியச் சுதந்திரத்திற்காகச் செய்யப்பட்ட இத்தகைய அற்புதமான தியாகங்களையும், இன்னல்களையும் முன் வைத்து, இந்தியா முழுமையாகச் சுதந்திரம் பெறும்வரை நம் போராட்டத்தை நடத்துவோம் என்று உறுதி கூறுகிறோம்.''

இதற்குப்பின், காந்தியடிகளுக்கும், அரசப் பிரதிநிதி இர்வின் பிரபுவுக்கும் இடையே நீண்ட பேச்சு வார்த்தை தொடங்கிற்று. இப்பேச்சு வார்த்தை 1931 ஜனவரி 17-ல் தொடங்கிற்று. காந்தியடிகள் கீழ்க்கண்ட ஆறு கோரிக்கைகளை முன் வைத்தார்:

1. உப்புச் சத்தியாக்கிரகத்தில் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்யவேண்டும்.
2. அரசு தன் அடக்குமுறைகளை உடனடியாகக கைவிட வேண்டும்.

3. போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களைத் திருப்பிக் கொடுக்கவேண்டும்.
4. அரசியல் காரணங்களுக்காகத் தண்டிக்கப்பட்ட அரசு ஊழியர்கள் அனைவரும் மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.
5. உப்புத் தயாரிப்பதற்கான உரிமையும், மதுபானக் கடைகளையும், அந்நியத்துணிக் கடைகளையும் மறியல் செய்யும் உரிமையும் அளிக்கப்பட வேண்டும்.
6. போலீசாரின் அத்துமீறல்களைப் பற்றி விசாரணை நடத்த வேண்டும்.

ஆனால், வன்முறையில் ஈடுபட்ட பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரை மன்னிப்பளித்து விடுதலை செய்யவும், போலீசாரின் அத்துமீறல்களைப் பற்றி விசாரணை நடத்தவும் பிரிட்டிஷ் அரசு இசையவில்லை. காங்கிரஸ் செயற்குழுவைக் கலந்தாலோசித்த பின் காந்தியடிகள் பலமுறை இர்வின் பிரபுவைச் சந்தித்தார்.

இறுதியில் ஏற்பட்ட உடன்படிக்கையின் அம்சங்கள் :

1. வன்முறைச் செயல்களில் ஈடுபட்ட அரசியல் கைதிகளைத் தவிர மற்ற அனைவரும் விடுதலை செய்யப் படுவர்.
2. கடற்கரையில் உப்பெடுக்க மக்களுக்கு அனுமதியளிக்கப் படும்.
3. அந்நியத் துணிகளையும், மதுபானக் கடைகளையும் பகிஷ்கரிக்கும் உரிமை அளிக்கப்படும்.
4. இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் காந்திஜி கலந்து கொள்வார்.

1931 மார்ச் மாதத்தில் கராச்சியில் கூடும் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் காந்தி-இர்வின் ஒப்பந்தம் விவாதத்திற்கு வைக்கப்படும். காந்தி-இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தானதும், சத்தியாக்கிரகக் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இதனால் காங்கிரசின் கௌரவம் உயர்ந்து, காங்கிரஸ் தொண்டர்களிடமும், பொது மக்களிடமும் உற்சாகமும் புத்துணர்வும் தோன்றின. இந்திய தேசியக் காங்கிரசின் பிரதிநிதிகளாக அவரது குழுவினரும் லண்டனில் நடக்கவிருக்கும் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ள விருந்தது, மக்கள் மனதில் பெரிய எதிர்பார்ப்புக்களைத் தோற்று வித்திருந்தது.

சர்தார் A. வேதரத்தினம் பிள்ளை, திரு. N. M. R. சுப்பராமன், திரு. P. கோபால் ரெட்டி மற்றும் பலருடன் நான் கராச்சி காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டேன். காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளின் உற்சாகமும், கண்ணியமும் குறிப்பிடத்தக்கவை. ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் வெற்றிப் பெருமிதம் இருந்தது. அதே சமயத்தில் சுபாஷ் சந்திர போஸ், ஜம்னாதாஸ் மேதா போன்றவர்கள், காந்தி-இர்வின் ஒப்பந்தத்தைக் கடுமையாக எதிர்த்தனர்.

கராச்சி காங்கிரசில், 'காந்தியே வெளியே போ!' 'காந்தியம் ஒழிக!', 'காந்தியின் சமாதானம்தான் பகத்சிங்கைத் தூக்கில் தொங்க வைத்தது' போன்ற காந்தி எதிர்ப்புக் கோஷங்கள் கிளம்பின. மாநாட்டின் சூழ்நிலை பரபரப்பாக இருந்தது. தம்மை எதிர்த்தவர்களிடம் அமைதியாகப் பேசி அவர்களைத் திருப்தியடையச் செய்வது காந்தியடிகளுக்கு மிகவும் கடினமான பணியாக இருந்தது. பகத்சிங்கையும், மற்றவர்களையும், காப்பாற்றத் தம்மால் இயன்றவை அனைத்தையும் செய்ததாகவும், ஆனால் தம்முயற்சி வெற்றி பெறவில்லை என்றும் அவர்களிடம் விளக்கிக் கூறினார். அத்துடன் அஹிம்சா முறையில் தமக்கிருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையையும் அவர்களிடம் உறுதிப் படுத்தினார். ''இந்த நாட்டின் கோடான கோடி மக்களுக்கு நான் கூறுகிறேன். கத்தியின் மூலம் சுதந்திரம் பெறமுடியாது. வன்முறை சுதந்திரத்திற்கு வழிவகுக்காது என்பதைத் திட்ட வட்டமாகக் கூறுகின்றேன். வன்முறை, நம்மை அழிவுக்குத்தான் அழைத்துச் செல்லும் என்பதை, தந்தை ஒருவர் தம் குழந்தைகளுக்குக்கூறும் அதிகாரத்துடனும், உரிமையுடனும் இங்குள்ள இளைஞர்களுக்குக் கூறிக்கொள்கிறேன். இதை நான் உங்களுக்குச் சற்று விளக்குகிறேன் :

''வன்முறையை வழியாகக் கொண்டிருந்தால் கடந்த போராட்டத்தின்போது பெண்களும், குழந்தைகளும் அதில் பெருமையுடன் கலந்துகொண்டிருக்க முடியுமா? அவர்கள் இந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கத்தான் முடியுமா? வன்முறையைப் பின்பற்றியிருந்தால் உலகிலேயே மிகவும் மென்மையானவர்களாகக் கருதப்படும் பெண்கள், போராட்டத்தில் சிறப்பாகப் பங்கு பெற்றிருக்க முடியுமா? நம் குழந்தைகள் - நம் வானரசேனை, தங்கள் மகிழ்ச்சிதரும் விளையாட்டுக்களைத் துறந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு உதவியிருக்கமுடியுமா? சாத்வீக முறையில் போராடுவதற்கான உறுதிமொழியை ஏற்றுக்கொண்ட

தால்தான் லட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் அஹிம்சா வீரர்களும் அணிதிரண்டு வந்தனர். உங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு பொறுமையாக இருக்கும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். கோபத்தால் எந்தவிதப் பயனும் விளையாது. ஆங்கில மக்களை நாம் எதிரிகளாகக் கருதவேண்டியதில்லை. அவர்களுக்கு எதிராக நான் சத்தியாக்கிரகத்தைப் பயன்படுத்தியுள்ளேன். ஆனால் நான் அவர்களை எதிரிகளாக என்றுமே கருதியதில்லை. நான் அவர்களின் மனதை மாற்ற விரும்புகிறேன். அதற்குரிய ஒரே வழி அன்பு தான். வன்முறைத் தாக்குதல்கள் நமக்கு உதவா. அவர்களால் பகத்சிங்கை மீண்டும் உயிருடன் கொண்டுவர முடியுமா? இத்தகைய பெரிய தூண்டுதலுக்கு அரசாங்கமே காரணம் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆகவே பொறுமையிழந்திருக்கும் இளைஞர்கள் இதயபூர்வமாகச் சாத்வீகப் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று அவர்களிடம் நான் கடவுளின் பெயராலும், தாய்நாட்டின் பெயராலும் கேட்டுக்கொள்கிறேன்.

''அப்படியும் என் சொற்களுக்கு அவர்கள் செவிசாய்க்கவில்லையென்றால், அவர்கள் என்னைக் கொன்று விடலாம்; ஆனால் அவர்கள் காந்தியத்தைக் கொல்லமுடியாது. உண்மையை அழிக்க முடியுமானால்; காந்தியத்தையும் அழித்து விடலாம். உண்மை, அஹிம்சை ஆகிய வழிகளில் ''சுதந்திரம் பெறுவது தான் காந்தியம் ஆகும்''.

கராச்சி காங்கிரஸ் மாநாட்டிற்கு, சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமை தாங்கினார். குஜராத்தில் வரிகொடா இயக்கத்தை அவர் தலைமை தாங்கி நடத்தியிருந்தார். கராச்சி காங்கிரஸ் மாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

முதல் தீர்மானத்தின் மூலமாக, சுதந்திரப் போராட்டத்தில் உயிர்நீத்த மோதிலால் நேரு, முகமது அலி மற்றும் பல தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திக்கொண்டது. இரண்டாவது தீர்மானம் கான்பூர் கலவரங்களைப்பற்றியது. மூன்றாவது தீர்மானம் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்பது. அதன் பின்னர், பகத்சிங் மற்றும் அவரது தோழர்கள் பற்றிய தீர்மானத்தை ஜவஹர்லால் நேரு கொண்டுவந்தார். அத்தீர்மானத்தின் வாசகத்தை காந்தியடிகள் எழுதினார்:

''அரசியல் வன்முறையை ஒருக்காலும் எந்த வடிவத்திலும் காங்கிரஸ் பின்பற்றவோ, ஆதரிக்கவோ செய்யாது. எனினும்,

பகத்சிங்கும் அவர்களது தோழர்களான சுகதேவும் ராஜகுருவும் தைரியத்தோடு செய்த உயிர்த்தியாகத்தைப் போற்றுவதோடு, அவர்களை இழந்து துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத் தாருடன் இம்மாநாடும் அத்துயரைப் பகிர்ந்துகொள் கிறது''.

காங்கிரசின் சார்பாகக் காந்தியடிகளும், அவர் தலைமையில் செயல்பட, காங்கிரஸ் செயற்குழு நியமிக்கும் மற்ற உறுப்பினர் களும் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வார்கள் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஆகஸ்ட் 29ஆம் நாள், பண்டித மதன் மோகன் மாளவியா, திருமதி சரோஜினி நாயுடு, பிரபா சங்கர்பட்டணி, மகாதேவ தேசாய், மீராபென், ஜி. டி. பிர்லா ஆகியோருடன் காந்தியடிகள், இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள இங்கிலாந்து சென்றார்.

நான் கராச்சியிலிருந்து திரும்பியதும் எனக்கு இரண்டு முக்கியப் பொறுப்புக்கள் காத்திருந்தன. மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த நான் சுதந்திர இயக்கத்தை மாவட்டத்தின் மூலை, முடுக்குகளில் எல்லாம் பரப்ப வேண்டியிருந் தது. இந்தப் பணியை திரு. C. P. சுப்பையா, திரு. K சுப்பிர மணியம் (சுப்ரி) ஆகியோர் பகிர்ந்துகொண்டு திறம்படச் செய்த னர். இத்துடன் தஞ்சை, மதுரை, சேலம் போன்ற மற்ற மாவட்டங்களிலும் நான் பணியாற்றச் செல்ல வேண்டியிருந்தது.

எனக்கிருந்த மற்றொரு பொறுப்பு மிகவும் கடினமானதாகும். வித்யாலயம் மிக அண்மையில்தான், அதாவது 1930 பிப்ரவரி 3-ல், தொடங்கப்பட்டிருந்தது. அப்பொழுதிருந்த மாணவர்கள், ஐந்துபேர் மட்டுமே. அவர்கள் விடுதியில் தங்கிக்கொண்டு கோவையில் பல்வேறு பள்ளிகளுக்குச் சென்று பயின்று வந்தனர். வித்யாலயத்தை வேறொரு கிராமப்பகுதிக்கு மாற்றி அதை ஒரு முழு உறைவிடப் பள்ளியாக அமைக்கும் எண்ணம் இருந்தது. திரு. V. C. வெள்ளிங்கிரிக் கவுண்டரின் தாராள உதவியால், வெள்ளக்கிணறு பகுதியில் உள்ள அவரது தோட்டத்திற்கு வித்யாலயம் மாற்றப்பட்டது. திரு. C.M. ராமச்சந்திர செட்டியா ரின் உதவியால் பள்ளிக்கூடம் தொடங்குவதற்கான அரசாங்க உத்தரவு கிடைத்தது. இதைப்பற்றிய விவரங்கள் இந்நூலின்

வேறு இடங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. 1931-1932 ஆம் ஆண்டின் வித்யாலய அறிக்கை கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது:

> ''1931-32ல் வித்யாலயம் ஓர் உறைவிடப் பள்ளியாக வளர்ந்தது. வெள்ளக்கிணறில் உயர்திரு V. C. வெள்ளிங்கிரிக் கவுண்டருக்குச் சொந்தமான ஒரு தோட்டத்திற்கு அது மாற்றப் பட்டது. அப்போது வித்யாலயத்தின் மாணவர் எண்ணிக்கை 22. வித்யாலயத்தில் 4, 5, 6 ஆம் வகுப்புகள் தொடங்கப் பெற்றன. 1932-33 ஆம் ஆண்டில் வித்யாலயத்தின் மாணவர் தொகை 34 ஆக உயர்ந்தது. ஏழாவது வகுப்பும் தொடங்கப் பட்டது; 4-வது வகுப்பு நீக்கப்பட்டது. இந்த ஆண்டில் பள்ளியில் செயலாளர் ஒருவர், ஆசிரியர் நால்வர் ஆக மொத்தம் ஐந்து ஊழியர்கள் இருந்தனர். செயலாளர், வார்டன், நீதிபோதனை ஆசிரியர் ஆகிய மூன்று பொறுப்புக் களையும் நான் கவனித்து வந்தேன்.''

எந்தவிதமான முன் அனுபவமும் இல்லாததால் அனைத்து ஏற்பாடுகளையும் செய்வது மிகக் கடினமாக இருந்தது. வித்யாலயத்திற்குத் தேவையான கட்டிடங்கள் கட்டுதல், நல்ல ஆசிரியர்களைக் கண்டு பிடித்தல், குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளுதல், நற்பழக்கவழக்கங்களை ஏற்படுத்துதல் போன்ற பொறுப்புக்களைக் கவனத்துடன் செய்ய வேண்டியிருந்தது. இறைவனின் திருவருளால் இதற்கு வேண்டிய ஊக்கம், வலிமை, உற்சாகம் கிடைத்தன. இன்னல்களை எதிர்கொண்டு புதிய அனுபவங்களைப் பெறும் அளவுக்கு நான் இளைஞனாக இருந்தேன். உணவுப் பொருள்கள் வாங்குதல், பள்ளிக்கு வேண்டிய வகுப்பறைகள் அமைத்தல், மேசை நாற்காலிகளைச் செய்தல், சிறு பிரார்த்தனைக் கூடம் அமைத்தல், நாள்தோறும் பிரார்த்தனை நடத்தல், வழிபாட்டுப் பாடல்களையும், சுலோகங்களையும் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்தல் போன்ற பணிகளும், இவையனைத்திற்கும் மேலாகக் குழந்தைகளை அன்புடன் பேணி வளர்ப்பதற்கான சூழ்நிலையை அமைத்தல், குருமஹராஜ், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் கொள்கைகளில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுத்தல் ஆகிய பல்வேறு பொறுப்புக்களையும் கவனிக்க வேண்டியிருந்தது. இக்காரியங்களைச் செய்வதற்கு எனக்கிருந்த ஒரே சொத்து எனது ஆரோக்கியமும், ஆர்வமும் மற்றும் என் நண்பர்களின் பரிவும் ஆகும். ஆனால் இரண்டாவது வட்டமேசை மாநாட்டின் முடிவு பேரதிர்ச்சியைத் தந்தது.

காந்தியடிகளின் இங்கிலாந்து விஜயம் அவரது உயர்ந்த தத்துவங்களையும், ஆன்மிகக் கோட்பாடுகளையும் ஆங்கிலேயர் போற்றிப் புகழும் அளவுக்குக் கலாச்சார வெற்றியாக அமைந் தாலும் அரசியல் ரீதியில் அது ஒரு பெரும் தோல்வியாகவே முடிந்தது. திரு. ஜின்னா, திரு. சாமுவேல் ஹோரோ ஆகியோ ரின் பிடிவாதத்தினாலும், தவறான மனப்பான்மையினாலும் எந்த வகையான அரசியல் உடன்பாடும் ஏற்படவில்லை. லண்டனி லிருந்து காந்தியடிகள் புறப்படுமுன், ''நம்முடைய வழிகள் வேறுபடுகின்றன. எதிர்வரும் புயல்களை நாம் சமாளித்தே ஆக வேண்டும். என் வாழ்க்கை எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியாது.'' என்று கூறினார்.

இர்வின் பிரபுவிற்குப்பின் வெலிங்டன் பிரபு அரசப் பிரதி நிதியானார். வட்டமேசை மாநாட்டின் தோல்வி, சுதந்திர இயக் கத்தை அடக்குவதற்குக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க அவரைத் தூண்டியது. அதற்காக பல அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. காங்கிரசுக்கு எதிராகக் கடுமையான போர் நடத்துவதென ஆங்கிலேயர் முடிவு செய்தனர். காந்தியடிகள் இந்தியா திரும்பியவுடன் அவரும் காங்கிரஸ் செயற்குழு உறுப் பினர்களும் கைது செய்யப்பட்டனர். இதனால் நாடு முழுவதிலும் இருந்த முக்கியமான தலைவர்கள் பலரையும் கைது செய்யும் நிலை ஏற்பட்டது. அவர்களுள் நானும் ஒருவனாக இருப்பேன் என்ப தில் சந்தேகம் இருக்கவில்லை.

புதிதாகத் தொடங்கப்பட்ட வித்யாலயத்தின் அவசரத் தேவை களை எண்ணி, நான் சுதந்திர இயக்கத்திலிருந்து என்னை விடுவித்துக் கொண்டு, எனக்கும் சுதந்திர இயக்கத்திற்கும் இழிவையும், வெறுப்பையும் தேடிக் கொள்வதா? வித்யாலயத் திற்கு என்ன நேர்ந்தாலும், அது மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டாலும் அதைப் பற்றி நினைக்காது வித்யாலயத்தை விட்டு விட்டுச் சுதந்திர இயக்கத்தில் தொடர்ந்து ஈடுபடுவதா? என்பன பெரிய வினாக்களாக என்முன் நின்றன. என்னுள் தோன்றிய இம் மனப்போராட்டம் என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. வித்யாலயம் தொடர்ந்து நன்றாக நடைபெறவும், நாட்டிற்கு எனது கடமையைச் செய்யவும் குருதேவர் எனக்கு அனுமதி யளிப்பார் என்று எண்ணி மனதார அவரைப் பிரார்த்தித்தேன். ஆண்டவன் அருளால் சரியான நேரத்தில் எனக்கு உதவி கிடைத்தது. அதுதான், பர்மாவிலிருந்து திரு. மாணிக்கசுவாமி முதலியார், தோன்றாத் துணையாய் வித்யாலயம் வந்து சேர்ந்தது. இதைப் பற்றி இந்நூலின் வேறொரு பகுதியில்

விரிவாகக் கூறியுள்ளேன். இறைவன்மேல் இருந்த அசையாத நம்பிக்கையும், மனமுருகிய பிரார்த்தனையுமே இந்த அற்புதத்தை விளைவித்தன. எனக்கு உதவி செய்த இறைவனே மாணிக்க சுவாமி முதலியார் வடிவில் வந்தான் போலும்!

வித்யாலயத்தை, திரு. மாணிக்கசுவாமி முதலியாரின் பொறுப்பில் விட்டு விட்டு, மன அமைதியுடனும், நம்பிக்கையுடனும் சிறை சென்றேன்.

வித்யாலயத்தின் வளர்ச்சியில் இறைவனின் அருள் என்றும் இருந்து வந்துள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக இது போன்ற நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்துள்ளன.

# 11. இரண்டாவது சிறைவாசம்

முதல் முறை நான் சிறை சென்ற போது, சிறையில் எப்படி நேரத்தைக் கழிப்பது என்று தெரியாதவனாக இருந்தேன். சிறைக்குள் என்னென்ன பொருள்களை அனுமதிப்பார்கள் என்றும் அப்போது எனக்குத் தெரியாது. அரசியல் தொடர்பான நூல்களையும், காந்தியடிகள், மற்றும் அரசியல் தலைவர்களைப் பற்றிய நூல்களையும் சிறைக்குள் அனுமதிக்கமாட்டார்கள் என்று தெரிந்து கொண்டேன். ஆனால் சமயத் தொடர்பான நூல்கள் மற்றும் படங்களையும், பொருளாதாரம் போன்ற அறிவுத் தொடர்பான பொதுவான நூல்களையும் சிறைக்குள் அனுமதித்தார்கள். ஆகவே இம்முறை, அன்றாட வழிபாட்டிற்காக ஸ்ரீ ராமகிருஷ்ணர். சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் திருவுருவப் படங்களையும், சுவாமி விவேகானந்தரின் ஞான தீபம் (Complete Works of Swami Vivekananda), ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அமுத மொழிகள் (The Gospel of Sri Ramakrishna), தேவாரம், திருக்குறள் போன்ற நூல்களையும் எடுத்துச் சென்றேன்.

இரண்டாவது முறையாக நான் சிறை சென்றபோது, என்னை முதலில் மதுரை மாவட்டச் சிறைக்கும், பின்னர் கடலூர் மாவட்டச் சிறைக்கும் கொண்டு சென்றார்கள். மதுரைச் சிறையில் பெரிய பெரிய கொசுக்கள் மிகுதி. போர்த்திக் கொள்ள எங்களுக்கு முரட்டுக் கம்பளிகளைக் கொடுத்தார்கள். வெய்யில் காலத்தில் அவற்றைப் பயன்படுத்த முடியாது. அதனால் கொசுத் தொல்லையிலிருந்து எவ்வாறு மீள்வது என்பது பெரும் பிரச்னையாக இருந்தது. எங்களுக்குக் கொடுக்கப்பட்ட அரிக்கன் விளக்குகளிலிருந்த மண்ணெண்ணையை உடல்முழுவதும் பூசிக் கொண்டதால் கொசுக்கடியிலிருந்து ஓரளவு விடுபட்டோம். மனத்தை வருத்தக்கூடிய அனுபவம் ஒன்றும் மதுரைச் சிறையில் எனக்குக் கிடைத்தது. தூக்குத்தண்டனை பெற்ற கைதிகளைத் தூக்கில் போட அந்த வழியாக அழைத்துச் செல்வார்கள். சிலர் வாய்விட்டுக் கதறி அழுவார்கள். அது ஒரு பயங்கர அனுபவம். நாங்கள் கடலூருக்கு மாற்றப்பட்டபோது இந்தத்

துன்பங்கள் குறைந்தன. என் இரண்டாவது சிறைவாசத்தின் பெரும்பகுதி கடலூர்ச் சிறையிலேயே கழிந்தது.

சுதந்திர இயக்கத்தின்போது பொதுக்கூட்டங்களில் பாரதியின் பாடல்களை நாங்கள் பாடுவோம். பாரதியின் பாடல்கள் எங்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்டியதோடு தமிழ்ப்பற்றையும் ஊட்டின. நாங்கள் அடிக்கடிப் பாடிய பாடல்களுள் ஒன்று:

யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்

பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை

சேமமுற வேண்டுமெனில் ............................
......... ........ ......... ................ ......

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;

இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை

திறமான புலமையெனில், வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;

மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!

சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்கள் எங்களுக்கு உணர்ச்சியை ஊட்டி, தமிழ்மொழியின் வளர்ச்சியைக் குறித்து எங்களைச் சிந்திக்க வைத்தன. தமிழ் மொழியை வளப்படுத்தப் பல்வேறு அறிவுத் துறைகளிலும் புதிய நூல்களைப் படைக்க வேண்டுமென நாங்கள், வேலூர்ச் சிறையில் இருந்தபோது நினைத்தோம். அந்தச் சமயத்தில் தமிழில் இருந்த பெரும் பாலான நூல்கள் பழந்தமிழ் இலக்கியங்களான திருக்குறள்

சிலப்பதிகாரம், கம்பராமாயணம், வில்லிபாரதம் ஆகியவை மட்டுமேயாகும். சில எழுத்தாளர்கள் புதினங்களையும் (நாவல்கள்) எழுதினர். ஆனால் அவை பெரும்பாலும் ஆங்கிலம், வங்காளி, மராத்தி போன்ற பிறமொழிகளின் தழுவல்களாகவோ, மொழி பெயர்ப்புக்களாகவோ தான் இருந்தன. தற்கால அறிவியல் கலைகள் பற்றிய நூல்கள் மிகவும் குறைவு. தற்காலத்திற்கேற்ற நவீன மொழியாகத் தமிழ் வளரவேண்டுமென்றால், பொருளியல், அரசியல், இயற்பியல், வேதியல், உயிர் நூல் போன்ற அறிவியல் துறைகளைப் பற்றிய நூல்கள் பெருமளவில் எழுதப் படவேண்டும். நான் உயர் வகுப்புகளில் பொருளாதாரம் பற்றிய பாடத்தைக் கற்றிருந்ததால், பொருளாதாரம் பற்றிய நூல் ஒன்று எழுத நினைத்தேன். 'இந்தியப் பொருளாதார நூல்' என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதினேன். நான் சிறையிலிருந்து விடுதலை பெற்றவுடன் அது அச்சிட்டு வெளியிடப்பட்டது. இத்தகைய நூல் ஒன்று தமிழில் வெளிவருவது இதுவே முதல் முறையாகும்.

அடுத்து நான் எழுதியது 'கல்வி' என்ற சிறு நூல். இது சுவாமி விவேகானந்தரின் கல்விக்கருத்துக்களின் தொகுப்பாகும். அதன்பின், நான் திருச்சிராப்பள்ளிச் சிறையிலிருந்த போது 'திருக்கேதார யாத்திரை' என்ற நூலை எழுதினேன். 1942 இயக்கத்தில் கைது செய்யப்பட்ட நான் வேலூர்ச் சிறையில் இருந்த போது 'இந்தியப் பிரசங்கங்கள்' என்ற பெயரில், சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகளைத் (Lectures From Colombo to Almora) தமிழில் மொழி பெயர்த்தேன்.

கடலூர்ச் சிறையில், சர்தார் வேதரத்தினம்பிள்ளை, திரு. N. M. R. சுப்பராமன், திரு. K. சந்தானம் ஆகிய பெருமக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவர்களைப் போன்று, நற்பண்புகள், தியாக உணர்வு, கொண்ட மக்களைக் காண்பது அரிது. சர்தார் வேதரத்தினம்பிள்ளை அமைதியும், எளிமையும், பக்தியும் கொண்டவர். தஞ்சை மாவட்டத்தின் ஓர் ஒதுக்குப்புறமான ஊரான வேதாரண்யத்தில் அவர் வாழ்ந்து வந்தார். இருப்பினும் அந்த மாவட்டத்தில் மட்டுமன்றி, தமிழ் நாடு முழுவதிலும் சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் பெரும் பங்கு வகித்தார். வேதாரண்யத்தில், ராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்திற்கு வேண்டிய ஏற்பாடு கள் அனைத்தையும் செய்தவர் அவரே. வேதாரண்ய உப்புச் சத்தியாக்கிரகத்தில் ராஜாஜிக்கும், அண்ணாச்சிக்கும் (சர்தார் வேதரத்தினம்பிள்ளை) மக்கள் கொடுத்த ஆதரவு மகத்தானது.

கஸ்தூரிபாவின் நினைவாக அவர் வேதாரண்யத்தில், ஆதரவற்ற பெண்களுக்கான அனாதை இல்லம் ஒன்றைத் தொடங்கினார். இன்று அது தென்னாட்டிலேயே, மிகப்பெரிய அனாதை இல்லமாகத் திகழ்கிறது. தற்சமயம் இந்நிறுவனத்தை, திரு வேதரத்தினம்பிள்ளை அவர்களின் புதல்வர் திரு. V. அப்பாக் குட்டி அவர்கள் மிகச்சிறந்த முறையில் நிர்வகித்து வருகிறார்.

'மதுரை காந்தி' என்று அழைக்கப்படும் திரு. N. M. R. சுப்பராமன் காந்தியத்தில் ஊறியவர். அவர் மெலிந்த சரீரமும், சுமாரான ஆரோக்கியமும் உடையவர். பத்திய உணவு உண்டு வந்தார். இருப்பினும் அவர் சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டு நான்கு முறை சிறைவாசம் அனுபவித்தார். கொள்கைப்பிடிப்பும், பொறுமையும் கொண்டவர் அவர். வினோபா அடிகளின் பூமி தான இயக்கத்தின் போது அவர் அவ்வியக்கத்திற்காகப் பல லட்ச ரூபாய் மதிப்புள்ள 50 ஏக்கர் நிலத்தை மனமுவந்து நன்கொடையாக அளித்தார். துன்பப்படுவோர் தம்மிடம் உதவி கேட்டு வந்தபோது எந்தவித விளம்பரமும் இன்றி உதவி புரிந்தார். ஒருபோதும் அவர் பதவிகளை நாடிச் சென்றதில்லை; ஆனால் பதவிகள் அவரை நாடி வந்தன. மதுரை நகராண்மைக் கழகத்தலைவர், சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்நாடு காந்தி நினைவு நிதியின் தலைவர், தமிழ்நாடு அரிஜன சேவா சங்கத்தின் தலைவர், ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தின் நிர்வாகக் குழுத்தலைவர், அவினாசிலிங்கம் அறக்கட்டளையின் உறுப்பினர் என, பல பொறுப்புகளை அவர் திறம்பட வகித்தவர். என்மேல் அவர் கொண்டிருந்த அன்பும் பாசமும் அளவு கடந்தன. அவருடன் எனக்கிருந்த நட்பை என் வாழ்க்கையின் மிகப்பெரும் பேறாக நான் கருதுகிறேன்.

திரு. K. சந்தானம் வேறு மாதிரி. அவர் மிக்க படித்த வரும், அறிவாளியும் கூட. வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிர கத்தில் ராஜாஜி கைது செய்யப்பட்ட பின்னர், அவர் அதற்குத் தலைமைப் பொறுப்பு ஏற்றார். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தித் தாளின் பதிப்பாசிரியராக அவர் இருந்தார். மத்திய ரயில்வே அமைச்சர், மத்திய நிதிக்குழுத் தலைவர் ஆகிய பெரும் பொறுப்புக் களையும் அவர் வகித்துள்ளார். விந்தியப்பிரதேசத்தின் கவர்னராக வும் பணியாற்றினார். தமிழிலும், வடமொழியிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர் அவர். அவருடன் பழகி அவரது நட்பைப் பெறும் வாய்ப்பை நான் சிறையில் பெற்றேன்.

சிறை வாழ்க்கையில் உற்சாகமூட்டும் நிகழ்ச்சிகளும் உண்டு. நாங்கள் மாதத்திற்கு ஒரு கடிதம் எழுதலாம். அதேபோன்று எங்களுக்கும் ஒரு கடிதம் தான் வரலாம். அதனால் எங்களுக்குக் கடிதம் வரும்போது அளவற்ற உற்சாகம் அடைவோம். குறிப்பாக, குடும்பத்தையும், குழந்தைகளையும் பிரிந்து வந்தவர்களுக்கு இத்தகைய கடிதங்கள் பெரும் மகிழ்ச்சியைத் தந்தன. முதல் முறை நான் சிறைப்பட்ட போது என் தந்தையார் அந்த வருத்தத்தைத் தாங்கிக் கொண்டார், ஆனால் இரண்டாவது முறை நான் சிறை சென்றபோது அத்துயரத்தை அவரால் தாங்க முடியவில்லை. அத்துயரத்தை மறக்க அவர் தமிழ்நாட்டிலுள்ள பல திருத்தலங்களுக்கு அடிக்கடிச் சென்று வந்தார். இதனாலும் அவர் மனத்துயர் குறையவில்லை. என்னைப் பார்த்துச் செல்லச் சிறைக்கு வந்தார். என்னைப் பார்த்ததும் அவர் குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழுதார். யாராலும் அவரது அழுகையைக் கட்டுப் படுத்த இயலவில்லை. அவரைப் பார்த்து நானும் எவ்வளவு துயருற்றிருப்பேன் என்பதைக் கூற வேண்டுவதில்லை. எங்களால் அதிகம் பேசமுடியவில்லை. குறிப்பிட்ட நேரம் முடிந்ததும் சிறைக் காவலர்கள் அவரைக் கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்று விட்டனர். நான் விடுதலையான சில நாட்களில் அவர் அமரரானார். சிறைக்குச் சென்றதனால் என் தந்தையின் ஆயுளில் ஐந்து ஆண்டுகளை நான் குறைத்து விட்டதாக, கோவை நகரப் பெருமக்களுள் ஒருவரான திரு. C S. ரத்தினசபாபதி முதலியார் கூறுவார். சிறையிலிருந்தபோது வெளியில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றிச் சரியாக அறிந்து கொள்ள இயலாது. யாரேனும் புதிதாகக் கைது செய்யப்பட்டுச் சிறைக்கு வந்தால் நாங்கள் அனைவரும் அவரைச் சூழ்ந்து கொண்டு நாட்டின் நிலைமையைப்பற்றியும், சட்டமறுப்பு இயக்கத்தின் செயல்களைப்பற்றியும் கேட்டுத்தெரிந்து கொள்வோம் சுதந்திர இயக்கத்தை ஒடுக்குவதற்கு அரசு, தன்னாலான அடக்குமுறைகளை எல்லாம் கையாள்கிறது என்று அறிந்து மனவேதனைப் பட்டோம். காங்கிரஸ் செயற்குழு, மாநில, மாவட்ட மற்றும் பிராந்தியக் காங்கிரஸ் குழுக்கள் அனைத்தும் சட்டத்திற்குப் புறம்பானவை என்று அரசு அறிவித்து விட்டது. இவற்றுடன், காங்கிரசுக்கு ஆதரவளித்த விவசாய அமைப்புக்கள், இளைஞர் அணிகள், மாணவர் சங்கங்கள், காங்கிரஸ் மருத்துவமனைகள், நூல்நிலையங்கள் போன்றவையும் சட்டத்திற்குப் புறம்பானவை என்று அறிவிக்கப்பட்டது. இதனால் மிகவும் பிரபலமான காங்கிரஸ் தலைவர்கள் பலர் உட்பட ஏறக் குறைய 7000 பேர் கைது செய்யப்பட்டனர். இதற்காகப் பல அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. இத்தகைய அடக்கு

முறைச் சட்டங்களில் புதுமையான ஒன்று யாதெனில், தங்கள் குழந்தைகள் செய்யும் குற்றங்களுக்காக அவர்களின் பெற்றோர் களும், காப்பாளர்களும் தண்டனை பெற்றதுதான். அரசின் இக் கொள்கைப்படி, தனிப்பட்ட காங்கிரஸ்காரர்கள் மற்றும் காங்கிரஸ் இயக்கத்தின் சொத்துக்கள், வீடுகள், கார்கள், பணம் ஆகியன பறிமுதல் செய்யப்பட்டன. சட்டமறுப்பு இயக்கத்தின் கைதிகளை மிகவும் கடுமையாக நடத்தும்படிச் சிறை அதிகாரிகளுக்கு ரகசியச் சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டன. கைதிகளுக்கு அடிக்கடிக் கசை யடிகள் கொடுக்கப்பட்டன. அப்பொழுது, இந்தியக் காரியதரிசி யாக இருந்த சர் சாமுவேல் ஹெரே என்பவர் பிரிட்டிஷ் பாராளு மன்ற மக்களவையில் கூறினார்: ‘காங்கிரஸ் அடிபணியும் வரை அல்லது அதை ஒழிக்கும்வரை தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்’’.

ஆனால் இத்தகைய அடக்கு முறைகளால், மக்களிடம் கொழுந்து விட்டெரிந்த சுதந்திர உணர்ச்சியை அரசாங்கத்தால் அடக்கமுடியவில்லை. சட்ட மறுப்பு இயக்கமும், மறியல்களும் மேலும் தீவிரமடைந்தன. நாடெங்கும் கிளர்ச்சிகளும், வேலை நிறுத்தங்களும் தொடர்ந்தன. முதல் நான்கு மாதங்களில் மட்டும் 80,000 பேர் கைது செய்யப்பட்டனர். முக்கியமான தலைவர்கள் பலரும் சிறை சென்றுவிட்டதால், தக்க தலைவர்களின்றியே மக்கள் போராட வேண்டியிருந்தது. தடையை மீறிக்கூட்டங்கள் ஊர்வலங்கள் நடத்துவது, அந்நியப் பொருட்களைப் பகிஷ்கரிப்பது, மதுபானக்கடைகளின் முன் மறியல் செய்வது போன்ற போராட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்தன. நாட்டில் சில பகுதிகளில் வரிகொடா இயக்கமும் நடந்தது.

தன்னால் இயன்ற வழிகளிலெல்லாம் போராட்டத்தினை ஒடுக்க முயன்றது அரசு. நகராட்சி மன்றக் கட்டிடங்களில் மூவர்ணக் கொடி ஏற்றக் கூடாது என்றும், அதற்குப் பதிலாக பிரிட்டிஷ் கொடியை ஏற்ற வேண்டுமென்றும் ஆணை பிறப்பித்தது. அனைத்து மாநிலங்களிலும் அரசின் அடக்குமுறைகள் மிகுந்தன. வட மேற்கு எல்லைப்புற மாநிலத்தில் இதன் கொடுமை மிக அதிகமாக இருந்தது. கிராமங்களின் மீதும், சில சமயங்களில் நகரங்கள் மீதும் மிகவும் அதிகமான பொது அபராதங்கள் விதிக்கப்பட்டன. வங்காளத்தின் சில மாநிலங்களில் மக்கள் எல்லையற்ற கொடுமை களுக்கு ஆளாயினர். குறிப்பாக அரசாங்கம் இந்துக்களை எதிரிகளாகக் கருதிற்று. 12 வயதிலிருந்து 25 வயதுக்குட்பட்ட அனைத்து ஆண்களும் பெண்களும், சிறுவர் சிறுமியரும் அடை யாள அட்டைகளை வைத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு

ஆணையிட்டது. பல இடங்களில் பள்ளிகள் மூடப்பட்டன. ஊரடங்கு உத்தரவுகளும், ஆங்கிலப் படையினரின் அணிவகுப்பும், விசாரணை யின்றித் தண்டிக்கும் போலீசும், கூட்டு அபராதமும் மற்றும் பல கொடுமையான முறைகளும் கையாளப்பட்டு அடக்குமுறையை அமுல் படுத்தியது அரசாங்கம்.

இச்செய்திகள் அனைத்தும் சிறையில் எங்கள் செவிகளை எட்டின. இவையனைத்தையும் விட அதிர்ச்சி தரக்கூடிய செய்தி எங்களுக்குக் கிடைத்தது. 1932 செப்டம்பரில், தாம் உயிர்போகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகக் காந்தியடிகள் அறி வித்தார். இச்செய்தியைக் கேட்ட பலர் துயரமிகுதியால் அழுது விட்டனர். இத்தகைய மிகத்தீவிரமான முடிவைக் காந்தியடிகள் ஏன் எடுக்க வேண்டும் என்று நாங்கள் கதிகலங்கிக் குழப்பமுற்றோம் அவருடைய உயிருக்கு ஆபத்து ஏதேனும் நிகழ்ந்து விட்டால் நாடும், சுதந்திர இயக்கமும் என்ன ஆகும்? இதைப்பற்றிய மேலும் சில செய்திகள் வந்தன. 1931 நவம்பர் 13ல் நடைபெற்ற இரண்டாவது வட்டமேசை மாநாட்டில், முஸ்லிம்களுக்கு மட்டு மின்றி, சமயச் சிறுபான்மையினரான கிறித்தவர்கள், பார்சிகள், சீக்கியர்கள் ஆகியோருக்கும் தேர்தலில் தனித் தொகுதிகள் ஒதுக்க வேண்டுமென்று, ஜின்னாவும், முஸ்லிம் லீகும் வற்புறுத் தினர். இத்துடன், இந்துசமயத்தைச் சேர்ந்த தாழ்த்தப் பட்ட சாதியினர்க்கும் தனித் தொகுதிகள் வேண்டும் என்றும் வற்புறுத் தினர். எப்பொழுதும் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டு வந்த ஆங்கிலேயருக்கு இது உகந்ததே! ஆனால் இந்துக்களிலிருந்து, தாழ்த்தப்பட்ட சாதியினரைப் பிரிப்பதைக் காந்தியடிகள் கடுமை யாக எதிர்த்தார். மாநாட்டில் இது பற்றி ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமானால் தம் உயிரைக் கொடுத்தேனும் அதைத் தடுக்கப் போவதாக அவர் கூறினார். அதைப் பற்றி முடிவெடுக்கும் பொறுப்பு பிரிட்டிஷ் பிரதமரிடம் கொடுக்கப்பட்டது. ஆனால் அச்சமயத்தில் காந்தியடிகளின் எச்சரிக்கையை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக் டொனால் இந்திய மந்திரி சர் சாமுவேல்ஹொரே ஆகிய இரு வருமே காந்தியடிகளின் சொல்லை மதிக்கவில்லை; அதைப்பற்றிக் கவலைப்படவும் இல்லை.

சிறுபான்மையினருக்குத் தனிப்பிரதிநித்துவம் கொடுக்கும் திட்டத்தை (Communal Award) ஆகஸ்ட் 17-ல் திரு சாமுவேல் மெக்டொனால்ட் அறிவித்தார். சிறுபான்மை இனத்தவர்க்குத் தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. தாழ்த்தப்பட்ட வகுப் பினர்க்கும் தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன.

இதற்குக் காந்தியடிகள் அளித்த பதில் கீழ்வருமாறு:

> ''சிறுபான்மையினர்க்குத் தனிப் பிரதிநித்துவம் கொடுப்பதைப் பற்றி ஆங்கில அரசின் முடிவை நான் அறிந்தேன். அதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தேன். என் உயிரைப் பணயம் வைத்தேனும் இதை எதிர்க்க வேண்டியுள்ளது. ஆகவே சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்து விட்டேன். உப்புக்கலவாத அல்லது உப்புக் கலந்த தண்ணீரும் சோடா வும் தவிர வேறு எந்த வகையான உணவும் உட்கொள்ள மாட்டேன். நான் கூறிய யோசனைக்கு ஏற்ப அரசு தன் முடிவை மாற்றிக் கொள்ளாவிடில், வரும் செப்டம்பர் 20 ஆம் நாள் நண்பகலிலிருந்து உண்ணாவிரதம் தொடங்கும்.''

காந்தியடிகளின் கடிதத்திற்கு, பிரதமரின் கடிதம் செப்டம்பர் 8ஆம் நாள் அனுப்பப்பட்டது. அரசு எடுத்த முடிவில் மாற்றம் இல்லை என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுபற்றித் தம் நிலையைக் காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்:

> ''தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கு அதிக இடங்களை ஒதுக்கு வதைக்கூட நான் எதிர்க்கவில்லை. அவர்கள் விரும்பும்வரை இந்துக்களிடமிருந்து சட்டபூர்வமாக அவர்களைப் பிரிப்பதைத் தான் எதிர்க்கிறேன். நீங்கள் உங்கள் முடிவில் உறுதியாக நிற்பதாலும், அதை அரசியல் சட்டமாக்குவதாலும், தாழ்த்தப் பட்ட தங்கள் சகோதரர்களை வாழ்க்கையின் அனைத்து நிலை களிலும் உயர்வதற்காகத் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்து அரும்பாடுபட்டுவரும் இந்துசமயச் சீர்திருத்த வாதிகளின் முயற்சிக்குத் தடை விதித்தவர்கள் ஆகிறீர்கள். ஆகவே நான் தங்களுக்கு அறிவித்தபடி உண்ணாவிரதத்தை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிறேன்''.

சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளவிருக்கும் தம் திட் டத்தைக் காந்தியடிகள் அறிவித்தார். பிரதமர் தம் முடிவை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நாடு முழுதும் மக்கள்கோரிக்கை எழுப்பினர். அப்போது, சென்னையில் தாழ்த்தப்பட்ட வகுப் பினரின் தலைவராக இருந்த திரு M.C. ராஜா ஓர் அறிக்கையை செப்டம்பர் 13-ஆம் நாள் வெளியிட்டார். அவ்வறிக்கையில் அவர் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை கண்டித்ததோடு, காந்தி யடிகள் உயிரைக்காக்க அனைத்து மக்களும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். காந்தியடிகளின் உண்ணாவிரதத்தை, 'இது ஓர் அரசியல் தந்திரம்' என்று குறிப்

பிட்ட டாக்டர் அம்பேத்காரைத் தவிர மற்ற அனைத்துத் தலைவர்களும் இந்த நெருக்கடியைத் தவிர்க்கப் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டனர். காந்தியடிகளை உடனே விடுதலை செய்ய வேண்டுமென்று தேஜ் பகதூர் சாப்ரு கோரிக்கை விடுத்தார். காந்தியடிகளின் உயிருடன் அரசாங்கம் விளையாடாது என்று தாம் நம்புவதாகவும் அவர் கூறினார். இப்பிரச்னைக்குத் தீர்வு காணும் சிறந்ததொரு வழியைக்காண்பிக்கக் காந்தியடிகளால் மட்டுமே இயலும் என்றும் அவர் எடுத்துரைத்தார். காந்தியடிகளின் தியாகத்திற்கு மாசு கற்பிக்க வேண்டாம் என்று தன் சமயத்தைச் சேர்ந்த மக்களிடம் யாகூப் ஹாசன் வேண்டிக் கொண்டார். 'இந்து சமூகத்திற்குச் சோதனை ஏற்பட்டுள்ளது' என்று ராஜேந்திர பிரசாத் கூறினார். செப்டம்பர் 14-ஆம் நாள் அலகாபாத் நகரிலுள்ள கோயில்கள் அனைத்தும் தாழ்த்தப்பட்டவர்களுக்காகத் திறந்து விடப்பட்டன மற்ற நகரங்களிலும் இந்த உதாரணம் பின்பற்றப்பட்டது. செப்டம்பர் 19-ஆம் நாள், நாடு முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. பிரதமர் தம் முடிவை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. உலகத்தின் கவனம் முழுதும், எரவாடாச் சிறையில் இருந்த மெல்லிய மனிதரின் மேல் திரும்பியது. உண்ணா விரதத்தை ஒத்திப் போடுமாறு நாடெங்கிலுமிருந்து காந்தியடிகளுக்கு வேண்டுதல்கள் வந்தன.

காந்தியடிகள் கூறினார்:

> ''இந்த உண்ணாவிரதத்தை நான் கடவுளின் பெயரால் மேற்கொள்ள இருக்கிறேன். கடவுளின் பணியை நிறைவேற்ற அவரது அழைப்பின்பேரிலேயே அதை நான் மேற்கொள்கிறேன். பொதுமக்கள் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள அவகாசம் கேட்டு, உண்ணாவிரதத்தை ஒத்திப்போடுமாறு என்னை வற்புறுத்துகின்றனர். ஆனால் இதை ஒரு மணி நேரம் கூட ஒத்திப்போட என்னால் இயலாது''.

காந்தியடிகள் மேற்கொள்ளவிருந்த உண்ணாவிரதம் நாடு முழுவதிலும் பரபரப்பைத் தோற்றுவித்தது; மக்கள் மிகத்தீவிரமாகச் செயல்பட்டனர். பொதுமக்களும், அரசியல் தலைவர்களும் பெரும் குழப்பமும், அச்சமும் அடைந்தனர். ஆனால் காந்தியடிகள் சிறிதும் சலனமின்றி அமைதியாக இருந்தார். செப்டம்பர் 18-ஆம் நாள் சபர்மதி ஆசிரம ஊழியர்களுக்கு எழுதிய கடிதத்தில், ''இறைவனின் திருவிளையாடல்கள் புரிந்துகொள்ள இயலாதவை. அவன் ஆட்டுவிக்கின்றபடி நான் ஆடுகிறேன். ஆகவே நான் உற்சாகமாக இருக்கிறேன். உடலின் மேல் வைத்திருக்கும்

பற்றினைத் துறப்பதற்கு, ஆசிரமத்தில் நாள்தோறும் நாம் பயிற்சி பெறவில்லையா? அந்தப் பாடத்தை நாம் முழுநிறைவாகக் கற்றுக் கொண்டதை நிரூபிக்க ஏற்ற தருணம் வந்துள்ளது. ஆகவே என்னைப்பற்றி யாரும் கவலைகொள்ள வேண்டாம். முடிவான இந்தச் சோதனையை ஏற்கும் வாய்ப்பு உங்களுள் ஒருவர்க்குக் கிடைத்திருப்பதை எண்ணி நீங்கள் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டும். இந்தச் சோதனையிலிருந்து வெற்றிகரமாக நான் மீண்டு வருவதற்குரிய வழியை இறைவன் எனக்குக் காட்ட வேண்டும் என்று நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள்''.

தமக்கு நல்லாசி வழங்கவேண்டுமென்று காந்தியடிகள் ரவீந்திரநாத் தாகூருக்குக் கடிதம் எழுதினார். உற்சாகமும் தைரியமும் ஊட்டும் சொற்களில் தாகூர் தம் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார்:

> ''இந்திய நாட்டின் ஒற்றுமைக்காகவும், சமுதாய ஒருமைப் பாட்டிற்காகவும் விலை மதிக்கமுடியாத உயிரைத் தியாகம் செய்வது கிடைத்தற்கரிய நல்வாய்ப்பு. துயருற்றுள்ள எங்கள் இதயங்கள் அன்புடனும், மரியாதையுடனும் உங்கள் பரிசுத்தமான தவத்தினைப் போற்றி உங்களுடனேயே இருக்கும்''.

இதே சமயத்தில் இந்து தலைவர்களின் மாநாடு ஒன்று செப்டம்பர் 19-ஆம் நாள் பம்பாயில் நடைபெற்றது. நூறு பிரதிநிதிகளுக்கு மேல் கலந்து கொண்ட அம்மாநாட்டிற்கு, பண்டித மதன்மோகன் மாளவியா தலைமை தாங்கினார். அம்மாநாட்டில் கலந்து கொண்டவர்களுள், திருவாளர்கள் சாப்ரு, ஜெயகர், ராஜகோபாலாச்சாரியார், ராஜேந்திரபிரசாத், M. C. ராஜா, டாக்டர் அம்பேத்கார், ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மாநாட்டில் நடைபெற்ற விவாதங்கள், இரண்டு கருத்துக்களில் அனைவரும் ஒன்றுபட்டு நின்றதைத் தெளிவாக்கின: 1. எப்பாடு பட்டேனும் காந்தியடிகளின் உயிரைக் காப்பாற்ற வேண்டும்; 2. தீண்டாமை என்ற கறையை மிகவிரைவில் போக்கவேண்டும். திரு. M. C. ராஜாவின் வேண்டுகோளின்படி அடுத்த நாள் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது. 'நாட்டிலிருந்து தீண்டாமை முற்றிலும் அழியும் வரை போராடுவோம்' என்ற அந்த உறுதி மொழியில் அனைவரும் கையொப்பமிட்டனர்

செப்டம்பர் 20-ஆம் நாள் காலையில் காந்தியடிகள் தம் பிரார்த்தனையை முடித்துக் கொண்டு தம் வழக்கமான காலை உணவான பாலும், பழமும் உண்டார். ஆறரை மணியிலிருந்து

எட்டு மணி வரை கீதை வாசிப்பைக் கேட்டார். 11.30 மணிக்குத் தம் கடைசி உணவான எலுமிச்சைச்சாறும், தேன் கலந்த வெந்நீரும் அருந்தினார். பன்னிரண்டு மணி நெருங்கிற்று. ''யாத்திரீகனே! பொழுது புலர்ந்து விட்டது; எழுந்திரு. இரவு கழிந்தது; இன்னும் உறங்குகிறாயே!'' என்ற இந்திப்பாடலை காந்தியடிகளும், மாகதேவதேசாயும், வல்லபாய்பட்டேலும் பாடினர். சிறை மணி பன்னிரண்டு அடித்தது; காந்தியடிகளின் உண்ணாவிரதம் தொடங்கிற்று.

மாலையில் பத்திரிகை நிருபர்கள் காந்தியடிகளைக் காண வந்தனர். ''மக்கள் என்னைப் பார்த்து நகைக்கவில்லை என்றால் எனக்குள்ள ஓர் உரிமையை உங்கள் முன் வைக்கிறேன். நான் பிறப்பால் 'தீண்டத்தக்கவன்.' ஆனால் நான் தீண்டத்தகாதவனாகவே இருக்க விரும்புகிறேன். தீண்டத்தகாதவர்களுக்குள்ளும், மேல் மட்டத்திலுள்ள முதல் பத்துப்பேர்களின் பிரதிநிதியாகவும் என்னைத் தகுதியாக்கிக் கொள்ள நான் முயன்றதில்லை. ஏனென்றால், அந்தப் பத்துப் பேர்களுக்குள்ளும் சாதியும், வகுப்பும் உள்ளன என்ற வெட்கக்கேடான சூழ்நிலையுள்ளது. எவருடைய கண்களிலும் படாமல், யாரும் அணுகாது வெறுத்து ஒதுக்கப்படும் மிகமிகத் தாழ்ந்த நிலையிலுள்ள தீண்டத்தகாதவர்களின் பிரதிநிதியாகவே இருக்க நான் விரும்புகிறேன். அவர்களே என் மனக்கண் முன் எப்பொழுதும் தோன்றுகின்றனர். அவர்களை நான் மலபாரிலும் ஒரிஸ்ஸாவிலும் சந்தித்திருக்கிறேன். தனித்தொகுதிகளை ஒதுக்குவதால் இவர்களை உயர்த்துவதென்பது இயலாது. ஏனென்றால் தனித்தொகுதிகளை ஒதுக்குவதால், அவர்களின் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளையே அது அழித்துவிடும் என்று நான் உணர்கிறேன்.

''நான் விரும்புவது, நான் வாழ்வது, நான் மகிழ்ச்சியுடன் சாவை ஏற்க இருப்பது—அனைத்துமே தீண்டாமையை வேருடன் களைந்து அழிக்க வேண்டும் என்பதற்காகத்தான். தீண்டத்தக்கவர்களும், தீண்டத்தகாதவர்களும் அகில இந்திய அடிப்படையில் ஒன்று கூடி ஆர்ப்பரிக்க வேண்டும். இது வெறும் நாடக மேடைக் காட்சியைப் போன்று இருக்கக் கூடாது. ஒருவரையொருவர் உண்மையான அன்புடனும், சகோதர நேயத்துடனும் தழுவிக் கொள்ளவேண்டும். இந்த அருமையான காட்சியைக் காணத்தான் நான் ஐம்பதாண்டு காலமாகத் தவம் மேற்கொண்டு உள்ளேன். இப்பொழுது அந்த யாகத்தீயில் குதிக்கும் தருணம் வந்துள்ளது.

''தீண்டாமை வேருடன் களையப்படுமானால், இந்து சமயத்தின் மேல் படிந்துள்ள அருவருப்பூட்டும் கறை நீங்கும். அத்துடன், இதன் நல்விளைவுகள் உலகெங்கும் உணரப் படும். தீண்டாமையை எதிர்த்து நான் போராடுவது மனித சமுதாயத்தின் மேல் இருக்கும் அழுக்கை நீக்கும் போராட்டமாகும்.''

செப்டம்பர் 20-ஆம் நாள் கோடிக்கணக்கான மக்கள் மன முருகிப் பிரார்த்தனை செய்தனர். விசுவபாரதி நிறுவனத்தைச் சேர்ந்தவர்களுக்கு உரையாற்றும்போது தாகூர் கூறினார்: ''இந்தியாவின் மேல் இன்று ஓர் இருள் கவ்விக்கொண்டுள்ளது. சூரிய கிரகணத்தன்று சூரியனை மறைக்கும் இருள் போன்றது இது. மகாத்மாஜி தம் திட்டவட்டமான முடிவைக் கூறிவிட்டார். சுதந்திரப் போர்க்களத்தில் நாம் அவரை இழந்துவிடும் துரதிஷ்டம் நேர்ந்தாலும், நாம் ஒவ்வொருவரும் இறுதிவரை போராடுவோம்.''

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்த நாளில் விருப்பு வெறுப்புக்கள் மறையத்தொடங்கின. நாடு முழுதும் நடைபெற்ற ஆயிரக்கணக்கான கூட்டங்களில் சாதி இந்துக்களும், தீண்டத் தகாதவர்களும் சகோதர மனப்பான்மையுடன் கலந்து பழகினார்கள். இந்தியாவெங்கும் பெரும் எண்ணிக்கையிலான கோயில்கள் தீண்டத்தகாதவர்களுக்காகத் திறந்துவிடப்பட்டன. இந்தியாவின் முக்கியமான கோயில்கள் பல, எந்தவகையான கட்டுப்பாடு மின்றித் தீண்டத்தகாதவர்களை அனுமதித்தது, தற்காலத்தில் நிகழ்ந்த பெரியதோர் அற்புதமாகும். காந்தியடிகள் தம் வெளிநாட்டு நண்பர்களுக்குத் தெரிவித்தார்: ''தீண்டாமையின் கறை அடியோடு மறையும் வரையிலும் மனத்திலிருக்கும் வேதனை நீங்காது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்வியக்கத்தில் திரண்டு ஈடுபட்டுத் தங்கள் உயிரைக்கொடுத்துப் போராட முன் வந்திருப்பதற்கு ஆண்டவனுக்கு நன்றி சொல்லவேண்டும்.''

இந்துத்தலைவர்களான திரு சி. ராஜகோபாலச்சாரி, டாக்டர் ராஜேந்திரபிரசாத், பண்டித மதன்மோகன் மாளவியா, திரு. H.N. குன்ஸ்ரு போன்றோர் அடங்கிய குழுவிற்கும், டாக்டர் அம்பேத்கார் திரு. M. C. ராஜா போன்றோர் அடங்கிய குழுவிற்கும் இடையே நீண்ட பேச்சுவார்த்தை நடைபெற்றது. பல்வேறு வழிமுறைகள் விவாதிக்கப்பட்டன. ஆனால் அவற்றில் பலவற்றை டாக்டர் அம்பேத்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. டாக்டர் அம்பேத்காரால் ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவு காந்தியடிகள் தம் உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ள வழிவகுப்பதாக இருக்கவில்லை. இறுதியில்

ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் வாசகத்தைக் காந்தியடிகள் எழுதினார்: 'இந்துக்களுள் யாரும் பிறப்பின் காரணமாகத் தீண்டத் தகாதவர்கள் என்று இனிமேல் கருதப்படமாட்டார்கள் என்றும், இதுவரை அவ்வாறு கருதப்பட்டவர்களுக்கு, மற்ற இந்துக்களுக்கு இருப்பதைப் போலவே, பொதுக்கிணறுகள், பள்ளிகள், பொதுச் சாலைகள் மற்றும் பொது நிறுவனங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை தரப்படும் என்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.'

திரு. சாப்ரு, டாக்டர் அம்பேத்கார், பண்டித மதன்மோகன் மாளவியா ஆகியவர்கள், பிரதமருக்கு அவசரத் தந்திகள் அனுப் பினார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை மாற்றி யமைக்கும் நடவடிக்கையை எடுக்கத் தாமதிக்கக் கூடாது என்று அந்தத் தந்திகளில் கேட்டுக்கொள்ளப்பட்டது. எரவாடா ஒப்பந்தம் பற்றிய இத்தந்திச் செய்தி கிடைத்தவுடனேயே ராம்சே மெக்டொனால்டும், சர் சாமுவேல் ஹோரேயும் லண்டனில் சந்தித்து நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினர். எரவாடா உடன்படிக்கையின்படி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை கை விடப்படும் என்று அறிக்கை வெளியிட்டனர். அமைச்சரவையின் சார்பாக இதுபற்றிய அறிக்கைகள், இங்கிலாந்திலும், இந்தியா விலும் ஒரே சமயத்தில் செப்டம்பர் 26-ஆம் நாள் காலையில் வெளியிடப்பட்டன.

காந்தியடிகள் எப்பொழுது தம் உண்ணாவிரதத்தைக் கை விடுவார் என்று மக்கள் ஆவலோடு காத்துக்கொண்டிருந்தனர். காந்தியடிகளின் உடல் நிலை மிகவும் ஆபத்தான கட்டத்தில் உள்ளது என்று செப்டம்பர் 26 ஆம் நாள் காலையில் வெளியான மருத்துவ அறிக்கையை அறிந்தபோது மக்களின் கவலை உச்ச நிலையை அடைந்தது. உடன்படிக்கையில் கூறப்பட்ட கருத்துக் கள் யாவும் அரசு அறிக்கையில் இடம் பெற்றுள்ளன என்று சட்ட வல்லுநர்களான திரு. M. R. ஜெயகர், திரு. தேஜ்பகதூர் சாப்ரு போன்றவர்கள் காந்தியடிகளுக்கு உறுதியளித்தனர். காந்தியடிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

காந்தியடிகள் தம் உண்ணாவிரதத்தைக் கைவிட்ட செய்தி யால் நாங்கள் ஆறுதல் அடைந்தோம். அதனால் பிரச்சனையே முடிந்து விட்டதாக நினைத்தோம். ஆனால் காந்தியடிகளைப் பொருத்தவரை அப்பொழுதுதான் அந்தப் பணியே தொடங்கி யிருந்தது. தாழ்த்தப்பட்ட வகுப்பினரை முன்னேற்றி அவர்களைச் சாதி இந்துக்களின் நிலைமைக்குச் சமமாக உயர்த்தும் பெரும் பணியை அவர் தொடங்கினார். இப்பெரும் பணியில் ஈடுபட்டுத்

தீண்டாமையை முற்றிலும் நீக்க ஒத்துழைக்கவும் உழைக்கவும் வேண்டுமென்று சாதி இந்துக்களையும், சமூகத் தொண்டர்களையும் கேட்டுக் கொண்டார்.

அரிஜன முன்னேற்றத்திற்கான பணிகள் தீவிரமாக நடந்ததால், அரசியல் நடவடிக்கைகளின் தீவிரம் குறைந்தது. நாங்கள் விடுதலையடைந்து வெளிவந்தவுடன் அரிஜன முன்னேற்றப் பணிகளில் முனைப்புடன் செயல்படத் தொடங்கினோம். காந்தியடிகளின் இப்பணியைப் பற்றியும், அதில் எனது பங்கைப் பற்றியும் இந்நூலின் வேறோர் இடத்தில் விரிவாகக் காணலாம்.

காந்தியடிகளால் தொடங்கப்பட்ட அரிஜன இயக்கத்தின் பணிகளால் நாட்டில் விரைவான மாறுதல்கள் தோன்றின. இது இந்துக்களின் மனச்சாட்சியைத் தொட்டது. ஆகவே, இந்தியாவின் புதிய அரசியல் சாசனத்தில், தீண்டாமை, சட்டப்படி ஒழிக்கப்பட்டுள்ளது. இன்று, ஆயிரக்கணக்கான அரிஜனங்கள் அமைச்சர்களாகவும், நிர்வாகிகளாகவும், பொறியியல் வல்லுநர்களாகவும், மருத்துவர்களாகவும் சிறந்து விளங்குகின்றனர். ஆயினும் இத்துறையில் செய்ய வேண்டிய பணிகள் பல உள்ளன. தீண்டாமையின் சுவடுகள் நகர்ப்புறங்களில் மறைந்து விட்ட போதிலும், கிராமங்களில் அவை முற்றிலும் மறைந்து விட்டதாகச் சொல்ல முடியாது. காந்தியடிகள் தம் உயிரையும் பொருட்படுத்தாது ஆற்றத் துணிந்த இப்பெரும் பணியை முற்றிலும் நிறைவேற்ற ஆயிரக்கணக்கான ஆண்-பெண் இளைஞர்கள் முன்வர வேண்டும்.

# 12. காந்தியடிகளுடன் ஒரு வாரம்

நான் சிறையிலிருந்து திரும்பியபோது எனக்கு ஒரு கெட்ட செய்தி காத்திருந்தது. வீட்டுக்குத் திரும்புமுன் சென்னைக்குச் சென்று மைலாப்பூர் ராமகிருஷ்ண மடத்தில் பிரார்த்தனை செய்வது வழக்கம். இம்முறை நான் மடத்திற்குச் சென்றபோது அதிர்ச்சியும், கவலையும் தரும் செய்தி காத்திருந்தது. மகாபுருஷ்ஜி மகராஜ் அவர்கள் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, ஒரு பக்கம் உடல் உறுப்புகள் செயலிழந்து, அவர் பேச இயலாத நிலையில் இருப்பதாக அறிந்தேன். என் பணிகள் யாவற்றிலும் என்னை ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி என்னை வலிமை பெறச் செய்யும் அவர் இவ்வாறு நோயுற்றது எனக்குப் பெரிய இழப்பாயிற்று.

குருதேவரிடம் அவருக்கிருந்த பூரண சரணாகதி, தூய அன்னையாரிடம் அவர் கொண்டிருந்த அளவற்ற பக்தி, சுவாமி விவேகானந்தரிடம் அவர் கொண்டிருந்த அன்பு, விசுவாசம், ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சீடர்கள்பால் அவர் கொண்டிருந்த எல்லையற்ற சகோதர நேயம், தம் சீடர்களின் ஆன்மிக வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த அக்கறை, துயரப்படுவோரிடம் அவர் கொண்டிருந்த இரக்கம், பாமர மக்களின் முன்னேற்றத்தில் அவர் காட்டிய தீவிர ஆர்வம்—இவையாவும் அவரை ஓர் ஒப்பற்ற மகானாக ஆக்கியிருந்தன. அவர் நூல்கள் எழுதவில்லை; பெரிய சொற்பொழிவுகள் ஆற்றவில்லை; ஆனால் அவர் தம் பக்தர்களுக்கும், சீடர்களுக்கும் எழுதிய கடிதங்களிலிருந்து அவருடைய ஆழ்ந்த கருணை, எதையும் எதிர்பாராத எல்லையற்ற அன்பு ஆகியவற்றை அறிய முடியும்.

சுவாமி சிவானந்தர் அவரது இறுதி ஆண்டுகளில் ஓர் ஆன்மிகச் சக்ரவர்த்தியாகத் திகழ்ந்தார். ராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவற்றின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின் அவரது தனித்திருக்கும் இயல்பு மறைந்து, சாதி, சமூகநிலை, பணம், படிப்பு ஆகிய வேறுபாடுகளைக் கடந்த பரந்த அன்பு அவரிடம்

வெளிப்பட்டு மிளிர்ந்தது; அதனால் கவரப்பட்டு ஆயிரக்கணக் கானோர் அவரது ஆறுதல் மொழிகளால் அமைதியடைந்து, ஆன்ம உயர்வு பெற்றுச் சென்றனர். இறுதி நாட்களில் அவர் நோய்வாய்ப்பட்டுப் பேசும் சக்தியை இழந்து ஒரு பக்கம் உட லுறுப்புகள் செயலிழந்த நிலையிலும், அனைவர்க்கும் உதவி செய்ய வேண்டுமென்று பெரிதும் விரும்பினார், இதனை அவரது கனிவான பார்வையிலிருந்தும், தம் இடக் கரத்தை மெதுவாக அசைத்துப் பக்தர்களை ஆசீர்வதித்த பாங்கிலிருந்தும் தெளிவாக நாங்கள் அறிந்து கொண்டோம். அந்த நிலையிலும் அவரது அன்பாலும், ஆசியாலும் பக்தர்கள் புத்துணர்வு பெற்றனர்.

அவர் நோயுற்றதைக் கேள்விப்பட்டதும், நான் பேலூர் மடத் திற்குச் சென்றேன். அவர் படுத்த படுக்கையாயிருந்தார். அவரால் பேச முடியவில்லை. ஆனால் அவரது கண்களின் ஒளியிலிருந்தும், அவர்தம் அருட்கரத்தால் என் கையை அன்புடன் பற்றியதிலிருந்தும் அவரது அன்பும், நல்வாழ்த்துக்களும் ஆயிரம் மடங்கு வெளிப்பட்டதை நான் உணர்ந்தேன். ''இந்த உடல் போனால் என்ன? என் நல்லாசிகள் உனக்கு என்றும் உண்டு. என் மகனே! ஆண்மையுடன் முன்னேறிச் செல்! ஸ்ரீ ராம கிருஷ்ணர் என்றும் உன்னுடன் இருப்பார்.'' என்று அவர் வாழ்த்துவது போல் இருந்தது. அதுதான் நான் பெற்ற அவரது இறுதி நல்லாசிகள் ஆகும். சில நாட்களில் அவர் மகாசமாதி அடைந்தார். அவர் எனக்குத் தனது நல்லாசிகளை வழங்கவே இதுவரை காத்துக் கொண்டிருந்தது போல் இருந்தது. அவரது மறைவு எனக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். ஆன்மிகப் பெருந்தகைகளின் பூத உடல்கள் மறைந்தாலும், அவர்களது ஆன்மிகப் பேரொளி என்றும் மறைவதில்லை. அவர்களது அன்பையும், ஆசியையும் பெற்றவர்களுக்கு அது என்றும் ஒளி கொடுத்து வழிகாட்டிக் கொண்டே இருக்கும்.

நான் வித்யாலயத்திற்குத் திரும்பி வந்த போது அங்கும் நிலைமை சரியாக இல்லை. நான் வெளியே சென்றிருந்த காலத்தில் அவர்கள் தைரியமாகக் காரியங்களைச் செய்து கொண்டிருந்தனர். தம் உடல் நலக் குறைவிலும்கூட, திரு. மாணிக்கசுவாமி முதலியார் வித்யாலயத்தை மிகுந்த அன்புடனும், தைரியத்துடனும் கவனித்து வந்திருந்தார். ஆனால் அந்த இடத்தில் பாம்புகள் நிறைந்திருந்தன. கிணற்றில் தண்ணீர் குறைந்து தண்ணீர்த் தட்டுப்பாடு தோன்றியிருந்தது. இந்தத் தொல்லைகளுடன், ஒரு நாள் சமையல் கூடம் தீப்பற்றிக் கொண் டது. அது தானாக ஏற்பட்ட விபத்தா, வேண்டுமென்றே யாரேனும்

செய்ததா என்பது யாருக்கும் தெரியவில்லை. இந்த இன்னல் களின் காரணமாக, வித்யாலயத்தைப் போத்தனூருக்கு மாற்றி னோம். இதைப் பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம்.

நான் வித்யாலயத்திற்குத் திரும்பிய சில நாட்களில் திரு மாணிக்கசாமி முதலியார் தாம் எவ்வாறு வந்தாரோ அவ்வாறே சென்று விட்டார். வித்யாலயம் ஒரு குறையுமின்றி நடைபெறு வதற்காக இறைவனால் அனுப்பப்பட்டு எங்கிருந்தோ வந்த அவர் தம் பணி நிறைவுற்றவுடன் சென்று விட்டார். தக்க சமயத்தில் வந்து மிகவும் பக்தியுடன் பணியாற்றிய அவருக்கு வித்யாலயம் என்றென்றும் கடமைப் பட்டுள்ளது.

இந்தக் காலக்கட்டத்தில் காந்தியடிகள் முழுக்க முழுக்கத் தீண் டாமை ஒழிப்பில் ஈடுபட்டிருந்தார். இந்து சமூகத்தைப் பீடித்துள்ள இந்த பயங்கர நோயை நீக்கவேண்டியதன் அவசியத்தைப் பற்றி அவர் புண்பட்ட நெஞ்சத்துடன் வெளியிட்ட வேண்டுகோள், நாடு முழுதும் பல்லாயிரக்கணக்கான நெஞ்சங்களை நெகிழ்வித்து ஈர்த் தது. அரிஜனங்களை ஆலயங்களில் அனுமதிப்பதுதான் உயர்ந்த சாதியினரின் மனமாற்றத்திற்கு ஒரு நிரூபணம் என்று அவர் கூறினார். அரிஜன ஆலயப்பிரவேசப் போராட்டம் கேரளாவில் உள்ள குருவாயூர்க் கோயிலில் தொடங்கிற்று. அந்த ஆலயத்தை அனைத்துச் சாதிகளைச் சேர்ந்த இந்துக்கள் அனைவர்க்கும் திறந்துவிடவேண்டும் என்று போராட்டம் நடைபெற்றது. திரு ரங்கா அய்யரும், டாக்டர் சுப்பராயன் அவர்களும் இதற்கான மசோதாக்களை மத்தியச் சட்டசபையிலும், சென்னைச் சட்டசபை யிலும் கொண்டுவந்தனர். காந்தியடிகளின் தூண்டுதலால் 'அரிஜன்' என்ற வார இதழ் வெளியிடப்பட்டது. அந்த இதழுக்கு 'அரிஜன்' என்ற பெயர், ஏன், எப்படிக் கொடுக்கப்பட்டது என்பதை அதில் காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு விளக்கியிருந்தார்:

> ''இந்தச் சொல் என்னால் உருவாக்கப்பட்டது அல்ல. சில ஆண்டுகளுக்கு முன் ஒரு சில 'தீண்டத்தகாத' நிருபர்கள், நான் 'அஸ்ப்ருஷ்ய' என்ற சொல்லை நவஜீவன் இதழில் பயன்படுத்தியதாகக் குறை கூறினர். 'அஸ்ப்ருஷ்ய' என்றால் 'தீண்டத்தகாதவன்' என்று பொருள். அப்போது நான் வேறு ஒரு பொருத்தமான பெயரைக் கூறுமாறு அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அவர்களில் ஒருவர் 'அரிஜன்' என்ற பெயரைக் கூறினார். அச்சொல் குஜராத்தின் கவிஞரும், ஞானியுமான ஒருவரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அது ஒரு நல்ல சொல் என்று நான் கருதினேன். 'அரிஜன்'

என்பதற்கு 'இறைவனின் மனிதன்' என்று பொருள். உலகின் சமயங்கள் யாவும் இறைவனை, திக்கற்றவர்களுக்கு நண்பன் என்றும், எளியோரைக் காப்பவர் என்றும் விவரித்துள்ளன. எனவே இறைவனின் மக்கள் என்று யாராவது இருப்பார்களேயானால், அவர்கள் நிச்சயம் இந்த, திக்கற்றோர், ஆதரவற்றோர், எளியோர்களாகத்தான் இருக்க முடியும். ஆகவே அன்றிலிருந்து நான் தீண்டத் தகாதவர்களைக் குறிப்பதற்கு 'அரிஜன்' என்ற சொல்லையே நவஜீவன் இதழ்களில் பயன்படுத்தினேன். இந்தப்பெயர் மாற்றத்தினால் மட்டும் அவர்களின் நிலையில் எவ்வித மாற்றமும் தோன்றி விடாது. என்றைக்கு உயர்ந்த ஜாதி இந்துக்கள் தாமாகத் தீண்டாமையை ஒழிப்பார்களோ, அன்றே நாம் அனைவரும் 'அரிஜனங்கள்' என்று அழைக்கப் படுவோம். ஏனெனில், என் கருத்துப்படி, அப்பொழுது அந்த உயர்ந்த சாதி இந்துக்கள் கடவுளின் அருளைப் பெற்று உண்மையிலேயே 'அவனுடைய மக்கள்' என்ற நிலையைப்பெறுவர்.''

தாம் உண்ணாவிரதம் இருக்கப் போவதைக் காந்தியடிகள் ஏப்ரல் 29-ஆம் நாள் அறிவித்தார். இவ்வாறு அவர் அறிவித்த அன்று அவருக்கு ஓர் ஆன்மிக அனுபவம் கிடைத்தது. இதைப் பற்றி அவர் கூறியதாவது:

''அடுத்த நாள் காலையில் நான் அறிவிக்கவிருந்த என் உண்ணாவிரதத்தைப் பற்றிய எண்ணம் எள்ளளவும் இன்றி நான் உறங்கச் சென்றேன். இரவு பன்னிரண்டு மணியளவில் ஏதோ ஒன்று என்னைத் திடீரென்று எழுப்பிற்று. அச்சமயம் என் உள்ளிருந்து அல்லது வெளியிலிருந்து (என்னால் சரியாகச் சொல்ல இயலவில்லை) ஒரு குரல், ''நீ உண்ணாவிரதம் இருக்க வேண்டும்'' என்று சொல்லக் கேட்டேன். 'எத்தனை நாட்கள்?' என்று நான் கேட்டேன். 'இருபத்தொரு நாட்கள்,' என்று அக்குரல் சொல்லிற்று. ''உண்ணாவிரதம் இருப்பதென்ற முடிவுடன் நான் உறங்கச் சென்றேன். அடுத்த நாள் காலைப் பிரார்த்தனைக்கு முன் இதைப்பற்றி என் நண்பர்களிடம் நான் எதுவும் சொல்லவில்லை.'' அடுத்த நாள் காந்தியடிகள் கீழ்க் கண்ட அறிவிப்பைச் செய்தார்: ''சில நாட்களாகவே என் உள்ளத்தில் பெரும்புயல் ஒன்று வீசிக்கொண்டுள்ளது. அதை எதிர்த்து நான் போராடி வருகிறேன். அரிஜன தினத்தன்று அந்தக்குரல் என்னை வற்புறுத்தி, ''நீ ஏன் அதைச்செய்யக் கூடாது?'' என்று கேட்டது. நான் அதற்கு உடன்படவில்லை.

ஆனால் என் முயற்சி பலிக்கவில்லை. மே மாதம் 8ஆம் நாள் திங்கட்கிழமை நண்பகலில் தொடங்கி மே மாதம் 29ஆம் நாள் திங்கட்கிழமை, நிபந்தனையற்ற மாற்றவியலாத, 21நாள் உண்ணா விரதம் இருக்க நான் தீர்மானித்துவிட்டேன்.

''இந்த உடலினால் மேலும் அதிகமான சேவையைக் கடவுள் விரும்புவாரானால், இந்த உடலுக்கான உணவின்றியே அதனைக் காப்பாற்றி நலமாக வைத்திருப்பார். அவர் எனக்கு ஆன்மிக உணவினை அளிப்பார். ஆனால் அவர் இவ்வுலகின் மக்கள் பிரதி நிதிகள் மூலம் செயல்படுகிறார். ஜாதி இந்துக்களின் பெயரில் நான் அரிஜனங்களுக்குக் கொடுத்த உறுதிமொழியினை ஏற்று எப்பாடுபட்டேனும் தீண்டாமையை நீக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த ஒவ்வோர் ஆணும் பெண்ணும் தங்கள் முழு ஆற்றலையும் பயன்படுத்தி உழைப்பதன் மூலம் எனக்குத் தேவையான உணவினை அளிப்பார்கள்.''

காந்தியடிகளின் உண்ணாவிரதத்தை அறிந்து நாடே பெரும் அதிர்ச்சி அடைந்தது. இந்த உண்ணாவிரதத்தினைத் தாங்கும் சக்தி காந்தியடிகளின் மெல்லிய உடலுக்கு இல்லை என்று கருதிய, அவரது உள்நாட்டு, வெளிநாட்டு நண்பர்கள் அவரது திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தனர். இவர்களுக்குக் காந்தியடிகள், ''இறைவனின் குரலுக்குச் செவிசாய்க்க வேண்டுமென்று நான் கூறுவது புதிதல்ல. மிகக் கடுமையான சோதனைகளையும் தாங்கக் கூடிய சக்தியை அவர் தம் அடிமைக்கு அளித்துள்ளார். கடவுளின் திருவுளத்தை யாரும் புரிந்து கொள்ள இயலாது''. என்று பதில் கூறினார். அவர் இறந்து விடுவார் என்று நினைத் தவர்களுக்கு அவர், ''சிறிது காலமே இருக்கக் கூடிய மனித உடல் மறைந்து விடும் போது, தொண்டு செய்ய உதவ அவன் சக்தியும் மறைந்து விடுகின்றது என்று எண்ணுவது மிகவும் வருத்தத்துக் குரியது. ராமகிருஷ்ணர், விவேகானந்தர், தயானந்தர், ராமதீர்த்தர் ஆகியோரின் ஆன்மாக்கள் இன்றும் நம்முடன் இருந்து பணியாற்றுகின்றதை யாரால் மறுக்கவியலும்? நல்ல மனிதர்கள் செய்யும் செயல்கள் யாவும் அவர்களுடனேயே மறைந்து விடுகின்றன என்பது உண்மையல்ல,'' என்று கூறினார்.

காந்தியடிகளின் உண்ணாவிரதம், குறித்த நாளில் தொடங் கிற்று. உண்ணாவிரதம் கொண்டிருந்த காந்தியடிகளைச் சிறை யில் வைக்கும் பொறுப்பை ஏற்க விரும்பாத இந்திய அரசு அவரை விடுதலை செய்து பூனாவில் உள்ள லேடி தக்கர்சியின் இல்லத்திற்கு மாற்றியது.

இந்த உண்ணா விரதம், உயர்ந்த சாதியினரின் மனச்சாட்சியை உலுக்கிச் செயல்படச் செய்தது. அரிஜனங்களின் துயர் துடைத்து அவர்களை முன்னேற்ற நாடெங்கிலும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரிஜன மாணவர்களின் கல்விக்காகப் பல நகரங்களில் அரிஜன மாணவர் விடுதிகளைக் காங்கிரசார் தொடங்கினர், பிராமணர்களும், மற்ற உயர் வகுப்பாரும் அரிஜனங்களின் முன்னேற்றத்தில் தலைமையேற்க வேண்டும் என்று காந்தியடிகள் கேட்டுக்கொண்டார். கோவையில் திரு. E. S. நாராயண அய்யர் அரிஜன மாணவர்களுக்கு விடுதி ஒன்றைத் தொடங்கினார். திரு. D.S. ராம அய்யங்காரும், திரு. K. S. ராமசாமிக்கவுண்டரும் இத்தகைய நிறுவனங்களை கோபிச்செட்டிப்பாளையத்திலும், திருப்பூரிலும் தொடங்கினர். மதுரையில் திரு. N. M. R. சுப்பராமன் அவர்கள் சேவாலயத்தைத் தொடங்கினார். இத்தகைய நிறுவனங்கள் நாட்டின் பல இடங்களிலும் தொடங்கப்பட்டன. அரிஜனங்களின் மேல் மக்கள் கொண்ட இப்புதிய பரிவுணர்வினால் சாதிப்பாகுபாட்டின் இறுக்கம் குறைந்தது.

ஆனால் பழைமைவாதிகளிடமிருந்து இதற்கு எதிர்ப்பு இல்லை என்று சொல்லமுடியாது. இருப்பினும் இப்பணி தொடர்ந்து நடைபெற்றது.

அரிஜன இயக்கத்தின் தாக்கம் வித்யாலயத்திலும் இருந்தது. தொடக்க நாட்களில் வித்யாலயத்தில் அரிஜனமாணவர்களும், மற்றவர்களும் சமமாக நடத்தப்பட்டதற்கு இருந்த சமூக எதிர்ப்புக் குறைந்து நல்ல வசதிபடைத்த உயர்குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் வித்யாலயத்தில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்கத் தொடங்கினர். நிறுவனத்தின் பெருமை உயர்ந்தது. அரிஜன இயக்கப் பயணத்தின் போது காந்தியடிகள் வித்யாலயத்திற்கு வந்து அங்கு ஓர் இரவு தங்கியதால் அதன் பெருமை மேலும் உயர்ந்தது.

உண்ணாவிரதம் முடிந்ததும் காந்தியடிகள் விடுதலை செய்யப்பட்டார். அரிஜன முன்னேற்றத்திற்காக நாடு முழுவதும் பயணம் செய்தார். அரசியல் காரியங்கள் யாவும் தற்காலிகமாக மறக்கப்பட்டு, தீண்டாமையை ஒழித்து அரிஜனங்களை முன்னேற்றவே அவரது முயற்சிகள் யாவும் செலுத்தப்பட்டன. மீண்டும் மீண்டும் அவர், ''என்னுடைய நோக்கில் அரிஜனப் பணிகள்யாவுமே சமயத் தொண்டாகும். இந்த இயக்கத்தை நான் தொடங்கியுள்ளது எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்தையோ, சாதியையோ எதிர்த்து அல்ல

என்பதை நான் மிகப் பணிவுடன் ஆனால் முழு நம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனக்கு யாரும் எதிரிகள் அல்லர் என்று நம்புகிறேன். எந்த ஓர் உயிர்க்கும் நான் தீங்கு நினைக்கவில்லை. இந்துக்களின் உள்ளத்திலிருந்து தீண்டாமை என்ற கறை முழுவதும் நீங்கிவிட்டால், அதனால் இந்தியாவிலுள்ள அனைத்துச் சாதியினரும், ஏன் உலகம் முழுவதுமே நற்பயன் பெறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்,'' என்று கூறினார்.

காந்தியடிகளின் பயணத்தின்போது நடைபெற்ற ஒவ்வொரு கூட்டத்திலும் அரிஜன நிதிக்கு ரூபாய் நோட்டுகள், வெள்ளி, செம்பு நாணயங்கள் எனப் பெருந்தொகைகள் வந்து குவிந்தன. 'நீங்கள் கொடுக்கும் பணம் அரிஜன முன்னேற்றத்திற்கு நீங்கள் அளிக்கும் ஆதரவின் அறிகுறி' என்று அவர் திரும்பத் திரும்பக் கூறிவந்தார். 'வெறும் பணம் மட்டும் போதாது; பணத்துடன் உங்கள் நல்ல உள்ளமும் வேண்டும்' என்று கூறுவார். அவர் பயணம் செய்த வழியில் ஒரு கிராமத்தார் ஏற்பாடு செய்த கூட்டத்தில் நன்கொடை வசூலித்த போது அவர், ''தீண்டாமை என்பது இந்து சமயத்தில் உள்ள ஒரு கறை. அது அதன் உயிர்ச் சத்தினை உறுஞ்சும் ஒரு தொற்றுநோய். என்னைப் போல் நீங்களும் நினைப்பீர்களானால், தீண்டாமை ஒழிப்புக்கு உங்களால் இயன்றதைக் கொடுங்கள். இந்துசமயத்தின் ஆன்மிகச் சக்தியை இழந்துவிட்டோமானால் நமக்கு என்ன நேரிடும் என்று சொல்ல முடியாது. சமய நம்பிக்கையற்ற மனிதன், சுக்கான் இல்லாத கப்பலைப் போன்றவன். ஆகவே நீங்கள் கொடுக்கும் பணம், இந்து சமயத்தை அதன் ஆன்மிக அழிவிலிருந்து காப்பாற்ற நினைக்கும் உங்கள் விருப்பத்தின் அடையாளம் என்று நான் மனதார நினைக்கிறேன்'', என்று கூறித் தம் கருத்தை விளக்கினார்:

> ''அரிஜன சேவை ஒரு சமயக்கடமையாகும். அதில் தந்திரத்திற்கு இடமில்லை. அது உண்மையானதாகவும், அஹிம்சை முறையிலும் அமையவேண்டும். கடுமையான தவத்தினாலும், தியாகத்தினாலுமே அதை நிறைவேற்ற முடியும். நம்மைத் தூய்மைப் படுத்திக் கொண்டாலன்றி அரிஜனங்களின் நம்பிக்கையைப் பெற இயலாது. நம் செயல்கள் அனைத்தையும் அவர்கள் தற்சமயம் சந்தேகக்கண்கொண்டும், நம்பிக்கையின்றியும்தான் பார்க்கிறார்கள். இதுவரையிலும் நாம் அவர்களின் உழைப்பை உறிஞ்சி வாழ்ந்துவிட்டோம். ஆகவே அவர்களுக்குரிய நீதியை வழங்கவும், மற்ற இந்துக்களைப் போல் அவர்களையும் நடத்தவும் நாம் விரும்புவோமாயின்

அவர்களின் முதுகிலிருந்து இறங்கி அவர்களின் சுமையை நாம் குறைக்க வேண்டும்.''

கூட்டங்களில் கலந்து கொண்ட பெண்களுக்கும் அவர் வேண்டு கோள் விடுத்து, அரிஜன நிதிக்காகத் தங்கள் நகைகளை அளிக்கு மாறு கேட்டுக்கொண்டார். ''இந்த நாட்டின் எட்டுச் சதவீத மக்களுக்குப் போதிய சத்துணவு கிடைக்காதபோது நகைகளை அணிவது பெரும்பாவம். தங்கள் சொந்தப் பணம் என்று சொல் வதற்குப் பெண்களிடம் எதுவும் இல்லை. ஆனால் அவர்கள் அணிந்துள்ள நகைகள் அவர்களுக்குச் சொந்தமானவை. ஆயினும் தங்கள் கணவர்களின் அனுமதியின்றி அவற்றைக் கொடுக்க மாட்டார்கள்; கொடுக்கும் துணிவு அவர்களுக்கு இல்லை. அவற்றை அவர்கள் மனமுவந்து கொடுத்தால் ஒரு புனிதச் செயலுக்கு கொடுத்த புண்ணியம் அவர்களுக்குச் சேரும்.''

மாணவர்களுக்கு உரையாற்றும் போது, வாளியையும் துடைப்பத்தையும் எடுத்துக் கொண்டு சென்னை அரிஜனச் சேரிகளைத் துப்புரவு செய்யுமாறும், பயனுள்ள வகையில் அவர் களுக்குச் சேவை செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

சென்னையிலிருந்து காந்தியடிகள் கர்நாடகத்திற்கும், கேரளா வுக்கும் சென்று விட்டுத் தமிழ்நாட்டுக்கு வந்தார். தமிழ் நாட்டில் காந்தியடிகளின் பயணத்திற்கு, திருச்சியைச் சேர்ந்த டாக்டர் T. S. S. ராஜன் அவர்கள் பொறுப்பேற்றிருந்தார். காந்தியடிகள் சென்ற இடமெல்லாம் ஆயிரமாயிரம் ஆண்களும், பெண்களும் திரண்டுவந்து கூட்டத்தில் கலந்து கொண்டனர். மக்கள் போட்டி போட்டுக்கொண்டு அரிஜன நிதிக்கு உதவினர். பெண்கள் தங்கள் நகைகளை அளித்தனர். ஏழைகளும் தங்களால் இயன்றதை அளித்ததை காந்தியடிகள் பெரிதும் பாராட்டினார். பல நிறுவனங்கள் நகராட்சிகள், ஊராட்சிகள் அவருக்கு வரவேற்புப் பத்திரங்கள் வாசித்து அளித்தன. காந்தியடிகளின் வருகை மக்களி டத்தில் புதியதோர் உற்சாகத்தை ஊட்டி அரிஜன இயக்கத்திற்குப் புதிய எழுச்சியை நல்கியது. ஆனால் பழைமைவாதிகளான இந்துக்களிடமிருந்து எதிர்ப்பும் இருந்தது. பிரிட்டிஷாரின் ஆதரவுச் செய்தித்தாளான மெட்ராஸ் மெயில், காந்தியடிகளைப் பற்றியும், அரிஜன இயக்கத்தைப்பற்றியும் கடுமையாகத் தாக்கியும், தூற்றியும் கட்டுரைகளை வெளியிட்டது. சாதி இந்துக் களுடன் அரிஜனங்களையும் சமநிலையில் நடத்தி அவர்களை ஆலயங்களுக்குள் வழிபாடு செய்ய அனுமதித்தால் இந்து சமயம் அழிந்துவிடும் என்று அக்கட்டுரைகள், சாஸ்திரங்களை மேற்கோள்

காட்டி எழுதின. அரிஜனங்களை ஆலயங்களுக்குள் அனுமதிப்பதை அவர்கள் கடுமையாக எதிர்த்தனர். காந்தியடிகளுடன் பேச வேண்டுமென்று அவர்கள் கூறினார்கள். தம் தீவிரமான சுற்றுப் பயணத்திற்கிடையிலும் அவர்களைச் சந்திக்க அன்புடன் இசைந்தார் காந்திஜி. அவர்களின் ஒவ்வோர் எதிர்ப்புக்கும் அரிஜன வார இதழில் பதில் எழுதினார்.

காந்தியடிகளின் கேரளச் சுற்றுப்பயணத்தின் போது மனத்தை உருக்கும் நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. அதைப்பற்றி அவர் பின்வருமாறு எழுதினார்:

''அரிஜன பயணத்தின்போது நிகழ்ந்த மனத்தை உருக்கும் நிகழ்ச்சியைப் போன்று வேறு நிகழ்ச்சியைக் குறிப்பிட இயலாது. அப்பொழுதுதான் படகரா என்ற இடத்தில் என் உரையை முடித்திருந்தேன். தங்கள் நகைகளை நன்கொடையாக வழங்கு மாறு அவ்வுரையில் நான் பெண்களைக் கேட்டுக்கொண்டேன். என் உரையை முடித்து, நன்கொடையாக வந்த பொருள்களை விற்றுக் கொண்டிருந்தேன். அப்பொழுது, கௌமுகி என்ற பெயர் கொண்ட பதினாறு வயதுள்ள பெண் ஒருத்தி என்னிடம் ஒரு வளையலைக் கொடுத்துக் கையொப்பத்தைக் கேட்டாள். நான் கையொப்பம் இட்டுக் கொண்டிருந்தபோதே மற்றொரு வளையலையும் எடுத்தாள். நான் அவளிடம். ''நீ இரண்டு வளையல்களையும் கொடுக்கவேண்டியதில்லை. என் கையொப் பத்திற்கு ஒரு வளையல் போதும்,'' என்றேன். தன் கழுத்தி லிருந்த அட்டிகையையும் அவள் கழற்றிக் கொடுக்க முயன்றாள். தன் நீண்ட கூந்தல் வழியாக அதனை எடுத்துக் கொண்டிருந்தாள். ''இதைக் கொடுக்க உன் பெற்றோரின் அனுமதியைப் பெற்றாயா?' என்று நான் கேட்டேன். அவள் பதிலேதும் கூற வில்லை. அட்டிகையைத் துறந்ததோடு அவள் நிற்கவில்லை. தன் காதுகளில் அணிந்திருந்த கற்கள் பதித்த தோடுகளையும் கழற்றிக் கொடுத்தாள். இதைக் கண்ட கூட்டத்தினரின் மகிழ்ச்சி ஆரவாரம் அடங்க நீண்ட நேரமாயிற்று. இத்தியாகத்திற்கு அவள் தன் பெற்றோரின் அனுமதி பெற்றாளா என்று மீண்டும் நான் அவளைக் கேட்டேன். அவளிடமிருந்து பதில் வருவதற்குள், அப்பெண்ணின் தந்தை அந்தக் கூட்டத்தில் இருப்பதாகவும், நன்கொடைப் பொருள்களை ஏலம் விடுவதற்கு ஏலம் கூறி எனக்கு உதவி செய்தவர் அவரே என்றும் அருகில் இருந்த ஒருவர் கூறினார். அப்பெண்ணைப் போலவே அவரும் தயாள சிந்தை உள்ளவர் என்றும், நற்காரியங்களுக்கு அள்ளிக்கொடுப்பவர் என்றும் தெரியவந்தது. கௌமுகிக்கு மீண்டும் வேறு நகைகள்

கிடைக்காது என்று நான் அவளிடம் நினைவுபடுத்தினேன். என் நிபந்தனையை அவள் உறுதியுடன் ஏற்றுக்கொண்டாள். நான் கையொப்பமிட்ட அவளது நோட்டுப்புத்தகத்தில், ''நீ துறந்து விட்ட அணிகலன்களைக் காட்டிலும் உன் தியாகம் தான் உனக்குச் சிறந்த அணிகலன்' என்று எழுதிக் கையொப்பமிட்டேன். இந்த நிகழ்ச்சியைத் தமிழ் நாட்டில் நடைபெற்ற பல கூட்டங்களில் காந்தியடிகள் எடுத்துக் காட்டினார்.

கேரளாவிலிருந்து காந்தியடிகள் தமிழ் நாட்டின் தெற்குப் பகுதியின் வழியாகத் தமிழ் நாட்டிற்குள் வந்து இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற் கொண்டார். மதுரையில் திரு A. வைத்தியநாத அய்யரும், திரு N. M. R. சுப்பராமன் அவர்களும் பயண ஏற்பாடுகளைச் செய்தனர். அப்போது காந்தியடிகள் மதுரையில் திரு சுப்பராமன் அவர்களின் இல்லத்தில் தங்கினார். மதுரையிலிருந்து பழனி வழியாக அவர் கோயம்புத்தூர் வந்தார். ஒவ்வொரு நாளும் பத்துக்கு மேற்பட்ட கூட்டங்களில் அவர் உரையாற்ற வேண்டி யிருந்தது. ஒவ்வொரு நாளும் அவர் நள்ளிரவுக்குப் பின்னரே உறங்கச் செல்வார். ஆனாலும் அவர் எவ்வளவு நேரம் கழித்து உறங்கச் சென்றாலும் அதிகாலை 4-00 மணிக்கு எழுந்து தவறா மல் பிரார்த்தனையில் கலந்து கொள்வார். மாலைப் பிரார்த்தனை 5-00 மணிக்கு அவர் இருக்குமிடத்தில் நடைபெறும். ஒவ்வொரு கூட்டத்திலும் கிடைக்கும் நன்கொடைப் பொருள்கள் ஏலம் விடப் பட்டு அந்தப் பணம் அரிஜன நிதியில் சேர்க்கப்படும். இவ்வாறு வந்த தொகையும், நன்கொடையாக வந்த ரொக்கமும் எண்ணப் பட்டு, கணக்கில் எழுதப்பட்ட பின்னரே அவர் உறங்கச் செல்வார். அவருடன் பயணம் செய்த இளைஞர்கள் பலரால் அவரது கடுமையான உழைப்புக்கு ஈடுகொடுக்க இயலவில்லை. 65 வயதிலும் அவரிடம் இருந்த அந்த அற்புத ஆற்றல் ஆயிரக் கணக்கான இளைஞர்களை ஊக்குவித்து அரிஜனச் சேவையில் ஈடு படச் செய்தது. ஆனால் இவ்வாறான தொடர்ந்த பயணமும், பேச்சும், உறக்கமின்மையும் அவர் உடல் நலத்தைப் பாதித்தன. அவருக்கு ஓய்வு மிகவும் தேவையாயிருந்தது. ஆகவே அவர் குன்னூரில் ஓய்வெடுக்கத் திட்டம் வகுக்கப்பட்டது. அமிர் தாஞ்சனம் உரிமையாளர் குன்னூரில் இருந்த தம் பங்களாவை, காந்தியடிகள் ஓய்வெடுக்க அன்புடன் ஒதுக்கிக் கொடுத்தார். ஆகவே அவரது கோயம்புத்தூர்ப் பயணம் முடிந்ததும் குன்னூரில் ஒரு வாரம் ஓய்வெடுப்பதென்றும், ஓய்விற்குப்பின் கோவை மாவட்டத்தின் எஞ்சிய பகுதிகளுக்குச் செல்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. டாக்டர் T. S. S. ராஜன் அவர்களும் களைப்

படைந்திருந்தார். ஆகவே நீலகிரி-கோயமுத்தூர் பயணங்களுக்கு நான் பொறுப்பேற்றேன். இதை எனக்குக் கிடைத்த ஒரு பெரும் பேறாகக் கருதினேன். ஒரு வார காலம் காந்தியடிகளுடன் தங்கி அவருடன் பயணம் செய்து அவருக்குச் சேவை செய்யும் நற்பேறும், நல்வாய்ப்பும் எனக்குக் கிடைத்தன.

நாங்கள் குன்னூரை அடைந்த அந்த நாளிலேயே ஒரு நிகழ்ச்சி நடந்தது. பிற்பகல் வெகுநேரம் கழித்து நாங்கள் குன்னூரை அடைந்த பொழுது அனைவரும் களைத்திருந்தனர். அதனால் பகல் உணவிற்குப்பின் அனைவரும் ஓய்வெடுக்கச் சென்று விட்டனர். ஓய்விற்குப்பின் மாலை 4-00 மணிக்கு எழுந்து அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தபோது காந்தியடிகள் தம் கைத்தடியுடன் வெளியில் வந்தார். சாப்பிட்ட எச்சில் இலைகளை வேலைக்காரர்கள் கண்ட இடங்களில் போட்டு அந்தச் சுற்றுப்புறத்தை அசுத்தப் படுத்தியிருந்தனர். இதைப்பற்றி யாரிடமும் எதுவும் சொல்லாமல் காந்தியடிகள் தம் கைத்தடியைக் கீழே வைத்து விட்டுத் தம் இரு கைகளாலும் எச்சில் இலைகளை வாரிக் குப்பைக் குழியில் போட்டுக் கொண்டிருந்தார். இதைக் கண்ட நாங்கள் மிகவும் பதறிப் போனோம். உடனே அங்கிருந்த எச்சில் இலைகளையெல்லாம் அப்புறப்படுத்தி அந்த இடத்தைத் துப்புரவு செய்தோம். ஒருமுறை காந்தியடிகளிடம் நிருபர், ஒருவர் 'தங்கள் செய்தி என்ன?' என்று கேட்டார் அதற்குக் காந்தியடிகள், ''என் வாழ்க்கையே என் செய்தி. சொல்வதற்குத் தனியாக என்னிடம் செய்தியேதும் இல்லை,'' என்று சொன்னார். அதற்கு விளக்கம் தருவதுபோல் அமைகிறது இந்நிகழ்ச்சி.

குன்னூரில் இருந்த பொழுது காந்தியடிகள் உதகைக்குச் சென்றார். கோத்தகிரி, குன்னூர் முதலிய இடங்களில் கூட்டங்கள் நடைபெற்றன. ஒரு வார ஓய்விற்குப் பின் தம் பயணத்தைத் தொடர்ந்தார். உதகையில் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டதுடன், ராமகிருஷ்ண ஆசிரமத்திற்கும், கண்டல் மடத்திற்கும் சென்றார்.

பயணத்தின் போது சொக்கம்பாளையம் கிராமத்திற்கு அவர் சென்றது நினைவில் நிற்கும் ஒன்றாகும். நாங்கள் அந்த ஊருக்கு அவசியம் வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அரிஜன நிதிக்கு முன்கூட்டியே ரூ 1000/- தருவதாக திரு சிக்கண்ண செட்டியாரும், திரு V. சீனிவாச ராவும், மற்றவர்களும் உறுதியளித்திருந்தனர். அந்தச் சிற்றூர் மிகவும் துப்புரவாகவும், சுத்தமாகவும் இருந்தது. அக் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் கதருடை

அணிந்திருந்தனர். அவர்களின் அளவற்ற பக்தியால் காந்தியடிகள் மிகவும் கவரப்பட்டார். இவ்வாறான கூட்டங்களில் ஒலிபெருக்கி இருக்காது. திரு K. சுப்ரி (சுப்பிரமணியம்) அவர்கள் காந்தியடிகளின் பேச்சுக்களைத் தமிழில் மொழி பெயர்த்தார். தம் வழக்கமான நகைச்சுவையுடன், திரு சுப்ரி அவர்களை காந்தியடிகள் 'தம் ஒலிபெருக்கி' என்று அழைத்தார். காந்தியடிகள் அங்குக் கொடுத்த உற்சாகம் இன்றும் அந்தக் கிராமத்தில் நீடிக்கிறது. காந்தியக் கோட்பாடுகள் அங்குப் பின்பற்றப்படுகின்றன. அதற்கு, (1942-ல் சுதந்திரப் போரில் கலந்து கொண்ட) திரு R. பெட்டையன், திரு C. சின்னையன் செட்டியார் ஆகியோர் தலைமையேற்றுப் பணி செய்து வருகின்றனர். அங்கு அவர்கள் காந்தி மண்டபம் ஒன்றும், அரிஜன விடுதி ஒன்றும், உயர் நிலைப் பள்ளி ஒன்றும் நிறுவி அவற்றைப் பக்தியுடன் நடத்தி வருகின்றனர்.

காந்தியடிகளுக்குத் திருப்பூர் அறிமுகமான ஊர். 1926ல் கதர் பிரச்சாரப் பயணத்தின்போது அங்கு அவர் வந்துள்ளார். அது பெரியதொரு கதர் மையமாக வளர்ந்துள்ளது. காந்தியடிகள் திருப்பூரை இந்தியாவின் கதர்த்தலைநகரம் என்று அழைப்பதுண்டு. அங்கு நடந்த அரிஜன இயக்கக் கூட்டத்திற்குப் பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர். பெருந்தொகையான நன்கொடைகளும் வழங்கப்பட்டன. காந்திய பக்தரான திரு பி. டி. ஆஷர் என்பவருடன் அவர் பகலுணவு உண்டார். பிற்பகல் இரண்டு மணியளவில் நாங்கள் கோயமுத்தூருக்குப் புறப்பட்டோம். வெய்யில் கடுமையாக இருந்தது, இதுபோன்ற பயணங்களின் போது எப்போதும் காந்தியடிகள் திறந்த காரிலேயே பயணம் செய்வார். வெய்யில் கடுமையாக இருப்பதால் காரின் மேல் பகுதியை மூடிவிடலாம் என்று நான் கூறினேன். அவர் வழக்கமான தம் பொக்கைவாய்ச் சிரிப்பை உதிர்த்து ''அதைவிடக் கூட்டத்தின் கடுமை அதிகமாக இருக்குமே!'' என்று சொன்னார். பல்லடம் சென்றபோது அவரது சொல்லின் உண்மை புரிந்தது. ஏறக்குறைய பதினையாயிரம் மக்கள் கடுமையான வெய்யிலையும் பொருட்படுத்தாது அவரைத் தரிசிக்க காத்திருந்தனர். காரை நாங்கள் மூடியிருந்தால் மக்கள் காந்தியடிகளைத் தெளிவாகத் தரிசித்திருக்க முடியாது. அதனால் அவர்கள் காரின் மேற்பகுதியை உடைத்துக் கிழித்திருப்பார்கள். ஆகவே திறந்த காரிலேயே நாங்கள் பயணம் செய்தோம்.

சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருந்த ப்யூக் (Buick) காரிலேயே காந்தியடிகள் தம் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். அந்தக் கார் மிகவும் வேகமாகச் செல்லும். ஒரு கூட்டம் முடிந்து அடுத்த

கூட்டத்திற்குச் செல்லும்போது காரில் படுத்துக்கொண்டு கார் என்ன வேகத்தில் சென்றுகொண்டிருக்கிறது என்று கேட்பார். டிரைவர் '50 மைல்' என்று சொல்வார். 'இவ்வளவுதானா?' என்று காந்தியடிகள் கேட்பார். காரின் வேகத்தை அதன் டிரைவர் 60, 70, 80 என்று உயர்த்திக்கொண்டே செல்வார். ஆனால் இந்த வேகமும் காந்தியடிகளுக்குப் போதியதாகத் தெரியவில்லை. இவ்வளவு வேகமாகச் செல்லும்போது விபத்து நேர்ந்தால் என்ன ஆவது என்று நாங்கள் அஞ்சிக்கொண்டிருப்போம். வெய்யிலைப்பற்றியும் காரின் வேகத்தைப்பற்றியும் குறிப்பிட்டு, காந்தியடிகளிடம் நான், ''இப்படியே தாங்கள் எத்தனை நாட்களுக்குச் செல்ல முடியும்? இதனால் தங்கள் உயிருக்கு ஆபத்தல்லவா?'' என்று கேட்டேன். என் வினாவுக்கு விடையாகக் காந்தியடிகள் ஒரு கதையைச் சொன்னார். ''அவினாசி! தேங்காய் வாங்கச் சென்ற ஒருவனைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?'' என்று கேட்டார், ''இல்லை'' என்று நான் சொன்னேன். அவர் கதையைச் சொன்னார்: ''அந்த மனிதன் கிராமத்துக் கடை ஒன்றுக்குச் சென்று, 'ஒரு தேங்காய் என்ன விலை?' என்று கேட்டான். 'ஒரு ரூபாய்' என்று கடைக்காரன் சொன்னான். 'வேறு எங்கு மலிவாகக் கிடைக்கும்', என்று அவன் கேட்டான். 'மொத்த வியாபாரியிடம் செல்; அங்கு 75 பைசாவுக்குக் கிடைக்கும்' என்று கடைக்காரன் சொன்னான். மேலும் குறைந்த விலைக்கு வாங்க வேண்டும் என்றால் தென்னந்தோப்புக்குச் செல்லுமாறு மொத்த வியாபாரி கூறினான். அங்கு ஒரு தேங்காயின் விலை 50 பைசா. 'நீயே மரத்தில் ஏறிப் பறித்துக் கொண்டால் ஒரு தேங்காயின் விலை 25 பைசா' என்று தோப்புக்காரன் சொன்னான். அந்த மனிதனுக்குத் தென்னை மரம் ஏறத் தெரியாது. இருப்பினும் உற்சாகத்தில் மரத்தில் ஏறினான்; கீழே விழுந்து இறந்து போனான். நான் அந்த மனிதனைப் போன்றவன். ஒவ்வொரு முறையும் மேலும் தீவிரமாகச் செயல்பட நான் முயல்கிறேன். அடுத்து என்ன நேரிடும் என்று எனக்குத் தெரியாது''. அதற்குப் பின் அவர் தொடர்ந்து கூறினார்: ''என் உயிரை நான் என் உள்ளங்கையில் பிடித்துக் கொண்டுள்ளேன். நான் நெருப்போடு விளையாடிக் கொண்டிருக்கிறேன் என்பது எனக்குத் தெரியும். எனக்குச் சாதாரணச் சாவு இல்லை. நான் தூக்கிலிடப்படுவேன் அல்லது குண்டடிபட்டுச் சாவேன்''. இவ்வாறு அவர் 1934 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6 ஆம் நாள் கூறினார். பல ஆண்டுகள் கழித்து அவர் மறைந்த போது அவர் கூற்று தீர்க்க தரிசனம் போல் உண்மையாயிற்று.

கோவை ஒப்பணக்காரத் தெருவில் உள்ள எங்கள் இல்லத்தில் காந்தியடிகள் அன்று இரவு உணவருந்தினார். அவர் சென்ற இடங்களில் எல்லாம் எங்கள் குடும்பத்தார் வழக்கம்போல் அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ஆசி பெற்றனர். என் சகோதரரின் மூத்தபுதல்விகளும் மற்றவர்களும் தங்கள் நகைகளை அரிஜன நிதிக்கு வழங்கினர். பின்னர், பொதுக்கூட்டம் நடைபெற்றது. அறுபதாயிரத்திற்கும் அதிகமான மக்கள் அவரைத் தரிசிக்கவும், அவரது உரையைக் கேட்கவும் பூங்காவில் காத்திருந்தனர். பல நூற்றாண்டுகளாகச் சாதி இந்துக்கள் அரிஜனங்களுக்கு இழைத்து வரும் பாவங்களைப் பற்றி உணர்ச்சி ததும்ப அவர் பேசினார். சமயத்திற்கு ஏற்பட்டுள்ள கறையைப் போக்குவதற்கு இளைஞர்களான ஆண்களும் பெண்களும் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஆலயங்களுக்குச் சென்று வழிபட அரிஜனங்களுக்குச் சம உரிமை அளிக்க வேண்டுமென்று அவர் ஆழ்ந்த உணர்ச்சியுடன் கேட்டுக் கொண்டார். வழக்கம்போல் பணம் வசூலிக்கப்பட்டது; நன்கொடைப் பொருட்கள் ஏலம் விடப்பட்டன. கோவையில் அவர் பி எஸ். ஜி. நிறுவனத்திற்குச் சென்றார். பொதுக் கூட்டத்தை அடுத்து மற்றொரு விழாவும் நடந்தது. ராஜமாணிக்கம் - பகவதி சகோதரர்கள் கோவையில் அப்பொழுது திரளான மக்களின் முன் தம் நாடகங்களை நடத்தி வந்தனர். அவர்களின் தேசிய உணர்ச்சி, அவர்களைக் காந்தியடிகளின்பால் பக்தி கொள்ள வைத்திருந்தது. காந்தியடிகளைத் தங்கள் நாடகத்திற்குச் சிறிது நேரமாவது அழைத்து வரவேண்டுமென்றுஎன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். அரிஜன நிதிக்கு அவர்கள் என்ன தொகை கொடுப்பார்கள் என்று நான் கேட்டேன். அன்றைக்கு வசூலாகும் தொகை முழுவதையும் வழங்க அவர்கள் இசைந்தனர். காந்தியடிகள் அந்த நாடகத்திற்கு வருவதால் நிறையப் பேர் வருவார்கள்; அதனால் ஒரு பெரிய தொகை வசூலாகும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். எப்படியும் குறைந்தது ரூ 1500/- வழங்க ஒப்புக் கொண்டனர். இதற்கு நான் இசைந்து இதைப்பற்றிக் காந்தியடிகளிடம் கூறினேன். நாடகம் பார்ப்பதற்கு காந்தியடிகள் முதலில் விரும்பவில்லை, ஆனால் என் ஒப்பந்தத்தின் காரணமாக அவர் இசைந்தார். பொதுக் கூட்டம் முடிந்ததும் நாங்கள் நாடக அரங்குக்குச் சென்றோம். ஏற்கனவே காந்தியடிகள் உரையாற்றிய பொதுக் கூட்டத்திற்குப் பெருந்திரளான மக்கள் சென்றுவிட்டதால், நாடகத்திற்குச் செல்ல அவர்களுக்குப் போதிய நேரம் இருக்கவில்லை. அதனால் நாடகத்திற்கு அதிகக் கூட்டம் வரவில்லை; எதிர்பார்த்த தொகை வசூலாகவில்லை. அங்குச் சிறிது நேரம் இருந்துவிட்டு வித்யாலயம் வந்தோம். காந்தியடிகள் அந்த இரவில் வித்யாலயத்தில் தங்கினார்.

வழியில் கெட்ட நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. போத்த னூரைத் தாண்டியதும் வித்யாலயத்தை அடைய ரயில் பாதை ஒன்றைக் கடக்க வேண்டும். அது வளைவான பகுதியில் இருந்ததால் தெளிவாகத் தெரியவில்லை. கார் மிகவும் வேகமாகவந்து கொண்டிருந்தது. ரயில் பாதையைப் பற்றி கார் டிரைவரை எச்சரிக்க நான் மறந்து விட்டேன். ரயில் பாதையின் கதவுகள் சாத்தப்பட்டிருந்ததை டிரைவர் கவனிக்கவில்லை. வேகமாகச் சென்ற காரை அவரால் நிறுத்த முடியவில்லை. கதவின் மீது கார் மோதிற்று. அந்தக் கதவில் மாட்டப் பெற்றிருந்த கனமான சிவப்பு எச்சரிக்கை விளக்கின் மீது கார் மோதியதால் அது கதவிலிருந்து பிய்த்துக் கொண்டு உயரச் சென்று எங்கள் காரின் முன் இருக்கையில் எனக்கும் டிரைவருக்கும் இடையில் விழ்ந்தது. காந்தியடிகள் என்ன கூறுவாரோ என்று நான் மிகவும் அஞ்சினேன் ஆனால் காந்தியடிகள் ஒரு வினாடியில் சூழ்நிலையைச் சமாளித்துக் கொண்டார். எதுவும் நிகழாதது போல் அவர் சிரித்தார். நான் மிகவும் பயந்துபோய்க் கலங்கியிருந்ததைக் கண்ட அவர் என்னை ஆறுதல் படுத்தி ''கவலைப் படாதே!'' என்று கூறினார். அவருக்கு ஏதேனும் நேர்ந்திருந்தால் என்று நான் எண்ணியபோது கதி கலங்கிப் போனேன் இந்த விபத்திலிருந்து எங்களைக் காப்பாற்றியதற்காக இறைவனுக்கு நான் நூறாயிரம் முறை நன்றி தெரிவித்தேன். சில நிமிடங்களில் நாங்கள் வித்யாலயத்தை அடைந்தோம்.

# 13. வித்யாலயத்தில் காந்தியடிகள்

எங்கள் நீண்டநாள் ஆவல் நிறைவு பெறும் நாள் வந்தது. அரிஜன இயக்கப் பயணத்திற்காகக் காந்தியடிகள் தென்னாட்டுக்கு வருவதைப்பற்றி நாங்கள் கேள்வியுற்றதிலிருந்தே, அவரை வித்யாலயத்திற்கு அழைத்து, ஓர் இரவாவது எங்களுடன் தங்குமாறு செய்து அந்த நற்பேற்றைப் பெறவேண்டுமென்பது எங்கள் தனியாத ஆவலாக இருந்தது. அப்பொழுது வித்யாலயம் 6, 7, 8-ஆம் வகுப்புகளை மட்டும் கொண்ட ஒரு சிறிய நிறுவனமாக இருந்தது. காந்தியடிகளைப்பற்றியும், சுதந்திர இயக்கத்தைப் பற்றியும் அறிந்திருந்த வித்யாலயக் குழந்தைகள் அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவரது நல்வாழ்த்துக்களைப் பெறப் பெரிதும் ஆவலுற்றிருந்தனர். அப்பொழுது வித்யாலயம் நடைபெற்று வந்த G. D. நாயுடு பங்களாவில் காந்தியடிகள் தங்குவதாகத் திட்டம். அந்தக் கட்டிடம் முழுவதும் துப்புரவு செய்யப்பட்டுக் காந்தியடிகளின் வருகைக்காக அனைவரும் ஆவலுடன் காத்திருந்தனர். 6-2-1934 அன்று இரவு 11-00 மணிக்குக் காந்தியடிகள் வந்தார். அனைவரும் அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். காந்தியடிகள் தம் சொந்த இடத்தில் இருப்பதாகவே கூறியது எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது.

காந்தியடிகள் வந்து, அறிமுகங்கள், வணக்கங்கள் ஆகியன முடிந்தவுடன் அவர்தம் வழக்கமான அலுவல்களைத் தொடங்கினார். அந்தக் கட்டிடத்தில் மின்வசதி இருக்கவில்லை. அதனால் அரிக்கன் விளக்குகளையே பயன்படுத்தினோம். கட்டிடத்தின் திண்ணையில் விரிக்கப்பட்டிருந்த விரிப்பின் மேல் காந்தியடிகள் அமர்ந்தார். காலியான வாளி ஒன்று தரும்படிக் கேட்டார். அதைக் கவிழ்த்து வைத்தார். அதன்மேல் அரிக்கன் விளக்கை வைத்து அதன் அருகில் அமர்ந்தார். அவருக்கு ஏராளமான கடிதங்கள் வந்திருந்தன. அவற்றை விரைவாகப் படித்துப் பதில் எழுதத் தொடங்கினார். கடிதங்களை எழுத அவருக்குச் சுருக்கெழுத்தாளர் யாரும் இருக்கவில்லை. ஆகவே

அனைத்துக் கடிதங்களையும் அவர்தம் கைப்படவே எழுதினார். அவரது வலப்பக்கத் தொடையே அவருக்கு மேசையாகப் பயன்பட்டது. அவருக்கு வந்த கடிதங்களின் உறைகளின் பின் பக்கத்தையே அவர் பதில் கடிதங்களை எழுதப் பயன்படுத்தினார். அரிஜன் வார இதழுக்கு அவர் எழுதிய கட்டுரைகளையும் இவைபோன்ற தாள்களிலேயே எழுதினார். இவ்வாறு அவர் செய்த பணிகள் எங்களை வியப்பில் ஆழ்த்தின.

அவருடைய பயணக்குழுவில் இருந்த மற்றவர்கள் உணவருந்தி விட்டு மற்றப் பணிகளில் ஈடுபட்டனர். அரிஜன இயக்கப் பயணங் களின்போது வசூலான தொகைகள் சரிவர எண்ணப்பட்டுக் கணக்கு எழுதப்பட்டது. இதற்கு டாக்டர் T. S. S. ராஜன் அவர்களும், பேராசிரியர் மால்கானியும் பொறுப்பாக இருந்தனர். அவர்களுக்கு ஏதேனும் ஐயம் எழுந்தால் காந்தியடிகளிடம் கேட்பார்கள். அவர் எழுத்து வேலையில் ஈடுபட்டிருக்கும்போதே அவர்களது ஐயங்களையும் தீர்த்துவைப்பார். அன்று இவ்வாறான பணிகள் அனைத்தையும் முடித்துப் படுக்கச் செல்லும்போது இரவு 2-00 மணி.

இதைக் கண்டபோது, விசிஸ்டாத்வைதத் தத்துவத்தைப் போதித்த மகான் ஸ்ரீ ராமானுஜாச்சாரியார், ஆயிரம் ஆண்டுகட்கு முன் திருப்பதி ஆலயத்தை நிர்மாணித்தபோது அதற்கான வரவு செலவுக் கணக்குகளைச் சரியாக வைத்திருந்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வந்தது. ஒவ்வொரு நாளும் இரவில் அவர் உண்டியல் பணத்தைக் கொட்டிவைத்து அவற்றை எண்ணிக் கணக்கு எழுதி, அக்கணக்கை அருள்மிகு வெங்கடாசலபதிக்குச் சமர்ப்பிப்பாராம்.

காந்தியடிகள் உறங்குவதற்குத் திறந்தவெளியில், ஓர் எளிய படுக்கை போடப்பட்டது. பணிகள் அனைத்தும் முடிந்தவுடன் படுக்கைக்குச் சென்று உடனே உறக்கத்தில் ஆழ்ந்தார் அவர். எவ்வாறு அவரால் நினைத்தவுடன் ஆழ்ந்து உறங்கவும், விரும்பிய படிக் குறித்த நேரத்தில் எழுந்திருக்கவும் முடிகின்றது என்று நான் வியப்படைந்தேன். சில சமயங்களில் நீண்ட தொலைவு பயணம் செய்ய வேண்டியிருக்கும். அப்போது அவர் என்னிடம், ''அவினாசி! அடுத்த இடம் எவ்வளவு தொலைவில் உள்ளது? அதை அடைய எவ்வளவு நேரமாகும்?'' என்று கேட்பார். நான், ''இருபது நிமிடங்கள்,'' என்பேன். 'அதுசரி, நான் உறங்கு கிறேன், இருபது நிமிடம் கழித்து என்னை எழுப்பு,'' என்று சொல்லிவிட்டு உடனடியாகக் கண்களை மூடி உறங்கி விடுவார்.

அவர் குறிப்பிட்ட நேரத்தை என் கைக் கடிகாரத்தில் கவனமாகப் பார்த்திருந்து அவரது பாதங்களைத் தொட்டு அவரை எழுப்ப நான் கையை வைக்குமுன் அவர் எழுந்து, ''இருபது நிமிடங்கள் ஆகிவிட்டதா?'' என்று கேட்பார். இவ்வாறு நிகழ்ந்தது ஓரிரு முறைகள் அல்ல; பல முறைகள். அவரது உறக்கம் அவரது கட்டுப்பாட்டுக்குள் இருந்தது.

காந்தியடிகளிடம் இருந்த மற்றொரு நற்பழக்கம், இரவில் எவ்வளவு நேரம் கழித்து உறங்கச் சென்றாலும் சரியாக அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து பிரார்த்தனையில் ஈடுபடுவதாகும். காலைப் பிரார்த்தனையின் போது கீதையின் இரண்டாவது அத்யாயத்திலிருந்து சில சுலோகங்கள் கூறப்படும். கீதையைத் தொடர்ந்து, 'வைஷ்ணவ ஜனதோ' பாடல்பாடப் பெறும். அப் பாடலில் உண்மையான பக்தனின் இயல்புகள் விளக்கப் பட்டுள்ளன. இப்பாடலுக்குப் பின் ராமநாமம் பாடப்பெறும்.

ராம நாமத்தின் சிறப்பைக் குறித்து அவர் கூறுவது: ''அது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வர வேண்டும். அதன் பொருள் யாது? தங்கள் உடல் நோய்களைக் குணப்படுத்திக் கொள்ள மக்கள் இவ்வுலகின் முடிவிற்கே செல்லவும் தயங்குவதில்லை. ஆனால் உள்ளத்திற்கும், ஆன்மாவுக்கும் ஆறுதல் தேடுவதைவிட இது முக்கியமானது அல்ல. மனிதனின் உடல் அழியக்கூடியது. அது நீண்ட நாட்கள் நிலை பெறாதது. ஆனால் என்றும் அழியாத ஆன்மாவை மறந்துவிட்டு, அழியக் கூடிய உடலுக்கு, தேவையற்ற சிறப்புக் கொடுக்கிறான் மனிதன். ஆனால் ராம நாமத்தில் நம்பிக்கையுள்ள ஒருவன் இவ்வாறு தேவையற்ற சிறப்பை உடலுக்குக் கொடுப்பதில்லை. இறைவனுக்குத் தொண்டு செய்ய உடலை ஒரு கருவியாக மட்டுமே அவன் கருதுவான். நம் உடலை அவ்வாறான பொருத்தமான கருவியாகச் செய்து கொள்ள ராம நாமம் ஓர் அற்புதமான வழியாகும்.

''இதயத்தில் ராம நாமத்தை இருத்த அளவற்ற பொறுமை தேவை. ஆனால் இம்முயற்சி வரவேற்கத்தக்கது. அதில் வெற்றி பெறுவதும் இறைவனின் அருளால்தான் முடியும். உள்ளும் புறமும், வாய்மையும் நேர்மையும் இல்லையெனில் ராம நாமம் உள்ளத்திலிருந்து வராது. ஒருவர் தம் எண்ணங்களைக் கட்டுப்படுத்தாவிடில், மனம், வாக்கு, காயம் ஆகியவற்றில் தூய்மையை வளர்த்துக் கொள்ளாவிடில், ராம நாமத்தை ஓதுவதால் பயன் ஒன்றும் விளையாது.

''ஒருவரிடம் தேவையான தூய்மையில்லையென்ற காரணத்திற்காக அவர் ராம நாமத்தைச் சொல்லக் கூடாது என்பது பொருளல்ல. தூய்மையை வளர்த்துக் கொள்ள ராம நாமமே வழி ஆகும். இதயபூர்வமான உணர்ச்சியுடன் ராம நாமத்தை ஓதும் ஒருவருக்கு, கட்டுப்பாடு, தன்னடக்கம் ஆகியன எளிதில் கிட்டும். உடல்நல விதிகளையும், துப்புரவுப் பழக்கங்களையும் பின்பற்றுவது அவருடைய இயல்பாகவே அமைந்து விடும். அவருடைய வாழ்க்கை சீராக அமையும். யாரையும் அவர் துன்புறுத்த விரும்ப மாட்டார். மற்றவர்களின் துன்பத்தைத் துடைக்கும் பண்பு இயல்பாகவே அமைந்து அவருக்கு நிரந்தரமான, விவரிக்க இயலாத இன்பத்தைக் கொடுக்கும். ஆகவே நாம் விழித்துக் கொண்டிருக்கும் நேரங்களில் தொடர்ந்து இடைவிடாது ராம நாமத்தை ஓதுவது நல்லது. அதன் விளைவாக நமக்கு, இறைவன் அருளால் சிறப்பான உடல், மன, ஆன்ம நலன்கள் கிட்டும்.''

பிரார்த்தனையின் போது காந்தியடிகள் ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடுவார். அவருக்கு உணவை விடப் பிரார்த்தனை இன்றியமையாதது. அவர் சொல்வார்: ''என்னால் உணவின்றிப் பல நாட்கள் உயிரோடு இருக்க முடியும். ஆனால் பிரார்த்தனையின்றி ஒரு நாள் கூட என்னால் வாழ முடியாது.''

வித்யாலயத்திற்குக் காந்தியடிகள் அஸ்திவாரக்கல் போட வேண்டும் என்று நாங்கள் பெரிதும் விரும்பினோம். ஆனால் இதை எவ்வாறு செய்வது? என்பதுதான் பெரிய கேள்விக் குறியாக இருந்தது. வித்யாலயம் அப்போது வாடகைக் கட்டிடம் ஒன்றில் நடைபெற்று வந்தது. ஆனாலும் இறைவன் எங்களுக்கு வழிகாட்டினான். திரு. T. S. கல்யாணசுந்தரத்திற்குரிய 5 ஏக்கர் நிலம் அருகில் இருந்தது. அதை அவர் வித்யாலயத்திற்கு மனமுவந்து நன்கொடையாக அளித்து, எங்கள் பிரச்னையை விரைவில் தீர்த்து வைத்தார். ஆகவே, 1934 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7 ஆம் நாள் வித்யாலயத்திற்கு அஸ்திவாரக்கல் நடும் விழாவிற்கான ஏற்பாடுகள் நடந்தன. காந்தியடிகள் இதற்கு இசைந்தார். கட்டிடக் காண்ட்ராக்டராக இருந்த திரு. C. K. கிருஷ்ண போயரிடம் அஸ்திவாரக்கல் நட ஏற்பாடு செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஒரு நாற்காலியின் மேல் குருதேவரின் திருவுருவப் படம் வைக்கப்பட்டது. அதற்கு வித்யாலய மாணவன் ஒருவன் ஆரத்தி காண்பித்தான். பிரார்த்தனைப் பாடல் ஒன்று பாடப்பட்டது. காந்தியடிகள் அஸ்திவாரக்கல் நட்டார்.

அப்பொழுது எங்களுடன் பணியாற்றிய திரு வீரராகவன் என்ற ஆசிரியர் தண்டியாத்திரையின்போது இருந்த காந்தியடிகளின் தோற்றத்தை மார்பளவு ஓவியமாக வரைந்திருந்தார். அதில் காந்தியடிகளின் கையொப்பம் பெற விரும்பினோம். அதில் காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு வாழ்த்துக்கள் எழுதிக் கையொப்பமிட்டார்.

*'I hope that the boys of the Vidyalaya will be strong in Truth and Faithful to God.'*

(வித்யாலய மாணவர்கள் உண்மையில் திட்பம் உடையவர்களாகவும், கடவுள் நம்பிக்கையுடையவர்களாகவும் இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.)

இந்த வாழ்த்துரையின் கீழ் அவர் தம் கையொப்பத்தை குஜராத்தி மொழியிலும், தமிழில் M. K. காந்தி என்றும் இட்டார்.

அவரது கையொப்பம் கொண்ட இந்தப்படம் வித்யாலயத்தின்பால் அவர் கொண்ட அன்பு மற்றும் அவரது நல்வாழ்த்துக்களின் சின்னமாக என்றும் எங்களுடன் இருக்கும். பெரிய நாயக்கன்பாளையத்தில் நிரந்தரமான இடத்திற்கு வித்யாலயம் மாற்றப்பட்டபோது, காந்தியடிகள் நட்ட அஸ்திவாரக்கல்லையும், மேற்குறிப்பிட்ட படத்தையும் நிரந்தர நினைவுப் பெட்டகங்களாகக் கொண்டு வந்தோம்.

காந்தியடிகளுடன் பயணம் செய்வது எளிய செயல் அன்று. கோவை, நீலகிரி மாவட்டங்களில் அவருடன் பயணம் செய்ததுடன், ஒருசமயம் அவருடன் கல்கத்தாவிலிருந்து பம்பாய்க்குப் பயணம் செய்யும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. அச்சமயம் நான் பேலூர் ராமகிருஷ்ண மடத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது கல்கத்தாவில் தங்கியிருந்த காந்தியடிகளைக் காண நான் சென்றிருந்தேன். நானும் பம்பாய்க்குச் செல்லத் திட்டமிட்டிருந்தேன். காந்தியடிகள் என்னிடம், 'நீ விரும்பினால் என்னுடன் வரலாம்' என்று சொன்னார். அதை ஒரு பெரு வாய்ப்பாகவும், மகிழ்ச்சியாகவும் கருதி நான் இசைந்தேன். ஆனால் அது எவ்வளவு கடினமான செயல் என்பதை நான் விரைவில் புரிந்து கொண்டேன். ஒவ்வொரு நிலையத்திலும் ரயில் நின்றபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்று முழக்கமிட்டனர். அவருக்கென்று தனியாக ஒதுக்கப்பட்ட மூன்றாம் வகுப்புப் பெட்டி ஒன்றில் அவர் பயணம் செய்து கொண்டிருந்தார். ஒவ்வொரு ரயில் நிலையம்

வந்ததும் தம் கைகளை வெளியில் நீட்டி 'அரிஜன நிதிக்கு உதவுங்கள்' (Harijan Keliye) என்று கேட்டார். நாணயங்கள் வந்து குவிந்தன. வண்டி புறப்பட்டதும் அடுத்த ரயில் நிலையம் வருமுன் அந்தப் பணத்தை எண்ணிக் கணக்கில் எழுதவேண்டும். வழிநெடுகிலும் திரளான மக்கள் கூட்டம். அதனால் உணவு கிடைக்கவில்லை. அனைத்து ரயில் நிலையங்களிலும் கூட்டத் தின் ஆரவாரத்தால் சரியாகத் தூங்க முடியவில்லை. வழியில் ரயில் நிலையம் ஒன்றில் காந்தியடிகள் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி இறங்கித் தாம் செல்ல வேண்டிய இடம் சென்று சேர்ந்தார். ஆகவே அவருடன் பயணம் செய்வதற்கு உறுதியும், பக்தியும் தேவை.

திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடியில் நடந்த மற்றொரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகின்றது. தூத்துக்குடிக் கடற்கரையில் ஏறக்குறைய முப்பதாயிரம் மக்கள் திரண்டிருந்தனர். அங்குச் செய்யப்பட்டிருந்த விளக்கு ஏற்பாடும் அலங்காரமும் மிகச் சிறப்பாக இருந்தன. அதற்குப் பெருந்தொகை செலவாயிருக்கும். அதனால் காந்தியடிகள், திரு T. S. S. ராஜனை மெதுவாகத் தம் அருகில் அழைத்து இந்த விளக்கு ஏற்பாடுகளுக்குப் பணம் கொடுத்தது யார்? அரிஜன நிதி வசூல் பணத்திலிருந்து இதற்குச் செலவழிக்கப்பட்டதா? என்று கேட்டார். அரிஜன சேவைக்கும், அவர்களின் புனர் வாழ்வுக்கும் வசூலாகும் நிதியிலி ருந்து இத்தகைய அலங்காரங்களுக்குச் செலவழிக்கக் கூடாது என்றும் கூறினார். அந்த அலங்கார ஏற்பாடுகளுக்கான செலவினைப் பெரிய வர்த்தகர் ஒருவர் மனமுவந்து ஏற்றுக் கொண் டார் என்றும், அரிஜன நிதியிலிருந்து செலவழிக்கப்படவில்லை என்றும் அறிந்த பின்னரே காந்தியடிகள் நிம்மதியடைந்தார்.

கோவை, நீலகிரி மாவட்டங்களில் செய்யப்பட்ட ஏற்பாடுகளும், நிதி வசூலும் காந்தியடிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தன. தமிழ்நாட்டின் மொத்த வசூலில் கால் பங்கு கோவை மாவட்டத் திலேயே கிடைத்தது. கோவையிலிருந்து நாங்கள் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வழியாக மடத்துக்குளத்திற்கு அருகில் உள்ள வன்னியர் வலசுக்குச் சென்றோம். அங்கு அப்பாவு என்ற அரிஜன ஊழியர் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அங்கிருந்து காந்தியடிகள் திண்டுக்கல், திருச்சி ஆகிய இடங்க ளுக்குச் சென்றார். நான் மீண்டும் அவரைக் கரூரில் சந்தித்து, கோவை மாவட்டத்தில் எஞ்சியிருந்த ஈரோடு வட்டத்திற்கு அவருடன் செல்ல இருந்தேன்.

அரிஜன இயக்கப் பயணத்தின்போது காந்தியடிகளுடன் கொண்ட தொடர்பு, இந்த நூற்றாண்டின் ஒப்பற்ற பெருந் தலைவரான ஒருவருடன் நான் கொண்ட அன்பான நெருங்கிய நீண்ட தொடர்பு ஆகும். அவருடன் கொண்ட இத்தொடர்பு என் வாழ்க்கைக்குப் பெரியதொரு வகையில் வழிகாட்டியுள்ளது. அந்த நாளிலிருந்து அவரைப் பலமுறை டில்லியிலும், வார்தாவிலும் தரிசித்து மகிழும் சிறந்த வாய்ப்புக்கள் எனக்குக் கிடைத்தன. ஒவ்வொரு முறையும் அவரது சந்திப்பால் நான் புதுத்தெம்பும், புத்துணர்வும் பெற்றேன்.

# 14. மத்தியச் சட்டசபையில்

சுதந்திரப் போராட்டத்தைத் தீவிரப்படுத்த மத்திய, மாநிலச் சட்டமன்றங்களில் வலிமைமிக்கதொரு அரசியல் குழு இருக்கவேண்டுமென்று முக்கியமான அரசியல் தலைவர்கள் கருதினார்கள். ஆகவே, அப்போது வரவிருந்த தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடவேண்டுமென்று அவர்கள் முடிவு செய்தனர். அதற்காக, பம்பாயைச் சேர்ந்த புகழ்பெற்ற வழக்கறிஞர் திரு. புலாபாய் தேசாய் தலைமையில் நாடாளுமன்றக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழு, நாடு முழுதும் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று, தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுவதற்குத் தகுதியான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தது. சென்னையில் இதற்கு மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் சிறந்த வழிகாட்டியாக இருந்தார்.

சட்டமறுப்பு இயக்கத்தை ஒடுக்கியதன்மூலம் காங்கிரஸ் கட்சியின் மதிப்பை மக்களிடையே குறைத்துவிட்டதாக ஆங்கில அரசு நினைத்துக்கொண்டிருந்தது. ஆனால் சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு மக்களிடையே உற்சாகமான வரவேற்பு இருந்தது.

தமிழ்நாட்டில், சென்னைத் தொகுதியிலிருந்து திரு. S. சத்தியமூர்த்தி, திருச்சி-தஞ்சை தொகுதியிலிருந்து டாக்டர் T. S. S. ராஜன், மதுரை-திருநெல்வேலி-ராமநாதபுரம் தொகுதியிலிருந்து திரு. P. S. குமாரசாமி ராஜா ஆகியோரும், கோவை-சேலம்-வட ஆற்காடு தொகுதியிலிருந்து நானும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோம். பெரிய பணக்கார வணிகர்கள் அடங்கிய வாணிபத் தொகுதி (Commerce constituency) யில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக, திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டார். அச்சமயத்தில் சட்டமன்றச் சபாநாயகராகப் பொறுப்பு வகித்த திரு. R. K. சண்முகம் செட்டியார், திரு. சாமி வெங்கடாசலம் செட்டியாரை எதிர்த்துப் போட்டியிட்டார். திரு. சண்முகம் செட்டியார் ஆங்கில

அரசினைத் தீவிரமாக ஆதரித்தவர். சென்னை மாகாணத்தின் ஆந்திரப் பகுதியிலிருந்து திரு. M. அனந்தசயனம் அய்யங்கார், பேராசிரியர் N. G. ரங்கா, திரு. V. V. கிரி மற்றும் K. S. குப்தா ஆகியோர் வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆங்கிலேயர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, காங்கிரஸ் கட்சி பெரிய அளவிலான பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. வாணிபத் தொகுதி (Commerce constituency) யிலும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் திரு. சாமி வெங்கடாசலம் வெற்றிபெற்று, திரு. R. K. சண்முகம் செட்டியார் தோற்கடிக்கப்பட்டார்.

தேர்தல் முடிந்தபின், இதயத்தைத் தொடும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அதைப்பற்றியும் இங்குக் குறிப்பிட வேண்டும். திரு. R. K. சண்முகம் செட்டியார் அவர்களும் கோவையைச் சேர்ந்த வர். அவருக்கும், எனக்கும் அரசியலில் கருத்து வேறுபாடு இருந் தாலும் நாங்கள் நண்பர்கள். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியச் சட்டமன்ற உறுப்பினர்களுள் நான் வயதில் மிகக் குறைந்த வனாகவும், இளைஞனாகவும் இருந்தேன். நாடாளுமன்ற அரசியல் நடவடிக்கைகளுக்கு நான் புதியவன்.

திரு. சண்முகம் அவர்கள் நாடாளுமன்றத்தில் பழுத்த அனுபவம் பெற்றவர். ஆகவே அவரது அறிவுரையைப் பெற விரும்பினேன். தேர்தலில் அவருக்கு எதிராக நான் பணிபுரிந்த தால் நான் அவரைக் காணச் சென்றபோது அவர் மிகவும் வியப் பில் ஆழ்ந்தார். வரவேற்பு அறையில் என்னைக் கண்டபோது அவர் வியப்படைந்ததை நேரில் கண்டேன்.

அவர் வந்ததும் நான் எழுந்துநின்று வணக்கம்செய்து அவர் அமர்ந்தபின் அமர்ந்தேன். நான் வந்த காரணத்தைக் கேட்டார். வயதில் மூத்தவர் என்ற நிலையிலும், ஆழ்ந்த சட்டமன்ற அனுபவம் பெற்றுள்ளவர் என்ற நிலையிலும் அவரது அறிவுரை யைப் பெற வந்திருப்பதாகக் கூறினேன். இளைஞனும், சட்ட மன்றத்திற்குப் புதியவனுமாக இருக்கும் நான் எந்தெந்த வழி களில் விவாதங்களிலும், மற்ற நடவடிக்கைகளிலும் என் பங்கைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்று அறிவுரை கூறுமாறு அவரிடம் கேட்டேன். என் பணிவு, அடக்கம், மரியாதை முதலியவற்றால் மகிழ்ச்சியுற்ற அவர், எனக்கு நல்ல பல அறிவுரைகளைக் கூறினார். சட்டமன்ற நடவடிக்கைகளைச் சில நாட்கள் நன்கு கூர்ந்து கவனிக்க வேண்டும். பேசுவதற்கு அவசரப்படக் கூடாது. பல விஷயங்களைப்பற்றி விவாதம் நடக்கும். அவற்றுள் ஒன்றி ரண்டைத் தேர்ந்தெடுத்து அவைபற்றிய கருத்துக்களை ஆழத்

தெரிந்துகொள்ள வேண்டும். அவற்றைப்பற்றி மட்டுமே சிறப்பாகப் பேசவேண்டும். முன் ஆயத்தம் இல்லாமல் பேசக்கூடாது என்று—இவ்வாறாக அறிவுரை கூறினார். இவ்வறிவுரையினால் நான் மிகவும் பயனடைந்தேன்.

ஆங்கில ஆட்சியினரால் சட்ட மறுப்பு இயக்கம் ஒடுக்கப்பட்ட போதிலும், காங்கிரசுக்கு மக்களின் அமோக ஆதரவு இருந்ததைத் தேர்தல் முடிவுகள் நிரூபித்தன. முதல் தேர்தலுக்குப் பின் மத்தியச் சட்டமன்றம் புதுப்பொலிவுடன் திகழ்ந்தது. சட்ட மன்றத்தின் மிகப்பெரும் தனிக்கட்சியாகக் காங்கிரஸ் விளங்கியது.

இந்தியாவை ஆள்வதற்கு ஆங்கிலேயருக்கு எந்தவகையான உரிமையும் இல்லை என்று அரசியல் எதிர்ப்புத் தெரிவிப்பதே காங்கிரஸ் கட்சியின் கொள்கையாகும். காங்கிரசின் எதிர்ப்புணர்ச்சி மிகவும் தீவிரமாக இருந்தபோதிலும், அதன் விவாதங்கள் கண்ணியம் நிரம்பினவாய் இருந்தன. விவாதங்கள் மிகவும் உயர்ந்த தரத்தில் அமைந்திருந்தன. திரு. புலாபாய் தேசாய் ஒரு சிறந்த பேச்சாளர்; அற்புதமாக விவாதம் செய்பவர். அவர் தம்முடைய வாதங்களைத் தெளிவாகவும், வேகத்துடனும், திட்ட வட்டமாகவும் எடுத்துக் கூறுவதில் வல்லவர். திரு. சத்தியமூர்த்தி அவர்கள் ஆழ்ந்த நாடாளுமன்ற அனுபவங்கள் கொண்டவர்; இந்தியநாடே அவரைப்பற்றிப் பெருமை கொண்டிருந்தது. பின்னாளில் தமிழ்நாட்டின் ஆளுநராக இருந்த ஸ்ரீ. ஸ்ரீபிரகாசா, உள்நாட்டு அமைச்சராக இருந்த திரு G. B. பந்த், இந்தியாவின் ஐந்தாவது குடியரசுத் தலைவராக இருந்த திரு V. V. கிரி டில்லியைச் சேர்ந்த அசப்அலி, திரு N. V. காட்கில் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். பின்னாளில் லோக்சபைச் சபாநாயகராக இருந்தவரும், அதன்பின் பீகாரின் ஆளுநராகப் பொறுப்பு வகித்தவருமான திரு. M. அனந்தசயனம் அய்யங்கார், திரு. சாமி வெங்கடாசலம் செட்டியார், திரு. K. சந்தானம் ஆகியோரும் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பணிபுரிந்தனர்.

இந்தியாவில் நாடாளுமன்ற ஜனநாயக வரலாற்றில் 1937ஆம் ஆண்டு மிக முக்கியமானதாகும். 1935ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டப்படி, மாநிலங்களுக்கு ஆளுநர்களின் தலைமையில் தன்னாட்சி வழங்க முடிவுசெய்யப்பட்டது. ஆகவே மாநிலங்களில் தேர்தல்கள் நடத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்தத் தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சி கலந்துகொண்டது. 1937 பிப்ரவரி மாதத்தில் பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன. இத்தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சி பெருவாரியாக வெற்றிபெற்றது. மக்களின்

இந்த நம்பிக்கையையும், பொறுப்பினையும் எப்பொழுதும் நினைவில் கொள்ளவேண்டுமென்று காங்கிரஸ் அமைப்பை, குறிப்பாக, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்களைக் காங்கிரஸ் செயற்குழு கேட்டுக்கொண்டது. காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் என்றும் நிலைநிறுத்த வேண்டுமென்றும், மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ப உண்மையாக நடந்துகொள்ளவேண்டுமென்றும், தாய்நாட்டின் விடுதலைக்காகவும், துன்பத்திலும் சுரண்டலிலும் இன்னல்பட்டுக்கொண்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களை அவற்றிலிருந்து விடுபடச் செய்யவும் தளராது உழைக்க வேண்டும் என்றும் அவர்களை இச்செயற்குழு கேட்டுக்கொண்டது. ஆகவே தாங்கள் சட்டமன்றங்களில் ஆற்றும் பணிக்கு அவற்றின் பின்னணியில் உள்ள மக்களின் ஒப்புதல் தேவை என்பதை, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இத் தீர்மானம் நினைவுபடுத்திற்று. சட்டமன்றங்களில் நடைபெறும் பணிகளுக்கும், அவற்றுக்கு வெளியே காங்கிரஸ் ஈடுபடும் பணிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் என்பதையும் உணர்த்திற்று.

இந்தியாவில், ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அதிகாரத்தையும், கௌரவத்தையும் உயர்த்தும் எந்தவகையான அரசுச் செயல்களுக்கும் ஒத்துழைப்பும், உதவியும் அளிக்கக் கூடாது என்ற காங்கிரஸ் கொள்கையை, சட்டமன்ற உறுப்பினர்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஆங்கில அரசால் வழங்கப்படும் எந்த வகையான பட்டத்தையும் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற்கக் கூடாது. காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட திட்டங்களையும், விவசாயப் புரட்சியையும் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று காங்கிரஸ் உறுப்பினர்கள் வற்புறுத்த வேண்டும் என்றும் செயல் குழு உறுதி செய்தது.

1938 மார்ச் மாதம், மத்திய மற்றும் மாகாணச் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் ஒன்று டில்லியில் நடைபெற்றது. இவ்வகையான கூட்டம் நடைபெறுவது இதுவே முதல் தடவை. இந்தியா முழுவதிலுமிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட, மத்திய, மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் கீழ்க்கண்ட உறுதிமொழியை ஏற்றனர்:

''இந்தியாவுக்குச் சேவை செய்யவும், சட்டமன்றத்திலும், சட்டமன்றத்திற்கு வெளியிலும், இந்தியா சுதந்திரம் பெறவும், இந்திய மக்கள் சுரண்டப்படுவதைத் தடுக்கவும், இந்திய

மக்களின் ஏழ்மையை நீக்கவும் அயராது உழைப்பேன் என்று உறுதி கூறுகிறேன். இந்தியாவை விடுதலை பெறச்செய்து, அதன் கோடிக்கணக்கான மக்களின் துன்பச்சுமையைப் போக்க உறுதி பூண்டிருக்கும் காங்கிரசின் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப் படிந்து பாடுபடுவேன் என்று உறுதி கூறுகிறேன்.''

மத்தியச் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கென, புதுடில்லி பெரோஸ்ஷா சாலையில் ஒதுக்கப்பட்டிருந்த வீடு ஒன்றில் அப்போது நான் தங்கியிருந்தேன். மத்திய மற்றும் மாகாணச் சட்டமன்றக் காங்கிரஸ் உறுப்பினர்களின் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த, சென்னைச் சட்டமன்ற உறுப்பினர்களான திரு. A. வேதரத்தினம் பிள்ளை, திரு. N. M. R. சுப்பராமன் ஆகியோரும் என்னுடன் தங்கியிருந்தனர். இக்கூட்டம் முடிவடைந் தவுடன் ஒருநாள், ஹரிஜன் சேவா சங்கத்தில் தங்கியிருந்த காந்தி யடிகளைப் பார்க்க நாங்கள் சென்றோம். முந்திய இரவில் அதிக மான குளிர் இருந்தது. அடுத்தநாள் காலையில் நாங்கள் அங்குச் சென்றோம். எங்களை அவர் மிகுந்த அன்புடன் வரவேற்று, வாய் விட்டுச் சிரித்து, ''நீ மத்தியச் சட்டமன்ற உறுப்பினன்; அவர்கள் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள்'' என்று சொன்னார். தம் பேரக் குழந்தைகள் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டால் ஒரு பாட்டனார் எவ்வளவு மகிழ்ச்சியடைவாரோ அவ்வாறே காந்தியடிகள் களிப்புற்றார்.

உற்சாகமிக்க சிறுவன் ஒருவனைப் போல் அவர் சொன்னார்: ''வாருங்கள்! உங்களுக்கு ஒன்று காண்பிக்கிறேன்''. முந்திய நாள் ஒரு தட்டில் தண்ணீர் ஊற்றி திறந்த வெளியில் வைத்திருந்தார். எங்களை அங்கு அழைத்துச் சென்று அவர், ''பாருங்கள், தண்ணீர் உறைந்து போய் ஒரு கண்ணாடிப் பலகை போல் ஆகியுள்ளது!''. என்று சொன்னார். தம் அன்பாலும், நகைச்சுவையாலும் காந்தியடிகள் எங்களை மிகவும் மகிழ்வித்தார். நாங்கள் அவரிட மிருந்து விடை பெற்றோம்.

காங்கிரஸ் அமைச்சர்கள் என்ன செய்யவேண்டுமென்றும், எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்றும் காந்தியடிகள் ஹரிஜன் இதழில் கீழ்வருமாறு எழுதினார்:

''அமைச்சர்கள் உடனடியாக மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும்; சிறைகளை, சீர்திருத்த இல்லங்களாகவும், தொழிற் கூடங்களாகவும் மாற்றவேண்டும்; அவை தண்டனை அனுபவிக்கும் இடங்களாக இருக்கும் நிலையை மாற்றி அவற்றை கல்விச்சாலை களாகவும் மாற்றவேண்டும். வாங்கும் துணிகள் அனைத்தும்

கதராகவே இருக்கவேண்டும். நகரங்களைக் காட்டிலும் கிராம முன்னேற்றத்தில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

''நம் நாடு உலகிலேயே மிகவும் ஏழ்மையானது; கோடிக்கணக்கான மக்கள் அரைவயிற்றுக்கும் உணவின்றி அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தங்களைத் தேர்ந்தெடுத்த மக்களிடமிருந்து விலகி, அவர்களின் பிரதிநிதிகள் வாழக்கூடாது. நம்மை வெற்றி கொண்டு ஆள வந்த ஆங்கிலேயர்கள், தாம் வென்ற மக்களின் நிலைக்கு ஒவ்வாத வாழ்க்கை முறையை ஏற்படுத்தி விட்டார்கள். ஆளுநர் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் வாழும் ஆடம்பரவாழ்க்கையைப் போல் வாழாமல், அமைச்சர்கள் எளிமையாக வாழ்வார்களானால், ஆங்கிலேயருக்கும், காங்கிரஸ்காரர்களுக்கும் இடையேயுள்ள பெருத்த வேறுபாட்டைக் காண்பிக்க இயலும். 1920 ஆம் ஆண்டிலிருந்து காங்கிரஸ்காரர்கள் வாழ்ந்து காட்டி வரும் எளிமையையும், சிக்கனத்தையும் தொடர்ந்து கடைப்பிடித்து வருவார்களானால், அது ஆயிரக்கணக்கான ரூபாய்களை அவர்கள் பெற்றதுபோலாகும்; அதனால் ஏழைமக்களிடத்தில் நம்பிக்கையைத் தோற்றுவிக்க முடியும்; நிர்வாகத்தில் புதியதொரு மாற்றத்தையும் கொணர முடியும். எளிமையாக வாழ்வதென்றால் தரக்குறைவாக வாழ்வதல்ல, என்று நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. எளிமையாக வாழ்பவர்கள், அந்த எளிய வாழ்க்கையில் ஓர் அழகும் கலையம்சமும் இருக்கக் காண்பார்கள். தூய்மையுடனும், கண்ணியத்துடனும் வாழ்வதற்குப் பணம் அவ்வளவு முக்கியமல்ல. பகட்டும் ஆடம்பரமும் பல சமயங்களில் பண்பற்ற செயலுக்கு அழைத்துச் சென்றுவிடும்.''

நாற்பது ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இச்சொற்கள் இன்றும் மிகவும் பொருள் பொதிந்தனவாயும், பொருத்தமானவையாகவும் உள்ளன. அதிகாரத்திலும், பதவியிலும் இருப்பவர்கள் பின்பற்ற வேண்டிய அற்புதமான சொற்கள் அவை.

ஐந்தாவது மத்தியச் சட்டமன்றத்தின் விவாதங்கள் பெரும்பாலும் அரசியல் பிரச்னைகள் பற்றியனவாகவே இருந்தன. கருத்து வேறுபாடற்ற மற்ற மசோதாக்களும் கொண்டு வரப்பட்டுச் சட்டங்களாயின. அங்கு நடந்த விவாதங்களைப் பற்றி விரிவாக இங்குக் கூறுவது கடினம். 1937-ல் திரு S. சத்தியமூர்த்தி, அரசியல் நிர்ணயச்சபை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையைக் கொண்டு வந்தார். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் எல்லைக் காந்தியால் தொடங்கப்பட்ட குடாய் கித்மத்கர் என்ற செஞ்சட்டை

இயக்கம் சட்ட விரோதமானது என்று அரசு கூறியது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, சுதந்திர இயக்கத்தில் ஈடுபடுபவர் களை ஆங்கில அரசு ஒடுக்குவதற்கு முயல்வதைக் கண்டித்து விவாதம் நடைபெற்றது. வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களைப் பற்றிய விவாதங்களும் குறிப்பிடத்தக்கவை. ஆங்கிலேயரின் நலன் கருதி, பிரிட்டிஷ் பொருள்களுக்கு வரிச்சலுகை அளிக்கவேண்டு மென்று அரசு அறிவித்தது. கோவிந்த வல்லப பந்த், சாமி வெங்கடாசலம் செட்டியார் மற்றும் அனைத்துத் தரப்பினரும் இதை எதிர்த்தனர். இருப்பினும் பிரிட்டிஷ் துணிகளுக்கு மூன்று சதவீத வரிச்சலுகையை, சட்டமன்றத்தின் அனுமதியின்றியே அரசு அறிவித்தது. இதை எதிர்த்து நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத் தைக் கொண்டு வந்தேன். திரு. கோவிந்த வல்லப பந்த், திரு. கிருஷ்ணகாந்த் மலிங்கா, திரு. M. N. ஜோசி மற்றும் பலர் இத் தீர்மானத்தை ஆதரித்தனர்.

இந்தியப்படையை இந்தியமயமாக்குதலைப் பற்றிய விவாதங் கள் என்னால் தொடங்கி வைக்கப்பட்டன. இதற்கென அமைக்கப் படும் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பான்மையாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினேன். இதைப்பற்றிய விவா தத்தில் திருமதி. ராதாபாய் சுப்பராயன், திரு. குலாதர் சாலிகா, திரு. புலாபாய் தேசாய் ஆகியோர் கலந்து கொண்டனர். பதினைந்து ஆண்டுகளுக்குள் நம் படை இந்தியமயமாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தனர். என்னால் கொணரப் பட்ட திருத்தத்துடன் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நான், மத்தியச் சட்டமன்ற உறுப்பினனாக இருந்தபோது எனக்கு திரு. M. A. ஜின்னாவுடன் பழகும் வாய்ப்புக் கிட்டியது. அவருடன் பல சமயங்களில் நட்பு அடிப்படையில் பேசியுள்ளேன். இந்து சமூகத்திடம் அவர் மிகவும் வெறுப்புக் கொண்டிருந்தார். ஆனால் அவருக்கு இந்த வெறுப்பை உண்டாக்கிய அனுபவம் எது என்று எனக்குத் தெரியாது.

1940 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் லாகூரில் நடைபெற்ற முஸ்லீம் லீக் கூட்டத்தில் அவ்வியக்கம் பாகிஸ்தான் பற்றிய தனது திட்டத்தை முதன்முதலாக வெளிப்படுத்தியது. அந்த நாளிலிருந்து, சுதந்திர இந்தியா கோரிக்கையைக் காங்கிரஸ் எழுப்பியபோதெல்லாம் முஸ்லீம் லீக் அதை எதிர்த்து, இந்தியப் பிரிவினையைக் கோரியது.

காங்கிரசுடன் ஆங்கில அரசு எந்தவித உடன்பாடும் செய்து கொள்ளாதிருக்க, இது மிகவும் உதவியாக இருந்தது. ஆகவே காங்கிரசுக்கு நேரடி நடவடிக்கையில் இறங்குவதைத் தவிர, வேறு வழி இருக்கவில்லை. அதன் விளைவே 1942 'வெள்ளை அரசாங்கமே வெளியேறு' (Quit India) என்ற இயக்கம்.

1942 ஆம் ஆண்டு இயக்கத்தைப் பற்றிக் கூறுமுன், இடைப் பட்ட காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளான என் இமயமலைப் புனிதப் பயணம், மற்றும் வித்யாலயத்தின் முதல் பத்தாண்டு வளர்ச்சி பற்றிக் கூறுவது சிறப்பென்று எண்ணுகிறேன்.

# 15. இமயமலைப் பயணம்-
# ஓர் ஆன்மிக அனுபவம்

இமயமலைகளை வர்ணிப்பது எளிதன்று.

மன்னும் இமயமலை எங்கள் மலையே
மாநில மீதது போற் பிறிதில்லையே

என்று அதன் பெருமையைப் பாரதியார் புகழ்ந்துள்ளார். உலகி லேயே மிகவும் உயரமான மலை இமயமலை. மிக உயர்ந்த சிகரங்களையும், மிக ஆழமான பள்ளத்தாக்குகளையும், பல்வேறு விலங்கினங்களையும் கொண்டது. உலகில் எங்கும் இல்லாத அற்புதத் தோற்றங்களைக் கொண்டு நம்மை வியப்பில் ஆழ்த்து கிறது.

இந்துக்களுக்கு இமயமலை ஒரு புண்ணிய பூமி. புராணங் களில் அது விரிவாக வர்ணிக்கப்படுகிறது. அதன் சிகரங்களுள் ஒன்றான கைலாயத்தில் சிவபெருமான் நிலைத்த ஆழ்ந்த தியானத் தில் அமர்ந்து, அண்டசராசரங்களைத் தாங்கும் ஆன்மிகச் சக்தியாக விளங்குகிறார். தேவருலகிலிருந்து திருமால் கங்கையை உலகின் உயர்ந்த மலைச் சிகரத்தில் பாயுமாறு செய்தபோது சிவபெருமான் அதைத் தம் தலையில் தாங்கிக்கொண்டார். இமயமலையின் பெருமையை, சுவாமி விவேகானந்தர், ''ஒவ்வோர் இந்தியனும் தன் வாழ்நாளின் இறுதிப் பகுதியில் இந்தப் புனித பூமிக்கு வந்து தன் பூத உடலை நீத்துக்கொள்ள விரும்புகிறான். இந்தப் புண்ணிய மலைகளின் உயர்ந்த சிகரங்களிலும், ஆழ்ந்த குகைகளிலும், விரைந் தோடும் நதிகளின் கரைகளிலும் மிக உன்னதமான எண்ணங்கள் பிறந்துள்ளன,'' என்று பரவசமாக எடுத்துரைக்கிறார்.

மிகவும் புனிதமானதாகக் கருதப்படும் கங்கை நதி இமயமலை களில்தான் தோன்றுகிறது. ஜவஹர்லால் நேரு, தம் அஸ்தியைக் கங்கையில் கரைக்க வேண்டும் என்று தம் கடைசி உயிலில் கேட்டுக் கொண்டபோது அதில் அவர் கங்கையைப் பற்றி, ''கங்கை, இந்தியாவின் சிறப்பு வாய்ந்த ஒரு நதியாகும்.

இந்திய மக்கள் அதனைப் பெரிதும் நேசிக்கின்றனர். இந்திய நாட்டின் வரலாற்றுப் பாரம்பரியம், அதன் நம்பிக்கைகள்-அச்சங்கள், அதன் ஜெய கீதங்கள், அதன் வெற்றிகள்-தோல்விகள், ஆகியன கங்கையுடன் பின்னிப் பிணைந்துள்ளன. இந்தியாவின் தொன்றுதொட்டு வரும் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் அடையாளச் சின்னமாக அது திகழ்கின்றது,'' என்று அற்புதமாகக் கவிதை மொழியில் எழுதினார்.

கார்வால் இமாலயப் பகுதியில், 12,770 அடி உயரத்தில், கங்கோத்ரிக்கு 12 மைல் தொலைவில், கங்கோத்ரி பனிப்பாறையின் குகைப் பகுதியில், பாகீரதி என்ற பெயரில் கங்கை தோன்றுகின்றது. அதன் உற்பத்தியிடமான கோமுகி என்ற இடத்திற்குச் செல்லும் அனைவரும் அவ்விடத்தில் நிலவும் விவரிக்க இயலாத ஆன்ம உணர்வுகளைப் பற்றியும், தெய்விகச் சூழ்நிலைகளைப் பற்றியும் கூறியுள்ளனர். இந்தியாவின் சமநிலைப் பகுதிகளில் பிறந்து, அங்கேயே வளர்ந்து இதுவரையிலும் சிறுகுன்றுகளை மட்டுமே பார்த்திருப்பவர்கள், முதல் முறையாக இமயமலையின் உயர்ந்த சிகரங்களைக் கடந்து இறுதியில் கோமுகியை அடையும்போது விவரிக்க இயலாத அனுபவத்தைப் பெறுகின்றனர். கங்கோத்ரியிலிருந்து நூறுமைல்கள், பயணம் செய்து கேதார்நாத்தை அடையலாம். கேதார்நாத்திற்கு மேலேயுள்ள பனியாற்றுப் பகுதியில் புனித நதியான மந்தாகினி தோன்றுகிறது. அந்த நதி, மற்றொரு புனித நதியான அலகநந்தாவுடன் கூடுகிறது. அலகநந்தா நதி கங்கைநதியின் மிகமுக்கியத் துணைநதியாகும். இந்த நதியின் கரையில் பத்ரிநாத் ஆலயம் அமைந்துள்ளது.

அத்வைதத் தத்துவத்தை உலகிற்கு அளித்த ஞானி பகவான் ஆதிசங்கரரின் விஜயத்தால் புனிதமடைந்தவை கேதார்நாத், பத்ரிநாத் ஆலயங்கள்.

கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய இடங்களுக்குச் சென்றுவர வேண்டும் என்ற பேராவல் என் மனத்தில் மிக நீண்ட நாட்களாகவே இருந்து வந்தது. அதற்காக நான் நல்லதொரு வழிகாட்டியையும், பயணக்குழுவையும் எதிர்நோக்கியிருந்தேன். அக்காலத்தில் இவ்வகைப் பயணங்களுக்கு நடந்தே செல்லவேண்டும்; அல்லது மட்டக் குதிரை அல்லது தண்டி (டோலி)யில் செல்லவேண்டும். இந்தப் புனிதப் பயணத்தை முடிக்க அக்காலத்தில் நான்கு அல்லது ஐந்து வாரங்கள் பிடிக்கும்; ஏறக்குறைய 400 மைல்கள் நடந்தே செல்ல வேண்டும். ஆகவே இதற்கெனச் சிறப்பான ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருந்தது. வழியில் உணவைச் சமைத்தே உண்ண வேண்டியிருந்ததால் சமையல்காரர் ஒருவரும் பாத்திரங்களும் தேவைப்பட்

டன. உணவுப்பொருட்கள் மற்றும் பால் பவுடர் போன்றவற்றை யும் எடுத்துச்செல்ல வேண்டியிருந்தது. குளிர்மிகுந்த பகுதிகளில் பயணம் செய்யவேண்டியிருந்ததால் ஒரு தர்மாஸ் பிளாஸ்க்கும், மண்ணெண்ணெய் அடுப்பும் அவசியம் தேவைப்பட்டன. இவற் றைத்தவிர, குளிரைத் தாங்கிக்கொள்ளத் தேவையான காலணிகள், கால் உறைகள், கம்பளி உடைகள் முதலியன அவசியம். வெயிலுக்கும், மழைக்கும் உதவக் குடையும் தேவைப்பட்டது. இவை அனைத்திற்கும் மேலாக, யாத்திரையின் முழுப்பயனையும் பெற ஒருவர் இறை எண்ணத்துடனும், அற்புதமான இயற்கைக் காட்சிகளைச் சுவைக்கும் மனப்பாங்குடனும் இருக்கவேண்டும். இவ்விடங்களுக்குப் பலமுறை சென்றுவந்த அனுபவம் கொண்ட, காசி ராமகிருஷ்ண ஆசிரமத்தைச் சேர்ந்த சுவாமி ஞானானந்தர் என்னுடன் வந்து எனக்கு வழிகாட்ட இசைந்தது என் பெரும் பேறாக அமைந்தது. எனக்குச் சகோதரர் போன்றவரும், பிஜித்தீவில் ராமகிருஷ்ண மிஷனின் தலைவராக இருந்து அண்மையில் இறைவனடி சேர்ந்தவருமான சுவாமி ருத்ரானந்தரும் எங்களுடன் பயணத்தில் கலந்து கொள்ள இசைந்ததை எண்ணி நான் மிகவும் மகிழ்ந்தேன். கடுமையான எங்கள் நீண்ட பயணத் திற்கு இவர்களைக் காட்டிலும் சிறந்த துணை வேறு இருக்க முடியாது.

1937 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் நாள் நான் இந்தப் புனிதப் பயணத்தை மேற்கொண்டேன். பின்னர் அல்மோராவை அடைந்து அங்கு, சுவாமி ஞானானந்தரையும், சுவாமி ருத்ரானந்தரையும் சந்தித்தேன். அச்சமயம் அங்கு ராம கிருஷ்ண ஆசிரமத்தின் தலைவராக இருந்த ராம் மகராஜ் அவர்கள் என்னை மிகுந்த அன்புடன் விசாரித்தார். அல்மோரா ஆசிரமம் சுவாமி சிவானந்தரின் திருவடிகள் பட்ட புனித இடம். ஆகவே அந்த இடத்திலிருந்து பயணம் தொடங்குவது எனக்குப் பெரு மகிழ்ச்சியளித்தது. அல்மோராவிலிருந்து கருட் என்ற இடத்திற்குப் பஸ்ஸில் சென்றோம். அங்கிருந்து பாதயாத்திரையாக எங்கள் பயணத்தைத் தொடங்கினோம். முதலில் நாங்கள் கர்ணப்பிரயா கையை அடைந்தோம். அங்கிருந்து நேராக வடதிசையில் சென் றால் பத்ரிநாத்தை அடையலாம்; அல்லது தெற்கே ருத்ரப்பிரயா கைக்குச் சென்று, அங்கிருந்து பிரிந்து செல்லும் வழியாகச் சென்று பத்ரிநாத்தை அடையலாம். முதலில் நாங்கள் கேதார்நாத்துக்குச் சென்றுவிட்டுப் பின் தெற்கே செல்ல விரும்பினோம். ருத்ரப்பிரயா கையில் மந்தாகினி ஆறும், அலகநந்தா ஆறும் ஒன்று கூடுகின்றன. சீறிப்பாயும் இவ்விரு நதிகளும் ஒன்றோடு ஒன்று கலக்கும்போது தோன்றும் பேரொலி அவ்விடத்தைக் கம்பீரமானதாகவும், எழில்

நிறைந்ததாகவும் ஆக்குகின்றது. அங்கிருந்து நாங்கள் கேதார் நாத்தை அடையும் வரை மந்தாகினி ஆற்றின் கரை வழியாகவே பயணம் செய்தோம்.

வழி நெடுகிலும் 'சட்டி' (Chattis) என்று அழைக்கப்படும் சிறிய சத்திரங்கள் உள்ளன. அவை காளி கம்பளிவாலா என்பவரால் கட்டப்பெற்றவை. அவரது சரிதம் மிகவும் சுவையானது. அந்த நாட்களில் இமயமலை யாத்திரை மிகவும் கடுமையானது. சில சமயங்களில் கடுங்குளிரினாலும், பசியினாலும் இறக்கக்கூட நேரிடும். பயணிகளின் இன்னல்களைக் கண்ட காளி கம்பளிவாலா என்ற சாது, ரிஷிகேசத்திலிருந்து கேதார்நாத், பத்ரிநாத் செல்லும் வழிகளில் சத்திரங்களை அமைத்துப் பயணிகளுக்கு உணவும், உறை விடமும் அளிக்க விரும்பினார். அதற்குப் பெரும் தொகை தேவைப் பட்டது. ஏழையான சாது ஒருவருக்கு இத்தகைய பெரும் தொகை எங்கிருந்து கிட்டும். பிச்சையெடுப்பது இயலாத செயல். ஆகவே அவர் புதுவகையான தவம் ஒன்றை மேற்கொண்டார். அக்காலத் தில் இந்தியாவின் மிகப்பெரிய நகரமான கல்கத்தாவிற்குச் சென்று அங்கு ஹெளரா பாலத்தின் அருகில் ஒற்றைக் காலில் நின்று கொண்டு தம் புனிதத் தொண்டுக்குப் பொருளுதவி கேட்டார். முதலில் மக்கள் இதைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் விடா முயற்சி பலன் அளித்தது. ஏராளமான செல்வந்தர்களும், ஏழைகளும் உதவ முன் வந்தனர். அவர்களின் உதவியால் கேதார், பத்ரி ஆகிய இடங்களுக்குச் செல்லும் வழி நெடுகிலும் சத்திரங்கள் பலவற்றை அவர் கட்டியதோடு யாத்திரை செய்யும் சாதுக்களுக்கு உணவும் அளித்தார். அவரால் அமைக்கப்பட்ட சத்திரம் ஒன்றி லேயே நாங்களும் தங்கினோம். அந்தச் சத்திரத்திற்கு அருகிலேயே அரிசி, கோதுமை, காய்கறிகள், பால் முதலியன விற்கும் கடைகள் இருந்தன. எங்கள் உணவைச் சமைத்துச் சாப்பிட்டோம். காலையில் ஆறு-ஏழு மைல்களும், மாலையில் ஆறு-ஏழு மைல்களும் நடந்து எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். பல நாட்களுக்குப் பின் நாங்கள் குப்த காசியை அடைந்தோம்.

குப்த காசியிலிருந்து ஒருவர் இமயமலையின் பனிபடர்ந்த தொடர்களின் அற்புதக் காட்சியைக் காணமுடியும். எங்களுக்குக் கீழ், நிலம் படிப்படியாகக்கீழ் இறங்கி பெரும்பள்ளத்தாக்கில் முடிவடைந்தது. மேலே படிப்படியாக உயர்ந்து, சென்றது. இவ்வாறான தோற்றம் பெரியதொரு விளையாட்டு அரங்கைப் போன்ற அழகிய காட்சியை நல்கியது. வடக்கிலே வானை ஒட்டிய ஓர் எல்லைக்கோடு நிலவுலகின் முடிவான உயர்ந்த எல்லையாகத் தென்பட்டது. அது நிரந்தரமான பனியால்

மூடப்பட்டிருந்தது. அதுதான் இந்தியாவையும் திபேத்தையும் பிரித்த எல்லைக்கோடு. அது வெறும் இயற்கையமைப்பின் எல்லைக்கோடு மட்டுமன்று. தட்ப வெப்பநிலைகள், பண்பாடு கள், சமயங்கள் ஆகியவற்றையும் பிரிக்கும் எல்லையாக அமைந்திருந்தது. நிரந்தரப் பனியினால் மூடப்பட்டிருக்கும் இமயமலையின் உயரமான பகுதிகள் பைனாகுலர் (பெரிதுபடுத்திக் காட்டும் கண்ணாடி) வழியாகப் பார்க்கும்போது வியப்புமிக்கதோர் எழில் தோற்றத்தை அளித்தன. இமயம் என்றால் 'பனியின் இருப்பிடம்' என்று பொருள்.

கேதார்நாத் செல்லும் வழியில் குப்த காசிக்கு அருகில் கௌரி குண்டம் உள்ளது. அங்குள்ள வெந்நீர் ஊற்றில் நாங்கள் நீராடிப் புத்துணர்வு பெற்றோம். குப்த காசியிலிருந்து செங்குத்தாக ஏறவேண்டும். இதுமிகவும் கடினமானது. பயணி கள் மிகுந்த பக்தியுடன் ஏறுவார்கள். இந்த இடத்தில் நடை பெற்ற நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி ஞான்மகராஜ் எங்களுக்குக் கூறினார். அப்பொழுது மாலை நேரம்; இருள் சூழத்தொடங்கி யிருந்தது. மலைப்பகுதிகளில் இருள் சூழும்பொழுது குளிரும் அதிகரிக்கும். அச்சமயம் கேதார்நாத் செல்வதற்கு, செங்குத்தான மலைப்பகுதியில் ஏறிக்கொண்டிருந்த யாத்திரிகரான சாது ஒருவர் அருகில் முனகல் ஒலியையும், அழுகையையும் கேட்டார். நன்றாக உற்றுக்கேட்டபோது அவ்வொலி, சிறிது தொலைவில் முன்னால் சென்று கொண்டிருந்த மூதாட்டி ஒருத்தி மூச்சுத் திணறிக் கொண்டு ஏறுவதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள். சாது அவள் அருகில் சென்று, ''அம்மா, விரைவில் இருள் அதிகரித்துக் குளிர்மிகுந்துவிடும். அடுத்த இடம் வெகுதொலை வில் உள்ளது. ஆகவே தாங்கள் மேலே செல்வதற்குப்பதில் ஏன் கீழே இறங்கிச் சென்று தாங்கள் தங்கிய அந்த இடத்திலேயே தங்கியிருந்து ஓய்வெடுத்து நாளைக்கு ஏன் பயணத்தைத் தொடரக் கூடாது,'' என்று கேட்டார். அதற்கு அந்த மூதாட்டி, ''கேதார நாதரின் தரிசனத்திற்காகச் சென்றுகொண்டிருக்கும் என்னைத் திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்துவது காவி உடையணிந்திருக்கும் சாது ஒருவர்க்குப் பொருந்திய செயலன்று. எத்தனை இன்னல்கள் வரினும் நான் திரும்பிச் செல்ல மாட்டேன். என் முயற்சியில் சாவைக் கண்டும் நான் அஞ்சவில்லை. கேதாரநாதர் என்னைக் காப்பார்,'' என்று பதிலளித்தார். இத்தகைய தீவிர நம்பிக்கை தான் யாத்திரிகர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுத்துத் தடைகளை வெற்றி கொள்ள உதவுகின்றன. எங்களுக்கு முற்றிலும் புதியவர்களான, வெவ்வேறு மொழிகள் பேசும் சகோதர யாத்திரிகர்களை வழியில் சந்திக்கும்போது 'கேதார

நாதருக்கு ஜே' என்று சொல்லி வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்வோம்.

எங்கள் பயணத்தின் கடைசிப்பகுதி மிகவும் கடினமானதாக இருந்தது இருள் சூழ்ந்து வந்ததுடன் மேகமூட்டமும் இருந்தது. கடல் மட்டத்திலிருந்து 12,000 அடி உயரத்தில் நாங்கள் இருந்தோம். எங்களுக்கு மூச்சுத் திணறியது. மழை வரும்போல் இருந்தது. மழையில் நனைந்தால் உடல் நலம் கெட்டுவிடும் என்பதால் பயணத்தை விரைந்து தொடர்ந்தோம். இறுதியாக நாங்கள் கேதார்நாத்தை அடைந்தபோது எங்களுக்கு அற்புதப் பரிசு காத்திருந்தது. அதுதான், நிரந்தரப் பனிமூடிய கேதார்நாத் சிகரத்தின் அழகிய பின்னணியில் காணப்பட்ட கேதார்நாத் ஆலயத்தின் எழில் மிக்க காட்சியாகும். நாங்கள் அவ்விடத்தை அடைந்ததும் மழை பெய்யத் தொடங்கிற்று. குடைகளை விரித்துப் பிடித்துக் கொண்டோம். அங்கு எங்களுக்கு அருமையான ஓர் அனுபவம் கிடைத்தது.

தென்னிந்திய மக்கள் பனிமழைக் காட்சியை (Snow fall) அறியமாட்டார்கள். அங்கு எங்களுக்கு பனிமழையைக் காணும் அற்புத வாய்ப்புக் கிடைத்தது. மழைநீர் நிலத்தில் விழும்போது பேரொலி எழுகிறது. ஆனால் பனிமழை பெய்யும் போது எந்தவித ஒலியும் இன்றி அமைதியாக இருந்தது. பனித்துகள்கள் மலரினும் மென்மையாக இருப்பதால், அவை நிலத்தில் விழும்போது ஒலி ஏற்படுவதில்லை. அவை நிலத்தில் விழுந்ததும் இறுகிவிடுகின்றன. கேதாரநாதருக்குத் தேவர்கள் அஞ்சலி செலுத்துவது போல் இக்காட்சி இருந்தது. கேதார்நாத்தை நெருங்கியதும் நாங்கள் விரைந்து சென்று குடில் ஒன்றில் நுழைந்தோம். அப்பொழுது பனிமழை பெரிதாயிற்று. சற்று நேரத்தில் நிலமும், கட்டடங்களின் மேல் பகுதிகளும் பனியால் மூடப்பட்டன. எங்கும் பனியின் வெண்மை பளிச்சிட்டுப் பிரகாசித்தது. எங்கும் அமைதி நிறைந்த சூழல். பயணத்தால் களைப்படைந்திருந்த நாங்கள் உணவருந்தி விட்டு ஓய்வெடுத்துக் கொண்டோம்.

அடுத்த நாள் காலையில் நாங்கள் கேதாரநாதர் ஆலயத்திற்குச் சென்றோம். அங்குக் கூட்டம் அதிகம் இல்லை. ஆலயத்தின் அர்ச்சகர் உட்பட மொத்தம் பத்துப்பேர் இருப்பர். யாத்திரிகர்களுக்கு வேண்டிய வசதிகள் அங்கு இல்லை. இன்னல் நிறைந்த பயணம் என்பதாலும், வசதிகள் இல்லாததாலும் அதிக யாத்திரிகர்கள் வருவதில்லை. அங்குவரும் சில பயணிகளும் காலையில் வந்து தரிசனம் செய்து விட்டு மாலையில் திரும்பி விடுகின்றனர். ஆகவே, அப்பொழுது நாங்கள் மட்டும் தான்

ஆலயத்தில் இருந்தோம். பனி படர்ந்து இறுகிப்போயிருந்த பிரகாரத்தைச் சுற்றி வந்து ஆலயத்தினுள் சென்றோம். ஆயிரக் கணக்கான மைல்கள் கடந்து வந்திருந்த நாங்கள் கேதாரநாதரின் தரிசனத்தால் புல்லரித்துப் போனோம். உள்ளம் பக்தியுணர்வால் நிரம்பியது. கோயிலில் கேதாரநாதர் சுயம்புலிங்க வடிவில் காட்சியளித்தார். சாதி வேறுபாடின்றி அனைவரும் கேதார நாதரின் ஆலயத்தினுள் சென்று அங்கிருக்கும் சிவலிங்கத்தைத் தொட்டு வழிபடலாம். அங்கு அர்ச்சகர் செய்யும் பூஜை தென்னாட்டுச் சிவாலயங்களில் செய்யும் பூஜையைப் போன்றே இருந்தது. அங்குப்பூஜை செய்யும் அர்ச்சகர் கர்நாடகத்தில் உள்ள தார்வாரைச் சேர்ந்தவர். அமைதியுடனும் ஆனந்தத்து டனும் கேதாரநாதரை மனதார வழிபட்ட பின் நாங்கள் எங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பினோம்.

மாலை வந்தது. எங்கும் பரிபூர்ண அமைதி. பகல் நேரத்தில் முழக்கமிட்டுப்பாயும் ஆறுகளும் இரவு நெருங்கும் போது உறைந்து போய் அவற்றின் ஆரவாரம் அடங்கிவிடுகின்றது. இத்தகைய அமைதியான சூழ்நிலையில் மனம் அகமுகப்படுகிறது. நாங்கள் தியானத்தில் அமர்ந்தோம். தியானம் முடிந்தது நாங்கள் குடிலிலிருந்து வெளியில் வந்தோம். அமாவாசைக்கு முந்திய இரவு அது. ஆகவே அது இருண்ட இரவாக இருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் பௌர்ணமி இரவைப்போல் அது ஒளி மிக்கதாய் இருந்தது. பனிபடர்ந்திருக்கும் நிலத்தின் மேல் விண் மீன்களின் ஒளிபட்டுச் சிதறுவதால் எங்கும் ஒளிநிறைந்திருந்தது. கேதார்நாத் ஆலயத்தின் வடதிசையை நான் பார்த்தபோது, இது வரை கண்டிராத அற்புதக்காட்சியைக் கண்டேன். 24,000 அடி உயரம் கொண்ட கேதார்நாத் சிகரம் கம்பீரமாகக் காட்சியளித்தது. அச்சிகரத்தின் உச்சியில் ஒரு விண்மீன் அதற்கு அணி செய்வது போல் ஒளி விட்டுக்கொண்டிருந்தது. அச்சிகரத்தைச் சுற்றிலும் சாம்பல் நிறமேகங்கள், அவிழ்த்து விடப் பட்ட கூந்தல்போல் திகழ்ந்தன. கம்பீரமான மனிதர் ஒருவர் தியானத்தில் ஆழ்ந்திருந்ததைப் போல அக்காட்சி இருந்தது. உடனே எனக்குச் சிவபெருமானின் தோற்றம் நினைவுக்கு வந்தது. தலையில் பிறைசூடி, சடாமுடி தரித்து, கற்றை முடியிலிருந்து கங்கை கீழிறங்கி வீழ, இடி மின்னலாலும், மழை பனியினாலும் அசைக்க இயலாத முடிவற்ற மோனத்தவம் புரிந்து இவ்வுலகத்தை அருள்புரிந்து காக்கும் சிவபெருமானின் திருக்கோலக் காட்சியாக அது இருந்தது. நீண்ட நேரம் நான் வேறு நினைவின்றி அக்காட்சியிலேயே மூழ்கியிருந்தேன். ஆழ்ந்த அமைதி நிலவிய அந்த இரவும், அச்சூழலின் ஈடு

இணையற்ற அழகும் மனித உள்ளங்களை உயர்த்தி ஆன்ம நிலைக்கு இட்டுச் செல்லும் ஆற்றல் பெற்றன என்பது மிகையல்ல.

கேதார்நாத்தின் வரலாறும் சுவைமிக்கது. பழங்காலம் தொட்டே அக்கோயில் இருந்து வருகின்றது. பாண்டவர்கள் அங்கு வந்ததாகக் கூறப்படுகிறது. இன்று இருப்பது போன்ற கோயில்கள் அக்காலத்தில் இருக்கவில்லை. புத்தர் காலத்திற்குப் பின்தான் அவை அமைக்கப்பட்டன. இந்து சமயத்தின் பெருமையை நிலைநிறுத்தச் சங்கராச்சாரியார் நாடுமுழுதும் புனிதப் பயணம் செய்த போது கேதார்நாத்துக்கு வந்து அங்கு இந்து வழிபாட்டு முறையை அறிமுகப்படுத்தினார். தேசிய ஒருமைப்பாட்டுக்கு அவர் சிறந்த வழி காட்டினார். கேதார்நாத் கோயிலில் பூஜை செய்யத் தெற்கேயுள்ள தார்வாரிலிருந்து அர்ச்சகர் ஒருவரை நியமித்தார். அந்தப்பாரம்பரியம் இன்றும் நடைமுறையில் உள்ளது. கேதார்நாத்தில் சங்கராச்சாரியாருக்கு நினைவுச் சின்னம் ஒன்று இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த இடத்திலிருந்து தான் அவர் இவ்வுலகை விட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது. அவர் அங்கிருந்த மலைகளைக் கடந்து சென்று சத்பந்த் என்ற இடத்தில் தம் பூதவுடலை நீத்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இப்போதும் பத்ரிநாத்திலிருந்து அந்த இடத்திற்குச் செல்லலாம். முடிந்தால் அந்த இடத்திற்கும் நாங்கள் செல்ல வேண்டும் என்று நினைத்தோம்.

கேதார்நாத்தை விட்டுச் செல்ல எளிதில் எங்களுக்கு மனம் வரவில்லை. நான்காவது நாள் நாங்கள் கோவிலில் வழிபட்டுவிட்டு எங்கள் பொருள்களுடன் மெல்ல நடக்கத் தொடங்கினோம். குப்த காசியில் சாலை இரண்டாகப் பிரிந்து, ஒரு வழி பத்ரிநாத்துக்குச் செல்கிறது. வழியில் நாங்கள் துங்கநாத், சாமோலி ஆகிய இடங்களைக் கண்டுவிட்டு பத்ரிநாத்துக்குச் சென்றோம். கேதார்நாத்தை விட பத்ரிநாத் இரண்டாயிரம் அடி கீழே உள்ளது. கேதார்நாத்தில் உள்ளதைவிட இங்கு வசதிகள் மிகுதி. அனைத்தையும்விட அங்கு வெந்நீர் ஊற்று ஒன்று உண்டு. அந்த ஊற்றிலிருந்து வரும் வெந்நீரையும், அலகநந்தா ஆற்றின் குளிர்ந்த நீரையும் சிறு குளம் ஒன்றில் சேர்த்து யாத்திரிகர்கள் குளிப்பதற்கு வசதி செய்யப் பட்டுள்ளது.

பத்ரிநாத் ஆலயத்திற்குள் நுழைந்தபோது எனக்கு வியப்பு ஒன்று காத்திருந்தது. அக்கோயிலின் தலைமை அர்ச்சகர்'ராவல்' என்னைத் தமிழில் வரவேற்றார். அவர் திருவனந்தபுரத்திலிருந்து வந்தவர். அதனால் அவருக்குத் தமிழும், மலையாளமும் தெரிந்திருந்தன. இந்தப் பாரம்பரியத்தை ஆதிசங்கரர் ஏற்படுத்தி

யிருந்தார். கடந்த பன்னிரண்டு நூற்றாண்டுகளாக இது தொடர்ந்து வருகின்றது. பத்ரிநாத் ஆலயத்தின் பூஜை திருவரங்கம் அல்லது திருப்பதி ஆலயத்தின் பூஜையை ஒத்திருந்தது. அதே பாடல்கள், அதே நாமவளி, அதே அஷ்டோத்ர, சகஸ்ரநாம அர்ச்சனைகள். போக்குவரத்து வசதிகள் குறைந்திருந்த ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவ்வாறான பண்பாட்டு ஒருமைப்பாடு நிலவியதை நினைக்கும்போது நாம் வியப்பில் ஆழ்கிறோம்.

பத்ரிநாத்திலும் நாங்கள் நான்கு நாட்கள் தங்கினோம். கேதார்நாத்தைவிட இங்குக் குளிர் குறைந்திருந்தது. இங்கு வந்து செல்லும் யாத்திரிகர்களும், இங்குத் தங்கி வசிப்பவர்களும் அதிகம். ஆனால் இங்கும், கேதார்நாத்திலும் ஆறு மாதங்கள் மட்டுமே தங்கமுடியும். குளிர்காலத்தில் இவ்வாலயங்களைப் பனி மூடிவிடுவதால் அவை மூடிவைக்கப்படுகின்றன. இங்கு வசிப்பவர்கள், குளிர்காலத்தில் தங்கள் கால்நடைகளுடன் குப்தகாசிக்கு அல்லது சாமோலிக்கு, அல்லது இன்னும் கீழே இருக்கும் இடங்களுக்குச் சென்றுவிடுவார்கள். பத்ரிநாத், மானோபாஸ் ஆகிய ஊர்களின் வழியாகச் சீனாவுக்குச் செல்லும் வாணிப வழியும் மூடப்பட்டுவிடும்.

பத்ரிநாத்தின் வரலாற்றை அறிந்தபின் அக்கோயிலை வலம் வந்தோம். அங்கிருந்த பனிச்சிகரங்களையும், சத்பந்த் என்ற இடத்தில் ஆதிசங்கரர் தம் பூத உடலை நீத்ததையும் எண்ணிய போது என் கற்பனை சிறகடித்துப்பறந்து உணர்ச்சியில் ஆழ்ந்தது. சத்பந்த், பத்ரிநாத்திலிருந்து 16 மைல் தொலைவில் 18,000 அடி உயரத்தில் இருந்தது. அங்குச் செல்லும் வழியில் பனிப்பாறைகளும், பனியாறுகளும் இருந்தால் அங்குச் செல்வது மிகவும் கடினம். சத்பந்த் செல்லும் வழியில் கிராமங்களோ, மக்கள் நடமாட்டமோ இல்லாததாலும், கடுங்குளிர் நிலவுவதாலும் மக்கள் அங்கு அதிகம் செல்வதில்லை. அல்மோராவிலிருந்து எங்களுடன் வந்த சுமை தூக்கும் ஆட்களும் சத்பந்த் வரமறுத்து விட்டனர். அதனால் நாங்கள் புதிய ஆட்களை அமர்த்தவேண்டியிருந்தது. மழையோ, பனியோ பெய்யும்போது வழியில் ஒதுங்குவதற்குக் கூட இடம் இல்லை. இந்தப்பயணத்தில் உள்ள ஆபத்துக்களையும், இன்னல்களையும் கூறி எங்களை அங்குப்போக வேண்டாம் என்று அங்கிருந்தவர்கள் எச்சரித்தனர். சுவாமி ருத்ரானந்தரும் நானும் இளைஞர்கள். சுவாமி ஞானானந்தர் இமயமலைப் பயணத்தில் நல்ல அனுபவம் பெற்றவர். ஆகவே நாங்கள் அங்கிருந்த ஆபத்துக்களையும் இன்னல்களையும் சவாலாக ஏற்று, சத்பந்த் செல்ல முடிவு செய்தோம்.

அங்கிருந்த மக்களின் ஆசிகளுடன் 'பத்ரிநாத்துக்கு ஜே' என்ற முழக்கத்துடன் நாங்கள் புறப்பட்டோம். இரண்டு மைல் தொலைவிற்கு ஓர் ஒற்றையடிப்பாதை. அதன் முடிவில் சிறிய தொரு, அன்னையின் ஆலயம். இந்தியாவின் வடக்கு எல்லை யில் அது தான் கடைசிக்கோயில். அதற்கு எதிரில் இந்தியா வின் கடைசிக் கிராமமான மானா இருந்தது. சத்பந்த்துக்குச் செல்ல நாங்கள் இடப்பக்கம் திரும்பினோம். இந்தப்பகுதி ஏறு வதற்கு மிகவும் கடினமாக இருந்தது. எங்களுக்கு எதிரில் மூன்று பக்கங்களிலும் வானளாவிய மலைகள் பனிமூடிய சிகரங்களுடன் சூரிய ஒளியில் மின்னிக் கொண்டிருந்தன. சற்று நேரத்தில் மேகக்கூட்டங்கள் தோன்றிக் கருத்தன. மழைவரும் என்று நாங்கள் அஞ்சினோம். ஆனால் அதிர்ஷ்டவசமாக மேகங்கள் விரைவில் கலைந்தன. நாங்கள் தொடர்ந்து சென்று அலகநந்தா ஆற்றின் கரையிலிருந்தக் குகையை அடைந்தோம். அங்கு தான் நாங்கள் அந்த இரவில் தங்கவேண்டும் என்று எங்கள் வழிகாட்டி கூறினார். ஊர்ந்து கொண்டே சென்றுதான் அக்குகையினுள் நாங்கள் படுத்துக்கொள்ளமுடியும். அங்கு நிமிர்ந்து உட்கார முடியாது. எங்கள் பொருள்களை அக்குகையினுள் வைத்து விட்டு அந்த இடத்தைச் சுற்றிப்பார்த்தோம். அங்கே நாங்கள் ஒரு ஜபமாலையையும், வேட்டியையும் வேறுசில பொருள்களையும் கண்டோம். யாரோ ஒரு யாத்திரிகர் குளிரினால் தாக்குண்டு இறந்திருக்க வேண்டும். இமயமலையில் இறந்தவர்களின் உடலைக் கண்டோர் அதைக் கங்கையில் போட்டு விடுவார்கள்.

இப்பொழுது நாங்கள் கடல்மட்டத்திலிருந்து ஏறக்குறைய 13,000 அடி உயரத்தில் இருந்தோம். இரவு வந்து குளிர் அதிகரிக்கத் தொடங்கிற்று. அதிகமான உடைகளை நாங்கள் அணிந்திருந்தும் குளிரைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. குகைக்குள் சென்று எங்கள் உணவைச் சமைத்து உண்டோம். குளிரைக் குறைத்துக்கொள்ள, குகையின் நடுவில் தீ மூட்டினோம். பின்னர் உறங்கினோம். பகல் நேரத்தில் பேரொலியோடு பாய்ந்தோடும் அலகநந்தாவும் இரவின் பயங்கர அமைதியைக் கண்டு அஞ்சி அமைதியடைந்திருந்தது. அடுத்த நாள் காலை யில் நாங்கள் வெளியில் வந்து பார்த்தபோது, அலகநந்தா ஆறு உறைந்து போயிருந்தது. அந்தப் பனியின்மேல் நாங்கள் நடந்தோம்.

சூரியோதயத்திற்குப்பின் குளிர் குறையத் தொடங்கியது. காலை உணவை முடித்துக்கொண்டு நாங்கள் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். இப்போது நாங்கள் பல சிறு குன்றுகளைக்

கடந்து செல்ல வேண்டியிருந்தது. மண்மேடுகள் போன்று காட்சி யளித்த அவற்றைச் சுரண்டிப் பார்த்தபோது, அவை பனிக்குன்று கள் என்று தெரிந்தது. பல நூற்றாண்டுகளாகப் பனிகுவிந்து அவை குன்றுகளாக மாறி இருந்தன. சில இடங்களில் அவற்றின் பக்கங்களில் வாய் பிளந்து நிற்கும் பள்ளங்கள் இருந்தன. நாங்கள் கீழே பார்த்தபோது அவை 80-90 அடி ஆழமிருந்தன. இவற் றுள் தவறிவிழுவோர் இறப்பது உறுதி. ஆகவே எங்கள் வழி காட்டி தன் குச்சியால் தரையைத் தட்டிப்பார்த்துக் கடினமான பகுதியின் வழியாக எங்களுக்கு வழிகாட்டிச்செல்ல நாங்கள் அவரைத் தொடர்ந்து சென்றோம்.

சிறியகாலுறை, தடித்த காலுறை, பூட்ஸ், பனியன், சட்டை, ஸ்வெட்டர், முழுக்கை ஸ்வெட்டர், கோட்டு, இவையனைத்துக்கும் மேல் மேலங்கி, கம்பளிக்குல்லாய், கைகளுக்குக் கையுறை—இவை யனைத்தையும் நான் அணிந்துகொண்டேன். சிறிது தொலைவு சென்றதும் விரல்கள் விறைத்துக்கொண்டு வருவதை நான் உணர்ந்தேன்; ஊன்றுகோலை என்னால் பிடிக்க இயலவில்லை. கால்கள் நடுங்கத் தொடங்கின. என்னால் நடக்க இயலவில்லை. கண்களிலிருந்து நீர் வந்தது. தொடர்ந்து நடக்க இயலாமல் நான் நிலத்தில் அமர்ந்துவிட்டேன். என்னுடன் வந்துகொண் டிருந்த சுவாமி ருத்ரானந்தர் கவலையுற்று, சற்றுத் தொலைவில் சென்றுகொண்டிருந்த ஞான் மஹராஜை அழைத்தார். அவர் ஓடி வந்து வேண்டியதைச் செய்தார். சுமைதூக்குவோரை அழைத்து நெருப்பு மூட்டச் சொன்னார். என் காலுறைகளையும், கையுறை களையும் கழற்றி அவற்றைச் சூடுபடுத்தி மறுபடியும் எனக்கு அணிவித்தனர். எனக்குச் சகஜநிலை திரும்பிற்று. எதிர்பாராத இந்த நிகழ்ச்சி, என்னால் மேற்கொண்டு குளிரைத் தாங்கிக் கொண்டு பயணத்தைத் தொடர முடியுமா என்ற ஐயத்தைத் தோற்றுவித்தது. ஆனால் சற்று நேரத்தில் நான் மேலும் தெம்பு பெற்றேன். இவ்வளவு தொலைவு வந்தபின்னர் நாங்கள் இந்தப் பயணத்தில் எங்கள் இலக்குவரை செல்ல வேண்டும் என்று முடிவு செய்தோம். இறைவனின் அருளும், பாதுகாப்பும் எங்களுக்கு இருக்கும் என்று நம்பினோம்.

சில மைல் தொலைவு சென்றவுடன் ஓர் ஏரியை அடைந்தோம். மலைகளுக்கு இடையில் நீலநிறத் தண்ணீருடன் அது சூரிய ஒளி யில் நீலக்கல்போல் மின்னிக்கொண்டிருந்தது. அங்குதான் ஆதி சங்கரர் தம் பூதவுடலை நீத்ததாகச் சொல்லப்படுகிறது. சுற்றிலு மிருந்த பனிமலைகளிலிருந்து பனிநீர் உருகி அவ்வேரியில் தண்ணீரைச் சேர்த்தன. அந்த ஏரியில் ஒரு பக்கத்தில் இருந்த

குன்றில் சில குகைகள் இருந்தன. சாது ஒருவர் அங்கு வசித்து வருவதாக எங்கள் சுமையாட்கள் கூறினர். பனிபடர்ந்து உயிரினங்கள் அற்று மனித சஞ்சாரமே இல்லாத அந்த இடத்தில் மனிதர்கள் எப்படி வாழமுடியும் என்று நாங்கள் வியந்தோம். மிகவும் முயன்று அக்குன்றின்மேல் ஏறினோம். எங்கள் பேச்சொலியைக் கேட்டு அந்தச் சாது குகையைவிட்டு வெளியில் வந்தார். ஏறக் குறைய ஆறடி உயரம் கொண்ட அவர் நெற்றியில் திருநீறு அணிந்து கம்பீரமாகக் காட்சியளித்தார். அவர் அணிந்திருந்த கண்கண்ணாடியில் ஒரு கண்ணாடி மட்டுமே இருந்தது. அவர் ஒரே ஒரு முரட்டுக் கம்பளியை மட்டும் உடல் முழுதும் போர்த்தியிருந்தார். எங்களைக் கண்டதும் அவர் தம் இரு கைகளையும் உயர்த்தி மகிழ்ச்சியுடன், 'ஆனந்த ஹோ! ஆனந்த ஹோ!' என்று உரத்த குரலில் வாழ்த்தி வரவேற்றார். அவர் விழிகளில் ஆனந்தம் ஒளி வீசிற்று. எங்களைத் தம் குகைக்குள் வருமாறு அழைத்தார். அக்குகை 10 அடி நீளம் 10 அடி அகலம் கொண்டது. தரையில் பாயும் கம்பளியும் விரிக்கப்பட்டிருந்தன. அவர் தியானம் செய்யும்போது அமர்வதற்குரிய மான் தோல் ஒன்றும், சிறிய பாத்திரங்கள் சிலவும் அங்கிருந்தன. 'எங்கிருந்து வருகிறீர்கள்?' என்று எங்களை வினவினார். இந்தியாவின் தென்கோடியிலிருந்து நாங்கள் வந்திருப்பதைச் சொன்னோம். இந்த இடத்தில் இவர் எப்படித்தான் கடுமையான குளிரைத் தாங்கிக் கொண்டு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறாரோ என்று நாங்கள் வியப்பில் ஆழ்ந்த போது எங்கள் வியப்பிற்குப் பதில் சொல்வது போல் அன்பான குரலில் அவர், 'மிகவும் தொலைவான இடத்திலிருந்து நீங்கள் இங்கு வந்தது எவ்வளவு ஆனந்தம்! இறைவனின் அருளால் இயலாதது எதுவும் இல்லை' என்று கூறிப்பாடத் தொடங்கினார்:

மூகம் கரோதி வாசாலம்
பங்கும் லங்கயதே கிரிம் I
யத்கிருபா தமஹம் வந்தே
பரமானந்த மாதவம் II

(எவனுடைய அருளால் ஊமை பேசமுடியுமோ, முடவன் மலையேற முடியுமோ, அந்தப் பரமானந்த மாதவனை நான் வணங்குகிறேன்.)

சாதாரண மனிதன் விரும்பும் நல்ல உணவோ, நல்ல இருப்பிடமோ புலன்களுக்கு இன்பமூட்டும் பொருள்களோ எதுவும் அங்கு இல்லை. இருப்பினும் அந்தச் சாது எல்லையற்ற இன்பத்தில் மூழ்கியிருந்தார்.

இந்தச் சமயத்தில் கீதையின் சுலோகம் ஒன்று என் நினைவிற்கு வந்தது. ''எவன் உள்ளே சுகமுடையவனோ, உள்ளே களியாட்டமுடையவனோ, அவ்வாறே எவன் உள்ளே ஒளியுடையவனோ அந்த யோகியே உயிர்வாழும்போதே பிரம்மமாய், பிரம்மத்தில் முக்தியை அடைகிறான்'' (V. 24). நாங்கள் கொண்டுவந்திருந்த உலர்ந்த பழங்கள் சிலவற்றையும், கற்கண்டையும் அவருக்கு எங்கள் காணிக்கையாகச் செலுத்தி னோம். அவரும் எங்களுக்குப் பிரசாதம் கொடுத்தார். அதை நாங்கள் பக்தியுடனும் பணிவுடனும் பெற்றுக்கொண்டோம். அவருடன் நாங்கள் இருந்த இரண்டு மணி நேரமும் சென்றதே தெரியவில்லை. விரைவில் புறப்பட்டால்தான் இருட்டுவதற்கும், குளிர் அதிகரிப்பதற்கும் முன்னால் எங்கள் குகையை அடைய முடியும் என்று வழிகாட்டிகள் கூறினர். ஆகவே நாங்கள் சத்பந்த் சாதுவிடம் பிரியாவிடை பெற்றுத் திரும்பினோம்.

அன்றைய இரவை எங்கள் குகையில் கழித்து விட்டு, அடுத்த நாள் காலையில் நாங்கள் பத்ரிக்குப் புறப்பட்டோம். அங்கு எங்கள் புதிய நண்பர்கள் மிகுந்த அன்புடனும் மகிழ்ச்சியுடனும் எங்களை வரவேற்றனர். அங்கிருந்த வெந்நீர் ஊற்றில் நீராடி பத்ரிநாதரைத் தரிசித்து விட்டுத் திரும்பினோம். நாங்கள் திரும்பும் வழியில் ஜோசிமடம், சாமோலி, நந்தப்பிரயாகை ஆகிய இடங் களைக் கண்டுவிட்டு, கர்ணப்பிரயாகை வழியாக கருட் என்னும் இடத்தை அடைந்தோம். அங்கிருந்து பஸ் மூலம் அல்மோரா வுக்கு வந்து சேர்ந்தோம்.

இந்தத் திருக்கேதார யாத்திரையை மேற்கொண்டு நாற்பது ஆண்டுகளுக்கு மேல் ஆயிற்று. இந்த நாற்பது ஆண்டுகாலமும் கம்பீரமான கேதார்நாத் சிகரமும், சத்பந்த் சாதுவின் கம்பீரத் தோற்றமும், அசைக்கமுடியாத அவரது மனஉறுதியும் தைரியமும், அவற்றால் இயற்கையை வெல்ல முயன்றுகொண்டிருந்த அவரது தளரா ஆண்மையும் என் உள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டு மேலும் சிறந்தவொரு வாழ்க்கைக்கும், அன்பிற்கும், சேவைக்கும், குறிக்கோளுக்கும் எனக்கு உணர்ச்சியும், உத்வேகமும் ஊட்டிக் கொண்டுள்ளன.

இந்த நாற்பதாண்டுக் காலத்தில் கேதார்நாத்திலும், பத்ரி நாத்திலும் நவீன வசதிகள் பெருகிவிட்டன, நல்ல சாலைகள் போடப்பட்டுள்ளன. பத்ரிநாத் கோயில் வரையிலும், கேதார்நாத் செல்லும் வழியில் கௌரிகுண்டம் வரையிலும் பஸ்கள் செல் கின்றன. அதனால் இவ்வாலயங்களுக்குச் செல்லும் யாத்திரீகர் களின் கூட்டமும் அதிகரித்துள்ளது. ஆனால் இந்த வசதிகளால் அங்கிருக்கும் ஆன்மிகச் சூழல் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் கூறாமல் இருக்க இயலவில்லை.

# 16. முதல் பத்தாண்டுகளின் அனுபவங்கள்

அரிஜனச் சிறுவர்களைச் சேர்த்துக் கொண்டதால் தோன்றிய சமூகப் புறக்கணிப்பு வித்யாலயத்தின் கௌரவத்தையும், பொருளாதாரத்தையும் வெகுவாகப் பாதித்தது. சமூகத்தில் வசதியானவர்கள், வித்யாலயத்தை ஒரு 'கீழ்த்தரமான' பள்ளி என்று கருதினார்கள். தொடக்க நாட்களில் ஏழைக் குழந்தைகள் மட்டும் சேர்ந்தனர். அவர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம், புத்தகங்கள், நோட்டுக்கள், பென்சில் போன்றவை இலவசமாக வழங்கப்பட்டன. தொலைவிலிருந்து வந்தவர்களுக்கு ஊர்சென்று வரப் போக்குவரத்துச் செலவும் கொடுக்கப்பட்டது. இச்செலவுகளைச் சமாளிக்க நன்கொடை திரட்ட வேண்டியிருந்தது. நன்கொடை திரட்டுவது என்பது எளிய காரியமன்று.

உயர்ந்த கொள்கைகளுடன் நிறுவனங்களைத் தொடங்கி நடத்துபவர்கள், பல துன்பங்களையும், அவமதிப்புகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டி இருக்கும். நான் என் குடும்ப கௌரவம், கல்வி, சமூக மதிப்பு ஆகியவற்றை விட்டு விட்டு, நன்கொடை திரட்டச் செல்ல வேண்டியிருந்தது. குறிப்பிட்ட தொகைகளைக் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்துக் கையொப்பமிட்டவர்களிடம் அத்தொகைகளை வசூலிக்கப் பலமுறைகள் நடக்க வேண்டியிருக்கும். பெரிய தொகைகளை நன்கொடையாகக் கொடுத்தவர்கள், தாங்கள் நினைப்பதுபோல் நிறுவனம் நடக்க வேண்டும் என்று எதிர்பார்த்து அதன் நிர்வாகத்தில் தலையிடுவார்கள். ஆனால் இறைவனருளால், வித்யாலயத்திற்கு ரூ. 10,000/-க்கு மேல் நன்கொடை வழங்கியவர்கள் பத்து பன்னிரண்டு பேர்களுக்கு மேல் இருக்கவில்லை. எங்கள் குடும்பத்தாரும், நண்பர்கள் திரு. N. M. R. சுப்பராமன், திரு. V. C. வெள்ளிங்கிரிக்கவுண்டர், திரு. C. K. குமாரசாமிக்கவுண்டர், டாக்டர் திருமதி ராஜம்மாள் P. தேவதாஸ் போன்றவர்களே இவர்கள். இவர்கள் கொடுத்த நன்கொடைத் தொகை பெரியதாக இருந்தும் இவர்கள் என்னிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை.

அக்காலத்தில் பணத்தின் மதிப்பு அதிகமாக இருந்ததால் ரூ. 100/- என்பது மிகப் பெரிய தொகையாகும். ரூ. 10,000/– என்பது நினைத்துப்பார்க்க இயலாத அளவுக்குப் பெருந்தொகை. அப்பொழுது நல்ல தரமான அரிசியின் விலை மூட்டை ஒன்றுக்கு ரூ. 11/-. ஒரு பவுன் தங்கம் ரூ. 13.75/-க்கு விற்றது. ஒரு மாணவனுக்கு மாதச் சராசரிச் செலவு ரூ. 6/- மட்டுமே. இடை நிலை ஆசிரியரின் மாத ஊதியம் ரூ. 25/-; பட்டதாரி ஆசிரியர் ரூ. 50/- பெற்று வந்தார்; தலைமையாசிரியருக்கு மாத ஊதியம் ரூ. 60/-. நாங்கள் பெரும்பாலும் எங்கள் நன்கொடைகளுக்காக நடுத்தர வகுப்பினரையே நாடினோம். சிறுதொகையை நன்கொடை அளித்தவர்கள், நிறுவனத்தை மதித்து அது ஏழை களுக்குச் செய்து வரும் சேவையைப் போற்றினார்கள். இவ்வாறு சிறு தொகைகளைத் திரட்டப் பலரை நாடுவதற்கு அதிகநேரம், அதிகத் தொல்லை மற்றும் அதிக முயற்சி தேவையாயிருந்தன. இன்னல்கள்தாம் ஒருவர்க்கு நற்பண்பைக் கொடுத்து, கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்தும். அதனால்தான் பாண்டவர்களின் தாயான குந்தி, ''இறைவனே! எனக்கு இன்னல்களைக்கொடு! அப்பொழுது தான் நான் உன்னை நினைக்கமுடியும்!'' என்று பிரார்த்தித்ததாகச் சொல்லப்படுகிறது.

1940-ஆம் ஆண்டு வித்யாலயத்தில் நடந்த சோக நிகழ்ச்சி யொன்று என்னை மிகவும் பாதித்தது, ஒரு நாள் மாலை நான் ரயிலில் கோவையிலிருந்து வித்யாலயம் திரும்பிக்கொண்டி ருந்தேன். அப்பொழுது படித்துவந்த மூத்த மாணவர்களில் ஒருவ ரான P. K. நடராஜன் துடியலூர் ரயில் நிலையத்திற்கு ஓடிவந்து அழுதுகொண்டே என்னிடம், ''சண்முகசுந்தரம் (எங்கள் மாணவர்) கிணற்றில் விழுந்து இறந்துவிட்டான். அவன் உடல் கிணற்றில் மிதந்து கொண்டுள்ளது'', என்று கூறினார். நான் பெரும் அதிர்ச்சியுற்றேன். நான் வித்யாலயம் திரும்பியதும் இந்தச் சோக நிகழ்ச்சியை அவன் பெற்றோருக்கும், காவல் துறைக்கும் தெரிவித்தேன். இரவு 10.00 மணியளவில் அவனது பெற்றோர் கள் வந்தனர். அவனுடைய பெற்றோர்களும், உறவினர்களும் முரட்டு இயல்பு உடையவர்கள். அவர்கள் அளவற்ற துயரம் அடைந்து எங்களைத் தூற்றத்தொடங்கினர். இது சதித்திட்டமாக இருக்குமோ என்று கேட்டார்கள். இவ்வாறான எதிர்பாரா நிகழ்ச்சியால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தோம். ஸ்ரீ ராம கிருஷ்ணர் எங்களைக் கைவிட்டு விட்டாரோ என்றுகூட ஒருகணம் நினைத்தோம். இரவு 11-00 மணியளவில் எதிர்பாராவகையில் உதவியும், ஆறுதலும் கிடைத்தன. அந்த மாணவனின் இனத்தைச் சேர்ந்த திரு. V. C. வெள்ளிங்கிரிக்கவுண்டர், அந்தச்

சமூகத்தாரால் பெரிதும் மதிக்கப்பட்டவர்; அவர் சொல்லுக்கு அவர்கள் கட்டுப்படுவர். இந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட அவர் எனக்கு உதவி தேவைப்படும் என்று அறிந்து, அச்சமயம் அவருடைய கார் டிரைவர் இல்லையென்றாலும், அந்த இருட்டு வேளையில் குதிரை வண்டியில் வந்து சேர்ந்தார். அவர் வந்ததும் எங்கள் அச்சம் தணிந்தது. இறந்த போன அந்த மாணவனின் பெற்றோரை அவர் ஆறுதல் கூறி அமைதிப்படுத்தினார். சடங்குகள் தொடர்ந்தன. குருமஹராஜ், தம் குழந்தைகளைக் கைவிடவில்லை என்றும், இனிமேலும் கைவிடமாட்டார் என்றும் நாங்கள் உணர்ந்து கொண்டோம்.

குழந்தை ஒன்றின் வளர்ச்சியில் தொடக்க ஆண்டுகள் எவ்வாறு முக்கியமானவையோ, அவ்வாறு தான் ஒரு நிறுவனத்தின் தொடக்க ஆண்டுகளும் முக்கியமானவை. நிறுவனத்தின் கொள்கைகள் தெளிவாக்கப்பட்டு, அவற்றை அந்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்ட அனைவரும் புரிந்து செயல்படுமாறு செய்யவேண்டும். நேர்மையுடனும், உண்மையுடனும் உழைக்கும் ஊழியர்களையும் திரட்டவேண்டும். சிறந்த தொரு பாரம்பரியத்தைத் தோற்றுவித்து வளர்க்க வேண்டும். நேர்மையான ஊழியர்கள் கிடைத்தாலும் அவர்களைத் தொடர்ந்து ஊக்கமூட்டி வைத்திருப்பது அவசியம். இந்த விஷயத்தில் நிறுவனருக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது. அவர், கொள்கைகளைப் பின்பற்றுவதில் உள்ள இன்னல்களை ஏற்று, மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து, மாணவர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஆர்வமூட்ட வேண்டும். தாம் மேற்கொண்ட கொள்கையில் உறுதியாக நின்று அத்தகைய உறுதிப்பாட்டை மற்றவர்களிடமும் வளர்ப்பதே அவரது தலைமைப்பண்பாகும். இதற்கு அளவற்ற பொறுமையும், விட்டுக்கொடுக்கும் பண்பும், அன்பும், பரிவும் அவசியம்.

பொதுமக்களிடமும், சக ஊழியர்களிடமும், மாணவர்களிடமும் பழகும் போது உணர்ச்சிவசப்படாமலும், சினம் கொள்ளாமலும் இருப்பது பொதுநலத் தொண்டர்களுக்கு இன்றியமையாதன. ஆகவேதான் அனைத்துச் சமயக் கோட்பாடுகளும் சினத்தை அடக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. உணர்ச்சிவசப்பட்டுச் சினமடையும் போது ஒருவர் தம் நிலை தடுமாறிக் கடுஞ்சொற்களைப் பயன்படுத்துகிறார். அதனால் மற்றவர்கள் புண்படுகின்றனர். உணர்ச்சி வசப்பட்டுச் சினம் கொள்ளும் ஒருவர் தம் நல்ல நண்பர்களையும், ஆதரவாளர்களையும், சிலசமயங்களில் தங்கள் குழந்தைகளின்

அன்பையும் இழக்க நேரிடும். நம் கோபத்தைத் தூண்டும் சூழ் நிலையில் பொறுமையாக இருப்பது எவ்வளவு கடினம் என்பதை நான் என் சொந்த அனுபவத்தில் உணர்ந்துள்ளேன். ஆனால் நிறுவனத்தின் நலன் கருதி என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள நான் பழகிக் கொண்டேன். பொறுமையாக இருப்பதென்பது, தீமையையும், தீயபழக்கங்களையும், ஊழல்களையும், கடமையில் தவறுவதையும், ஒழுங்கீனத்தையும் பொறுத்துக் கொள்வது என்பதன்று.

நிறுவனங்களை நன்கு வளர்க்க விரும்புபவர்கள் மற்றவர் களின் பணியைப் பாராட்டி ஊக்குவிக்க அறிந்திருக்க வேண்டும். பாராட்டுவதால் மனித ஆளுமை வளர்கின்றது. மாணவர்களும், ஊழியர்களும் செய்யும் நற்செயல்களைப் பாராட்டுவது அவர்களை உற்சாகப்படுத்தும். அவ்வப்போது பயன்மிக்க அறிவுரை களையும் அவர்களுக்குக் கூறவேண்டும்.

தொடக்க நாளிலிருந்தே வித்யாலயத்தின் குறிக்கோள், ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், மற்றும் மகாத்மா காந்தி ஆகியோரின் கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்ட கல்வியை மாணவர்களுக்கு அளிப்பதாகும். அவர்களின் அருள் மொழிகள் கீழ்க்கண்ட கல்வித் தத்துவங்களைக் கோடிட்டுக் காட்டுகின்றன:

1. மனிதனை நன்மனிதனாக்குவதும், நற்பண்புகளை வளர்ப் பதுமே கல்வியின் முடிவான நோக்கம். இந்த லட்சியத்தை அடைய, பரந்த தூய நல்லதொரு சமயப் பின்னணி அவசியம்.
2. ஒரு நல்ல கல்விமுறைக்கு நாட்டுப்பற்றும், சேவை மனப் பான்மையும், பக்தி சிரத்தையும் மிக்க ஆசிரியர்கள் தேவை.
3. வாழ்க்கைக்குதவும் தொழில் அல்லது பல்வேறு வகையான செயல்களின் மூலம் குழந்தைகளுக்குக் கல்விப்பயிற்சி அளிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் வலிமையுடனும், தன்னம்பிக்கையுடனும் வளர்வார்கள். கற்றுக்கொள்பவர் களின் தேவைகளுக்கு ஏற்பக் கற்பித்தல் அமையவேண்டும்.
4. பள்ளிகள் சமூகத்திலிருந்து விலகி இருக்கக்கூடாது. கிராம சேவை, பள்ளித் திட்டத்தின் ஒரு பகுதியாக அமைய வேண்டும்.
5. உடன்பாட்டுக் கருத்துக்கள், வழிகாட்டுதல் ஆகியவற்றின் மூலமே குழந்தைகளுக்கு நல்ல பயிற்சி கொடுக்கமுடியும். ஆசிரியர் அவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்,

6. கண்டிப்பு அவசியம். கண்டிப்பாக இருக்கவேண்டியதன் காரணங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டும்போது மாணவர்கள் அவற்றைப் புரிந்துகொண்டு சிறப்பாக ஒத்துழைக்கின்றனர்.

இந்த நற்கருத்துக்களை எவ்வாறு செயல்படுத்தி நடைமுறைக்குக் கொணர்வது என்பது தான் வித்யாலயத்தின் பெரும் பொறுப்பாக இருந்தது. இதைப்பற்றியே தொடர்ந்து சிந்தித்து, யோசனைகள் செய்து நல்லவற்றை நடைமுறைப்படுத்த நாங்கள் முயன்றோம். அப்போதைய சமூகம் சாதி அடிப்படையில் அமைந்திருந்தது. உடல் உழைப்புக்கு மதிப்பு இல்லாத காலம் அது. உடல் உழைப்புத் தொடர்பான சில வேலைகள் தாழ்ந்தவை என்று மக்கள் எண்ணியிருந்தனர்.

அதனால், சமூகத்தினர், பெற்றோர், மாணவர்கள் ஆகியவர்களிடமிருந்து எங்கள் கொள்கைகளுக்கு எதிர்ப்பு இருந்தது. ஆகவே நாங்கள் பின்பற்றிய தத்துவங்கள் குழந்தைகளின் நலனுக்காகவே என்ற கருத்தை அவர்களுக்கு எடுத்துக்கூறி மன நிறைவடையச்செய்வது எளிதாக இருக்கவில்லை. இதற்குத் தீவிரமான கொள்கைப்பிடிப்பு, பொறுமை, உறுதி ஆகியன தேவைப்பட்டன.

மாணவர்களுக்கு, நற்கருத்துக்களை அளிப்பதில், வித்யாலயத்தில் அவ்வப்போது தொண்டாற்றிய துறவிகளின் பங்கு மகத்தானது. ராமகிருஷ்ண மிஷனால் வித்யாலயத்திற்கு முதன் முதல் அனுப்பப்பட்ட சுவாமிகள், சுவாமி ரிஷிகேஷானந்தர் அவர்கள். அவர் வங்காளத்தைச் சேர்ந்த இளைஞர். வித்யாலயக் குழந்தைகளின் மேல் இருந்த அன்பினால் தமிழை ஓரளவுக்குக் கற்றுக்கொண்டார். நான் மூன்றாவது முறையாகச் சிறை சென்றபோது அவர் வித்யாலயக் குழந்தைகளை நன்கு கவனித்துக்கொண்டார். பின்னர், சிறிது கால இடைவெளிக்குப் பின் சுவாமி நிஷ்காமானந்தரும், அவரைத்தொடர்ந்து சுவாமி சர்வக்ஞானந்தர் அவர்களும் வித்யாலயத்தில் இருந்தனர். சுவாமி சர்வக்ஞானந்தர் அண்மைக்காலத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் நாட்டறம்பள்ளி கிராமத்தில் ராமகிருஷ்ண மடத்தின் தலைவராக இருந்து சுற்றுப்புறக் கிராமங்களில் சீரிய தொண்டாற்றி வந்தார். சமீபத்தில் அவர் இறைவனடி சேர்ந்தார்.

அவர் வித்யாலயத்தில் இருந்தபோது அவருக்கு உதவியாக, சுவாமி அவ்யயானந்தர் சேவைசெய்தார். பின்னர் அவர் பல ஆண்டுகள் கொழும்பு ஆசிரமத்தில் தொண்டாற்றிவிட்டுத் தற்சமயம் காஞ்சிபுரம் ஆசிரமத்தின் தலைவராக இருந்து சேவை

செய்து வருகிறார். சுவாமி ததானந்தர், சுவாமி ரசக்ஞானந்தர், சுவாமி சமக்ரானந்தர் ஆகியோர் சில ஆண்டுகள் வித்யாலயத்தில் சேவைசெய்தனர். சுவாமி சர்வக்ஞானந்தரைத் தொடர்ந்து சுவாமி சோமானந்தர் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து தொண்டாற்றி வருகிறார். இன்று சுவாமி தன்மயானந்தரைச் செயலராகக் கொண்டு பல துறவிகள் இங்கு சேவையாற்றி வருகின்றனர்.

மற்றொரு சுவாமிகளைப் பற்றியும் இங்கு அவசியம் குறிப்பிட வேண்டும். அவர் தான் 'முத்தண்ணா' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட சுவாமி முக்தானந்தா அவர்கள். அவர் சுதந்திரப் போராட்ட வீரர்; பிரம்மச்சாரி. சுதந்திரம் வந்த பிறகு ஆக்கப்பணிகளில் ஈடுபட விருப்பம் கொண்டு வித்யாலயத்தில் முதலில் தொழிற் பகுதியில் தம் சேவையைத் தொடங்கினார். அவரது அமைதி, பணிவு, கடும் உழைப்பு ஆகியன அனைவரின் நன்மதிப்பையும் பெற்றன. பின்னர் அவர் ரிஷிகேசம் சென்று துறவு பூண்டு, சுவாமி முக்தானந்தராக வித்யாலயத்திற்கு வந்து தொடர்ந்து முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக வித்யாலயத்தின் விவசாயப் பணிகளைச் சிறந்த முறையில் கவனித்துக் கொண்டார். அவர் மறைவுக்குப் பின் அவர் கவனித்து வந்த தோட்டம் அவர் பெயரிலேயே அழைக்கப்பட்டு வருகிறது.

சுவாமி சோமானந்தரைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். அமைதி, அன்பு, பணிவு, ஆகியவற்றுடன் பக்தியுடன் கூடிய கடும் உழைப்பும் அவரது சீரிய பண்புகள். அவர் வித்யாலயத்தின் குழந்தைகளை மிகுந்த அன்புடன் கவனித்துக் கொள்வதுடன் எனக்கு உடல்நலம் குன்றியபோதெல்லாம் என்னையும் நன்கு கவனித்துக் கொள்கிறார். அவரது அன்பிற்கும், பரிவிற்கும் நான் என்றும் கடமைப்பட்டவன். அவர் தம் தொடர்ந்த பக்தி மிக்க சேவையால், ஆசிரியர்கள், மாணவர்கள். பக்தர்கள், நண்பர்கள் ஆகிய அனைவரின் அன்பையும் ஒருங்கே பெற்றவர். அவர் 1955 ஆம் ஆண்டிற்குப் பின் வித்யாலயத்திற்கு வந்தார். அந்த ஆண்டிலிருந்து தான் வித்யாலயத்தின் உயர்கல்வி நிறுவனங்கள் தொடங்கப் பெற்று வித்யால்யம் பெரிதாக வளரத் தொடங்கியது. வித்யாலய வளர்ச்சியுடன் தம்மை ஒன்று படுத்திக் கொண்டு அவர் ஆற்றி வரும் தொண்டு மகத்தானது.

வித்யாலயத்தின் ஆண்டறிக்கைகளின் கீழ்க்கண்ட பகுதிகள், அதன் உயர் கொள்கைகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதைப் பற்றி அறிய உதவும். வித்யாலயத்தின் முதல் ஆண்டறிக்கை 1933 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியாயிற்று.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பான செய்திகளை இப்புத்தகத்தின் வேறு பகுதியில் கூறியுள்ளோம். அவற்றில் வராத சில செய்திகளை இங்குக் குறிப்பிடுகிறோம்:

வித்யாலயத்தின் அன்றாட வாழ்க்கை முறை :

நவீனகாலத்திற்கேற்பவும், தேசிய அடிப்படையிலும் நடை பெற்றுவரும் ஓர் உறைவிட நிறுவனம் வித்யாலயம். மேல் வகுப்பு மாணவர்கள் காலை 5.00 மணிக்கும், கீழ்வகுப்பு மாணவர்கள் 5.30 மணிக்கும் துயில் எழுந்து குளிர்ந்தநீரில் குளிப்பார்கள். ஆறு மணிக்குப் பிரார்த்தனை. 6.30 முதல் 7.30 வரை படிப்பு நேரம். 7.45 க்குக் காலை உணவு. காலை உணவிற்குப்பின் மாணவர்கள் தங்களுக்குரிய பல்வேறு பணிகளில் (துப்புரவு, காய்கறி நறுக்குதல், பாத்திரம் தேய்த்தல் முதலியன) ஈடுபடுவர். 8.50 மணிக்கு உடல் நலம் குறைந்தோர் மருத்துவ உதவி பெறுவர். காலை 9.15 மணிக்கு வகுப்புகள் தொடங்கும். மாலை 4.00 மணி வரையிலும் வகுப்புகள் தொடரும். வகுப்புநேரம் முடிந்த பின் மாணவர்கள் தங்கள் இல்ல வேலைகளில் ஈடுபடுவர். மாலை 4.15 மணி சிற்றுண் டிக்குப் பின் கூடைப்பந்து, கைப்பந்து, கால்பந்து, கபடி முதலிய விளையாட்டுகளில் ஈடுபடுவர். 6.15 க்கு மாலைப் பிரார்த்தனைக் குப்பின் படிப்புநேரம். இரவு 7.45 க்கு இரவு உணவு. இரவு உணவுக்குப்பின் இலக்கிய மன்றக் கூட்டம் அல்லது நீதிமன்றம் நடைபெறும். சில நாட்களில் ஆன்றோர்களின் வாழ்க்கை வரலாற்றுக் கதைகள் சொல்லப்படும். இரவு 9.00 மணி பிரார்த் தனைக்குப்பின் மாணவர்கள் உறங்கச் செல்வர்.

''நம் தேசியப் பெரும்பாவம், நாம் பாமரர்களைப் புறக்கணித் ததேயாகும். பாமரர்கள் கல்வியறிவு பெறும் அளவிற்குத்தான் ஒரு நாடு முன்னேறியதாகக் கருதப்படும்,'' என்றுசுவாமி விவேகா னந்தர் கூறியுள்ளார். இந்த அறிவுரைக்கேற்ப நாங்கள் மேற் கொண்ட பணிகள், 1936 ஆம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளன.

''கிராமத்து மக்களில் பெரும்பாலோர் கூலி வேலை செய்வோர் அல்லது விவசாயிகள். ஆகவே பகல் வேளைகளில் அவர்கள் பள்ளிக்குச்செல்ல இயலாது. அவர்களுக்குக் கல்வி யளிக்க நாங்கள் பெரியநாயக்கன்பாளையம், வீரபாண்டிப்புதூர் ஆகிய இடங்களில் இரவுப் பள்ளிகள் நடத்தி வருகிறோம். ஒவ்வொன்றிலும் முறையே 38, 40 மாணவர்கள் உள்ளனர். ஒவ்வொரு பள்ளியிலும் மூன்று வகுப்புகள் உண்டு. ஆசிரியர்களில் ஒருவர் நிரந்தரமாகப் பணியாற்றுபவர். மற்ற இருவரும்

வித்யாலய மாணவர்கள். அத்திப்பாளையத்தில், இரவுப் பள்ளி முழுக்க முழுக்க அரிஜனங்களுக்கு உரியது. அங்கு 25 மாணவர்கள் பயில்கின்றனர். அங்குள்ள மூன்று வகுப்புகளுக்கும் ஆசிரியர் ஒருவரே. எங்கள் ஊழியர்களுள் இருவர் வாரம் ஒரு முறை அத்திப்பாளையம் சென்று அங்குள்ள நோயுற்றவர்களுக்கு இலவச மருந்துகள் கொடுத்தும், கூட்டங்கள் நடத்தி அக்கிராமத்தின் பிரச்னைகளை அறிந்து, அவற்றுக்கு வழிகாண முயன்றும் வருகின்றனர். அங்கு மின்வசதி உள்ளதால் நாங்கள் எங்கள் திரைப்படக் கருவியை எடுத்துச் சென்று பயனுள்ள படங்களைக் காட்டிவருகிறோம்.

''கிராம மக்களின் கல்வியில் நூல் நிலையம் சிறப்பிடம் பெறுகிறது. நாங்கள் கிராம நூல் நிலையம் ஒன்றை நடத்தி வருகிறோம். அங்குள்ள புத்தகங்களின் எண்ணிக்கை அதிகமில்லையாயினும், அவை மிகவும் சிறந்த தமிழ் நூல்கள். அந்த நூல் நிலையத்திற்கு, தமிழ், ஆங்கிலச் செய்தித்தாள்களும் வருகின்றன. தற்சமயம் அறுபது பேர் உறுப்பினர்களாகி நூல் நிலையத்தைப் பயன்படுத்துகின்றனர். மேலும் அதிக உறுப்பினர்கள் சேர்வார்கள் என்று நம்புகிறோம்.''

ஆரம்ப காலத்தில் வித்யாலயத்தில் வசதிகள் மிகவும் குறைவு. மண் சுவர்களும் இடையிடையே தட்டிகளால் தடுக்கப்பட்ட அறைகளைக் கொண்ட 100'×16' அளவுள்ள ஓடுகள் வேய்ந்த கட்டிடமே வகுப்பறைகளாகவும், விடுதி அறையாகவும் பயன் பட்டது. இதே போன்ற மற்றொரு கட்டிடத்தில் சமையல் அறையும், பண்டக சாலையும், சாப்பிடும் அறையும் இருந்தன. எங்களுக்கு அதிகச் சொத்து இருக்கவில்லை. ஆனால் பக்தி நிறைந்த திரு M. P. பெரியசாமி, திரு. K. அருணாசலம், திரு. K. வெங்கடாசலம் போன்ற சிறந்த ஊழியர்களே எங்கள் பெரும் சொத்தாக இருந்தனர்.

1936 ஆம் ஆண்டு வித்யாலயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நூற்றாண்டு விழா எளிய முறையில் கொண்டாடப்பட்டது. இதன் விவரங்கள் இந்நூலின் வேறோர் இடத்தில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

1937 ஆம் ஆண்டு மே மாதம் 'கிராம ஊழியர்களுக்கான கோடைகாலப் பயிற்சிப்பள்ளி' தொடங்கப்பட்டது. வித்யாலயக் கட்டிடங்களும், தளவாடங்களும் மற்ற வசதிகளும் இத்திட்டத்தை 'உறைவிட கோடைப்பள்ளியாக' (Residential Summer School) நடத்தப் பெரிதும் உதவின. இந்தக் கோடைகாலப் பயிற்சியில்

கோவை மாவட்டத்திலிருந்து 29 பேரும், மதுரை மாவட்டத்தி லிருந்து 5 பேரும், தஞ்சை மாவட்டத்திலிருந்து 2 பேரும், ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து ஒருவரும், தென் கன்னடத்தி லிருந்து ஒருவருமாக மொத்தம் 38 பேர் பயிற்சி பெற்றனர். இவர்களில் சிலர் ஏற்கெனவே கிராமங்களில் சேவை செய்து வந்த அரிஜன ஊழியர்கள்; இக்கோடைகாலப் பயிற்சிப்பள்ளியில் விவசாயத்துடன் தேனீ வளர்ப்பு, நூற்பு போன்றவையும் கிராமியப் பொருளாதாரமும் கற்பிக்கப்பட்டன. சிறுசிறு நோய் களுக்கான மருத்துவம் போன்றவையும் பயிற்சியில் இடம் பெற்றன. சமூகத்தொண்டில் ஈடுபடுபவர்களுக்கு ஆழ்ந்த சமய உணர்வு இன்றியமையாதது. ஆகவே, கோடைகாலப் பயிற்சியிலும் இதற்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. பயிற்சி முடிந்ததும் மாண வர்களின்தகுதி, திறன் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப் பெற்றன. குடகுப்பகுதியைச் சேர்ந்த பொன்னம்பேட்டை ராமகிருஷ்ண மிஷன் தலைவரும், அங்கு தேன் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவியவருமான சுவாமி சாம்பவானந்தர் இக்கோடைகாலப் பயிற்சிப் பள்ளியின் போதகர்களுள் ஒருவராக இருந்தமை குறிப்பிடத் தக்கது. இவரே புகழ்பெற்ற மைசூர் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாசாலை, ஆசிரியர் கல்லூரி ஆகியவற்றை நிறுவியவர் ஆவார். அகில இந்திய நூற்போர் கழகத்தின் ஊழியர்கள் இப்பயிற்சி நன்கு நடைபெறப் பெரிதும் உதவினர். அகமதா பாத்தைச் சேர்ந்த, அகில இந்திய நூற்போர் கழகத்தின் செயலர் திரு. சங்கர்லால் பங்கர் அவர்கள் இப்பயிற்சியின் நிறைவு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இப்பயிற்சித் திட்டத்தைத் தொடர்ந்து அடுத்த ஆண்டில் ஆசிரியர்கள் பணியிடைப்பயிற்சியும், கிராம ஊழியர்களின் மாநாடும் நடைபெற்றன. இவற்றைப்பற்றி 1938 ஆம் ஆண்டு அறிக்கை கூறுவதாவது: ''மே மாத நடுவில் 'முன்னேற்றத்திற் கான பயிற்றுமுறைகள்' என்பதுபற்றி 10 நாள் பயிற்சி நடை பெற்றது. ராமநாதபுரம், மதுரை, கோவை மற்றும் சில மாவட்டங் களிலிருந்தும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியின் மாதிரிப் பள்ளியைச் சேர்ந்த திரு. ஜகந்நாதன், திரு. கிருஷ்ணமாச்சாரி ஆகியோர் இப்பயிற்சியின் வெற்றிக்குப் பெரிதும் உதவினர்.

''இதே ஆண்டு ஏப்ரல் 30, மே 1, 2 ஆகிய நாட்களில், கிராம ஊழியர்களுக்கான மாநாடு டாக்டர் T. S. S. ராஜன் தலைமையில் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. இம்மாநாட்டிற்கான

அனைத்து ஆயத்தங்களையும் எங்கள் மாணவர்களே செய்தனர். தமிழ்நாடு, ஆந்திரா, மலபார், திருவாங்கூர், கொச்சி, மைசூர் போன்ற, நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் ஊழியர்கள் கலந்து கொண்டனர். சென்னை மாகாண முதலமைச்சர் திரு. C. இராஜகோபாலாச்சாரி, காந்தி சேவா சங்கத்தின் தலைவர் திரு. கிஷோரிலால் மஷ்ருவாலா, அகில இந்திய கிராமத் தொழில்கள் கழகத்தின் செயலர் திரு. ஜே. சி. குமரப்பா, அகில இந்தியக் கல்விக் கழகத்தின் செயலர் திரு. அரியநாயகம், திருப்பத்தூர் ஆசிரமத்தைச் சேர்ந்த திரு. ஜெகநாதன், திரு. பகநஹம் வால்ஸ், திரு கெய்த்தான் போன்ற பெருமக்கள் பலரும் இம்மாநாட்டின் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்''.

இந்தக் காலகட்டத்தில்தான் காந்தியடிகள் ஆதாரக் கல்வித் திட்டத்தை அறிவித்தார். இத்திட்டத்தைப் பற்றி விரிவாக விவாதிக்க, வார்தாவில் 1937-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ஆம் நாள் அகில இந்திய தேசியக் கல்வி மாநாடு ஒன்று நடைபெற்றது. பழுத்த காங்கிரஸ் தலைவரான திரு ஜம்னாலால் பஜாஜ் இம் மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்தினார். ஏறக்குறைய அனைத்து மாநிலங்களின் கல்வி அமைச்சர்களும், நாடு முழுவதிலுமிருந்து தலைசிறந்த கல்வியாளர்கள் பலரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். என்னையும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள அழைத்திருந்தனர். இம்மாநாட்டிற்குக் காந்தியடிகள் தலைமை தாங்கினார். இக்கல்விக் கொள்கையின் சிறப்பு அம்சங்களை அவர் தம் தலைமையுரையில் விளக்கினார்: ''தற்போது நடைமுறையில் உள்ள தொடக்கக் கல்வி வீணானது மட்டுமன்றி கேடு விளைவிப்பதுமாகும். பெரும்பாலான மாணவர்கள் தங்கள் பரம்பரைத் தொழிலை மறந்ததனால் தங்கள் பெற்றோருக்கு எவ்வகையிலும் பயன்படுவதில்லை. தீய பழக்கங்களை அவர்கள் கற்றுக் கொள்கின்றனர். நகரப் பழக்கங்களைப் பயின்று, கல்வி என்று ஏதோ ஓர் அரைகுறை அறிவைப் பெறுகின்றனர். ஆகவே, தொடக்கக் கல்வி எந்த முறையில் அமையவேண்டும்? இதற்குரிய தீர்வு, குழந்தைகளுக்கு கைத்தொழில் பயிற்சி அளிப்பதிலேயே உள்ளது.''

ஆதாரக்கல்வியின் கருத்துக்களையும், கொள்கைகளையும் நன்கு புரிந்து கொள்ளவும், அவற்றைப் பிரபலப்படுத்தவும் வித்யாலயத்தில் கோடைகாலப் பயிற்சி ஒன்று நடத்தப்பட்டது. இதைப் பற்றி 1939 ஆம் ஆண்டு அறிக்கை குறிப்பிடுவதாவது: ''இந்துஸ்தானி தாலமி சங்கத்தின் செயலர்களான திரு. அரிய

நாயகம், திருமதி ஆஷாதேவி ஆகியோர் இப்பயிற்சிக்குப் பொறுப் பாக இருந்தனர். திரு பரதன் குமரப்பா, டாக்டர் லட்சுமிபதி போன்றவர்கள் இப்பயிற்சியில் சிறப்பு வகுப்புகள் நடத்தினர். இப்பயிற்சியில் சேர்வதற்கு 400 பேர் விண்ணப்பித்திருந்தனர். ஆனால் தமிழ் நாட்டின் பல்வேறு மையங்களிலிருந்தும் மொத்தம் 40 பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இப்பயிற்சி இருவார காலம் மட்டுமே நடந்ததாயினும், புதிய கல்வியின் ஆதாரக் கருத்துக்களைத் தெளிவுபடுத்த மிகவும் துணைபுரிந்தது.''

இந்த நிகழ்ச்சிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வித்யாலயம் நன்கு வளர்ந்து வந்தது. 1937 ஆம் ஆண்டு அது ஓர் உறைவிட உயர்நிலைப் பள்ளியாக வளர்ந்தது. அப்போது 97 மாணவர்கள் இருந்தனர். 1938 ஆம் ஆண்டு 'ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம்' என்ற பெயரில் வித்யாலயப் பகுதியிலேயே அஞ்சல் நிலையம் ஒன்று தொடங்கப்பட்டது. கல்வியாண்டு 1939-40 ல் முதன் முறையாக 8 மாணவர்கள் அரசுப் பொதுத் தேர்வு எழுதினர். அவர்களில் 7 பேர் தேர்வில் வெற்றி பெற்றனர். அலுவலகத்திற் கெனவும், மற்ற வசதிகளுக்கெனவும் கட்டிடங்கள் கட்டப்பெற்றன. 'மீனாட்சி மண்டபம்' என்ற ஒன்று என் சிறிய தந்தையார் திரு T. A. இராமலிங்கம் செட்டியார் அவர்களால் நன்கொடையாகக் கட்டித்தரப்பட்டது. இம்மண்டபம் கூட்டங்களும், விழாக்களும் நடத்தப் பேருதவியாக இருந்தது. 1953-ம் ஆண்டில் தற்போதுள்ள கோயில் கட்டப்பெறும் வரையிலும் இம்மண்டபம் பிரார்த்தனைக் கூடமாகவும் திகழ்ந்தது. அதற்கடுத்த ஆண்டில் என் சகோதரர் திரு T. S. தண்டபாணி அவர்களால் அழகிய விருந்தினர் இல்லம் ஒன்று நன்கொடையாகக் கட்டித் தரப்பட்டது. இலங்கை ராமகிருஷ்ண மிஷனின் நிறுவனரான சுவாமி விபுலானந்தரால் இவ்விருந்தினர் இல்லம் திறந்து வைக்கப்பட்டது.

வித்யாலய உயர்நிலைப்பள்ளி முழுமைபெற்ற பள்ளியாக நிலைபெற்ற பிறகு, நல்லாசிரியர்களை உருவாக்க ஆதாரப் பயிற்சிப்பள்ளி ஒன்று தொடங்கவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்குத் தோன்றியது இதற்கு முதற்படியாக மாதிரித் தொடக்கப்பள்ளி ஒன்று தொடங்கவேண்டும். திருப்பூர் அங்கப்பச் செட்டியார் தில்லையம்மாள் அறநிறுவனத்தைச்சேர்ந்த டிரஸ்டிகள் திரு T. A. இராமலிங்கம் செட்டியார், திரு T. M. சிவசுப்பிரமணியம் செட்டியார், திரு T. A. சுப்பிரமணிய செட்டியார் ஆகியோர் இதற்கு உதவ முன் வந்தனர். அந்தக்காலத்தில் கல்வி நிறுவனங் களுக்கு அரசு மானியம் அதிகம் இல்லை. ரெக்கரிங் செலவில் 50% மட்டுமே அரசாங்கம் கொடுத்தது. இதற்கோ, கட்டிடங்களுக்கோ

எந்த வகையான அரசு உதவியும் இல்லை. வித்யாலயத்தின் வடக்குப் பகுதியில் (தற்சமயம் தி. அ. தி. கலாநிலையம் உள்ள இடத்தில்) இரண்டு ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது டிரஸ்ட் நிதியிலிருந்து கட்டிடங்கள் கட்டப்பெற்றன. இக்கட்டடங் களுக்கு, ராமகிருஷ்ண மிஷனின் அப்போதைய செயலர் சுவாமி மாதவானந்தர் அடிக்கல் நட்டார். இக் கட்டிடம், சென்னையைச் சேர்ந்த புகழ்பெற்ற மருத்துவர் திரு M. G. குருசாமி முதலியார் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. வேறொரு கட்டிடத்திற்கு திரு N. ராமகிருஷ்ண நாயுடு அடிக்கல் நட்டார். வேதாரண்யம் சர்தார் A. வேதரத்தினம் பிள்ளை அவர்கள் அதனைத் திறந்துவைத்தார். இத்தொடக்கப் பள்ளிக்கு முதல் தலைமையாசிரியர் திரு K. அருணாசலம் அவர்கள். பின்னர் அவர் வித்யாலய காந்தி ஆதாரப் பயிற்சிப் பள்ளியின் தலைமையாசிரியராகவும், அதற்குப்பின் வித்யாலய ஆசிரியர் கல்லூரியின் முதல்வராகவும் சிறப்பாகப் பணியாற்றினார்.

காந்தி ஆதாரப்பயிற்சிப்பள்ளியைத் தொடங்குவதற்கு, P. S. G. அறக்கட்டளையின் நிறுவனரும், டிரஸ்டியுமான திரு P.S.G. கங்கா நாயுடு அவர்கள் பெரிதும் உதவினார். தற்சமயம் இவ்வறக்கட்டளை, கோவையில் P. S. G. பொறியியல் கல்லூரி, P. S. G. கலைக்கல்லூரி ஆகியவற்றை நடத்தி வருகின்றது. திரு கங்கா நாயுடு சிறந்த காந்தி பக்தர். காந்திய நிர்மாண ஊழிய னும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றவனுமான என்னை அவர் மிகவும் நேசித்தார். காந்தி ஆதாரப்பயிற்சிப் பள்ளிக்கான கட்டிடத்தைக் கட்டித்தர அவர் முன்வந்தார். இக்கட்டிடத்தை அவர் தம் சகோதரரின் பெயரில் கட்டித் தந்தார். 1942-ல் சுதந்திரப் புரட்சி தீவிரமடைந்திருந்த சமயத்தில் காந்தி ஆதாரப் பயிற்சிப்பள்ளி தொடங்கப்பட்டது. அப்பொழுதுதான் நான் பம்பாய்க் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டுத் திரும்பி யிருந்தேன். பள்ளிக் கட்டிடத்தின் திறப்பு விழா முடிந்தவுடன் அன்றே நான் கைது செய்யப்பட்டேன்.

பணம், இடம், கட்டிடங்கள் ஆகியவற்றைக் காட்டிலும் ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு, பக்தியுடன் சேவைசெய்யும் ஆசிரியர் கள், நல்ல பாரம்பரியம் ஆகியவை மிகவும் இன்றியமையாதன. இதைப்பற்றி 1939-40-ஆம் ஆண்டு அறிக்கையின் இறுதியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது : ''ஒரு மாணவனுடன் தொடங்கப் பட்ட வித்யாலயம் தற்சமயம் பெற்றுள்ள வளர்ச்சியைப்பற்றி நினைக்கும்போது, ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவருளை எண்ணி நன்றிப் பெருக்குடன் நெகிழ்கிறோம். குழந்தைகளுக்குத் தொடர்ந்து தொண்டு செய்ய எங்களுக்குத் தேவையான மனத் தூய்மை, வலிமை, கொள்கைப்பிடிப்பு ஆகிய நற்பண்புகளை அவர் அருள வேண்டுமென்பதே எங்கள் பிரார்த்தனையாகும்.

# 17. 'செய் அல்லது செத்து மடி' -கடைசி அறைகூவல்

1940 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் நாள் பாட்னாவில் காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது: ''இந்திய மக்கள் முழுச் சுதந்திரத்திற்குக் குறைவாக வேறு எதையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று காங்கிரஸ் பிரகடனப் படுத்துகிறது.

''சுதந்திரம், ஜனநாயகம், தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவின் அரசியல் சாசனம் அமைக்கப்பட வேண்டும். இந்தியாவைத் துண்டாக்குவதை காங்கிரஸ் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது.

''இந்திய சுதேச ஆட்சி உரிமையோ, அந்நிய நாட்டினர்க்கு அடிபணிய விரும்பும் சுயநலவாதிகளின் அதிகாரமோ இந்திய சுதந்திரத்தில் குறுக்கிடுவதைக் காங்கிரஸ் ஒருபோதும் அனுமதிக்காது.

''இந்தியாவை யுத்தத்திலிருந்து விலக்கவும், அந்நிய ஆதிக்கத் திலிருந்து விடுவிக்கவும், காங்கிரஸ், தான் பெரும்பான்மை பெற்ற அனைத்து மாகாணங்களிலிருந்தும், தன் மந்திரி சபைகளை விலக்கிக் கொள்கிறது. அதனைத் தொடர்ந்து, சட்ட மறுப்பு இயக்கத்திற்குத் தன்னைத் தயார் செய்து கொண்டவுடன் அல்லது பிரச்னைகள் முற்றி அதற்கான தேவை தானே தோன்றும் பொழுது, காங்கிரஸ் அதில் ஈடுபடும்.''

இந்தத் தீர்மானம், பின்னர் 1940 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ராம்நகர் காங்கிரசில் உறுதி செய்யப்பட்டது. சர்தார் வேதரத்தினம் பிள்ளை, திரு. N. M. R. சுப்பராமன் மற்றும் பல நண்பர்களுடன், நானும் கூட்டத்தில் கலந்து கொண் டேன். ராம்நகர் கூட்டத்தின் தலைமைப் பொறுப்பேற்ற சுபாஷ்

சந்திரபோஸ் கூறியதாவது: ''கடந்த ஒன்றரை ஆண்டுக் காலம் நம்மை வருத்திக் கொண்டிருப்பது யாதெனில், ஒருபக்கம் செயற்குழு உறுப்பினர்கள் தீவிரமான தீர்மானங்களை நிறை வேற்றி அறிக்கைகள் விடுவதும், அதே சமயம் மற்றொரு பக்கம் காந்தியடிகளாலும், மற்ற வலதுசாரித் தலைவர்களாலும் வேறு வகையான கருத்துக்களும், அறிக்கைகளும் வெளியிடப் படுவதும் சராசரி மக்களிடம் இருவேறுபட்ட கருத்துக்களைத் தோற்றுவித்துள்ளதுதான். இதற்கெல்லாம் காரணம், பிரிட்டிஷ் அரசு, காங்கிரஸை அலட்சியமாகக் கருதி, அது நிச்சயம் தம்மை எதிர்த்துப் போரில் ஈடுபடப் போவதில்லை என்று நினைப்பது தான்.'' சுபாஷ் சந்திரபோஸின் இக்கருத்தை ஆதரிப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்து வந்தது. உலகப் போரினால் பிரிட்டிஷ் அரசுக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ள அத்தருணம்தான் நாம் மீண்டும் சுதந்திரப் போராட்டத்தைத் தொடங்க ஏதுவான தாகும் என்று மக்கள் கருதினர்.

மக்களின் இக்கருத்தினை உணர்ந்து தீவிரமாகச் செயல்படக் காங்கிரஸ், தனிநபர் சத்தியாகிரக இயக்கத்தைத் தொடங்கிற்று. காந்தியடிகளின் முதன்மைச் சீடர் வினோபாபாவே அவர்கள் இவ்வியக்கத்தில் ஈடுபட முதல் முதலாக முன்வந்தார். பின்னர் மத்திய, மாநிலச் சட்டசபைகளின் காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் இதில் கலந்துகொண்டனர். இந்திய மக்களின் ஒப்புதல் இன்றியே இந்தியாவை உலகப்போரில் ஈடுபடுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், பல்வேறு மாநிலங்களிலிருந்து காங்கிரஸ் அமைச்சரவையின் முதலமைச்சர்களும் மற்ற அமைச்சர்களும் தங்கள் பதவிகளைத் துறந்து தனிநபர் சத்தியா கிரகத்தில் ஈடுபட்டனர். சென்னையைச் சேர்ந்த எங்களில் பலர் கைது செய்யப்பட்டுத் திருச்சிச் சிறையில் வைக்கப்பட்டோம். இம்முறை சிறைவாசம் ஆறு மாதங்கள் மட்டுமே.

இதற்கு இடைப்பட்ட காலத்தில் எதிர்பாராத உணர்ச்சிமிக்க நிகழ்ச்சியொன்று நடந்தது. சுபாஷ் சந்திரபோஸ் இந்தியாவிலி ருந்துத் தப்பிச்சென்று, சுதந்திரப் போராட்டத்திற்கு ஜெர்மனியின் கூட்டுறவை நாடினார். இருபத்துநான்கு மணி நேரமும் ரகசியப் போலீசின் தீவிரக் கண்காணிப்பிலிருந்த அவரது இல்லத்திலிருந்து அவர் தலைமறைவாகிவிட்டார் என்ற செய்தி, 1941, ஜனவரி 26 'சுதந்திர நாள'ன்று வெளியாயிற்று.

அவர் இந்தியாவிலிருந்து பெர்லினுக்குச் சென்று, அங்கு தாய் நாட்டின் போராட்டத்திற்கு வெளியுதவி நாடியுள்ளார் என்ற

செய்தி, அந்த ஆண்டு நவம்பர் மாதம் வரை வெளியாகவே இல்லை. அவர், பல வகையான மாறுவேடங்களில் கைபர் கணவாய் மற்றும் ஆப்கானிஸ்தானம் வழியாக நெடுந்தொலைவு நடந்து சென்று ஜெர்மனியை அடைந்தார் என்றும் சொல்லப் பட்டது. எழுச்சியூட்டும் தைரியத்திற்கும், தேசபக்திக்கும் இது ஓர் எடுத்துக்காட்டு. 'பிரிட்டனின் கஷ்டம் இந்தியாவின் சந்தர்ப்பம்' என்ற ராஜதந்திர அடிப்படையில், 'நம் எதிரியின் எதிரி நமக்கு நண்பன்' என்றபடி அவர் முதலில் ஜெர்மனி யுடனும், பின்னர் கிழக்கு நாடுகளில் பிரிட்டனின் எதிரியும், ஜெர்மனியின் நட்பு நாடுமான ஜப்பானுடனும் பேச்சு வார்த்தை நடத்தினார். பெர்லின் வானொலியில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தியபோது இந்திய மக்கள் பலர் உணர்ச்சியும், உத்வேக மும் பெற்றனர். இதனால் காங்கிரசும் வேகம் அடைந்தது. இனிமேலும் அந்நியர், ஆட்சியில் இருக்க இயலாது; இந்தியா வின் சுதந்திரத்திற்காக இறுதிப் போராட்டத்தைத் தொடங்கும் தருணம் வந்து விட்டது என நினைத்தது. காங்கிரசார் பலர் 'இப்போதில்லை எனில் இனி எப்போதும் இல்லை' என்று எண்ணினர். ஆகவே 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் காங்கிரஸ் சபை கூடிய போது மக்கள் ஆவேசமுற்று உடனடி நடவடிக்கையில் தீவிரமாக இறங்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர்.

மக்களின் இக்கோரிக்கைக்குச் செவிசாய்த்து அகில இந்தியக் காங்கிரஸ் கூட்டம் கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது. ''தன் குறிக்கோளை அடையத் துடித்துக் கொண்டிருக்கும் நாட்டினை இனியும் தடுத்து நிறுத்துவது நியாயமாகாது என்று இக்குழு கருதுகிறது. ஆகவே சுதந்திரத்தில் தனக்குள்ள முழு உரிமையை நிலை நாட்ட, கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நடந்த அறப் போராட்டத்தின் காரணமாகப் பெற்ற ஆன்ம வலிமையைப் பயன்படுத்தி, நாடு தழுவிய அறப் போராட்டத்தை அஹிம்சை வழியில் நடத்த மக்களுக்கு அனுமதியளிக்கவும் இக் குழு தீர்மானிக்கிறது. இவ்வகையான அறப்போருக்குக் காந்தியடிகள்தான் கட்டாயம் தலைமை தாங்கி நாட்டை வழி நடத்திச் செல்ல வேண்டும் என்று அவரை இக்குழு கேட்டுக் கொள்கிறது.''

இந்தத் தீர்மானத்தைப் பற்றிக் காந்தியடிகள் பேசும்போது பின்வருமாறு கூறினார்: ''இதோ உங்களுக்குச் சுருக்கமான மந்திரம் ஒன்றைக் கூறுகிறேன். இதை உங்கள் இதயத்தில் இருத்திக் கொண்டு அதற்குச் செயல் வடிவம் கொடுங்கள்,

அந்த மந்திரம்தான் 'செய் அல்லது செத்து மடி' என்பதாகும். இந்தியாவைச் சுதந்திரம் அடையச் செய்ய வேண்டும் அல்லது அந்த முயற்சியில் செத்து மடிய வேண்டும். நம் அடிமைத்தனம் தொடர்வதைக் காண நாம் உயிர்வாழக் கூடாது. இந்த நாடு அடிமைத்தளையில் கட்டுண்டு இருப்பதைக் காண நாம் உயிர் வாழக் கூடாது என்ற அசைக்க முடியாத உறுதியுடன், காங்கிரசைச் சேர்ந்த உண்மையான ஒவ்வோர் ஆணும் பெண்ணும் போராட்டத்தில் ஈடுபட வேண்டும். இதுவே உங்கள் உறுதிமொழியாகட்டும். இந்திய சுதந்திரமே உயிர் மூச்சென்று கருதி ஒவ்வோர் ஆணும் பெண்ணும் உயிர் வாழ வேண்டும். கடவுளையும், மனச் சான்றையும் சாட்சிகளாக வைத்து இந்தச் சூளுரையை ஏற்றுக் கொள்ளுங்கள். சுதந்திரம் கிடைக்கும் வரை இனி ஓய்வதில்லையென்றும், அதனை அடையும் முயற்சியில் தங்கள் உயிர்களைப் பணயம் வைக்கவும் தயங்க மாட்டோம் என்றும் உறுதி பூணுங்கள். இந்த முயற்சியில் உயிர் துறப்பவன் அதனைப் பெறுகிறான்; உயிர்விடத் தயங்குபவன் அதனை இழக்கிறான். சுதந்திரம் என்பது கோழைகளுக்கும், சபல புத்தியுடையவர்களுக்கும் அன்று.'' காந்தியடிகளின் மெதுவான இப் பேச்சின் ஒவ்வொரு சொல்லையும், அக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஆயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் ஆழ்ந்த அமைதியுடன் கேட்டனர். இந்தியத் தாயின் விடுதலைக்காகப் பெரும் துன்பங்களையும், எண்ணற்ற இன்னல்களையும் ஏற்கும் தருணம் வந்து விட்டது என்று அவர்கள் எண்ணினர்.

இந்தத் தீர்மானம் நிறைவேறியவுடன், அடுத்த நாள் காங்கிரஸ் மாநாட்டுப் பந்தலின் முன் தேசியக் கொடி ஏற்றப் படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்தத் துரதிருஷ்ட வசமான நாளான 1942 ஆகஸ்ட் 9 ஆம் நாள் புலர்வதற்கு முன் காந்தியடிகளும், காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டுச் சிறை சென்றனர். பம்பாய் காங்கிரஸ் கூட்டத்திற்குச் சென்றிருந்த நானும் வேறு பலரும் கொடி வணக்கத்திற்காகக் கூடியிருந்தோம். ஆயுதம் தாங்கிய காவல் துறையினர் எங்களைச் சூழ்ந்திருந்தனர். எங்களைக் கண்ட காவல் துறை அதிகாரி, நாங்கள் சட்டத்தை மீறி அங்குக் கூடியிருப்பதாகக் கூறி உடனடியாக எங்களைக் கலைந்து செல்லுமாறும் இல்லையெனில் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரும் என்றும் எச்சரித்தார். ஆனால் எங்களில் யாரும் கலைந்து செல்லவில்லை. எங்களைக் கலைப்பதற்குக் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைப் பயன்படுத்தினர். அந்தப் புகையிலிருந்து தப்ப எங்களைக் கீழே படுத்துக் கொள்ளுமாறு எங்களில் ஒருவர்

கத்தினார். அவ்வாறு நாங்கள் செய்யுமுன் கண்ணீர்ப் புகையினால் எங்கள் கண்களில் எரிச்சல் ஏற்பட்டு நீர் வழிந்தது. சற்று நேரம் கழித்து நாங்கள் எழுந்திருந்தபோது பயங்கரமான தடியடிப் பிரயோகம் நடந்தது. மக்கள் அங்கும் இங்கும் சிதறி ஓடினர். எங்களில் சிலர் ஒன்று கூடி அவரவர்களின் சொந்த ஊர்களுக்குத் திரும்பிச் சென்று தீவிரப் போராட்டத்திற்கு மக்களை ஆயத்தப் படுத்த வேண்டும் என்று முடிவு செய்தோம். இதன் படி நான் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாள் கோவைக்கு வந்து சேர்ந்தேன். எனக்காகக் கைது உத்தரவு காத்துக் கொண்டிருக்கும் என்று நான் அறிவேன். ஆகவே இரவு நேரங்களில் நான் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று காங்கிரஸ் தலைவர்களையும் தொண்டர்களையும் சந்தித்து அவர்களிடம் 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானத்தைப்பற்றி விரிவாகக் கூறினேன். இதுதான் இறுதியான உறுதிமிக்க போராட்டமாக இருக்கு மென்றும், அதற்காக நாம், அதற்குத் தேவையான அனைத்தை யும் கட்டாயம் செய்யவேண்டும் என்றும் எடுத்துரைத்தேன். 'செய் அல்லது செத்து மடி' என்ற காந்தியடிகளின் தாரக மந்திரத்தையும் அவர்களிடம் கூறினேன்.

நான் பம்பாய்க்குப் புறப்படும் முன், வித்யாலயத்தில் காந்தி ஆதாரப் பயிற்சிப் பள்ளியின் தொடக்க விழாவை ஆகஸ்ட் மாதம் 17 ஆம் நாள் வைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்திருந்தேன். ஆகவே நான் என் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு குறிப்பிட்ட நாளில் வித்யாலயத்திற்கு வந்து விழாவில் கலந்து கொண்டேன். விழா முடிந்தவுடன், விசாரணையின்றிக் கைது செய்தல் என்ற விதியின்படி காவல் துறையினர் என்னைக் கைது செய்தனர். முதலில் என்னைக் கோவை மத்தியச் சிறைச்சாலைக்கும் பின்னர் வேலூர் மத்தியச் சிறைக்கும் கொண்டு சென்றனர்.

நாடு முழுதும் காங்கிரஸ்காரர்களின் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுத்தது. சட்டம், நீதி, தர்மம் ஆகியவற்றிக்குப் புறம்பாக மக்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டனர். புதிய சட்டங்களும், அவசரக்கால உத்தரவுகளும் பிறப்பிக்கப் பட்டன. அதன் முதல் அடி காந்தியடிகளின் மேலும், காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களின் மேலும் விழுந்தது. ஆகஸ்ட் மாதம் 9 ஆம் நாள் அதிகாலையில் காந்தியடிகளும், அவரது சக ஊழியர்களும் தங்கியிருந்த பிர்லா மாளிகையில் காவல் துறையினர் வந்து இறங்கினர். கைது ஆணையை அவரிடம் கொடுத்து, அரைமணி நேரத்தில் புறப்பட வேண்டும் என்று கூறினர். மகாதேவதேசாய், கஸ்தூரிபாய், திருமதி சரோஜினி

நாயுடு ஆகியோருடன் காந்தியடிகளை, பூனாவிலிருந்த ஆகாகான் மாளிகைக்குக்கொண்டு சென்றனர். இதே சமயத்தில் பம்பாயி லிருந்த செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கைது செய்யப் பட்டு அஹமது நகரிலிருந்த பழைய கோட்டை ஒன்றில் சிறை வைக்கப்பட்டனர். நாடுமுழுதும் பெருந்திரளான காங்கிரஸ் காரர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆகவே இந்த இயக்கம் தக்க தலைவர்களின்றிச் செயலற்றுத் தவித்தது. இதனால் மக்களின் கோபாவேசம் கிளர்த்தெழுந்தது. நன்கு முறைப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல் இல்லாத காரணத்தி னால் கண்மூடித்தனமான நெறிபிறழ்ந்த செயல்களில் மக்கள் ஈடுபட்டனர்.

மக்களின் தீவிரப்புரட்சியைக் கண்டு கொதிப்படைந்த அரசாங்கம், அதனை அடக்குவதற்கு நாடுமுழுவதும் மேற்கொண்ட கடுமையான பழிவாங்கும் நடவடிக்கைகள் தப்புக்கணக்காயின. அனைத்துக் காங்கிரஸ் குழுக்களைத் தடைசெய்ததும், பெருந் திரளான காங்கிரஸ் தலைவர்களைச் சிறையிலடைத்ததும் நாடு முழுதும் மக்களை அதிர்ச்சியடையச் செய்து அவர்களைத் தீவிர நடவடிக்கையில் இறங்கச் செய்தன. தலைவர்கள் கைதுசெய்யப் பட்ட செய்தி பரவியதும் பம்பாய், அகமதாபாத், டில்லி, பூனா மற்றும் பல இடங்களில் கண்டனக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்றன. வேலை நிறுத்தங்கள், மறியல்கள் ஆகியன நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவின. கொதிப்படைந்த மக்கள் சில இடங்களில் அரசு அலுவலகங்களைத் தாக்கினர்.

எதிர்த்தரப்பில் அரசாங்கத்தின் பழிவாங்கும் நடவடிக்கைகள் அளவுகடந்து சென்றன. சட்டம், ஒழுங்கு ஆகியவற்றின் பெயரால், அநீதியும் அக்கிரமமும் தலைவிரித்தாடின. தடியடியா லும், துப்பாக்கிக் குண்டாலும், கசையடியாலும் கருணையின்றி மக்கள் தாக்கப்பட்டனர்; விசாரணையின்போது கடுமையாகத் துன்புறுத்தப்பட்டனர். உணவு, உறக்கம், ஓய்வு இன்றி இரவு பகலாக விசாரிக்கப்பட்டனர்; தாகத்திற்குத் தண்ணீர் கூடக் கொடுக்காமல் துன்புறுத்தப்பட்டனர். பெண்கள் நிர்வாண மாக்கப்பட்டு துன்புறுத்திக் கற்பழிக்கப்பட்டனர். குழந்தைகள் கூடக் கொடுமைக்குள்ளாயினர். கிராமங்களில் வீடுகள் தரை மட்டமாக்கப்பட்டன; எரித்துச்சாம்பலாக்கப்பட்டன. மக்களில் பலர் மரங்களில் கட்டிவைக்கப்பட்டுச் சவுக்கால் அடிக்கப்பட்டனர்; சில சமயங்களில் நிர்வாணமாக்கப்பட்டுக் கசையடி பெற்றனர். நாடு முழுதும் அறுநூறுக்கும் மேற்பட்ட இடங்களில் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இறந்தனர்; பல்லாயிரம் மக்கள் காயமுற்றனர்.

சென்னைமாநிலத்திலும் போலீஸ் நடவடிக்கைகள் பரவலாக வும் தீவிரமாகவும் நடைபெற்றன. முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் பலர் சிறை சென்றனர். ஆந்திராவைச்சேர்ந்த கோலப்பள்ளி சீதாராம் சாஸ்திரி, காலா வெங்கட்ட ராவ், மலபாரிலிருந்து K. மாதவ மேனன், தென் கன்னடத்திலிருந்து கர்நாட் சதாசிவராவ் ஆகியோரும் நமக்கு நன்கு அறிமுகமான சர்தார் வேதரத்தினம்பிள்ளை, N. M. R. சுப்பராமன், K. சுப்பிர மணியம் (சுப்ரி), ம. பொ. சிவஞானம், பெருமாள் ரெட்டியார், O. P. ராமசாமி ரெட்டியார், O. V. அளகேசன் ஆகியோரும் சிறை வைக்கப்பட்டனர். இந்தச்சமயம் பொருட்களைச் சிறைக்குள் கொண்டுவருவதும், சிறையிலிருந்து வெளியே கொண்டுபோவதும் மிகவும் கடுமையாக்கப்பட்டன. ஆகவே நாட்டின் நிலைமையைப் பற்றிப் பல வாரங்கள் எங்களுக்கு எதுவும் தெரியவில்லை.

நாங்கள் சிறையிலிருந்தபோது திருப்பூர்க் குமரன் நாட்டின் விடுதலைக்காக அடிபட்டு உயிர்நீத்தது, திரு P. S. சுந்தரம் அவர்களைப் போலீசார் காட்டுமிராண்டித்தனமாக அடித்து அவரது கால்களை முடமாக்கியது ஆகிய துயரச் செய்திகளை அறிந்தோம் நாங்கள் கைதுசெய்யப்பட்ட சில நாட்களுக்குப்பின் திருப்பூர்க் குமரன், B. S. சுந்தரம் மற்றும் பலர் கொடிகளை ஏந்திக்கொண்டு அமைதியான முறையில் ஊர்வலம் சென்றனர். அவர்கள் 'மகாத்மா காந்திக்கு ஜே' என்றும், 'பாரத மாதாவுக்கு ஜே' என்றும் முழங்கிக்கொண்டு சென்றனர். தற்போது 'குமரன் வீதி' என்று அழைக்கப்படும் முக்கியத்தெருவின் வழியாக ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது. இரும்புக் குண்டு முனைகளைக்கொண்ட தடிகளை ஏந்திய போலீசார் அங்கு வந்து கூட்டத்தைக் கலைந்து போகும்படி எச்சரித்தனர். ஆனால் கூட்டம் கலையவில்லை. உடனே போலீசார் அவர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கினர். திருப்பூர் குமரனைத் தலையில் தாக்கி மண்டையோடு சிதறிப் போகும்படி அடித்தனர். மண்டையோடு பிளந்து மூளை வெளியே வந்து அந்த இடத்திலேயே குமரன் வீரமரணம் அடைந்தார். இதுபோன்ற காட்டுமிராண்டித்தனமான நிகழ்ச்சிகள் பல நாடு முழுதும் நடந்தன.

இந்த இயக்கத்தில் மாணவர்களின் பங்கு சிறப்பானது. ஆயிரக்கணக்கான மாணவர்கள் தங்கள் பள்ளிகளிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் வெளியேறிப் போராட்டத்தொடர்பான பல செயல்களிலும் மிகவும் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொண்டனர். இப்போராட்டத்தில் பெரும் திரளான பெண்களும், சாதாரண விவசாயிகளும், நடுத்தர வகுப்பினரும் பங்கேற்றனர்.

இதற்கு இடைப்பட்ட காலத்தில், வங்காளத்தில் பெருவாரியான மக்களைப் பெரும் துன்பத்தில் ஆழ்த்திய துயர நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. 1942-44 ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார நிலை மிகவும் சீரழிந்தது. உலகப்போரின் காரணத்தால் விலைவாசிகள் உயர்ந்து, உணவு, உடை போன்ற அத்தியாவசியப் பண்டங்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்பொழுது பர்மாவிலிருந்துதான் நமக்குப் பெருமளவில் உணவுப்பண்டங்கள் வந்தன. ஆனால் பர்மாவின்மேல் ஜப்பான் படையெடுத்ததால் நமக்கு உணவுப் பண்டங்கள் வருவது நின்றுவிட்டது. இதனால் தோன்றிய உணவுப்பஞ்சத்தை நீக்குவதற்கு முயற்சி எடுப்பதற்கு மாறாக அதை மேலும் அதிகப்படுத்தியது பிரிட்டிஷ் அரசு. ஜப்பானியர்களின் உதவியுடன் இந்திய தேசியப்படை முன்னேறி வருவதை அறிந்த பிரிட்டிஷார், வங்காளத்தில் Scorched Earth Policy என்ற புதியதொரு விவசாயக்கொள்கையைப் புகுத்தியது. அதன்படி வங்காளத்தின் எல்லைப்பகுதிகளில் இருந்த விவசாயிகள் தங்கள் நிலங்களில் பயிர்செய்யாது அவற்றைத் தரிசாகப் போட வேண்டும். முன்னேறிவரும் இந்திய தேசியப்படைக்கு உணவுப் பொருட்கள் கிடைக்கக்கூடாது என்பதுதான் இதன் நோக்கம். அந்த மாநிலத்தில் கிடைத்த உணவுப் பொருள்களும் தங்கள் படைகளுக்குத் தேவை என்று பிரிட்டிஷ் அரசு கூறியது. வெளியிலிருந்து வங்காளத்திற்குள் உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதையும், வங்காளத்திற்குள்ளேயே ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு உணவுப் பொருள்கள் கொண்டுசெல்வதையும் அரசாங்கம் தடுத்தது. பர்மாவிலிருந்து வந்துசேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான அகதிகளால் இப்பிரச்னை மேலும் சிக்கலாயிற்று. கிழக்கு வங்காளத்தில் படகுகளையும் அரசாங்கம் தன் தேவைக்கு எடுத்துக்கொண்டது. இதனால் படகுகளிலேயே வசித்து மீன்பிடித்து வாழ்வோரும் பெரும் இன்னல்களுக்கு உள்ளாயினர். பெரும்பாலான அகதிகள் கல்கத்தா நகரத்தில் தஞ்சமடைந்து நகரின் நடைபாதைகளை ஆக்கிரமித்துக் கொண்டனர்; பலபகுதிகளில் சேரிகள் பெருகின. அப்பொழுது அசுத்தமடைந்த கல்கத்தா நகரம் இன்னமும் அதன் பாதிப்பிலிருந்து மீளவில்லை. மேற்கூறிய காரணங்களால் வங்காளத்தில் கொடியபஞ்சம் தோன்றிற்று. பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைக்க அரசாங்கம் எவ்வகையான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதன் விளைவாக ஏறக்குறைய முப்பதுலட்சம் மக்கள் மடிந்தனர். வங்காளத்தில் ஏற்பட்ட இக்கொடிய பஞ்சமும், பொருளாதாரச் சீர்குலைவும் அந்நிய ஆதிக்கத்தின் மேல் மக்களின் நம்பிக்கையை இழக்கச்செய்து, வெறுப்பை அதிகப்படுத்தின.

இந்தக் காலகட்டத்தில் நிகழ்ந்த மற்றொரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி, சுபாஷ் சந்திரபோஸினால் இந்திய தேசியப் படை தொடங்கப்பட்டு, அப்படை ஜப்பானியப் படைகளின் உதவியுடன் இந்தியாவின் மீது படையெடுத்ததாகும். அந்தப் படையெடுப் பின்போது இந்திய தேசியப்படை இரண்டு இடங்களில் பிரிட்டிஷ் படைகளைத் தோற்கடித்து, இறுதியில் இந்திய எல்லைக்குள் நுழைந்தது. அங்கு நடைபெற்ற சண்டையில் பல பிரிட்டிஷ் காரர்கள் கொல்லப்பட்டனர். மற்றவர்கள் தங்கள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஓடிவிட்டனர். இதற்கிடையில், இந்திய தேசியப் படையினர் ஜப்பான் படையினரின் உதவியுடன் நாகாலாந்துக்குள் நுழைந்து அதன் தலைநகரான கோஹிமாவில் இந்திய தேசியக் கொடியை ஏற்றின. வேறு சில பிரிவுகள் மணிப்பூருக்குள் நுழைந்து இம்பாலைக் கைப்பற்றின. ஆனால் பசுபிக்கடல் பகுதியில் ஜப்பானியப் படை படுதோல்வியடைந்தது. முன்னர் ஜப்பானின் வசம் இருந்த பிலிப்பைன்ஸ் மற்றும் அதையொட்டிய பல பகுதிகளையும் அமெரிக்கப் படையினர் மீண்டும் கைப்பற்றியதால், இந்திய எல்லைப் பகுதிகளில் இருந்த தன் படைகளைத் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஜப்பானுக்கு ஏற்பட்டது. இதனால் இந்திய தேசியப் படையின் சாதகமான சூழ்நிலை பாதிக்கப்பட்டது. ஜப்பானிய விமானங்களின் உதவியின்றி இந்தியத் தேசியப்படையினரால் இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கப் படையினருடன் போராட இயலவில்லை. ஆகவே இந்திய தேசியப்படையினர் பர்மாவுக்கே பின் வாங்கிச் செல்ல வேண்டியதாயிற்று. ஆனால் பிரிட்டிஷ் படையினர் பர்மாவை முற்றுகையிட்டு மீண்டும் ரங்கூனைக் கைப்பற்றினர். எஞ்சியிருந்த இந்திய தேசியப் படையினரையும் கைப்பற்றினர். ஆனால் சுபாஷ் சந்திரபோஸ் ஜப்பானியரின் உதவியைப் பெற்று மீண்டும் போராட்டத்தைத் தொடங்கும் நோக்கத்துடன் பார்மோஸாவுக்குச் சென்றார். ஆனால் அவர் சென்ற விமானம் வழியில் தீப்பற்றி விபத்துக்குள்ளானதால் உயிரிழந்தார். அதனால் அவரது நோக்கம் நிறைவேறவில்லை. இந்தியத் தாயின் அருந்தவப் புதல்வர்களுள் ஒருவரான அவர், சுதந்திர வேள்வியில் தம்மையே அர்ப்பணித்துக் கொண்ட தியாகம் மகத்தானதாகும்.

நாங்கள் சிறையிலிருந்த போது 1943 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மற்றோர் அதிர்ச்சிச் செய்தியை நாங்கள் கேள்விப் பட்டோம். 1943 பிப்ரவரி 10 ஆம் நாளிலிருந்து காந்தியடிகள் தாம் 21 நாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளார் என்பதே அச்செய்தி. பிப்ரவரி 10 ஆம் நாள் இதைப்பற்றிய அதிகார பூர்வமான செய்தி வந்தது. இதே சமயத்தில்

காந்தியடிகளுக்கும், அரசப் பிரதிநிதிக்கும் இடையே நிகழ்ந்த கடிதத் தொடர்பு பற்றிய கீழ்க்கண்ட பத்திரிகைச் செய்தி வெளியாயிற்று:

''திரு காந்தி, தாம் பிப்ரவரி பத்தாம் நாளிலிருந்து மூன்று வார காலம் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அரசப் பிரதி நிதிக்கு அறிவித்துள்ளார். அது அவரது திறமைக்கேற்றதொரு உண்ணாவிரதம். இந்த உண்ணாவிரதத்தின்போது திரு. காந்தி தண்ணீருடன் பழச் சாறுகளைக் கலந்து உட்கொள்ள எண்ணியுள் ளார். ஏனெனில் அவரது உண்ணாவிரதத்தின் நோக்கம் உயிர் துறப்பதன்று; ஆனால் இன்னல்களைச் சகித்துக் கொள்வதாகும். அரசியல் நோக்கங்களை அடைய உண்ணாவிரதத்தை ஒரு கருவி யாகக் கொள்வதை அரசாங்கம் வருத்தகரமானதாகக் கருதுகிறது. அதில் நியாயம் இருப்பதாக அது கருதவில்லை. இந்தச் சமயத்தில் உண்ணாவிரதத்தை ஒரு கருவியாகக் கொள்வது அவசியம் என்று திரு. காந்தி ஏன் நினைக்க வேண்டும்?............ திரு காந்தியின் உடல் நலத்திற்கு ஏற்படும் தீங்கிற்கு அரசு பொறுப்பு ஏற்காது. திரு காந்தியின் உண்ணாவிரதத்தை அரசாங்கம் தடுக்கவும் முடியாது. உண்ணாவிரதம் இருக்க அவர் முடிவு செய்வாரானால், அவர் அதனை ஒரு தனிப்பட்ட மனிதர் என்ற முறையில், தன் சொந்த ஏற்பாடுகளின்படியே செய்ய வேண்டும். ஏனெனில் அந்த உண்ணாவிரதத்திற்கும், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் தனிப்பட்ட முறையில் அவரே பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதுதான்.''

உற்சாகமின்றி, மந்த நிலையில் சென்று கொண்டிருந்த எங்கள் சிறை வாழ்க்கைக்கு இந்தச் செய்தி அதிர்ச்சியைக் கொடுத்தது. விசாரணையின்றிச் சிறை வைக்கப்பட்டிருந்த எங்களின் சிறைவாசம் காலவரையற்றதாக இருந்தது. இவ்வாறு காலவரையின்றிச் சிறை யிலிருந்த எங்களில் பலருக்குக் குடும்பக் கவலை துன்பத்தைக் கொடுத்தது. காந்தியடிகளின் உண்ணாவிரதச் செய்தி இந்த மனத்துயரை மேலும் அதிகப்படுத்தியது. எழுபது வயதைத் தாண்டிய காந்தியடிகளின் உடல் நலத்திற்கு இந்த உண்ணா விரதத்தால் விளையும் ஆபத்தை எண்ணிச் சிலர் அளவற்ற துயருற் றனர்; சிலர் கண்ணீர் விட்டு அழுதனர். அவருக்கு ஆதரவாகப் பலர், ஒரு நாள், இரண்டு நாள் அல்லது சில நாட்கள் உண்ணா விரதம் இருந்தனர். அவரது உடல்நலம் வேண்டிப் பிரார்த்தனை கள் செய்தனர். இறுதியில் காந்தியடிகள் தம் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டபோது அனைவரும் அளவற்ற மகிழ்ச்சியும், ஆனந்தமும் அடைந்தனர்.

என்னைப் பொறுத்தவரையிலும் சிறை வாழ்க்கை கடினமாக இருப்பினும் நான் அதைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டேன். நூல்கள் படிப்பதிலும், சிந்தனையிலும் என் நேரத்தைக் கழித்தேன். நான் என்னுடன் சுவாமி விவேகானந்தரின் நூல்கள், ஸ்ரீ ராம கிருஷ்ணரின் அமுத மொழிகள், திருக்குறள், கம்பராமாயணம் போன்ற பல நூல்களை எடுத்துச் சென்றிருந்தேன். இந்த நூல் களையெல்லாம் மிகவும் விரிவாகப் படிக்கச் சிறையில் எனக்குத் தேவையான நேரம் கிடைத்தது. ஒவ்வொரு நாள் காலையிலும் சிறையின் சுற்றுச் சுவர் நிழலில் சிலரை ஒன்று கூட்டித் திருக்குறள் வகுப்பு நடத்தினேன்.

சுவாமி விவேகானந்தரின் நூல்கள் அனைத்திலுமிருந்து, பகவத் கீதை பற்றிய அவரது விளக்கவுரைகளைத் தொகுக்கும் மிகப்பெரிய பணியைத் தொடங்கினேன். ஆனால் திடீரென என் உடல்நலம் குன்றியதால் அப்பெரும்பணியை முடிக்க இயலவில்லை. ஒவ்வொரு நாளும் தொடர்ந்து 12 மணி அல்லது 13 மணி நேரம் கடுமை யாக உழைத்திருந்தேன். அதனால் ஒரு நாள் இரவு இருமல் வந்தது. அது தொடர்ந்து அந்த இரவு முழுவதும் நீடித்துக் காலை வரை இருந்தது. சிறை மருத்துவரால் என் நோயைச் சரியாகக் கண்டுபிடிக்க இயலவில்லை. அதனால் நான் சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். அங்கு எனக்கு வந்துள்ள நோய் ஆஸ்த்மா அல்லது காச நோயாக இருக்குமோ என ஐயப்பட்டனர். என் எடை நாளுக்கு நாள் வேகமாகக் குறைந்து பலத்தை இழக்கத் தொடங்கினேன். என்னால் அன்றாடம் வழக்கமாகச் செய்யும் பணிகளைச் செய்யவும், வழக்க மான உணவு உண்ணவும் முடியவில்லை. என் நோயைப் பற்றிச் சிறை அதிகாரிகள் கவலைப்பட்டதோடு, அதற்கான பொறுப்பை ஏற்கவும் அஞ்சினர். அதனால் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டபின் என்னைத் திரும்பி வரும் வாக்குறுதியுடன் விடுதலை செய்தனர்.

# 18. அற்புதக்காட்சியும், ஆறுதலும்

என் நான்காவது சிறைவாசத்தின் கடைசிப்பகுதியில் என் உடல் நலம் மிகவும் குன்றியது. அதைப்போல் என் வாழ்க்கையிலேயே என்றைக்கும் உடல் நலக்குறைவால் நான் துன்புற்றது இல்லை. எனக்குத் தொடர்ச்சியான இருமல் தோன்றியது. சிலசமயங்களில் இரவில் நான் தொடர்ந்து இருமியது, பக்கத்து அறைகளிலிருந்த பலரது உறக்கத்தையும் பாதித்தது. என்னுடன் சிறையிலிருந்த நண்பர் திரு. சுப்ரி அவர்கள் எனக்கு மிகவும் உதவிசெய்தார். மருத்துவர்கள் வந்து சோதித்துப் பார்த்தனர். ஆனால் பயன் எதுவும் இல்லை. என் எடை மிகவும் குறைந்து வந்தது. என்னால் நன்றாகச் சாப்பிட முடியவில்லை. சற்றுத்தொலைவிலிருந்த கழிப்பறைக்குக் கூட என்னால் நடக்க இயலவில்லை. இவை அனைத்தையும் விட, என்னால் படிக்க இயலவில்லை; எழுத இயலவில்லை; நான் நடத்திவந்த திருக்குறள் வகுப்பையும் தொடரமுடியவில்லை. சிறை மருத்துவமனையில், எனக்கு ஆஸ்த்மா அல்லது காசநோய் வந்திருக்கக்கூடும் என்று கண்டுபிடிக்கப்பட்டது. என் இருமலைக் குறைக்க அதிக அளவு, எபிட்ரைன் (ephedrine) என்ற மருந்தைக் கொடுத்தனர்; இருமல் குறைந்தது. ஆனால் என்னால் நன்கு தூங்க முடியவில்லை. என் உடல் மிகவும் பலவீனமடைந்தது. நான் பிரம்மச்சாரியாக இருந்ததால் எனக்குக் குடும்பக் கவலைகள் இருக்கவில்லை. என் குடும்பத்தார் நல்ல பொருளாதார வசதியுடன் இருந்ததாலும், என்மேல் அளவற்ற அன்பு கொண்டிருந்ததாலும் எனக்குப் பணக்கவலையும் இருக்கவில்லை. என் கவலையெல்லாம் என் பெரிய குடும்பமான வித்யாலயத்தைப் பற்றியது தான்.

ஆனால் வித்யாலயம் திரும்பி, என் குழந்தைகளையும், சக ஊழியர்களையும் கண்டபோது என் மகிழ்ச்சி எல்லை கடந்தது. அப்போது, இரண்டாம் உலகப்போரினால் தோன்றிய விலைவாசி உயர்வாலும், நன்கொடை வசூலிக்க யாரும் இருக்காத காரணத்தாலும் வித்யாலயத்தின் பொருளாதார நிலை மிகவும்

பாதிக்கப்பட்டிருந்தது. நான் சிறை சென்ற போது வித்யாலயத்தைக் கவனித்துக் கொள்ள சுவாமி நிஷ்காமானந்தரைத் தலைமையகம் நியமித்திருந்தது. அவர் வித்யாலயத்திற்கு வந்தது எங்களுக்குப் பேருதவியாக இருந்தது. நான் சிறையில் இருந்ததால் உதவிக்கு, அவர் என் சிறிய தந்தையார் திரு. T. S. கல்யாணசுந்தரம் அவர்களை நாடினார். அவரும் மிகுந்த பரிவுடன் வேண்டிய உதவிகளைச் செய்தார். இவ்வகையான ஊக்கமூட்டும் சூழ்நிலை நிலவியபோதிலும், 1943 ஆம் ஆண்டு அறிக்கையில் சோர்வான குறிப்பு ஒன்று காணப்படுகிறது:

"உலகப் போரினால் தோன்றிய இன்னல்களுக்கு நடுவிலும் இறைவனின் அருளால் வித்யாலயம் மேலும் ஓர் ஆண்டினை இடையூறு ஏதுமின்றிக் கடந்து முன்னேறியுள்ளது. தற்போது வித்யாலயத்தில் உறைவிடப்பள்ளி ஒன்றும், இடைநிலை ஆசிரியப் பயிற்சிப்பள்ளி ஒன்றும், அதற்கு மாதிரிப்பள்ளியாக உயர் தொடக்கப்பள்ளி ஒன்றும் உள்ளன. இவற்றுடன் கிராமப் பணிப்பகுதி ஒன்றும் செயல்படுகிறது.

"உலகப் போரின் காரணமாக மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டபோதிலும், காந்தி இடைநிலை ஆசிரியப் பயிற்சிப்பள்ளி நன்கு நடைபெறுகிறது. மாணவர்களின் எண்ணிக்கை குறைந்ததன் காரணமாக மாநிலமுழுவதிலும் அரசுப் பயிற்சிப்பள்ளிகள் பலமூடப்பட்டுவிட்டன. அதனால் முதலாண்டில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள எங்களாலும் முடியவில்லை. அரசாங்கம் மாணவர்களுக்குப் படிப்புதவித்தொகை கொடுப்பதால், வரும் ஆண்டில் நிலைமை சீரடையலாம் என்று நம்புகிறோம்.

"பயிற்சிப்பள்ளியின் மாதிரிப்பள்ளியான தில்லையம்மாள் அங்கப்பச்செட்டியார் கலா நிலையப்பள்ளியில் எட்டு வகுப்புகள் உள்ளன. அதில் 131 மாணவர்களும், 72 மாணவியர்களும் படித்து வருகின்றனர். 7 ஆசிரியர்களும், 2 ஆசிரியைகளும் பணியாற்றி வருகின்றனர். தில்லையம்மாள் அங்கப்பச்செட்டியார் அறக்கட்டளையினர் ரூ. 4,5.0/- செலவில் இப்பள்ளிக்கு மேலும் ஒரு கட்டிடம் கட்டித்தந்துள்ளனர். கலா நிலையத்தின் பால் அவர்கள் காட்டும் ஆதரவுக்கு எங்கள் நன்றி.

"பாதகமான சூழ்நிலைகள் பலவற்றிற்கும் இடையில் இந்த ஆண்டும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் குருபூஜை விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. போக்குவரத்திலிருந்த இடையூறுகளால் இந்த ஆண்டுவிழாவில் பலர் கலந்துகொள்ள இயலவில்லை.

ஆயினும் ஆயிரக்கணக்கான மக்கள் தொலை தூரங்களிலிருந்து நடந்தும், மாட்டு வண்டிகளிலும் வந்து பக்தியுடன் விழாவில் கலந்துகொண்டனர். திரு. V. C. வெள்ளிங்கிரிக் கவுண்டரைத் தலைவராகக்கொண்ட உற்சவக்குழு, சிறந்த முறையில் பணியாற்றியது. ரூ 2250-13-6 நன்கொடையாக வசூலிக்கப்பட்டது. அதில் ரூ 1794-11-0 உற்சவத்திற்காகச் செலவழிக்கப்பட்டது. ஏறக்குறைய 7500 பக்தர்கள் சமாராதனையில் கலந்துகொண்டு பிரசாதம் உட்கொண்டனர். சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து பஜனைக்குழுவினர் விழாவில் கலந்துகொண்டு பஜனை செய்தனர். அவைகளில் அரிஜனப் பஜனைக்குழுவும், பக்கத்து மலைப்பகுதிகளிலிருந்து வந்த ஆதிவாசிகள் பஜனைக்குழுவும் குறிப்பிடத்தக்கன. விழாவிற்குத் திரு T. A. இராமலிங்கம் செட்டியார் தலைமை வகித்தார். திரு K. ராமநாதன் செட்டியார், 'குருதேவரின் வாழ்வும் வாக்கும்' என்பது பற்றிச் சிறப்புரையாற்றினார். குரு பூஜை விழாவின் நிறைவாக, பெரம்பலூர் வித்வான் திரு. அங்கப்பப் பிள்ளை அவர்களின் அற்புதமான நாதஸ்வர இன்னிசை நடைபெற்றது.''

வித்யாலயத்தின் செலவுகள் அதிகரித்தன. அதைச் சமாளிக்க, கட்டணம் செலுத்திப் பயிலும் மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். அதைப் பற்றி அறிக்கை கூறுவது :

''வித்யாலயத்தின் மொத்த மாணவர்கள் 115 பேர்களில், 42 பேர் பள்ளிக்கட்டணம், விடுதிக்கட்டணம் எதுவும் செலுத்தாமல் முழுக்க முழுக்க இலவசமாகப் பயின்றவர்கள். இவர்களுள் 5 அரிஜன மாணவர்களுக்கு, துணிமணிகள், புத்தகங்கள், இதர செலவுகள் ஆகியனவும் இலவசமாக அளிக்கப்பட்டன. 39 மாணவர்களுக்கு விடுதிக்கட்டணம் இலவசமாகவும், 8 மாணவர்களுக்குப் பள்ளிக்கட்டணம் இலவசமாகவும் அளிக்கப்பட்டன. அதாவது மொத்தம் 81 மாணவர்களுக்கு விடுதிக் கட்டணம் இலவசமாகவும், 50 மாணவர்களுக்குப் பள்ளிக்கட்டணம் இலவசமாகவும் அளிக்கப் பட்டன. 26 மாணவர்கள் மட்டுமே முழுத்தொகையும் செலுத்திப் படித்தார்கள். ஆகவே மொத்த ஆண்டுச்செலவான ரூ 45,000-ல் ரூ 10,000 மட்டுமே மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது. அரசாங்கத்திலிருந்து ரூ 4500, ஆண்டு மான்யமாகக் கிடைத்தது, மீதமுள்ள தொகையான ரூ 35,000 பொது நன்கொடைத் தொகையிலிருந்து செலவழிக்கப்பட்டது.''

மேல்நிலைப்பள்ளிக் கல்வி வரையிலும் இலவசமாக உள்ள இக் காலத்தில், மேலே குறிப்பிட்டுள்ள செய்திகளை மக்கள் புரிந்து

கொள்வது கடினம். அக்காலத்தில் பள்ளிகளில் கட்டணம் வசூலிக்கப்பட்டது. இவ்வாறாக வசூலிக்கப்பட்ட கட்டணத்தொகையின் ஒரு பகுதி அரசு ஒப்புதல்பெற்ற ஆசிரியர்களின் ஊதியமாகக் கொடுக்கப்பட்டது. மொத்தச் செலவில் பாதித்தொகை மட்டுமே அரசு மானியமாகக் கிடைத்தது. உயர்நிலைப்பள்ளியின் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு வரவு செலவுக் கணக்கில் கீழ்க் கண்டவாறு குறிப்பிடப்படுகிறது : ''மொத்தச் செலவு ரூ 7339-50. இதில் ஆசிரியர்களின் ஊதியம், நலநிதி ஆகியவற்றுக்காகச் செலவழிக்கப்பட்டது ரூ 5,145. மாணவர்களிடமிருந்து வசூலான மொத்தத் தொகை ரூ 2,169.25. அரசு மான்யம் மூலம் வரவு ரூ 937. இவை போக மீதிச் செலவை நிர்வாகமே ஏற்றது. இதேபோன்று கலாநிலைய உயர்தொடக்கப்பள்ளி, ஆசிரியர் பயிற்சிப்பள்ளி ஆகியவற்றின் செலவுகளில் ஒரு பகுதியையும் நிர்வாகமே ஏற்றுக்கொண்டது. மேற்குறிப்பிட்ட தொகை வித்யாலயத்திற்கு மிகப்பெரிய பளுவாக இருந்தமையால் நன்கொடை திரட்டுவதை அதிகப்படுத்த வேண்டியதாயிற்று.''

நான் என் உடல்நலத்தை நன்கு கவனித்துக்கொள்ள வேண்டுமென்று என் நண்பர்கள், உறவினர்கள், சக ஊழியர்கள் என்னை மிகவும் வற்புறுத்தினர். எனக்கு இருமல் தொடர்ந்து இருந்து வந்தது. அதனால் நான் மேலும் பலவீனமடைந்தேன். அது காச நோயாக இருக்குமோ என்று அனைவரும் கவலைப்பட்டனர். கோவை மோசஸ் ஞானாபரணம் மருத்துவமனையின் நிறுவனரும் என் சிறந்த நண்பருமான டாக்டர் S. குருபாதம் அவர்கள் (பினனாளில் சென்னை அமைச்சரவையில் அமைச்சர் பொறுப்பு வகித்தவர்) நான், மதனபள்ளி காசநோய் மருத்துவமனைக்குச் சென்று, அங்கிருந்த பிரபல காசநோய் வல்லுநரான டாக்டர் பெஞ்சமின் அவர்களிடம் மருத்துவச் சோதனை செய்துகொள்ள வேண்டும் என்று மிகவும் வற்புறுத்தினார். அவரே என்னை அங்கு அழைத்துச்சென்று சோதனை செய்ய உதவினார். மருத்துவ அறிக்கை எனக்குக் காசநோய் இல்லையென்றும், ஒருவகையான கடுமையான ஆஸ்த்மா என்றும் கூறியதை அறிந்த அனைவரும் ஆறுதல் பெற்றனர். இந்த ஆஸ்த்மா எந்த வகையான மருந்துக்கும், மருத்துவத்திற்கும் அடங்க மறுத்துவிட்டது.

1944 ஆம் ஆண்டு விஜயதசமி நன்னாளுக்கு முந்திய நாள். வித்யாலயத்தில் தொழிற்பகுதி ஒன்று தொடங்கவேண்டுமென்ற ஆசை எங்களுக்கு நீண்ட நாட்களாக இருந்து வந்தது. எங்களுடைய நண்பர்களுள் ஒருவர் எங்களுக்கு, கடைசல் இயந்திரம் ஒன்றையும், துளைபோடும் கருவி ஒன்றையும் அன்பளிப்பாக

அளித்திருந்தார். இவற்றைக் கொண்டு, அடுத்தநாள் தொழிற் பகுதி ஒன்றைத் தொடங்க விரும்பினோம். இதற்கு முன்பு சில நாட்களாகவே எனக்கு ஆஸ்த்மா கடுமையாக இருந்தது. அந்தக் காலத்தில், வித்யாலயத்தில் கழிப்பிடத்துடன் கூடிய ஒரே கட்டிடம் விருந்தினர் விடுதிதான். ஆகவே நான் அங்குத் தங்கியிருந்தேன். பகலும் இரவும் தொடர்ந்து, நான் மூச்சுவிட மிகவும் தொல்லைப் பட்டுக் கொண்டிருந்தேன். வலியும், பலவீனமும் என்னைச் சித்திர வதை செய்தன. என்னால் படுத்து உறங்கவோ, உட்காரவோ இயலவில்லை. தலையணைகளின் மேல் குப்புறச் சாய்ந்து கொண்டு மூச்சுத்திணறலால் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருந் தேன். வாழ்க்கையே நம்பிக்கையற்றுப் போய், எதிர் காலத்தில் வித்யாலயத்திற்கு என்ன நேருமோ என்று கவலை கொண்டி ருந்தேன். அப்போது இரவு இரண்டுமணியிருக்கும்; தாங்கமுடியாத வலி, மனத்துயர், நம்பிக்கையின்மை ஆகியவற்றின் நடுவே திடீரென்று ஸ்ரீ ராமகிருஷ்ணரின் காட்சி கிடைத்தது. குனிந் திருந்த என் முகத்தை நிமிர்த்தி அவர் ''அனைத்தையும் நீயே செய்வதாக நினைத்துக் கொண்டிருக்கிறாயா?'' என்று கேட்டார். இந்த அற்புதக்காட்சி எவ்வளவு நேரம் நீடித்தது என்று எனக்குத் தெரியாது. சில நிமிடங்களுக்கு மேல் அது இருந்திருக்க முடியாது. ஆனால் இனம்புரியாத ஓர் ஆழ்ந்த அமைதி எனக்குக் கிட்டிற்று. என் மூச்சுத் திணறல் மெல்லக் குறைந்தது. இதுவரை அனுபவித்தறியாத அமைதியான உறக்கத்தில் நான் ஆழ்ந்தேன். இந்த ஆன்ம அனுபவத்திற்குப்பின் என் ஆஸ்த்மா மெதுவாகக் குறைந்து வந்தது. குருதேவரின் இந்த அற்புதக் காட்சியும், ஆறுதல் தரும் அவரது அமுதமொழிகளும் இத்தனை ஆண்டுக் காலமும் என்னுடன் இருந்து எனக்கு அளவற்ற சக்தியை அளித்து வித்யாலயத்தின் முயற்சிகளுக்கெல்லாம் நாயகமாக இருந்து நடத்துபவன் அவனே என்ற ஆழ்ந்த நம்பிக்கையை எனக்கு அளித்து வருகின்றன.

அந்த நாளிலிருந்து எனக்குச் சோதனைகள் பல வந்துள்ளன. ஆனால் அப்போதெல்லாம், எல்லாம்வல்ல இறைவனே தோன்றாத் துணையாக நின்று அச்சோதனைகளைக் களைந்து நம் முயற்சி களை வழி நடத்திச் சென்றிருக்கிறான். எனக்குக் கிடைத்த அந்த அற்புதக் காட்சியும், அருள்மொழிகளும் என் வாழ்நாள் முழுதும் எனக்குச் சக்தியூட்டி வல்லமை கொடுக்கும் ஊற்றுகளாக இருந்து வருகின்றன.

---

# 19. சுதந்திரம் புலர்ந்தது

வித்யாலய வளர்ச்சியின் இடைப்பட்ட காலத்தில், நாட்டின் அரசியல் வாழ்வில் பல நிகழ்ச்சிகள் நடந்தேறியிருந்தன. 1944 ஆம் ஆண்டு மே மாதம், எந்தவிதமான நிபந்தனையும் இன்றிக் காந்தியடிகள் விடுதலை செய்யப்பட்டார். காங்கிரசுக்கும், முஸ்லிம் லீக்கிற்கும் இடையே தோன்றிய அரசியல் முட்டுக்கட்டை காந்தியடிகளை மிகவும் வருத்தமுறச் செய்தது. திரு ஜின்னா அவர்களுடனும் முஸ்லிம் லீக்குடனும் சமரசத்திற்கு முயலவேண்டு மென்பதே அவரது உடனடியான நோக்கமாக இருந்தது. ஜின்னா வுடன் பேச்சு வார்த்தையை மீண்டும் தொடங்க, திரு. C. இராஜ கோபாலாச்சாரியார் புதியதொரு வழிமுறையை ஏற்படுத்தி அதற்குக் காந்தியடிகளின் ஒப்புதலைப் பெற்றார். இந்தவழி முறையின் அடிப்படையிலே தங்களிருவர்க்கும் இடையிலான பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமென்று காந்தியடிகள் தம் கருத்தை ஜின்னாவிடம் தெரிவித்தார். காந்தியடிகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட அந்த வழிமுறைகளில் பின்வருபவை அடங்கும்:

1. நாட்டிற்குச் சுதந்திரம் பெறும் முயற்சியில் காங்கிரசுடன் முஸ்லிம் லீக்கும் ஒத்துழைக்க வேண்டும். நாடு சுதந்திரம் பெற்ற பின்னரே தனிநாடு அமைக்கப்பட வேண்டும்.

2. முஸ்லிம்கள் அல்லாத மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் வங்காளம், பஞ்சாப் பகுதிகள் பாகிஸ்தானுடன் சேர்க்கப்படக் கூடாது. அதாவது பெரும்பான்மை மக்களான சீக்கியர் களும், இந்துக்களும் வசிக்கும் கிழக்குப் பஞ்சாப்பின் பகுதி களும், பெரும்பான்மை இந்துக்கள் வசிக்கும் மேற்கு வங்கா ளத்தின் மாவட்டங்களும் இதில் அடங்கா என்பதே இதன் பொருள்.

3. பாகிஸ்தான் நிறுவப்படுவதற்கு முன், அந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் கருத்தை அறிய, சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

4. பாகிஸ்தான், இந்துஸ்தான் ஆகிய இருநாடுகள் அமைக்கப் பட்ட பின்னரும் இந்த நாடுகளின் பாதுகாப்பு, போக்கு வரத்து மற்றும் இருநாடுகளுக்கும் பொதுவான முக்கியமான விஷயங்களில், இருநாடுகளுக்கு இடையிலும் ஓர் உடன் படிக்கை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

முதலில் பாகிஸ்தான் அமைக்கப்பட வேண்டும். அதற்குப் பின்னரே, சுதந்திரம் பெறும் முயற்சியில் காங்கிரசுடன் முஸ்லிம்லீக் ஒத்துழைக்கும் என்று ஜின்னா விடாப்பிடியாக வலியுறுத்தினார். இரண்டாவதாக, பஞ்சாப், வங்காளம் ஆகிய இரு மாநிலங்களும் முழுமையாகப் பாகிஸ்தானுடன் சேரவேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். மூன்றாவதாக, பாகிஸ்தான் உருவாவதற்கு மக்கள் கருத்தை அறிய, சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதை அவர் ஆட்சேபித்தார். பஞ்சாப் மற்றும் வங்காளத்தில் வசிக்கும் பெரும்பான்மை முஸ்லிம்கள் அவர் கருத்துக்கு ஆதரவு கொடுக்க மாட்டார்கள் என்பதையும், அவர்களும், முஸ்லிம் அல்லாத மக்களும் சர்வஜன வாக்கெடுப்பில் கலந்து கொண்டால் பாகிஸ்தான் தனிநாடு அமைவதற்கு அவர்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்பதையும் அவர் அறிவார். ஆகவே இந்தப் பேச்சு வார்த்தையால் எந்த முடிவும் ஏற்படவில்லை.

1943 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வேவல் பிரபு இந்தியாவின் அரசப் பிரதிநிதியாகப் பொறுப்பேற்றிருந்தார். நாட்டில் வளர்ந்து வரும் பொருளாதாரச் சீர்கேட்டை முன்னிட்டு, நாட்டில் நிலவும் அரசியல் தேக்க நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதை அவர் உணர்ந்தார். ஆகவே அவர் இரு கட்சித் தலைவர்களின் மாநாட்டைச் சிம்லாவில் கூட்டினார். காங்கிரஸ் செயற்குழுவும், முஸ்லிம்லீக்கின் செயற் குழுவும் கூட்டத்தில் கலந்து கொள்ள முடிவு செய்தன. ஜூன் மாதம் 25 ஆம் நாள் சிம்லாவில் இம்மாநாடு நடைபெற்றது. காங்கிரஸ், முஸ்லிம் லீக், மற்றும் வேறு சில கட்சிகளின் சார்பில் இருபத்தொரு பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். காங்கிரஸ், முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகள் ஒவ்வொன்றும் தங்கள் கட்சியின் சார்பில் 8 பேர்களுக்குக் குறையாத ஆனால் 12 பேர் களுக்கு மிகாத பெயர்கள் கொண்ட ஒரு பட்டியலை அனுப்பி வைக்குமாறும், அந்தப் பட்டியல்களிலிருந்து, மத்திய அரசாங்கம் அமைப்பதற்கு வேண்டிய பெயர்களைத் தாம் தேர்ந்தெடுத்துக் கொள்வதாகவும் அரசப் பிரதிநிதி, இவ்விரு கட்சிகளிடமும் கேட்டுக் கொண்டார். இதன்படி, காங்கிரஸ் கட்சி 12 பெயர்களை அனுப்பிற்று. ஆனால், ஜின்னா, இனி அமையவிருக்கும்

அரசாங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருமே முஸ்லிம்லீகைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று கூறி இந்த நிபந்தனையை மறுத்து விட்டார். இதன்படிப் பார்த்தால் அப்பொழுது காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த மௌலானா அபுல்கலாம் ஆசாத் கூட மத்திய அரசில் இடம் பெற முடியாது என்பது தெளிவாயிற்று.

1944-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், இங்கிலாந்தில் முக்கிய அரசியல் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. கன்சர்வேடிவ் கட்சியும், அதன் தலைவர் வின்ஸ்டன் சர்ச்சிலும் ஆரம்பத்திலிருந்தே காங்கிரசுக்கு எதிராக இருந்து வந்தனர். 'அரை நிர்வாணப் பக்கிரியான' காந்தியைச் சமாளிப்பதுதான் பிரிட்டிஷ் அரசுக்குப் பெரும் தலைவலியாக உள்ளது என்று கூறியவர் சர்ச்சில்தான். ஐரோப்பாவில் இரண்டாம் உலகப்போர் முடிவுற்றதும் இங்கிலாந்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி தோல்வியடைந்து அட்லியை பிரதம அமைச்சராகக் கொண்டு தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தது. இந்த மாற்றம் இந்தியாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குப் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. பிரிட்டனுக்கும், இந்தியாவுக்குமிடையே சுமுகமான உறவு தோன்றத்தொடங்கிற்று. இந்தியாவில் நிலவும் அரசியல் சூழ்நிலைகளைப் பார்க்கும்போது இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுப்பதை இனிமேலும் நீடிக்க இயலாது, அப்படி நீடித்தால் அது பிரிட்டனின் நலனுக்கு உகந்தது ஆகாது என்று பிரிட்டிஷ் அரசு முடிவு செய்தது. இவ்வகையான முடிவுக்குக் காரணங்கள் பல. உலகப்போரில் பிரிட்டன் வெற்றி பெற்றாலும்,அதன் பொருளாதார நிலை மிகவும் சீர்குலைந்திருந்தது. அதன் கடற்படை, ராணுவம், விமானப் படை ஆகியன மிகவும் பலவீனம் அடைந்திருந்தன. உலகப் போருக்குமுன், பல நாடுகளுக்குக் கடன்கொடுக்கும் செல்வ வளம் மிக்க நாடாக அது இருந்தது. ஆனால் உலகப்போரின் விளைவாக அது அமெரிக்க ஐக்கிய நாடுகள், மற்றும் பல நாடுகளிடமும் பெருமளவில் கடன்பட்டிருந்தது. உலகப்போரால் சீர்குலைந்துவிட்ட அதன் பொருளாதார நிலையை நிமிரச்செய்யவே அதன் வளங்கள் யாவும் தேவைப்பட்டன. ஆகவே இந்தியாவில் தொடர்ந்து தன் ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கான மனிதவளமோ, பொருள் வளமோ தன்னிடம் இல்லை என்பதைத் தொழிற்கட்சி அரசாங்கம் உணர்ந்தது. இந்தச் சூழ்நிலையில் இந்தியாவை ஆட்சிசெய்வது பிரிட்டனுக்குத் தேவையற்ற சுமை என்றும் உணரப்பட்டது.

எந்தக் கட்சியிடம் அல்லது எந்த மக்களிடம் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பது என்பதை இந்தியாவில் நடை

பெறவிருக்கும் மத்திய, மாநிலச் சட்டசபைகளுக்கான தேர்தல்களைக் கொண்டே முடிவுசெய்ய வேண்டும் என்று தொழிற்கட்சி அரசாங்கம் கருதியது. வெகு விரைவில் அரசியல் நிர்ணய சபை ஒன்று அமைக்கப்படும் என்றும், அதில் தங்கள் பிரதிநிதித்துவம் பற்றி இந்திய மன்னர்களிடம் கலந்து ஆலோசிக்கப்படும் என்றும், இந்தியாவை விட்டுப் பிரிட்டன் வெளியேறியபின் இந்திய-பிரிட்டிஷ் உறவுகள் பற்றியும் விவாதிக்கப்படும் என்றும், 1945-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தேர்தல்கள் நடக்கும் என்றும், அரசப் பிரதிநிதி வேவல் பிரபு அறிவிப்பு ஒன்றை விடுத்தார்.

காங்கிரஸ் கட்சியும், முஸ்லிம் லீகும் தேர்தலில் கலந்து கொள்ள முடிவு செய்தன. மத்தியச் சட்டசபைத் தேர்தல்களில் பொதுத்தொகுதிகளில் 91.3 சதவீத வாக்காளர்கள் காங்கிரசுக்கு வாக்களித்தனர். அதனால் அக்கட்சிக்கு 57 இடங்கள் கிடைத்தது. மத்தியச் சட்டசபையில் அது பெரும்பான்மை பலம் பெற்றது. முஸ்லிம் தனித் தொகுதிகளில் முஸ்லிம் லீக்கால் நிறுத்தப்பட்ட வேட்பாளர்களுக்கு 86.6 சதவீதத்தினர் வாக்களித்தனர். அது போட்டியிட்ட 37 தொகுதிகளிலும் அதற்கு வெற்றி கிடைத்தது. இவர்களுடன் 5 சுயேச்சை வேட்பாளர்களும், 2 சீக்கிய வேட்பாளர்களும் 8 ஐரோப்பிய வேட்பாளர்களும் வெற்றி பெற்றனர். மொத்தம் 102 இடங்களில் காங்கிரஸ் 57 இடங்களைப் பெற்று, பெரும்பான்மை இடத்தைப் பெற்றது. இது காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளுக்குப் பெரும் வெற்றியாக அமைந்தது. அதேபோன்று முஸ்லிம் வாக்காளர்களும் முழுமையாக முஸ்லிம் லீக்கை ஆதரித்ததையும் இத்தேர்தல்கள் நிரூபித்தன.

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தைத் தவிர மற்ற மாகாணச் சட்டசபைகளுக்கான தேர்தல்களில் முஸ்லிம்வாக்காளர்கள் முஸ்லிம் வேட்பாளர்களுக்கே வாக்களித்திருந்தனர். ஆயினும் வங்காளத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் முஸ்லிம் லீக்கால் பெரும்பான்மை தகுதி பெற இயலவில்லை. வங்காளத்தில் அது பெரும்பான்மை, பலம் பெற்று மந்திரிசபை அமைத்தது. வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி மந்திரிசபை அமைத்தது. பஞ்சாப்பில் முஸ்லிம்கள், இந்துக்கள், சீக்கியர்கள் அடங்கிய கூட்டு அமைச்சரவை அமைந்தது. உத்தரப்பிரதேசம், பீகார், அஸ்ஸாம் மத்திய மாகாணம், பம்பாய், சென்னை, ஒரிஸ்ஸா ஆகிய மற்ற மாநிலங்களில் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்று அமைச்சரவைகளை அமைத்து ஆட்சிக்கு வந்தது.

சென்னையில் அமைந்த புதிய அமைச்சர் அவையில் திரு. T. பிரகாசம் முதலமைச்சரானார். நான் மாநிலச் சட்டசபைக்குப்

போட்டியிட விரும்பி, கோவை மாவட்டம் பல்லடம் தொகுதியி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டேன். தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. P. S. குமாரசாமிராஜா, திரு. டேனியல் தாமஸ், திரு. M. பக்த வத்சலம் ஆகியோருடன் நானும், ஆந்திராவைச் சேர்ந்த திரு. காலா வெங்கடராவ், திரு. H. சீதாராமரெட்டி, பிக்கின்னி திரு. வெங்கட்ராமன் ஆகியோரும், மலபாரிலிருந்து திரு. K. மாதவ மேனனும், தென் கன்னடத்திலிருந்து திரு. K. R. கரந்த்தும் சென்னை அரசாங்கத்தின் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றோம். பின்னர் திரு. O. P. ராமசாமி ரெட்டியார் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றார்; திரு. கோபால்ரெட்டியும் அமைச்சரவையில் இடம் பெற்றார். நான் கல்வியமைச்சராகப் பொறுப்பேற்றேன். காங்கிரஸ் கட்சிக்கும், முஸ்லிம் லீக்கிற்கும் இடையே இருந்த கருத்து வேறுபாடு காரணமாக மத்திய அமைச்சர் அவை அமைப்பது தாமதப்பட்டது.

பெதிக் லாரன்ஸ், (இந்தியாவுக்கான செயலர்), சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், அலெக்ஸாண்டர் ஆகிய மூவர் அடங்கிய அமைச்சரவைத் தூதுக்குழு ஒன்றை, பிரிட்டிஷ் அரசு விரைவில் இந்தியாவுக்கு அனுப்பும் என்று 1946 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ஆம் நாள் பிரிட்டிஷ் அரசு அறிவித்தது. இந்தத் தூதுக்குழு காங்கிரஸ், முஸ்லிம் லீக், மற்றும் முக்கியமான அரசியல் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தும் என்றும் அறிவித்தது. மார்ச் 24-ஆம் நாளில் இத்தூதுக்குழு டில்லி வந்து காங்கிரஸ், முஸ்லிம் லீக் மற்றும் முக்கிய அரசியல் கட்சிகளுடன் மூன்று வாரகாலம் பேச்சு வார்த்தை நடத்திற்று. முஸ்லிம் லீகைத் தவிர மற்றக் கட்சிகள் யாவும் இந்தியாவின் அரசியல் ஒருமைப்பாட்டை ஆதரித்தன. அது தான் பிரிட்டிஷ் ஆட்சியில் நமக்குக் கிடைத்த மிகப்பெரும் நன்மை. இடைக்கால அரசு அமைப்பதற்கு ஜின்னாவும், முஸ்லிம் லீகும் இசையாது, பாகிஸ்தான் தனி நாடு கோரிக்கை யையே வலியுறுத்தினர். 1946-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், பண்டித ஜவஹர்லால் நேருவை இடைக்கால அரசு அமைக்கு மாறு அரசுப்பிரதிநிதி அழைத்தார். அதன்படி, சர்தார் வல்லபாய் பட்டேல், டாக்டர் ராஜேந்திரபிரசாத், அசப் அலி, C. இராஜ கோபாலாச்சாரியார், சரத்சந்திரபோஸ், ஜான்மத்தாய், சர்தார் பல்தேவ் சிங், ஜகஜீவன்ராம், டாக்டர் சபாத் அஹமது கான், சையத் அலி ஜாகீர் ஆகியோர் அடங்கிய இடைக்கால அமைச்சர் அவையை ஜவஹர்லால் நேரு 1946-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் நாள் அமைத்தார். செப்டம்பர் மாதம் 2 ஆம் நாள் இந்த இடைக்கால அமைச்சரவை பதவி ஏற்றது. முஸ்லிம் லீக்கினால் நியமிக்கப்பட்ட ஐந்து நியமன உறுப்பினர்களும்

பின்னர் அமைச்சர் அவையில் சேர்ந்தனர். ஆனால் உட்பூசல்களின் காரணமாக இடைக்கால அமைச்சர் அவையால் சரியாகச் செயல்பட இயலவில்லை.

இடைக்கால அமைச்சர் அவையை அமைத்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் முஸ்லிம்கள், ஆகஸ்ட் 16-ஆம் நாளை 'நேரடி நடவடிக்கை நாளாகக் கடைப்பிடிக்க வேண்டும்' என்று ஜின்னா வேண்டுகோள் விடுத்தார். இந்த அறிவிப்பால் கல்கத்தா, மற்றும் வங்காளத்தின் பல பகுதிகளிலும் பெரும் அளவில் கலவரங்கள் மூண்டன. ஆகஸ்ட் 16-ஆம் நாளை விடுமுறை நாளாக, மேற்கு வங்க முதலமைச்சர் அறிவித்தார். கலவரங்கள் மூண்டபோது, கலவரங்களை அடக்க வேண்டாமென்று காவல் துறையினர்க்கு அவர் ஆணை பிறப்பித்தார். எதிர்பாரா அளவுக்குப் படுகொலைகள் நடந்தன. கலவரங்களில் ஆயிரக்கணக்கான இந்துக்களும் முஸ்லிம்களும் கொல்லப்பட்டனர். அந்த நாட்களில் டில்லியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் நான் கலந்து கொண்டபின் கல்கத்தா வழியாகத் திரும்பினேன். பேலூர் மடத்திற்குப் போகவேண்டிய நான் கல்கத்தா சென்றேன். நான் அங்குச் சென்றபோது கங்கை நதியில் சடலங்கள் பல மிதந்து சென்றதைக் கண்டேன். மக்கள் பலர் கொலை செய்யப்பட்டு அவர்களின் சடலங்கள் கங்கையில் வீசப்பட்டன. உண்மையிலேயே அது ஒரு பயங்கரமான அனுபவம்.

இந்தச் சூழ்நிலையில், இந்திய அரசின் பொறுப்பினை ஏற்க, பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பவில்லை. அதனால் அவர்கள் இந்தியாவிலிருந்து வெளியேற முடிவு செய்தனர். இந்தியாவின் கடைசி ஆங்கில அரசப்பிரதிநிதியாகவும், முதல் கவர்னர் ஜெனரலாகவும் மவுண்டபேட்டன் பிரபு 1947-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24-ஆம் நாள் பொறுப்பேற்றார். உடனடியாக அவர், காங்கிரஸ், முஸ்லிம் லீக் மற்றும் முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார், அதன்பின் அவர் மாநில ஆளுனர்களின் மாநாடு ஒன்றைக் கூட்டினார். மாநிலங்களில் நிலைமை கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருப்பதாகவும், ஏற்கெனவே பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஆகியவற்றில் உள்நாட்டுக் கலகம் தொடங்கி விட்டதாகவும், மேலும் பல மாநிலங்களில் இது பரவக்கூடும் என்றும் அம்மாநாட்டில் ஆளுநர்கள் எடுத்துக் கூறினர். 1948 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை கூட, [illegible] நாட்டை

ஆளும் பொறுப்பை இந்திய மக்களின் பிரதிநிதிகளிடம் 1947 ஆகஸ்ட் 15-க்குள் கட்டாயம் ஒப்படைத்து விடவேண்டும் என்றும் மவுண்ட்பேட்டன் முடிவு செய்தார். பிரிட்டிஷ் அமைச்சர் அவையும் இதற்கு இசைந்தது.

பாகிஸ்தான் பிரிவினைக்கு ஒப்புக்கொள்ளுமாறு அவர் காங்கிரஸ் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார். இரண்டு தீமைகளில் குறைவான பாதிப்புள்ள தீமையை அவர்கள் ஏற்றுக் கொள்ள முடிவு செய்தனர். ஏற்கெனவே ஜின்னாவின் நேரடி நடவடிக்கையால் தோன்றியுள்ள உள்நாட்டுக் கலவரச் சூழ்நிலையில், காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆகியவற்றின் கூட்டு அரசாங்கத்தில் ஒற்றுமை காண்பது கடினம் என்று சர்தார் வல்லபாய் பட்டேல் கருதினார். இடைக்கால அரசாங்கத்தின் நிகழ்ச்சிகள் அவருக்கு எச்சரிக்கையாக அமைந்தன. இந்த அடிப்படையிலேயே அவர் பாகிஸ்தான் பிரிவினைக்கு இசைந்தார். ராஜேந்திரப் பிரசாத்தும், நேருவும் இதற்கு இசைந்தனர். இப்பிரிவினையில் காந்தியடிகளுக்கு எள்ளளவும் விருப்பமில்லையாயினும் இறுதியில் அவரும் இதற்கு மனக்கசப்புடன் இசைந்தார். தம் சொந்தக் கருத்துக்களை ஒதுக்கி வைத்து விட்டு, காந்தியடிகள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியை ஜூன் 14-ஆம் நாள் கூட்டி, பிரிவினையை ஏற்றுக்கொள்ளச் செய்தார்.

இந்த ஏற்பாட்டின்படி, பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஜூலை 18-ஆம் நாள் இந்திய சுதந்திரச் சட்டத்தை இயற்றியது. இந்தச் சட்டத்தின்படி:

1. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரண்டும் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் அடங்கும் இரு சுதந்திர நாடுகளாக ஆகும்.
2. ஒவ்வோர் அரசுக்கும் பிரிட்டிஷ் அரசர் கவர்னர் ஜெனரல் ஒருவரை நியமிப்பார். ஆனால் ஒரே நபர் இருநாடுகளுக்கும் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பு வகிக்கலாம்.
3. உள்நாட்டு, வெளி நாட்டு விஷயங்களுக்கான கொள்கைகளை வகுப்பதில் இருநாடுகளின் சட்டசபைகளுக்கும் முழு அதிகாரமும் உண்டு. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் எந்தச் சட்டமும், பிரிட்டிஷ் அரசால் வெளியிடப்படும் எந்த ஆணையும் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைக் கட்டுப்படுத்தாது.
4. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கான அரசியல் சாசனங்களை உருவாக்க இரு அரசியல் நிர்ணய சபைகள்

V4 4 136 AVI
31N1

இருக்கும். இந்த இருநாடுகளின் புதிய அரசியல் சாசனங்கள் உருவாகும் வரை இரு நாடுகளின் அரசுகளும் 1935 ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி, தேவையானால் சில மாறுதல்களுடன் ஆட்சி நடத்தும்.

5. புதிய அரசியல் சாசனங்களின்படிப் புதிய சட்டசபைகள் அமைக்கப்படும் வரை இரு நாடுகளின் அரசியல் நிர்ணய சபைகளே அவற்றின் சட்டசபைகளாகவும் செயல்படும்.

6. இந்தியாவின் சுதேச சமஸ்தானங்களின் மீது பிரிட்டனுக்கு எந்தவித மேலதிகார உரிமையும் இருக்காது. அவைகள் தங்கள் விருப்பப்படி, சுதேச அரசுகளாகவே தொடர்ந்து இருக்கலாம் அல்லது தங்கள் வசதிக்கேற்ப இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ சேர்ந்து கொள்ளலாம்.

ஆகஸ்ட் மாதம் 14-15 ஆகிய நாட்களுக்கு இடையிலான நள்ளிரவில் இந்திய அரசியல் நிர்ணயசபை ராஜேந்திர பிரசாத் தலைமையில் கூடி சுதந்திர தினத்தைக் கொண்டாடிற்று. அந்த நன்னாளில் பிரதமர் ஜவஹர்லால் நேரு, சட்டசபை உறுப்பினர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் உணர்ச்சி பூர்வமான உரை நிகழ்த்தி, தேச சேவைக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். அவரது உரையின் ஒரு பகுதி:

''உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் இந்தியா புனர்வாழ்வும் சுதந்திரமும் பெற விழித்தெழுகிறது ... ... ...
இன்று நாம் கொண்டாடுகின்ற வெற்றி ஒரு முதற்படியே. நமக்காகக் காத்திருக்கும் பெரிய சாதனைகளையும் வெற்றிகளையும் எய்துவதற்கு இது ஒரு வாய்ப்பே. இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு எதிர்காலச் சவால்களை ஏற்பதற்குரிய ஆண்மையும் அறிவும் நம்மிடம் உள்ளனவா?

''சுதந்திரமும் அதிகாரமும் மிகவும் பொறுப்பு வாய்ந்தன. அந்தப் பொறுப்பு இந்தச் சட்டசபையிடம் உள்ளது. இந்தச் சுதந்திரம் பிறப்பதற்கு முன் நாம் அளவற்ற இன்னல்களுடன் அரும்பாடுபட்டோம். இந்த இன்னல்களின் துயரம் இன்னும் நம் இதயங்களில் பசுமையாக உள்ளது. இருந்த போதிலும் இறந்த காலம் முடிந்து விட்டது. எதிர்காலம் நம்மை அழைக்கின்றது. எதிர் காலத்தில் ஓய்தல் நமக்கு இல்லை. நாம் ஏற்கனவே எடுத்துக் கொண்டுள்ள உறுதிமொழிகளையும், குறிப்பாக இன்று எடுக்கும் உறுதிமொழிகளையும் செயல்படுத்தக் கடுமையாக உழைக்க வேண்டிய நாள் வந்து விட்டது. இந்தியாவுக்குத் தொண்டு செய்வதென்பது, இன்னல்பட்டுக் கொண்டிருக்கும்

இலட்சக்கணக்கான மக்களுக்குத் தொண்டு செய்வதேயாகும். ஏழ்மை, அறியாமை, நோய், ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றைப் போக்க வேண்டுமென்பதே இதன் பொருளாகும், ஒவ்வொரு வரின் கண்ணீரையும் துடைக்க வேண்டுமென்பதே, நம் தலைமுறையின் மாமனிதரின் (மகாத்மா காந்தி) பேராவல் ஆகும்.............................................................................
நம் கனவுகள் நனவாக நாம் உழைக்க வேண்டும்; கடுமையாக உழைக்க வேண்டும்.

''இந்த நன்னாளில் நம் எண்ணங்கள் முதலில் இந்தச் சுதந் திரத்தின் சிற்பியை நோக்கிச் செல்கின்றன. இந்தியாவின் ஆன்ம சக்தியாக விளங்கிய தேசத் தந்தையான அவர், சுதந்திரம் என்ற சுடரை ஏற்றி நம்மைச் சுற்றியிருந்த இருளைப் போக்கினார். பல சமயங்களில் நாம் அவரது கருத்துக்களைப் பின்பற்றாது திசை தவறிச் சென்றிருக்கிறோம். நாம் மட்டுமின்றி, இனி வரப் போகும் தலைமுறையினரும், இந்தியத் தாயின் தலைமகனான அவரது செய்தியை நம் இதயங்களில் ஆழப் பதித்துக் கொள்வோமாக! அவரது நற்பண்புகளான நம்பிக்கை, வலிமை, அஞ்சாமை, பணிவு ஆகியவற்றையும் நாம் கொள்வோமாக! எத்தனை பெரிய புயல் வீசினாலும், சூறாவளி அடித்தாலும் நம் சுதந்திர ஜோதியை மட்டும் நாம் அணைய விடக் கூடாது....
..............................................................................''

புதிதாக வந்த சுதந்திரம் நாடு முழுவதையும் ஆனந்தத்தில் ஆழ்த்தியது. அந்த இரவிலும், அடுத்த நாளிலும் நாடு முழுவதும் கிராமங்களிலும், நகரங்களிலும் பெருந்திரளான மகிழ்ச்சிக் கூட்டங்கள் நடைபெற்றன. சென்னையிலும் காங்கிரஸ் தொண் டர்கள் பொதுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். காந்தியடிகளின் திருவுருவப் படங்கள் அலங்கரித்த மேடைகளில் சுதந்திர இயக்கத்தைப் பற்றிய சொற்பொழிவுகள் இடம் பெற்றன. உயரமான கொடிக் கம்பங்கள் நடப்பட்டு, முக்கிய மான தலைவர்களால் தேசீயக் கொடிகள் ஏற்றப்பட்டன. அமைச்சர்கள் பலரும் நானும் அன்று இரவும், மறுநாளும் பல கூட்டங்களில் கலந்து கொண்டோம்.

1947-ஆகஸ்ட் 15ல் சுதந்திரம் வந்தபோது சர் ஆர்ச்சிபால்ட் நை சென்னை மாகாண ஆளுனராக இருந்தார். ஆகஸ்ட் 14 ஆம் நாள் இரவில் அவர் சென்னை நகரின் பல பகுதிகளுக்கும் சென்று சுதந்திர தினக் கொண்டாட்டங்களைப் பார்க்க விரும்பி னார். சுதந்திரம் பெற்ற மகிழ்ச்சி ஆவேசத்துடனும், ஆனந்தப் பெருக்குடனும் இருக்கும் மக்களுக்கு நடுவில், இதுவரை அந்நிய

ஆதிக்கத்தின் பிரதிநிதியாக இருந்த ஒருவர் சென்றால் ஆபத்து விளையக் கூடும் என்று ஆளுனரின் ஆலோசகர்கள் கூறினார்கள். மக்கள் அவரை எதிரியாக நினைத்துத் தாக்கக் கூடும் என்று அவர்கள் அஞ்சினர். தாம் அவசியம் செல்ல வேண்டும் என்றும். ஆனால் யாரும் தெரிந்து கொள்ளாதபடி மாறுவேடத்தில் செல்வ தாகவும் ஆளுனர் நை கூறினார். அவருடன் தானும் வருவதாக திருமதி நை கூறினார். அவர்கள் இருவரும் மக்கள் ஆயிரக் கணக்கில் கூடியிருந்த பல இடங்களுக்கும் சென்றனர். நள்ளிரவு நெருங்கியதும் கட்டுக்கடங்காத மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பல இடங்களில் தேசீயக் கொடிகள் ஏற்றப்பட்டன. ஓரிடத்தில் திரண்டிருந்த மக்களுள் ஒருவர் ஆளுனர் நை, திருமதி நை ஆகியோரை அடையாளம் கண்டு கொண்டு, ‘இதோ இங்கே கவர்னர் வந்திருக்கிறார்!’ என்று கத்தினார். நை இதைப் பற்றிக் கூறும் போது, ‘என் ரத்தம் உறைந்து விட்டது. நிகழப் போவது என்னவென்று எனக்குப் புரியவில்லை. என் மனைவிக்கு நேர விருப்பதை நினைத்த போது நான் திக்குமுக்காடி விட்டேன். ஆனால் எங்கள் பயம் ஒரு கணநேரந்தான் நீடித்தது. ஏனெனில் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறான நிகழ்ச்சி நடந்தது. அங்குக் கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சி கலந்த இயல்பான சிரிப்புடன், ‘கவர்னர் கொடியேற்றட்டும்’ என்று கூறினர். எங்கள் காருக்கு அருகில் வந்து பெருத்த மகிழ்ச்சி ஆரவாரத்துடன் எங்களைக் கொடி யேற்ற அழைத்துச் சென்றனர்; இதற்குமுன் நாங்கள் இவ்வளவு பத்திரமாக இருந்ததில்லை,’ என்று குறிப்பிட்டார். அவர் மேலும், ‘சற்று முன்வரை தங்கள் நாட்டின் எதிரியாக இருந்த ஓர் அரசின் பிரதிநிதிக்கு இத்தகைய நல்லெண்ணமும், நட்புறவும் வேறு எந்த நாட்டிலும் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. காந்தி யடிகளின் தத்துவம் உண்மையிலேயே செயல்படுவதை நான் காண்கிறேன்’’ என்று கூறினார்.

இந்தியா முழுதும் சுதந்திரதினத்தை மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருந்தபோது அதன் சிற்பிகளில் முதன்மை யானவரான காந்தியடிகள், கல்கத்தாவில் கலவரங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு அன்பும் ஆதரவும் மன அமைதி யும் கொடுத்துக் கொண்டிருந்தார்.

வங்காள அமைச்சர்கள் அவருக்கு மரியாதை செலுத்த அவரிடம் வந்தார்கள். அவர்களிடம் அவர், ‘இன்று நீங்கள் உங்கள் தலையில் ஒரு முட்கிரீடம் சூடிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஏற்றிருக்கும் பொறுப்புக்களை மிகவும் விழிப்புடன் செய்ய வேண்டும். நீங்கள் மிகவும் பொறுமையுடனும், பணிவுடனும்,

சகிப்புத் தன்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும். பொருளுக்கு அடிமையாகி விடாதீர்கள். கிராமங்களுக்கும் ஏழை எளியவர் களுக்கும் சேவை செய்யுங்கள். கடவுள் உங்களுக்கு அருள் புரிவாராக!' என்று கூறி வாழ்த்தினார்.

அவர் தம் அரிஜன வார இதழில், அமைச்சர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் கடமைகள் பற்றிக் கீழ்க்கண்டவாறு எழுதினார் :

''அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் அச்சமின்றித் தம் கடமைகளை ஆற்றவேண்டும். அவர்கள் தங்கள் பதவிகளை யும் அதிகாரத்தையும் துறக்க எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். நாட்டின் மதிப்பையும் சக்தியையும் உயர்த்த அவர்கள் தங்கள் பதவிகளையும் அதிகாரத்தையும் பயன்படுத்த வேண்டும். பதவியும் அதிகாரமும் தனிப்பட்டதும் பொதுவானதுமான அற நெறிகளை அடிப்படையாகக் கொண்டவை. ஆகவே அறநெறி களிலிருந்து பிறழ்வது நாட்டைத் தாழ்த்திவிடும்.

''அமைச்சர்கள் தங்கள் பணிகளைச் சிறப்பாக நிறைவேற்று வதற்காக அரசாங்கம் அளித்துள்ள வசதிகளைத் தங்கள் சொந்தப் பணிகளுக்காகப் பயன்படுத்தக் கூடாது.

''நம் அமைச்சர்கள் மக்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். எந்தவிதமான காரணத்தை முன்னிட்டும் அமைச்சர் கள் சாதி, இன வேறுபாடு பாராட்டக் கூடாது. தங்கள் உறவினர் களுக்கும், நண்பர்களுக்கும் சலுகைகள் தரக்கூடாது. ஓர் அமைச் சருக்குத் தன் சொந்த மகனோ, சகோதரனோ எந்த வகையிலும் எந்தச் சாதாரணக் குடிமகனைக் காட்டிலும் உயர்ந்தவர் அல்லர்.

''தன் சொந்த வாழ்க்கையை எளிதாக அமைத்து மக்களின் நன்மதிப்பைப்பெற வேண்டும்; மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். அமைச்சர்கள், தாங்கள் மட்டும் எளிய வாழ்க்கையும், கடின உழைப்பும் கொண்டவர்களாக இருந்தால் போதாது. தங்கள் துறைகளைச்சேர்ந்த அலுவலர்களும் மற்றவர் களும் எளிய வாழ்க்கை வாழும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். அனைவர்க்கும் நியாயமும் நீதியும் எளிதில் கிடைக்க வேண்டும். தற்காலத்தில் நீதியும், நியாயமும் பணக்காரர்களின் சொத்தா கவும், சூதாட்டக்காரனின் மகிழ்ச்சியாகவும் போய்விட்டன. காவல் துறையினர் மக்களின் நண்பர்களாக இருக்க வேண்டும். கிராம மக்களின் தேவைகளை நிறைவு செய்யும்படிக் கல்வி முறையும் அமையவேண்டும்.''

1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ஆம் நாள் பண்டித ஜவஹர்லால் நேருவுக்குக் காந்தியடிகள் கீழ்க்கண்ட வாழ்த்துச் செய்தியை அனுப்பியதாகச் செய்திகள் கூறின:

''உங்களுக்கு என்றும் என் நல்வாழ்த்துக்கள்! நான் உங்களை வாழ்த்துகின்ற அதே சமயம் உங்களுக்கு இருக்கும் பணி எளிமையானதோ, கவர்ச்சியானதோ அல்ல என்றும் கூறுகிறேன். உங்களால் ஒரு சில மக்களே மகிழ்ச்சியடையலாம். பலர் வெறுப்படையக்கூடும். இருப்பினும் இதனால் நீங்கள் மக்களுக்கு ஆற்றும் உங்கள் கடமையிலிருந்து சிறிதளவும் பிறழக்கூடாது.''

# 20. சேவா கிராமத்தில்

1934-ஆம் ஆண்டில் காந்தியடிகள் வித்யாலயத்திற்கு விஜயம் செய்தது, அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பை எனக்குக் கொடுத்தது. 1935-ஆம் ஆண்டில் மத்தியச் சட்டசபைக்கு நான் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது இத்தொடர்பின் நெருக்கம் மேலும் அதிகரித்தது. அவர் தங்கியிருந்த சேவாகிராமத்திற்கு அருகில் உள்ள வார்தா, சென்னை-டில்லி ரயில் பாதையில் அமைந் திருந்தது. அப்பொழுதெல்லாம் ஆண்டிற்கு இருமுறை மத்தியச் சட்டசபைக் கூட்டம் நடைபெறும். குளிர்காலக்கூட்டம் ஜனவரி யில் தொடங்கி ஏப்ரல் வரை நடக்கும். கோடைகாலக் கூட்டம் ஆகஸ்டில் தொடங்கி செப்டம்பர் மாதம் வரை ஏறக்குறைய ஐந்து வாரங்கள் சிம்லாவில் நடைபெறும். ஹிந்துஸ்தானி தாலமி சங்கத்துடனும் நான் தொடர்பு கொண்டிருந்ததால் அதன் செயலர்களான திரு அரியநாயகம், திருமதி ஆஷாதேவி அரிய நாயகம் ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கிட்டிற்று. ஆகவே, நான் டில்லி செல்லும்போதும், டில்லியிலிருந்து திரும்பி வரும்போதும் வழியிலிருந்த வார்தாவில் இறங்கிச் சேவாகிராமம் செல்வதுண்டு. காந்தியடிகள் என்னிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். ஒவ்வொரு முறை நான் அவரைச் சந்திக்கும் போதும் வித்யாலயம் எவ்வாறு நடந்து வருகிறது என்றும், நிர்மாணப்பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்றும், என் சட்டசபைப்பணிகள் எவ்வாறுள்ளன என்றும் மிகுந்த அன்புடன் விசாரிப்பார். அவருடன் இருந்த மகாதேவ தேசாயையும், அன்னை கஸ்தூரிபாயையும் நான் சந்திப்பேன். நான் சேவா கிராமத்திற்கு அடிக்கடிச் சென்றதால், காந்தியடிகளின் நெருங்கிய நண்பர்களான—திரு ஜம்னாலால் பஜாஜ், திரு ஜாகீர் உசேன், திரு J. C. குமரப்பா, திரு பரதன், திரு கிஷோரிலால் மஷ்ருவாலா. மீராபென், தக்கர் பாபா, கொண்டா வெங்கடப்பய்யா, நபகிஷன் சௌத்ரி போன்ற பெருமக்களைச் சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தது. இவர்கள் அனைவரும் சுதந்திரப் போராட்டத்திலும், காந்தியடி களின் நிர்மாணப் பணிகளிலும் பெரும் பங்கு வகித்தவர்கள்.

அந்தக் காலத்தில் சேவாகிராமத்திற்குச் செல்ல நல்ல சாலைகள் இல்லை. ஆகவே மழைக்காலங்களில் வார்தாவிலிருந்து நான்கு-ஐந்து மைல்கள் சேறும் சகதியும் நிறைந்த பாதையில் நடந்துதான் செல்ல வேண்டும். 'இராமன் இருக்கும் இடம் அயோத்தி' என்று ஒரு பழமொழி உண்டு. அதன் உண்மைப் பொருளை நான் சேவாகிராமம் சென்ற போதுதான் உணர்ந்தேன். எங்கோ ஒரு மூலையில் இருந்த அந்தச் சிற்றூர், காந்தியடிகள் அங்கு வாழ்ந்ததால் இந்தியாவின் ஒரு முக்கிய இடமாகத் திகழ்ந்தது. இந்தியாவின் தலைசிறந்த அரசியல் தலைவர்கள் சேவாகிராமம் சென்று காந்தியடிகளுடன் கலந்துரையாடி அவரது அறிவுரைகளைப் பெற்றனர். வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வரும் முக்கியப்பிரமுகர்கள், காந்தியடிகளைச் சந்திக்கவில்லையெனில் தங்கள் பயணம் நிறைவு பெற்றதாகாது என்று நினைத்தனர். பலநாட்டுப் பத்திரிகை நிருபர்களும் அங்கு இருந்தனர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றிய நிர்மாண ஊழியர்களும் அங்கு வந்து சென்றனர். இக்காரணங்களால் சேவாகிராமத்திற்கு நல்ல சாலை போடப்பட்டது. அந்தக் கிராம ஆசிரமத்தில் ஊழியர்கள் தங்குவதற்கும், அங்கு வந்து செல்பவர்கள் தங்குவதற்கும் வீடுகள் கட்டப்பட்டன. சேவா கிராமத்திற்கு வரும் முக்கியப் பிரமுகர்கள் தங்குவதற்கு விருந்தினர் விடுதி ஒன்றும் கட்டப்பட்டது. அங்கு ஆதாரப்பள்ளி ஒன்று இருந்தது. அதன் அருகில் திரு. அரியநாயகம், திருமதி ஆஷா தேவி அரியநாயகம் ஆகியோர் தங்கியிருந்தனர். கிராமத்தின் ஏழை மக்களுக்காக மருந்தகம் ஒன்றும் செயல்பட்டு வந்தது. 1937-ல் காங்கிரஸ் அமைச்சரவை பொறுப்பேற்றபின், மாகாண அமைச்சர்கள் பலர் வார்தாவுக்கு யாத்திரை வந்து சென்றனர். அங்குதான் நான் மத்திய மாகாணத்தின் (தற்போது மத்தியப் பிரதேசம்) முதலமைச்சரான திரு. ரவி சங்கர் சுக்லாவைச் சந்தித்தேன்.

சேவா கிராமத்தின் கிராமச்சூழ்நிலை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதால், அங்குப் பெரிய மாடிக் கட்டிடங்கள் கட்டப்படுவதைக் காந்தியடிகள் அனுமதிக்கவில்லை. அங்கிருந்த கட்டிடங்களின் சுவர்கள் மண்ணால் கட்டப்பட்டன. கையால் செய்யப்பட்ட மண்ணோடுகள் வேயப்பட்டன. இவ்வாறு கட்டப்பட்ட சிறு குடிசை ஒன்றில் காந்தியடிகள் வாழ்ந்து வந்தார். அவரது அறையில் மேசை நாற்காலிகளோ, கட்டிலோ இருக்கவில்லை. அவர் பாய் ஒன்றின்மேல் அமர்ந்து, பின்னால் சிறு திண்டு ஒன்றின்மேல் சாய்ந்து கொள்வார். தரையில் பாயை

விரித்தே அவர் உறங்குவார். அங்கிருந்த மண் சுவர் ஒன்றில் ராட்டையின் படம் வரையப்பட்டிருந்தது. அவரது பாயைச் சுற்றி, பாய்கள் விரிக்கப்பட்டிருக்கும். அனைத்து வசதிகளும் மிகவும் எளிமையாக இருந்தன; ஆனால் யாவும் மிகவும் தூய்மையாகவும், ஒழுங்காகவும் இருந்தன. உலகின் பலபகுதிகளில் இருந்துவந்த பெருந்தலைவர்கள் பலரும் காந்தியடிகளை இந்த அறையில்தான் சந்தித்து அவருடன் முக்கியமான விஷயங்களைப் பற்றிக் கலந்தாலோசித்தனர். அவரது புன்னகை மிகவும் கவர்ச்சியானது; மற்றவர்களிடம் அவர் காட்டிய அன்பும் பரிவும் அற்புதமானவை. அவருடன் உரையாடுபவர்கள் நேரம் போவது தெரியாமல் அவரது அன்பிலும் பரிவிலும் மூழ்கித் தங்களை மறந்து விடுவார்கள்.

கோடைக்காலத்தில் வார்தாவிலும், சேவா கிராமத்திலும் கடுமையான வெப்பம் நிலவும். சில நாட்களில் வெப்பம் 110°F க்கு உயர்ந்து செல்லும். இத்தகைய கடுமையான வெப்பம் நிலவிய கோடைக்காலத்தில் ஒரு நாள் நான் சேவா கிராமம் சென்றேன். காந்தியடிகள் தம் குடிசையில் தரையில் விரித்த பாயின் மேல் படுத்திருந்தார். அவர் தம் உடலின் மீதும், தலை மீதும் ஈரத் துண்டுகளைப் போர்த்தியிருந்தார் என்னைக் கண்டதும் அவர் தம் அழகிய புன்னகையுடன், ''வா! அவினாசி, எப்படியிருக்கிறாய்?'' என்று அன்புடன் கேட்டார். அவர் உடலின் மேலும் தலையின் மேலும் இருந்த கட்டுக்களைப் பார்த்ததும் பயந்துபோய் அவை என்ன என்று கேட்டேன். அவர் வாய்விட்டுச் சிரித்து, வெப்பத்தைத் தணித்துக் கொள்ள, தான் பயன்படுத்தும் 'குளிர்சாதனம்' (Air Conditioning) என்றார். அதைப்பற்றி விவரித்தார். முதலில் உடல் மீதும், தலை மீதும், துணியைப் போர்த்துக் கொண்டு, அதன்மேல் களிமண்ணைக் குழைத்துப் பூசவேண்டும். அதற்கு மேல் ஒரு துணியைப் போர்த்தவேண்டும். ஈரம் குறையாமலிருக்க அடிக்கடி அதன் மேல் தண்ணீரைத் தெளித்துக் கொண்டேயிருக்க வேண்டும். இவ்வாறு செய்தால் வெப்பம் குறைந்து குளிர்ச்சி கிடைக்கும். தண்டி யாத்திரையின் போது காந்தியடிகள் தம் தலையின் மீது ஈரக் களிமண்ணை வைத்துக்கொண்டு நடந்து சென்றார். இந்தக் காட்சியை நாம் தண்டி யாத்திரையைச் சித்திரிக்கும் படத்தில் காணலாம். அப்போது அது என்னவென்று வெளிநாட்டு நிருபர் ஒருவர் கேட்டார். அது களிமண் பூச்சு என்று காந்தியடிகள் கூறினார். அந்த நிருபர் இதைப் பற்றித் தம் செய்தித் தாளில், ''காந்தியடிகளின் தலைமேல் மட்டும் களிமண் இல்லை. அவர் தலைக்குள்ளும் களிமண் தான்.'' என்று எழுதினார். இதை அறிந்த காந்தியடிகள் வாய்விட்டுச் சிரித்து அந்த நிருபர் சொல்வது சரிதான் என்று கூறினார்.

உயர்ந்த நோக்கங்களுக்காக வாழ்ந்த பெரும் தலைவர்கள் பலரைப்போல் காந்தியடிகள் வெறும் கொள்கை வாதிமட்டுமல்லர். தனி மனித மேம்பாட்டில் அவர் காட்டிய அக்கரை மகத்தானது. ஒவ்வொரு நாளும் அவருக்கு ஏராளமான கடிதங்கள் வந்தன. அவற்றில் சில கடிதங்கள் தேசீய முக்கியத்துவம் வாய்ந்தவை; ஆனால் பெரும்பாலான கடிதங்கள் பொதுமக்களிடமிருந்து வந்தவை. அவற்றில் அவர்கள் தங்கள் சொந்த விஷயங்கள் பற்றிக்குறிப்பிட்டுக் காந்தியடிகளின் ஆலோசனையைக் கேட்டிருந்தனர். இந்தக் கடிதங்கள் அனைத்திற்கும் காந்தியடிகள் தம் கைப்படப் பதில் கடிதங்கள் எழுதினார். அவர் எனக்கும் பல கடிதங்கள் எழுதினார். அப்போது அவற்றின் முக்கியத்துவம் எனக்குத் தெரியாததால் அவற்றை நான் பாதுகாத்து வைக்கவில்லை. ஆனால், நான் தொகுத்த விவேகானந்தரின் கல்விக் கருத்துக்கள் அடங்கிய சிறு நூலுக்கு அவர் எழுதிய முன்னுரைக் கடிதத்தை மட்டும் மிகவும் பத்திரமாகப் போற்றிக் காப்பாற்றி வருகிறேன். அக்கடிதம்: ''அன்புள்ள அவினாசி, சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களுக்கு யாரிடமிருந்தும் எந்தவித அறிமுகமும் தேவையில்லை. அவை, தடுக்கவியலாத உணர்ச்சியூட்ட வல்லவை.''

உனதன்புள்ள, பாபு
22-7-41

கடிதங்கள் எழுதுவதிலும் காந்தியடிகள் சிக்கனத்தைக் கடைப்பிடித்தார். அவர் கடிதங்களில் பெரும்பாலானவற்றை கார்டுகளில் அல்லது தமக்கு வந்த கடிதங்களின் உறைகளின் பின்பக்கங்களில் எழுதினார்.

காந்தியடிகள், தம்மைக் காண வருபவர்களின் தனிப்பட்ட வசதிகளை நன்கு கவனித்துக் கொள்வார். 1944 ஆம் ஆண்டில், அரசியல் கொந்தளிப்பினால் நாடு அல்லல்பட்டுக் கொண்டிருந்த போது, நான் வார்தாவுக்குச் சென்றேன். அது அக்டோபர் மாதத்தின் முதற்பகுதி; கோடை முடிந்து குளிர்காலம் தொடங்கியிருந்தது. எனக்கு ஆஸ்த்மா இருந்ததன் காரணமாக நான் வெந்நீரிலேயே குளிப்பது வழக்கம். ஆசிரமவாசிகளுக்குத் தொல்லை கொடுக்க விரும்பாததால் நான் குளிர்ந்த நீரிலேயே குளித்தேன், அதனால் ஆஸ்த்மா தொந்தரவு அதிகமாகிவிட்டது. அன்று பிற்பகலில் காந்தியடிகளை நான் சந்திக்கவேண்டும். என்னைக் கண்டதும் அவர் என்னைக் கேட்ட முதல் கேள்வி, ''நீ ஏன் குளிர்ந்த நீரில் குளித்து நோயை அதிகப்படுத்திக் கொண்டாய்?'' என்பது தான். அவர் மேலும், ''இங்கு வெந்நீர்

எளிதில் கிடைக்குமே. அப்படியிருக்க நீ குளிர்ந்த நீரில் குளித்துத் தொல்லைப்பட்டிருக்க வேண்டியதில்லை,'' என்றும் கூறினார். காந்தியடிகளின் இவ்வகையான அன்பு நிறைந்த மனித உறவுதான் அவர்பால் இலட்சக்கணக்கான ஊழியர்களை ஈர்த்துத் தேசத்தொண்டு செய்ய வைத்தது.

அச்சமயத்தில் நெஞ்சை நெகிழவைக்கும் மற்றொரு நிகழ்ச்சியும் நடந்தது. இந்த நிகழ்ச்சியை நன்கு அறிந்த திரு. ஜெய்ராம் தாஸ் தௌலத்ராம் அவர்களின் சொற்களிலேயே அதைக் கூறுவது நல்லது. ''அப்பொழுது மாலை வழிபாட்டிற்கு இன்னும் ஒருமணி நேரம் இருந்தது. பாபு வழக்கம்போல் உலாவப் புறப்பட்டுக் கொண்டிருந்தார் அவருடன் ஆறேழு பேர் இருந்தனர். அவர் ஆசிரம வாயிலைக் கடந்தபோது ஆசிரமத்திற்கு வந்துகொண்டிருந்த ஒருவர் காந்தியடிகளுக்கு முன்னால் சுமார் ஆறடி தூரத்தில் நின்றார். அவர்தம் துணிமூட்டையைக் கீழே வைத்துவிட்டுக் காந்தியடிகளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். காந்தியடிகளும் பதிலுக்கு அவருக்கு வணக்கம் செய்துவிட்டு அவர் எழுதிய கடிதம் தமக்குக் கிடைத்ததாகவும், தம் கடிதம் கிடைத்த பின்னரே அவரை ஆசிரமத்தில் எதிர்பார்த்ததாகவும் கூறினார். இதனால் சற்று அதிர்ச்சியடைந்த அவர் காந்தியடிகளிடம் விவரத்தைக் கூறினார். காந்தியடிகள், அரசப்பிரதிநிதியைக் கண்டு பேசிய பிறகு வெளியிட்ட பரிதாபகரமான குறிப்பு தம்மை மிகவும் கலக்கிவிட்டதாகவும் அதனால் பாபுவுடன் இரண்டு நாட்கள் இருந்துவிட்டுச் செல்ல வந்துள்ளதாகவும் கூறினார். ''நான் தங்கள் அனுமதி பெற்ற பின்னரே இங்கு வந்திருக்க வேண்டும். இருப்பினும் என்னால் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலவில்லை, ஆகவேதான் நான் ஹரித்துவாரிலிருந்து புறப்பட்டுத் தங்களிடம் வந்துள்ளேன்,'' என்றும் கூறினார். தம்மைக்காண வந்தவர் எந்த நோயினால் துன்பப்பட்டுக்கொண்டு இருக்கிறார் என்பதைத் தாம் அறிந்திருந்ததாகக் காந்தியடிகள் கூறினார். இருப்பினும் அந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அவரை ஆசிரமத்தில் மற்ற ஆண், பெண், குழந்தைகளுடன் தங்க வைப்பது நல்லதுதானா என்று தமக்குள் மனப்போராட்டம் நடத்திக் கொண்டிருந்ததாகவும் காந்தியடிகள் கூறினார்.

காந்தியடிகளைக் காண வந்த அவர்தான் பாராசூர் சாஸ்திரி. எரவாடா சிறையில் 1922-ல் காந்தியடிகளுடன் இருந்தவர். துரதிருஷ்டவசமாக அவருக்குக் கடுமையான தொழுநோய் வந்துவிட்டது. அதனால் அவர் சிறையிலிருந்து வெளிவந்தபின் பல மருத்துவமனைகளுக்குச் சென்றும் தம் நோய் குணமடையாததால்

இறுதியில் வடஇந்தியாவின் புனிதத்தலமான ஹரித்துவாரில் தஞ்சம் புகுந்தார். காந்தியடிகளின் தர்மசங்கடமான நிலைமையைக் கண்ட அவர், ''நான் உங்களைத் தரிசித்துவிட்டேன். தங்களிடம் நேரில் கொடுப்பதற்காக நான் ஹரித்துவாரத்தில் நூற்றநூல், இம்மூட்டையில் உள்ளது. என் ஆவல் நிறைவேறி விட்டது. அதோ, தொலைவிலுள்ள மரத்தடியில் இன்றைய இரவைக் கழித்து விட்டு நாளை காலை நான் மீண்டும் ஹிரித்துவார் சென்று விடுகிறேன்,'' என்று சொன்னார். அவர் ஏதேனும் சாப்பிட்டாரா என்று பாபு அவரிடம் கேட்டார். தாம் பாலுணவிற் குப்பின் எதுவும் சாப்பிடவில்லை என்று அவர் கூறினார். அதனால் பாபு, கனுகாந்தியை அழைத்து அவரது உணவுக்கு ஏற்பாடு செய்யும்படிக் கூறினார். வந்தவருக்கு உணவளித்துக் கவனித்துக் கொண்டார் கனுகாந்தி. காந்தியடிகள் உலாவப் புறப்பட்டார். காந்தியடிகள் மாலை வேளைகளில் உலாவச் செல்வதன் மூலம் தம் வேலைப் பளுவிலிருந்து சற்று நேரம் விடுபட்டுத் தம் சோர்வை நீக்கிக் கொள்வார். அவ்வாறு வெளியில் உலாவச் செல்லும்போது ஆசிரமக் குழந்தைகளுடன் விளையாடி மகிழ்வார்; அல்லது தம் சக ஊழியர்களிடம் சாதாரண விஷயங்களைப் பற்றிப் பேசி மகிழ்ந்து தம் மன இறுக்கத்தைக் குறைத்துக் கொள்வார். ஆனால் காந்தியடிகள் அன்று மாலையில் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி முக்கியமான விஷயங்களைப் பற்றித் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார். அவர் ஆசிரமத்திற்குத் திரும்பி வந்ததும் மாலைப் பிரார்த்தனை முடிந்தது. அன்று வழக்கத்திற்கு முன்னதாகவே ஓய்வெடுக்கச் சென்றுவிட்டார்.

அவரது உடல்தான் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. ஆனால் அந்த உத்தமரின் உள்ளே பெரியதொரு ஆன்மப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. அவரது உள்மனம் ஏதோ ஒன்றைப் பற்றி வற்புறுத்திப் புறமனத்தை ஆட்கொண்டிருந்தது. கடைசியில் அவர்தம் மனப்போராட்டத்தில் வெற்றி கண்டார். அதிகாலை 2-00 மணிக்கு அவர் புற உறக்கம் கலைந்து எழுந்து அமர்ந்தார். தம் உள்மனத்தின் அறைகூவலுக்கு அடிபணியும்படித் தம் புற மனத்தை ஆயத்தப் படுத்தத் தொடங்கினார். அடுத்த நாள் காலைப் பிரார்த்தனை முடிந்தது. அங்குக் குழுமியிருந்த ஆசிரம வாசிகளுக்கு அந்த அதிகாலைப் பொழுதில் அருளுரை வழங்கினார். முந்திய நாள் மாலையில் தோன்றிய பிரச்னையின் பல அம்சங்களைப் பற்றியும் அவர்களுக்கு விளக்கினார்.

தம் நேர்மையையும், உண்மையான ஈடுபாட்டையும் சோதிக்க இறைவனே பாராசூர் சாஸ்திரியின் வடிவத்தில் வந்திருப்பதாகக்

கூறினார். தொழுநோயைக் காரணம் காட்டிப் பாராசூர் சாஸ்திரியைப் புறக்கணித்து வெளியே அனுப்புவது கடவுளையே வெளியே அனுப்புவதாகும்; ஆனால் அதே கடவுளின் துணையால் தம் பொறுப்பில் ஒப்படைத்துள்ள ஆசிரமவாசிகளின் உடல்நலத்தையும் காப்பாற்ற வேண்டும். ஆகவே பாராசூர் சாஸ்திரியை ஆசிரமத்தில் தங்கவைப்பதால் நேரக்கூடிய ஆபத்தான விளைவுகளை ஆசிரம வாசிகள் ஏற்கத்தயாராக இல்லாதபோது அவரை, தான் எப்படி ஆசிரமத்தில் தங்கவைக்க இயலும்? ஆசிரமவாசிகள் காந்தியடிகளின் கருத்துக்கு இசைந்தனர். பாராசூர் சாஸ்திரியைத் தங்களுடன் ஆசிரமத்தில் தங்கவைப்பதற்கு உடன்பட்டனர். இப்பொழுது காந்தியடிகளின் மனச்சுமை குறைந்தது. அவருக்கு மேலும் ஒரு சத்திய சோதனை! தம் அகிம்சைக் கொள்கையை நேரடியாக வெளிப்படுத்த ஒரு வாய்ப்பு. தீண்டத்தகாதவர்களும் தீண்டுவதற்கு அஞ்சும், கீழினும் கீழாய் உள்ள ஒருவர்க்கு அன்பு காட்டி உயிர்த் தொண்டாற்ற ஒரு நல்வாய்ப்பு!

அந்த அதிகாலைப் பொழுதில் பாராசூர் சாஸ்திரி ஆசிரம வாசியானார். பாபுவின் குடிசைக்கு அருகிலேயே ஓர் அழகான குடிசை அமைக்கப்பட்டது. அதன் கூரை வெள்ளைத் துணியால் வேயப்பட்டது. தொழுநோயாளருக்குத் தேவையான சூரிய வெளிச்சம் கிடைக்கவே இந்த ஏற்பாடு. அந்த நாளிலிருந்து ஆசிரமவாசிகள் அனைவரிலும் பாராசூர் சாஸ்திரியின் மேலேயே காந்தியடிகளின் கவனம் இருந்தது. மிகவும் முக்கியமான பிரச்னைகளை நாடு எதிர்கொள்ளவேண்டியிருந்த சமயம் அது. உலகப்போர் பற்றிப் பிரிட்டிஷாருடன் கருத்து வேறுபாடு கொண்டு அதிலிருந்து நாம் விலகியிருந்தோம். அமைச்சர் பொறுப்பு வகித்தவர்கள் அனைவரும் பதவிகளைத் துறந்து சிறை வாசம் அனுபவிக்கத் தயாராக இருந்தனர். எப்பொழுது, எந்த முறையில் சட்டமறுப்பு இயக்கத்தை நடத்துவது என்பது பற்றிக் காங்கிரஸ் வட்டாரத்தில் தீவிர விவாதம் நடந்து வந்தது. அமைச்சரவைப் பொறுப்புக்களைத் துறந்து விட்டு, தியாகத் தீயில் குதித்து நாட்டின் விடுதலைப் போராட்டத்தை நடத்த நாடு ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. முக்கியமான இந்த அரசியல் கொந்தளிப்பின் இடையில், மகாத்மாவின் உள்ளத்தில் பாராசூர் சாஸ்திரியின் தொழுநோய் பற்றிய கவலை படர்ந்திருந்தது. தினமும் அவர் பாராசூர் சாஸ்திரியின் உடலைப் பிடித்து விட்டுத் தம் கைகளாலேயே அவருக்குச் சிகிச்சை அளித்தார். ஆசிரமவாசிகள் சிலர் தாமாகவே முன்வந்து காந்தியடிகளுக்கு உதவினர், ஒவ்வொரு நாளும் மூன்று வேளையும் பாராசூர் சாஸ்திரிக்குக் கொடுக்க வேண்டிய உணவைக் காந்தியடிகளே முடிவுசெய்தார். ஒவ்வொரு

வேளையும் அந்த உணவைக் காந்தியடிகள் நன்கு சோதித்த பின்னரே அது அவருக்குக் கொடுக்கப்படும். ஒவ்வொரு நாளும் காலையில் உலாவச் சென்றுவிட்டு, காந்தியடிகள் பாராசூர் சாஸ்திரியைப் பார்க்க வருவார். அவரது உடல்நலம் எவ்வாறு தேறி வருகிறது என்று அன்புடன் விசாரிப்பார். அன்றைய நடைமுறைகளுக்கான சில யோசனைகளைக் கூறுவார். பாராசூர் சாஸ்திரி இயற்றியுள்ள வடமொழிக் கவிதைகளைக் கூறக் கேட்பார். அதன்பின் நகைச்சுவையுடன் ஏதேனும் சொல்லிப் புன்னகையுடன் விடைபெறுவார்.

பாபுவின் அண்டைக் குடிசைக்காரரான அவரது உடல்நலம் வேகமாக முன்னேறி வந்தது. பாபுவுடன் அவர் இரண்டு நாட்கள் தங்க விரும்பினார்; ஆனால் அவர் இங்கு வந்து இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டன; இது மேலும் இரண்டாண்டுகள் நீடிக்கலாம். அவரது நோய் முற்றிலும் கட்டுப்பட்டுக் குணமடையும் வரையில் பாபு அவரைப் போக அனுமதிக்க மாட்டார்.

## 21. 1948 ஜனவரி 30

சுதந்திரப் போராட்டத்தின் கடைசி அத்தியாயம் சொல்லொணா இன்னல்களைக் கொணர்ந்தது. நாடு முழுவதிலும் தோன்றிய இந்து-முஸ்லிம் கலவரங்கள் காந்தியடிகளின் உள்ளத்தை மிகுந்த வேதனைக்குள்ளாக்கின. நாடு துண்டாடப் படுவதை அவர் எள்ளளவும் விரும்பவில்லை. இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் அது நல்லதல்ல என்று அவர் கருதினார். 1947-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒரு நாள் காலைப்பொழுதில் காந்தியடிகள் பட்ட மனவேதனையை, திரு தெண்டுல்கர் விரிவாகக் கூறுகிறார்:

ஜூன் மாதம் முதல் நாள் காலையில் காந்தியடிகள் வழக்கத் திற்கும் முன்னதாகவே எழுந்துவிட்டார். காலை வழிபாட்டிற்கு இன்னும் அரை மணி நேரம் இருக்கிறது. அவர்தம் படுக்கையில் அமர்ந்தவாறே மிக மெல்லிய குரலில் பேசினார். ''என்னுடைய தூய்மையான முயற்சிக்கு இப்போதுதான் சோதனை ஏற் பட்டுள்ளது. இன்று நான் தன்னந்தனியாக இருக்கிறேன். சர்தாரும், ஜவஹர்லாலும் கூட என் அரசியல் கணிப்பைத் தவறு என்று கருதுகிறார்கள். பிரிவினைக்கு இசைந்தால் தான் சமாதா னம் ஏற்படும் என்று நினைக்கிறார்கள். எனக்கு வயதாகி விட்டதால் என் கருத்து தவறு என்று நினைக்கிறார்கள். எது எப்படியிருந்தபோதிலும், காங்கிரசுக்கும் பிரிட்டிஷ் மக்களுக்கும் நான் உண்மையான, விசுவாசமான நண்பன் என்பதை நிரூபிக்க என்னுடைய கருத்தை ஏற்றுக்கொண்டாலும், நிராகரித்தாலும், நான் என் மனத்தில் பட்டதைச் சொல்லியே ஆகவேண்டும், இந்தக் காரியத்தை நாம் தவறான வழியில் செய்கிறோம் என்று, நான் தெளிவாக உணர்கிறேன். இதன் விளைவை உடனடியாக நாம் உணராமல் போகலாம். இவ்வளவு விலைகொடுத்து நாம்பெற்ற சுதந்திரத்தின் எதிர்காலம் நிச்சயமாக இருண்டதாகத்தான் இருக்கும். அந்த நிலையைப்பார்க்க என்னைக் கடவுள் உயிரோடு வைத்திருக்கக் கூடாது என்று பிரார்த்திக்கிறேன், இந்த விஷயத் தில் அனைவரும் என்னை எதிர்த்துநின்றபோதிலும் உண்மையைக் கூறும் மனோதிடத்தையும், விவேகத்தையும் இறைவன் எனக்கு அருள்வானாக!

''என் எண்ணங்களில் நான் தன்னந்தனியனாக இருப்பினும், என் உள்ளத்தினுள்ளே விவரிக்கவொண்ணாத ஆனந்தமும், புத்துணர்வும் தோன்றுவதை நான் உணர்கிறேன். இறைவனின் அருட்சோதியே எனக்கு வழிகாட்டுவதாக நான் உணர்கிறேன். நான் தனியாக நின்று என் கருத்தை வலியுறுத்திப் போராடுவதற்கு இதுதான் காரணமாக இருக்கும். மக்கள் என்னைக் காசிக்கோ, இமயமலைக்கோ சென்று ஓய்வெடுக்கச் சொல்கிறார்கள். இதனை எண்ணிச் சிரித்துக்கொண்டே நான் அவர்களிடம், 'எங்கு மக்களின் இன்னல்கள் நீக்கப்படுமோ, நசுக்கப்பட்டவர்கள் கரையேற்றப்படுகிறார்களோ, அதுதான் நான் தவம்புரியும் இமயமலை' என்று கூறுகிறேன். இந்திய மக்கள் அனைவர்க்கும் வாழ்க்கைத் தேவைகள் முழுமையாகக் கிடைக்கும் வரை எனக்கு ஓய்வு இல்லை. என்னால் பாதுஷாகானின்[1] துயரத்தைச் சகித்துக்கொள்ள இயலாது. அவரது மனத்துயர் என் இதயத்தைக் கசக்கிப் பிழிகிறது. ஆனால் நான் கண்ணீர்விட்டால் அது கோழைத்தனம் ஆகிவிடும். அந்தத் துணிச்சல்மிக்க பதான் மனமுடைந்து விடுவார்.

சிறிது இடைவெளிவிட்டு, காந்தியடிகள் தொடர்ந்து சொன்னார், ''அவர்கள் கூறுவன யாவும் சரியாக இருக்கலாம்; நான் மட்டும் இருட்டில் தனியாகத் தடுமாறிக்கொண்டிருக்கலாம் .. அதைக் காண நான் உயிரோடு இருக்கமாட்டேன். நான் அஞ்சுகின்ற அந்தத்தீமை இந்தியாவைச் சூழுமானால், அதனால் இந்திய சுதந்திரம் ஆபத்துக்குள்ளாகுமானால், இதைப்பற்றி நினைக்காமல் இந்த வயதான ஆத்மா எவ்வளவு மனவேதனைப் பட்டிருக்கும் என்பதை எதிர்காலம் அறிந்துகொள்ளும். இந்தியா துண்டாடப்படுவதற்குக் காந்தி காரணம் என்று யாரும் சொல்லாதிருக்கட்டும். ஆனால் இன்று அனைவரும் சுதந்திரத்திற்காகத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைத் தவிர வேறு வழியில்லை.''

சென்னை மாகாணத்தின் கல்வியமைச்சர் என்ற முறையில், கூட்டங்களில் கலந்துகொள்ள நான் பல முறை டில்லி சென்றிருக்கிறேன். கடைசியாக நான் காந்தியடிகளை வால்மீகி குடியிருப்பில் சந்தித்தேன். அப்போது அவர் வருத்தத்துடன் சொன்னார்: ''அவினாசி! அவர்கள் என் பெயரைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் என் கொள்கைகளைப் பின்பற்றுவதில்லை. எனக்கு

---

1. வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் காங்கிரஸ் தலைவர் கான் அப்துல் கபர்கான்.

வயதாகி விட்டதென நினைக்கிறார்கள். நான் நீண்டகாலம் உயிர் வாழ விரும்பவில்லை.'' என்னைப் போன்ற இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு உணர்ச்சியூட்டி இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகத் தங்களை அர்ப்பணிக்கச் செய்த மகாத்மாவை நான் கடைசியாகச் சந்தித்தது அதுதான்.

டில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் காந்தியடிகளுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தன. இரண்டு இனத்தவர்களிடையில் நிகழ்ந்த இடைவிடாத கலவரங்களும், படுகொலைகளும் அவர் உள்ளத்தைப் பெரிதும் பாதித்தன. பாகிஸ்தானில் இந்துக்களுக்கு எதிராக நடைபெற்ற படுகொலைகளும், தீ வைப்புச் சம்பவங்களும் அவரைப் பெரும் துயரில் ஆழ்த்தின. அவர்களின் துயர் துடைக்க அவர் அங்குச் செல்ல விரும்பினார். 'இங்குள்ள முஸ்லிம்களைப் பாதுகாக்காமல் எந்த முகத்துடன் நான் அங்குச் செல்லமுடியும்?' என்று கேட்டார். இவ்வகையான துயர நிகழ்ச்சிகளை அவரால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் நாளிலிருந்து திடீரென்று காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொள்ள முடிவு செய்தார். இந்த முடிவை அவர் 1948 ஜனவரி 12 ஆம் நாள் மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் உரையாற்றும் போது வெளியிட்டார்.

காந்தியடிகளின் இந்த அறிவிப்பைக் கேட்ட இந்திய மக்கள் அனைவரும் பெரும் அதிர்ச்சியடைந்தனர். இந்தப் பேராபத்தைத் தடுக்கத் தேவையான அனைத்து முயற்சிகளையும் உடனடியாகச் செய்யவேண்டும் என்று இந்து-முஸ்லிம் தலைவர்கள் முடிவு செய்தனர். தலைநகரில் நடைபெற்ற பெரியதொரு அமைதி ஊர்வலத்தில் உரையாற்றும் போது மௌலானா ஆசாத், தாம் காந்தியடிகளை அன்று பிற்பகலில் சந்தித்து மக்கள் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகளைக் கூறுமாறு அவரைக் கேட்டுக் கொண்டதாகக் கூறினார், இப்பயனுள்ள யோசனைகளை மக்கள் பின்பற்றினால் அது அவர் உண்ணாவிரதம் இருப்பதைக் கைவிட வழி வகுக்கும் என்றும் ஆசாத் விளக்கினார். காந்தியடிகள் தம்மிடம் நிபந்தனைகளைக் கூறியதாகவும் தெரிவித்தார். இந்த நிபந்தனைகளை அனைத்துக் கட்சித் தலைவர்களும் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்டால், தாம் உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்வதாகக் காந்தியடிகள் கூறியதையும் எடுத்துச் சொன்னார். உறுதிமொழிகளைப் பொறுப்பான தலைவர்கள் கொடுக்கவேண்டும். காந்தியடிகளுக்குப் பொய்யான உறுதி மொழிகளை நாம் அளிக்கக் கூடாது என்றும் அபுல் கலாம் ஆசாத் அக்கூட்டத்தில் எச்சரித்தார். டாக்டர் ராஜேந்திர பிரசாத்தைத் தலைவராகவும், பல்வேறு இனத்தவர்

களின் பிரதிநிதிகள் 130 பேரை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு மத்திய அமைதிக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு ராஜேந்திர பிரசாத் அவர்களின் இல்லத்தில் கூடி, காந்தியடிகள் மனநிறைவுடன் ஏற்றுக் கொள்ளும் வகையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிற்று. நகரத்தின் பல்வேறு அரசியல் அமைப்புகளின் பிரதிநிதிகளும், இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட கரோல்பாக், சப்ஜிமண்டி, பார்கஞ்ச் ஆகிய மூன்று பகுதிகளைச் சேர்ந்த அகதிகளின் பிரதிநிதிகளும் அடங்கிய குழு ஒன்று ராஜேந்திரப் பிரசாத் தலைமையில், காந்தியடிகள் கூறிய ஏழு நிபந்தனைகள் அடங்கிய பிரகடனத்தில் கையொப்பமிட்டது. இந்த உறுதிமொழியின் பேரில் காந்தியடிகள் தம் உண்ணாவிரதத்தை ஜனவரி 13 ஆம் நாள் இரவு 10.45 க்கு முடித்துக் கொண்டார்.

காந்தியடிகள் தம் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்ட செய்தியை உலகச் செய்தித்தாள்கள் அனைத்தும் சிறப்புச்செய்தியாக வெளியிட்டன. பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் சர் முகமது ஜபருல்லா கான், லேக்சக்ஸஸ் என்ற இடத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில், காந்தியடிகளின் உண்ணாவிரதம் காரணமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நட்புறவு ஏற்படவேண்டும் என்ற உணர்வு, இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அலைபோலப் பரவிக்கொண்டுள்ளது,'' என்று அறிவித்தார்,

காந்தியடிகள் உண்ணாவிரதம் இருந்தபோது அவரைக்காண நான் பிர்லா மாளிகைக்குச் சென்றேன். ஆனால் அவருக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்பதற்காக யாரையும் அனுமதிக்கவில்லை. ஆகவே அவரை நான் வெளியிலிருந்தே பார்த்து விட்டுத் திரும்பினேன். அவர் கடைசியாகத் தம்மை ஆண்டவனிடம் ஒப்படைத்து நின்ற மகிமையில் அவரைக் கண்டேன். அவர் முகத்தில் கவலையின் சுவடுகள் தெரிந்தபோதிலும் ஆழ்ந்த அமைதியும் பிரகாசமும் திகழ்ந்தன. அது தான் நான் அவரைக் கடைசியாகத் தரிசித்தது.

காந்தியடிகளின் உண்ணாவிரதம், டில்லியில் தற்காலிகமான மந்த நிலையைத் தோற்றுவித்திருந்தது. இருப்பினும் பாகிஸ்தானில் இந்துக்கள் பயங்கரமாகத் தாக்கப்பட்டதும், லட்சக்கணக்கான இந்து அகதிகள் தம் சொத்து சுகங்களை இழந்து இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்ததும் முஸ்லிம்களின் மேல் இந்துக்களுக்குக் காழ்ப்புணர்ச்சியைத் தோற்றுவித்திருந்தன. முஸ்லிம்களைப் பழிக்குப் பழி வாங்குவதிலிருந்து இந்துக்களைக் காந்தியடிகள்தான் தடுக்கிறார் என்ற கருத்தும் அவர்களிடையே

நிலவியது. இந்திய அரசாங்கம் நிறுத்திவைத்துள்ள, பாகிஸ் தானுக்கு உரிய ரொக்கப்பணத்தைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்பதும் காந்தியடிகள் தம் உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்ள விதித்த நிபந்தனைகளுள் ஒன்றாகும். இதுவும் இந்துக்களின் சினத்தை அதிகப்படுத்தியது. இதனால் தீவிர இந்தியர்கள் காந்தி யடிகளின் மேல் பகைமை பாராட்டினர். அவருடைய பிரார்த் தனைக் கூட்டத்திலும் இதைப்பற்றிச் சலசலப்பு எழுந்தது. 'காந்தி ஒழிக' என்று கோஷமிட்டனர். காந்தியடிகளின் மேல் இவர்கள் கொண்ட காழ்ப்புணர்ச்சி வளர்ந்து அவரைக் கொலை செய்யவும் சதிசெய்யப்பட்டது. ஒரு நாள் பிரார்த்தனைக் கூட்டத் தில் காந்தியடிகளைக் குறிவைத்துக் குண்டு ஒன்று வீசப்பட்டது. ஆனால் அது குறி தவறிச் சென்றதால் யாரையும் பாதிக்கவில்லை. குண்டு வீசப்பட்டதில் புகை எழுந்தது. டாக்டர் சுசீலா நய்யார், இதைக் கண்டதும் ''ஐயோ! கடவுளே!'' என்று கதறிவிட்டார். ''பிரார்த்தனைக் கூட்டத்தில் கிடைக்கும் சாவைக் காட்டிலும் வேறு சிறந்த சாவு எது இருக்கமுடியும்?'' என்று கூறி, காந்தியடிகள் அவரை அமைதிப் படுத்தினார். அப்போது அக்கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. அவர்களை அமைதியாக இருக்கச்செய்து ''அது ஒன்றுமில்லை; அமைதியாக அமருங்கள். பிரார்த்தனை தொடர்ந்து நடைபெறும்,'' என்று கூறினார். காந்தியடிகளுக்கு ஒன்றும் நேராதது குறித்து நேருவும், பட்டேலும், மற்றபல தலைவர்களும் நிம்மதியடைந்தனர். காந்தியடிகளின் அமைதி யையும், பதற்றமின்மையும் கண்ட திருமதி மவுண்ட்பேட்டன் அவரை வெகுவாகப் பாராட்டினார். ஆனால் காந்தியடிகள் அவரிடம், ''இதை ஏதோ துப்பாக்கிப் பயிற்சி என்றுதான் நான் நினைத்தேன். ஆகவே நான் பயப்படவோ, தைரியமாக இருப் பதற்கோ எதுவும் இல்லை. ஆனால் யாரேனும் என்னை நேருக்கு நேர் சுட்டு அதை அஞ்சாமல் ஏற்று ராமநாமத்தை உச்சரித்த வாறே நான் உயிர்துறந்திருந்தால் உங்கள் பாராட்டை ஏற்கும் தகுதி எனக்கு இருந்திருக்கும்,'' என்று கூறினார்.

நேருவுக்கும் பட்டேலுக்குமிடையே தோன்றியிருந்த கருத்து வேறுபாடும் காந்தியடிகளின் கவலைக்குக் காரணமாயிருந்தது. சர்தார் தம்மைக் காணவந்தபோது அவரிடம் பேசி இக்கருத்து வேறுபாட்டைத் தீர்த்துவைக்கக் காந்தியடிகள் முயன்றார். விதி சதிசெய்த நாளான ஜனவரி 30 ஆம் நாள், பிரார்த்தனைக் கூட்டத்தை, பிர்லா மாளிகையின் உட்புறம் வைத்துக்கொள்ளலாம் என்று காந்தியடிகளிடம் பட்டேல் கேட்டுக் கொண்டார். ஆனால் அதற்குக் காந்தியடிகள், ''என் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொள்ள விரும்பும் ஆயிரக்கணக்கான மக்களின் உரிமையை

நான் எவ்வாறு மறுப்பது?'' என்று கூறி அவரது வேண்டுகோளை மறுத்துவிட்டார். ''அப்படியானால் பிரார்த்தனைக்கு வருபவர் களை, போலீசார் சோதனைசெய்து அனுமதிக்கவாவது உடன் படுங்கள்'' என்று காந்தியடிகளைக் கேட்டுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. அதற்குக் காந்தியடிகள், ''வேண்டாம், நான் உயிர்வாழவேண்டுமென்று இறைவன் நினைத்தால் நான் உயிர் வாழ்வது உறுதி. ஆனால் நான் உயிர் துறக்க வேண்டுமென்று அவன் விரும்பினால் என்னை யார் காப்பாற்ற முடியும்?'' என்று கூறினார். காந்தியடிகளைக் கவனித்துக் கொண்ட அமிர்த கௌரும் மற்றவர்களும், அவருக்கு என்ன நேருமோ என்று அஞ்சிக் கண்ணீர் விட்டனர். அதற்கு அவர், ''பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி. சாவைக்கண்டு அஞ்சுபவன் கோழை. நான் இந்த உடலால் வாழவில்லை. நான் என் செய்திகளில் வாழ்கிறேன். என் செய்தியின்படி வாழுங்கள்!'' என்று கூறி விட்டுப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளச் சென்றார்.

திடீரென்று நாதுராம் கோட்சே கூட்டத்திலிருந்து வெளியே வந்தான். காந்தியடிகளைத் தொழுவதற்குக் கைகளைக் கூப்பி னான். 'தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்' என்பது போல, மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியால் ஒன்றபின் ஒன்றாக மூன்று முறை காந்தியடிகளின் மார்பில் சுட்டான். காந்தியடிகள் ''ஹரே, ராம்'' என்று கூறிக்கொண்டே கீழேசாய்ந்தார். உடனே அவர் உயிர் பிரிந்தது.

இத்துயர நிகழ்ச்சி நடைபெற்ற அதே நேரத்தில் சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் அமைச்சரவைக்கூட்டம் முடிந்து சக அமைச்சர்களும் நானும் வெளியே வந்து கொண்டிருந்தோம். நிருபர் ஒருவர் ஓடிவந்து காந்தியடிகள் சுடப்பட்ட செய்தியைக் கூறினார். அடுத்த சில நிமிடங்களில் வேறொரு நிருபர் வந்து காந்தியடிகள் அமரரானார் என்ற செய்தியைச் சொன்னார். நாங்கள் பேரதிர்ச்சியடைந்தோம். எங்கும் துயரம் சூழ்ந்தது. சென்னைக் கடற்கரையில் இருந்த அனைவரும் சென்றுவிட்டனர். விளையாட்டு மைதானங்களும் திரைப்பட அரங்குகளும் ஸ்தம்பிதம் அடைந்தன. இந்தியா முழுதும் துயரக்கடலில் மூழ்கியது. கோடிக்கணக்கான மக்கள் தங்கள் சொந்தத் தந்தையை இழந்து விட்டதுபோன்று வாய்விட்டுக் கதறிஅழுதனர். 1934 ஆண்டில் அவர் அரிஜனசேவைப் பயணம் செய்தபோது தமக்குச் சாதாரண சாவு இல்லை என்றும், துப்பாக்கிக் குண்டால் அல்லது தூக்குக் கயிற்றால் தான் தமக்குச் சாவு நேரும் என்றும் என்னிடம் கூறி யதை நான் நினைத்துப் பார்த்தேன்.

காந்தியடிகளைக் கொன்றவன் ஓர் இந்து என்று வானொலி அறிவித்தபோதிலும், முஸ்லிம்கள் தாக்கப்படுவார்கள் என்ற அச்சம் எங்கும் பரவிற்று. ஆகவே அன்று இரவில் 9-00 மணி யளவில் சென்னையில் திரு O. P. ராமசாமி ரெட்டியார் தலைமை யில் மீண்டும் அமைச்சரவை கூடி, அசம்பாவிதங்கள் நேராமல் எவ்வாறு தடுக்கலாம் என்பதைப்பற்றி விவாதித்தது.

அன்று இரவில், இதயம் துயரத்தால் நிரம்ப, தழுதழுத்த குரலில் தமக்கே உரிய பாணியில் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு நாட்டு மக்களுக்கு வானொலியில் உரை நிகழ்த்தினார்:

''நம் வாழ்க்கையிலிருந்து ஒளி மறைந்துவிட்டது. எங்கும் இருள் சூழ்ந்துள்ளது; இந்த நேரத்தில் உங்களுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை; எப்படிச் சொல்வதென்றும் தெரிய வில்லை: நம் அன்புக்குரிய தலைவர், 'பாபு' என்று நம்மால் அழைக்கப்பட்ட தேசப்பிதா இன்று நம்மிடையில்லை. நான் இப்படிச்சொல்வது ஒருவேளை தவறாகக்கூட இருக்கலாம். பல ஆண்டுகளாக நாம் அவரை எப்படிக் கண்டுவந்தோமோ அவ்வாறு இனிமேல் அவரைக் காண இயலாது. அவருடைய அறிவுரைக் காகவும், நம் மன அமைதிக்காகவும் இதுவரை நாம் அவரிடம் ஓடோடிச்சென்றதுபோல் இனிமேல் யாரிடம் செல்வோம்? எனக்குமட்டுமன்றி, இந்நாட்டின் கோடிக்கணக்கான மக்களுக்கும் இது ஒரு பேரிடியாகும். இந்தப் பேரிடியிலிருந்து உங்களைக் காப்பாற்றி ஆறுதல் அளிக்க என்னாலும் மற்ற எவராலும் இயலாது. வாழ்வின் ஒளி மறைந்துவிட்டது; இப்படிச் சொல்வது தவறு என்று நான் மீண்டும் அறிகிறேன். இத்தனை ஆண்டுக் காலமும் இந்த நாட்டை ஒளிபெறச் செய்த அந்த ஒளிவிளக்கு, மேலும் பல ஆண்டுகளுக்கும். அதற்குப் பின்னர் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கும் இந்திய நாட்டிற்கும் உலக முழுவதற்கும் ஒளி யூட்டி எண்ணற்ற இதயங்களுக்கு ஆறுதல் அளிக்கும். அந்தப் பேரொளி நிகழ்காலத்திற்கு மட்டும் உரியதான தற்காலிக ஒளி யன்று; அது உலகம் உள்ளளவும், அழியாத உண்மைகளை நமக்கு எடுத்துக்காட்டி, தவறுகளிலிருந்து நம்மைக் காப்பாற்றி வருவதற்குத் துணைபுரியும் நந்தா விளக்காகும். 'வாராது வந்த இந்த மாமணி'யைக் காப்பாற்ற நம்மால் முடியவில்லையே என்று தனிப்பட்ட மனிதன் என்ற முறையிலும், இந்த நாட்டின் ஆட்சித் தலைவன் என்ற முறையிலும் நான் மிக மிக வெட்கப்படுகிறேன்.''

தம் கண்களில் நீர்மல்க நேரு அவர்கள் மேலும் கூறினார்: ''இந்த நாட்டின் தேஜஸ் மறைந்துவிட்டது. நம் இதயங்களுக்கு ஒளியும் உணர்வும் கொடுத்துவந்த சூரியன் மறைந்துவிட்டான்.

நாம் இருட்டிலும், குளிரிலும் நடுங்கிக்கொண்டுள்ளோம். அவரை நினைத்து நாம் கண்ணீர் விடுகிறோம். அவருக்காக நாம் என்றும் கண்ணீர் விடுவோம். ஏனெனில் நாம் மனிதர்கள்; நம் ஒப்பற்ற ஆசானை நாம் மறக்க முடியாது? அவருக்காக நாம் இவ்வாறு அழுவதை அவர் விரும்பமாட்டார் என்பது எனக்குத் தெரியும். அவருக்கு மிகவும் நெருங்கியவர்கள் மறைந்தபோது அவர் கண்ணீர்விடவில்லை. அவர் எடுத்துக்கொண்ட புனிதமான பணியை நிறைவேற்ற, எதையும் தாங்கும் இதயம் அவருக்கு இருந்தது. நாம் கண்ணீர் விடுவதை அவர் கண்டிப்பார். கண்ணீர்விட்டு அழுவது, அவருக்கு நாம் செய்யும் சிறந்த அஞ்சலி ஆகாது. அவர் எடுத்துக்கொண்ட பெரும் பணியை, அதில் அவர் பெற்ற பெரும் வெற்றிகளை மனதில்கொண்டு அப்பணியை மேலும் தொடர்ந்து நிறைவேற்ற நம்மை நாம் அர்ப்பணித்துக்கொள்ளும் உறுதி மொழியை இன்று எடுத்துக் கொள்வதே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

''நமக்குப் பேரிழப்பு நேர்ந்திருக்கிற இந்தச் சமயத்தில், நாம் ஒன்றுபட வேண்டும். நமக்குள் இருக்கும் சிறுசிறு பூசல்களும், பிணக்குகளும் மறைய வேண்டும். வாழ்க்கையில் மகத்தான பெருஞ்செயல்களை நினைவில் கொள்ளவும், இதுவரை பெரும் செயல்கள் என்று நாம் நினைத்துவந்த அற்பச் செயல்களை மறந்துவிடவும் இந்தப் பேரிழப்பு நமக்கு ஓர் அறிகுறியாகும். அவர் தம் மறைவின் மூலம், வாழ்க்கையின் மகத்தான செயல்கள், என்றும் நின்று நிலைபெறும் உண்மைகள், எவை என்று நமக்கு நினைவுபடுத்தியுள்ளார். அவற்றை நாம் நினைவில் கொண்டு செயல்படுவது நம் நாட்டிற்கு நல்லது.............................. இதுவே நாம் அவருக்குச் செய்யும் சிறந்த அஞ்சலியாகும். ஜெய் ஹிந்த்!''

அடுத்த நாள் காந்தியடிகளின் பூத உடல் பெரியதோர் ஊர்வலமாக ராஜ்கட்டிற்குக் கொண்டுசெல்லப்பட்டது. இலட்சக் கணக்கான மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்த வழி நெடுகிலும் திரண்டிருந்தனர். அவரது பூத உடல் எரியூட்டப்பட்ட போது மக்கள் ஒலித்த, 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்ற ஒலி விண்ணை எட்டியது. அப்பொழுது அங்கு அவருக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்த இந்தியாவின் கடைசி ஆங்கில கவர்னர் ஜெனரலான மவுண்ட்பேட்டன் பிரபு, பண்டித ஜவகர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், டாக்டர் ராஜேந்திர பிரசாத் மற்றும் தலைவர்கள் பலர் குழுமியிருந்தனர். தற்பொழுது ராஜ்கட்டில் உள்ள, காந்தியடிகளின் நினைவுச் சின்னம் இந்திய மக்கள் மட்டு

மன்றி, உலக மக்கள் பலரும் வந்து தங்கள் அஞ்சலியைச் செலுத்தும் புனிதத் தலமாக விளங்குகின்றது.

காந்தியடிகளின் பூத உடல் தகனம் செய்யப்பெற்ற பிறகு அவரது அஸ்தி பல கலசங்களில் சேகரிக்கப்பட்டது. பின்னர் அது நம் நாட்டின் புனிதத் தலங்கள் பலவற்றிலும், புண்ணிய நதிகள் பலவற்றிலும் கரைக்கப்பட்டது. கங்கை - யமுனை சங்கமமாகும் புனிதப் பிரயாகையில், காந்தியடிகளின் அஸ்தியைப் பிரதமர் நேரு கரைத்தார். அஸ்திக் கலசங்களுள் ஒன்று சென்னை வந்தது. பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக அது ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டது, ராமேஸ்வரத்திலும், திருச்சிராப்பள்ளிக்கு அருகில் காவிரியிலும் அஸ்தியைக் கரைக்க முடிவு செய்யப்பட்டது. திரு. பக்தவத்சலம் அதை ராமேஸ்வரத்திற்குக் கொண்டு சென்றார். அஸ்தியைத் திருச்சிக்கு எடுத்துச் சென்று அதைக் காவிரியில் கரைக்கும் புண்ணியம் திரு. டி. எஸ். எஸ் ராஜனுக்கும் எனக்கும் வாய்த்தது. அஸ்திக்கலசம், திறந்த ரயில்பெட்டி ஒன்றில் வைக்கப்பட்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்டது. அதைத் தாங்கிய சிறப்பு ரயில் எழும்பூரிலிருந்து காலை 8.00 மணிக்குப் புறப்பட்டது. வழி நெடுகிலும் ரயில் பாதையின் இரு மருங்கிலும் ரயில் நிலையங்களிலும் இலட்சக்கணக்கான மக்கள் அஸ்தியைத் தரிசித்துத் தம் அஞ்சலியைச் செலுத்தக் கடலெனத் திரண்டிருந்தனர். ஆயிரக் கணக்கானோர் தம் துயரத்தை அடக்க முடியாமல் கண்ணீர்விட்டுக் கதறினர். நாங்கள் இரவு 11.00 மணியளவில் திருச்சியை அடைந்தோம். அங்கு அஸ்திக்கலசத்தை வைக்க மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மேடை அமைக்கப்பட்டிருந்தது. இரவு முழுதும் பஜனைப் பாடல்களும், 'ரகுபதி ராகவ' நாமாவளியும் பாடப்பட்டன. அடுத்த நாள். ஐந்து மைல் தொலைவில் உள்ள காவிரி ஆற்றுக்கு அஸ்திக் கலசம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அதைத் தலையில் சுமந்து செல்லும் புண்ணியம் எனக்குக் கிட்டியது. காவிரிக் கரையில் மனிதக் கடல் ஒன்று காத்திருந்தது. அவர்கள் தங்கள் அஞ்சலியைச் செலுத்தி, 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்று ஒலித்த முழக்கம் விண்ணை எட்டியது. என்னிடமிருந்து அஸ்திக் கலசத்தைத் திரு. டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் பெற்று, அஸ்தியுடன் சந்தனத்தைக் கலந்து அதனைப் புனிதக் காவிரியில் கரைத்தார்.

இந்த நூற்றாண்டில் மனித சமுதாயத்தின் சேவைக்காகத் தம் உயிரையே தியாகம் செய்த உலக மகா உத்தமரின் இவ்வுலக வாழ்வு இவ்வாறாக நிறைவுற்றது.

# 22. இந்தியா ஒன்றுபடுதல் அல்லது இந்திய சுதேச அரசுகளின் இணைப்பு

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ஆம் நாள் இந்தியா சுதந்திரம் பெற்றதும் மிகப்பெரும் சிக்கலான பிரச்னை ஒன்றை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நம் நாட்டின் எதிர் காலத்தின் நலனைப் பெரிதும் பாதிக்கவிருந்த அப்பிரச்னை நம் ராஜதந்திரத்திற்கு ஒரு சவாலாக இருந்தது. சுதந்திரம் அடைந்த போது நாட்டில் நிலவிய அரசியல் நிலைமையை நினைவில் கொண்டுவருபவர்களுக்கு, அந்தப் பிரச்னை எவ்வளவு சிக்கலானது என்பது தெரியும்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த மாநிலங்களும், மன்னர்களால் ஆளப்பட்டு வந்த சுதேச அரசுகளும் அடங்கியிருந்தன. பிரிட்டிஷின் நேரடாட்சியின் கீழ் இருந்த மாநிலங்களை இந்திய ஆட்சியில் கொண்டுவருவதில் எந்தவிதமான சிக்கலும் இருக்கவில்லை. ஆனால் ஏறக்குறைய 556 சுதேச அரசுகள் தனிப்பட்ட அரசர்களால் ஆளப்பட்டு வந்தன. இவை சுய அதிகாரம்பெற்ற பகுதிகளாக இருந்தன. சுதந்திரம் பெற்றவுடன், இந்தச் சுதேச அரசுகள் தங்கள் விருப்பப்படி இந்திய அரசுடனோ, பாகிஸ்தானுடனோ தங்கள் விருப்பம்போல் இணைந்து கொள்ளலாம் அல்லது சுதேச அரசுகளாகவே இருந்து கொள்ளலாம் என்று பிரிட்டிஷ் அரசு அறிவித்துவிட்டது. இந்தியாவின் அரசியல் நிலைமை இவ்வாறு இருந்தது. அதனால் சில சுதேச அரசுகள் தங்களுக்குள் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டு காமன்வெல்த் அமைப்புடன் இணைய விரும்பின. ஜுனாகத், ஹைதராபாத் போன்ற சில சுதேச அரசுகள் பாகிஸ்தானுடன் இணைய விரும்பின. இவற்றைப் பாகிஸ்தானுடன் இணைய விட்டிருந்தால், அது இந்தியாவை எந்த அளவுக்குப் பாதித்திருக்கும் என்று கற்பனை செய்து பார்ப்பதும் கடினம்! இது நிகழ்ந்திருந்தால் இந்தியாவின் அரசியல், பொருளாதாரம்,

நிர்வாகம் ஆகியவற்றில் அளவற்ற சிக்கல்கள் தோன்றியிருக்கும். இந்தியாவின் நேராட்சியின் கீழ் வரும் பகுதிகள், பாகிஸ்தானின் ஆட்சிக்குள் வரும் பகுதிகள், காமன்வெல்த் அமைப்புடன் நேரடியாக இணைய விரும்பும் சுதேச அரசுகள், சுய ஆட்சிபெற்ற சுதேச அரசுகள் என்று பலபிரிவுகளாக இந்தியா பிரிக்கப்பட்டால், அது ஓர் உயிரைச் சித்திரவதை செய்வதை ஒத்தது என்பதை நினைக்க நெஞ்சம் நடுங்குகின்றது. இவ்வாறு இந்தியாவைப் பல பிரிவுகளாகத் துண்டாடுவது, எதிர்காலத்தில் தொடர்ந்த உட்பூசல்களுக்கு வழிவகுத்து இந்தியாவை நாசத்திற்கு இட்டுச்செல்லும் உள்நாட்டுப்போர்களில் முடிவடையும். ஆனால் இவ்வளவு பெரிய சவாலை ஏற்றுச் செயல்படுத்தக்கூடிய ராஜதந்திரம், அறிவுடைமை, மன உறுதி, அஞ்சாமை ஆகியவற்றை ஒருங்கே தம்மிடம் கொண்டிருந்த இரும்பு மனிதர் ஒருவர் நம்மிடையே இருந்தார். அவர்தான் சர்தார் வல்லபாய் பட்டேல்.

இந்திய சுதேச அரசுகள் பணக்கார அரசர்கள், மகாராஜாக்கள், நவாப்புகள், பிரபுக்கள் ஆகியோரால் ஆளப்பட்டுவந்தன. தங்களுக்கு இருந்த பரம்பரை அதிகாரத்தால் அவர்கள் தங்கள் சுதேச அரசின் மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர். இந்த 556 சுதேச அரசுகளிலும் பொறுப்பான அரசாங்கம் என்பது ஒரு சிலவற்றில் மட்டுமே இருந்தது. அந்த அரசுகளால் அரசரே அனைத்து அதிகாரங்களையும் பெற்றவராக இருந்தார். குஜராத், கத்தியவார் ஆகிய பகுதிகளில் மட்டும் பெரியனவும், சிறியனவுமாக 323 சுதேச அரசுகள் இருந்தன. இவ்வாறு சிதறிக்கிடந்த இத்தனைச் சுதேச அரசுகளையும் ஒருங்கிணைப்பது உலக வரலாற்றிலேயே காணவியலாத மிகப்பெரிய சவாலாக இருந்தது. இந்த அரசுகளின் அரசர்களை நேரில் சந்தித்து அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி இந்தியாவுடன் இணைவதற்கு அவர்களை இசையவைத்தது பட்டேலின் ஈடு இணையற்ற அற்புதச் சாதனையென்றே சொல்லவேண்டும். நிலைதவறாத நிதானத்துடன் ஆனால் வேகமாகவும், படிப்படியாகவும் அனைத்துச் சுதேச அரசுகளையும் இரண்டரை ஆண்டுக் காலத்திற்குள் இந்தியாவுடன் அவர் இணைத்தார்.

இடைக்கால அரசு பொறுப்பேற்றவுடன் நாட்டின் நிலைமைகளை நன்கு புரிந்துகொண்டு மாநிலங்களின் துறை ஒன்றைத் தம் உள்நாட்டு அமைச்சகத்தில் தோற்றுவித்தார். சுதேச அரசர்களைத் தம் நம்பிக்கைக்கு உரியவர்களாக்கி அவர்களை இந்திய யூனியனுடன் இணையச்செய்து ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்க விரும்பினார் அவர். இந்தப் பிரச்னையை அவர் மிகுந்த ராஜ

தந்திரத்துடன் அணுகினார். சுதேச அரசர்களின் நாட்டுப்பற்றை அவர்களிடம் எடுத்துக்கூறி அவர்களிடம் பிரச்னையைத் தெளிவாக விளக்கி இப்பெரும் சாதனையைச் செய்ய வேண்டியிருந்தது. தம் அமைச்சகத்தின் கீழ் 'மாநிலங்களின் துறை (States Department)' பொறுப்பேற்ற 1947 ஜூலை 5-ஆம் நாளன்றே சுதேச அரசர்களுக்குக் கீழ்க்கண்ட கடிதத்தை அனுப்பினார்:

''அரசியல் நிலையில் நாடு துண்டாடப்பட்டுச் சிதறிக் கிடந்ததும், அதனால் நாம் ஒன்றுபட்ட கருத்துடன் செயல்பட இயலாதிருந்ததுமே நாம் பல வெளிநாட்டுப் படையெடுப்புகளுக்கு ஆளாகி இறுதியில் அடிமைப்பட்டோம் என்பது வரலாறு நமக்குக் கற்பிக்கும் பாடம். நமக்குள் இருந்த உள்நாட்டுப் பூசல்களும், பொறாமையுமே பழைய காலத்தில் வெளிநாட்டுப் படையெடுப்புகளுச்குக் காரணமாகும். இத்தகைய தவறுகளை நாம் இனி மேலும் செய்து அந்நியரின் வலையில் விழக்கூடாது. நாம் சுதந்திரம் பெற்றுவிட்டோம். நாம் நமது ஐக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்ளவில்லை என்பது உண்மை. இந்தியாவின் சில பகுதிகள் இந்தியாவிலிருந்து தனியாகப் பிரிந்து தங்கள் சொந்த அரசாங்கத்தை அமைத்துக்கொள்ள விரும்புவது நமக்கு ஏமாற்றத்தையும், கவலையையும் அளிக்கின்றது. இந்தப்பிரிவு நேர்ந்த போதிலும் அடிப்படையான பண்பாடு மற்றும் உணர்வுகளின் ஒருமைப்பாடு நம்மை ஆட்கொள்ளும் என்பதில் ஐயமில்லை. இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்கள் தங்களின் புவியியல் அமைப்பின் ஒருங்குபட்ட தன்மை, பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் அரசியல் ஆகியவற்றின் ஒருமைப்பாடு ஆகியவற்றின் காரணமாக இந்தியாவின் மற்றப் பகுதிகளுடன் கூட்டுறவுடனும், நட்புறவுடனும் தங்கள் தொடர்பினை வலுப்படுத்திக் கொள்ளும் என்பதிலும் ஐயமில்லை. இந்த மாநிலங்களின் பாதுகாப்பும், கட்டுக்கோப்பும், இந்தியாவின் பாதுகாப்பும், கட்டுக்கோப்பும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு இடையே உள்ள ஒற்றுமையையும் கூட்டுறவையும் பொறுத்தே அமையும். சிதறுண்டு கிடந்த இந்தியச் சுதேச சமஸ்தானங்களை இணைக்கும் தம் புதிய பணியைச் சர்தார் மிகவும் ராஜதந்திரத்துடன் நிறைவேற்றத் தொடங்கினார். நாட்டில் தோன்றியுள்ள குழப்பமான சூழ்நிலையை நீக்கப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இந்திய அரசுக்கும், சமஸ்தானங்களுக்குமிடையே அரசியல் அடிப்படையிலான ஓர் இணைப்பை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாயிற்று. ஆகவே எளிமையானதும், அனைவரும் ஒப்புக் கொள்ளக் கூடியதுமான சிறந்த திட்டம் ஒன்றைச் சர்தார் வெளியிட்டார். அதன்படி, பாதுகாப்பு, வெளிநாட்டியல், செய்தித் தொடர்பு ஆகிய மூன்று துறை

களில் மட்டும் சுதேச சமஸ்தானங்கள் இந்திய அரசுடன் இணைந்தால் போதும்; ஏனெனில் இம்மூன்றிலும் தான் நாட்டின் பொது நலன் அடங்கியுள்ளது. ஆகவே நிதர்சனமான முறையில், பொறுப்புள்ள வகையில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. இறுதியில் இருதரப்பாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. பதினைந்து நாட்களுக்குள் இதில் பல சமஸ்தானங்கள் கையொப்பமிட்டன.

இந்தியாவின் இணைப்பு வடமாநிலங்களில் சுமுகமாகவும் வெற்றிகரமாகவும் நடந்து வந்தபோது ஹைதராபாத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் சென்னை மாகாண அமைச்சர்களைப் பெரிதும் பாதித்தன. ஹைதராபாத் நிஜாம் பாகிஸ்தானுடன் இணைய விரும்புகிறார் என்று பரவலாகப் பேசப்பட்டது. அதற்கு அனுமதித்திருந்தோமானால் அது தென்னிந்தியாவின் இதயத்தில் ஆறாத ஒரு புண்ணாகவே இருந்திருக்கும். 'ரசாக்கர்கள்' என்ற பெயரில் தீவிர முஸ்லீம்களும், நிஜாம் போலீஸ் மற்றும் ராணுவத்தினரும் ஒன்றுமறியாத அப்பாவிப் பொதுமக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள்மேல் கண்மூடித்தனமாக கொடுமைகளையும் அட்டூழியங்களையும் நடத்திக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வந்த வண்ணமிருந்தன. இந்த அக்கிரமங்கள் சென்னை மாகாணத்தின் எல்லைப்புறக் கிராமங்களிலும் நிகழ்ந்தன. இந்த நிகழ்ச்சிகள் எங்களுக்குப் பெரும் கவலையைத் தந்தன. நம் எல்லையைப் பாதுகாத்துக்கொள்ள எங்களுக்கு உடனடியாக ராணுவம் தேவைப்பட்டது. பிரதமர் நேருவையும், உள்துறை அமைச்சர் பட்டேலையும் சந்தித்து உடனடியாக ராணுவத்தை அனுப்புமாறு கேட்டுக் கொள்ள, அப்பொழுது முதலமைச்சராக இருந்த திரு O. P. ராமசாமிரெட்டியார் டில்லிக்கு என்னை அனுப்பி வைத்தார். சர்தாரை என்னால் சந்திக்க இயலவில்லை; ஆனால் நான் பிரதமரைச் சந்தித்து நம் தேவைகளைக் கூறினேன். உள்துறை அமைச்சரைத் தாம் கலந்துபேசி ஆவன செய்வதாக அவர் உறுதியளித்தார்.

ஆனால் உடனடியாக நமக்கு உதவி வந்தது. மைசூர், உட்பட மற்ற அனைத்து மாநிலங்களைப்பற்றிய பிரச்னைகளைத் தீர்த்து அவற்றை இணையச் செய்தபின், ஹைதராபாத் பிரச்னையை அணுகினார். அச்சமஸ்தானத்தின் மேல் போலீஸ் நடவடிக்கை எடுத்து ராணுவத்தை அனுப்பினார். ராணுவம் தீவிரமாகச் செயல்பட்டு, இரண்டே நாட்களில் நிஜாமை அடிபணியச் செய்து இப்பெரிய பிரச்சனைக்குத் தீர்வு கண்டது. ரசாக்கர்களின் தலைவன் பாகிஸ்தானுக்கு ஓடினான்; சமஸ்தானத்தில் அமைதி நிலவிற்று.

ஹைதராபாத்தில் போலீஸ் நடவடிக்கை முடிந்தபின், 1949 பிப்ரவரி 23ல் சர்தார் பட்டேல் சென்னைக்கு வந்தார். அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. சென்னைத் தீவுத்திடலில் நடைபெற்ற பெருந்திரளான மக்கள் கூட்டத்தில், வலிமையான தோர் இந்தியாவை நிர்மாணிப்பதைப்பற்றி அவர் உரையாற்றினார்.

''நீண்டநெடும் போராட்டத்திற்குப்பின் நாம் சுதந்திரம் பெற்றுள்ளோம். ஆனால் நாம் விரும்பிய சுதந்திரமோ, காந்தி யடிகள் விரும்பிய சுதந்திரமோ இன்னும் கிட்டவில்லை.

''சுதந்திர இந்தியா இப்பொழுது தான் ஒன்றரை ஆண்டுக் குழந்தை, அதற்குத் தேவையான உணவு, உடை கொடுத்து அதைப் பாதுகாப்பாக வளர்ப்பது நம் கடமை. நாம் விரும்பும்படி நம் குழந்தையை உருவாக்கும் நல்வாய்ப்பு நமக்குக் கிடைத் துள்ளது. ஆகவே நம் நாட்டின் தேவைகளையும், நம் பொறுப்பு களையும் நாம் நன்கு உணரவேண்டும்,'' என்று நம் கடமையை வலியுறுத்தினார்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டையும் அமைதியையும் காப் பாற்ற வேண்டுமென்றும், நம் பலத்தைத்திரட்டவேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். காந்தியடிகள் காட்டிய உண்மை, அகிம்சை ஆகியவற்றின் வழி நடக்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

விவசாயத்தைச் சீர்படுத்தி உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றும், விளைச்சலின்றிக் கிடக்கும் தரிசு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றவேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்தியாவை ஒருங்கிணைத்ததில் சர்தார் பட்டேல் பெரும் வெற்றி பெற்றதற்குக் காரணம் அவரது மன உறுதிப்பாடேயாகும். அடிப்படையான விஷயங்களில் அவர் மலைபோல் நிலைகுலை யாது இருந்தார். ஆனால் அடிப்படை விஷயங்கள் அல்லாத சாதாரண விஷயங்களில் அவர் விட்டுக் கொடுக்கும் மனப்போக்கும், தாராள மனப்பான்மையும் கொண்டவராக இருந்தார்.

சமஸ்தான அரசர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் மறைந்தவுடன், இந்திய சமஸ்தானங்களின் இணைப்பு உறுதி பெறத் தொடங்கிற்று. இவ்வாறு இந்தியா ஒன்றுபட்டபின் 1950 ஜனவரி 26 ஆம் நாள் இந்தியா பரிபூர்ண சுதந்திரக் குடியரசு நாடாக மலர்ந்தது.

# 23. கல்வி அமைச்சராக......

நான் மத்தியச் சட்டசபையில் பொறுப்பு வகித்தது, எனக்கு நாடாளுமன்ற அனுபவத்தையும், அகில இந்தியக் கண்ணோட்டத்தையும் அளித்திருந்தது. சுதந்திர இந்தியாவில், சென்னை மாகாண அமைச்சரவையில் முதல் கல்வியமைச்சர் பொறுப்பை ஏற்றபோது என் பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு, மேற்கண்ட அனுபவம் எனக்கு நல்லதொரு பின்னணியாக அமைந்தது.

கல்வியில் எனக்கிருந்த நீண்டகால ஆர்வத்தின் காரணமாகவும், சுவாமி விவேகானந்தரின் கல்விக் கருத்துக்களில் நான் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாகவும், மாகாணத்தின் கல்வி முறையில் மாற்றங்கள் பல கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டேன். அப்போது வெளியாயிருந்த கல்வி பற்றிய நிர்வாக அறிக்கையிலிருந்தும், 1949 மார்ச் மாதத்தில் சட்டசபையில் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது கல்வி பற்றிய மானியக் கோரிக்கை பற்றி நான் ஆற்றிய உரையிலிருந்தும் கீழ்க்கண்ட பகுதிகளை எடுத்தாள்வது இக்கருத்துக்களைத் தெளிவுபடுத்தும்:

''கல்வி மானியக் கோரிக்கையைக் கொண்டுவரும் இச் சமயத்தில், நம்முடைய கல்வி முறையில் கொண்டு வரவேண்டிய மாற்றங்கள் குறித்துச் சில சொற்கள் கூற விரும்புகிறேன். தற்காலக் கல்வி முறையில் உள்ள குறைபாடுகள் பற்றி நம்மில் பலர் நன்கு அறிவோம். அது வெறும் ஏட்டுக் கல்வியாக மட்டுமே இருக்கிறது. மக்களை வெறும் குமாஸ்தாக்களாக உருவாக்கவே அது பயிற்சி அளிக்கிறது. குழந்தைகளிடம் தலைமைப் பண்பையும், நம்பிக்கையையும் வளர்க்க அது தவறிவிட்டது. தங்கள் வாழ்க்கைத் தேவைகளைத் தாங்களே சம்பாதித்து நிறைவேற்றிக் கொள்ளும் பயிற்சியையும், சக்தியையும் அது அளிக்கவில்லை. ஆகவே அது வாழ்க்கைக்கான கல்வியாக இல்லை. நம் குழந்தைகளிடம் நற்பண்புகளையும், உயர்ந்த இலட்சியங்களையும் வளர்த்து அவர்களை நற்குடிமக்களாக உருவாக்க அது தவறிவிட்டது. அது நம் மக்களின் உள்ளார்ந்த அறிவாற்றல்களை வளர்க்கத் தகுந்ததாய்

இல்லை என்று கல்வித்துறை நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். எனவே நம் தேவைகளுக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப நம் கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டும்''.

அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க இடைநிலைக் கல்விக்குழு, இவ்விஷயங்களை மனதில் கொண்டு இடைநிலைக் கல்வி முறையில் கொண்டு வரவேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றி ஆராய, சிறந்த கல்விமான்களைக் கொண்ட நிபுணர் குழு ஒன்றை அமைத்தது. இக்குழு, கல்விச் சீர்திருத்தங்கள் பற்றி நன்கு ஆராய்ந்து தன் பரிந்துரைகளைக் கூறியது. இந்தப் பரிந்துரைகளை மாநிலக் கல்வி ஆலோசனைக் குழு ஏற்றுக்கொண்டபின், பல்வேறு பாடங்களுக்கான பாடத்திட்டங்களை வகுக்கும் பொறுப்பு நிபுணர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இருபத்தேழு குழுக்கள் கடுமையாகப் பணியாற்றிப் பல்வேறு பாடங்களுக்கான விரிவான பாடத்திட்டங்களை வகுத்தன.

''ஆனால், வயிற்றுப்பிழைப்புக்கான பயிற்சியைக் கொடுப்பது மட்டும் கல்வியாகாது. ஓர் ஆணையோ, பெண்ணையோ பணம் சம்பாதிக்கமட்டும் உருவாக்குவது போதாது. மாணவர்களுக்குச் சமூகப்பயிற்சியும் இன்றியமையாதது. ஒரு மனிதன் நிறையப் பணம் சம்பாதிக்கலாம்; அதற்கான நுண்ணறிவு படைத்தவனாகவும் இருக்கலாம்; ஆனால் சமூக உணர்வுடன் மற்றவர்களுடன் நேயத்துடன், சேர்ந்து வாழ அவனால் இயலவில்லையெனில் அவன் வாழ்க்கையில் மகிழ்ச்சி இருக்காது. ஆகவே இத்தகைய நல்லுணர்வை அவனுக்குப் பாடவாயிலாகவும், பயிற்சி வாயிலாகவும் அளிப்பது மிக மிக இன்றியமையாதது. ஆகவே பள்ளியில், சமூக அறிவியல்களான வரலாறு, புவியியல், குடிமையியல் போன்றவற்றை வெறும் பாடங்களாக மட்டும் போதிக்காது, இவற்றில் அவன் பெற்ற ஒருங்கிணைந்த அறிவைப் பயிற்சியின் வாயிலாகவும் அளிக்கவேண்டும்.

''எந்தவொரு ஜனநாயகமும் சிறப்பாகச் செயல்படவேண்டுமென்றால், அனைத்து மக்களும், தங்களைச் சுற்றியுள்ளவர்களுடன் நட்புறவுடன் பழகுவதற்குரிய சமூக உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் நாட்டில் தங்களுக்குரிய உரிமைகளையும், கடமைகளையும் தெளிவாக அறிந்து கொள்ள உதவும் குடிமையுணர்வையும் பெற்றிருக்கவேண்டும். ஒன்றாகக் கூடிவாழ்வதும், ஒன்றாகத்திட்டமிட்டு நாட்டுக்காகப் பணிபுரிவதும் ஜனநாயகத்தின் இன்றியமையாதத் தேவையும், அடிப்படையும் ஆகும். தற்காலக் கல்வியில் இத்தகைய குடிமைப்பயிற்சி அளிப்பதற்குரிய வாய்ப்புகள் அவசியம் இருக்கவேண்டும். ஆண்களுக்கும், பெண்களுக்கும்

தனித்தனியாக அவரவர்களுக்கு உரியதான கல்வியைக் கொடுக்காததே தற்காலக் கல்வியின் மிகப் பெரிய குறைபாடாகும். பெண்களின் தேவைகளுக்கு ஏற்ப, தனியான கலைத்திட்டம் (curriculum) அமையாவிடில் அவர்களுக்குச் சிறந்த பயிற்சி அளிக்க முடியாது. இந்த நான்கு அம்சங்களும், அதாவது, வாழ்க்கைக்கான கல்வி, சமூக உணர்வினை வளர்த்தல், குழந்தைகளுக்குக் குடிமைப்பயிற்சிக்கான அறிவும் பயிற்சியும் அளித்தல், பெண்களுக்குரிய கடமைகளிலும், பொறுப்புகளிலும் பயிற்சி ஆகியவையும், அனைத்திற்கும் மேலாக, தூய்மை, பக்தி, நற்பண்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த பண்பட்ட வாழ்க்கை ஆகியவற்றுக்கான பயிற்சியுமே தற்காலக் கல்வியின் முக்கியத் தேவைகளாகும். இப்புதிய திட்டப்படி நடுநிலைப் பள்ளி வகுப்புகளில் செயல் மூலம் கல்விக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆதாரத் தொழில் ஒன்றை மையமாக வைத்து அதில் அடங்கியுள்ள பல்வேறு செயல்களையும் கல்விக்குப் பயன்படுத்துவதே இத்திட்டமாகும், இந்த ஆதாரத் தொழிலுடன், சமூக அறிவு, குடிமைப்பயிற்சி, சுற்றுலாக்கள், பள்ளிப்பிரார்த்தனைக் கூட்டங்கள் போன்ற பல்வேறு செயல்களையும் மையமாக வைத்துக் கல்வியளிக்கப்படும். இவற்றுடன், கடந்த கால்நூற்றாண்டுக் காலமாகப் பல்வேறு கல்விக் குழுக்களால் பரிந்துரைக்கப்பட்ட தொழிற்கல்வித் திட்டத்தையும் அரசு ஏற்றுக் கொண்டு, பள்ளிகளில் பொறியியல், வேளாண்மை, செயலர் பயிற்சி, போதனைப்பயிற்சி, மனையியல், கைத்தொழில, போன்ற பாடங்களைப் புகுத்தியுள்ளது.

''பெண்கள் கல்வியும் உரிய வழிகளில் திருத்தியமைக்கப்பட்டது. அவர்களது கல்வியை மேலும் பயன் மிக்கதாகச் செய்யும் நோக்கத்துடன் பெண்கள் பள்ளிகளில் மனையியல் ஒரு ஆதாரச் செயலாகப் புகுத்தப்பட்டது. மனையியல் என்பது சத்துணவு, சமையல் கலை மற்றும் இத்துடன் தொடர்பு கொண்ட பல்வேறு செயல்களுடன் குழந்தை வளர்ப்பு, நர்சிங் போன்றவற்றையும் உள்ளடக்கியதாகும். நாட்டின் உயர்ந்த பாரம்பரியத்துடன் இணைந்த, பொருத்தமான தேசீயக் கலாச்சாரப் பின்னணியுடன் இச்செயல்கள் கற்பிக்கப்பட வேண்டும்.

''திருத்தியமைக்கப்பட்ட கல்வித் திட்டத்தை முழுமனதுடன் ஏற்று அதைச் செயல்படுத்த முன்வந்துள்ள ஆசிரியர்களுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

''கல்லூரிக் கல்வியைப் பொருத்தவரை, அது முற்றிலும் பல்கலைக் கழகங்களின் பொறுப்பாகும். கல்லூரிக் கல்வியின் ஓர்-

அம்சத்தைத் தற்கால அரசுகள் அக்கறையுடன் ஏற்று நடைமுறைப் படுத்த வேண்டும். அதுதான் ஆராய்ச்சித் துறையாகும். அமைதிக் காலத்திலும், போர்க் காலத்திலும் நம் நாட்டு முன்னேற்றத் திற்கு மிகவும் துணை புரிவது அறிவியல் ஆராய்ச்சியே ஆகும். எந்த ஓர் அரசும் இதனைப் புறக்கணிக்க முடியாது. உலக நாடுகளின் தரத்திற்கு இந்தியாவின் தரமும் உயர வேண்டும். ஆகவே, உயர் கல்விக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் ஒரு சில நிறு வனங்களையாவது அமைப்பது அவசியம். இந்த நோக்கத்தை மனதில் கொண்டுதான், மாநிலக் கல்லூரியை உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமாக உயர்த்த அரசு, சர் சி. வி. இராமன் தலைமையில் நிபுணர் குழு ஒன்றை நியமித்தது. இன்னும் சில நாட்களில் அவ்வறிக்கையை இந்த அவையின் முன் வைக்க என்னால் இயலும் என்று எதிர்பார்க்கிறேன்.

''கல்வியின் மற்றொரு முக்கியமான அம்சத்தை இந்த மாகாணம் கவனிக்கத் தவறியுள்ளது. அதுதான் முதியோர் கல்வி. வயது வந்தோர்க்கு எழுத்தறிவுடன், வாழ்க்கைக்கான அறிவைப் பெறும் கல்வியையும் அளிக்க வேண்டும். இந்த வாய்ப்புகளை அவர் களுக்கு அளிக்க நல்லதொரு திட்டத்தை அரசு வகுத்துள்ளது. இத்திட்டத்தின்படி முதியோர் எழுத்தறிவுப் பள்ளிகள் தொடங்கப் பட்டுள்ளன. இந்திய அரசு வயது வந்தோர் கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டு, 'சமூகக் கல்வி' என்ற புதிய பெயரில், நடவடிக்கைகள் எடுக்க ஆர்வம் கொண்டுள்ளது என்ற மகிழ்ச்சி யான செய்தியை இந்த அவையில் கூற விரும்புகிறேன்.

''உடல் ஊனமுற்றோர்க்கும், மனவளர்ச்சி குன்றியவர்களுக் கும் தனிப்பட்ட கல்வியளிக்க அரசு ஆவன செய்து, அதன் தொடக்க மாக மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பள்ளி ஒன்றையும் திறக்க உள்ளது. கல்வியுலகில் வெளிவந்துள்ள புதிய கருத்துக் களை ஆசிரியர்களிடையே பரப்பவும் அவற்றில் அவர்களுக்குரிய பயிற்சி முறைகளை எடுத்துக் கூறவும், வழிகாட்டி நூல்கள் (Guide Books) தயாரித்து வெளியிடவும், அதற்கெனச் செய்திமடல் ஒன்று வெளியிடவும் அரசு முயல்கின்றது.

''இதுவரை எனக்கு அளித்துவந்த ஆக்கபூர்வமான யோசனை களுக்கு நான் இந்த அவைக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக் கிறேன். எந்த ஒரு கல்வித் திட்டமும் வெற்றிகரமாக நிறைவேற் றப்படவேண்டுமென்றால், அதற்கு வீடு, பள்ளி, சமுதாயம் ஆகிய வற்றின் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது. இத்தகைய ஒத்துழைப்பை நல்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.''

இந்த மானியக் கோரிக்கைபற்றி ஒருநாள் முழுதும் விவாதம் நடைபெற்றது. இறுதியாக மாலை 6.00 மணிக்கு, பதிலுரை ஆற்றுமாறு நான் அழைக்கப்பட்டேன். அப்பதிலுரையில் சில பகுதிகள்;

''மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே! இந்த விவாதத்தில் கலந்து கொண்ட நண்பர்கள் பலருக்கும் நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன்.

''ஆதாரக் கல்வியை நடைமுறைப்படுத்துவது இயலுமா என்ற ஐயத்தை நீக்க நான் விரும்புகிறேன். வெறும் தொழில் மட்டும் ஆதாரக் கல்வியாகாது; தொழில் வாயிலாக அனைத்தையும் கற்பித்துவிட முடியும் என்று ஆதாரக் கல்வி கருதவில்லை. ஆதாரத் தொழிலில் அடங்கியுள்ள பல்வேறு செயல்களின் மூல மாக மட்டுமன்றி, பள்ளி, வீடு, சமூகம், விளையாடுமிடம் போன்று மாணவனின் வாழ்க்கையோடு தொடர்புடைய அமைப்புக்களின் பல்வேறு செயல்களின் மூலமும் கல்வியறிவை அளிப்பதே ஆதாரக் கல்வியாகும்.

''வேறொரு முக்கியமான விஷயத்தைப் பற்றியும் எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக் கூற மற்ற உறுப்பினர்கள் அதை விரிவாகக் கூறினார்கள். நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கான அரசின் கொள்கையைப் பற்றி அவர்கள் கூறினார்கள். நிதி உதவி பெறும் நிறுவனங்களை அரசு ஊக்குவிக்க வேண்டும் என்று அவர்கள் எடுத்துரைத்தனர். இதை நான் முற்றிலும் ஒப்புக்கொள் கிறேன்.

''இப்பொழுது நான் சமய போதனை பற்றிக் கூற விரும்பு கிறேன். இந்தக் கருத்தைப் பற்றியும் அவையில் விவாதம் நடை பெற்றது. உண்மையான சமயம்தான் ஒரு மனிதனின் மிக உயர்ந்த பண்பாட்டைப் பிரதிபலிக்கிறது. அனைவரிடமும் அன்பும், மரியாதையும் காட்டுவதே உண்மையான சமயம் ஆகும்.

''அனைத்துச் சமயங்களின் அடிப்படையும் ஒன்றே. இந்த அடிப்படையிலேயே நாம் ஓர் ஒழுக்க நெறியை வகுக்க வேண்டும். நீதி போதனையைக் குழந்தைகளுக்கு அளிப்பது நம் அரசியல் சாசனத்திற்கு முரணானது ஆகாது. பள்ளிகளில் நீதி போதனை அளிப்பது பற்றி இந்த அவையின் உறுப்பினர்கள் கூறும் கருத்துக் களை அரசு பணிவுடன் ஆராய்ந்து ஆவன செய்யும்.''

சென்னை அரசாங்கத்தின் கல்வி நிர்வாகம் பற்றிய 1947-48 ஆம் ஆண்டு அறிக்கையில் பின்வருபவை குறிப்பிடப்பட்டுள்ளன:

1. கல்விச் சீரமைப்பின் முக்கிய அம்சங்கள்:

 1. ஆதாரக் கல்வித் தத்துவத்தின் அடிப்படையில், நடுநிலைப் பள்ளிகளில் ஆதாரத் தொழில்களைப் புகுத்தல். எதிர்காலத்தில் தொழிற் பள்ளிக்குச் செல்ல விரும்பும் மாணவர்களுக்கும், அல்லது தொழிலில் ஈடுபட விரும்பும் மாணவர்களுக்கும் இதனால் தொழிற்பயிற்சி கிட்டும்.

 2. குடிமைப் பயிற்சியைப் பள்ளிகளில் கொண்டு வருதல். இப்புதிய பயிற்சியின் மூலம் சாரணர் பயிற்சியின் பல அம்சங்களுடன், மாணவர்களிடம் நம்பிக்கை, நற்பண்புகள் ஆகியவற்றையும் வளர்ப்பது.

 3. சமூக அறிவியல் என்ற பாடத்தைப் புகுத்துதல்: வரலாறு, புவியியல், குடிமையியல் ஆகிய பாடங்களைத் தனித்தனியே போதிப்பதைத் தவிர்த்து, இம்மூன்று பாடங்களையும் இணைத்துச் சமூக அறிவியல் என்ற பாடமாகக் கற்பித்தல்.

 4. பெண்கள் பள்ளிகளில் மனையியல் பாடத்தைப் புகுத்துவதன் மூலம் அவர்களுக்குரிய பயிற்சியைப் பயன்மிக்கதாக ஆக்குதல்.

 5. உயர்நிலைப் பள்ளிகளில் தொழில் பாடப் பிரிவுகளைத் தொடங்குவதன் மூலம் தொழில்களில் ஆர்வம் உள்ள மாணவர்களுக்கு அவற்றைப் பயிலும் வாய்ப்பு அளித்தல். பொறியியல், செயலர் பயிற்சி (Secretarial work) விவசாயம், மனையியல், ஓவியம், இசை, நடனம் போன்ற பல்வேறு தொழில்களும், கலைகளும் தொடங்கப்பட்டன. தொடக்க நிலையாக ஒரு சில பள்ளிகளில் மட்டும் இவை புகுத்தப்பட்டன.

 6. ஒவ்வொரு பகுதியின் வட்டார மொழியும் பள்ளிகளில் முதல் மொழியாக ஆக்கப்பட்டது. இந்துஸ்தானி, வடமொழி (சமஸ்கிருதம்), அரபு, பாரசிகம் போன்ற மற்ற இந்திய மொழிகளுள் ஒன்று, இரண்டாவதாக ஆக்கப்பட்டது. மூன்றாவது மொழியாக ஆங்கிலம் இடம் பெற்றது.

2. ஆசிரியர்களின் நிலையை உயர்த்துதல் :

எந்த ஒரு திட்டத்தின் வெற்றியும் அதைச் செயல்படுத்துகின்றவர்களின் நிலையைப் பொருத்தே அமையும். இவ்வுண்மை

யை மனதிற் கொண்டு அரசு, கல்விச் சீரமைப்புச் செய்தபோது ஆசிரியர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்களின் நிலையை உயர்த்தவும் திட்டம் வகுத்தது. அனைத்து நிலைகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டது. நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளின் மானியத்தை அரசு உயர்த்திற்று. ஆசிரியர்களுக்கான ஊதியங்களை ஒவ்வொரு மாதம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அகவிலைப்படி உயர்வு ஆசிரியர் களுக்கு வழங்கவும், அவர்கள் தனிப்பட்ட முறையில் தேர்வுகள் எழுதி, தங்கள் கல்வித் தகுதிகளை உயர்த்திக் கொண்டு, அவற்றுக்கு ஏற்பப் பணி உயர்வு பெறவும் (உ.ம். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்களாகவும், இடைநிலை ஆசிரியர்கள் கல்லூரி ஆசிரியர்களாகவும்) வாய்ப்புகள் அளிக்கப் பட்டன. நிதி உதவி பெறும் பள்ளிகளிலும், உள்ளாட்சி நிறு வனங்கள் நடத்தும் பள்ளிகளிலும் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களுக்கும் பணி உயர்வுக்கான வாய்ப்புகள் அளிக்க இளநிலை கல்வித்துறை ஆய்வாளர்கள் பணியில் 40% ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நிதி உதவி பெறும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களின் ஊதிய விகிதங்கள், உள்ளாட்சி நிறுவனங் கள் நடத்தும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் ஊதியங்களு டன் ஒத்திருக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்து, இதுவரை நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு அளிக்கப்பட்ட இரண்டில் ஒரு பங்கு மானியத்தை, மூன்றில் இரண்டு பங்கு மான்யமாக உயர்த்தியது. தனியார் பள்ளிகளில், நிர்வாகத்துடன் ஆசிரியர்கள் செய்து கொள்ள வேண்டிய ஒப்பந்தப் படிவத்திலும் சில மாறுதல்களைச் செய்து, அவர்களின் பணிப் பாதுகாப்புக்கு அரசு உரியன செய்தது. அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வின் விகிதம், அனைத்துத் தனியார் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் களுக்கும் பொருந்தும் என அரசு அறிவித்தது. அத்துடன் உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்களாக நியமிக்கப்படும் வாய்ப்பும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

3. நூலகச் சட்டம் :

வயது வந்தோர் கல்விக்குரிய முக்கியச் சாதனங்களுள் ஒன்றாக, மாநிலம் முழுவதும் பரவலாக நல்ல நூல் நிலையங்களை அமைக்க, நூலகச் சட்டம் ஒன்றை அரசு இயற்றிற்று. ஆங்காங்கே உள்ளாட்சி அமைப்புக்களால் தொடங்கி நடத்தப்படும் நூலகங்களுக்கு அரசு நிதி உதவி அளித்து ஊக்குவிப்பதும் அரசின் நோக்கமாகும்.

சென்னை அரசாங்கக் கல்வித் துறையின் வரலாற்றிலேயே முதன்முறையாக, உள்ளாட்சிப் பள்ளிகளிலிருந்தும், நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகளிலிருந்தும், மொத்தம் 12 ஆசிரியர்கள் இளநிலை கல்வித்துறை ஆய்வாளர்களாக 1949 மார்ச் மாதத்தில் நியமிக்கப்பட்டனர்.

4. *வயது வந்தோர் கல்வி:*

வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற கொள்கையை நம் அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொண்டுள்ளோம், அதற்கேற்ப நம் நாட்டின் வயது வந்தோர் அனைவர்க்கும் கல்வி யளிப்பதும் மிகவும் அவசியம். இதற்கென இதுவரையிலும் திட்ட மிட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. வயது வந்தோர் கல்வியை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்:

1. வயது வந்தோர் எழுத்தறிவுப் பள்ளிகள்
2. வயது வந்தோர்க்கான கல்வி நிறுவனங்கள்
3. நூல் நிலையங்களை அமைத்தல்

இந்த மூன்று பிரிவுகளையும் அரசு ஏற்றுக்கொண்டு மாநில முழுதும் வயது வந்தோர் பள்ளிகளைத் திறக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கென, வயது வந்தோர் கல்வி அலுவலர் ஒருவரும் நியமிக்கப் பட்டுள்ளார். வயது வந்தோர் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் களுக்குத் தனிப்பட்ட பயிற்சி அளிப்பதற்காகப் பயிற்சிப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன.

மாநில முழுதும் கிராமியக் கல்லூரிகளைத் தொடங்கவும் இத்திட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. ஆண்கள், பெண்கள் ஆகியோரின் தேவைக்கு ஏற்பக் கிராமியக் கல்லூரிகள் இரண்டு வகையாக அமையும். இதில் பயில்பவர்களுக்கு இரண்டாண்டுப் படிப்பிற்குப் பின் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப் பெறும். மாநில முழுதும் இத்தகைய கல்லூரிகள் அதிகம் தொடங்கப்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு அரசு இவற்றை நிதி உதவி பெறும் திட்டத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது.

5. காட்சிக் கருவிகள் மூலம் கல்வி:

பொதுக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் மத்தியத் திரைப்பட நூலகம் ஒன்று திறக்கப்படுகிறது.

6. தேசிய மாணவர் படையின் இளநிலைப் பிரிவு :

இந்த ஆண்டிலிருந்து செயல்படும் வகையில் மாநிலத்தில், தேசிய மாணவர் படையின் இளநிலைப் பிரிவு தொடங்க அனுமதி

அளிக்கப்பட்டுள்ளது. இருபத்தொரு பிரிவுகளும், இரண்டு துணைப் பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டு, மா நிலத்தில் 35 பள்ளிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டன.

7. அரசவைக் கவிஞர் நியமனம்:

1949 ஆகஸ்ட் 14 ஆம் நாள் நடைபெற்ற அரசுப் பொது விழா ஒன்றில் கீழ்க்கண்டவர்களுக்கு அரசவைக் கவிஞர் விருது வழங்கப்பட்டது.

(i) நாமக்கல் கவிஞர் திரு. வி. இராமலிங்கம்பிள்ளை- அரசவைக் கவிஞர்—தமிழ்

(ii) மகாகவி வள்ளத்தோல் நாராயணமேனன்-அரசவைக் கவிஞர்—மலையாளம்.

8. கல்வி இதழ்:

'புதிய கல்வி' என்ற கல்வி இதழை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கல்வித்துறை வெளியிடுகிறது. லேடி வெல்லிங்டன் பயிற்சிக் கல்லூரி முதல்வர் இதற்கு ஆசிரியராக உள்ளார்.

9. தமிழ் மற்றும் பிற வட்டாரமொழிகளை வளர்க்க அரசு எடுத்துள்ள முயற்சிகள்:

(a) ஆறாம் வகுப்பிலிருந்து தமிழ்ப் பாடத்திட்டத்தில் திருக் குறளைப் பாடமாகப் புகுத்துதல்,

(b) தேசீயக் கவி சுப்பிரமணி பாரதியாரின் இலக்கியங்களின் பதிப்புரிமையை வழங்குதல். இதன் மூலமாக நாட்டு மக்கள் அவற்றைப் பரவலாகப் பயன்படுத்தும்படி அவற்றை நாட்டுடைமை ஆக்குதல்.

(c) நம் மாநிலத்தின் தமிழ் மற்றும் இதர மொழிகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் பணிநிலை, ஊதியம் ஆகிய வற்றை ஆங்கிலம் மற்றும் பிறபாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களின் பணிநிலை, ஊதியம் ஆகியவற்றுடன் சரிசமமாக்குதல்.

(d) சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ், மற்றும் இதர மொழிகளுக்குப் பேராசிரியர் பதவிகளை ஏற்படுத்துதல்.

(e) பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாநில மொழிகளைப் பயிற்று மொழியாக ஆக்குதல்.

(f) ஆங்கில மொழியில் உள்ள கலைக் களஞ்சியம் போன்று தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் கலைக் களஞ்சியங் களை உருவாக்க அரசு உதவுதல்.

# 24. தமிழ்க் கலைக்களஞ்சியம்

சிறு வயதிலிருந்தே எனக்கு நாட்டுப்பற்றுடன், என் தாய் மொழியான தமிழ் மீதும் ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. தமிழ் மொழி, இலக்கிய வளம் செரிந்தது. திருக்குறள், சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம் மற்றும் சைவ, வைணவ பக்தி இலக்கியங்கள் என்றும் சாகா வரம் பெற்றவை; ஈடு இணையற்றவை; ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக எண்ணற்ற மக்களின் இதயங்களை நல்லுணர்வுகளால் நிரப்பி வருபவை. இருப்பினும் தற்கால நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்பத் தமிழ் ஒரு சிறந்த நவீன அறிவியல் மொழியாகவும் வளர்வது இன்றைய தேவையாயுள்ளது. இதனால் சாதாரண மக்களும், பல்வேறு அறிவுத்துறைகளின் கருத்துக் களைத் தங்கள் தாய்மொழியிலேயே அறிந்து கொள்ள முடியும். இந்த எண்ணம்தான், தமிழில் கலைக்களஞ்சியம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வத்தை எனக்கு அளித்தது.

ஆங்கிலக் கலைக்களஞ்சியத்தின் அமைப்பில் இதனை உரு வாக்க வேண்டுமென்றால் அது மிகப்பெரும் பணியாகும். கீழ்க் கண்ட குறிப்புக்களை அறிந்தால் அது எவ்வளவு பெரிய முயற்சி என்பதை நாம் உணரமுடியும்:

1) நன்கு திட்டமிட்டு உருவாக்கப்படும் கலைக்களஞ்சியத்தில் மனிதனின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சாதனைகள் பற்றிய முக்கியக் கருத்துக்களுடன், அவன் வாழும் இவ்வுலகம், இந்த அண்டம் சம்பந்தப்பட்ட விஷயங்களும் அடங்கியிருக்க வேண்டும். இந்த நோக்கம் நிறைவேற அனைத்துக் கலைகள், அறிவியல் துறைக் கருத்துக்களும் அதில் இடம் பெற வேண்டும். தவிர, இவை அனைவர்க்கும் புரியும் நடையில் எழுதப்பட வேண்டும். குறைந்த விலையிலும் கிடைக்க வேண்டும்.

2) அறிஞர்கள், வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், நூலகர் கள், பதிப்பாசிரியர்கள், கல்வியாளர்கள், கலைஞர்கள், தேசப்படத் தயாரிப்பாளர்கள் போன்ற பலரின் கூட்டுழைப்பாலேயே கலைக்

களஞ்சியத்தை உருவாக்க இயலும். அதை உருவாக்கி வெளியிடுவதற்கு மிகப்பெரிய முதலீட்டுத் தொகை அவசியம்.

3) கலைக்களஞ்சியத்தை உருவாக்கி வெளியிடுவோர்க்கு, அதில் என்னென்ன விஷயங்கள் இடம் பெறவேண்டும்? அவை பற்றி எழுதப்படும் கட்டுரைகளின் தரம் எவ்வாறு இருக்க வேண்டும்? கட்டுரைகளை எவ்வாறு வரிசைப்படுத்த வேண்டும்? ஒரு குறிப்பிட்ட விஷயம் கலைக்களஞ்சியத்தில் எங்கு உள்ளது என்று அறிவது எப்படி? என்பன போன்றவற்றை அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

4) கலைக்களஞ்சியத்தில் கூறப்படும் பொருளுக்கு ஏற்பப் படங்கள் இடம் பெறவேண்டும். இவ்விளக்கப் படங்கள் தெளிவும் அழகும் உடையனவாக அமையவேண்டும். படங்கள் வண்ணப் படங்களாக இருப்பது முக்கியம். மற்ற விளக்கப்படங்களைப் போலவே தேவையான இடங்களில் தேசப்படங்கள் இருப்பதும் அவசியம்.

5) கலைக்களஞ்சியத்திற்குக் குறிப்பகராதி மிகவும் இன்றியமையாத பகுதியாகும். வாசகர்கள் தங்களுக்குத் தேவையான பொருள் விளக்கப் பகுதியை எளிதில் கண்டுபிடிக்க இது பெரிதும் உதவும். ஒன்றுக்கொன்று தொடர்புடைய விஷயங்களை எளிதில் கண்டறிவதற்கும் குறிப்பகராதி பயன்படும்.

இவையனைத்தும் மிகவும் கடுமையான பெரும் பணிதான். இருப்பினும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியம். ஆகவே, நான் கல்வியமைச்சர் பொறுப்பினை ஏற்ற உடனே, கலைக்களஞ்சியத்தை உருவாக்குவதை என் பணிகளில் ஒன்றாக எடுத்துக்கொண்டேன். இதற்கு ரூபாய் 18 லட்சம் செலவாகும் என்று திட்டமிடப்பட்டது. அப்பொழுது சென்னை மாநிலம் முழுவதற்கும் ஆண்டுச் செலவுத்திட்டத்திற்கு ரூபாய் 60 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது. ஆகவே இவ்வளவு பெரிய தொகை செலவு பிடிக்கும் இத்திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் அளிக்கவில்லை. ஆனால் நவீன கால அறிவியல், பொறியியல் வளர்ச்சிக்கு ஏற்பத் தமிழ் மொழியையும் வளர்க்க வேண்டும் என்ற என் ஆர்வத்தின் காரணமாக, எப்படியாவது கலைக்களஞ்சியத்தை உருவாக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். ஆகவே இதற்குரிய முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ள மாநில அரசால் இயலாவிடினும், மத்திய அரசின் உதவியுடனும், பொதுமக்களின் ஒத்துழைப்புடனும் இப்பெரும் செயலைச் செய்யத் துணிந்தேன்.

இந்த நோக்கத்துடன் தமிழ் வளர்ச்சிக்கழகம் 1946-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடங்கப்பட்டது. அதற்கு நான் தலைவராகவும், திருவாளர்கள் C. R. சீனிவாசன், T. K. சிதம்பர நாத முதலியார், ஆகிய இருவரும் துணைத் தலைவர்களாகவும், கல்கி R. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் செயலாளராகவும், திரு S. R. M. C. T. அண்ணாமலைச் செட்டியார் அதன் பொரு ளாளராகவும் இருந்தோம். பல உறுப்பினர்களும் அக்குழுவில் இருந்தனர். கல்கி அவர்களின் மறைவிற்குப் பிறகு, பேராசிரியர் சுவாமிநாதன் அதன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர், காந்தி நூல்கள் தொகுப்புப் பணியின்பொருட்டு, டில்லி சென்றபின் அப்பொறுப்பை திரு M. P. பெரியசாமித்தூரன் ஏற்றார்.

அறிவியல் மற்றும் பிற துறைகளில், தமிழில் எழுதப்பட்ட மிகச்சிறந்த நூல்களுக்குப் பரிசு கொடுத்து ஊக்குவிக்கும் திட்டத்தைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் தன் பணிகளில் ஒன்றாகக் கொண்டிருந்தது. நம் நாட்டிலும், வெளி நாடுகளிலும் தமிழ் விழாக்கள் நடத்துவதையும் தமிழ் வளர்ச்சிக் கழகம் தன் நோக்கங் களுள் ஒன்றாகக் கொண்டிருந்தது. மதுரை, திருவாரூர், கோவை, யாழ்ப்பாணம், சென்னை, டில்லி ஆகிய இடங்களில் தமிழ் விழாக்கள் மிக விமரிசையாகக் கொண்டாடப்பெற்றன.

தமிழ்க் கலைக்களஞ்சியப்பணி 1948-ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. இதைப் பத்துத் தொகுதிகளாக ரூ 12 லட்சம் செலவில் வெளியிடத் திட்டமிட்டோம். இப்பணிக்காக நன்கொடை கோரி, 1948 ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தன்று நான் வேண்டுகோள் ஒன்றை விடுத்தேன். என் வேண்டுகோளுக்கு மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் செவி சாய்த்தனர். தருமபுரம், திருவாடுதுறை, திருப்பனந்தாள் ஆதீனங்கள் ஒவ்வொன்றும் ரூ 10,000 நன் கொடை அளித்தன. டாக்டர் அழகப்பச்செட்டியார், ராஜா சர் அண்ணாமலை செட்டியார் ஆகிய ஒவ்வொருவரும் ரூ 10,000 வழங்கினர். பெரும்பாலானவர்கள் சிறு தொகைகளை வழங்கினர். இவ்வாறு இரண்டு மாதங்களில் ஒன்றரை லட்சம் ரூபாய் வசூ லிக்கப்பட்டது. இதனால் நாங்கள் உற்சாகத்துடனும் தைரியத் துடனும் எங்கள் பணியைத் தொடங்கி, சென்னை அரசிடமும், மத்திய அரசிடமும் நிதியுதவி கேட்டு விண்ணப்பித்தோம். ரூபாய் 5 லட்சம் நிதியுதவியைத் தவணை முறையில் அளிக்கச் சென்னை அரசாங்கம் இசைந்தது. அச்சமயம், திரு R. K. சண்முகம் செட்டியார் அவர்கள் மத்திய அரசில் நிதியமைச்சராக இருந்தார். ரூபாய் மூன்று லட்சத்தை, நான்கு தவணைகளில் நிதியுதவியாக

அளிக்க மத்திய அரசு இசைந்தது. ஆகவே, மீதமுள்ள தொகையைத் தமிழ் வளர்ச்சிக்கழகமே ஏற்க வேண்டியிருந்தது. தமிழ் கலைக்களஞ்சியப் பணியில் பங்குபெற அறிஞர்களும், அறிவியல் வல்லுநர்களும் ஆர்வத்துடன் முன்வந்தனர். அடுத்த ஆண்டு விஜயதசமி நன்னாளில் கலைக்களஞ்சியப் பணி தொடங்கப்பட்டது. இத்தொடக்க விழாவிற்கு நான் தலைமை தாங்க, சென்னைப் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் A. லட்சுமணசாமி முதலியார், கலைக்களஞ்சியப் பணியைத் தொடங்கிவைத்தார். கலைக்களஞ்சியப் பணிக்கு திரு M. P. பெரியசாமித்தூரன் பிரதம ஆசிரியராகவும், திரு திரிகூட சுந்தரம் பிள்ளை இணை ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டனர்.

கலைக்களஞ்சியப் பணியைத் தொடங்கிய போதுதான் அது எவ்வளவு கடினமான பணி என்பதை உணர்ந்தோம். இதற்குமுன் வேறு எந்த இந்திய மொழியிலும் இத்தகைய முயற்சி மேற்கொள்ளப் படவில்லை. 'இதைச் செய்ய நாம் முன் வரவில்லையெனில் வேறு யார்தான் செய்வார்கள்?' என்பதால் இப்பெரும் சவாலை ஏற்றுக் கொண்டோம். இப்பணியைத் தொடங்குமுன் பல முக்கியமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவற்றுள் சில:

1. தமிழ்க் கலைக்களஞ்சியத்தை ஆங்கிலக் கலைக்களஞ்சியத் தைப்போன்று அகர வரிசையில் உருவாக்குவது என முடிவு செய்யப்பட்டது.

2. நவீன விஞ்ஞான, தொழில் துறைகளில் உள்ள ஆயிரக் கணக்கான கலைச்சொற்கள், குறியீடுகள், சொற்றொடர்கள் ஆகியவற்றைத் தமிழில் கொண்டுவருதல் என்பது மிகக் கடினமான பணியாகும். மேலும், இன்றைய விஞ்ஞான, தொழில் முன்னேற் றங்கள் ஆங்கில மொழியில் போதிக்கப்படுவதால் இக்கலைக்களஞ் சிய வெளியீடு அதற்கு உதவியாக இருக்கவேண்டும் என்பதனால், தமிழில் ஏற்கெனவே இருக்கும் சொற்களையும், தொடர்களையும் அப்படியே பயன்படுத்தலாம் என்றும், புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய சர்வதேசச் சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்தனர். இக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. அறிவியல் தொடர்பான கட்டுரைகளில் பயன்படுத்த, கலைச்சொற்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமான செயல். திரு. A. லட்சுமணசாமி முதலியாரின் தலைமையில் செயல்பட்ட ஒரு குழு இதற்கு உதவி செய்தது. திரு. T. P. மீனாட்சி சுந்தரம் பிள்ளை போன்ற தமிழ் அறிஞர்களும் இதற்குப் பெரிதும்

உதவினர். பல்வேறு அறிவுத்துறைகளிலும் பணியாற்றத் துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இத்துணைக் குழுக்கள் அனைத்திலும் மொத்தம் 126 அறிஞர்கள் இடம் பெற்றனர். பல அறிஞர்கள் தங்களுக்குத் தமிழ்மேல் உள்ள பற்றினால், எந்தவித ஊதியமும் பெறாமலேயே, பணியாற்ற உவப்புடன் முன் வந்தனர். ஒவ்வோர் அறிவுத் துறையிலும் இடம் பெற வேண்டிய கட்டுரைகளின் தலைப்புக்களையும், பயன்படுத்த வேண்டிய கலைச்சொற்களையும், குறியீடுகளையும் இவ்வறிஞர்கள் முடிவு செய்தனர்.

4. பல சமயங்கள் நிலவும் நம் நாட்டில், அவற்றைப்பற்றிய கட்டுரைகள் விருப்பு வெறுப்பின்றியும், யாருடைய மனமும் புண்படாதவாறும் எழுதப்பட வேண்டும்.

5. வெளிநாடுகளைப்பற்றிய கட்டுரைகளை எழுதுவதற்கு, புதுடில்லி, சென்னை, பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் உள்ள அயல்நாட்டுத் தூதரகங்களின் உதவியை நாடுவதென முடிவு செய்யப்பட்டது. தூதரகங்கள் இல்லாத நாடுகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.

6. பல்வேறு தலைப்புகளிலும் கட்டுரைகள் எழுத இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அறிஞர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

7. இக்கட்டுரைகள் வழங்கியவர்களுள் பெரும்பான்மையினர், குறிப்பாக அறிவியல் அறிஞர்களும், தொழில்நுட்ப அறிஞர்களும், தங்கள் தாய்மொழி தமிழாக இருந்த போதிலும், தங்கள் அறிவியல் கருத்துக்களைத் தமிழில் வெளியிட இயலாதவர்களாக இருந்தனர். ஆகவே தாங்கள் விரும்பும் மொழியில் கட்டுரைகள் எழுதினர். இக்கட்டுரைகளைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டியிருந்தது. இம்மொழிபெயர்ப்புப் பணியை, தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் பதிப்பாசிரியர் குழு செய்தது.

8. கலைக்களஞ்சியத் தொகுதிகளின் வடிவமைப்பைத் தீர்மானிக்க வேண்டியது, அடுத்த பெரும்பணியாகும். அதன் அளவு, தொகுதிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு தொகுதியிலும் இருக்கவேண்டிய பக்கங்கள், பயன்படுத்த வேண்டிய தாளின் வகை, பைண்டிங், மேல் அட்டையின் அமைப்பு, எழுத்துக்களின் அளவு போன்ற பல விஷயங்களை முடிவு செய்யவேண்டியிருந்தது. அதற்காக, 16 பக்கங்கள் அடங்கிய மாதிரிப்படி ஒன்று உருவாக்கப்பட்டு அறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் யோசனைக்காக அனுப்பப்பட்டது.

தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் பணி இவ்வாறு முழுமூச்சுடன் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அனைவரையும் வருத்தத்திற் குள்ளாக்கிய நிகழ்ச்சி ஒன்று நடந்தது. திரு. S. R. M. C. T. அண்ணாமலை செட்டியார், தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் பொருளாள ராக இருந்தார். திரு. R. கிருஷ்ணமூர்த்தி, அவர்களின் அறிமுகத் தின் பேரில் அவர் பொருளாளராக நியமிக்கப்பட்டிருந்தார். பொது நன்கொடைகள் மூலமும், அரசு நிதி உதவியின் மூலமும் கிடைத்த பணம், தேவையான பொழுது எடுத்துக் கொள்ளும் வகையில், அரசுப் பத்திரங்களாக மாற்றப்பட்டிருந்தது. இவை பொருளா ளரின் பொறுப்பில் இருந்தன. ஆனால் துரதிருஷ்ட வசமாக, திரு. அண்ணாமலை செட்டியார் அவற்றை ஏறக்குறைய மூன்று லட்ச ரூபாய்க்கு விற்று அப்பணத்தைத் தம் சொந்தத் தொழிலில் ஏற் பட்ட இழப்பை ஈடுகட்டப் பயன்படுத்திக் கொண்டார். அப்போது சென்னை நிதியமைச்சராக இருந்த திரு. C. சுப்பிரமணியம் இவ் விஷயத்தில் உதவ முன் வந்தார். திரு. S.R.M.C.T. அண்ணாமலை செட்டியாரின் மேல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, கிரிமினல் குற்றத்திற்காக அவர் கைது செய்யப்பட்டார். இதைக் கேள்வியுற்ற அவர் மனைவி, இந்த இழப்புக்கு ஈடாகத் தன் வீட்டைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்குத் தருவதாக ஒப்புக்கொண் டார். இறைவனருளால் கலைக்களஞ்சியப்பணி தொடர்ந்தது. இதற்குப் பின் திரு. V. S. தியாகராஜ முதலியார் பொருளாளர் பொறுப்பை ஏற்றுத் தம் வாழ்நாள் முழுதும் கலைக்களஞ்சியத்தின் நிதிப்பொறுப்பைச் செவ்வனே செய்தார்.

இத்துயர நிகழ்ச்சிக்குப் பின் கலைக்களஞ்சியப் பணி சீராகவும் விரைவாகவும் நடைபெற்றது. இந்திய மொழி ஒன்றில் இவ்வகை யான முயற்சி நடைபெறுவது இதுவே முதல் முறையாகும். நிர்வாகக்குழு, பதிப்பாசிரியர் குழு, கலைச்சொல் குழு, ஆகியவை யும் மற்ற துணைக் குழுக்களும் பலமுறைகள் சந்தித்து விவாதித்து, முடிவுகள் எடுத்து இப்பெரும்பணியை நிறைவேற்றின. ஆனால் இப்பெரும்பணியில் திரு. M. P. பெரியசாமித்தூரன், மற்றும் அவருடன் பணியாற்றிய சக ஊழியர்களின் பங்கு மகத்தானது. 1954 ஆம் ஆண்டு, கலைக்களஞ்சியத்தின் முதல் தொகுதி வெளி யானபோது நாங்கள் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தோம். பின்னர் ஆண்டுக்கு ஒன்றாகத் தொடர்ந்து 1963 க்குள் ஒன்பது தொகுதிகள் வெளிவந்தன.

அனுபந்தத்துடன் சேர்த்துப் பத்துத் தொகுதிகள் வெளியிட வேண்டுமென்பது தான் எங்கள் திட்டம். ஆனால் 1948-56 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் உலக அரங்கிலும், நம்

நாட்டிலும் நிகழ்ந்த மாறுதல்கள் பலவற்றால் 10 ஆவது தொகுதியைக் குறிப்பிட்ட காலத்திற்குள் வெளியிட இயலவில்லை. அதனால் அனுபந்தம், குறிப்பகராதி ஆகியவற்றுடன் கூடிய பத்தாவது தொகுதி 1968 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

### குழந்தைகள் கலைக் களஞ்சியம்

இந்தியாவிலும், வெளிநாட்டிலும் உள்ள பல புத்தகக் கடைகளுக்குச் செல்லும் போதெல்லாம் அங்குள்ள, குழந்தைகளுக்கான நூல்கள், மற்றும் குழந்தைகளுக்கான ஆங்கிலக் கலைக் களஞ்சியம் ஆகியவற்றால் நான் வெகுவாகக் கவரப் பட்டேன். தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கும் இத்தகைய வாய்ப்புகள் கிடைக்க வேண்டாமா? இது எனது நெடுநாளைய கனவு. திரு. பெரியசாமித்தூரன் அவர்களுக்குக் குழந்தை இலக்கியத்தில் ஈடுபாடும் ஆர்வமும் இருந்ததால் அவருடைய உதவியுடன் 'குழந்தைகள் கலைக்களஞ்சியம்' ஒன்றையும் வெளியிடுவதற்கான பணிகளைத் தொடங்கினோம். இது குழந்தைகளுக் கேற்றபடிக் கவர்ச்சியுடனும், எளிய நடையிலும், பெரிய எழுத்துக் களிலும் அமையவேண்டும். குழந்தைகள் கலைக்களஞ்சியத்தில் நிறையப்படங்கள் இருப்பதோடு அவற்றில் குறைந்தது 50 சதவீதம் வண்ணப்படங்களாக இருக்கவேண்டும். அனைத்திற்கும் மேலாக இதில் கூறப்படும் கருத்துக்கள் குழந்தைகள் எளிதில் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் அமையவேண்டும். தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் நிர்வாகக் குழுவே குழந்தைகள் கலைக் களஞ்சியத்திற்கும் நிர்வாகக் குழுவாகச் செயல்பட்டது. இதற்கெனப் புதியதொரு ஆலோசனைக்குழு எனது தலைமையில் அமைக்கப்பட்டது. இதில் திரு. C. சுப்பிரமணியம், திரு. N. D. சுந்தரவடிவேலு ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், திரு. M. P. பெரியசாமித்தூரன் செயலர் மற்றும் பதிப்பாசிரியராகவும் பணியாற்றினர். இக்குழுவில் மனையியல் மற்றும் குழந்தை நலத் துறையில் சர்வதேச நிபுணரான டாக்டர் திருமதி ராஜம்மாள் P. தேவதாஸ் அவர்கள் அங்கம் வகித்தது குறிப்பிடத்தக்கது. குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் முதல் தொகுதி 1968 லும், பத்தாவது தொகுதி 1975 ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன. இக்கலைக்களஞ்சியத் தொகுதிகள் அனைத்தும் அழகிய வண்ணப்படங்களுடன் கவர்ச்சியாக அமைந்து தமிழ்நாட்டின் குழந்தைகளுக்குச் சிறந்த பரிசாக அமைந்துள்ளன என்று கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இந்த அத்தியாயத்தை நிறைவு செய்யுமுன், இவ்விரண்டு கலைக்களஞ்சியங்களும் வெற்றிகரமாக வெளிவரப் பேருதவி செய்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு நான் என் நன்றியையும், கடப்பாட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக அவற்றின் நிர்வாகக் குழுவினர்க்கும், பதிப்பாசிரியர் குழுவிற்கும், மற்ற செயல் குழுக்களுக்கும், அனைவர்க்கும் மேலாக திரு. M. P. பெரியசாமித் தூரனுக்கும் அவருடன் பணியாற்றிய ஊழியர்களுக்கும் என் இதயம் நிறைந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

## 25. பெண்கல்விக்கு ஓர் அறக்கட்டளை

1934-ம் ஆண்டில் என் தந்தையார் அமரரானார். ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், காந்தியடிகள் ஆகியோரின் வாழ்வாலும், வாக்காலும் கவரப்பட்டதுடன், ராமகிருஷ்ண மிஷனுடனும் நான் தொடர்பு கொண்டிருந்தேன். அத்துடன் சுதந்திர இயக்கத்திலும் தீவிரப் பங்கேற்றிருந்தேன். ஆகவே, குடும்பச் சொத்துக்களை நிர்வகிப்பதில் எனக்கு ஆர்வம் இருக்கவில்லை. இப்பொறுப்பை என் மூத்த சகோதரர்கள் இருவரும் ஏற்றிருந்தனர். திருப்பூரில் திரு T. S. கந்தசாமி செட்டியார் அவர்களும், கோயமுத்தூரில் திரு T. S. திருஞானசம்பந்தம் செட்டியார் அவர்களும் எங்கள் சொத்துக்களை நிர்வகித்து வந்தார்கள். எங்கள் குடும்பம் கூட்டுக்குடும்பமாக இருந்ததால், வருமான வரியாக, பெருந்தொகை செலுத்தவேண்டியிருந்தது. இதைத் தவிர்ப்பதற்கு, சொத்துக்களைப் பாகப்பிரிவினை செய்வது நல்லது என்று தணிக்கையாளர்கள் யோசனை கூறினர். பாகப் பிரிவினை மிகவும் நல்ல முறையில் நடந்தது. எனக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. ''என் பங்குக்கு வரும் சொத்துக்களைக் கொண்டு கல்விக்காக அறக்கட்டளை ஒன்றை ஏன் நிறுவக்கூடாது?'' என்று நினைத்தேன். முக்கியமான விஷயங்களில் நான், மூத்தவர்களின் அறிவுரையைக் கேட்பேன். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் என் சிறிய தந்தையார் திரு T. A. இராமலிங்கம் செட்டியாரும், என் தமையனார் திரு T. S. கந்தசாமி செட்டியாரும் ஆவர். என் முடிவைக்கேட்டு இருவரும் கவலையடைந்தனர். இத்தகைய முடிவை நான் வற்புறுத்தும் நிலையில், சொத்துக்கள் முழுவதையும் அறக்கட்டளைக்கு எழுதி வைக்காமல், ஒரு பகுதியை மட்டும் எழுதி வைக்கும்படி அறிவுறுத்தினார்கள். அந்தச்சமயத்தில் அவர்களின் அறிவுரையை நான் ஏற்றுக்கொண்டேன். ஆனால் பின்னர் ஏறக்குறைய என் சொத்துக்கள் முழுவதையும் அறக்கட்டளைக்கு எழுதி வைத்துவிட்டேன். இந்த முடிவை நான் எடுத்ததற்கான காரணங்கள், கீழ்வரும் அறக்கட்டளைச் சாசனத்தில் கொடுக்கப்படுகின்றன:

''என் சொத்துக்களைக்கொண்டு அறக்கட்டளையொன்று நிறுவ வேண்டுமென்ற விருப்பம் சில நாட்களாகவே என் உள்ளத்தில் இருந்துவருகிறது. பணத்தைச் சம்பாதிப்பதன் நோக்கமே அதனைச் செலவழிப்பதுதான். பணத்தின் தேவை உள்ளவர்களுக்காக அதனைச் செலவழிக்கும்போது அதனைச் சிறப்பாகவும் மிக அதிகப் பயனுடனும் செலவழித்தவர்கள் ஆகிறோம். அனைத்துக் கொடைகளிலும் சிறந்தது ஆன்மிக அறிவை வளர்ப்பதற்குத் துணைபுரியும் கொடையேயாகும். ஏனென்றால், ஒருவர்க்கு ஒரு நாள் உணவை அளிப்பதனால் அவரை அந்த ஒரு நாள் மட்டும் பசியிலிருந்து விடுபடச்செய்கிறோம்; ஒருவருடைய உடல் வலியைப் போக்கச்செய்யும் உதவி அவருடைய வலியைத் தற்காலிகமாக மட்டும் நீக்குகிறது. ஆனால் ஒருவர்க்குக் கல்வியறிவும், ஆன்ம உயர்வுக்கான உதவியும் செய்தால் அவை அவரை ஓர் உயர்ந்த நிலைக்கு அழைத்துச்சென்று வாழ்நாள் முழுதும் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளத் துணை நிற்கின்றன.''

ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் அருள்மொழிகள் இளமைப் பருவத்திலிருந்தே என்னை நன்னெறிப்படுத்தி வந்துள்ளன. சிறிது காலத்திற்குப்பின் காந்தியடிகளாலும் நான் கவரப்பட்டேன். குருதேவரின் முக்கியச் சீடர்களுள் இருவரான சுவாமி பிரம்மானந்தரையும், சுவாமி சிவானந்தரையும் நான் முதன்முதலாக 1921 ஆம் ஆண்டில் சந்தித்தேன். தியாகமும் தொண்டும் நிரம்பிய வாழ்க்கை என்றால் என்ன என்பதைப்பற்றி இப்பொழுது சிறிதளவு தெரிந்துகொண்டேன். அன்றிலிருந்து இன்று வரை அத்தகைய வாழ்வு முறை என் மனத்தில் பதிந்து ஸ்ரீ ராமகிருஷ்ண மடமும், மிஷனும் என் ஆன்மிகப் புகலிடங்களாக இருந்து வருகின்றன. ராமகிருஷ்ண மடத்தின் முழு நேர உறுப்பினனாக நான் ஆகிவிடுவேன் என்று அப்பொழுது எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நான் அரசியலில் புகவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நாட்டின் சார்பில் காந்தியடிகள் விடுத்த அழைப்பை மறுக்க என்னால் இயலவில்லை. என் தந்தையார், நண்பர்கள், மடத்தின் உறுப்பினர்கள் ஆகியோரின் எதிர்ப்புக்கு இடையில் 1930 ஆம் ஆண்டில் நான் சிறை சென்றேன். இதைத் தொடர்ந்து 1932, 1941, 1942 ஆகிய ஆண்டுகளில் மூன்று முறை சிறை சென்றேன். நாட்டிற்குச் சேவை செய்வதற்கு அரசியலை நான் ஒரு வழியாகக்கொண்டேன்.

வித்யாலயம் தோன்றியதிலிருந்து இன்று வரையிலான இந்த இருபதாண்டுக்காலமும் வித்யாலயமே எனது வாழ்க்கையின் பின்னணியாக இருந்துவருகின்றது. நான் அன்பு செலுத்துவதற்கும்,

நல்வாழ்வு வாழ்வதற்குமான ஓர் ஆன்ம நிறைவை வித்யாலயம் அளிக்கிறது. என் வாழ்க்கையின் சிறப்பான பெரும்பகுதியையும் அன்பையும் நான் அதற்கு அளித்துள்ளேன்; அளித்துவருகிறேன். என்னை நான் முழுமையாக வெளிப்படுத்திக் கொள்வதற்கு அது பலவழிகளிலும் பெருந்துணை புரிந்துள்ளது. நான் வித்யாலயக் குழந்தைகள் மூலம் இறைவனை வழிபடுகிறேன். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருளாசி வித்யாலயத்தில் திகழ்வதை, என் இருபதாண்டுக் கால அனுபவத்தில் தெளிவாகக் கண்டும் உணர்ந்தும் இருக்கிறேன். இவைதான் எனக்கு நம்பிக்கையும், சக்தியும் அளித்து வருகின்றன. ஒரே ஒரு மாணவனுடன் தொடங்கப்பட்ட வித்யாலயம், இன்று பெரிய அளவில் மகத்தான வளர்ச்சி பெற்று, தென்னிந்தியாவிலேயே ஒரு முன்னோடி நிறுவனமாகத் திகழ்வதற்கு, எனது தனிப்பட்ட பணியோ, அல்லது வேறு தனி மனிதர் ஒருவரின் முயற்சியோ காரணமாகாது. வித்யாலயத்தின் அனைத்துச் செயல்களையும் வழிகாட்டி நெறிப்படுத்திச்செல்லும் குருதேவரின் அருட்கரமும், அருட்சக்தியுமே காரணமாகும். இப்பெரும்பணியில் நான் அவரது கருவியாக அமைந்தது நான் பெற்ற பெரும்பேறும், தனிப்பெருமையும் ஆகும்.

எனது சொத்துக்களைக்கொண்டு அறக்கட்டளை ஒன்று நிறுவி, என்னை அவற்றின் உரிமையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் எண்ணம் நீண்ட நாட்களாகவே எனக்கு இருந்து வருகிறது. நம் ஆன்மிக முன்னேற்றத்திற்கும் இது இன்றியமையாதது. என் சகோதரர்களுக்கிடையில் பாகப்பிரிவினை நடந்தபின் இந்த எண்ணம் தெளிவடைந்து வலுப்பெற்றது. இத்தருணத்தில் என் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் ஆகியோரின் அன்பிற்கும், பாசத்திற்கும், பரிவுக்கும் நான் என்றென்றும் கடமைப்பட்டவன் என்பதைக் கூறுவது அவசியம். அறக்கட்டளை நிறுவும் எண்ணத்தை மேற்கொண்டும் தாமதப்படுத்தக் கூடாது என்ற உணர்வு என்னுள் மேலோங்கிற்று. அனைத்துச் சொத்துக்களையும் அறக்கட்டளைக்கு எழுதிவைத்து, அவற்றுக்குரிய என் உரிமையை முற்றிலும் விலக்கிக்கொள்வது நல்லதல்ல என்று மூத்தோரும் நண்பர்களும் தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றனர். ஆகவே எதிர்காலத்தில் என் செலவுகளுக்குத் தேவைப்படும் அளவுக்கு சிறு தொகையை வைத்துக்கொள்ள வழி ஏற்படுமாறு உயில் எழுதி வைக்கும்படியும் அறிவுரை கூறினார்கள்.

நம் நாட்டின் மிக உயர்ந்த பண்பாட்டுப் பாரம்பரியத்தின் அடிப்படையில் பெண்களுக்குக் கல்வியளிப்பது நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பதை, என் நீண்ட அனுபவத்

தின் மூலம், குறிப்பாக, சென்னை அரசாங்கத்தின் கல்வி அமைச்சராகப் பணியாற்றியபோது நான் பெற்ற அனுபவத்தின் மூலம் நன்கு உணர்ந்திருக்கிறேன். இத்தகைய பயிற்சி அளிக்கும் பள்ளிகள் இன்று மிகக்குறைவே. ஆகவே இந்த அறக்கட்டளையின் பெரும்பகுதியைப் பெண்களின் கல்விக்காகவும், பெண்களுக்காகக் கல்வி நிறுவனம் ஒன்றை அமைக்கவும் பயன்படுத்த வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனை, இந்த அறக்கட்டளையின் அறங்காவலர்களாக ஆக்க விரும்பினேன். பெண்களுக்கான நிறுவனத்தின் பொறுப்பை ராமகிருஷ்ண மிஷன் ஏற்குமா என்ற ஐயம், ராமகிருஷ்ண மிஷனின் உள்ளத்தை நன்கு அறிந்தவன் என்ற முறையில் எனக்கு எழுந்தது. ஐந்தாண்டுகளுக்குப்பின் இவ்வறக்கட்டளையை ஏற்றுக்கொள்ளுமாறு ராமகிருஷ்ண மிஷனைக் கேட்டுக்கொள்வதென்று முடிவு செய்யப்பட்டது. அப்பொழுது நிலவும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, அதன் நிறுவனரே நிரந்தரமானதொரு அறக்கட்டளைக் குழுவை நியமிப்பார்.

பெண்கள் பள்ளியைக் கட்டுவதற்குச் சில ஆண்டுகள் ஆயின. இறுதியில், பெண்கள் பள்ளியை நிறுவுவதற்கு ஐந்து ஏக்கர் நிலத்தை அளிக்கக் கோவை நகராட்சி அன்புடன் இசைந்தது. இந்த நிலத்தை அறக்கட்டளைக்குக் கொடுக்க அரசு ஆணை பிறப்பிக்க இருந்த சமயத்தில் ஒரு சிக்கல் ஏற்பட்டது. அந்த நிலத்தை திரு முனியண்ண கவுண்டரிடமிருந்து பல ஆண்டுகளுக்கு முன் பாரதி பூங்காவை அமைக்க நகராட்சி கையகப்படுத்தியிருந்தது. திரு முனியண்ண கவுண்டர் என்னிடம் வந்து, பூங்காவை அமைப்பதற்காக அவரிடமிருந்து ஆர்ஜிதப்படுத்தப்பட்ட அந்த இடத்தில் பள்ளிக்கூடம் கட்டக்கூடாது என்றும், அப்படிக் கட்டினால் தான் வழக்குத்தொடரப் போவதாகவும் கூறினார். வழக்கில் சிக்கிக்கொள்ள விரும்பாத நான், மேற்படி திட்டத்தை விட்டு விடலாம் என்று அரசுக்கு எழுதினேன். அறக்கட்டளையின் பெயரில் பெண்களுக்குப் பள்ளி ஒன்று தொடங்க இயலாதது குறித்து நான் பெருத்த ஏமாற்றமும், வருத்தமும் அடைந்தேன். ஆனால் விரைவில் ஆண்டவன் அருள் கிடைத்தது.

அந்தச் சமயத்தில், இரண்டாம் உலகப்போரின் ஐரோப்பிய அகதிகள் கோவையிலுள்ள வனவளக் கல்லூரி வளாகத்தில் தங்கியிருந்தனர். போர் முடிந்து விட்டதால் அவர்கள் இந்தியாவை விட்டுச்செல்ல இருந்தனர். அந்த இடம் வனத்துறைக்குக் கொடுக்கப்பட இருந்தது. அந்த இடத்தில் 5 ஏக்கர்

களைப் பெண்கள் பள்ளி அமைக்கச் சென்னை அரசாங்கம் மனமுவந்து அறக்கட்டளைக்கு அளித்தது. அதற்கான அரசின் கடிதம் 1954-ஆம் ஆண்டு விஜயதசமி நாளன்று எனக்குக் கிடைத்தது. அப்போது சுவாமி சர்வக்ஞானந்தர் எங்களுடன் வித்யாலயத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். நாங்கள் இருவரும் அக்கடிதத்தைப்பார்த்து அளவற்ற மகிழ்ச்சியடைந்தோம். அந்த நிலத்தை இறைவனே எங்களுக்கு வெகுமதியாக அளித்திருப்பதாக நம்பினோம். அந்தப் புனித நாளிலேயே அந்த இடத்தில் பள்ளி கட்டுவதற்கு அறிகுறியாக ஏதேனும் செய்ய எண்ணினோம். நாங்கள் இருவரும் அங்கு சென்றோம். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு பிரார்த்தனை செய்தோம். வித்யாலய மண் சிறிதளவை சுவாமி சர்வக்ஞானந்தர் தம்முடன் கொண்டுவந்திருந்தார். அதை அந்த இடத்தில் தூவினோம். மிகுந்த மகிழ்ச்சிப் பெருக்குடன் ''ஜெய் ஸ்ரீ குருமகராஜ்கி ஜெய்'' என்று வாழ்த்தொலி எழுப்பினோம். இறைவன் யார் யார் மூலம் எப்படியெல்லாம் திருவிளையாடல் புரிகிறான் என்பதை எண்ணி வியந்தோம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் வித்யாலயத்திற்கு வழிகாட்டி தம் அருளைப் பொழிந்து வருவது போலவே, அறக்கட்டளை நிறுவனங்களுக்கும் அருள்புரிந்து வருகிறார் என்று நான் உறுதியுடன் நம்புகிறேன்.

1955-ஆம் ஆண்டில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி தொடங்கப் பட்டது. அதன் தலைமையாசிரியையாக செல்வி. விசாலாட்சியும் செயலராக திரு. K. அருணாசலமும் பணியாற்றினர். திரு. K. அருணாசலத்திற்குப் பின் டாக்டர் C. நஞ்சப்பா செயலராகப் பொறுப்பேற்றார். 1960-ஆம் ஆண்டு டாக்டர் திருமதி ராஜம்மாள் P. தேவதாஸ் பொறுப்பேற்ற பின்னரே இந்த நிறுவனத்தின் மகத்தான வளர்ச்சி தொடங்கிற்று.

## 26. காந்தி நூல்களின் தமிழ் வெளியீடு

1948 ஜனவரி 30-ஆம் நாள் காந்தியடிகள் அமரரானபின் இந்திய தேசியக் காங்கிரசின் செயற்குழுக் கூட்டம் 1948 பிப்ரவரி 5-ஆம் நாள் கூடிற்று. காந்தியடிகளின் நினைவைப் போற்றும் வகையில் தேசிய நினைவு நிதி ஒன்று தொடங்க வேண்டுமென்று முடிவுசெய்து, அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யும் அதிகாரத்தை டாக்டர் ராஜேந்திர பிரசாத்துக்கு அளித்தது. பண்டித ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய்பட்டேல், திரு. C. ராஜகோபாலாச்சாரியார், ஆச்சார்ய J. B. கிருபாளனி மற்றும் பலரை உறுப்பினராகக் கொண்ட தற்காலிகக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. புதுடில்லியில் தலைமையகத்தையும், அனைத்து மாநிலங்களிலும் கிளையகங்களையும் கொண்ட அறக்கட்டளை ஒன்று 'காந்தி நினைவு நிதி' என்ற பெயரில் நிறுவவும் தீர்மானிக்கப்பட்டது. முதல் அறங்காவலர் குழுவில் டாக்டர் ராஜேந்திர பிரசாத், திரு. G. V. மாவ்லாங்கர், சர்தார் வல்லபாய்பட்டேல், திரு. ஜவஹர்லால் நேரு, திருமதி ஆசாதேவி அரியநாயகம், திரு. பிரபுல்லா சந்திரகோஷ், திரு. மௌலானா அபுல்கலாம் ஆசத், திரு. கோவிந்த வல்லபபந்த், திரு. J. R. T. டாடா ஆகியோர் இருந்தனர்.

இவ்வறக்கட்டளையின் நோக்கங்கள் பின்வருமாறு:

i) தம் வாழ்நாளில் காந்தியடிகள் மேற்கொண்டிருந்த பல்வேறு நிர்மாணத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துதலும், அவற்றை மேம்படுத்துதலும், அத்துடன் அவரது கோட்பாடுகளை ஊக்குவிக்கும் மற்றத் திட்டங்களையும் செயல்படுத்துதல். இந்திய நாட்டின் ஏழை எளியவர்களின் உயர்வுக்கு உதவும் செயல்களை மேற்கொள்ளுதல்.

ii) காந்தியத் தொடர்பான அமைப்புகள், ஆசிரமங்கள், நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்தல்.

iii) ஏழை எளியவர்களுக்கு பண உதவி செய்தல், மருத்துவமனைகள், இலவச மருந்தகங்கள், ஆரோக்கிய இல்லங்கள்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான இல்லங்கள், மகப்பேறு இல்லங்கள், குழந்தைகள் நல மையங்கள் போன்ற நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்தல்.

iv) கிராமப்புறங்களிலும், ஏழைகள் வாழும் பகுதிகளிலும் சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல்; மக்கள் நலவாழ்வுக்கான வசதிகளையும் செய்து கொடுத்தல்.

v) தொழுநோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான வசதிகளை ஏற்படுத்தல், தொழுநோயாளர் குடியிருப்புகளை அமைத்தல்; தொழுநோய் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஆய்வு மையங்களை நிறுவுதல்.

vi) கல்வி வளர்ச்சியை, குறிப்பாக ஆதாரக் கல்வியை ஊக்குவித்தல், குழந்தைகளுக்கும் வயது வந்தோர்க்கும் குடிமைப் பயிற்சி அளித்தல்; பெண்களுக்கு மனையியலில் பயிற்சி அளித்தல், கிராம மக்களுக்குக் கைத்தொழில்கள், குடிசைத் தொழில்கள், மற்றும் பயனுள்ள கலைகள் ஆகியவற்றில் பயிற்சியளித்தல்.

vii) காந்தியடிகளின் கடிதங்கள், கட்டுரைகள், மற்றும் போதனைகளைத் தொகுத்தல்; அவற்றைப் பல்வேறு மொழிகளில் அச்சிட்டு வெளியிடல்; அவரது சிந்தனைகளையும், போதனைகளை பிரசாரம் செய்ய ஆவன செய்தல்; இவற்றுக்கென வாசகர் மையங்களையும், நூல் நிலையங்களையும் ஏற்படுத்தல்.

viii) காந்தியடிகள் பயன்படுத்திய பொருட்கள், அவர் நினைவைப் போற்றும் வகையில் அமைந்த பொருட்கள், நூல்கள் ஆகியவை கொண்ட அருங்காட்சியகம் அமைத்தல்.

ix) காந்தியடிகளின் வாழ்க்கைத் தொடர்பான இடங்களைப் பாதுகாத்தல்.

x) மேற்குறிப்பிட்ட பல்வேறு பணிகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பயிற்சி அளித்தல்.

xi) மேலே குறிப்பிட்ட செயல்களுள் ஒன்றையோ, பலவற்றையோ மேற்கொண்டு நடைபெற்றுவரும் அல்லது இனிமேல் அமைக்கப்படும் நிறுவனங்களுக்கும், செயல்படுத்திவரும் அல்லது செயல்படுத்தவிருக்கும் தனிமனிதருக்கும் (குறிப்பாக கிராமப் பகுதிகளில்) நிதியுதவியளித்து ஊக்குவித்தல்.

xii) மேற்குறிப்பிட்ட நோக்கங்களின் அடிப்படையில் எந்தவகைச் செயலுக்கும் ஊக்கம் அளித்தல்.

இவ்வறக் கட்டளையைப் பற்றி எழுதும்போது டாக்டர் ராஜேந்திர பிரசாத் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் :

''காந்தியடிகளின் போதனைகளும் சாதனைகளும் இந்திய மக்கள் மற்றும் உலகமக்களின் இதயங்களில் என்றும் குடிகொண்டுள்ளன. இனி வரவிருக்கும் தலைமுறையினரும் அவற்றால் எழுச்சி பெறுவார்கள். இவற்றைத் தவிர அவருக்கு வேறு நினைவுச்சின்னம் அவசியமில்லை. இருப்பினும், அவரது நாட்டு மக்களுக்கும், மற்றவர்களுக்கும் கடமை ஒன்று உள்ளது. அது தான் அவரது உயர்ந்த குறிக்கோள்களைச் செயல் முறைப்படுத்த நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதாகும். இவ்வாறான நிர்மாணப் பணிகள் தாம் அவருக்குப் பிரியமானவை; அவற்றுக்காகத் தான் அவர் அயராது உழைத்தார்.

''இப்பெரும் பணிக்கு மனிதர்களும் பணமும், — பணத்தைக் காட்டிலும் மனிதர்கள் தேவை. ஆகவே அவருக்குப் பிரியமான பணிகளை மேற்கொண்டு அவற்றை நிறைவேற்ற காந்தியக் கொள்கைகளில் நம்பிக்கையும், அர்ப்பணிப்பு மனப்பான்மையும் கொண்ட ஏராளமான ஆண்களும், பெண்களும் முன்வரவேண்டும்.

''அவரது நினைவைத் தொடர்ந்து நிலை நிறுத்தும் வகையில் 'காந்தி நினைவு நிதி' தோற்றுவிக்கப்படுகிறது. அவரது எழுத்துக்கள், போதனைகள் ஆகியவற்றைத் தொகுத்து, பாதுகாத்து பல்வேறு மொழிகளில் அச்சிட்டு வெளியிடுவதற்கும், அவரது தொடர்பான பல்வேறு பொருள்களைக் கொண்ட அருங்காட்சியகம் அமைக்கவும் பயன்படுத்தலாம்''.

பின்னர், காந்தியடிகளின் படைப்புகளைத் தொகுத்து 'அஞ்சலி' (Homage) என்ற பெயரில் இந்திய அரசு வெளியிட்ட போது, டாக்டர் ராஜேந்திரபிரசாத் எழுதினார் :

''ஒரு வாழ்க்கைத் தத்துவத்தையோ, அல்லது சில நம்பிக்கைகள் கொள்கைகள் ஆகியவற்றை ஏற்படுத்தவோ காந்தியடிகள் நினைக்கவில்லை. இருப்பினும் உண்மையிலும், அகிம்சையிலும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார் அவர். பிரச்னைகளுக்கு வெற்றிகரமாகத் தீர்வுகாண உண்மை, அகிம்சை ஆகியவற்றைக் கருவிகளாகக் கொண்டார். அவருடைய இந்த அனுபவங்களின் தொகுப்பே அவரது போதனைகளும், வாழ்க்கைத் தத்துவமும் ஆகும்.

''அவருடைய கருத்துக்கள் புதுமையானவை;சடங்குகள் சம்பிரதாயங்களால் பாதிக்கப்படாதவை. ஆகவே, பிரச்னைகளைத்

தீர்க்க அவர் மேற்கொண்ட வழிகளும் புதுமையானவை; வெளித் தோற்றத்தில் அவை சரியானவையாகத் தெரியாவிட்டாலும், இறுதி யில் அவை வெற்றியைத் தேடித்தந்தன. தான் சொல்வதுதான் சரி என்ற பிடிவாதம் அவரிடம் எப்பொழுதும் இருந்ததில்லை. எதையும் சோதனை செய்துபார்த்து அதனால் கிடைக்கும் முடிவையே ஏற்றுக்கொள்வது அவரது இயல்பாகும். எதையும் அவர் மேலெழுந்தவாரியாக ஏற்றுக்கொள்ளமாட்டார். ஆகவே அவருடன் கருத்துவேறுபாடு கொண்டவர்கள், ஏன் சில சமயம் அவரைப் பின்பற்றியவர்கள்கூட, அவரது செயல்களில் ஒரு வகை யான, வெளித்தோற்றமான வேறுபாட்டைக் கண்டனர். தாமே முடிவுசெய்து மேற்கொண்ட ஒரு குறிப்பிட்ட செயல் தவறு என்று தெரிந்தபோது அத்தவற்றை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு தம்மைத் திருத்திக்கொள்ளவும் அசாதாரணத் தைரியம் அவரிடம் இருந்தது. தம் முடிவுகளையும், செயல்களையும் விமரிசனம் செய்யும் உரிமையை மற்றவர்களுக்கு அளித்திருந்தார். ஆகவே இத்தகைய ஒரு மனிதரை நன்கு புரிந்துகொள்ள வேண்டு மென்றால் அவரது வாழ்க்கையையும், போதனைகளையும் முழுமையாக அறிந்துகொள்வது மிகமிக அவசியம். அவரது வாழ்க்கை, போதனைகள் ஆகியவற்றைத் துண்டுதுண்டாகப் பகுத்து அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் அறிந்துகொள்ள முயல்வது தவறான எண்ணத்தைக் கொடுத்துவிடும். எனவே தான், காந்தியடிகளின் வாழ்க்கை, போதனைகள் ஆகியவற்றை விரிவான அளவில் தொகுத்து வெளியிட முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.'

'அஞ்சலி' (Homage) என்ற இந்த நூலுக்கு முகவுரை எழுதும்போது ஜவஹர்லால் நேரு அவர்கள் எழுதினார் :

''காந்தியடிகளின் கருத்துப்படி வாழ்க்கை என்பது முழுமையான ஒன்றாகும்; பலவேறு வண்ணங்களை இணைத்து நெய்யப்பட்ட ஓர் அழகான ஆடையாகும். ஆங்கிலேயருக்கு அவர் விடுத்த சவாலைப் போலவே, அவர், குழந்தைக்குச் சொன்ன ஓர் அன்புச் சொல்லும், துன்புறுவோர்க்குக் காட்டிய பரிவும் முக்கிய மானவை.

''இப்பெரும்பணியை நாம் மிகுந்த மரியாதையுடன் தொடங்கு வோம். நமது தலைமுறையினர்க்கு ஒளிகாட்டி, நமக்குச் சுதந்திரத்தையும், தனிமனித வாழ்க்கைக்குரிய நற்பண்புகளையும் அளித்தது போலவே, இனிமேல் வரவிருக்கும் தலைமுறை யினர்க்கும் அவரது பேரொளி வழிவகுக்க வேண்டுமென்ற நோக்கத்

துடன் இப்பெரும்பணியை ஏற்கிறோம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னும், இத்தகைய மனிதர் ஒருவர் இந்த மண்ணிலே நடந்து, மக்களின்மேல் அன்பைப் பொழிந்து, இந்த நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி, மனித சமுதாயத்திற்கே தொண்டு செய்தார் என்பதை அறிந்து வியப்படைவார்கள்.''

காந்தி நினைவு நிதிக்காக ஏறக்குறைய பதின்மூன்று கோடி ரூபாய் திரட்டப்பட்டது. அதில் தமிழ்நாட்டின் பங்கு அறுபத்தைந்து லட்சம். அறக்கட்டளைச் சாசனத்தில் குறிப்பிட்டிருந்தபடி, ஒவ்வொரு மாநிலமும் திரட்டும் தொகையில் முக்கால் பங்கு அந்த மாநிலத்திற்கும், கால்பங்கு மத்தியப் பொதுநிதிக்கும் சேரவேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதன் செயலாளரே அதன் நிர்வாகக் குழுவின் தலைவரும் ஆவார். தமிழ்நாட்டின் குழுவிற்கு திரு. N. M. R. சுப்பராமன் செயலாளராக, நியமிக்கப்பட்டார். தமிழ் நாடு காந்தி நினைவு நிதியின் தலைமையகம் மதுரையில் செயல்பட்டது.

திரு. சுப்பராமன் அவர்களது காந்தியப்பற்று, எளிமை, அன்பு, பரிவு, பணிவு, அரசியலில் கொள்கைப் பிடிப்பு, அடக்கம் போன்ற நல்லியல்புகள் அவரை ஒரு சிறந்த காந்தியவாதியாக ஆக்கியிருந்தன. காந்தியடிகளின் நூல்களையெல்லாம் தொகுத்து அவற்றைத் தமிழில் 17 தொகுதிகளாகக் கொண்டுவரும் பணியைத் தமிழ்நாடு காந்தி நினைவு நிதி ஏற்கவேண்டுமென்று நான் அவரிடம் யோசனை கூறியபோது, அவரும், தமிழ்நாடு காந்தி நினைவு நிதியும் மகிழ்ச்சியுடன் இசைந்தனர். அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில் இப்பொறுப்பினை நான் ஏற்றுக்கொண்டேன். 5-5-1955-ல் இதற்கெனக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவிற்குத் தலைமையேற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. திருவாளர்கள் N. M. R. சுப்பராமன், காமராஜ், A. வேதரத்னம், C. சுப்பிரமணியம், M. P. பெரியசாமிதூரன், M. அருணாசலம், R. விநாயகம், L. N. கோபாலசாமி, N. ராமசாமி ஆகியோர் அக்குழுவின் உறுப்பினர்களாக இருந்தனர். இக்குழுவிற்கு திரு. G. வெங்கடாசலபதி செயலாளராக இருந்தார். இதன் அலுவலகத்திற்கு, தமிழ்நாடு அரசு, மவுண்ட் ரோடிலிருந்த அரசு வளாகத்தில் ஓர் இடத்தை அன்புடன் கொடுத்தது. திரு. R. வெங்கடராஜுலு அவர்களின் நியமனத்திற்குப்பின் இப்பணி முழு மூச்சில் தொடங்கிற்று.

நவஜீவன் பதிப்பகத்தார் ஆங்கிலத்தில் தொகுத்து வெளியிட்ட காந்தி நூல்கள் எங்களுக்கு மாதிரியாக அமைந்தன. காந்தி

நூல்களின் தொகுப்புகள் பொருள் வரிசையில் அமையவேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது. 'தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகம்', 'சத்தியசோதனை' போன்ற நூல்கள் காந்தியடி களாலேயே எழுதப்பட்டிருந்தன. மற்றக் கருத்துக்களை நவஜீவன் பதிப்பகத்தார் வெளியிட்ட நூல்களிலிருந்து திரட்ட வேண்டி யிருந்தது. இத்தொகுதிகளை இயன்ற அளவு விரைவில் வெளியிட வேண்டுமென்று நாங்கள் விரும்பியதால் தொகுப்பு மற்றும் மொழி பெயர்ப்புப் பணிகளின் பெரும்பகுதியைப் பதிப்பாசிரியர்களே செய்தனர். காந்தியக் கொள்கைகளில் அறிவும் நம்பிக்கையும் கொண்ட நண்பர்கள் பலரின் உதவியையும் நாடினோம்.

தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகம், அகிம்சை, சத்திய சோதனை, நலவாழ்வு, கதர் கிராமக்கைத்தொழில்கள், பொருளா தாரத் தொடர்புகள், தீண்டாமை ஒழிப்பு, சத்தியாக்கிரகம், சமூக ஒற்றுமை, கடவுளும் சமயமும், பகவத்கீதை, அரசுக்கு எழுதிய கடிதங்கள், அரசியல் தலைவர்களுக்கு எழுதிய கடிதங்கள், கிராம சுயராஜ்யம், மற்றவர்களுக்கு எழுதிய கடிதங்கள், காந்தியடிகள் வாழ்க்கை வரலாறு, ஆகியன முதல் 16 தொகுதிகளுக்கும் குறிப் பகராதி 17-வது தொகுதிக்கும் தலைப்புகளாக அமைக்கப் பட்டன.

முதல் தொகுதியை நானும் திரு. N. M. R சுப்பராமன், டாக்டர் திருமதி. ராஜம்மாள் P. தேவதாஸ் ஆகியோரும் எழுதினோம். 9-வது தொகுதியை திரு. K. அருணாசலம் அவர் களும், 12-வது தொகுதியை திரு. N. ராமரத்னம் அவர்களும், 15-வது தொகுதியை திரு. A. ராமசாமி அவர்களும், 16-வது தொகுதியை திரு. K. திரவியம் அவர்களும் மற்ற தொகுதிகளை திரு. R. வேங்கடராஜுலு, திரு. ஜெயமணி சுப்பிரமணியம் ஆகியோரும் எழுதினார்கள். ஒவ்வொரு தொகுதியும் ஏறக்குறைய 750 பக்கங்கள் கொண்டது. காந்தியடிகளின் வாழ்க்கையோடு தொடர்புடைய புகைப்படங்கள் பல இடம் பெற்றன. அனை வரும் எளிதில் வாங்க உதவும் வகையில் ஒவ்வொரு தொகுதி யின் விலையும் ரூ. 7.50 என நிர்ணயிக்கப்பட்டது.

1957 செப்டம்பர் 15-ஆம் நாள் முதல் தொகுப்பு வெளி யிடப்பட்டது. பதிப்பாசிரியர்கள் திரு. R. வேங்கடராஜுலு, திரு. ஜெயமணி சுப்பிரமணியம் ஆகியோரின் கடும் உழைப் பினாலும், ஊக்கத்தினாலும் அனைத்துத் தொகுதிகளும் 12 ஆண்டுகளில் வெளியிடப்பட்டு விட்டன. இப்பெரும்பணியில் திரு. G. வெங்கடாசலபதி அவர்கள் காட்டிய இடைவிடாத ஆர்வத்தை இங்குக் குறிப்பிடுவது அவசியம். அவர் தம்

வாழ்க்கையை இடைநிலை ஆசிரியராகத் தொடங்கினார். பின்னர் அப்பணியைத் துறந்துவிட்டுச் சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றார். மதுரை மாவட்டம் கல்லுப்பட்டியில் அவர் காந்திநிகேதன் ஆசிரமத்தை நிறுவினார். திரு. K. முனியாண்டி, திரு. குருசாமி ஆகியோரின் பொறுப்பில் இந்த நிறுவனம் இப்போதும் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது. திரு. வெங்கடாசலபதி அவர்கள், காந்தியக் கொள்கைகளில் ஊறித்திளைத்தவர்; கிராம வளர்ச்சிப் பணிகளில் தளரா ஊக்கம் கொண்டவர். அப்போது சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த திரு. O. B. ராமசாமிரெட்டியார், அவரை கிராம வளர்ச்சிப் பணிகளுக்கான இணைச்செயலாளராக நியமித்தார். அப்பணிகளை அவர் மிகவும் சிறப்புற நிறைவேற்றினார். காந்தி நூல்கள் மிகவும் சிறந்த முறையில் வெளிவர உதவிய அனைவர்க்கும் நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதே சமயத்தில், இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க Understanding Basic Education, Education by Gandhiji in His Own works, Gandhiji's Experiments in Education ஆகிய மூன்று நூல்களை ஆங்கிலத்தில் எழுதினேன்.

சிறந்த விஞ்ஞான மனப்பான்மை கொண்டவர் காந்தியடிகள். எந்த ஒரு கருத்தையும், உண்மையையும் அவர் ஆராயாமல் ஏற்றுக்கொள்ளமாட்டார். எதைப்பற்றியும் விருப்பு-வெறுப்பு என்பது அவரிடம் இருந்ததில்லை. நடுநிலைமை பிறழாது தாம் எடுத்த முடிவுகளை அச்சமின்றிச் செயல்படுத்தும் ஆற்றல் அவரிடம் இருந்தது. எதிர்ப்புகள், ஆபத்துகள், தோல்விகள் ஆகியவற்றை ஏற்கும் துணிவு அவரிடம் இருந்தது. விஞ்ஞான மனப்பானமையுடன், இத்தகைய அறப்பண்புகளும் அவரிடம் இருந்ததால் மிகவுயர்ந்த ஆன்மிக நிலையை எட்டியிருந்தார்.

தமக்கிருந்த மிகப்பெரிய வேலைப்பளுவின் நடுவிலும் நாட்டு மக்களின் வாழ்க்கை அம்சங்களைக் கூர்ந்து நோக்கி அறியும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொண்டார். இவரைப்போல், கோடிக்கணக்கான மக்களிடம் நெருங்கிப்பழகிய வேறு ஒருவரைக் காண்பது அரிது. குழந்தைகளை அவர் மிகவும் நேசித்தார். குழந்தைகளிடம் அவருக்கிருந்த அன்புதான், அவர்களுக்கு உரிய பொருத்தமானதொரு கல்விமுறையை வகுக்க அவரைத் தூண்டியது. அவர், நேரடியாகப் பள்ளிகளுக்குச் சென்று ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரிடம் கலந்து உரையாடி, கல்வி முறையினைப் பற்றி அறிந்து கொண்டார். ஆங்கிலேயரால்

அமைக்கப்பட்ட கல்வி முறை இந்த நாட்டுக்கு உகந்ததல்ல என்று தெரிந்து கொண்டபின், நம் நாட்டுக்குரிய பொருத்தமான கல்வி முறையை அமைக்கக் கல்வியில் சோதனைகள் பல செய்தார்.

முதலில் தம் குழந்தைகளுக்குத் தக்க கல்விப்பயிற்சி அளிக்கத் தொடங்கினார். பின்னர் தென்னாப்பிரிக்காவில் ஸ்பிக்ஸ்பார்க் (Spinx Park), டால்ஸ்டாய் பண்ணை (Tolstoy Farm) ஆகிய இடங்களிலும், நம்நாட்டில் சம்பாரான் பள்ளிகள், சபர்மதி ஆசிரமம் ஆகியவற்றிலும் சோதனைகள் பல மேற்கொண்டார். இச்சோதனைகளின் விளைவே ஆதாரக் கல்வித்திட்டமாக உருவெடுத்தது.

காந்தியடிகளின் கருத்துப்படி, கல்வியின் நோக்கம் தனிமனிதர்களை உருவாக்குவது மட்டுமன்று; சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் வாழும் ஆண்களையும், பெண்களையும் உருவாக்குவதும் ஆகும். இத்தகைய சமூக உணர்வு, கல்வியின் முக்கியமான பகுதியாக அமைய வேண்டும்.

கல்வியின் மூலம் மாணவர்களிடம் சிறந்த ஒழுக்கத்தை வளர்ப்பது அவசியம் என்று காந்தியடிகள் கருதினார். தனி மனிதனின் தூய வாழ்க்கைக்குக் கல்வி உதவவேண்டும். கல்வியில் சமயப் பயிற்சியும் சிறப்பிடம் பெறவேண்டும்.

# 27. சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா

வித்யாலயத்தில் 1936-ல் ஸ்ரீ ராமகிருஷ்ணர் நூற்றாண்டு விழாவும், 1953-ல் அன்னை சாரதாமணி தேவியார் நூற்றாண்டு விழாவும் அதையொட்டி ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆலயத் திறப்பு விழாவும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. 1963-ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா, உலகத்தின் பல பகுதிகளிலும் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. 1893-ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற சர்வசமய மாநாட்டில் அவர் கலந்து கொண்டது உலக மக்களிடையே பெரிய தோர் உணர்ச்சியைத் தோற்றுவித்திருந்தது. அவர் அணிந் திருந்த காவியுடையும், அவரது கம்பீரமான தோற்றமும் அம் மாநாட்டில் கலந்து கொண்ட மற்ற சமயங்களைச் சேர்ந்த மத குருமார்களையும், சமயவாதிகளையும் மிகவும் கவர்ந்தன. அவர் பேச எழுந்ததும் அப்பெரிய அவையில் அமர்ந்திருந்த அனை வரையும் அவரது ஒளிபடைத்த கண்கள் சுற்றி நோக்கின. அவரது உரையைக்கேட்க அவையினர் அமைதியாக இருந்தனர். அறிவுத் தெய்வமாம் கலைமகளை மனதார வழிபட்டு அவர் தம் பேச்சை, ''அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே, சகோதரர்களே!'' என்று தொடங்கினார். அடுத்த சொல்லைக் கூறத்தொடங்குமுன் அந்த அவை முழுதும் ஒரு பெருத்த மகிழ்ச்சி ஆரவாரம் தோன்றியது. நூற்றுக்கணக்கானோர் எழுந்து நின்று கைதட்டி ஆரவாரம் செய் தனர். அவைமுழுதும் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது; வாழ்த் தொலிகள் வானை எட்டின. இரண்டு நிமிடநேரம் அவரால் எதுவும் பேச இயலவில்லை.

ஆரவாரம் அடங்கி அவையில் அமைதி நிலவத் தொடங்கியது. உலகின் மிகப்பழைய முனிவர்களின் பெயரால், வேதகாலத்துச் சந்நியாசிகளின் பெயரால் அமெரிக்க நாட்டிற்கு நன்றி தெரிவித் தார். தம் பேச்சைத் தொடங்கி இந்து சமயத்தை, 'உலகிற்குச் சமயச் சகிப்புத்தன்மையையும், சமய ஏற்புத் தன்மையையும்

போதித்த சமயங்களின் தாய்' என்று அறிமுகப்படுத்தித் தம் பேச்சைத் தொடர்ந்தார். இந்து சமய நூல்களிலிருந்து அவர் இரு மேற்கோள்களை எடுத்துக் கூறினார்: அவற்றுள் ஒன்று, பல்வேறு இடங்களில் தோன்றும் ஆறுகள் அனைத்தும் இறுதியில் கடலில் சென்று கலப்பதைப் போல், பல்வேறு நம்பிக்கைகளைப் பின் பற்றும் சமயங்கள் யாவும் ஒரே இறைவனைத்தான் நாடிச் செல்கின்றன. மற்றொன்று, எந்த வடிவில் ஒருவர் என்னை வணங்கினாலும் நான் அந்த வடிவில் செல்கிறேன். பல்வேறு மார்க்கங்களில் செல்வோரும் இறுதியில் என்னையே வந்து அடை கின்றனர். அவரது சொற்பொழிவு சுருக்கமாகவே இருந்தது. ஆனால் அதில் பொதிந்திருந்த சமரச உணர்வு, பரந்தநோக்கு, ஆர்வம் ஆகியன அவையினர் அனைவரின் உள்ளங்களையும் ஒருங்கே பற்றி ஈர்த்தன. அனைத்துச் சமயங்களின் உண்மைகளும் ஒன்றே என்றும், அனைத்துச் சமய அமைப்புகளின் நோக்கங் களும் ஒன்றே என்பதை அந்த அவையில் பிரகடனப்படுத்தினார் சுவாமிஜி. சுவாமிகளின் இந்த உரையினால் நவீன உலகின் அனைத்துச் சமயங்களின் ஒருமைப்பாட்டிலும் புதிய சகாப்தம் ஒன்று தோன்றியது.

விவேகானந்தர் நூற்றாண்டுவிழா உலகம் முழுவதிலும் கொண் டாடப்பட்டது. பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், நூல்நிலையங்கள், சங்கங்கள் ஆகியவற்றில் சொற்பொழிவுகள், கலைநிகழ்ச்சிகள், இலக்கியப்போட்டிகள் ஆகியன தனிப்பட்ட முறையிலும், ராமகிருஷ்ண மிஷன் தலைமையகத்தின் சார்பிலும் நடைபெற்றன. இவற்றுடன், சுவாமி விவேகானந்தரின் படைப் புகள் அனைத்தையும் பல்வேறு வட்டார மொழிகளில் வெளியிட வும் ஏற்பாடுகள் செய்யப் பட்டன. ராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவற்றின் பல்வேறு மையங்களில், சுவாமிஜியின் வாழ்வும் வாக்கும் பற்றிய நூல்கள் பலவும், நினைவு மலர்களும் பல்வேறு மொழிகளில் வெளியிடப்பட்டன. தனிப்பட்ட நிறுவனங்கள் பலவும் இத்தகைய வெளியீடுகளைக் கொணர்ந்தன. அகில இந்திய துறவிகள் மாநாடு ஒன்றும் காசியில் நடைபெற்றது. ஆசிய, ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சோவியத்யூனியனில், மாஸ்கோ நகரில் நட்பு இல்லத்திலும் (House of Friendship), லெனின் கிராட் பல்கலை கழகத்திலும் விழாக்கள் பல நிகழ்ந்தன. ஆசிய மக்கள் கழகம் (Institute of the peoples of Asia), சோவியத் யூனியனின் தத்துவக் கழகம் (The Institute of Philosophy, USSR), விஞ்ஞானக் கழகம் (The Academy of Science) ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக அறிவியல் கூட்டம் (Scientific Session)

ஒன்று நடைபெற்றது. இதற்கு P. N. ஃபெடோசீவ் தலைமை வகித்தார். ஜப்பான் நாட்டின் எட்டுப் பல்கலைக் கழகங்களில் சொற்பொழிவுகளும், கூட்டங்களும் நடைபெற்றன; அமெரிக்க ஐக்கிய நாடுகளில், ராமகிருஷ்ண மையங்களில் சமய ஆராதனைகள், கூட்டுப்பாடல் நிகழ்ச்சி, சொற்பொழிவுகள், போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்த மற்ற பல நிறுவனங்களும் விழாக்களைக் கொண்டாடின. ஐக்கியநாடுகள் சங்கத்தின் செயலரான U. தாண்ட் அவர்கள், 'சுவாமி விவேகானந்தர் உலகின் மிகப் பெரிய மனிதர்; இந்தியாவின் மிகப் பெரிய ஆன்மிகத் தூதுவர்,'' என்று சுவாமிகளுக்குப் புகழ்மாலை சூட்டினார்.

சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழாவின் ஒருவாரகால நிறைவு விழா 1964 ஜனவரி 6-ஆம் நாள் அதிகாலையில் பேலூர் மடத்தில் தொடங்கிற்று. அன்று சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள். உலகின் அனைத்து மொழிகளிலும் வெளிவந்த, ராமகிருஷ்ண - விவேகானந்த இலக்கியப் படைப்புகளின் கண்காட்சி, நூற்றாண்டு நிறைவு விழாவின் தனிச் சிறப்பாகும். அன்று மாலையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் சுவாமி பிரபவானந்தரின் தலைமையில் பல அறிஞர் பெருமக்கள் உரை நிகழ்த்தினர். கல்கத்தாவில் அகில இந்திய இசை மாநாடு, அகில இந்திய மாதர் மாநாடு, சர்வசமய மாநாடு, மற்றும் பல நிகழ்ச்சிகளுக்கு நூற்றாண்டு விழா மத்தியக்குழு ஏற்பாடு செய்திருந்தது. எட்டு நாட்கள் நடைபெற்ற சர்வசமய மாநாட்டு நிகழ்ச்சிகளை ராமகிருஷ்ண மிஷனின் தலைவர் சுவாமி மாதவானந்தர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். வெளி நாடுகளிலிருந்து வந்த பிரதிநிதிகளுள் டாக்டர் ஜார்ஜ் ஃபோஹ்ரர் (ஜெர்மனி), டாக்டர் திருமதி மரியா பர்கி (சுவிட்சர்லாந்து), டாக்டர் மிராஸ்லாவ் நோவாக் (செக்கோஸ்லோவாக்கியா), பேராசிரியர் அப்ரஹாம் N. போலியாக் (இஸ்ரேல்), பேராசிரியர் H. H. கிமுரா, திரு குமவோ (கென்யா), திரு நிஷின் உச்சிகாகி (ஜப்பான்), திரு கிருஸ்டபர் இஷர்வுட் (அமெரிக்க ஐக்கிய நாடுகள்) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

வித்யாலயத்திலும் கோவை மனையியல் கல்லூரியிலும், சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் பக்தி சிரத்தையுடனும், ஆர்வத்துடனும் செய்யப் பெற்றன. இவ்விரு இடங்களிலும் 101 மணி நேர அகண்ட பூஜை நிகழ்ந்தது. 1963 ஜனவரி 12-ஆம் நாள் காலை 6-49 மணிக்கு அகண்ட பூஜைகள் தொடங்கின. தேவாரம்

திவ்வியப் பிரபந்தம், அருட்பா, குழுக்களின் பக்தி இசை, வித்யா லயத்தின் பல்வேறு நிறுவனங்களின் மாணவர்களின் பஜனை, அகண்ட அர்ச்சனை ஆகியன தொடர்ந்து நடைபெற்றன. கோவை மனையியல் கல்லூரியில் அச்சமயத்தில் பயிற்சி பெற்று வந்த, அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரேசில், எதியோப்பியா, கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் தங்கள் பக்திப்பாடல்களைப் பாடினார்கள். பல்வேறு சமயங் களைச் சேர்ந்த புனித நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் வாசிக்கப்பெற்றன.

நூற்றாண்டு விழாவையொட்டி, வித்யாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்: 1. சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழாக் கட்டிடத்தை, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். ராதா கிருஷ்ணன் அவர்கள் திறந்து வைத்தமை. 2. நூற்றாண்டு நினைவாக, கவுண்டம்பாளையத்தில் தொடக்கப்பள்ளிக்கான கட்டிடம் கட்டித் தந்தமை. 3. Educational Philosophy of Swami Vivekananda (சுவாமி விவேகானந்தரின் கல்வித் தத்துவம்) என்ற ஆங்கில நூலும், 'திருக்குறள் ஆராய்ச்சி' என்ற தமிழ் நூலும் வெளியிடப்பட்டமை.

வித்யாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுள் குறிப்பிடத்தக்கது, 'கல்வியில் ஆன்மிகப்பண்புகள்' (The Place of Spiritual Values in Education) என்ற பொருளில் நடைபெற்ற மூன்று நாள் கருத்தரங்கு ஆகும். தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகிய பல்வேறு நிலைகளில் ஆன்மிகப் பண்புகளை வளர்க்கும் வழிமுறைகள் பற்றி இக்கருத்தரங்கு ஆராய்ந்தது. கருத்தரங்கின் உறுப்பினர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து ஆய்வு செய்து தங்கள் பரிந்துரைகளை அறிக்கைகளாகச் சமர்ப் பித்தனர். தென்னகத்தின் பல்வேறு மாநிலங்களின் கல்வியமைச் சர்கள், மத்திய அரசின் கல்வித் துறையால் அனுப்பப்பட்ட பிரதி நிதிகள், ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். இவர்களுடன் சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் T. M. P. மகாதேவன், கேரளா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் N. P. பிள்ளை, டாக்டர் திருமதி ராஜம்மாள் P. தேவதாஸ் (முதல்வர், மனையியல் கல்லூரி), டாக்டர் K. குழந்தைவேல் (முதல்வர், ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய ஆசிரியர் கல்லூரி), டாக்டர் சந்திரன் தேவநேசன் (முதல்வர், சென்னை கிறித்தவக் கல்லூரி), திருமதி பஷீர் அகமது சையத் (நிறுவனர், S. I. E. T. கல்லூரி, சென்னை) ஆகிய அறிஞர் பெருமக்களும் கலந்து

கொண்டனர். இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் S. ராதா கிருஷ்ணன் அவர்கள் ஆற்றிய சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழாத் தொடக்க உரை குறிப்பிடத் தக்கதாகும். இதற்கு திருமதி லட்சுமி N. மேனன் (அன்றைய வெளி விவகார அமைச்சர்) தலைமை தாங்கினார்.

அதே ஆண்டில், இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன், தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆகியோர் சுவாமி விவேகானந்தரின் வாழ்வும் வாக்கும் என்னும் பொருள்பற்றிச் சிறப் புரைகள் ஆற்றினர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர். சி. பி. ராமசாமி ஐயர், தாம் சுவாமி விவே கானந்தரை நேரில் கண்ட நினைவுகள் பற்றி உரையாற்றினார். ஜப்பான் நாட்டு ஒசாகாவைச் சேர்ந்த ராமகிருஷ்ண - விவேகா னந்தக் கழகத்தின் மூன்று பிரதிநிதிகளான திரு. நிஷின் உச்சிகாகி, செல்வி குமிகோ இனோல், செல்வி காயோ கவசாகி ஆகியோர், சுவாமிஜி உலகிற்கு அளித்த செய்திகளைப் பற்றிப் பேசினார்கள்.

சேலம், கோயமுத்தூர் மாவட்டங்களைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில், விவேகானந்தர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கல்லூரி மாணவர்களுக்காக கட்டுரை, நாடகம், பாட்டு ஆகியவற்றில் போட்டிகள் நடத்தப்பட்டன.

நூற்றாண்டு விழாவின் நினைவாக, கோவை மனையியல் கல்லூரியில் சுவாமி விவேகானந்தர் அரங்கு ஒன்று கட்டப்பட்டது. அது பின்னர் திருமதி இந்திரா காந்தி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கோவை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான பள்ளிகளில் சுவாமிஜியின் வாழ்வும் வாக்கும் பற்றிய சிறப்புரைகளுக்கு மனையியல் கல்லூரி ஏற்பாடு செய்தது. சுவாமி விவேகானந்தரின் வாழ்வும் வாக்கும் பற்றி டாக்டர் திருமதி. ராஜம்மாள் P. தேவதாஸ் அவர்களால் மாணவர் களுக்குரிய நூல் ஒன்று தமிழில் எழுதப்பட்டது.

# 28. திருக்குறள் ஆராய்ச்சி

தமிழ் நாட்டு மக்கள் தங்கள் தாய்மொழியைப் பற்றிப் பெருமை கொள்கிறார்கள். இந்தப் பெருமைக்குக் காரணங்கள் பல உண்டு. அது அருமையான இலக்கியச் செல்வத்தைப் பெற்றுள்ளது. அது 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே' தோன்றிய மூத்த மொழி. பண்டையக் காலத்தில் வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளே இந்தியாவில் இருந்தன என்றும், வடமொழி பேச்சு வழக்கு ஒழிந்துவிட்ட சமயத்திலும் தமிழ்மொழி ஒரு வாழும் மொழியாக இருந்து வருகிறது என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர். பண்டைய தமிழ் நூல்கள் முச்சங்கங்களைப்பற்றிக் கூறுகின்றன. சங்கம் என்ற சொல்லுக்கு மக்களின் குழு என்று பொருள். ஆகவே தமிழ்ச்சங்கம் என்பது தமிழ்ப் புலவர்களின் குழுவைக் குறிக்கும். கடைச்சங்கம் என்பது கி.மு. நாலாம் நூற்றாண்டுக்கும் கி. பி. முதல் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்திருக்கக்கூடும் என்றும், முதல் இரண்டு சங்கங்கள் இதற்கும் ஆயிரம் ஆண்டுகள் முற்பட்ட காலத்தில் இருந்திருக்கக்கூடும் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். முதலிரண்டு சங்க காலத்தின் நூல்கள் வெள்ளத்தாலும், கடற்கோளாலும் அழிந்திருக்க வேண்டும் என்றும், கடைச்சங்கத்தின் ஒரு சில நூல்கள் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன என்றும் கருதப்படுகிறது. தமிழ் நூல்களில் காலத்தால் மூத்தது தொல்காப்பியம். இது ஓர் இலக்கண நூல். திருக்குறள் கடைச்சங்க காலத்து நூல். எல்லா நாட்டவர்க்கும் எல்லாக் காலத்திற்கும், பொருந்திய அறக்கருத்துக்களைக்கூறும் நூல் அது.

தமிழ் மக்கள் தங்கள் தாய்மொழியாம் தமிழைப்பற்றி மிகவும் பெருமை கொள்கிறார்கள் என்று நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். இதுவே தமிழ் மக்களின் பலவீனமாகவும் உள்ளது. இந்தப் பலவீனத்தை, திரைப்படத் தயாரிப்பாளர்களும், அரசியல்வாதிகளும் தங்கள் சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தமிழ் மக்களை மனமார நேசிப்பதும், தமிழ் மக்களின் வறுமையையும், அறியாமையையும் போக்குவதற்கு ஒருவர் தம்மை

அர்ப்பணித்துக்கொள்வதுமே உண்மையான தமிழ்ப்பற்று ஆகும்; தமிழில் ஆழ்ந்த புலமை பெறுவதும், திருவள்ளுவர் போன்ற தமிழ்ச் சான்றோர்கள் கூறிய அறநெறியில் வாழ்வதும்தான் ஆகும். குறுகிய பிராந்தியப்பற்று, குறுகிய மனப்பான்மை, மற்றமொழிகளின் மேல் வெறுப்பு ஆகியவையே இன்று தமிழ்ப் பற்று என்ற பெயரில் நிலவுவது வருந்துதற்குரியதாகும். இது நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டையும் வலுவிழக்கச் செய்கிறது.

தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, புறநானூறு, திருமுருகாற்றுப்படை ஆகியன கடைச் சங்கநூல்களுள் சிலவாகும். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் தோன்றினர். இவர்கள் இயற்றிய நாலாயிரதிவ்வியப்பிரபந்தம், தேவாரம், திருவாசகம் ஆகியவை உலக பக்தி இலக்கியங்களுடன் ஒப்பிட்டுப் போற்றத்தக்கன. அதற்குப் பின் கம்பராமாயணம், பெரியபுராணம் ஆகிய காப்பியங்கள் தோன்றின. வால்மீகி ராமாயணத்தைத் தழுவி எழுதப் பட்டதாயினும், கம்பராமாயணம் தனக்கே உரிய தனிச்சிறப்புக் களைப் பெற்று உலகப்பெரும் இதிகாசங்களுள் ஒன்றாகக் கருதப் படுகின்றது. தாயுமானசுவாமிகள், குமரகுருபரர், இராமலிங்க சுவாமிகள் ஆகியோரும், சுப்பிரமணியபாரதியாரும் தற்காலத் தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தவர்கள்.

தமிழ்ப் புலவர் பெருமக்கள் பலருள்ளும், திருவள்ளுவர் என் உள்ளம் கவர்ந்து என் வாழ்க்கைக்கு வழிகாட்டியவர் ஆவார். அதே போன்று பக்தி இலக்கியங்களுள் என்னை மிகவும் ஈர்த்ததும் என் வாழ்க்கையில் பக்தியும் நம்பிக்கையும் ஊட்டியதும் திருநாவுக்கரசின் தேவாரம் ஆகும். திருவள்ளுவரைப் பற்றிக் கூறுமுன், திருநாவுக்கரசரைப் பற்றியும் அவரது பக்திப் பாடல்கள் பற்றியும் சில சொற்கள் கூற விரும்புகிறேன்.

'அப்பர்' என்று அழைக்கப்படும் திருநாவுக்கரசர் பண்பட்ட சைவக்குடும்பம் ஒன்றில் தோன்றியவர். அந்தக்காலத்தில் தமிழ் நாட்டில் நிலவிய சமணசமயத்தின் கொள்கைகளால் அவர் ஈர்க்கப்பட்டார். அவருடைய ஒரே தங்கையைப் போர் வீரன் ஒருவனுக்கு மணம் முடிக்க உறுதி செய்யப்பட்டது. ஆனால் திருமணத்திற்கு முன்பே மணமகன் போரில் இறந்துவிட்டான். அவனையே தன் கணவனாக மனதில் ஏற்றுக்கொண்ட பின்னர் வேறு ஒருவரைத் திருமணம் செய்து கொள்ள அவள் இசைய வில்லை. இறைவனின் மேல் பக்திபூண்டு தன் வாழ்க்கையைக் கழித்தாள். வீட்டை விட்டுச் சென்று, சமண சமயத்தைத் தழுவிய

தன் அண்ணன் மீண்டும் வருவார் என்ற நம்பிக்கையில் தன் நாட்களை கழித்து வந்தாள். தாங்கமுடியாத வயிற்றுவலியால் பீடிக்கப்பட்டுத் தன் தங்கையின் வீட்டிற்குத் திரும்பி வந்தார் அப்பர். தன் தங்கையின் வேண்டுகோளுக்கு இணங்க அவர், சைவ சமயத்தை மீண்டும் தழுவினார்; அவருடைய வயிற்றுவலியும் தீர்ந்தது. அவரைத் தம் அவைக்குக் கொண்டு வருமாறு, சமண சமயத்தைச் சேர்ந்த அரசன் ஆணை பிறப்பித்தான். இந்த ஆணையை ஏற்க மறுத்துக் கீழ்க்கண்ட பாடலை அவர் பாடினார்:

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை அல்லோம்

ஏமாப்போம் பிணி அறிவோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை

தாமார்க்கும் குடி அல்லாத் தன்மையான
சங்கரன் நற் சங்கவெண் குழையார்காதில்

கோமார்க்கே நாம் என்றும் மீளாஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியினையே குறுகினோமே.

இதனால் சினமுற்ற அரசன், அவரைக் கல்லில் கட்டிக் கடலில் போடுமாறு கூறினான்.

திருநாவுக்கரசர் வேறு ஒரு பாடலைப் பாடினார்:

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ

கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே.

இதனால் மேலும் சினமுற்ற அரசன், யானையை ஏவித் திருநாவுக்கரசரை மிதிக்கச் செய்யுமாறு கட்டளை பிறப்பித்தான். இதற்கும் அஞ்சாத நாவுக்கரசர்,

சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர்திங்கள் சூளா மணியும்

வண்ண உரிவை உடையும்
வளரும் பவள நிறமும்

அண்ணல் அரண் முரண் ஏறும்
அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

என்ற பாடலைப் பாடினார்.

யானை அவரை மிதிக்காமல் ஓடிச்சென்றது. இறைவன்மேல் நம்பிக்கையுடன் ஒருவர் தம் கடமையைப் பயன் கருதாது செய்ய வேண்டும் என்பதை,

நின் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே.

என்ற வரிகளில் கூறுகிறார்.

அவரது நம்பிக்கையையும், அஞ்சாமையையும் விளக்கும் மற்றொரு பாடல்:

வானம் துளங்கில் என்? மண் கம்பம்
ஆகில் என்? மால் வரையும்
தானம் துளங்கித் தலை தடு
மாறில் என்? தண் கடலும்
மீனம்படில் என்? விரிசுடர்
வீழில் என்? வேலை நஞ்சுண்(டு)
ஊனம் ஒன்று இல்லா ஒருவனுக்(கு)
ஆட்பட்ட உத்தமர்க்கே?

பணம், சாதி, அதிகாரம் ஆகியவற்றைத் திருநாவுக்கரசர் பெரிதென நினைக்கவில்லை. பக்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியவராக அவர் திகழ்ந்தார். சமணர்கள் தமக்கு இழைத்த கொடுமைகளிலிருந்து தம் பக்தியாலும், இறைத்தன்மையாலும் மீண்டார். தமிழ்நாடு முழுவதும் அவர் யாத்திரை செய்தார்; சிவபெருமானின் புகழ் பாடியதோடு நில்லாமல், திருத்தலங்களில் உழவாரப்படைகொண்டு துப்புரவு செய்தார். உடல் உழைப்பிற்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்கும், கோயில்களைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்பதற்கும் இது ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. மனிதன் புலன்களை வென்று உயர்ந்த வாழ்க்கை வாழவேண்டும் என்றும், தன்னை முழுவதும் இறைவனிடம் அர்ப்பணித்துவிட வேண்டும் என்றும் அவரது பாடல்கள்

வலியுறுத்துகின்றன. மற்றவர்கள், 'பிறவி வேண்டாம்' என்று கூறியபோது, திருநாவுக்கரசர் இறைவனின் திருநடம் காணப் பிறவி வேண்டும் என்ற கருத்தை,

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
    குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில்
    பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்
    காணப்பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த
    மாநிலத்தே.

என்ற பாடலில் கூறுகிறார்.

அவருடைய பாடல்கள் அவரது இதயத்தின் ஆழத்திலிருந்து ஊற்றெடுத்துப் பொங்கி, ஏழை-பணக்காரன், சிறியவர்-முதியவர், படித்தவர்-பாமரர் என்ற வேறுபாடின்றி அனைவரின் நெஞ்சங்களையும் நெக்குருகச் செய்வன.

நான், சைவ மரபில் வளர்ந்தவன் என்ற காரணத்தால், நாவுக்கரசரிடம் திகழ்ந்த அற்புதப் பண்புகளான இறைவனிடம் ஆழ்ந்த நம்பிக்கையால் வரும் ஆண்மை, எளிமை, அன்பு, பணி ஆகியன என்னை மிகவும் ஈர்த்து எனக்கு ஆர்வத்தை ஊட்டின. வித்யாலயத்தின் ஆயிரக்கணக்கான மாணவர்கள் திருநாவுக்கரசரின் அருள்மொழிகளால் ஈர்க்கப்பட்டு நல்லுணர்வு பெற வேண்டும் என்பதற்காக வித்யாலயத்தின் கட்டிடங்களுள் ஒன்றிற்கு 'அப்பர் இல்லம்' என்ற பெயரைச் சூட்டியதுடன், வித்யாலயப் பிரார்த்தனைகளில் அவரது பாடல்களைப் பாடவும் ஆவன செய்யப்பட்டுள்ளன.

திருக்குறள் கருத்துக்களுக்கும் திருநாவுக்கரசர் பாடல்களுக்கும் இடையே பல வேறுபாடுகள் உண்டு. திருநாவுக்கரசரின் பக்திப் பாடல்கள் நம் உணர்வுகளைக் கவர்ந்து ஈர்ப்பன; திருக்குறட் பாக்கள் அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டுவன. அப்பரின் பாடல்கள் சைவ சமய நெறியைச் சார்ந்தன; திருக்குறள் அனைத்துச் சமயங்களுக்கும் உரியது. அப்பரது பாடல்கள் அனைவராலும் இசையுடன் பாடுதற்கு உரியன; பக்தி உணர்வை ஊட்டுவன. ஆனால் குறட்பாக்கள் பெரும்பாலும் நம் அறிவுக்கு விருந்தளித்து ஆய்வுக்கு இடமளிப்பன. எண்ணற்ற புலவர்களும், அறிஞர்களும் திருக்குறளுக்கு விளக்க உரைகளும்

ஆய்வுரைகளும் எழுதியுள்ளனர். அண்மைக் காலத்தில் வாழ்ந்தவர் என்ற காரணத்தால் அப்பர் பெருமானின் வாழ்க்கை வரலாற்றுக்குத் தெளிவான சான்றுகள் உள்ளன. அவர் திருவடிகள் பட்ட திருக்கோயில்களுக்கு இன்றும் நாம் சென்று வருகிறோம். ஆனால் திருவள்ளுவரின் வரலாற்றைப் பற்றிய தெளிவான சான்றுகள் இல்லை. சிறுவனாக இருந்தபோது நான் ஒருசில குறட்பாக்களைப் படித்திருந்தாலும், நான் இளைஞனாக வளர்ந்த பின்னரே திருக்குறளின் ஆழத்தையும், நுட்பத்தையும் உணர்ந்து போற்றத் தொடங்கினேன். நான் அனுபவித்த பல சிறைவாசங்களின்போது திருக்குறளை விரிவாகப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. கடைசி முறையாக நான் வேலூர்ச் சிறையில் இருந்தபோது திருக்குறள் வகுப்புகளும் நடத்தினேன். கடுகைத் துளைத்து கடலைப் புகுத்தியதுபோல் மிகச் சிறிய குறட்பாவில் மிகப் பெரிய கருத்துக்கள் அடங்கியுள்ளதைக் கண்டு வியந்தேன். ஒவ்வொரு குறட்பாவிலும், நம் அன்றாட வாழ்க்கையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய வாழ்வு நெறிகள் அற்புதமாகக் கூறப்பட்டுள்ளன. இச்சீரிய கருத்துக்கள் நம் குழந்தைகளுக்கும் அளிக்கப்பட்டு அவர்கள் சான்றோர்களாக வளர உதவவேண்டும் என்ற எண்ணத்தால் உந்தப்பெற்றேன். அதனால், தமிழ் நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் திருக்குறளின் குறிப்பிட்ட பகுதிகளை முறையான பாடமாகக் கற்பிக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொணர்ந்தேன். எந்நாட்டவர்க்கும், எக்காலத்திற்கும் பொருந்திய கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டதால், திருக்குறள், இந்திய மொழிகள் பலவற்றிலும், உலகின் மற்ற மொழிகளான ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்ய போன்ற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இந்நூலுக்கு வெளிவந்துள்ள ஆங்கில மொழிபெயர்ப்புகள் ஏராளம். இதனைத் தமிழ் மக்கள் 'தமிழ்மறை' எனப் போற்றுகின்றனர்.

திருக்குறளின் கருத்துக்கள் காலங்கடந்தவை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் அதன் கருத்துக்கள் புதுமை மிக்கனவாய், படிப்பவர்க்கு ஊக்கம் ஊட்டுவனவாய் அமைந்துள்ளன.

திருக்குறளின் ஆண்மையும், வலிமையும் ஊட்டக்கூடிய கருத்துகளும், நேர்மை, ஒழுக்கம், அன்பு, அருள் ஆகியனபற்றிய கருத்துக்களும் என்னை மிகவும் ஈர்த்தன. 'இடுக்கண் வருங்கால் நகுக' 'உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்', 'உள்ளத்தனையது உயர்வு' போன்ற வலிமையூட்டும் கருத்துக்கள் அனைவர்க்கும் உரியன. செய்வதற்குக் கடினம் என்று விட்டுவிடாமல் முயல வேண்டும் என்பதை,

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

என்ற குறட்பா விளக்குகிறது.

தீயவர் நட்பு, தூய்மையற்ற வாழ்க்கை, ஆற்றலைத் தவறாகச் செலவிடல், சினம், சோம்பல், போன்ற தீய பண்புகளைக் கைவிடவேண்டும் என்றும், அறிவுடையார் தொடர்பு, பெரியாரைத் துணைக்கோடல் போன்ற நற்பண்புகளை வளர்க்க வேண்டும் என்றும் திருக்குறள் அறிவுறுத்துகிறது.

ஆன்ம முயற்சியே நமக்கு அனைத்து வலிமைகளையும் தரும் என்று அது கூறுகிறது. இத்தகைய முயற்சியே தவம் எனப்படும்.

தவம் செய்வார் தம் கருமம் செய்வார் மற்றெல்லாம்
அவம் செய்வார் ஆசையுட்பட்டு.

என்ற குறட்பா, ஒருவர் தம் கடமையைச் சிறப்பாகச் செய்வதே தவம் என்று கூறுகிறது.

திருக்குறள், இல்லறத்தார்க்கும், துறவிகளுக்கும், அனைத்துச் சாதி, சமயங்களைச் சேர்ந்த ஆண்-பெண்களுக்கும் உரிய நன்னெறிக் கருத்துக்களைக் கூறுகிறது அரசியல் ஆட்சியாளர்க்கும், நிர்வாகத்துறையினர்க்கும் பொருந்திய கருத்துக்களை அது தெளிவாக்குகிறது.

மிகச்சீரிய அறநெறிக் கருத்துக்களைக் கூறுவதுடன், கவி அழகும் மிக்க நூல் திருக்குறள். அழகிய உவமைகளும் நகைச் சுவை உணர்வும் கொண்ட நூல் திருக்குறள்.

ஒவ்வொரு நாளும் காலை வழிபாடு, தியானம் ஆகியவற்றுக்குப்பின் ஒரு மணி நேரம் அமைதியாகப் படிப்பதற்குச் செலவழித்து வருகிறேன். இவ்வாறு நான் படித்த நூல்களுள், திருக்குறள், சைவ, வைணவ பக்தி நூல்கள், பகவத்கீதை, ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் ஆகியன குறிப்பிடத்தக்கன.

திருக்குறளைப் படிப்பவர்கள், அது ஆய்வு செய்யத்தக்க நூல் என்பதைப் புரிந்துகொள்வார்கள். திருக்குறளுக்கு ஏராளமான விளக்கவுரைகள் இதுவரை வெளிவந்துள்ளன. இவற்றுடன் அவ்வப்போது சிறு அளவிலான விளக்க நூல்களும் எழுதப்பட்டுள்ளன. இவ்விளக்க உரைகளுள், மணக்குடவர், பரிதி, பரிபெருமாள், காளிங்கர், பரிமேலழகர் ஆகியோரின் உரைகள் மட்டுமே கிடைத்துள்ளன. இவற்றுள்ளும் பரிமேலழகர் உரை மட்டுமே இன்று

பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. பல்வேறு உரையாசிரியர்களின் உரைகளைத் தொகுத்து இதுவரை யாரும் வெளியிடவில்லை. இவ்வளவு பெரிய அறநூலுக்கு இதுவரை பொருளகராதிகூடத் தயாரிக்கப்படவில்லை என்பதை அறிந்து வியந்தேன். தற்கால நூல்களுக்குத் தயாரிப்பது போன்ற பொருளகராதி திருக்குறளுக்கு அவசியம் என்று யாரும் இதுவரை நினைத்ததில்லை. பாட்டு முதற்குறிப்பு அகராதியும், அதிகாரங்களின் அட்டவணையுமே பரிமேலழகர் உரையுடன் சேர்க்கப்பட்டன. பல்வேறு பொருள்களைப்பற்றிக் கூறும் திருக்குறளுக்குப் பொருளகராதி அவசியம் என்பதை நான் உணர்ந்தேன்

திருவள்ளுவருக்குப் பின் வந்த புலவர்கள் திருக்குறளின் கருத்துக்களால் பெரிதும் ஈர்க்கப்பட்ட காரணத்தால், தங்கள் நூல்களில் திருக்குறட்பாக்களை முழுமையாகவோ அல்லது அதன் கருத்துக்களையோ எடுத்தாண்டுள்ளனர். இத்தகைய பகுதிகளைத் தொகுப்பதும், அந்நூலுக்குச் சிறந்ததொரு விளக்கத்தை கொடுக்கும். தற்காலத்துக்கு ஏற்றபடித் திருக்குறளின் பல கூறுகளையும் பகுத்தறிவதும் அவசியம். ஆகவே, திருக்குறள் பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றைக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் என்னுள் எழுந்தது.

சிறந்த பதிப்பாசிரியர் குழுவின் உதவியுடன் இப்பணியை வித்யாலயத்திலேயே செய்ய நினைத்தோம். இப்பணியை ஏற்றுச் செய்யவல்ல ஆழ்ந்த புலமையும், ஆர்வமும் உள்ள ஒருவர் கிடைப்பது அரிதாக இருந்தது. இருப்பினும், திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களைக் காட்டிலும் இப்பணிக்குப் பொருத்தமானவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் என்ற எண்ணம் தோன்றியது. அவர் ஆழ்ந்த தமிழறிவும், இலக்கியப் புலமையும் உள்ளவர். தமிழில் பல்வேறு பொருள்பற்றி நூல்கள் பல எழுதியுள்ளவர். பல நூல்களுக்குப் பரிசுகளும் பெற்றவர். மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யரின் மாணாக்கர். ஆகவே, சிறந்த பண்பாட்டுப் பின்னணியும், கடுமையான உழைப்பும் கொண்டவர். ஆழ்ந்த புலமை, அடக்கம், எடுத்ததைச் சிறப்பாக முடிக்கும் வல்லமை ஆகிய அரிய பண்புகள் கொண்டவர். திருக்குறள் ஆராய்ச்சிப் பணியை ஏற்றுக் கொள்ள அவர் அன்புடன் இசைந்தார். ஆனால் அப்பணியை அவர் சென்னையிலேயே செய்ய விரும்பினார். 1953-ஆம் ஆண்டில் வேறு சிலரின் உதவியுடன் அவர் இப்பெரும் பணியைத் தொடங்கினார். இப்பணி மிகவும் கடினமானதும், நீண்டநாட்களும் தொடர்ந்த முயற்சியும் கொண்டதாகும். இதற்குரிய விடா முயற்சியும், பக்தியும் கி.வா.ஜ. அவர்களிடம் இருந்தன

அவருடைய நேரடிப் பார்வையின் கீழ் அது அச்சிடப்பட்டு 1963ல் வெளியிடப்பட்டது. அவரது அன்பு, பக்தி, கடும் உழைப்பு ஆகியவற்றுக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

அந்த நூலில் அடங்கியுள்ளவை பற்றித் தம் முன்னுரையில் கி. வா. ஜ. அவர்கள் குறிப்பிட்டுள்ளார். திருக்குறள் மூலம், பரிமேலழகர் உரை, மணக்குடவர், பந்தியார், பரிபெருமாள், காளிங்கர் போன்றோரின் விளக்க உரைகள், மற்ற தமிழ் இலக்கியங்களில் திருக்குறட் கருத்துக்கள் கையாளப்பட்டுள்ள பகுதிகள் ஆகியன. சுப்பிரமணியபாரதியின் காலம்வரை இத்தகைய மேற்கோள் பகுதிகளை இந்நூலில் இடம் பெறச் செய்ய முதலில் நினைத்தோம். ஆனால் இந்நூலின் அளவு கருதி கம்பர் காலத்துடன் இதை நிறுத்திக் கொண்டோம். இந்நூலின் தனிச் சிறப்பு யாதெனில், திருக்குறளுக்குத் தனியாகவும் நூல்முழுமைக்குத் தனியாகவும் பொருளகராதிகள் இடம் பெற்றுள்ளதேயாகும். 1020 பக்கங்கள் கொண்ட இந்த ஆராய்ச்சிப் பதிப்பில் திருக்குறள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும், திருக்குறள் போதிக்கும் நெறிகள் பற்றிய கட்டுரைகளும் அடங்கியுள்ளன.

இந்த நூலின் பணிகளை இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்நூல் 1963-ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா நினைவுப் பதிப்பாக வெளியிடப்பட்டது.

# 29. வித்யாலயம் வளர்கிறது

கல்வியமைச்சராக நான் பொறுப்பேற்றுப் பணியாற்றியதால் கல்வித்துறையில் சிறந்த அனுபவமும், ஆழ்ந்த அறிவும் எனக்குக் கிடைத்தன. வித்யாலயத்தின் வளர்ச்சிக்கு இவை பெரிதும் துணைபுரிந்தன. அமைச்சர் பொறுப்பை முடித்ததும் நான் வித்யா லயத்தின் பொறுப்பை ஏற்றேன். அப்பொழுது வித்யாலயத்தில் உயர்நிலைப்பள்ளி, காந்தி ஆதாரப் பயிற்சிப்பள்ளி. தி. அ. தி. கலாநிலைய நடுநிலைப்பள்ளி, அரசுக் கல்வி அலுவலர் மற்றும் ஆசிரியர்களுக்கான ஆதாரக் கல்வி மறுபயிற்சி ஆகியன இருந்தன. சிறு தொழிற்பகுதி ஒன்றும், தொழிற் பயிற்சிப் பிரிவு ஒன்றும் இருந்தன .என் மூத்த சகோதரர் திரு T. S. கந்தசாமி செட்டியார், காலஞ்சென்ற தம் புதல்வி சீதாமணியின் நினைவாகக் கட்டித் தந்த கட்டிடத்தில் வித்யாலய கிராமப்புற மருந்தகம் செயல்பட்டு வந்தது. சுற்றுப்புறக் கிராம மக்களுக்கு அது மருத்துவ உதவி அளித்து வந்தது.

1950 க்கும் 1960 க்கும் இடைப்பட்ட பத்தாண்டுகள் வித்யா லயத்திற்கு வளர்ச்சியையும், அதே சமயம் சில இழப்புகளையும் தந்த காலமாகும். இந்தக் காலகட்டத்தில்தான் பல்கலைக் கழகத்துடன் இணைந்த சில நிறுவனங்களும், உயர்நிலைப் பள்ளிக் கல்விக்கு மேற்பட்ட தொழிற்கல்வி நிறுவனங்களும் வித்யாலயத்தில் தொடங்கப் பெற்றன. இச்சமயத்தில்தான் அகில இந்திய அளவிலான கருத்தரங்குகள், செயலரங்குகள், மாநாடுகள் வித்யா லயத்தில் நிகழ்ந்தன. வித்யாலயத்தை இவை நல்ல முறையில் கல்வியுலகிற்கு அறிமுகப் படுத்தின. ஆனால் இந்தக் காலகட்டத் தில்தான் வித்யாலயத்திற்கு உதவியாயிருந்து அதன் இன்ப துன் பங்களில் பங்கு கொண்டு, தொடக்கக் காலத்திலிருந்த இன்னல் களை நீக்கித் துணைபுரிந்த பெருமக்கள் சிலரின் மறைவு, ஈடு செய்யமுடியாத இழப்பை வித்யாலயத்திற்குத் தந்தது. வித்யா லயத்தின் தூண்களுள் ஒருவராக இருந்த பெருமகனார் திரு V.C. வெள்ளிங்கிரிக்கவுண்டரின் அகால மரணம் எங்களைத் திடுக்கிடச் செய்தது. அவரது மறைவைப் பொருத்த வரையில் அது என் சொந்த இழப்பாகும்.

சில ஆண்டுகள் கழித்து நாங்கள் திரு T. A. இராமலிங்கம் செட்டியாரை இழந்தோம். அவரது தாயாரின் பெயரால் வித்யாலய உயர்நிலைப்பள்ளியில் கட்டப்பட்ட மீனாட்சி மண்டபமும், கோயில் கோபுரமும் அவரது அறச்சிந்தைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். திருப்பூர் அங்கப்பச்செட்டியார் தில்லையம்மாள் அறக்கட்டளை, இன்றும் தி. அ. தி. கலாநிலைய நடுநிலைப்பள்ளியின் பராமரிப்புக்கு உதவி செய்து வருகிறது இவ்வறக்கட்டளை தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர் திரு. T. A. இராமலிங்கம்செட்டியார் அவர்களே. அவரும் திரு T. M. சிவசுப்பிரமணியம் செட்டியாரும், திரு. T. A. சிவசுப்பிரமணியம் செட்டியாரும் இதன் அறங்காவலர்களாக இருந்தனர்.

வித்யாலயத்தின் பெரிய கட்டிடங்களுள், T. A. இராமலிங்கம் செட்டியார் நினைவுக்கட்டிடமும் ஒன்றாகும். அது அந்தக் காலத்திலேயே ரூபாய் ஒன்றே கால் லட்சம் செலவில் கட்டப்பட்டதாகும். அப்போது இந்தியக் குடியரசின் துணைத்தலைவராக இருந்த டாக்டர் S. ராதாகிருஷ்ணன் இக்கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இக்கட்டிடத்தை, திரு. இராமலிங்க செட்டியாரின் நண்பரும், திட்டக்குழுவின் துணைத் தலைவருமான திரு T. V. கிருஷ்ணமாச்சாரியார் 1955 பிப்ரவரி 4-ஆம் நாள் திறந்து வைத்தார். இத்திறப்பு விழாவிற்கு இந்திய அரசின் தொழில் அமைச்சர் திரு குல்ஜாரிலால் நந்தா அவர்கள் தலைமை தாங்கினார்.

ஆர்வமும், பக்தியும், ஒழுக்கமும் கொண்ட மற்றொருவர் திரு T. S. கல்யாணசுந்தரம். அவர் தம் வாழ்நாள் முழுதும் வித்யாலயத்தின் வளர்ச்சிக்காக உழைத்தார். அவர் தம் 42வது வயதிலேயே இறைவனடி சேர்ந்தார். அதனால், நேர்மையும், ஈடுபாடும் கொண்ட மற்றொரு ஊழியரை வித்யாலயம் இழந்தது. அவரது நினைவைப் போற்றும் வகையில் வித்யாலய உயர்நிலைப் பள்ளிப்பகுதியில் அழகிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. வித்யாலய உயர்நிலைப் பள்ளியின் உணவு விடுதி, உணவுப் பண்டகம், சமையலறை ஆகியன இக்கட்டிடத்தில் செயல்படுகின்றன. சுவாமி சர்வக்ஞானந்தர் தலைமையில் இக்கட்டிடத்தை, அப்பொழுது சென்னை அரசாங்கக் கல்வியமைச்சராக இருந்த திரு C. சுப்பிரமணியம் அவர்கள் திறந்து வைத்தார்.

### கோயில் திறப்பு விழா

வித்யாலய வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்ச்சி ஒன்று இக்கால கட்டத்தில் நிகழ்ந்தது. வித்யாலயத் தொடக்க நாட்களில் மீனாட்சி மண்டபத்தின் ஒரு பகுதியில் கோயில் இருந்து வந்தது.

வித்யாலயத்திற்கென அழகியதொரு கோயில் அமைக்கும் தருணம் வந்தது. நண்பர்கள், பக்தர்கள் ஆகியோரின் உதவியுடன் அழகிய தொரு கோயில் கட்டி முடிக்கப்பட்டது. அன்னை சாரதாதேவி யாரின் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக இக்கோயில் திறந்து வைக்கப்பட்டது. தூய்மை, உயர்ந்த வாழ்க்கை, ஆன்ம எழுச்சி ஆகியவற்றை மக்களுக்கு அளிக்கும் மையமாக வித்யாலயக் கோயில் அமைய வேண்டும் என்று எண்ணினோம். ஆழ்ந்த பக்தி, தன்னலமற்ற அன்பு, இடைவிடாத பிரார்த்தனை ஆகியவற்றால் கோயில் புனிதமடைகின்றது. இந்த நம்பிக்கையினாலேயே வித்யாலயக் கோயில் திறப்பு விழாவின்போது ஆறு நாட்கள் தொடர்ந்து அகண்ட பூஜை நடைபெற்றது.

தூய அன்னையாரின் 100வது பிறந்த நாளான 1952 டிசம்பர் 8-ஆம் நாள் அகண்ட பூஜை தொடங்கிற்று. அன்று அதிகாலை 4-15 மணிக்கு வாஸ்து பூஜை நடைபெற்றது. பழைய கோயிலிலிருந்து குருமகராஜின் திருவுருவப் படம் ஊர்வலமாக எடுத்துவரப்பெற்றுப் புதிய கோயிலில் வைக்கப் பட்டது. வாஸ்து பூஜைக்குப் பின் 6-15 மணிக்குக் காலை ஆரதி நடைபெற்றது. அப்போது தொடங்கப்பெற்ற அகண்டபூஜை, சுவாமி சிவானந்தரின் பிறந்த நாளான 13-ஆம் நாளன்று மாலை 6-30 மணிக்கு நிறைவுற்றது.

இவ்வகண்ட பூஜைகளில் இரு பகுதிகள் இருந்தன. பஜனை, வேத, உபநிடதப் பாராயணங்கள், தேவாரம், பிரபந்தம், திருப்புகழ், திருவருட்பா பாடல்கள் ஆகியன அகண்ட பூஜையின் முதல் பகுதியாகும். வித்யாலயத்தின் பல பகுதி களின் மாணவர்கள் பல குழுக்களாகப் பிரிந்து முறை வைத்துத் தொடர்ந்து பஜனை செய்தனர். காலையிலும் மாலையிலும் பூஜை, பிரார்த்தனை, ஆகியவையும் நடைபெற்றன. 10-ஆம் தேதி யன்றும் 13-ஆம் தேதியன்றும் ஹோமம் நடைபெற்றது. வேதபாராயணத்திற்குக் கோவையிலிருந்து பண்டிதர்கள் வந்தனர். திருவரங்கக் கோயிலிலிருந்து பிரபந்தம் பாடப் பிரபந்தக் குழுத் தலைவர் வந்திருந்தார். தருமபுர ஆதீனத்திலிருந்து தேவார ஓதுவார்கள் இருவர் தேவாரப்பண்கள் இசைத்தனர். திரு. திருப்பதி அவர்களும், திரு. மீனாட்சிசுந்தரம் அடிகளும் திருவருட்பாப் பாடல்களைப் பாடினார்கள். திருப்புகழ் மற்றும் பக்திப்பாடல்களைத் திரு. பித்துக்குளி முருகதாஸ் அவர்கள் பாடினார். நம் சாதுக்கள் சிலர் கீதைப் பாராயணம் செய்தனர். சென்னையிலிருந்து வந்த சங்கீர்த்தன பஜனைக்குழுவும் விழா வில் கலந்து கொண்டது. அகண்ட பூஜையின் மற்றொரு பகுதி

அகண்ட அர்ச்சனையாகும். வித்யாலயத்தின் பல பகுதிகளின் மாணவர்களும், வெளியிலிருந்து வந்த பக்தர்களும் எட்டு, எட்டுப் பேராகத் தொடர்ந்து ஆறு நாட்கள் அர்ச்சனை செய்தனர். சிவன் விஷ்ணு, முருகன். சக்தி ஆகிய தெய்வங்களுக்கு அவரவர் விருப் பத்திற்கேற்ப அர்ச்சனை செய்தனர்.

இவ்விழாவில், தொலைவான பகுதிகளிலிருந்தும் அருகில் உள்ள ஊர்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பங்கு பெற்றனர். ராமகிருஷ்ண இயக்கத்தைச் சேர்ந்த 22 சாதுக்களும், நான்கு பிரம்மச்சாரிகளும், மற்ற சாதுக்கள் 18 பேரும் விழாவில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆறு நாட்களில் டிசம்பர் 10 ஆம் நாளும், டிசம்பர் 13ஆம் நாளும் மிகவும் சிறப்பானவை. டிசம்பர் 10 ஆம் நாள் தூய அன்னையாரின் நூற்றாண்டு தினமாகையால் அன்று, குரு மஹராஜின் புதிய திருவுருவப் படத்தை, புதிய கோயிலின் கருவறையில் சுவாமி யதீஸ்வரானந்தர் பிரதிஷ்டை செய்தார். டிசம்பர் 13-ஆம் நாள் சுவாமி சிவானந்தரின் பிறந்த நாள். இந்த இரு நாட்களிலும் விசேட பூஜைகள், நைவேத்தியம், ஹோமம், மலர் அஞ்சலி ஆகியன நடந்தன.

**ஆசிரியர் கல்லூரி**

வித்யாலயத்தில் முதன்முதல் தொடங்கப்பெற்ற உயர் கல்வி நிறுவனம் ஆசிரியர் கல்லூரி ஆகும். ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், காந்தியடிகள் ஆகியோரின் கோட்பாடுகளை அடிப் படையாகக்கொண்டு பயிற்சி அளிக்கும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒன்றைத் தொடங்கவேண்டுமென்ற ஆவல் என் உள்ளத்தில் நீண்ட நாட்களாகவே இருந்து வந்தது. காந்தி ஆதாரப் பயிற்சிப் பள்ளியைத் தொடங்கியதால் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு இத்தகைய பயிற்சியைக் கொடுக்கும் எண்ணம் நிறைவேறியது. நான் வித்யாலயத்திற்குத் திரும்பி வந்ததும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் ஆசிரியர் கல்லூரியைத் தொடங் குவது என் முதல் முயற்சியாக இருந்தது.

வித்யாலயத்தின் 1950-1951 ஆம் ஆண்டு அறிக்கை கீழ்க் கண்டவாறு கூறுகிறது:

''வித்யாலய ஆசிரியர் கல்லூரியில் தனிச்சிறப்பான ஓர் அம்சம் உள்ளது. இந்தியா பெருமையடைய வேண்டு மென்றால் அது தன், கலாச்சாரப் பரம்பரையை உயர்த்திக்கொள்வதாலேயே முடியும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், காந்தியடிகள் ஆகியோர் தங்கள் வாழ்வாலும், வாக்காலும் புகட்டியதற்கேற்ப நம் சமயத்தை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். தற்போதுள்ள நம் அரசியல் சாசனத்தின்படி இதனை அரசுப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் செய்ய வழியில்லை. இந்து சமயத்தின் கொள்கைகளைப் பரந்த கண்ணோட்டத்துடன் பயிற்சிக்கல்லூரியில் போதிக்க வேண்டும். இதற்கான பாடங்கள் சர்வ சமய நோக்குடன் கற்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் நம் சமயத்தின் விரிந்த பொருளைப் புரிந்துகொள்வதுடன், மற்ற சமயங்களைப் போற்றவும் அறிந்துகொள்வார்கள். இத்தகைய பாடத்திட்டத்தால் கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் ஒழுக்கம் நன்கு சிறந்து பள்ளிகளின் தரம் உயரும்.''

வித்யாலய ஆசிரியர் கல்லூரி 1950 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், இந்துஸ்தானி தாலமி சங்கத்தின் செயலர் திரு. E. W. அரியநாயகம் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தொடக்க விழாவுக்கு, சென்னை அரசாங்கக் கல்வி அமைச்சர் திரு. கே. மாதவமேனன் தலைமை தாங்கினார். சைதாப்பேட்டை அரசினர் ஆசிரியர் கலலூரியின் ஓய்வுபெற்ற முதல்வர் திரு. K. R. அப்பளாச்சாரி, வித்யாலய ஆசிரியர் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றார். அடுத்து, கல்வித்துறையில் அமெரிக்காவில் டாக்டர் பட்டம்பெற்ற டாக்டர் M. கர்னலீயஸ் அம்மையார் முதல்வரானார். கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அறிந்து அத்துறையில் மேற்படிப்பும், பயிற்சியும் பெற்றவர், அவர்.

திரு K. அருணாசலம், திரு M. அறம், திரு K. குழந்தைவேலு ஆகியோர் பயிற்சிக்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டனர். அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்து ஒருசில ஆண்டுகள் வித்யாலயத்தில் பணியாற்றிவிட்டு டாக்டர் அறம் அவர்களும், திரு K. அருணாசலம் அவர்களும் காந்திய நிர்மாணப்பணிகளில் ஈடுபட வித்யாலயத்தை விட்டு வெளியே சென்றுவிட்டனர். அவர்களுக்குப்பின் டாக்டர் K. குழந்தைவேல் அவர்கள் ஆசிரியர் கல்லூரி முதல்வர் பொறுப்பை ஏற்று மிகச்சிறப்பாகப் பணியாற்றினார். அவரும், அவருக்கு உதவியாக இருந்த டாக்டர் H. விசுவேசுவரன் டாக்டர் T. R. சௌந்தரராஜராவ் ஆகியோரும் ஆசிரியர் கல்லூரியைச் சிறப்பாக வளர்த்துள்ளனர். வித்யாலய ஆசிரியர் கல்லூரி இந்தியாவிலேயே மிகச்சிறந்த ஆசிரியர் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இக்கல்லூரியில் B.Ed., M.Ed., M.Phil. Ph. D. ஆகிய படிப்புகள் உள்ளன. இக்கல்லூரியில் விரிவுப்பணித்

துறை, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி மற்றும் பல் வகையான பயிற்சிகளை அளிக்கச் செயல்பட்டு வருகின்றது. ஆசிரியர் கல்லூரியிலிருந்து கல்வி ஆராய்ச்சி மற்றும் விரிவுப்பணி பற்றிய சஞ்சிகை (Journal of Educational Research and Extension) ஒன்று வெளிவருகிறது. பார்வையற்ற மாணவர்களுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டத் (Integrated Education for the Visually Handicapped) தின் கீழ் ஆசிரியர் கல்லூரியில் M.Ed. பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இத்திட்டம் இந்தியாவிலேயே முதலாவது ஆகும். இத்திட்டத்தை டாக்டர் M.N.G. மணி மிகச்சிறப்பாக நடத்தி வருகிறார். இக்கல்லூரிக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் தன்னாட்சி வழங்கியுள்ளது. இந்தியாவிலேயே இத்தகுதியைப் பெற்ற ஒரே ஆசிரியர் கல்லூரி இதுதான்.

### கிராமியக் கல்வி நிறுவனம்

வித்யாலயத்தின் உயர்கல்வி நிறுவனங்களுள் இரண்டாவதாகத் தொடங்கப்பட்டது கிராமியக் கல்வி நிறுவனமாகும். இந்தியா சுதந்திரம் பெற்ற உடனேயே, உயர் கல்வியில் சீர்திருத்தங்கள் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்துடன் டாக்டர் S. ராதாகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் பல்கலைக்கழகக் கல்விக்குழு (University Education Commission) ஒன்று அமைக்கப் பட்டது. கிராமப்புறங்களில் உயர்கல்வி வளர்ச்சிக்கான வசதிகளைப் பெருக்க வேண்டுமென்று இக்குழு பரிந்துரைத்தது. அதன் பரிந்துரைகளுள் ஒன்று கிராமியப் பல்கலைக்கழகங்களை அமைப்பது. ஆகவே இதற்கான நோக்கங்களும், செயல் முறைகளும் அமைந்த திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டியிருந்தது. அப்போது இந்திய அரசின் கல்வியமைச்சராக இருந்த டாக்டர் K. L. ஸ்ரீமாலி அவர்களின் தலைமையில் குழு ஒன்று அமைக்கப் பட்டது. இக்குழு பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சென்று பார்த்து, இந்தியாவின் கிராமியக் கல்விக்கான திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்தது. கிராமிய உயர்கல்வி நிறுவனங்களை அமைப்பதற்கான பரிந்துரைகளைக் கூறி, அதற்கென, ஏற்கெனவே இத்துறையில் பணியாற்றிவரும் பத்து நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்தது.

இக்குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து நிறுவனங்களுள் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், காந்தி கிராமம் ஆகியனவும் அடங்கும்.

1955 ஆகஸ்ட் 29-ஆம் நாள் வித்யாலய கிராமியக்கல்வி நிறுவனம், அப்போது ஒரிஸ்ஸாவின் ஆளுநராக இருந்த திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்களால் தொடங்கப்பெற்றது.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி இத்திட்டம் கிராமிய இளைஞர் களுக்குக் கிராம வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்ட கல்விப் பயிற்சி அளிப்பதாகும். கிராமியக் கல்வி நிறுவனத்தில் மூன்று கிளை நிறுவனங்கள் இருக்கும். அவையாவன, விவசாயப்பள்ளி, பொறியியல் பள்ளி, கிராமிய உயர் கல்விக் கல்லூரி. வெறும் நூலறிவினால், அறப்பண்புகள், சமூக உணர்வு, நல்லொழுக்கம் ஆகியவற்றை வளர்ப்பது கடினம் என்பது பொதுவான கருத்து. கல்வி, விரிவுப்பணி, ஆராய்ச்சி ஆகிய மூன்றும் கிராமியக் கல்வி நிலையங்களின் மும்முனை அணுகுமுறைகளாக இருந்தன. இவற்றுள் கிராமங்களின் பிரச்னைகளை ஆராய்ந்து அப்பிரச்னை களைத் தீர்த்து வைத்தலும் கிராமப் பொருளாதாரத்தை உயர்த்து தலும் கிராமங்களில் புதிய தலைமையினை உருவாக்குதலும் சிறப்பிடம் பெறும்.

அ) விவசாயப் பள்ளி

உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்குப் பின் இரண்டாண்டுகள் இதன் பயிற்சிக்காலம். இப்பயிற்சிக்கான பாடத்திட்டத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, கிராமியப் பொருளாதாரம், கூட்டுறவு, விவசாயச் சட்டங்கள், விவசாயச் சந்தை, பொதுச் சுகாதாரம் ஆகியவற்றுடன் கிராம நிர்வாகம், கிராமத் தொழில் கள், காய்கறிகள், பழங்கள், மலர்கள் வளர்ப்புக்கலை, வனவளம். விவசாய விரிவுப்பணி, ஆகியன அடங்கும். இரண்டாண்டுப் பயிற்சி நிறைவு பெற்றதும் விவசாயப் படிப்புக்கான சான்றிதழ் வழங்கப்பெறும்.

ஆ) பொறியியல் பள்ளி

உயர்நிலைப் பள்ளிப்படிப்பிற்குப் பின் மூன்றாண்டுகள் தொடரும் கிராமிய சிவில் பொறியியல் படிப்பை இப்பள்ளி அளிக் கும். இப்படிப்பு முடிந்தவுடன் தேசியச் சான்றிதழ் வழங்கப்பெறும். இதன் பாடத்திட்டத்தில், சிவில் பொறியியல், மண்வளம் மற்றும் தண்ணீர்ப் பாதுகாப்பு' கிராமச் சுகாதாரப் பொறியியல், தண்ணீர் விநியோகம், கிராமிய வீட்டு வசதி, கிராமியச் சாலை அமைப்பு, கிராமிய விரிவுப்பணியை அடிப்படையாகக் கொண்ட மின் பொறியியல் மற்றும் இயந்திரப் பொறியியல் ஆகியன அடங்கும்.

இ) கிராமிய உயர்கல்விக் கல்லூரி

பல்கலைக்கழகங்களின் இளங்கலைப் பட்டப்படிப்புக்குச் சமமான கிராமசேவைப் பட்டயம் (Diploma in Rural Services) வழங்கும் படிப்பை இக்கல்லூரி வழங்கியது. இப்படிப்பில் இரண்டு

நிலைகள் உண்டு. 1) ஆயத்த வகுப்பு (Preparatory course) பல்கலைக்கழகத்தின் Pre university courseக்குச் சமமானது. 2) பட்டயம் (Diploma) வழங்கும் மூன்றாண்டுப்படிப்பு, அதற்கு மேல் இரண்டாண்டுகள் பட்டய மேல்படிப்பு (Post Diploma). இக்கல்லூரியின் பாடத்திட்டங்களில் அறிவியல் பாடங்களான இயற்பியல், கணிதம், வேதியியல் ஆகியவையும் கூட்டுறவு, சமூகக்கல்வி ஆகிய பாடங்களும் அடங்கும். முறையான இப்பாடத் திட்டங்களுடன், கிராமங்களின் தேவைகளை அறிந்து நிறைவு செய்வதற்கான கிராமப் பணியும் இப்படிப்பில் இடம் பெறும். கிராமியக் கல்லூரிக்குத் தகுதியும் திறமையும் வாய்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இக்கல்லூரியின் முதல்வராக டாக்டர் அறம் அவர்கள் முதலில் பொறுப்பேற்றார். அவரைத் தொடர்ந்து டாக்டர் O. R. கிருஷ்ணசாமி அவர்கள் அப்பொறுப்பை ஏற்றார். பொறியியல் பள்ளிக்குத் திரு V. சீனிவாச அய்யர் முதல்வராகப் பொறுப்பேற்றுத் தம் பணிகளைச் சிறப்பாகச் செய்து அதனை நல்லதொரு நிறுவனமாக வளர்த்தார். விவசாயப் பள்ளிக்குப் பல ஆண்டுகள் தகுந்த ஆசிரியர்களும், முதல்வரும் கிடைக்க வில்லை. சில ஆண்டுகளுக்கு முன் திரு T. கேசவன் முதல்வராகப் பொறுப்பேற்ற பின் அந்நிறுவனம் நல்ல வளர்ச்சி பெற்று வருகிறது.

தொடக்கத்திலிருந்தே கிராமிய உயர்கல்வி நிறுவனம் பல இன்னல்களை ஏற்கவேண்டியிருந்தது. இவை புதிய நிறுவனங்கள் என்ற காரணத்தினால் இவை அளிக்கும் சான்றிதழ்களையும், பட்டயங்களையும் மற்ற சான்றிதழ்களுக்கும் பட்டயங்களுக்கும் இணையானவையாக அங்கீகரிக்க அரசுக்கு நீண்டகாலம் பிடித்தது. இதனால் நாடெங்கிலும் இருந்த கிராமியக் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்தது. இதனால் இவற்றின் செலவுகளைச் சமாளிப்பதும் பெரும் பிரச்னையாயிற்று. அதனால் மிகச் சிறந்த முறையில் செயல்பட்ட கிராமியக் கல்வி நிறுவனங்களுக்கு இந்திய அரசு 'பல்கலைக்கழக அந்தஸ்து' (Deemed university Status) அளித்தது. இந்திய அரசின் கல்வி அமைச்சகம், வித்யாலய கிராமியக் கல்வி நிறுவனத்திற்கும், காந்திகிராமக் கிராமியக் கல்வி நிறுவனத்திற்கும் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்க முன் வந்தது. இதை ஏற்றுக்கொண்டு காந்திகிராம கிராமியக் கல்வி நிறுவனம் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றது. வித்யாலயத்திலும் இதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் செய்யப் பட்டன. ஒரு தாய் நிறுவனத்துடன் இணைந்த ஒரு கிளை நிறுவனத்திற்குப் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்க வழிவகை இல்லாமையால் வித்யாலயத்தை தனியான நிறுவனமாகப் பதிவு

செய்ய வேண்டும். அவ்வாறு வித்யாலயம் தனியாகப் பதிவு செய்யப்படும்போது அது மிஷனிலிருந்து பிரிந்து செல்வதாகவே கருதப்படும். வித்யாலயம் ஒரு பல்கலைக்கழகமாக உயர்வதை நான் மிகவும் எதிர்பார்த்த காரணத்தால், என்னுடைய ஏமாற்றம் எவ்வளவு பெரிதாக இருக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள். அதனால் அவர்கள், ''நீங்கள் இந்த நிறுவனங்களையெல்லாம் வளர்த்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் மிஷனிலிருந்து பிரிந்து செல்ல விரும்பினால் அதை உங்கள் விருப்பத்திற்கே விட்டு விடுகிறோம்,'' என்று சொன்னார்கள். நான் மிகவும் ஏமாற்றமடைந்து மனவேதனைப் பட்டேன். இது என் வாழ்க்கையில் ஏற்பட்ட மிகப் பெரும் சோதனை. பல்கலைக்கழக அந்தஸ்தை ஏற்குமாறு என்னை இந்திய அரசு பல முறை வற்புறுத்தியது. ஆயினும் நான் ராமகிருஷ்ண மிஷன் மீது கொண்ட விசுவாசமும், பக்தியுமே இறுதியில் வென்றன. ஆகவே என் நிலையையும், பல்கலைக் கழக அந்தஸ்தை ஏற்றுக்கொள்ள இயலாமையையும் நான் இந்திய அரசுக்கு விளக்கிக் கூறினேன்.

இறுதியில், வித்யாலய கிராமிய உயர்கல்விக் கல்லூரி, வித்யாலயக் கலைக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது. பொறியியல் பள்ளி, பாலிடெக்னிக்காக மாற்றப்பட்டு மாநிலத் தொழில் நுட்பக் கழகத்துடன் இணைந்தது. விவசாயப்பள்ளி தமிழ்நாடு அரசுடன் இணைக்கப்பட்டது. அண்மையில் அது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பட்டு, 'விவசாய கிராம வளர்ச்சி நிறுவனம்' என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது.

### வித்யாலயத்திற்கு வினோபாஜி அவர்களின் வருகை

1956 செப்டம்பர் மாதம் 21-ஆம் நாள் ஆச்சார்ய வினோபாஜி வித்யாலயத்திற்கு வருகை தந்தார். அவரை வரவேற்பதில் வித்யாலய ஊழியர்களும், மாணவர்களும் பெருமகிழ்ச்சியுற்றோம். பூதான இயக்கத்தில் ஈடுபாடுகொண்ட, எங்கள் ஊழியர்களில் சிலர், காந்தி ஆதாரப் பயிற்சிப் பள்ளி மாணவர்களின் துணையுடன் சுற்றுப்புறக் கிராமங்களில் பூதானப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். பூதானமாகப் பெற்ற 300 ஏக்கர் நிலமும், சந்தாவாகப் பெற்ற ரூ. 30,000/-ம் வினோபாஜியிடம் கொடுக்கப் பட்டன. அன்று மாலையில், வினோபாஜியின் கீதைப் பேருரைகள் (தமிழ்) 1000 பிரதிகள் விற்கப்பட்டன.

நிர்மாணப்பணிகள் நடைபெறும் வித்யாலயத்திற்குத் தாம் வந்ததுபற்றி வினோபாஜி மிகவும் மகிழ்ச்சியுற்றார். காந்தியடிகளால் அடிக்கல் நாட்டப்பெற்றுப் புனிதமடைந்த வித்யாலயத்

திற்கு வரும் வாய்ப்புப் பெற்றதற்குத் தாம் மிகவும் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். அன்று மாலையில் நடைபெற்ற வழிபாட்டுக் கூட்டத்தில், பிரம்மச்சரியத்தின் பொருள் பற்றியும், சிறப்புப்பற்றியும் விளக்கிப் பேசினார்.

அடுத்த நாள் அவர் தம் பாதயாத்திரையைத் தொடங்குமுன், வித்யாலய மாருதி உடற்கல்விக் கல்லூரிக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

**உடற்கல்விக் கல்லூரி**

1956-ஆம் ஆண்டில் கிராமியக் கல்வி நிறுவனம் தொடங்கப் பட்ட சமயத்திலேயே மாருதி உடற்கல்விக் கல்லூரியும் தொடங்கப் பட்டது. அதற்கான குறிக்கோள்களும், பின்னணியும் கீழே தரப் படுகின்றன :

உடற்கல்வி பற்றிய கருத்து அண்மைக் காலத்தில் மாற்றம் பெற்றுள்ளது. உடல் உறுப்புகளுக்குப் பயிற்சி கொடுப்பது மட்டும் அதன் நோக்கமன்று. உடற்பயிற்சியின் மூலம் முழு ஆளுமை வளர்ச்சி பெற்ற மனிதர்களை உருவாக்கும் நல்லதொரு கல்வித்திட்டமே அது. நல்ல உடல் நலம், உடல் உறுப்புகளுக்கான சரியான பயிற்சி, நற்குடும்பப் பயிற்சி, தொழிற்பயிற்சி, குடிமைப்பயிற்சி, ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் செலவழித்தல், உயர்ந்த ஒழுக்கம், சமூக உணர்வு, சுயக்கட்டுப்பாடு, போன்ற நற்பண்புகளை அளித்தலே சிறந்த உடற்கல்வியின் நோக்கமாகும்.

இந்தியா ஒரு பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பெற்ற நாடு. நமது யோக தத்துவம் உடற்கல்விக்கு ஒரு பெரிய நன்கொடை. தற்கால வாழ்க்கை நிலைகளுக்கு ஏற்ப, ஆசனங்கள், பிராணாயாமம் ஆகியவற்றை விஞ்ஞான முறையில் அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நம் கிராமிய நடனங்கள், கிராமியப் பாடல்கள் ஆகியவற்றை உடற்கல்வியுடன் இணைக்க வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன. இந்தத் துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும் மாருதி உடற்கல்விக் கல்லூரியின் நோக்கங்களுள் ஒன்றாகும். இந்த உடற்கல்விக் கல்லூரி மகாவீர் மாருதியின் பெயரைப் பெற்றுள்ளது. ஒவ்வொரு மனிதனும் வலிமையுடனும், ஆண்மையுடனும் வளர்வதற்கு நம்பிக்கையும், பக்தியும் அவசியம். தூய்மையான வாழ்க்கையும், தியாகமும், நல்வாழ்வின் இன்றியமையாத் தேவைகளாகும். மாருதியிடம் இவ்வரிய பண்புகள் அனைத்தும் ஒருங்கே இருந்தன. ஆகவேதான் இவ்வீரனின் பெயரைத் தேர்ந்தெடுத்தோம்.

உயர்நிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்களாகப் பணி யாற்றுவதற்கான குறைந்த பட்சத் தகுதியான உயர்நிலை சான்றிதழ் (Higher Grade Certificate) பயிற்சி மாருதிக் கல்லூரியின் தொடக்க ஆண்டுகளில் அளிக்கப்பட்டது. பின்னர் இக்கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டு, உடற்கல்வியில் இளங்கலைப் பட்டமும் (B.P.Ed.), முதுகலைப்பட்டமும் (M.P.Ed.) பெறுவதற்கான படிப்புகள் இடம் பெற்றன. தற்சமயம் விரிவுப்பணியும், ஆராய்ச்சியும் இக்கல்லூரித் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இந்தியாவிலுள்ள மிகச் சிறந்த உடற்கல்விக் கல்லூரிகளில் இதுவும் ஒன்றாகத் திகழ்கிறது.

1955-ல் இக்கல்லூரியின் நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ளும் தனி அலுவலராக (Special Officer) நியமிக்கப்பட்ட திரு N. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முதல்வர் பொறுப்பேற்று இக்கல்லூரியை மிகச்சிறந்த முறையில் நிர்வகித்துச் சமீபத்தில் ஓய்வு பெற்றார். தற்சமயம் டாக்டர் வீராசாமி அவர்கள் தலைமையில் இக்கல்லூரி சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

**சமூகக்கல்வி அமைப்பாளர் பயிற்சி மையம் (Social Education Organisers' Training Centre)**

அப்போது, சமூக வளர்ச்சித்துறைக்கான ராஜாங்க அமைச்சராக இருந்த திரு S. K. டே அவர்கள் சமூகக் கல்வி அமைப்பாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு வித்யாலயத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். அதில் இரு பகுதிகள் இருந்தன. ஆண்களுக்கான பயிற்சி ஒரு பகுதி; மற்றொரு பகுதி பெண்களுக்கான முக்கிய சேவகிகைகள் பயிற்சி. வித்யாலயத்தில் பெண்கள் பகுதி இல்லையாதலால் இவ் வேண்டுகோளுக்கு இசையவில்லை. ஆனால், பெண்களுக்கான பயிற்சியை, கோவை ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் டாக்டர் திருமதி ராஜம்மாள் P. தேவதாஸ் அவர்களின் மேற்பார்வையில் நடத்தலாம் என்று திரு. டே அவர்கள் கூறினார்கள். அதன்படி வித்யாலயம், மனையியல் கல்லூரி ஆகிய இரு இடங்களிலும் இப்பயிற்சி தரப்பட்டது. இப்பயிற்சி பல வருடங்கள் நடைபெற்றது. இறுதியில் இத்திட்டத்தை நிறுத்திவிடுவது என்று அரசு முடிவு செய்தது. வித்யாலயத்திலும், மனையியல் கல்லூரியிலும் கிராம சேவைப் பணிகளைச் சிறந்த முறையில் செயல்படுத்த இத்திட்டம் பெரிதும் உதவியாக இருந்தது. இத்திட்டத்தை அரசு நிறுத்தியபின், சமூகக் கல்வித்திட்டத்தை கலைக்கல்லூரியுடன் இணைத்து, புதியதொரு துறையைத் தொடங்கினோம். மனை

யியல் கல்லூரியில் இத்திட்டம் விரிவுப்பணித் திட்டத் துறையுடன் இணைக்கப்பட்டது.

**சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளி**

சுற்றுப்புறக் கிராம மக்களின் கல்வித் தேவையை நிறைவு செய்யும்பொருட்டு, 1960-ஆம் ஆண்டு சுவாமி சிவானந்தா உயர் நிலைப்பள்ளி தொடங்கப்பட்டது. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர்களுள் ஒருவரும், ராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவற்றின் தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றியவரும், வித்யாலய நிறுவனருக்குக் குருவாக இருந்து அருளாசி வழங்கியவருமான சுவாமி சிவானந்தரின் பெயரை இப்பள்ளிக்கு இட முடிவுசெய்யப் பட்டது.

உயர்நிலைப் பள்ளியாகத் தொடங்கப்பட்ட இப்பள்ளி தற் போது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற் கென அழகான கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு, ராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவற்றின் முன்னாள் தலைவர் சுவாமி வீரேசுவரானந்தர் அவர்களால் அது திறந்து வைக்கப்பட்டது.

வித்யாலயத்திற்கு அகில இந்திய அளவில் பெருமை சேர்க் கும்படி, வித்யாலயத்தில் நடைபெற்ற பல்வேறு, அகில இந்திய மாநாடுகள், கருத்தரங்குகள், செயலரங்குகள் ஆகியவற்றைப் பற்றிய விவரங்கள் கீழே தரப்படுகின்றன:

**1. அகில இந்திய ஆதாரக் கல்வி மாநாடு**

இம்மாநாடு 1949 மே 7, 8, 9-ஆம் நாட்களில் நடை பெற்றது. இம்மாநாடு இந்துஸ்தானி தாலமி சங்கத்தால் நடத் தப்பட்டது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து புகழ் பெற்ற கல்வியாளர்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டார்கள். இம்மாநாட்டிற்கு இந்துஸ்தானி தாலமி சங்கத்தின் தலைவரும் அலிகார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருமான ஜாகீர் உசேன் தலைமை தாங்கினார். சென்னை, ஒரிஸ்ஸா ஆகியவற் றின் கல்வியமைச்சர்களும், மற்ற மாநில அரசுகளின் பிரதிநிதி களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். ஆச்சார்ய விநோபா பாவே இம்மாநாட்டைத் தொடங்கி வைத்தார். சென்னை மாகாண முதலமைச்சர் திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா பொருட்காட்சியைத் திறந்து வைத்தார்.

இந்த ஆதாரக்கல்வி மாநாட்டின் தொடர்ச்சியாக, தமிழ்நாடு நிர்மாண ஊழியர்களின் மாநாடு மே 10, 11-ஆம் நாட்களில் நடைபெற்றது. இதற்கு திரு. O. P. ராமசாமி ரெட்டியார்

தலைமை வகித்தார். தமிழ்நாட்டில் நிர்மாணப்பணிகளின் பிரச்னைகள் பற்றி இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

### 2. ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய கருத்தரங்கு

ஐந்தாண்டுத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு நற்பயன்கள் கிட்டவேண்டுமானால், அதன் பல்வேறு அம்சங்களை மக்களும் மாநில அரசுகளும் தெரிந்து கொள்ள வேண்டும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய இக்கருத்தரங்கு வித்யாலயத்தில் 1955 பிப்ரவரி 4, 5, ஆகிய நாட்களில் நடைபெற்றது. கருத்தரங்கில் விவாதிக்கப்பட்ட தலைப்புகள்:

*சமுதாய வளர்ச்சித் திட்டமும், தேசிய விரிவுப்பணித் திட்டமும்* இத்தலைப்பின் கீழ், செலவினங்களில் குறைவு ஏற்படக் காரணங்கள், ஒதுக்கப்பட்ட நிதியை முழுவதுமாகப் பயன்படுத்தல், இப்பணியை நிரந்தரமாக நடத்த நிறுவனங்களை ஏற்படுத்துதல் கிராமங்களில் கூட்டுறவுத்துறை சரியாகச் செயல்படாமைக்குக் காரணங்கள், கிராமங்களில் குடிசைத் தொழில், சிறு தொழில் வளர்ச்சியில் உள்ள சிரமங்கள் ஆகியன விவாதிக்கப்பட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்: அதிகப்படியான தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல், தென்னகத்தில் தொழில்கள் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகள் அவற்றுக்கான சக்தி சாதனங்கள், மற்றும் மூலப்பொருள்களின் வாய்ப்பைப் பெருக்குதல். 3. நிலச்சீர் திருத்தங்கள்: இடைத்தரகர்களை ஒழித்தல், குத்தகைச் சீர் திருத்தங்கள், குத்தகை நிர்ணயம், குத்தகைதாரர் பாதுகாப்பு, நில உச்சவரம்புக்கான செயல் முறைகள், கூட்டுறவு விவசாயத்திற்கான சாத்தியக் கூறுகள், 4, நீர்ப்பாசனம் மற்றும் சக்தி சாதனத் திட்டங்கள்.

இக்கருத்தரங்கை வித்யாலயத்தில் நடத்துவதற்கு, திட்டக் குழுவும், மாநில அரசுகளும் மிகவும் உதவி செய்தன. விவாதத்திற்கான தலைப்புகளைப் பற்றிய குறிப்புகளைத் திட்டக்குழுவும், மாநில அரசுகளும் தயாரித்து முன்கூட்டியே அனுப்பி வைத்தன. இக்கருத்தரங்குக்கு அரசு அலுவலர்களும், அலுவலர் அல்லாதாருமாக மொத்தம் 50 பேர் மட்டுமே அழைக்கப்பட்டனர். திட்ட அமைச்சர் திரு குல்ஜாரிலால் நந்தா தலைமையில், திட்டக் குழுவின் துணைத்தலைவர் திரு V. T. கிருஷ்ணமாச்சாரி இக்கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்.

திரு. M. பக்தவத்சலம் (சென்னை மாநில தேசிய விரிவாக்கத் திட்ட அமைச்சர்), திரு. C. சுப்பிரமணியம் (சென்னை மாநிலத்

திட்ட அமைச்சர்), திரு. சென்னா ரெட்டி (ஹைதராபாத் அரசின் திட்ட அமைச்சர்), திரு. ஜெய்சுக்லால் ஹாதி (இந்திய அரசின் நீர்ப்பாசன மற்றும் சக்தி சாதனத் துணை அமைச்சர்) போன்ற அமைச்சர்களும் மற்றும் பல உயர் அலுவலர்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

1956 ஆகஸ்ட் 25, 26, 27-ஆம் நாட்களில், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வி பற்றிய பிரச்னைகளை விவாதிக்க, ஐந்து தென் மாநிலங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட மற்றொரு கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆதாரக்கல்வி, இடைநிலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, இளைஞர் நலம், கல்வி ஆராய்ச்சி மற்றும் விரிவுப்பணி, நிர்வாகப் பிரச்னைகள் பற்றி விவாதிக்கப்பட்டது. இக்கருத்தரங்கிற்கு இந்திய அரசு 5 பிரதிநிதிகளையும், சென்னை அரசு 8 பிரதிநிதிகளையும், மைசூர் அரசு 7 பிரதிநிதிகளையும், ஆந்திரா 2 பிரதிநிதிகளையும், ஹைதராபாத் 3 பிரதிநிதிகளையும் திருவாங்கூர்-கொச்சி 10 பிரதிநிதிகளையும் அனுப்பியிருந்தன. இவர்களைத் தவிர ஏழுபேர் சிறப்பு விருந்தினர்களாகவும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். இச்சிறப்பு விருந்தினர்களுள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் ராஜா சர் முத்தையா செட்டியார், காந்தி கிராமத்தைச் சேர்ந்த திரு. G. ராமச்சந்திரன், இந்துஸ்தானி தாலமி சங்கத்தின் செயலர் திரு E. W. அரியநாயகம், சென்னை விவேகானந்தா கல்லூரியின் தலைவர் சுவாமி கைலாசானந்தர் ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

வித்யாலயம் இவ்வாறு சிறப்பாக வளர்ந்து வந்த அதே கால கட்டத்தில் கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி, சிறப்பாக வளர்வதற்கு அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தது.

## 30. மனையியல் கல்லூரி

ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை சாரதாமணி தேவியார், சுவாமி விவேகானந்தர், காந்தியடிகள் ஆகியோர் வாழ்ந்து காட்டிய உயர்ந்த லட்சியங்களை அடிப்படையாகக்கொண்டு தொடங்கப்பட்டது மனையியல் கல்லூரி. பெண் கல்வியைப் பற்றி, சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்: 'பெண்களை மதித்த நாடுகள் யாவும் பெருமையடைந்துள்ளன. பெண்களை மதிக்காத நாடுகள் என்றும் பெருமை பெற்றதில்லை; பெறப்போவது மில்லை. சக்தியின் தோற்றங்களான பெண்களை மதிக்காத காரணத்தினால்தான் நமது நாடு மிகவும் தாழ்ந்த நிலையை அடைந்துள்ளது. தங்களது பிரச்னைகளைத் தாங்களே, தங்களுக் குரிய வழியில் தீர்த்துக்கொள்ளும் வண்ணம் நமது பெண்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். சமயத்தை மையமாக வைத்துப் பெண் கல்வி பரப்பப்படவேண்டும். பிரம்மச்சரியமும், நல்லொழுக்க மும் அதில் சிறப்பிடம் பெறவேண்டும். கற்பு நமது பெண்களின் பாரம்பரியப் பண்பானதால் அதை அவர்கள் எளிதில் புரிந்து கொள்வார்கள். இப்பண்பினையே அவர்களிடம் சிறப்பாக வளர்க்க வேண்டும். அதன் வலிமையின் காரணமாக அவர்கள் தங்களது உயர்ந்த பண்பாட்டிலிருந்து அணுவளவும் நழுவ மாட்டார்கள்.' வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் பெண் களுக்கு உயர்ந்த கல்வியளிக்கப்பட வேண்டும் என்று சுவாமிஜி விரும்பினார். ஆனால் அது எந்த வகையிலும் அவர்களது தூய வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் இருத்தல் கூடாது என்று எச்சரித்துள்ளார். மேலும் அவர் கூறுகிறார், 'உலக இலக்கியங்கள் அனைத்தையும் துருவிப்பார்த்தால்கூட, சீதையைப் போன்ற வேறு ஓர் உத்தமியைக் காணமுடியாது. தூய்மையினும் தூய்மையாய், பொறுமைக்கோர் இலக்கணமாய்த் திகழ்பவள் சீதை. நமது பெண்களை நவீனப்படுத்த எடுக்கும் எந்த முயற்சியும், சீதையின் இலக்கணத்திலிருந்து எள்ளளவு பிறழுமானாலும்கூட, இந்தியப் பெண்மைக்கே அது ஓர் இழுக்காக அமையும். ஆகவே இந்தியப் பெண்கள் சீதையின் அடிச்சுவட்டிலேதான் வளரவேண்டும்; வாழவும் வேண்டும்.'

காந்தியடிகள் கூறுகிறார்: ''ஆணும், பெண்ணும் சமநிலை உடையவராயினும் ஒன்றாகார். ஒருவரையொருவர் நிறைசெய்யக் கூடிய ஒப்பற்ற ஓர் இணை அவர்கள். ஆகவே, இவ்விருவரில் எந்த ஒருவரது நிலை பாதிக்கப்பட்டாலும், அது இருவருக்குமே அழிவைத் தரும். எனவே பெண் கல்விக்கான திட்டம் இக்கருத்தை அடிப்படையாகக்கொண்டு அமைய வேண்டும். வெளியுலக விவகாரங்களில் ஆண் மேலோங்கி நிற்பதால் இவ்விஷயத்தில் அவனுக்கு அதிக அறிவு அவசியம். ஆனால் இல்வாழ்க்கையில் பெண்ணின் பங்கு அதிகமாக இருப்பதால், குழந்தை வளர்ப்பிலும், அவர்களது கல்வியிலும், பெண்களுக்கு அதிக அறிவு தேவை.''

நமது காலத்திலேயே நம் கண்முன் வாழ்ந்து, அளவற்ற தூய்மைக்கும், அன்பிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியவர் தூய அன்னை சாரதா தேவியார். குருதேவரது வழிநடத்தலால் அவர் பெற்றிருந்த தூய்மை, பக்தி, தியாகம் ஆகியவை அவரைப் பெண்குலத்தின் ஒப்பற்ற எடுத்துக்காட்டாக விளங்கச் செய்தன. அவரது அன்பும் அருளும், நாடு, மொழி, இனம் ஆகியவற்றைக் கடந்து இருந்தன. சுவாமி விவேகானந்தரின் உன்னதச் சீடரான நிவேதிதை அன்னையாரைப்பற்றிக் கூறுகிறார்: ''இந்தியப் பெண்மையின் உயர்ந்த லட்சியத்தின் முடிவான கருத்தாக விளங்கினார் தூய அன்னையார். அவரது வாழ்க்கை, தூய்மையான தாய்மைக்கோர் அற்புத எடுத்துக்காட்டு. இப்பிரபஞ்சத்தின் தாய்மைத் தத்துவத்தின் உருவாகத் திகழ்ந்தார் அவர். அந்தத் தாய்மையில் மனிதத்தன்மையும், தெய்வீகமும் இணைந்து காணப்பட்டன.''

இந்தியப் பெண்களுக்குச் சேவை செய்யவும், பெண் குழந்தைகளுக்குக் கல்வியளிக்கவும் சகோதரி நிவேதிதை முன்வந்தபோது, அவருக்கு நல்வாழ்த்துக் கூறிய சுவாமிஜி, இத்தகைய சேவைக்குத் தேவையான தகுதிகளைக் குறிப்பிட்டு எழுதினார். ''ஒரு தாயின் இதயம், ஒரு வீரனின் மன உறுதி, தென்றலின் இனிமை ஆகியவற்றுடன், இந்திய குழந்தைகளுக்கு நீ தாயாகவும், சேவகியாகவும், தோழியாகவும் திகழ்வாயாக!'' மனையியல் கல்லூரிக்கும், மற்ற துணை நிறுவனங்களுக்கும் இத்தகைய பண்புகளும், தாயுள்ளமும் கொண்ட ஒருவர் கிடைக்க வேண்டும் என இறைவனை நான் மனமாரப் பிரார்த்தித்தேன். இறைவனின் அருளால் திருமதி ராஜம்மாள் P. தேவதாஸ் அவர்கள் மனையியல் கல்லூரிக்குப் பொறுப்பேற்றார்கள்.

அவர், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஓஹியோ பல்கலைக் கழகத்தில் சத்துணவு - மனையியல் துறைகளில் M. Sc. மற்றும்

டாக்டர் பட்டங்கள் பெற்றவர். அதோடு, அப்பல்கலைக் கழகத்தின் மிகவுயர்ந்த Sigma XI (Scientific Research), Sigma Delta Epsilon (Graduate Science Woman), Omicron NU (Home Economics Research), Phi Upsilon Omicron (Home Economics Professional Interest and Scholarship) போன்ற விருதுகளையும் பெற்றவர். அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் D. Sc. பட்டமும் (மனையியலில் மிக உயர்ந்த பட்டம்) பெற்றுள்ளார். சத்துணவுத் துறையில் அவரது பணியைப் பாராட்டி, இந்திய அரசு அவருக்கு 'ரஃபி அஹமத் கித்வாய்' விருதை அளித்துள்ளது.

இவ்வளவு உயர்ந்த கல்வித் தகுதியும், தேசிய அளவில் பரந்த அனுபவமும், சேவையுணர்வும் கொண்ட ஒருவர் மனையியல் கல்லூரியின் பொறுப்பை ஏற்க இசைந்தது ஓர் அரிய செயலாகும். அவரது ஒப்பற்ற தலைமையின் கீழ் நமது மனையியல் கல்லூரி இன்று இந்தியாவிலேயே மிகப்பெரியதும், தலைசிறந்ததுமான நிறுவனமாக வளர்ந்து புகழ் பெற்றுள்ளது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், பல வெளிநாடுகளிலிருந்தும் மாணவிகள் இங்குப் பயில வருகின்றனர்.

சாரதாலயா என்றழைக்கப்படும் மனையியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற முதல் சிறப்பு நிகழ்ச்சி ஸ்ரீ ராமகிருஷ்ணர் கோயில் திறப்பு விழாவாகும். 1956 டிசம்பர் 23 ஆம் தேதி தூய அன்னை சாரதா தேவியின் பிறந்த நாளன்று சுவாமி யதீஸ்வரானந்தரால் அக்கோயில் திறந்து வைக்கப்பட்டது. அப்பொழுது தொடங்கப்பட்ட வழிபாடு இன்றும் தொடர்ந்து காலையிலும் மாலையிலும் நடைபெற்று வருகின்றது. சாரதாலயா வளாகத்தின் அனைத்து நிறுவனங்களுக்கும் அது ஓர் ஆன்மிக மையமாகத் திகழ்கின்றது.

1957 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் தேதியன்று இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் S. ராதாகிருஷ்ணன் அவர்களால் மனையியல் கல்லூரி தொடங்கி வைக்கப்பட்டது.

மனையியல் கல்லூரியின் நோக்கங்களை, அதன் 1957-58 ஆம் ஆண்டு அறிக்கை கீழ்க்கண்டவாறு கூறுகின்றது:

''மக்களிடம் அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்கள் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ளப் பல்வேறு அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு செய்வதே மனையியலின் நோக்கமாகும். சத்துணவு, உடல் நலம், சுகாதாரம் குழந்தை வளர்ப்பு, வீட்டு மருத்துவம், வீட்டு நிர்வாகம், ஆடை

யணிகள் போன்ற பாடங்களில் பெண்கள் அறிவு பெறுவதால், அவர் களது குடும்ப வாழ்க்கைச் சிறப்பாக அமைவதுடன் சமுதாயமும் வளர்ச்சியடைகிறது. மற்ற நாடுகளைக் காட்டிலும் நம் நாட்டில் மனித வளமும் மற்றவையும் வீணாவது அதிகம் என்பது மேனாட்டார் கூற்று. ஏழை நாடான இந்தியாவில் உணவுப் பொருள்களை வீணாக்குவது பெருங்குற்றமாகும். பெண்களுக்குச் சரியான பயிற்சியளித்து, பொருள்கள் வீணாக்குவதைத் தடுக்க முயற்சி எடுக்காதவரை அரசு எவ்வளவு பிரச்சாரம் செய்தாலும் அது வீணே. அதனால்தான் ஸ்ரீ அவினாசிலிங்கம் கல்லூரியில் மனையியலுக்குச் சிறப்பிடம் அளித்து அதற்காகவே அதனை அர்ப்பணித்துள்ளோம்.''

மனையியல், புதிதாகக் கொண்டுவரப்பட்ட பாடமாதலால் அதைப்பற்றிப் பொது மக்களுக்கு எடுத்துக்கூறி, அதன் நோக்கங் களை விளக்குவது அவசியமாயிற்று. இந்த நோக்கத்துடன் டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் அவர்கள் எழுதிய 'மனையியலின் பொருள்' (Meaning of Home Science) என்ற நூலை 1958ல் கல்லூரி வெளியிட்டது. அதில் அவர் கூறுகிறார்: ''மனையியல் என்பது வாழ்க்கைக்குரிய கல்வியாகும். வீடும், குடும் பமும் ஒரு நாட்டின் அளவுகோல்களாகும். ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அவை பிரதிபலிக்கின்றன. குடும்ப உறுப்பினர் களின் உடல், ஆன்ம, உணர்ச்சித் தேவைகளை நிறைவு செய்து, அவர்களின் வாழ்க்கையைப் பொருள் பொதிந்ததாக ஆக்குகிறது மனையியல்.''

மனித சமுதாயத்தின் மிக உயர்ந்த செயல்கள் யாவும் மகிழ்ச்சி யான குடும்ப வாழ்க்கையை அடிப்படையாக வைத்தே நிகழ்ந் துள்ளன. இந்தியாவில், குடும்பத்தை ஒரு கோயிலாகவும், தாயை அதில் உறையும் தலைமைத் தெய்வமாகவும் கருதுகின்றனர். சிறந்த ஆன்மிகப் பண்புகளான தியாகம், சகோதர நேயம், அன்பு, அருள், பொறுமை, மனித உறவுகள் முதலியவற்றை மனிதன், குடும்ப வாழ்க்கை மூலம், தன்னை வளர்த்த தாயின் மூலமே பெறுகிறான். இந்தியப் பெண்கள் தங்கள் குடும்ப உறுப் பினர்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்குகளாகத் திகழ்ந்து வந்துள்ள னர். அறிவியல் வளர்ச்சியால் சமுதாயத்தில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ஆகவே, நம் பண்டைய பண்பாட்டின் சிறப்புக் கூறுகள், நவீன விஞ்ஞான வளர்ச்சியின் பயன்மிக்க பகுதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் நம் கல்வி முறையை மாற்றியமைப் பது மிக இன்றியமையாததாகும். பண்டைய பாரம்பரியத்தின் பயனற்றவைகளை நீக்கி, பயனுள்ள கோட்பாடுகளை ஏற்றுக்

கொள்ளும் பயிற்சிகளைத் தற்காலச் சிறுவர் சிறுமியருக்கு அளிக்க வேண்டும். ஆன்மிக சக்தியால் கல்வியறிவை வலுப்படுத்த வேண்டும். இவையே மனையியல் கல்வியின் நோக்கங்களாகும்.

தொடக்க காலத்திலிருந்தே, சாரதாலயாவின் கல்விக் கொள்கைகளாவன: 1. இந்தியப் பெண்மைக்குரிய பெருமைமிகு பாரம்பரியத்தைக் காத்தல். 2. கல்வியில் உயர்ந்த தரத்தை நிலை நிறுத்தல் 3. ஏட்டுக் கல்வியைவிட செயல்முறைப் பயிற்சிக்குச் சிறப்பிடம் அளித்தல். 4. நம் கல்வி நிறுவனங்கள் சமுதாயத்திலிருந்து பிரிந்து தனித் தீவுகளாகச் செயல்படாமல், சுற்றிலுமுள்ள மக்களுக்குப் பலவழிகளில் போதித்து அவர்களது வாழ்க்கையை மேம்படுத்துவதாக இருத்தல் வேண்டும். இது மிகப் பெரும்பணி. திறமை வாய்ந்தவர்களின் பக்தியும், இடைவிடா முயற்சியும் இப்பணியை நிறைவு செய்து வருகின்றன. திருமதி ராஜம்மாள் தேவதாஸ் அவர்களின் உயர்ந்த கல்வித் தகுதி, பக்தி, ஆர்வம், அரசாங்கத்துடன் அவருக்கிருந்த தொடர்பு ஆகியனவும், கல்வியமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளின் வாயிலாக எனக்கிருந்த அனுபவப் பின்னணியும் மனையியல் கல்லூரியின் வேகமான, விரிந்த வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தன.

இந்திய அரசின் வேண்டுகோளுக்கிணங்க, 1957-ஆம் ஆண்டு முக்கிய சேவிகைகளுக்கான பயிற்சிமையம் இக்கல்லூரியில் தொடங்கப்பட்டது. 1959-ஆம் ஆண்டு வீட்டு நிர்வாகம் பற்றிய முதுகலைப்பட்டப்படிப்பு தொடங்கப்பட்டது. 1960-ஆம் ஆண்டு குழந்தைப் பள்ளியும், 1961-ஆம் ஆண்டு ஆதாரப் பள்ளியும் தொடங்கப்பட்டன. குழந்தை வளர்ச்சி, சத்துணவு, உடை, நிறுவன நிர்வாகம், பொருளாதாரம், கணிதம், மனையியல் விரிவுப்பணி, உயிரியல், வேதியியல் ஆகிய பாடங்களில் முதுகலைப் பட்டப்படிப்புகள் தொடர்ந்தன. டாக்டர் ராஜம்மாள் மற்றும் சிலரது வழிகாட்டுதலின் கீழ் 25 பேர் டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர் மனையியலின் பல்வேறு அம்சங்களில் ஆராய்ச்சிகளும் நடைபெற்றுள்ளன.

கிராமங்களில் உள்ள ஏழை மக்கள் நம்மிடம் வரவில்லையென்றால் நாம் அவர்களை நாடிச்சென்று அவர்களுக்கு உகந்த கல்வியளித்துச் சேவை செய்ய வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். ஆகவே நம் மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுக்கு, சத்துணவு, குழந்தை வளர்ப்பு, காய்கறித் தோட்டம் அமைத்தல், சுற்றுப்புறத் துப்புரவு போன்ற பல துறைகளில் பயிற்சி அளித்துச் சேவைசெய்து

வருகின்றனர். மகன்சூளை அடுப்பு, கோபார் வாயு அடுப்பு போன்ற புதுமுறை அடுப்புகளை அங்கு அறிமுகப்படுத்தியுள்ளனர். குழந்தைகளுக்கு நோய்த்தடுப்புக்கான மருந்துகள் அளிக்கவும் முகாம்கள் நடத்திவருகின்றனர். சமையல், தையல், குழந்தை வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற செயல்களில் கிராமப்பெண் களுக்குச் சிறு சிறு பயிற்சி வகுப்புகளும் நடத்தி வருகின்றனர். இவ்வாறு M. Sc., M. Phil., Ph.D. மாணவர்கள் தங்கள் ஆய்வு களைக் கிராமப் பிரச்னைகளை மையமாக வைத்து நடத்தி வருகின் றனர். பல்கலைக்கழகப் பட்டங்கள் பெறுவதற்கான ஆய்வு களுடன், DST, ICAR, ICMR, NCERT, UNICEF, FAO, USAID போன்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தனிப்பட்ட முறையிலும் இலைப்புரதம், பெண்களுக்கான அறிவியலும் தொழில் நுட்பமும், குறைந்த விலை உணவுத் திட்டம், சத்துணவுக் கல்வி, அறுவடைக்குப்பின் உணவுப்பொருள் சேமிப்பு, மதிய உணவுத் திட்டம் போன்ற பல்வேறு துறைகளிலும் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றுடன், மாதம் ஒரு முறை ஓர் ஆராய்ச்சிச் சஞ்சிகையை Indian Journal of Nutrition and Dietetics என்ற பெயரில் இக் கல்லூரி வெளியிட்டு வருகிறது. இந்தியாவில் வெளிவரும் இத்தகைய சஞ்சிகை இது ஒன்றே. இச்சஞ்சிகைக்கு வரும் கட்டுரைகள் அந்தந்தத் துறையில் ஆழ்ந்த புலமைபெற்ற வல்லுநர் களால் சரிபார்க்கப்பட்ட பின்னரே சஞ்சிகையில் இடம் பெறும். இதனால் இச்சஞ்சிகை சர்வதேச அளவிலும் சிறப்புப்பெற்றுள்ளது.

கடந்த பல ஆண்டுகளில் டாக்டர் திருமதி ராஜம்மாள் P. தேவதாஸ் அவர்கள் மனையியல் மற்றும் சத்துணவு பற்றிய சர்வதேச மாநாடுகளில் கலந்து கொண்டுள்ளார். உலகின் பல பாகங்களிலும் அவ்வப்போது நடைபெறும் உலக சத்துணவு மாநாடுகளில் அவர் தவறாது கலந்து கொள்கிறார்.

### விரிவுப்பணி

மனையியல் கல்லூரியின் தொடக்க நாட்களிலிருந்தே, விரிவுப் பணி அதன் முக்கிய அம்சங்களுள் ஒன்றாக இருந்து வந்துள்ளது. இதில் பல அம்சங்கள் உண்டு:

1. சுற்றுப்புறக் கிராமங்களில் வயது வந்தோர் கல்வியை, குறிப் பாகப் பெண்களிடம் பரப்புதல்.
2. இதைவிட முக்கியமான விரிவுப்பணி யாதெனில் அறிவியல் தொழில் நுட்பங்களைக் கிராமப் பெண்களுக்குப் போதித்தல் ஆகும்.

3. விரிவுப்பணியின் மூன்றாவது அம்சம் பள்ளி-கல்லூரி ஆசிரியர்களுக்குக் கருத்தரங்குகள் நடத்துதல். இவற்றுள் சில மாநில அளவிலும், மற்ற சில தேசிய அளவிலும் ஆனவை.
4. செயல் அடிப்படையிலான ஆய்வுத் திட்டங்கள் (Action Research Projects) அந்தந்தப் பணியிடங்களிலேயே பிரச்னைக்குத் தீர்வு காண்பதாகும். இதன்மூலம் நல்ல விளைவுகள் கிடைத்துள்ளன.

இதே சமயத்தில் சாரதாலயா வளாகத்தில் 1968-இல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் தொடங்கப்பட்டது.

மதிப்புமிக்க தலைவர்கள் பலர் மனையியல் கல்லூரிக்கு வருகை தந்து அதன் ஆசிரியர்களையும் மாணவர்களையும் அது ஆற்றிவரும் சிறப்பான சேவைகளையும் பாராட்டிச்சென்றுள்ளனர். M. Sc. படிப்புக்கான ‘அன்னை அருள்’ கட்டிடத்திற்கு, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவற்றின் செயலர் சுவாமி மாதவானந்தர் அடிக்கல் நாட்டினார். இக்கட்டிடத்தை இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் திறந்து வைத்தார். இந்திய ஜனாதிபதி டாக்டர் ஜாகீர் உசேன் விடுதிக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார். மனையியல் கல்லூரிக்கு அதிக இடம் கிடைப்பதற்குப் பெரிதும் துணை புரிந்தவர் இந்திய அரசின் விவசாய அமைச்சர் டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக். மற்றுமொரு விடுதிக்கட்டிடத்தை அவர் திறந்து வைத்தார். இந்திய அரசின் சுகாதார அமைச்சர் டாக்டர் சுசீலா நய்யார் உணவு விடுதிக் கட்டிடத்தையும் அதன் மேல் மாடியிலுள்ள முதுநிலை மாணவர்களுக்கான விடுதியையும் திறந்து வைத்தார். என் தந்தையார் பெயரில் அமைந்துள்ள ‘சுப்பிரமணியம்’ என்ற கட்டிடத்தை (உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்) என் நண்பரும், இந்தியக் குடியரசுத் தலைவருமான திரு. வி. வி. கிரி அவர்கள் திறந்து வைத்தார். விவேகானந்தர் அரங்கத்தை என் நண்பர் திரு. K. காமராஜர் தலைமையில், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் திறந்து வைத்தார். ஆராய்ச்சிக் கட்டிடத்தை, பிரபல விவசாய விஞ்ஞானி டாக்டர் M. S. சுவாமிநாதன் அவர்களும், நூல்நிலையக் கட்டிடத்தை, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவற்றின் தலைவர் சுவாமி வீரேசுவரானந்தா அவர்களும் திறந்து வைத்தார்கள். இப்பெருமக்கள் அனைவர்க்கும் நாங்கள் என்றும் கடமைப்பட்டுள்ளோம். ஆனால், இந் நிறுவனத்தை வளர்த்து அதனைப் பெரியதொரு கல்விக்கோயிலாகச் சிறப்படையச் செய்த எங்கள் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மற்ற ஊழியர்களுக்கும் எப்படி நன்றி சொல்வதென்று தெரியவில்லை!

# 31. நாடாளுமன்றத்தில்

சென்னை சட்டசபையில் என் பதவிக்காலம் முடிந்தவுடன், 1951ல் நடைபெறவிருந்த பொதுத் தேர்தலில் நின்று நாடாளுமன்ற உறுப்பினராக விரும்பினேன். கோவை மாவட்டத்தில் பல்லடம், கோபிசெட்டிப்பாளையம் தாலூக்காக்கள் அடங்கிய திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதியில் நான் போட்டியிட்டு இந்தியக் குடியரசின் முதலாவது லோக்சபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

1934 ல் நான் மத்தியச் சட்டசபை உறுப்பினராக இருந்தபோது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தேன். ஆனால் இப்போது ஆளும் கட்சியின் உறுப்பினராக நான் அமர்ந்தேன். முன்னர், அந்நியர் ஆட்சியை எதிர்த்துப் போராடினோம். ஆனால் இப்போது ஆளும் கட்சிக்கு உறுதுணையாக இருந்து ஆக்கப்பூர்வமான யோசனைகளைக் கூறும் பொறுப்பு ஏற்பட்டது. முன்பு நான் மத்தியச் சட்டசபை உறுப்பினராக இருந்தபோது அனைவரிலும் இளையவனாக இருந்தேன். ஆனால் இப்போது சட்டமன்ற அனுபவமும் நிர்வாக அனுபவமும் கொண்ட மூத்த உறுப்பினனாகக் கருதப்பட்டேன். பல்வேறு அமைச்சகங்களின் கீழ், பல்வேறு பணிகளுக்கான குழுக்களைக் காங்கிரஸ் கட்சி அமைத்தது. நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலம் முழுமையும் கல்விக்குழுவின் அமைப்பாளராகவும், தலைவராகவும் பொறுப்பு வகிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதனால் கல்வி அமைச்சகத்துடன் எனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. மத்தியக் கல்வி ஆலோசனைக் குழுவிலும், அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவிலும் நான் உறுப்பினராக இருந்தேன். அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு, தேசியக் கல்விக் கொள்கைகளை வகுப்பதற்கும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் ஆக்கபூர்வமான யோசனைகளைக்கூறி உதவி செய்தேன். பின்னர், விவசாயக் கல்விக்குழுவிலும், இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழுவிலும் உறுப்பினராக இருந்தேன்.

### திட்டக்குழு அமைத்தல்

திட்டமிட்ட வளர்ச்சியில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர் ஜவஹர்லால் நேரு. இதற்கான உற்சாகத்தை அவர் ரஷ்யா விடமிருந்து பெற்றார். ஆகவே, முதலாவது நாடாளுமன்றத்தின் முதலாவது பணியாகத் 'தேசியத் திட்டக்குழு' அமைக்கப்பட்டது. திட்டமிடுதல் என்பது, நாட்டின் பல்வேறு துறைகளிலும் பொருளாதாரத்திலும் வளர்ச்சிக்கு வழி வகுப்பதாகும். விவசாயத்தில் புதுமுறைகளைக் கையாளுதல், புதுத் தொழில்களைத் தொடங்குதல், கல்வி வாய்ப்புகளை அதிகரித்தல், நிர்வாகச் சீர்த்திருத்தங்கள், சமூக நீதியின் அடிப்படையிலான வரி அமைப்பு, நிலச் சீர்த்திருத்தங்கள், சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல், பெண்களின் முன்னேற்றத்திற்கான சிறப்பான திட்டங்கள், பிற்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம், நாட்டின் கிராமப் பகுதிகளில் நிலவும் வறுமையை நீக்குதல் ஆகிய வற்றுக்குத் திட்டமிடுதல் அவசியம். ஆகவே சமுதாய வளர்ச்சித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டது.

### சமுதாய வளர்ச்சித் திட்டம்

1952 அக்டோபர் 2-ஆம் நாள் காந்தியடிகளின் பிறந்த நாளன்று சமுதாய வளர்ச்சித்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் வட்டாரங்களின் அடிப்படையில் மனிதவளத்தையும் பிற மூலப்பொருள்களின் வளங்களையும் அதிகப் படுத்தி, அந்தந்த வட்டாரங்களின் முழு ஒத்துழைப்புடன் அவர் களின் முன்னேற்றத்திற்கு வழி கோலுவதே சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். பழைய அனுபவங்கள் நமக்குக் கற்பித்த பாடங்களின் வெளிப்பாடாகத் தோன்றியது தான் சமுதாய வளர்ச்சித்திட்டம். கிராம மக்களைத் தற்சார்பும், தன்மானமும் உடையவர்களாகவும், நம் நாட்டின் பண்டைய பண்பாட்டைத் தெரிந்தவர்களாகவும் ஆக்குவதே இத்திட்டத்தின் நோக்கம்.

நிர்மாணப்பணிகளில் மக்களை ஈடுபடுத்துவதே சமுதாய வளர்ச்சித்திட்டத்தின் நோக்கம். ஆனால் இதற்கு மக்கள் அவ்வளவாக முன்வரவில்லை. ஆகவே, இதற்குரிய வழி முறை களை ஆராய, இந்திய அரசு, குழு ஒன்றை அமைத்தது. இந்தக்குழு நாடு முழுதும் சுற்றுப்பயணம் செய்து நிலைமையை ஆழ்ந்து பரிசீலித்து, கிராமங்களிலும், வட்டாரங்களிலும், மாவட்டங்களிலும் ஜனநாயக அடிப்படையிலான நிறுவனங்களை

அமைக்கப் பரிந்துரை செய்தது. இவ்வாறு உருவானதுதான் மூன்றடுக்கு அமைப்புக் கொண்ட பஞ்சாயத்து ராஜ். அந்தந்தப் பகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களிடம் பொறுப்பை ஒப்படைப்பதன் மூலம் அதிகாரத்தையும், நிர்வாகத்தையும் பரவலாக்க வேண்டும் என்று இக்குழு நினைத்தது. இதன்படி, அப்போதிருந்த தாலூக்காக் குழுக்களும், மாவட்டக் குழுக்களும் நீக்கப்பட்டன. ஏற்கெனவே குறிப்பிட்டபடி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்டக்குழுக்கள் என்ற மூன்று அடுக்கு முறையில் நாடெங்கும் ஒரே சீராக உள்ளாட்சி நிறுவனங்கள் அமைக்கப் பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் இந்நிறுவனங்கள் நிர்வகிக்கப்பட்டன.

ஊராட்சி ஒன்றியங்களில் சமுதாய வளர்ச்சிப் பணிகளை நடத்துவதற்கு உதவும் பொருட்டு மகளிர் மன்றங்களும் (மகிளா மண்டல்), இளைஞர் மன்றங்களும் (யுவக் மண்டல்), தொண்டர் குழுக்களும் (Volentary Groups) அமைக்கப்பட்டன. அவர் களுக்குப் பயிற்சி அளிப்பது சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் இன்றியமையாத அம்சமாகும்.

ஆகவே சமுதாய வளர்ச்சிக்கான மத்திய அமைச்சகம், ஹைதராபாத்தில் சமுதாய வளர்ச்சிக்கான தேசீய நிறுவனம் (National Institute of Community Development) ஒன்றை நிறுவிற்று. இந்த நிறுவனம் இருபகுதிகளைக் கொண்டது. ஒன்று, சமுதாய வளர்ச்சியின் பல அம்சங்களைப்பற்றிப் படிப்பது; மற்றது, இவற்றைப்பற்றி ஆராய்ச்சி செய்வது.

சுவாமி விவேகானந்தர், காந்தியடிகள் ஆகியோரின் கருத்துக் களால் கவரப்பட்ட நான், தொடக்கத்திலிருந்தே, கல்விக்கு அடுத்த படியாக, கிராம சேவைக்கு முக்கியத்துவம் அளித்து வந்திருக் கிறேன். ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், தொடக்க நாளிலிருந்தே, சுற்றுப்புறக் கிராமங்களில் சமூகப்பணியில் ஈடு பட்டு வந்துள்ளது. இத்துறையில், வித்யாலய கிராமியக்கல்வி நிறுவனமும், சமூகக்கல்வி அமைப்பாளர் பயிற்சி மையமும் (Social Education Organisers Training Centre) ஸ்ரீ அவினாசி லிங்கம் மனையியல் கல்லூரியும் ஆற்றியுள்ள பணிகளை ஏற்கெனவே வேறோர் அத்தியாயத்தில் விரிவாகக் குறிப் பிட்டுள்ளோம்.

ஹைதராபாத்தில் நிறுவப்பட்ட தேசிய கிராம வளர்ச்சி நிறுவ னத்தின் உறுப்பினராக இருக்கும்படி நான் கேட்டுக்கொள்ளப்பட் டேன். ஏறக்குறைய இருபது ஆண்டுகள் அந்நிறுவனத்துடன்

தொடர்பு கொண்டிருந்தேன். இப்பொறுப்பினால் நான் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், வித்யாலயம், மனையியல் கல்லூரி ஆகியவற்றின் கிராமப்பணித் திட்டங்களில் சிறப்பான முன்னேற்றங்களைச் செய்ய முடிந்தது. இந்த அனுபவங்களின் அடிப்படையில்தான் விவேகானந்தபுரத்தில் கிராம வளர்ச்சி மையம் ஒன்றும் தொடங்கப்பட்டது.

சமுதாய வளர்ச்சித்திட்ட முயற்சிகளால் கிராமப்புறங்களில் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால் இத்திட்டம் செயல் படுத்தப்பட்ட சில ஆண்டுகளுக்குப்பின், அது ஏமாற்றமளிப்பதாக இருந்தது. அதனைச் செயல்படுத்திய முறைகள் சரியாக அமையாததே இதற்குக் காரணமாகும்.

### அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி

சுதந்திரத்திற்குப்பின் இந்தியாவில் அறிவியல், மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் மிகுதியாக வளர்ந்துள்ளன. நாட்டின் முன்னேற்றத்திற்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் பெரும் புரட்சி ஏற்பட வேண்டுமென்று நேரு அவர்கள் உறுதியாக நம்பினார். ஆராய்ச்சிகளால் அறிவியல் அறிவு வளர்கிறது. அதன் அடிப்படையில் தொழில்நுட்பக் கண்டு பிடிப்புகள் அமைகின்றன. விவசாய உற்பத்தியும், தொழில் உற் பத்தியும் பெருகுகின்றன. ஆகவே பல்வேறு துறைகளிலும் ஏராள மான ஆய்வுக்கூடங்களை ஏற்படுத்த அரசு திட்டமிட்டது.

தேசிய ஆய்வுக்கூடங்கள் மற்றும், ஆராய்ச்சி நிறுவனங்கள் பலவற்றை நிறுவ முதலாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது. கிடைக்கக்கூடிய வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், ஆராய்ச்சியைப் பரந்த அடிப்படையில் அமைக்கவும், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆய்வு மையங்களில் ஆராய்ச்சி வசதி களை அதிகரிக்கவும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற் பாடுகள் செய்யப்பட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி, கீழ்க்கண்ட சில குறிப் பிட்ட அம்சங்களில் நிகழ்ந்தன:

(i) தற்போதுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களை வலுப்படுத்து தல்; ஆராய்ச்சிக்கான வசதிகளைப் பரவலான முறையில் அதிகப்படுத்துதல்.

(ii) பல்கலைக்கழகங்களின் அடிப்படை ஆய்வினை ஊக்கப் படுத்தல்.

(iii) பொறியியல் மற்றும் தொழில் நுட்பத்துறைகளில் ஆராய்ச்சிகளுக்கு ஊக்கமளித்தல்.

(iv) ஆராய்ச்சியாளர்களுக்குப் பயிற்சியளித்தலும், ஆராய்ச்சிக் கான உதவித் தொகைகளை அதிகப்படுத்தலும்.

(v) விஞ்ஞானக் கருவிகள் மற்றும் தொழிற்சாலைக்கான கருவிகளைப் பற்றிய ஆராய்ச்சியும், அவற்றை உற்பத்தி செய்தலும்.

(vi) தேசிய ஆய்வுக்கூடங்கள், பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்ப நிறுவனங்கள், அறிவியல் கழகங்களின் ஆய்வுக் கூடங்கள், அரசுத்துறைகளின் ஆராய்ச்சிப் பகுதிகள் ஆகியவற்றினிடையே இணக்கத்தை ஏற்படுத்துதல்.

(vii) சோதனைகளுக்குப்பின் ஆராய்ச்சி முடிவுகளை நடை முறைக்குக் கொண்டுவருதல்.

இதன் விளைவாக, கடந்த முப்பது ஆண்டுகளில், 1650 கல்லூரிகள், 5 தொழில்நுட்ப நிறுவனங்கள், 150 பொறியியல் கல்லூரிகள், 100 மருத்துவக் கல்லூரிகள், 350 பாலிடெக்னிக்கு கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 119 பல்கலைக்கழகங்கள் நிறுவப் பட்டன. ஒவ்வோர் ஆண்டும் 1,50,000க்கும் மேற்பட்ட, தகுதி வாய்ந்த அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்கள் உருவாக்கப்படுகின்றனர். இவ்வாறு அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையில் தகுதிவாய்ந்தவர்கள் மொத்தம் 21 லட்சம் பேர் உள்ளனர். உலகத்தில் இத்தகையவர்களின் தொகைகளின் வரிசையில் இந்தியா மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

இந்திய விவசாய ஆராய்ச்சிக்கழகம் (ICAR), அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக்கழகம் (CSIR), இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்கழகம் (ICMR) அணுச்சக்தித்துறைகள், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விண்வெளி, பாதுகாப்பு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவில் ஏறக்குறைய 130 சிறப்புக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், 600க்கும் மேற் பட்ட ஆய்வகங்களை நிறுவியுள்ளன. கடந்த பதினைந்து ஆண்டு களில் ஏற்பட்ட புதிய வளர்ச்சி யாதெனில், பொறியியல் ஆலோ சனை அமைப்புக்கள் ஆகும். ஆலோசனைகள் வழங்குவதன் மூலம் இவை, ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், தொழிற்சாலை களுக்கும் இடையே ஒரு பாலமாக விளங்குகின்றன.

நம் தேசத்தின் பாதுகாப்பு, வலிமை முன்னேற்றம் ஆகியவற்றை கவனத்தில்கொண்டு நம் பல்கலைக்கழகங்களிலும், ஆராய்ச்சி நிறுவனங்களிலும், திறமைக்கும், நேர்மைக்குமே முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும்.

## அணிசேரா இயக்கம்

நான், நாடாளுமன்ற உறுப்பினனாக இருந்தபோது நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சிகளுள் ஒன்று, இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கை உருவாக்கப்பட்டு அணிசேரா இயக்கம் தோன்றியதாகும். இரண்டாம் போருக்குப் பிறகு அமெரிக்காவும். ரஷ்யாவும் தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள விரும்பியதால் அவை இரண்டும் ஒன்றுக்கொன்று பகைமைகொண்ட இரண்டு அதிகார அணிகளாக உருவெடுத்தன. ஒவ்வொன்றும் தன்னுடன் பல நாடுகளைச் சேர்த்துக்கொண்டன. இவற்றுள் ஒன்று வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (NATO), மற்றொன்று வார்சா ஒப்பந்த நாடுகள். இந்தியா வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் நாடாதலால் இந்த நாடுகள் ஒவ்வொன்றும் இந்தியாவைத் தம் பக்கம் இழுக்க முயன்றன. இதற்காக அவை ஒவ்வொன்றும் தூண்டுதல், கெஞ்சுதல், ஆசைகாட்டுதல், அச்சுறுத்துதல் ஆகிய பல வழிகளையும் கையாண்டன. ஆனால் எதற்குமே ஜவஹர்லால் நேரு அசைந்துகொடுக்கவில்லை. முற்றிலும் சுதந்திரமான, வலிமையுள்ள இந்தியாவை உருவாக்கவே அவர் உறுதிபூண்டார். தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஒப்பந்த அமைப்பு (SEATO) ஒன்றை அமெரிக்க ஐக்கிய நாடுகள் தோற்றுவித்து பணம் மற்றும் ராணுவ உதவி கொடுப்பதாகக் கூறி இவ்வமைப்பில் சேருமாறு பாகிஸ்தானுக்குச் சபலத்தை தோற்றுவித்தது. இதேபோன்ற உதவிகளை இந்தியாவுக்கும் அளிப்பதாகக் கூறி ஜனாதிபதி ஐசனோவர் நேருவுக்குக் கடிதம் எழுதினார். இந்த உதவியை மறுத்து நேரு அவர்கள் நாடாளுமன்றக் கூட்டத்தில் பேசியது இன்றும் என் நினைவில் உள்ளது. வேற்று நாட்டு அரசாங்கம் ஒன்றுக்கு இந்தியாவில் ராணுவ தளம் அமைக்கும் அனுமதி கொடுப்பதன் மூலம், மீண்டும் அடிமைநிலையை அடையச் சுதந்திர இந்தியா ஒருபோதும் விரும்பாது. இதைக் கேட்ட நாங்கள் பூரித்துப்போய் அவரை உற்சாகப்படுத்தினோம். இத்தகைய துணிச்சலும், தைரியமும் மிக்க நேருவின் வெளிப்படையான பதிலுக்காக உலகம் முழுதும் அவரையும், இந்தியாவையும் வெகுவாகப் புகழ்ந்தது. அணிசேரா நாடுகளுக்கு இது வழிவகுத்தது,

அணிசேரா இயக்கத்தைப்பற்றி நேரு அவர்கள் கூறினார்: ''அணி சேராமை என்பது செயலற்ற மனதையோ, மந்த நிலையையோ, நம்பிக்கையின்மையையோ, மன உறுதியின்மையையோ குறிப்பது அன்று. தீமைக்கு அடிபணிவது என்பதும் அதன் பொருளல்ல. நம்மை எதிர்நோக்கி நிற்கும் பிரச்னைகளை உடன்பாட்டுமுறையிலும், உத்வேகத்துடனும் அணுகுவதுதான் அணிசேராமையாகும். ஒவ்வொரு நாட்டிற்கும் சுதந்திரம் என்பது அதன் பிறப்புரிமை மட்டுமன்றி, தனது கொள்கையினையும் வாழ்க்கை முறையையும் வகுத்துக் கொள்வதற்கான உரிமையும் ஆகும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். இந்த வழியின் படித்தான் உண்மையான சுதந்திரம் தழைக்கவும், மக்கள் தங்கள் அறிவாற்றலுக்கு ஏற்ப வளரவும் முடியும். ஆகவே ஒரு நாட்டின் விவகாரங்களில் மற்றொரு நாடு ஆதிக்கம் செலுத்துவதையோ, தலையிடுவதையோ நாம் விரும்பவில்லை. நாடுகளுக்கிடையே சகிப்புத்தன்மையையும் சமாதான சகவாழ்வையும் நாம் விரும்புகிறோம். நாடுகளுக்கிடையே நல்லெண்ணப் பரிமாற்றமும், வாணிப உறவும், மற்ற உறவுகளும் வளர்வதன் மூலம் நாடுகள் ஒன்றுக்கொன்று நல்ல அனுபவங்களைக் கற்றுக்கொள்ளவும், உண்மையை நிலைநாட்டவும் முடியும். ஆகவே நாம் அனைத்து நாடுகளுடனும் நட்புறவை வளர்த்துக் கொள்ளப் பாடுபடுவோம். அரசியல் கோட்பாடுகள், அரசியல் அமைப்பு ஆகியவற்றால் நம்மிடமிருந்து வேறுபட்ட நாடுகளுடனும் நாம் நட்புறவுகொள்வோம். இந்த அணுகுமுறையால் நாம் நம் நாட்டுக்குச் சேவை செய்வது மட்டுமன்றி, இதைவிட விரிவான அளவில் உலகின் அமைதிக்கும், நட்புறவுக்கும் சேவை செய்தவர்கள் ஆவோம்.''

அணி சேரா இயக்கம் 1961-ல் தொடங்கப்பட்டது. இருபத்தொரு நாடுகள் இதன் உறுப்புநாடுகள் ஆயின. இந்தியாவின் நேரு, எகிப்தின் நாஸர், யூகோஸ்லேவியாவின் டிட்டோ ஆகியோர் இவ்வியக்கத்தின் முக்கிய சிற்பிகள் ஆவர். இருபது ஆண்டுகளில் இவ்வியக்கத்தின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 97 ஆக உயர்ந்தது. உலக விவகாரங்களைத் தீர்ப்பதில் இவ்வியக்கம் ஒரு சக்தி வாய்ந்த இயக்கமாக மாறிற்று. அவ்வப்போது இவ்வியக்கத்தின் கூட்டங்கள் உலகின் பல பாகங்களில் நடைபெறுகின்றன. 1982 ஆம் ஆண்டில் இக்கூட்டம் டில்லியில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### நாட்கள் செல்லச் செல்ல

சுதந்திரம் பெற்றவுடன் நேருவின் முதல் அமைச்சரவை மிகுந்த நம்பிக்கையுடனும், கௌரவத்துடனும் தன் பணிகளைத் துவங்கிற்று. நேருவும் தம் புகழின் உச்ச நிலையில் இருந்தார். நம் நாடும் உலகின் பல நாடுகளும் அவரைப் போற்றிப் புகழ்ந்தன. ஆசியாவிலேயே ஒரு மகத்தான நாடாக இந்தியா எழுச்சிப் பெற்றுக் கொண்டு இருந்தது. காந்தியடிகளின் ஒப்பற்ற தலைமையின்கீழ் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பல தலைவர்கள் அமைச்சர்களாயினர். இவர்களுடன் சிறந்த நிபுணர்களும் அமைச்சர் அவையில் இடம் பெற்றனர்.

தங்கள் சுயநலத்திற்காக, அதிகாரத்தில் உள்ளவர்களை முகஸ்துதி செய்து அவர்களிடம் சலுகைகளைப் பெறுபவர்கள் உலகெங்கும் உள்ளனர்; இந்தியாவும் இதற்கு விதிவிலக்கு அல்ல. இதனால் நிர்வாகத்தில் அரசியல்வாதிகளின் தலையீடுகள் மிகுந்து நிர்வாகத்தின் தரம் குறைந்தது.

### சீனப் படையெடுப்பு

நாடாளுமன்ற உறுப்பினராக நான் பொறுப்புவகித்த காலத்தின் பிற்பகுதியில் சுதந்திர இந்தியாவின் நலனைப் பெரிதும் பாதிக்கும் வகையிலும், அதன் கௌரவத்திற்கு ஒரு சவாலாகவும் பெரியதோர் ஆபத்தாகவும் 1962 ஆம் ஆண்டு சீனப்படையெடுப்பு நிகழ்ந்தது. 1962 அக்டோபர் 20 ஆம் நாளன்று இந்தியாவின் வடமேற்கு எல்லைப் பகுதியில் சீனா பெரியதொரு தாக்குதலை நடத்தியது. மக்கள் யாருமே இந்த அதிர்ச்சியை எதிர்பார்க்கவில்லை; இதற்கு ஆயத்தமாகவும் இருக்கவில்லை. பத்தாண்டுகளுக்கு மேலாக சீனாவைப் பற்றிய இந்தியாவின் கொள்கை, தவறான நம்பிக்கைகள், பொய்த் தோற்றங்கள் கற்பனைகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் அமைந்திருந்தது.

சுதந்திரத்திற்கு முன் சியாங்கே ஷேக், நேரு போன்ற தேசியத் தலைவர்களுடன் நட்புறவு கொண்டிருந்தார். அதே சமயம், திபேத், நேபாளம், பூடான், சிக்கிம், அஸ்ஸாமின் பெரும்பகுதி, வடகிழக்கு எல்லைப்புறப் பகுதியில் பிரம்மபுத்திரா ஆற்றையொட்டி இருந்த பகுதிகள் ஆகியவற்றைச் சீனாவுடன் இணைந்த பகுதிகளாகக் காட்டும் அதிகாரபூர்வமான தேசப்படங்களை அவர் வெளியிட்டதாகவும் கூறப்படுகிறது. இந்தியா பலமுறை இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மா சே துங் இந்தப் படங்களை நிறுத்திக் கொள்ளவில்லை; அதில் கூறப்பட்ட பகுதிகளை உரிமை கொண்டாடுவதையும் விடவில்லை. 1950 ஆம் ஆண்டில் சீனப்படைகள்

V44136ᴡAV
31N1

திபேத்தினுள் புகுந்து, தன் உரிமையை வலுக்கட்டாயமாக அங்கு நிலைநிறுத்தியது. ஆனால் அப்போது வலிமையற்றிருந்த இந்தியா, இதனால் ஏற்படும் விளைவுகளை அறியாமல் திபேத்தில் சீனாவின் ஆதிக்கத்தை ஒப்புக்கொண்டது. ஆகவே, சற்றும் சிந்திக்காமல் இந்தியா, 1954 ல் இந்திய-சீன ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. திபேத்தில் சீனாவின் ஆதிக்கத்தை இந்தியா ஒப்புக்கொண்டபோது, சர்ச்சைக்குட்படாத இந்திய-சீன எல்லையை சீனா ஒப்புக்கொள்ளவேண்டும் என்றாவது முன் நிபந்தனை விதித்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இந்திய-சீன எல்லைகள் தெளிவாக வகுக்கப்பட்டிருக்கும். தென்கிழக்கு ஆசியாவின் பரப்புக்கு இணையான பெரிய பரப்பளவுள்ள பகுதியைச் சீனாவுக்கு அளித்ததன் மூலம் இந்தியா மிகப்பெரிய தவற்றைச் செய்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவும் திபேத்தும் நட்புறவுடனேயே இருந்துவந்துள்ளன. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடைப்பட்டிருந்த இத்தகைய பெரிய பகுதியை நாடுபிடிக்கும் ஆசையும், ராணுவ ஆட்சியும் கொண்ட ஒரு பகுதிக்குக் கொடுத்தது மன்னிக்க முடியாத தவறாகும்.

திபேத் மீது படையெடுத்தபின் சீனா, சிங்கியாங் நகரைத் திபேத்துடன் இணைக்கும் வகையில் இந்திய எல்லை வழியாகச் சாலை ஒன்றை அமைக்கத் தொடங்கிற்று. அதுவரை சீனாவுடன் திபேத்தை நேரடியாக இணைக்கும் சாலை இருக்கவில்லை. இமய மலைகளின் கரடுமுரடான பகுதியில், சுரங்கங்கள், மேம்பாலங்கள், பனிப்பாறைகள், பள்ளத்தாக்குகள், கால்வாய்கள் ஆகியவற்றைக் கடந்து செல்லும் சாலையை 3,000 அடி முதல் 15,000 அடி வரை வெவ்வேறு மட்ட உயரங்களில் அமைப்பதென்பது மிகக்கடினமான பணியாகும். ஆயிரக்கணக்கான வேலையாட்களை அமர்த்தி இரவும் பகலும் வேலை செய்து சாலையை அமைத்து வந்தது சீனா. ஆயினும் இந்திய உளவு அமைப்பு மூன்றாண்டுக்காலம் இதைப்பற்றி அறிந்து கொள்ளாமலேயே இருந்தது. 1958-ஆம் ஆண்டு வரையிலும் இந்த நெடுஞ்சாலையைப்பற்றி இந்தியாவுக்கு ஒன்றுமே தெரியாது. இதைப்பற்றியறிந்துவர 1958 ஆம் ஆண்டில் குழு ஒன்று அனுப்பப்பட்டது. சிங்கியாங்கையும், திபேத்தின் லாசாவையும் இணைக்கும் நெடுஞ்சாலை மூன்றே ஆண்டுகளில் போட்டு முடிக்கப்பட்டது என்ற செய்தியை பீகிங் செய்தித்தாள் ஒன்று பெருமையுடன் வெளியிட்டபோதுதான் இது தெரிய வந்தது. இச்செய்தியைக் கேட்ட பின்னரும் இந்தியா மௌனமாகவே இருந்தது. அப்பொழுது தான் சூயென்லாய் தம்மை முட்டாளாக்கிவிட்டதாக நேரு உணர்ந்தார்.

1962 அக்டோபர் 20-ஆம் நாள் வடக்கில் லடாக்கிலிருந்து, கிழக்கே வலாங்வரை நீண்டுள்ள 2000 மைல் எல்லை நெடுகிலும் பல இடங்களில் சீனப்படைகள் அலையலையாக ஊடுருவின. மெத்தன மயக்கத்திலிருந்த இந்தியா பேரதிர்ச்சி அடைந்தது. மலைமுகடுகளிலும், கணவாய்களிலும் சீனப்படைகள் பெரும் அளவில் தாக்குதல் நடத்தி இந்திய நிலைகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றிவந்தது.

சீனப்படையெடுப்பு அக்டோபர் மாதம் 20-ஆம் நாள் தொடங்கி நவம்பர் முதல் நாள் குறைந்தது. நமது எல்லையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைச் சீனர்கள் ஆக்கிர மித்துக் கொண்டனர். இந்தியாவின் எண்ணெய் வயல்கள் அவர்கள் வசம் இருந்தன; தேஜ்பூர் நகரத்தை மக்கள் காலி செய் திருந்தனர்; அதனால் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கும், அஸ்ஸாம் பகுதிகளும் பாதுகாப்பற்றுக் கிடந்தன. இந்த நிலையில் சீனா போர் நிறுத்தப்பிரகடனம் செய்தது; அதன் படைகள் பின்வாங்கி முக்கியமான கேந்திர நிலைகளுக்குச் சென்றன. ஒருதலைப்பட்ட போர் நிறுத்தப் பிரகடனத்திற்குச் சீனா எந்த வகையான திருப்தி யளிக்கும் விளக்கமும் கொடுக்கவில்லை. அதிர்ச்சி தரும் தங்கள் திடீர்த்தாக்குதலால் இந்தியாவின் நாற்பத்தைந்து கோடி மக்களின் கோபமும் தூண்டிவிடப்பட்டுப் போருக்கு ஆயத்தமாகிவிட்டனர் என்பதைச் சீனா உணர்ந்திருக்கவேண்டும்; அதனாலேயே போர்நிறுத்தப் பிரகடனம் செய்திருக்க வேண்டும். இந்த அச்சத்து டன், இன்னும் சில நாட்களில் பருவ மழையும் பனியும் பெய்யத் தொடங்கும்; அப்பொழுது தமக்குத் தேவையான உணவு மற்றும் இதரத் தேவைகள் வந்து சேராது என்பது மட்டுமன்றிப் பின் வாங்குவதும் கடினமாகும் என்ற அச்சமும் சேர்ந்திருக்கலாம்.

இந்தப்படையெடுப்பினால் இந்தியாவின் புகழ், கற்பனை செய்து பார்க்க இயலாத அளவுக்குக் குறைந்தது. இதைப்போல வேறு எந்த நிகழ்ச்சியும் நேருவைப் பாதித்தது இல்லை. இந்த அவமானமிக்க தோல்விக்குப்பின் நேரு நீண்ட நாட்கள் உயிருடன் இருக்கவில்லை. சிறிது காலத்திற்குப்பின் 1964-ல் காலமானார்.

இழந்துவிட்ட தன் புகழை இந்தியா மீண்டும் 1971-ல் அவரு டைய புதல்வி இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது பெற்றது. பாகிஸ்தானுடன் 1971-ல் நடைபெற்ற போரில் இந்தியா பெரும் வெற்றி பெற்றது; பாகிஸ்தானிலிருந்து கிழக்குப் பாகிஸ்தான் பிரிந்து வங்கதேசம் என்ற புதிய நாடு உருவாயிற்று.

என்னைப்போல் நேருவின் காலத்தில் வாழ்ந்த தலைமுறையினர், சுதந்திர இயக்கத்தின்போது கோடிக்கணக்கான மக்கள் எவ்வாறு அவரைப் போற்றி அவருடன் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்பதை மறக்கமாட்டார்கள். பல சமயங்களில் இதனை நான் நேரில் பார்த்திருக்கிறேன். அவர் தம் அஞ்சாமை, அன்புடனும் மரியாதையுடனும் அனைத்துத் தரப்பு மக்களிடமும் பழகும் திறமை ஆகியவற்றால் அனைவரின் உள்ளங்களையும் கவர்ந்தார். காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக மக்களால் அதிகம் நேசிக்கப்பட்டவர் நேரு. அவருடன் ஒரு சகாப்தம் முடிந்தது. சுதந்திரத்திற்காகப் போராடிய இந்தியாவுக்கு மட்டுமின்றி, மற்ற நாடுகளின் சுதந்திரத்திற்காகவும் அவர் பாடுபட்டார்.

# 32. உலகப் பயணம்

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இந்தியத் தூதரான திரு. ஜான் கென்னத் கால்பிரெய்த் அவர்களிடமிருந்து 1962 ஜூலை 24-ஆம் தேதியிட்ட கடிதம் எனக்கு வந்தபோது நான் பெருவியப்பில் ஆழ்ந்தேன். அக்கடிதம் பின்வருமாறு:

அன்புள்ள திரு. செட்டியார் அவர்களுக்கு

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சார்பில் தங்களை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு வருகை தருமாறு அழைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். எங்கள் கல்வி-கலாசாரப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் மானியம் ஒன்று வழங்கித் தங்களை அழைக்கிறேன். அமெரிக்கக் கல்வி நிலையங்கள் மற்றும் கலாசார நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்களை நேரில் காணவும், தங்கள் விருப்ப மான துறைகளைப்பற்றி வல்லுநர்களுடன் கலந்து உரையாடவும் தாங்கள் அழைக்கப்படுகிறீர்கள். எங்கள் அழைப்பைத் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

அமெரிக்காவில் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் சுற்றுப் பயணம், இந்தியாவில் தங்கள் சிறப்பான பணிக்கு உறுதுணை யாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அது தாங்கள் அமெரிக்கா வில் சந்திக்க இருக்கும் ஆசிரியர்களிடமும் நண்பர்களிடமும் இந்திய வாழ்க்கைப்பற்றி நல்லெண்ணத்தை வளர்க்கும் என்று நான் நன்கு அறிவேன்.

அன்பு நிறைந்த வணக்கங்களுடன்

தங்கள் உண்மையுள்ள

(ஜான் கென்னத் கால்பிரெய்த்)

பிரிக்கப்படாத இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் நான் சுற்றிப்பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். 1947-ஆம் ஆண்டில் சிலோனில் பட்டிகோலா என்ற இடத்தில் சுவாமி விபுலானந்தர்

நினைவுக்கட்டிட அடிக்கல் நாட்டு விழாவுக்குச் சென்றதைத்தவிர வேறு எந்த வெளி நாட்டிற்கும் அதுவரை நான் சென்றதில்லை. சுவாமி விபுலானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த துறவி; சிறந்த தமிழறிஞர். இலங்கையில் இந்து-தமிழ் பண்பாட்டு மறுமலர்ச்சியைத் தொடங்கியவர். மீண்டும் இருமுறை நான் இலங்கைக்குச் சென்றுள்ளேன். 1951-ல் யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற தமிழ்வளர்ச்சிக்கழக மாநாட்டிற்கும், பின்னர் கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் பொன்விழாவிற்கும் சென்றிருந்தேன். ஆகவே, அமெரிக்கத் தூதரின் கடிதம் கிடைத்ததும், அமெரிக்க நாட்டின் கல்வி மற்றும் கலாச்சாரத்தைப்பற்றி அறிந்து கொள்ள ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்று மகிழ்ச்சியுற்றேன். சுவாமி விவேகானந்தரை உலகிற்கு அறிமுகப் படுத்திய நாடல்லவா அது!

என் உலகப் பயணத்தின்போது அமெரிக்கா செல்லும் வழியில் எகிப்து, கிரீஸ், இத்தாலி, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும், அமெரிக்காவிலிருந்து திரும்பி வரும்போது ஜப்பான், ஹாங்காங் தாய்லாந்து, பர்மா, மலேசியா, இந்தோனேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் செல்லத் திட்டமிட்டிருந்தேன். என் பயணத்தின் பெரும்பாலான நாட்களை, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பல்வேறு கல்வி நிறுவனங்களைப் பார்க்கவும், அமெரிக்கக் கல்விமுறையைப் பற்றி அறியவும் செலவழித்தேன். இதைவிட ஆழ்ந்த விருப்பம் ஒன்று எனக்கு இருந்தது. அதன்படி, சுவாமி விவேகானந்தரால் பல பகுதிகளிலும் ராமகிருஷ்ண மிஷன் நிறுவப்பட்ட மையங்களையும் பார்த்துவரவும் திட்டமிட்டேன்.

முதலில் நான் எகிப்திற்குச் சென்றேன். அங்கு நான் பார்த்த இடங்களில் மிகவும் முக்கியமானவை கீஸே பிரமிடும், ஸ்பிங்சும் ஆகும். இந்தப் பிரமிடு உலக அதிசயங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. துல்லியமான அளவு அமைப்பு களுடன் முழுதும் கற்களால் கட்டப்பட்டதாகும். பிரம்மாண்ட மான இப்பிரமிடு, நாலாயிரம் ஆண்டுகட்குமுன் இதனை எப்படிக் கட்டியிருப்பார்கள் என்பது இன்னும் புரியாத புதிராகவே உள்ளது. ஸ்பிங்க்ஸ் இருந்த பகுதியில் எகிப்தின் கலாச்சார வரலாற்றை ஒளி-ஒலிக் காட்சியாக அற்புதமாகக் காண்பித்துக் கொண்டிருந்தனர். அங்கிருந்த அருங்காட்சியகத்திற்கும் என்னை அழைத்துச் சென்றனர். ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குமுன் பதப்படுத்தப்பட்ட மனிதச் சவங்கள் (மம்மிகள்) அங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

அடுத்து, நான் கிரீஸின் தலைநகரான ஏதென்சுக்குச் சென்றேன். நான் பண்டைய ஐரோப்பிய வரலாற்றைப் படித்துள்ளேன். பரி (Bury) என்பவர் எழுதிய கிரேக்க வரலாற்று நூலில், ஏதென்சு நகர அரசின் சிறப்புப் பற்றியும், அந்நகரம் அமைந்திருந்த அக்ரோபாலிஸ் பற்றியும், கிரேக்க வரலாற்றின் சிகரமாய்த் திகழும் பார்த்தினான் ஆலயத்தைப் பற்றியும் சாக்ரடிஸ், பிளாட்டோ, அரிஸ்டாடில் போன்ற கிரேக்கச் சிந்தனையாளர்கள் பற்றியும் அற்புதமாக விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று அவற்றின் அழிபாடுகள் தான் உள்ளன. ஒரு காலத்தில் அற்புதமாகத் திகழ்ந்த பார்த்தினான் இன்று சிதைவுகளாக உள்ளது; அக்ரோபாலிஸ் ஒரு சாதாரண ஊராக உள்ளது. ஒரு காலத்தில் புகழின் உச்சியில் இருந்த பெரியதொரு நாகரீகம் காலத்தால் அழிந்துபட்டதை நினைத்து வருந்தினேன்.

ஆனால் வேறு ஒரு நிகழ்ச்சி என்னை மெய்சிலிர்க்க வைத்தது. விமானத்திலிருந்து இறங்கிய நான் விமான நிலையத்திலிருந்து வெளியில் வந்துகொண்டிருந்தேன். அப்பொழுது அங்கு ஒரு பெண்மணி யாரோ ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் அவர், என்னிடம் ஓடிவந்து வியப்பு மேலிட, ''நீங்கள் தானா திரு. அவினாசிலிங்கம்? என்று கேட்டார். நான் பெரும் வியப்பில் ஆழ்ந்தேன். கிரீஸ் நாட்டு அரசின் சுகாதார அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவரின் துணைவியார் திருமதி மேரி நிம்டோ ஜேக்லோ என்பவரே என்னைச் சந்திக்க காத்திருந்தவர். நான் கிரீசுக்கு வருவதைப்பற்றி சுவாமி ரங்கநாதானந்தர் மூலமாக அவர் அறிந்திருந்தார். அவர் தம்மை ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பக்தை என்று அறிமுகப்படுத்திக்கொண்டார். என்னை அவர்தம் இல்லத்திற்கு வருமாறு மிகவும் அன்புடன் வற்புறுத்தி அழைத்தார். அவர் இல்லத்தில் நான் கண்டது என்னை மேலும் வியப்படையச் செய்தது. அவர்கள் வீட்டின் பூஜையறையில், ஸ்ரீ ராமகிருஷ்ணர், தூய அன்னையார் சாரதாமணிதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் திருவுருவப் படங்கள், அழகான புத்தம்புது மலர்களால் அலங்கரித்து வைக்கப்பெற்றிருந்தன. இந்தியாவிலிருந்து பெறப்பட்ட ஊதுவத்திகள் ஏற்றி வைக்கப்பட்டு மணம் கமழ்ந்து கொண்டிருந்தது. திரு. ஜான் மென்டோ உட்பட ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பக்தர்கள் பலரையும் அவர் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். குருதேவர் மேல் அவர்களுக்கிருந்த பக்தி அளப்பரியது. நாங்கள் அனைவரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உலகளாவிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வில் திளைத்தோம்.

அடுத்து நான் ரோம் நகருக்குச் சென்றேன். அங்குச் சென்ற போது பண்டைய ரோமப்பேரரசின் பெருமைகள் என் நினைவில்

படர்ந்தன. ஆனால் வரலாற்று ஆசிரியர்கள் எழுதியபடி, சீசர்கள் ஆட்சி செய்த இடத்தில் சிலந்திகள் கூடுகட்டிக் கொண்டிருந்தன. வெளிநாட்டிருந்து வருகிறவர்களைக் கவரும் இரண்டு முக்கிய இடங்கள் ரோமில் உண்டு. வாடிகன் நகரமும், புனித பீட்டர் ஆலயமும் ஒரு பக்கம் கம்பீரமாக நின்றன. மற்றொரு முக்கிய இடம் ஐக்கிய நாடுகள் சங்கத்தின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) ஆகும். இந்த இரண்டு இடங்களைப் பற்றியும் அறிய நான் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தேன். சென்னை லயோலாக் கல்லூரியின் முன்னாள் முதல்வரான, தந்தை டி சூஜா (Father De Souza) அப்போது ரோமில் இருந்தார். நான் போப்பாண்டவரைச் சந்திப்பதற்கு அவரும் நம் தூதரகமும் மிகவும் முயன்றனர். ஆனால் போப்பாண்டவர் அச்சமயம் ரோமில் இல்லாததால் இந்த முயற்சி நிறைவேறவில்லை.

உலகில் உள்ள சுதந்திர நாடுகளுள் மிகவும் சிறியது வாடிகன் நகரம். ரோமன் கத்தோலிக்கச் சமயத்தின் ஆன்மிக மற்றும் ஆட்சி மையமாக அந்நகரம் திகழ்கிறது. உலகிலுள்ள கிறிஸ்தவ சமயப் பிரிவுகளுள் ரோமன் கத்தோலிக்கச் சமயப்பிரிவே மிகவும் பெரியதாகும். வாடிகன் நகரின் மொத்தப் பரப்பே 100.7 ஏக்கர்கள் தாம். உலகெங்கிலும் பரவியுள்ள கோடிக்கணக்கான ரோமன் கத்தோலிக்கர்களுக்கு அது ஆன்ம எழுச்சியை தோற்றுவிக்கிறது. போப்பாண்டவரே அதன் ஆட்சித் தலைவர். வாடிகன் நகரம் முழுதும் ரோம் நகருக்குள் அமைந்துள்ளது. சாதாரண நகரம் ஒன்றின் சராசரி அளவுள்ள பகுதியைப் போன்ற அது, ரோம் நகரத்தின் வடமேற்குப் பகுதியில் உள்ள வாடிகன் குன்றின்மேல் டைபர் ஆற்றின் மேற்கில் அமைந்துள்ளது. வாடிகன் நகரின் பெரும்பகுதியை உயரமான கற்சுவர் சூழ்ந்துள்ளது. வேறுபட்ட கட்டிடக்கலை அம்சங்களைக் கொண்ட பலவேறு வகையான அழகிய கட்டிடங்கள் அங்கு உள்ளன. அந்நகரில் அழகிய பல திறந்த வெளிச்சதுக்கங்களும், பூங்காக்களும், அமைதியான தெருக்களும் உள்ளன. கம்பீரமான கோபுரத்தைக்கொண்ட, பிரம்மாண்டமான செயின்ட் பீட்டர் தேவாலயம் அந்நகரின் பெரும் பகுதியை ஆக்கிரமித்து அணி செய்கிறது. வாடிகன் அரண்மனை என்பது மொத்தம் ஆயிரம் அறைகளுக்கு மேல் கொண்ட பல்வேறு கட்டிடங்களின் இணைப்பாகும். அந்த அரண்மனையின் ஒரு பகுதியில், போப்பாண்டவரின் விடுதி, அரசுச் செயலர்களின் அலுவலகங்கள், வரவேற்பு அறைகள், மண்டபங்கள் ஆகியனவும், மற்றொரு பகுதியில் வாடிகன் அருங்காட்சியகம், ஆவணக் காப்பகங்கள், நூலகம் போன்றவையும் உள்ளன, வாடிகன் அருங்காட்சியகத்தில் விலைமதிக்க இயலாத அற்புதமான சிலைகள் பல

உள்ளன. அருங்காட்சியகத்திலுள்ள அறைகள் பலவும், வழி பாட்டுக்கூடங்களும் உலகப் புகழ்பெற்ற ஓவியர்களான ராபேல், லியனார்டோடா வின்சி, மைக்கேல் ஆஞ்சலோ ஆகியவர்களின் அற்புதக்கலைப் படைப்புக்களால் அலங்கரிக்கப்பெற்றுள்ளன.

கத்தோலிக்க கிறித்தவ சமயத்தின் மிகப்புனிதமான இடமாகக் கருதப்படுகிறது செயின்ட் பீட்டர் தேவாலயம். உலகத்தின் மிகப் பெரிய கிறித்தவ தேவாலயம் இதுவே. முதல் போப்பாண்டவரின் உடல் அடக்கம் செய்யப்பட்டதாகக் கருதப்படும் கல்லறை மேல் எழுப்பப்பட்ட இரண்டாவது தேவாலயம் இதுவே. இது சிலுவை வடிவில் கட்டப்பட்டதாகும். இந்த ஆலயம் ஏறக்குறைய 700 அடி நீளமும், 450 அடி அகலமும் கொண்டதாகும். இக்கட்டிடத்தின் மிகச்சிறந்த கட்டடக்கலை அம்சம்அதன் வளைமுகடு கோபுரம் (Dome) ஆகும். இதற்குரிய வரைகலை அமைப்பை (Design) உருவாக்கியவர் மைக்கேல் ஆஞ்சலோ. தரைப்பகுதியிலிருந்து இது 400 அடி உயர்ந்துள்ளது. இதன் குறுக்கு விட்டம் 136 அடியாகும். புகழ்மிக்க ரோமப்பேரரசர் கான்ஸ்டன்டை என்பவரால் கி. பி. 325 ல் தொடங்கப்பட்டது என்ற வரலாற்றுச் சிறப்பையும் இது பெற்றுள்ளது.

டாக்டர் திருமதி ராஜம்மாள் தேவதாஸின் நண்பர்கள் பலர் உலக உணவு விவசாய அமைப்பில் (FAO) இருந்தனர். அவர் களுக்கு என் வருகையைப் பற்றி அவர் ஏற்கனவே எழுதியிருந்தார். புதுடில்லி, இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் (ICAR) முன்னாள் விரிவுப்பணி ஆணையர் திரு. J. V A. நெஹமியா, ஏற்கனவே எனக்கு அறிமுகமானவர். அவர் எனக்கு உணவு விவசாய அமைப்பின் பல்வேறு பகுதிகளைச் சுற்றிக் காண்பித்த தோடு, அதன் சத்துணவு விஞ்ஞானிகளுக்கும் என்னை அறிமுகப் படுத்தி வைத்தார். உலக விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும், உலக மக்களின் நன்மைக்காகவும் பணியாற்றும் நிறுவனம் அது. 1945-ல் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு ஐக்கிய நாடுகள் சபையின் சுயாட்சி அமைப்பாகும்.

பின்னர் நான் ரோமிலிருந்து ஜெனிவாவுக்குச் சென்றேன். அங்கு நான் இந்திய அரசின் பிரதிநிதிகளைச் சந்தித்தேன். சுவிட்சர்லாந்தின் ஓர் அழகிய நகரம் ஜெனீவா. உலகத் தொழில் அமைப்பும் (ILO), உலகச் சுகாதார அமைப்பும், (WHO) இந்நகரில் அமைந்துள்ளன. இந்த இரு நிறுவனங்களிலும் எனக்கு நண்பர்கள் இருந்தனர். சர்வதேச வானிலை ஆராய்ச்சி அமைப்பில் பணியாற்றி வந்த திரு. சுந்தரம் அவர்கள்,

என்னைத் தம் இல்லத்திற்கு விருந்துக்கு அழைத்தார். அவரது இல்லத்தில் தென்னிந்தியப் பண்பாடு சிறப்பாகப் பின்பற்றப்படு வதைக் கண்டேன். அங்கிருந்த பூசை அறையில் சிவன், திருமால், விநாயகர், முருகன் ஆகிய தெய்வங்களின் படங்கள் வைக்கப்பெற் றிருந்தன. தென்னிந்திய இல்லங்களில் செய்வது போலவே பூசை விதிகள், விரதங்கள் ஆகியன மிகவும் வைதீகமான முறையில் பின்பற்றப் பட்டன. அவர்கள் அளித்த அன்பான விருந்தை நான் மிகவும் விரும்பி ஏற்று கொண்டேன்.

ஜெனிவாவில் இருந்த என் நண்பர்கள், சில கல்வி நிறுவனங் களுக்கு என்னை அழைத்துச் சென்றனர். சுவிட்சர்லாந்து ஒரு பன் மொழி நாடு. ஆகவே இதற்குத் தகுந்தபடி அங்குக் கல்விமுறை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை நான் காண விரும்பினேன். நான்கு வெவ்வேறு மொழிகள் பேசும் மக்கள் தொகுதிகள் அங்கி ருந்தன. ஜெர்மன் மொழி பேசும் மக்கள் 70.3 சதவீதமும், பிரெஞ்சு மொழி பேசுபவர்கள் 19.2 சதவீதமும், இத்தாலிய மொழி பேசுபவர் கள் 9.6 சதவீதமும், லத்தீன் கிளை மொழியான ரொமான்ச் மொழி பேசுபவர்கள் 0.9 சதவீதமும் அந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். இந்த நான்கு மொழிகளும் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 70 சதவீதத் தினர் ஜெர்மன் மொழி பேசுபவர்களாக இருந்தும் இந்நாட்டில் தனிபட்ட ஒரு மொழி தேசிய மொழியாக இல்லாதது குறிப்பிடத் தக்கது. ஆனால் இந்நாட்டின் அரசாங்க மொழிகளாக ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன் ஆகிய மூன்று மட்டுமே உள்ளன. ரொமான்ச் என்ற நான்காவது மொழி அரசாங்க மொழியாக இல்லாததற்குக் காரணம், அரசு ஆவணங்கள் மற்றும் அரசு ஆணை களை அம்மொழியில் அச்சடிக்கப் பெரும் செலவு பிடிக்கும் என்பதே யாகும். மொழிகளைக் கையாளும் வகையில் சுவிட்சர்லாந்தி லிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டியவை நிரம்ப உண்டு.

அடுத்து, நான் ஜெனிவாவுக்குச் சென்றேன். அண்மையில் தான் அங்கு சுவாமி நித்யபோதானந்தரால் ராமகிருஷ்ண வேதாந்த மையம் தொடங்கப் பெற்றிருந்தது. சுவாமிகள் அப்பொழுது அங்கு இல்லாததால் நான் அங்குச் செல்லவில்லை. ஜெனிவாவிலிருந்து நான் பாரிஸ் நகரம் சென்றேன். ராமகிருஷ்ண மிஷனின் முதல் வெளிநாட்டு மையம் பாரிஸ் நகரில் தான் அமைக்கப்பட்டது. சென்னை மடத்திலிருந்தபோது எனக்கு நன்கு பழக்கப்பட்டவரான சுவாமி ரிதாஜானந்தர் அப்போது அந்த மையத்தின் தலைவராக

இருந்தார். அவர் என்னைச் சந்தித்து அந்த ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார். அங்குதான் நான் தங்கினேன். நம் தூதரக அலுவலர்களும் என்னைச் சந்தித்து, நான் யுனெஸ்கோவைப் பார்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனர்.

பாரிஸிலிருந்து நான் லண்டனுக்குச் சென்றேன். நான் லண்டனை அடைந்ததும் லண்டன் ராமகிருஷ்ண வேதாந்த மையத்தைச்சேர்ந்த கணானந்தரைச் (Swami Ghanananda) சந்தித்ததும் பெருமகிழ்ச்சியடைந்தேன். சென்னையில் நான் அவருடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். என் இங்கிலாந்து விஜயத்திற்குப் பொறுப்பேற்றிருந்த பிரிட்டிஷ் கவுன்சில், ஹீத்ரோ (Heathrow) விமானநிலையத்தில் என்னை வரவேற்கத் தன் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தது. சுவாமி கணானந்தருடன் நான் தங்கியிருந்த சமயத்தில் நான் செல்லவேண்டிய இடங்களுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பிரிட்டிஷ் கவுன்சில் பிரதிநிதிகள் செய்துவிட்டனர். நான் காண்பதற்காக அவர்கள், ஏற்பாடு செய்யப்பட்ட இடங்கள்: பிரிட்டிஷ் நாடாளுமன்றம் (நாடாளுமன்றக் கூட்டம் அப்போது நடைபெறவில்லை), வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயம், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம், ஷேக்ஸ்பியர் பிறந்த ஊரான ஸ்ராட்போர்டு-ஆன்-ஆவன், கல்வியியல் கல்லூரி ஒன்று, மனையியல் கல்லூரி ஒன்று மற்றும் சில நிறுவனங்கள் ஆகும். சென்னை மாகாணத்தின் முன்னாள் கவர்னர் ஆர்ச்சிபால்ட் நை மற்றும் கோவையில் வாணிபம் செய்துகொண்டு, பின்னர் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்ற ஆங்கிலேய நண்பர்கள் ஆகியவர்களை அங்குக் கண்டேன். அப்போது இந்திய ஹை கமிஷனராக இருந்த திரு. சாக்ளா மற்றும் ஹை கமிஷனின் பல உயர் அலுவலர்களையும் நான் இங்கிலாந்தில் சந்தித்தேன். நான் இங்கிலாந்தில் ஒருசில நாட்களே தங்கினேன். ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் போதனைகளைப்பற்றிய என் சொற்பொழிவிற்கு, சுவாமி கணானந்தர் காக்ஸ்டன் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தார். அங்கும் நான் பல இந்திய மாணவர்களையும், மற்ற நண்பர்களையும் சந்தித்தேன். இங்கிலாந்தில் நான்கு நாட்கள் மிகவும் மகிழ்ச்சியாகக் கழித்துவிட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குப் புறப்பட்டேன். என் வெளிநாட்டுப் பயணத்தில் சிறப்பிடம் பெற இருந்ததே அமெரிக்காப் பயணம்தான்.

அமெரிக்காவிற்குள் செல்ல உள்ளோம் என்ற எண்ணமே என்னுள் புதியதொரு கிளர்ச்சியைத் தோற்றுவித்தது.

ஏனென்றால் சுவாமி விவேகானந்தரை உலகிற்கு அறிமுகப்படுத்தியதே அந்த நாடுதான்; அங்குதான் மேற்குநாடுகளுக்கான தம் முதல் சொற்பொழிவை சுவாமிஜி நிகழ்த்தினார். அதை மீண்டும் நினைவு கூர்வது நல்லது. மேலை நாடுகளுக்கான, இந்தியாவின் முதல் கலாச்சாரத் தூதுவர் என்று சுவாமி விவேகானந்தரைப் பற்றிக் குறிப்பிடும் போது அவர் மேற்கொண்ட பணிகள் பற்றி இரண்டு கருத்துக்களை நினைவில் கொள்ளவேண்டும். ஒன்று' சுதந்திர இந்தியாவினால் அவர் அனுப்பப்பட்டவர் அல்லர். ஏனென்றால் அப்போது இந்தியா ஆங்கில ஆதிக்கத்தின் கீழ் வலிமை குன்றியிருந்தது. இரண்டு, எந்த ஒரு இந்தியச் சமயத்தின் சார்பாகவும் அவர் அங்குச் செல்லவில்லை. இந்த இரண்டாவது காரணத்தால் அவர் அங்கு இன்னல்கள் பல ஏற்க வேண்டியிருந்தது. 1893-ல் சிகாகோ நகரில் நடைபெற்ற உலகச் சர்வசமய மாநாட்டில் கலந்து கொள்ளும் அனுமதியைப் பெற அவர் மிகவும் துன்பப்பட வேண்டியிருந்தது. துறவி என்ற காரணத்தால் அவரிடம் பணமோ, பொருள்களோ இருக்கவில்லை; அவற்றை வைத்துக் கொள்ளும் பழக்கமும் அவரிடம் இருக்கவில்லை. அவர் அணிந்திருந்த துறவி உடையைப் பலரும் வியப்போடு நோக்கினர்; சில இடங்களில் சிறுவர்கள் வேடிக்கையாக அவர் பின்னாலும் சென்றனர். அமெரிக்கச் சூழ்நிலைக்கு அவர் புதியவராதலால், கூட்டங்களைக் கண்டு குழப்பமடைந்தார். உலகச் சமயங்களின் மாநாடு மேலும் சில மாதங்கள் கழித்துத்தான் தொடங்கும் என்ற செய்தியும், இந்தியாவின் ஒரு சமய அமைப்பின் பிரதிநிதி என்பதற்கான தக்க சான்றிதழ்களுடன் வராத யாரும் மாநாட்டில் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்ற செய்தியும், இந்த அனுமதி பெறுவதற்கான காலக்கெடு முடிந்துவிட்டது என்ற செய்தியும் சர்வசமய மாநாட்டின் தகவல் நிலையத்திலிருந்து வந்தபோது சுவாமிஜி மிகவும் அதிர்ச்சியுற்றார். இந்த அதிர்ச்சி தரும் செய்தியுடன், தம்மிடம் செலவுக்குப் போதுமான பணம் இல்லை என்ற பிரச்னையும் அவரை மேலும் துயருறச் செய்தது. இத்தகைய இன்னல்களும், சோதனைகளும் தம்மைச் சூழ்ந்தபோதிலும், கடவுள்மேலும், தம் குருநாதர்மேலும் ஆழ்ந்த நம்பிக்கையுடன் அவற்றை எதிர்த்துப் போராடினார். தேவையான சமயத்தில், எதிர்பாராத இடத்திலிருந்து உதவி அவரைத் தேடிவந்தது.

அவர் பாஸ்டன் நகருக்கு ரயிலில் சென்றுகொண்டிருந்தபோது, அவரது கம்பீரத்தால் கவரப்பட்ட குமாரி கேட் சேன்பார்ன் (Miss Kate Sanborn) என்ற அம்மையார் அவரைத் தம் விருந்தினராக வருமாறு அழைத்தார். அழைப்பை ஏற்று

சுவாமிஜி, மஸ்ஸாசூசெட்ஸ் நகரில் 'Breezy Meadows' என்ற பெயர்கொண்ட அவரது அழகிய இல்லத்தில் விருந்தினராகத் தங்கினார். சுவாமிஜியை அந்த அம்மையார் தம் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். இந்தியாவிலிருந்து விநோதமான உடையுடன் வந்திருந்த சுவாமிஜியைக் கண்டு அவர்கள் அனைவரும் மகிழ்ந்து அவருக்குப் பண உதவி செய்யவும் முன்வந்தனர். அவர் அணிந்திருந்த விநோதமான உடையைக் கண்டு பலர் அவரைக் கேலிசெய்தனர்; பல்வேறு வகையான எரிச்சலூட்டும் வினாக்களைக் கேட்டனர். ஒருநாள், அந்த ஊரின் கலாச்சாரக் கழகம் ஒன்றில் சொற்பொழிவாற்றச் சுவாமிஜியை அழைத்தார்கள். அங்கு, குமாரி சேன்பார்ன் அவரை, ஹர்வார்டு பல்கலைக் கழகத்தின் கிரேக்கமொழிப் பேராசிரியரான டாக்டர் J. H. ரைட் என்பவருக்கு அறிமுகப்படுத்திவைத்தார். பேராசிரியர் ரைட், சுவாமிஜியுடன் நான்கு மணி நேரம் உரையாடியபோது சுவாமிஜியின் அறிவாற்றலைக் கண்டு பெருவியப்படைந்தார். அதன் பின், சர்வசமய மாநாட்டில் இந்து சமயத்தின் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளவேண்டுமென்று சுவாமிஜியை அவர் மிகவும் வற்புறுத்தினார். அமெரிக்க மக்களுக்கு சுவாமிஜியை அறிமுகப் படுத்த அதுதான் ஒரே வழி என்றும் பேராசிரியர் ரைட் கூறினார். மாநாட்டில் கலந்துகொள்வதற்குத் தம்மைத் தகுதியாக்கும் எந்த வகையான சான்றிதழ்களும் தம்மிடம் இல்லையென்று சுவாமிஜி கூறினார். அதைக் கேட்ட பேராசிரியர் ரைட், ''சுவாமிஜிகளான தங்களிடம் சான்று கேட்பது, சூரியனிடம் அது பிரகாசிப்பதற்கான உரிமையைப்பற்றிக் கேட்பது போலாகும்,'' என்று கூறினார். சர்வசமய மாநாட்டுக் குழுவின் தலைவருக்குச் சுவாமிஜியை அறிமுகப்படுத்தி, பேராசிரியர் ரைட் உடனடியாக ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில், ''கற்றறிந்த நம் பேராசிரியர்கள் அனைவரைக்காட்டிலும் கற்றறிந்த ஒருவர் இவர்,'' என்று சுவாமிஜியைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தார். மாநாட்டில் கலந்துகொள்வதற்குக் கீழைநாடுகளிலிருந்து வரும் பிரதிநிதிகளை வரவேற்கும் குழுவினர்க்கு, சுவாமிஜியைப்பற்றிய அறிமுகக் கடிதங்களுடன், சுவாமிஜியின் சிகாகோ ரயில் பயணத்திற்கான பயணச்சீட்டு ஒறையும் சுவாமிஜியிடம் பேராசிரியர் ரைட் கொடுத்தார்.

இறைவனின் கருணை இவ்வாறு வெளிப்படையாக மலர்வதைக் கண்ட சுவாமிஜி அளவற்ற ஆனந்தம் அடைந்தார். எந்த ஒரு நற்பணியின்பொருட்டு அவர் இந்தியாவைவிட்டு வந்தாரோ அந்த நற்பணி நிறைவேறும் நேரம் நெருங்கிக்கொண்டிருப்பதை அவர் உணர்ந்தார். சிகாகோ ரயில் நிலையத்தில் இறங்கியதும்,

சர்வசமய மாநாட்டுக் குழுவின் தலைவருக்குப் பேராசிரியர் ரைட் கொடுத்த அறிமுகக் கடிதம் காணாமற் போயிருந்தது பற்றி அறிந்த சுவாமிஜி மனத்துயர் அடைந்தார். அங்கிருந்த பலரிடம் அந்த முகவரிபற்றி விசாரித்தார். ஆனால் சிகாகோ நகரின் அப் பகுதி ஜெர்மன் மொழி பேசுபவர்கள் வாழும் பகுதியாதலால் சுவாமிஜி சொன்னதை யாரும் புரிந்துகொள்ளவில்லை. ஆகவே பனிக்காலக் குளிராதலால் அவர் அந்த ரயில் நிலையத்திலேயே சரக்குகள் வைக்கும் பகுதியில் இருந்த ஒரு பெரிய மரப்பெட்டிக்குள் படுத்து உறங்கிவிட்டார்.

மறுநாள் பொழுது விடிந்தது. சுவாமிஜி ரயில்நிலையத்தை விட்டு வெளியில் வந்து அந்த நகரின் ஏரிக்கரைச் சாலைக்கு வந்தார்; அந்தப் பகுதியில் தான் கோடீஸ்வரர்களும், பணக்கார வணிகர்களும் வசித்து வந்தனர். சர்வசமய மாநாட்டுக்குழுவினர் இருந்த பகுதிக்குச் சென்றார். அவரது அழுக்கடைந்த ஆடைகளையும், சோர்வடைந்த தோற்றத்தையும் கண்டு, அங்கு வசித்தவர்கள் அவரை மிகவும் கேவலமாக நடத்தினார்கள்; வேலைக்காரர்களும் மற்றவர்களும் அவரைத் தூற்றினார்கள். மிகவும் களைத்துப் போய்க் கடைசியில் இறைவனின் சித்தப்படி நடக்கட்டும் என்று எண்ணிச் சாலையோரத்தில் அமர்ந்தார். அப்போது எதிர்ப் பக்கத்திலிருந்த நவநாகரிகமான வீடு ஒன்றிலிருந்து அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் போல் தோற்றமளித்த ஒரு பெண்மணி சுவாமிஜியை நோக்கி வந்தார். மிகுந்த மரியாதையுடன் அவர் சுவாமிஜியிடம், 'ஐயா, தாங்கள் ஏதோ துன்பத்தில் இருப்பது போல் தெரிகிறதே. சர்வசமய மாநாட்டின் பிரதிநிதியா தாங்கள்? தங்களுக்கு நான் உதவலாமா?' என்று கேட்டார். சுவாமிஜி தம் இன்னல்களை அவரிடம் கூறினார். சுவாமிஜியை அவர் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். சுவாமிஜி நீராடி, காலை உணவு உண்டபின் அவரை அந்தப் பெண்மணி மாநாட்டு அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். பேராசிரியர் ரைட் கொடுத்த அறிமுகக்கடிதத்தின் பேரில், மாநாட்டில் கலந்து கொள்ளும் அனுமதியைச் சுவாமிஜிக்கு அவர் பெற்றுக் கொடுத்தார். இவ்வாறு இறைவனின் தேவதை போல் வந்து உதவிய அவரே திருமதி. W. ஹேல் ஆவார். அவர், அவருடைய கணவர், குழந்தைகள் உள்ளிட்ட ஹேல் குடும்பத்தினர் சுவாமிஜிக்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள் ஆயினர். சிகாகோவில் அவர்களின் இல்லமே சுவாமிஜியின் உறைவிடமாயிற்று.

என்றும் நினைவில் நிற்கும் அந்தக் திங்கட்கிழமை காலையில் சர்வசமய மாநாடு தொடங்கிற்று. சிகாகோ நகரின்,

கொலம்பாஸ் மண்டபத்தின் மேடையில், உலகின் 1,200 கோடி மக்களின் பல்வேறு சமயங்களின் பிரதிநிதிகள் வீற்றிருந்தனர். மாநாட்டின் தலைவர், சுவாமி விவேகானந்தரைப் பேச அழைத்தார். அறிவுக்கடவுளான சரஸ்வதிதேவியை மனமார வழிபட்டுத் தம் சொற்பொழிவை, 'அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே, சகோதரர் களே!' என்று தொடங்கினார் சுவாமிஜி. அடுத்த சொல்லை அவர் சொல்லுமுன் மாநாட்டில் குழுமியிருந்த அனைவரிடையேயும் உணர்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓட, நூற்றுக்கணக்கானவர்கள் எழுந்து நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கரவொலி எழுப்பினர். இந்த உற்சாக ஆரவார அலை ஓய்வதற்கு இரண்டு நிமிடங்கள் ஆயின! சுவாமிஜி திகைத்துப்போனார். ஆரவாரம் அடங்கி மீண்டும் சபை அமைதியான பொழுது சுவாமிஜி தம் உரையைத் தொடர்ந்தார். அவர் பேச்சு சுருக்கமாக இருந்தது. ஆனால் பொருள் பொதிந்து ஆழ்ந்த உணர்ச்சிமிக்கதாய் இருந்தது. அவரது சொற்பொழிவில் திகழ்ந்த, உலகளாவிய சகோதர நேயம், அளவுகடந்த ஆர்வம், விரிந்த நோக்கு ஆகியவை அங்குக்குழுமி யிருந்த அனைவரையும் கவர்ந்திழுத்தன. அந்தச் சபையின் சம்பிரதாயங்களை ஒதுக்கி வைத்து விட்டு, மக்களின் இதய உணர்வுகளுக்கு ஏற்ற மொழியில் அவர் பேசினார். ஒவ்வொரு பேச்சாளரும் தம் சொந்தக் கடவுள் பற்றியும், தங்கள் சமயத்தின் கடவுள் பற்றியும் பேசினர். சுவாமி விவேகானந்தர் மட்டும் அனைத்துக் கடவுள்கள் பற்றியும் பேசி, அவர்கள் அனைவரையும் தழுவி எங்கும் நிறைந்த பரம்பொருள் ஒன்றே என்று எடுத்து ரைத்தார். அதுதான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆன்ம நேய ஒருமைப் பாடும், பண்டைய இந்தியாவின் பண்பாடும் ஆகும். இந்த ஆன்மத்தத்துவமே உலகின் சமயங்களுக்கு இடையே இருந்த சுவர்களைத் தகர்த்தெறிந்து உலகச் சமயநேயத்திற்கு வழிவகுத்த தாகும். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் இந்த ஆன்மநேய ஒருமைப்பாடு அமெரிக்காவில், தம் சீடர் சுவாமி விவேகானந்தரின் வாயிலாக வெளிப்பட்டது.

அன்று பிற்பகல் அம்மாநாட்டில் சுவாமிஜிக்கு மகிழ்ச்சிப் பெருக்குடன் கூடிய அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. மாநாட்டில் சுவாமிஜியின் பங்கைப்பற்றி அமெரிக்கச் செய்தித் தாள்கள் பெரிய எழுத்துக்களில் தலைப்புச் செய்தியாக வெளி யிட்டன. இதை அறிந்த அமெரிக்கநாடு அடுத்த நாள் காலையில் சுவாமிஜிக்கு அமோக வரவேற்பு அளித்தது. சர்வசமய மாநாட்டில் கலந்து கொண்டதின் காரணமாக, யாருமே அறியாத ஒரு சந்நியாசி, உலகப் புகழ் பெற்றவரானார்; ஒருவர்க்கும் புலப்படாது எங்கெங்கோ

சுற்றியலைந்த இந்தியத்துறவி சமய ஒருமைப்பாடு மற்றும் சமாதானத்தின் தீர்க்கதரிசியாகவும், கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் பாலமாகவும் புகழ்பெற்றார். சுவாமிஜியின் ஆளுயரப் படங்கள் 'சுவாமி விவேகானந்தர்' என்ற தலைப்புடன் சிகாகோ நகரை அலங்கரித்தன. அப்படங்கள் வைக்கப்பட்ட வீதிகளில் சென்றவர்கள் தங்கள் தங்கள் சிரம் தாழ்த்தி அவற்றுக்கு வணக்கம் செலுத்திச் சென்றனர். 'தீர்க்கதரிசி' என்றும் 'முனிவர்' என்றும் பத்திரிக்கைகள் அவரைப் போற்றிப் புகழ்ந்தன. 'நியூயார்க் ஹெரால்டு' என்ற இதழ் அவரைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு புகழ்ந்தது:

''சர்வ சமய மாநாட்டில் கலந்து கொண்டவர்களில் அவரே (சுவாமி விவேகானந்தரே) தலை சிறந்தவர் என்பதில் ஐயமில்லை. அவரது உரையைக் கேட்டபின், அறிவுத்திறன் கொண்ட இந்த நாட்டிற்கு (இந்தியாவுக்கு) சமயப் பிரசாரகர்களை அனுப்பியது எவ்வளவு தவறு என்று உணர்ந்து கொண்டோம்.''

செய்தித் தாள்களும், பத்திரிகைகளும், மக்களும் அவரை வானளாவப் புகழ்ந்தபோதும், சிகாகோ சமூகத்தின் மிகப்பெரும் செல்வந்தர்களின் மாளிகைகள் அவரை வரவேற்றபோதும், நெடுந் தொலைவில் இருந்த தம் தாய்நாட்டின் ஏழை மக்களுக்காக அவரது இதயம் ரத்தம் சிந்தியது. தாம் வெற்றி வாகை சூடிய அதே நாள் இரவில் அவர் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்த அரச போகங்களுடன் கூடிய அறையில் அவரால் உறங்க இயலவில்லை. அமெரிக்க நாட்டின் அளவற்ற ஐஸ்வர்யத்திற்கும், தம் சொந்த நாட்டின் சொல்லொணா வறுமைக்கும் இடையே இருந்த வேறு பாட்டை நினைத்து அழுது கண்ணீர் வடித்தார். அங்கிருந்த பஞ்சு மெத்தை அவருக்கு முள் படுக்கையாயிற்று; மெத்தென்ற தலையணைகள் கண்ணீரால் நனைந்து ஈரமாயின. துயரப் பெருக்கால் உணர்ச்சி மேலிடத் தரையில் விழுந்து புரண்டு அழுது ''அன்னையே! என் தாய்நாடு வறுமைச் சேற்றில் உழன்று கொண் டிருக்கும் போது எனக்குப் பேரும் புகழும் எதற்கு? கோடிக்கணக் கான என் தாய்நாட்டு மக்கள் ஒரு கவளச் சோறின்றிச் செத்துக் கொண்டிருக்கும்போது, இங்கு சின்னஞ்சிறு சுகங்களுக்காக கோடிக் கணக்காகச் செலவழிக்கிறார்கள்! இந்தியாவின் ஏழைகளை உயர்த் துவது யார்? அவர்களுக்கு உணவளிப்பவர் யார்?

இவ்வாறு சிகாகோவில் பெருத்த பரபரப்பை ஏற்படுத்திய பின் சுவாமிஜி மூன்றாண்டுகள் அமெரிக்காவில் தங்கினார். அப்போது

அவர் அந்த நாட்டின் நகரங்களுக்கும், ஊர்களுக்கும் சூறாவளிப் பயணம் மேற்கொண்டு, சமய வெறி கொண்ட சில சமயப் பிரச்சாரகர்கள் இந்தியாவைப் பற்றி அமெரிக்க மக்களிடையே தோற்றுவித்திருந்த தவறான எண்ணங்களைப் போக்கியும், கிறித்துவப் பாதிரிமார்களின் சமய வெறியையும், சகிப்பின்மையையும் எதிர்த்து போர் முரசு கொட்டியும், சொற்பொழிவுகள் செய்தார். ஆனால் பரந்த மனப்பான்மை கொண்ட நூற்றுக்கணக்கான கிறித்தவர்கள் சுவாமிஜியின் கருத்துக்களை வரவேற்று அவருக்கு ஆதரவளித்தனர். அந்த நாட்டின் பகுத்தறிவாளர்கள் பலர் அவரது கருத்துக்களை வரவேற்றனர். எண்ணற்ற எதிர்ப்புகளை வென்று நான்கு ஆண்டுகள் அயராமல் அவர் ஆற்றிய அரும்பணியின் மூலம், இந்தியாவின் கலாச்சாரத்திற்கும், சமயத்திற்கும், நன்மதிப்பும், நற்பெயரும் தேடித்தந்தார். இதன் விளைவாக, அமெரிக்காவில் ராமகிருஷ்ண வேதாந்தச் சங்கங்கள் பல தோன்றியது மட்டுமன்றி, இந்து சமயத்தின் மற்ற பல நற்பணியாளர்கள் அங்குச் சென்று சமயப் பணியாற்றும் வாய்ப்புகளும் ஏற்பட்டன. சுவாமிஜியைப் பற்றிய இந்த எண்ணங்கள் என் மனதில் படர்ந்ததால், அவரால் தொடங்கி வைக்கப்பட்ட பல்வேறு மையங்களைக் காணவேண்டும் என்ற ஆவல் என்னுள் எழுந்தது. நான் செல்ல வேண்டிய இடங்களுக்கான பயணத் திட்டம் மற்றும் தேவையான ஏற்பாடுகள் அனைத்தையும் அரசுத்துறை செய்திருந்தது. அரசுத்துறையைச் சேர்ந்த திரு கான்ஸ்டன்டைன் K. க்ருபெசிக் என்பவர் என் அமெரிக்கப் பயணம் முழுதும் என்னுடன் இருந்து என் நிகழ்ச்சிகள் யாவும் தடையின்றி நடக்க உதவியாக இருந்தார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருக்கும் மொத்தம் பன்னிரண்டு ராமகிருஷ்ண வேதாந்த மையங்களில் நியூயார்க், போஸ்டன், சிகாகோ, ஹாலிவுட், சாந்தா பார்பரா, ட்ராபுகோ, சான்பிரான் சிஸ்கோ, பெர்க்லி, சேக்ரமெண்டோ ஆகிய ஊர்களிலிருந்த மையங்களுக்கு மட்டுமே என்னால் செல்ல முடிந்தது. இந்த மையங்களில் சுவாமி பவித்ரானந்தர், சுவாமி நிகிலானந்தர், சுவாமி விஸ்வானந்தர், சுவாமி பிரபவானந்தர், சுவாமி அசோகானந்தர், சுவாமி சிரத்தானந்தர், சுவாமி சர்வகதானந்தர் ஆகியோர் சேவை செய்து வந்தனர். ஞாயிற்றுக்கிழமை சிறப்பு வழிபாடுகள், ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் வகுப்புகள் (classes on Gospel of Sri Ramakrishna), உபநிடதம் மற்றும் கீதை வகுப்புகள் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாமணி

தேவியார், புத்தர், இயேசுநாதர் ஆகியோரின் பிறந்த நாள் விழாக்கள், சமயச் சொற்பொழிவுகள், அண்டை நகரங்கள், பல் கலைக்கழகங்கள் மற்றும் பல இடங்களில் சமயப்பணி ஆகியன இந்த வேதாந்த மையங்களின் சிறப்புப்பணிகளாகும். பல மையங்களில் என்னை உரையாற்றுமாறு கேட்டுக் கொண்டனர். சர்வ சமய மாநாடு நடந்த சிகாகோ நகருக்குச் செல்ல நான் மிகவும் விரும்பினேன். சுவாமி பாஷ்யானந்தரின் தலைமையின் கீழ் சிகாகோ ஆசிரமம் மிகவும் பெரிய அளவில் வளர்ந்துள்ளது. அங்குள்ள 'கங்கை நகரில்' துறவிகள் உறைவிடம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

அமெரிக்க மையங்களிலேயே, ஹாலிவுட் மற்றும் சான்பிரான் சிஸ்கோ மையங்கள் என்னை மிகவும் கவர்ந்தன. ஹாலிவுட் ஆசிரமத்திற்கு சுவாமி பிரபவானந்தர் தலைவராகவும், சுவாமி வந்தனானந்தா துணைத் தலைவராகவும் இருந்தனர். ஹாலிவுட் ஆசிரமத்தில் கோயில் ஒன்றும் துறவிகள் இல்லம் ஒன்றும் உள்ளன. லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு 135 கி. மீ. வடக்கே உள்ள சாந்தா பார்பராவில் கோயில் ஒன்றும் கன்னியர் மடம் ஒன்றும் உள்ளன; அங்கிருந்து தெற்கில் 104 கி.மீ. தொலைவில் உள்ள ட்ராபுகோவில் கோயில் ஒன்றும் துறவிகள் இல்லம் ஒன்றும் உள்ளன. இந்த ஆசிரமங்கள் அனைத்திலும் காலை, பகல் மற்றும் மாலை வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஹாலிவுட்டிலும், சாந்தா பார்பராவிலும் மாதந்தோறும் இராமாயண வகுப்பு, கீர்த்தனைகள் மற்றும் கண்விழித்து விரதம் காத்தல் ஆகியன நடைபெறுகின்றன. காளிபூசை, சிவராத்திரி, கிறிஸ்துமஸ் மற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர், தூய அன்னையார், சுவாமி விவேகானந்தர் பிறந்த நாட்களுடன் மற்ற சமயப் பெரியார்களின் பிறந்த நாள்களும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. வாரந்தோறும் மாலை வழிபாட்டுக் கூட்டங்களும், ஞாயிறு தோறும் சிறப்பு வழிபாடுகளும் நடைபெறுகின்றன. வெளியிலுள்ள கல்வி நிறுவனங்களுக்கும், ஆலயங்களுக்கும் சுவாமிகளை ஆன்மிக உரை வழங்க அழைக்கின்றனர். சான்பிரான்சிஸ்கோவிலும் துறவிகள் இல்லம் ஒன்றும், கன்னியர் மடம் ஒன்றும் உள்ளன. இந்த ஆசிரமங்கள் அனைத்திலும் பக்திப் பெருக்குடன் வழிபாடுகள் நடப்பதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியுற்றேன். ஸ்ரீ ராமகிருஷ்ணராலும் சுவாமி விவேகானந்தராலும் போதிக்கப்பட்ட ஆன்மிகச் செய்தி அமெரிக்க நாட்டில் வேரூன்றி வருவதைக் கண்டு நான் மெய்சிலிர்த்துப் போனேன்.

அமெரிக்க நாட்டின் பல்வேறு கல்வி நிறுவனங்களை நான் காண்பதற்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசுத்துறை விரிவான திட்டம் வகுத்திருந்தது. நாட்கள் குறைவான காரணத்தால் ஒரு சில முக்கியமான நிறுவனங்களை மட்டுமே காணமுடிந்தது. மனையியல் தொடர்பான நிறுவனங்களையும், வேறுசில சிறப்பான கல்வி நிலையங்களையும் பார்த்து அவற்றின் செயல் திட்டங் களை அறிய நான் விரும்பியிருந்தேன். இந்த நோக்கத்திற் கிணங்க, டென்னசி, கொலம்பியா, கார்னல், அயோவா, ஓஹீயே பல்கலைக் கழகங்களைச் சென்று பார்த்தேன் இப்பல்க லைக் கழகங்கள் சிலவற்றில் நம் ஆசிரியர்கள் சிலர் பயிற்சி பெற்று வந்தனர்; நம் நண்பர்கள் பலரும் அங்கு இருந்தனர். பெரியா மற்றும் ஆண்டியாக் பல்கலைக்கழகங்களும் என் பயணத் திட்டத் தில் இடம் பெற்றன. காரணம், அவற்றில் செயல்படுத்தப்படும் செயல் மற்றும் தொழில்மையக் கல்வி திட்டங்கள் நாம் வித்யால யத்தில் புதிதாகக் தொடங்கியிருக்கும் கிராமியக் கல்வி நிறுவனங் களின் திட்டங்களுக்குத் துணைபுரியும் என்பதேயாகும். இந்தக் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் நண்பர்கள் என் பயணத்தைப் பயன் மிக்கதாகவும், மகிழ்ச்சி நிறைந்ததாகவும் ஆக்கியமைக்கு நான் என்றும் அவர்களுக்கு நன்றியுடையவனாவேன்.

இந்தியாவின்மேல் சீன ஆக்கிரமிப்பின் காரணமாக என் அமெரிக்கப் பயணத்தின் காலத்தைக் குறைத்துக்கொள்ள நேர்ந் தது. சான்பிரான்சிஸ்கோவிலிருந்து நான் ஹோனலூலுவுக்குச் சென்றேன். அங்கு, கிழக்கு-மேற்கு மையத் (East West Centre) தினர் என்னை வரவேற்று உபசரித்தனர். திருமதி கோவிந்த ராம் வாட்டுமால் அம்மையாரை ஹோனலூலுவில் சந்தித்தேன். இந்திய வர்த்தகர் ஒருவரின் துணைவியார் அவர். அவர் நிரந்தரமாக அங்குக் குடியேறியிருந்தார். அமெரிக்காவில் கல்வி கற்கும் இந்திய மாணவர்களுக்கு உதவும் பொருட்டு வாட்மல் உதவி நிறுவனத்தை ஏற்படுத்தியிருந்தார். அங்கிருந்து டோக்கியோ சென்றேன். அங்கு நம் தூதரகத்தைச் சேர்ந்த நண்பர்களைச் சந்தித்தேன். ஜப்பானில் சில நாட்கள் தங்கி அங்குள்ள கல்விமுறையைப் பற்றியறிய முதலில் திட்டமிட்டிருந் தேன். ஆனால் அது நிறைவேறவில்லை. ஆனால், ஜப்பானி லுள்ள வேதாந்த மையத்தைச் சேர்ந்தவரும், ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த பக்தருமான திரு. நாராயண் உச்சிகாகியைச் சந்திப்பதாக ஏற்கெனவே உறுதியளித்திருந்தேன். அந்த உறுதி

யின் அடிப்படையில் ஒஸாகாவில் உள்ள ஆசிரமத்திற்கு மட்டும் சென்று வந்தேன்.

காமகூராவிலுள்ள நாவா புத்தர் ஆலயத்திற்கும் சென்றேன். உலகிலேயே மிகவும் பெரியதெனவும் மிக அழகானதென்றும் கருதப்படும் புத்தர் சிலையை அங்குக் கண்டு வியந்தேன். அந்த ஆலயத்தில் அமைதியும் புனிதமும் நிலவக்கண்டேன். 49 அடி உயரமுள்ள அச்சிலையின் முகம் மட்டும் 8 அடி 5 அங்குலமாகும். தங்கத்தால் செய்யப்பட்டுள்ள அதன் கண்கள் ஒளி வீசிக்கொண்டிருந்தன. அதன் கண்ணிமைகள் வெண்கலத்தால் உருவாக்கப்பட்டிருந்தன. பாதி மூடிய நிலையில் கீழ்நோக்கிப் பார்க்கும் அதன் விழிகள் அற்புதமானவை. நாவா புத்தர் ஆலயத்திற்குச் சென்றபோது, கீழை நாடுகளுக்கு இந்தியா அளித்த அற்புதமான ஆன்மிகச் செய்தி என் நினைவில் படர்ந்து என்னைப் பெருமிதமடையச் செய்தது.

ஹாங்காங், தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஆகிய கீழைநாடுகள் பலவற்றுக்குச் செல்ல முன்னதாகத் திட்டமிட்டிருந்தேன். ஆனால் தாய் நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகள் என்னை விரைந்து இந்தியா திரும்ப வேண்டுமென்று கட்டாயப்படுத்தின. ஆகவே நான் நேராகச் சிங்கப்பூருக்குச் சென்றேன். அங்கு, ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் மையத்தின் தலைவராக இருந்த சுவாமி சித்தாத்மானந்தர், அவருக்கு உதவியாயிருந்த சுவாமி ஸ்திதானந்தர், திரு. ராதா கிருஷ்ணன் மற்றும் நண்பர்கள் என்னை அன்புடன் வரவேற்றனர். அங்குச்சில நாட்களைப் பயனுள்ள வகையில் கழித்து விட்டுத் தாய் நாடு திரும்பினேன்.

நான் தாய் நாடு திரும்பிய போது சீனர்கள் தங்கள் தாக்குதல்களைக் கைவிட்டுத் திரும்பிச் செல்லத் தொடங்கியிருந்தனர். நாடே வெட்கமும், வருத்தமும் படவேண்டிய சூழ்நிலையில் இருந்தது. இந்தியாவின் தோல்விக்கான காரணத்தை அறிய வேண்டுமென்ற உந்துதல் அனைவரிடமும் தென்பட்டது. இத்தோல்வியால் நன்மையும் விளைந்தது. நம் பாதுகாப்பு நிர்வாகத்தில் இருந்த மெத்தனத்தை அது அப்புறப்படுத்தி நம்மை விழிப்படையச் செய்தது. இந்திய நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களும் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டனர்; நாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதனால் பின்னாளில் பாகிஸ்தானுடன் நாம் மேற்கொண்ட போரில் வெற்றி பெற்றோம்.

## 33. அமெரிக்கக் கல்விமுறை

அமெரிக்கநாட்டைச் சுற்றிப்பார்த்துத் திரும்பிய ஒருவருக்கு அதன் கல்விமுறை பற்றி எழுத வேண்டும் என்ற பெருமிதம் ஏற்படு வது இயற்கையே. இந்தியாவைப்போல் இரண்டு மடங்கு பரப்பும், ஆனால் சுமார் மூன்றில் ஒருபங்கு மக்கள் தொகையுமே கொண்ட நாடு அமெரிக்கா. மிகப்பரந்த அந்தக் கண்டம் முழுதும் கல்வி நிறுவனங்கள் பரந்து காணப்படுகின்றன. அந்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் அங்கு நிலவும் சமூக நிலைக்கு ஏற்பக் கல்விமுறையும் கல்விநிறுவனங்களும் அமைந்துள்ளன. அமெரிக்க நாடு முழுவதும் ஒரே வகையான கல்விமுறை பின்பற்றப்படுவதில்லை ஆகவே, நான் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் அமெரிக்கக் கல்வி முறையின் ஒருசில அம்சங்களைக் கூறவிரும்புகிறேன்.

அமெரிக்கக் கல்வி நிறுவனங்களைக் கீழ்கண்டவாறு பொது வாக வகைப்படுத்தலாம்: (1) இளநிலைக் கல்லூரிகள் (Junior Colleges), (2) தொழில் நுட்பக் கல்லூரிகள் (Technical Colleges), (3) பொதுக் கல்லூரிகள் (General Colleges), (4) லிபரல் கலைக் கல்லூரிகள் (Liberal Arts Colleges), (5) நகராட்சி கல்லூரிகள் (Municipal Colleges), (6) நில-மான்யக் கல்லூரிகள் மற்றும் பல் கலைக்கழகங்கள் (Land-Grant Colleges and Universities), (7) தொழிலியல் கல்லூரிகள் (Professional Colleges), (8) பட்டப் படிப்புப் பள்ளிகள் (Graduate Schools), (9) மற்ற உயர்கல்வி நிறுவனங்கள் (Other Institutes of Higher Learning).

அமெரிக்க மக்களின் வாழ்க்கையில் நிலவும் வேறுபட்ட கலாச் சாரப் பிரிவுகளின் காரணமாகவும், அவர்களின் சுதந்திரமான மனப்போக்குகளின் காரணமாகவும், அங்கு, பல்வேறு வகையான கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் காணப்படுகின்றன.

அப்படியென்றால், ஒவ்வொன்றும் ஒரு தனிப்பட்ட பல்கலைக் கழகமாக நடைபெறும். ஆயிரக்கணக்கான சுதந்திரமான கல்வி நிறு வனங்களில் கல்வித்தரம் எவ்வாறு நிலைநிறுத்தப்படுகின்றது

என்ற வினா எழலாம். மற்ற நாடுகளில் உயர் கல்வி நிறுவனங்களின் தரம் அரசாங்கத்தாலோ, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களாலோ நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் அமெரிக்காவில் சுதந்திரமாகச் செயல்படும் தரமதிப்பீட்டு அமைப்புகள் கல்விநிறுவனங்களின் தரத்தை மதிப்பீடுசெய்து அவற்றுக்கு அங்கீகாரம் வழங்குகின்றன. இந்தத் தரமதிப்பீட்டு அமைப்புகள் அந்தந்தப் பிராந்தியங்களில் அமைந்துள்ளன. கல்விநிறுவனங்களுக்கு இவ்வாறு தரமதிப்பீடு செய்து அங்கீகாரம் வழங்கும் முறை சம்பிரதாய முறைப்படி இல்லாமல் இருப்பதாகத் தோன்றலாம். ஆனால் இவற்றின் நெறிமுறைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டு மிகவும் கவனத்துடன் பின்பற்றப் படுகின்றன. அங்கீகாரம் பெறாத கல்விநிறுவனம் தன் மதிப்பை இழந்துவிடுகின்றது. மாணவர்கள் அங்குச் சென்று கற்க விரும்புவதில்லை; அதற்குரிய நிதியுதவியும் கிடைக்காது. அமெரிக்காவில் இவ்வாறான தரமதிப்பீட்டு அமைப்புகள் பிராந்தியத்திற்கு ஒன்றாக மொத்தம் ஆறு உள்ளன. பொறியியல், மருத்துவம், சட்டம், வேதியல் போன்ற குறிப்பிட்ட தொழிலியல் கல்விக்கான கலைத்திட்டங்கள் Curricula) தொழிலியல் தொடர்பான தனிப்பட்ட தரநிர்ணய அமைப்புக்களால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இவ்வாறு அங்கீகாரம் பெற்ற கல்விநிறுவனங்களின் பட்டியலை, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கல்வித்துறை அலுவலகம் வெளியிடுகின்றது. அமெரிக்க நாட்டுக் கல்லூரி அல்லது பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்தைப் பெற விரும்பும் அயல்நாட்டு மாணவர், தாம் பயிலவிருக்கும் கல்வி நிறுவனம் அங்கீகாரம் பெற்றதா என்று உறுதிசெய்து கொண்ட பின்னரே அதில் சேருமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

அமெரிக்காவில் மாணவர்களின் கல்விச்செலவுகள் எவ்வாறு ஈடுசெய்யப்படுகின்றன என்பதைப்பற்றியும் நான் அறிந்து கொண்டேன். மற்ற நாடுகளில் உள்ளதைப் போன்றே மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகைகளும், கடன்களும், அமெரிக்காவிலும் வழங்கப்படுகின்றன. ஆனால் மாணவர்கள் தங்கள் கல்விச் செலவில் 50 சதவீதத்தைத் தங்கள் பகுதி நேரப்பணிகளின் மூலம் வருகின்ற வருவாயினால் சரிக்கட்டிக் கொள்கின்றனர். இவ்வருவாயைப் பெற அவர்கள் கல்லூரி நேரத்தைத்தவிர அதிக நேரம் உழைக்கின்றனர். அதைப்பற்றி அவர்கள் மிகவும் பெருமைப்படுகின்றனர். மற்றக் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் விடுமுறைக் காலங்களில் அண்மையிலுள்ள இடங்களுக்குச் சென்று துப்புரவு செய்தல், பாத்திரம் கழுவுதல், பரிமாறுதல் போன்ற பணிகளில் ஈடுபட்டுப் பணம் சம்பாதித்துத் தங்கள் கல்விச் செலவின் கணிசமான பகுதியை ஈடுகட்டிக் கொள்

கின்றனர். ஏழை மாணவர்கள் மட்டுமன்றி வசதியான மாணவர்களும் இவற்றில் ஈடுபடுவதைப் பெருமையாக நினைக்கின்றனர். பெருஞ்செல்வந்தரான ராக்ஃபெல்லரின் புதல்வர்கள்கூட ஆப்பிள் பழங்களை அறுவடை செய்யும் வேலையில் ஈடுபட்டதாக ஆன்டியாக் கல்லூரியில் சொல்லப்பட்டது. கல்வி கற்கும்போதே, பகுதிநேரப்பணிகளில் ஈடுபட்டுப் பொருள் ஈட்டுவது, மாணவர்களிடையே நல்ல அனுபவங்களையும், நற்பண்புகளையும் வளர்த்து அவர்களைத் தன்னம்பிக்கையுடையவர்களாகவும் சிறந்த குடிமக்களாகவும் ஆக்குகிறது என்று பெற்றோர்கள் பலர் கருதுகின்றனர்.

கல்விநிறுவனங்களுக்கு நான் சென்றபோது அவற்றுடன் தொடர்புகொண்ட பல்கலைக்கழகத் தலைவர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர் குழுவினர் ஆகியோருடன் கலந்துரையாடும் நல்வாய்ப்புக் கிடைத்தது. இவ்வாறான கலந்துரையாடல்களுக்கு அரசுமூலம் ஏற்கெனவே ஏற்பாடுசெய்யப் பெற்றிருந்ததால், என்னை அன்புடன் வரவேற்று, அக்கல்விநிறுவனங்களைச் சுற்றிக்காண்பித்து, கல்வியின் பல்வேறு அம்சங்களைப்பற்றியும் அவர்கள் விவரித்தனர்.

அமெரிக்க உயர்கல்வியின் மிகச் சிறந்த அம்சங்களுள் ஒன்று, முன்னாள் மாணவர்கள், படித்துக்கொண்டிருக்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், வணிகர்கள், தொழில்துறையினர், அரசு மற்றும் சமுதாயம் ஆகிய அனைவரும் கல்வியில் காட்டும் மனப்பூர்வமான ஈடுபாடும், பொறுப்புமேயாகும். நம் நாட்டைப் பொருத்தவரை கல்வியென்பது இன்றளவும் அரசாங்கம் மற்றும் கல்விநிறுவனங்களை நடத்துவோரின் பொறுப்பாக மட்டுமே இருந்துவருகிறது. அதனால் நாட்டின் அந்தந்தப் பகுதிகளின் சமுதாயத் தேவைகளுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப, பல்வேறு வகையான பாடங்களும், செயல்திறனை வளர்க்கும் செய்முறைப் பயிற்சிகளும் கல்வித் திட்டத்தில் இடம் பெறாமல் உள்ளன. அதனால், கல்வியென்பது வெறும் நூலறிவாகவும், தேர்வுகளை மையமாகக் கொண்டதாகவுமே அமைந்து வாழ்க்கைப் பயனளிக்கும் செயல்திறன்களுக்கு இடமளிக்காமல் உள்ளது. பல கல்லூரிகளைத் தன்னகத்தே கொண்ட பல்கலைக்கழகங்களின் பணி மிகவும் சிக்கலானதாக அமைந்துள்ளது மட்டுமன்றி, தேர்வுகளை நடத்துவதே அவற்றின் முக்கியப் பொறுப்பாகவும் அமைந்து விட்டது. முன்னேறிவரும் அறிவுத்துறைகளுக்கு ஏற்ப அவற்றின் பாடத்திட்டங்கள் அமையவில்லை. அனைத்துப் பல்கலைக்கழகங்

களின் பாடத்திட்டங்களும் ஏறக்குறைய ஒன்றுபோலவே-ஒன்றுக் கொன்று கொடுக்கல் வாங்கல் முறையில் - அமைந்துள்ளன. பழைய அறிவியல் தொழில்நுட்பமுறைகளையே பின்பற்றி வரும் சமுதாய நிலையை மாற்றி நவீன அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்பப் புதிய சமுதாய வளர்ச்சிக்கான வழிமுறைகளையும், பயிற்சிகளையும், புதியன காணும் ஆர்வத்தையும் அளிப்பனவாக நம் பல்கலைக்கழகங்கள் அமைய எந்த வகையான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. நம் பாரம்பரியப் பண்பாட்டுக்கு ஊறு நேராத வகையில் புதிய கல்வி முறைகளைக் கொண்டுவருவது நம் உடனடித் தேவையாகும்.

நம் சமுதாயத்தின் செயல்பாடுகள், தேவைகள் ஆகியவற்றுக் கேற்ப நம் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் சமுதாயத்துடன் ஈடுபாடு கொள்ளவேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி, காந்திகிராமக் கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூகப் பணியைத் தம் கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கொண்ட ஒரு சில கல்வி நிறுவனங்களைத்தவிர, பெரும்பான்மை யான கல்வி நிறுவனங்கள் தம் முன்னாள் மாணவர்களையோ, பெற்றோர்களையோ, தாம் செயல்படும் சமுதாயத்தையோ தம் கல்வி வளர்ச்சியுடன் தொடர்புகொண்டனவாக ஆக்கிக்கொள்ள வில்லை. சமூகப்பணி, தேசிய சமூகப்பணித்திட்டம், போன்ற திட்டங்கள் அண்மைக்காலத்தில் சில கல்லூரிகளில் நடைமுறைப் படுத்தப்படுவது வரவேற்கத்தக்கதாகும். இவை, முறையான பாடத்திட்டங்களுடன் இணைக்கப்பட்டு அவற்றில் மாணவன் பெறும் தகுதிகள் தேர்ச்சிக்குரியனவாய்க் கருதப்படவேண்டும். அந்தந்தப் பகுதிகளின் சமுதாயத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்துடனேயே கல்லூரிகளுக்குத் தன்னாட்சி நிலை வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. பாடத்திட்டங்களில் தேவை யான மாறுதல்களைப் புகுத்தும் உரிமையும், தேவையான செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் உரிமையும் அவற்றுக்கு வழங்கப்படுவது இன்றியமையாததாகும். தன்னாட்சி பெற்ற கல்லூரிகளின் பாட அமைப்புக்குழுக் (Academic Bodies) களில் திறமைமிக்க தொழில் வல்லுனர்களையும், விவசாயிகளையும் இடம் பெறச்செய்து. பயன்மிக்க ஆலோசனைகளை அவர்களிட மிருந்து பெற்று அவற்றைக் கல்லூரிக் கலைத்திட்டத்தில் (Curriculum) இடம்பெறச்செய்வது அவசியம்.

அமெரிக்க கல்வி வல்லுனர்களிடம் கலந்துரையாடியபோது, இந்தியக் கல்விமுறையில் ஆசிரியர்களின் பொறுப்புக்கள் வரை

யறுக்கப்பட்டு அவற்றுக்கு அவர்களின் உத்தரவாதம் பெறும் (Teacher Accountability) திட்டம் இல்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அமெரிக்கக் கல்விமுறையில் இத்திட்டம் நடைமுறையில் உள்ளது. ஆசிரியர் தம் பணியில் தொடர்ந்து நீடிப்பதற்கும், பணிஉயர்வு பெறுவதற்கும் தம் கடமையைச் சிறந்தமுறையில் ஆற்றுவதுடன், பணியில் தொடர்ந்து முன்னேற்றம் காண்பிக்கவேண்டும். கீழ்க்கண்ட பொறுப்புக்களில் ஆசிரியர்களின் பணி மதிப்பீடு செய்யப்படுகின்றது; கல்வி நிறுவனத்தின் உறுப்பினர் என்ற நிலையில், ஆசிரியப் பணி புரிபவர் என்ற முறையில், சிறப்பான போதனையில், மற்ற ஆசிரியர்களுடன் உறவுமுறையில், சமுதாய உறுப்பினர் என்ற முறையில். இம்மதிப்பீடு நான்கு நிலைகளில் (Four Levels) செய்யப்படுகின்றது : சுயமதிப்பீடு, மாணவர் மதிப்பீடு, கல்வி நிறுவனத்தலைவர் அல்லது துறைத்தலைவரின் மதிப்பீடு, சக ஆசிரியர்களின் மதிப்பீடு. சக ஆசிரியர்கள் மதிப்பீட்டுக்காக, நிரந்தரப்பணியிடத்தில் பணியாற்றும் மூன்று ஆசிரியர்கள்கொண்ட குழு ஒன்றைத் துறைத்தலைவர் நியமிப்பார். மதிப்பீடு செய்யப்பட வேண்டிய ஆசிரியரின் வகுப்பை இக்குழு பார்வையிட்டு அவரது தகுதியையும், திறமையையும் மதிப்பீடு செய்யும். மேற்குறிப்பிட்ட நான்கு நிலை மதிப்பீடுகளும் தனித்தனியே செய்யப்படும். ஆசிரியரின் குறைகளைத் திருத்தும் நோக்கத்துடன் மட்டுமே, மாணவர்கள் மதிப்பீடு செய்யும் முறை கையாளப்படும். ஆசிரியரைப் பணிநீக்கம் செய்வதற்கு மாணவர்களின் மதிப்பீடு ஒருசில சமயங்களில் மட்டுமே அபூர்வமாகப் பயன்படுத்தப்படும்.

நம் நாட்டில் இந்த முறையில் ஆசிரியர்களை மதிப்பீடு செய்வதில்லை. ஆசிரியர்களுக்குப் பணி உயர்வு அவர்களின் பணி மூப்பின் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது இரண்டு வகையான குறைபாடுகளுக்கு இது வழி வகுக்கிறது: தங்கள் பணியைச் சிறப்பாகச் செய்தாலும் செய்யாவிட்டாலும் தங்கள் பணிமூப்பின் (Seniority) அடிப்படையில் அவர்களுக்குப் பணி உயர்வு கிடைப்பது உறுதி என்ற காரணத்தால் தங்கள் பணியை சிறப்பாகச் செய்ய வேண்டுமென்ற ஆர்வமும் தூண்டுதலும் அவர்களுக்கு இல்லை. அதே சமயம் குறைந்த பணிமூப்பு உள்ளவர்கள் (Juniors) எவ்வளவு சிறப்பாகத் தங்கள் பணியையாற்றினாலும் தங்களுக்குப் பணி உயர்வு கிடைக்கப்போவதில்லை என்ற காரணத்தால் அவர்கள் தங்கள் பணியில் உற்சாகமிழந்து சோர்வடைந்து விடுகின்றனர். இதனால கல்வித் துறை சீரழிந்துபோய் நாட்டுக்குத் தீமை விளைவிக்கிறது. ஆகவே ஆசிரியர்களின் பணித் திறமையின் அடிப்படையிலேயே அவர்களின் பதவி உயர்வு அமை

வது அவர்களின் கடுமையான உழைப்பிற்கும், திறமைக்கும் மதிப்பளிப்பதாக அமையும்.

நல்ல கல்விமுறைக்கு அச்சாணி போன்றவர்கள் ஆசிரியர்கள் என்று அமெரிக்கர்கள் கருதுகின்றனர். ஆனால், மற்றத் தொழில்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தைக் காட்டிலும் தங்கள் உதியம் குறைவு என்றே அந்நாட்டு ஆசிரியர்களும் குறைப்பட்டுக் கொள்கின்றனர். ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பு இல்லையென்ற செய்தி என்னை மிகவும் வியப்பில் ஆழ்த்தியது. பல இடங்களில் ஆசிரியர்கள் பத்து மாத காலத்திற்கு மட்டுமே நியமிக்கப்படுகின்றனர். சிலசமயம் அவர்கள் மூன்றாண்டுக் காலம் பணியாற்றலாம். ஆகவே ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்புத் தருவது அவசியம் என்று கருதினாலும், திறமையற்ற ஒழுக்கக் குறைவான, தகுதியற்ற ஆசிரியர்களைப் பணிநீக்கம் செய்வதைத் தடுக்க சட்டங்களைக் கொண்டுவர முடியாது. ஆசிரியர்களை இவ்வாறு பணிநீக்கம் செய்யும்முறை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. சில மாநிலங்களில் ஓராண்டுக் காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்படுகிறது; சில மாநிலங்களில் ஓராண்டுக்கு மேலும் இவ்வொப்பந்தக் காலம் நீள்கிறது. சில சமயம் தொடர்ச்சியான ஒப்பந்தங்களும் இடம் பெறுகின்றன. இத்தொடர்ச்சியான ஒப்பந்தத்தின்படி ஆசிரியர் ஒருவர் தாம் பணியாற்றும் கல்வி நிறுவனத்திலிருந்து விலகிக்கொள்ள நினைத்தாலோ, அக்கல்வி நிறுவனம் அவரை விலக்க நினைத்தாலோ, குறிப்பிட்ட கால அளவிற்கான முன்னறிவிப்புக் கொடுக்கப்படவேண்டும். இவ்வாறு ஆசிரியர்களைப் பணிநீக்கம் செய்யும் முறைபற்றி நான் பலரிடம் விசாரித்தபொழுது, நல்ல ஆசிரியர்களுக்கான தேவை என்றும் அதிகம் உள்ளது என்றும், நல்ல கல்வியின் பொருட்டுத் திறமையற்ற ஆசிரியர்கள் விலக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

# 34. கிராம வளர்ச்சி மையம் - விவேகானந்தபுரம்

வறுமையை ஒழிப்பதே இந்தியாவுக்கு இருக்கும் மிகப்பெரும் பணியாகும். வறுமையைவிடக் கொடியது வேறொன்றும் இல்லை யென்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர், 'இன்மை என ஒரு பாவி' என்று வறுமையின் கொடுமையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மனிதனின் கண்ணியத்தை வேருடன் அழிக்கிறது வறுமை. அது, மனிதனைத் தாழ்வுறச் செய்து அவனை விலங்கு நிலைக்குக் கொணர்ந்து நம்பிக்கை இழக்கச் செய்துவிடுகிறது. ஒரு பிடி உணவுக்காகத் தன்னையும், தன் மனைவி மக்களையும் விற்றுவிடவும் மனிதன் துணிகிறான்; கொலை செய்யவும் அவன் அஞ்சுவதில்லை.

வேறு வகையான வறுமையும் உண்டு. வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து, அரைவயிற்று உணவுக்காக நாள்தோறும் போராட்டம் நடத்தும் மக்களின் வாழ்க்கை இந்த வகை வறுமைக்கான எடுத்துக்காட்டு. ஒரு நாளுக்கான உணவைத் தேடுவதிலேயே இவர்கள் காலமெல்லாம் கழிகிறது. வேறு எந்த வகையான உயர்ந்த சிந்தனைக்கோ, முயற்சிக்கோ அவர்களுக்கு நேரமில்லை. எந்நேரமும் இவர்கள் நோயிலும் துன்பத்திலும் உழல்கிறார்கள். வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் பெரும்பான்மையான மக்களைக் கொண்ட எந்த நாடும் உன்னதமாகவோ, புகழ் மிக்கதாகவோ உயர முடியாது. பெரும்பான்மையான பாமர மக்களுக்குப்போதிய உணவும், கல்வியறிவும், மற்ற நல்வாய்ப்புகளும் கிடைக்காத வரை எந்தவித அரசியலாலும் பயன் ஏதும் இல்லை.

சுவாமி விவேகானந்தர், காந்தியடிகள் ஆகியோரின் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு வித்யாலயமும் மனையியல் கல்லூரியும் தொடக்க நாட்களிலிருந்தே பல வழிகளிலும் கிராமத்தொண்டில் ஈடுபட்டு வந்திருக்கின்றன. கிராமங்களில் மாணவர்கள் ஓரிரு வாரங்கள் முகாமிட்டு, சத்துணவு மற்றும் குழந்தை வளர்ப்பு, தொடக்கப்பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறை

கள் கட்டிக்கொடுத்தல் போன்ற ஆக்கப்பணிகளில் ஈடுபட்டுவந்துள்ளனர். இவைகள் அனைத்தும் மிகவும் சிறந்த பணிகள் என்றாலும், இவற்றுக்குச் சில வரையறைகள் இருந்தன. அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட பாடங்களைப் படிப்பதும், அவற்றைக் கற்றுத்தருவதுமே மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் முக்கிய நோக்கமாகும். அதனால் அவர்கள் சமூகப்பணிக்கெனக் கொடுத்த நேரம் மிகக் குறைவே. இதில் இன்னொரு குறைபாடு, இச்சமூகப்பணித் திட்டம் தொடர்ச்சியாக இல்லாததாகும். ஆகவே நன்கு திட்டமிடப்பட்ட, தொடர்ச்சியான, நிரந்தர ஊழியர்களைக்கொண்ட செயல்திட்டம் அவசியம் ஆயிற்று. இதற்குத் தேவையானபொழுது மாணவர்களின் உதவியையும் பயன்படுத்திக் கொள்ளலாம். அப்போதுதான் நிரந்தரமான நல்விளைவுகள் ஏற்படும். இந்த எண்ணமே விவேகானந்தபுரம் கிராம வளர்ச்சி மையத்தை நிறுவும் திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்தது. கோவை மாவட்டம் அவினாசி வட்டத்தில், காரமடை வட்டாரத்தில் கோவையிலிருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் விவேகானந்தபுரம் அமைந்துள்ளது. இது மலைவாழ் மக்களும், மற்ற பிற்பட்ட மக்களும் வசிக்கும் ஒரு பின்தங்கிய பகுதியாகும்.

இந்திய நாட்டில், வறுமைக்கோட்டிற்கும் கீழ் வாழும் மக்கள் தொகையைப் பற்றிய பல்வேறு கணக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவர்களில் 80 சதவீதத்தினர், மழைவளம் அற்ற வறண்ட பகுதிகளிலும், விவசாய உற்பத்தி மிகவும் குறைவான இடங்களிலும், தொழிற்சாலைகள் அற்று வேலை வாய்ப்புக்கள் இல்லாத இடங்களிலும் வாழ்வதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. சில மாநிலங்களில் இந்தச் சதவீதம் 55 ஆகவும், வளமான மாநிலங்களான பஞ்சாப், ஹரியானா போன்றவற்றில் 24 சதவீதமாகவும் உள்ளன. ஆனாலும், சத்துணவின்மை, நோய் மற்றும் பலவகையான இன்னல்களுக்கு இடையே துயரத்துடன் வாழ்ந்து வரும் கோடிக் கணக்கான மக்களைப்பற்றிப் புள்ளி விவரங்களால் சரியாகக் கூற முடியாது. இவ்வாறு துன்பத்திலேயே வாழ்வதற்குக் கிராம மக்கள் பழகிவிட்ட காரணத்தால் இதைப்பற்றி அவர்கள் கவலைப் படுவதில்லை. விவேகானந்தபுரம் கிராம வளர்ச்சி மையத்தைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி மிகவும் சுவையானதாகும். பத்து ஆண்டுகளுக்குமுன், என் சக ஊழியர்களும் நானும் கிராமப்பணியின் தொடர்பாக, கூடலூர் விவசாயப் பண்ணைக்கு அருகில் இருந்த தேவனாபுரம் கிராமத் திற்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. நல்ல ஊட்டச் சத்துள்ள உணவு உண்ணும் எந்தவொரு ஆண், பெண் அல்லது குழந்தை

யையும் நாங்கள் அந்தக் கிராமத்தில் பார்க்க முடியவில்லை. அனைவருமே வறுமையில் வாடி உடல் சோர்ந்து காணப்பட்டனர். அந்தக் கிராமத்துக் குழந்தைகள் உப்பிய வயிறும், பரட்டைத் தலையும், புண் நிறைந்த வாயும் ஒழுகிய மூக்கும், குழிவிழுந்த கண்களும் கொண்டவர்களாகப் பரிதாபமாக இருந்தனர். சிறிதளவும் சத்துணவு கிடைக்காத காரணத்தினாலேயே அவர்கள் இவ்வாறு பொலிவற்றுக் காணப்பட்டனர். இந்த அனுபவமே விவேகானந்தபுரம் கிராம வளர்ச்சி மையம் தோன்றக் காரணமாக அமைந்தது. இங்கு இலவச மதிய உணவுத் திட்டத்துடன் கூடிய பால்வாடி ஒன்று உடனடியாகத் தொடங்கப்பட்டது. பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க, கிராம நூற்பு மையம் ஒன்றைத் தொடங்குமாறு சர்வோதய சங்கம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

விவசாயிகளுக்கு, விவசாயத்திலும் கால்நடை வளர்ப்பிலும் பயிற்சி அளிக்கும் திட்டத்துடன் இந்தக் கிராம வளர்ச்சி மையம் தொடங்கப்பட்டது. பின்னர், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கவுன்சிலின் ஆதரவுடன் வேளாண் அறிவியல் மையம் (கிருஷீ விஞ்ஞான் கேந்திரம்) தொடங்கப்பட்டது.

### விவேகானந்தபுரம் கிராமிய மையம்

இந்த மையம் 1978 ஏப்ரல் 16-ஆம் நாள், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவற்றின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி வீரேஸ்வராநந்தரால் முறைப்படித் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிறுவனத்தில் கீழ்க்கண்ட பகுதிகள் அடங்கும்:

1. இந்திய அரசின், விவசாய ஆராய்ச்சிக் கவுன்சிலின் ஒத்துழைப்புடன் நடைபெறும் வேளாண் அறிவியல் மையம்.
2. அந்தப் பகுதியில் பால் வளத்தைப் பெருக்குவதற்கு உதவியாக கலப்பினக் கால்நடைப் பண்ணை.
3. அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியினர் நடத்திவரும் பாலர் பள்ளிகள் (Balwadis).
4. இந்திய விவசாய ஆராய்ச்சிக் கவுன்சிலின் ஒத்துழைப்புடன் நடைபெற்றுவரும் 'ஆய்வகத்திலிருந்து பண்ணைக்கு' (Lab-to-Land-Programme) என்ற திட்டம்.
5. அந்தப் பகுதியில் கிராம வளர்ச்சிப் பணிகளுக்கு நிதி வசதியளிக்க, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிளை.

6. கிராம இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிப்பதற்கான தொழிற் பயிற்சி நிறுவனம்.

இந்த மையத்தால் திட்டமிடப்பட்டு நடைபெறும் பணிகள்:

1. விவசாயம் மற்றும் கால்நடை வளர்ச்சி.
2. பெண்கள், மற்றும் குழந்தைகளுக்கான திட்டங்கள் (குடும்பங்கள்).
3. பொருளாதாரத் திட்டங்கள்.
4. சமூக நல்வாழ்வுத் திட்டம் (சிறு மருத்துவ மையத்தின் மூலம்).
5. கல்வித் திட்டங்கள்.
6. பொழுது போக்கு மற்றும் கலை நிகழ்ச்சிகள்.
7. பிற திட்டங்கள்:
    1. குளங்களில் தூர் எடுத்தல்
    2. நீர்த் தடுப்பு அணைகள் கட்டுதல்
    3. இருக்கின்ற சாலைகளைப் பழுதுபார்த்தலும், புதுச்சாலைகளை அமைத்தலும்
8. கிராம முன்னேற்றத்திற்கான சமூக உள் அமைப்புகளை ஏற்படுத்தல்.
9. ஊழியர்களுக்கான பயிற்சி.
10. ஆராய்ச்சியும் மதிப்பீடும்.

### எதிர்நோக்கிய இன்னல்கள்

1. சிறந்த ஊழியர்களைக் கண்டு பிடித்தல்

விவசாயம், கால்நடை வளர்ப்பு, பொறியியல், மருத்துவம் மனையியல் போன்ற பாடங்களில் சிறந்த கல்வித்தகுதி பெற்ற ஆசிரியர்கள், கிராமப்பகுதிகளில் பணியாற்றக் கிடைப்பது மிகவும் சிரமம். தங்களுக்கு நிரந்தரமான பணி கிடைக்கும் வரை மட்டும் பணியாற்றச் சில இளைஞர்கள் முன்வருகிறார்கள். நகரங்களில் நிரந்தரமான அல்லது அதிக வருவாயுள்ள பணி கிடைக்கும்போது வெளிச் சென்று விடுகின்றனர். கிராம மக்களை உயர்த்தவேண்டும் என்ற தீவிர ஆர்வமும், அர்ப்பணிப்பு மனப்

பான்மையும் கொண்ட நிரந்தரமான ஊழியர்களைப் பெறுவது தான் கிராமவளர்ச்சிப் பணிக்குள்ள மிகப்பெறும் சிக்கலாகும்.

2. மக்களின் ஒத்துழைப்பு இன்மை

மக்களின் ஒத்துழைப்பு இன்மை மற்றொரு பெரிய சிக்கல். அரசியல்வாதிகள், வியாபாரிகள், உயர்சாதியினர், பெரிய நிலக் கிழார்கள், வட்டிக்கடைக்காரர்கள், மற்றும் அரசாங்க அலுவலர் கள் ஆகியவர்களால் நீண்டகாலமாக, கிராமமக்கள் சுரண்டப்பட்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, உண்மையாகவும் தன்னலமின்றியும் உழைப்பதற்கு முன்வருபவர்களின் மேல் கிராமமக்கள் நம்பிக்கை வைக்கத் தயங்குகின்றனர். அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற, அவர்களிடம் அளவற்ற அன்பு, பொறுமை, அவர்களைப் பரிவுடன் புரிந்து கொள்ளுதல், நம் பணிகளைப்பற்றி அவர்கள் நன்கு புரிந்து கொள்ளுமாறு செய்தல் போன்ற தீவிர முயற்சிகள் தேவைப்படுகின்றன.

3. படித்த இளைஞர்கள் நகரங்களுக்குக் குடிபெயர்தல்

நன்கு படித்து முற்போக்குக் கருத்துள்ள கிராம இளைஞர்கள் அரசுப் பணிகளை நாடி நகரங்களுக்குச் சென்று விடுவதால், கிராமங்களுக்கு அவர்களின் தலைமை கிடைக்காமல் போய்விடு கிறது. படித்த ஒருசில இளைஞர்களும் தங்கள் சொந்த விவசாயம் அல்லது தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களிடம், நல்ல கொள்கைகளில் பிடிப்பும், நம்பிக்கையும் ஏற்படுத்திப் பொதுநலத் தொண்டு செய்து பாமரர்களை உயர்த்தப் பாடுபட ஆயத்தப் படுத் துவது மிகவும் சிக்கலான செயலாகும். இளைஞர் மன்றங்கள் மற்றும் மகளிர் மன்றங்கள் அமைப்பதன் வாயிலாக இதனைச் செய்தே ஆகவேண்டும். கிராமமக்களுக்குத் தொடர்ந்து நல்ல தலைவர்கள் கிடைக்கச் செய்யும் பணி மிகவும் கடினமானதாகும். இதற்குத் தொடர்ந்த முயற்சியும் அளவற்ற பொறுமையும் தேவை.

4. அரசியல்வாதிகளின் தலையீடு

அரசியல் வாதிகளின் தலையீட்டினால் கிராமமக்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது. கிராமமக்கள் பல்வேறு அரசியல் கட்சிகளில் சேர்ந்து பல குழுக்களாகப் பிரிந்து விடு கின்றனர். இக்குழுக்களுக்கிடையே போட்டி, பொறாமை, பூசல் ஆகியவை தோன்றுகின்றன. இவர்கள் பதவி ஆசைகொண்டு பொது நன்மையை மறந்து விடுகின்றனர். இவ்வாறாகப் பிரிவு பட்டு நிற்கும் கிராமமக்களை ஒன்று படுத்திப் பொது நலப் பணியில்

ஈடுபடச் செய்யும் முயற்சியை மேற்கொள்ள, பொறுமையும், திறமையும் கொண்டவர்கள் முன்வரவேண்டும். இவர்கள் எந்த அரசியல் கட்சிக் குழுக்களிலும் சேராதவர்களாக இருத்தல் அவசியம்.

இத்தகைய இன்னல்களுக்கு இடையிலும், நம் நாடு முன்னேற வேண்டுமென்றால், கிராம மக்களுக்குக் கல்வியளித்து, அவர்களிடம் நம்பிக்கையையும் வலிமையையும் ஏற்படுத்தி அவர்களை உயர்த்தும் மிகக் கடினமான பணியைச் செய்தே ஆகவேண்டும். சுவாமி விவேகானந்தர் சொல்கிறார்: ஏழைகளிடமும் தாழ்த்தப்பட்ட மக்களிடமும் அளவற்ற அன்பும், அவ்வன்பினால் பெற்ற சிங்க ஏறு போன்ற வலிமையும், அர்ப்பணிப்பு மனப்பான்மையும் கொண்ட ஆண்களும் பெண்களும் தேவை. இந்தியாவின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் அவர்கள் ஆயிரக் கணக்கில் சென்று சேவையில் ஈடுபட வேண்டும் என்பதே நம் பிரார்த்தனையாகும்.

# 35. வித்யாலயப் பொன்விழா

இந்தியா, சுதந்திரப் போராட்டத்தின் உச்ச நிலையில் இருந்த போது வித்யாலயம் பிறந்தது. உப்புச் சத்யாக்கிரகம் முதல் 1942 இயக்கம் ஈறாகச் சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகள் அனைத்திலும், வித்யாலய நிறுவனர் தீவிரப்பங்கேற்றார். பல ஆண்டுகளாக வித்யாலயம் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் உள்ளங்களில் தேசபக்தியையும், தியாக உணர்வையும் தூண்டி வளர்த்துள்ளது. சுதந்திர இந்தியாவில், இந்தியாவிலேயே மிகச் சிறந்த கல்வி நிறுவனங்களுள் ஒன்றாக வித்யாலயம் மலர்ந்தது. முந்நூறு ஏக்கர் நிலப்பரப்பில், ஐந்து சதுக்கங்களில் வித்யாலயத்தின் பன்னிரண்டு நிறுவனங்கள் அமைந்துள்ளன. பாலர் பள்ளியிலிருந்து, டாக்டர் பட்டம் வழங்கும் உயர்கல்வி நிறுவனங்கள் வரை பலதரப்பட்ட கல்வி நிறுவனங்கள் வித்யாலயத்தில் உள்ளன. இவற்றுள், பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மூன்று கல்லூரிகளும் அடங்கும். இவை, B.A., B.Sc., M.A., M.Sc., M. Phil., Ph.D., ஆகிய பட்டங்களுக்குரிய கல்வியளிக்கும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி; B.Ed., M.Ed., M.Phil, மற்றும் Ph.D., பட்டங்களுக்கும், இந்திய கலாச்சாரம் பற்றிய பட்டயத்திற்கும் உரிய கல்வியளிப்பதுடன், விரிவுப்பணிப்பகுதி, ஆராய்ச்சிப்பகுதி மற்றும் பார்வையற்றோர்க்கான ஒருங்கிணைந்த கல்விமையம் ஆகியவற்றையும் கொண்ட கல்வியியல் கல்லூரி, சான்றிதழ்படிப்பு, B.P.Ed., படிப்பு, M.P.Ed. படிப்பு ஆகியவை வழங்கும் உடற் கல்விக் கல்லூரி ஆகும். உடற் கல்விக் கல்லூரியில் விளையாட்டுப்பள்ளி (Sports School)யும் அடங்கும்.

சான்றிதழும், பட்டயமும் வழங்கும் மூன்று கல்வி நிறுவனங்கள் வித்யாலயத்தில் உள்ளன. அவை, சமுதாயப் பாலிடெக்னிக், விவசாயம் மற்றும் கிராம வளர்ச்சி நிறுவனம்; காந்தி ஆதார ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆகும். தொழிற் பகுதி, பாலவாடி, நடுநிலைப்பள்ளி, உறைவிட உயர்நிலைப் பள்ளி, சுவாமி சிவானந்தா மேல்நிலைப்பள்ளி ஆகியன வித்யாலயத்தின் மற்ற நிறுவனங்கள். வித்யாலயக் கல்வி நிலையங்கள்

அனைத்தும், பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் காந்தியடிகள் ஆகியோரின் கல்விக்கோட்பாடுகளைப் பின்பற்றி, மனிதனை மனிதனாக்குகின்ற, ஒழுக்கமளிக்கின்ற கல்வியளித்து ஏழைமக்களுக்கும், நாட்டிற்கும் தொண்டாற்றும் நன்மாணாக்கர் களை உருவாக்குகின்றன. கல்வியின் மூலம் ஆன்மிக நல்லுணர் வுகளை வளர்த்தல், காந்தியடிகளின் ஆதாரக் கல்வித்திட்டம், இடைநிலைக் கல்வியில் தொழிற்கல்வி, குடிமைப்பயிற்சி, கிராமிய உயர்கல்வி, சமுதாயப் பாலிடெக்னிக், முறைசாராக்கல்வி, கிராம வளர்ச்சி போன்றவற்றில் வித்யாலயம் கடந்த ஐம்பது ஆண்டு களாகப் பல பரிசோதனைகள் மேற்கொண்டுள்ளது. 'கல்வியின் பல்வேறு அம்சங்கள்,' 'ஆன்மிகப் பண்புகளை வளர்த்தல்,' 'கிராமவளர்ச்சி-வேலைவாய்ப்பு,' 'உணவு உற்பத்தி,' 'தேசிய வங்கிகளின் சமுதாயக் கடமைகள்,' 'பார்வையற்றோர்க்கான ஒருங்கிணைந்த கல்வி,' 'உடற் பயிற்சியும் உடலியலும்,' 'சூரியசக்தியைப் பயன்படுத்துதல்,' 'வறுமையை நீக்குதல்' போன்ற பொருள்களில் கருத்தரங்குகள் பல வித்யாலயத்தில் நடைபெற்றுள்ளன. காந்தியடிகள். வல்லபாய் பட்டேல், ராஜேந் திரபிரசாத், வினோபாபாவே, ஜெயப்பிரகாஷ்நாராயண், காமராஜ் மற்றும் ராஜாஜி போன்ற நாட்டுத் தலைவர்கள் பலர் சுதந்தி ரத்திற்கு முன்னும், சுதந்திரத்திற்குப் பின்னும் வித்யாலயத்திற்கு வருகை தந்துள்ளனர். இந்தியக் குடியரசுத் தலைவர்களான ராஜேந்திரபிரசாத், டாக்டர் S. ராதாகிருஷ்ணன், திரு. ஜாகிர் உசேன், திரு. V. V. கிரி, திரு. சஞ்சீவரெட்டி ஆகியோரும், மத்திய அமைச்சர்களான திரு. லால்பகதூர்சாஸ்திரி, திரு. பஞ்சாப்ராவ்தேஸ்முக், திரு. ஹுமாயூன்கபீர். திரு. C. சுப்பிர மணியம், திரு. V. K. R. V. ராவ் போன்றவர்களும், மாநில அமைச்சர்கள் பலரும், மற்றப் பிரமுகர்களும் வித்யாலயத்திற்கு வருகை தந்துள்ளனர். வித்யாலயத்தின் பல்வேறு கல்வி நிறுவனங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்விகற்றுச் சென்றுள்ளனர். இத்தகைய சிறப்பான பின்னணியுடன் வித்யா லயம் 1981-ஆம் ஆண்டில் தன் பொன்விழாவைக் கொண்டாட ஆயத்தமாயிற்று. இதற்கென வித்யாலயத்தின்பால் அன்பு கொண்டவர்கள், முன்னாள் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் அடங்கிய பொன்விழாக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவிற்கு, டாக்டர் K. குழந்தைவேல் தலைவராகவும், முன்னாள் மாணவர் சங்கத்தலைவர் திரு. P. K. நடராஜன் துணைத்தலைவராகவும், டாக்டர். H. விசுவேசுவரன் செயலராக வும் இருந்தனர். பொன்விழா நிகழ்ச்சிகளும், வித்யாலயத்தின் வளர்ச்சியும், நம்மக்களின் தேவைகளுக்கும் கல்விமுறைக்கும் ஏற்ப அமைவதே நல்லது என்று கருதப்பட்டது.

சுதந்திரத்திற்குப்பின் இந்தியாவின் கல்வி வரலாற்றை நோக்குவோமாயின், அதில் மிகச்சிறப்பான சாதனைகள் ஒருபுறம் இருக்க, மற்றொருபுறம் இமாலயத் தோல்விகளும் இருப்பதைக் காணலாம்.

கல்வி வளர்ச்சியின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் அதன் பெரிய அளவிலான விரிவாக்கம் ஆகும். கடந்த 35 ஆண்டுகளில் தொடக்கப்பள்ளிகளில் சேர்க்கப்பட்டவர்களின் தொகை அரைக் கோடியிலிருந்து 7 கோடிக்கு உயர்ந்துள்ளது; உயர் தொடக்கப் பள்ளிகளில் இச்சேர்க்கை 20,000 லிருந்து இரண்டு கோடிக்கு உயர்ந்துள்ளது. இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 12,000 லிருந்து 90 லட்சத்திற்கு உயர்ந்துள்ளது. வயதுவந்தோர் கல்வியில் மொத்த மக்கள் தொகையில், நான்கு சதவீதத்திலிருந்து 35 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. உயர் கல்வியில் தான் இவ் வளர்ச்சி மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் ஏற்பட்டது. அதாவது 10,000 லிருந்து 35 லட்சத்திற்கு உயர்ந்துள்ளது. கல்லூரிகளில் இவ்வளர்ச்சி, 200 லிருந்து 4,558 வரையும், பல் கலைக்கழகங்களில் 12 முதல் 119 வரையிலும் ஏற்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட சில நிறுவனங்கள் நாட்டிலேயே மிகச் சிறந்த கல்வி நிறுவனங்களாக வளர்ந்தன. அயல் நாடுகளின் மிக உன்னதமான கல்வி நிறுவனங்களுக்கு ஈடாக இவை வளர்ந்தன. இந்தியத் தொழில்நுட்ப உயர் கல்வி நிறுவனங்கள் (Indian Institutes of Technology), இந்திய நிர்வாகக் கல்வி நிறுவனங்கள் (Indian Institute of Management), பிராந்தியப் பொறியியல் கல்லூரிகள், சில பல்கலைக்கழகங்களின் உயிரியல் மற்றும் மருத்துவத் துறைகள், விவசாயப் பல்கலைக்கழகங்கள் ஆகியனவே இந்நிறுவனங்கள். இவை தங்கள் துறைகளில் ஈடுஇணையற்ற அறிவு வளர்ச்சியை அளித்து, சமூகத்தின் மிகவும் அவசர இன்றியமையாத் தேவைகளை அறிவியல் முறைப்படி நிறைவு செய்து வருகின்றன. இந்த நிறுவனங்கள் பெரிய விஞ்ஞானிகளையும், தொழில் நுட்ப வல்லுநர்களையும் அதிக அளவில் உருவாக்கித் தருகின்றன. இத் தகையவர்களின் தொகையைப் பொறுத்தவரை இந்தியா உலகில் மூன்றாவது இடத்தை வகிக்கின்றது. இந்த விஞ்ஞானிகளின் உதவியாலேயே, நம் நாடு விண்வெளி அறிவியலில் சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ளது. S. L. V-3, ரோகிணி, மற்றும் ஆப்பிள் ஆகியவற்றுடன் Insat-I-B யும் விண்வெளியில் ஏவி வெற்றிபெற இவர்களே காரணமாவர். கடல் வளங்களைக் கண்டறியவும், அண்டார்டிகாவின் வளங்களை அறியவும் இந்த விஞ்ஞானிகளின் துணையே காரணம். இத்தகைய திறமைமிக்க வல்லுநர்

களை உருவாக்கித் தருவதோடு, இந்நிறுவனங்கள், ஐந்தாண்டுத் திட்டங்களை நடைமுறைக்குக் கொணர்வதற்கான வல்லுநர்களை யும் தேசிய அளவிலும், மாநில அளவிலும் உருவாக்கித் தந்துள்ளன. ரஷ்ய நாட்டின் உதவியுடன், ராகேஷ் சர்மா விண் வெளியில் சென்றுவந்தது இந்தியாவின் அண்மைக்காலச் சாதனை யாகும்.

பத்துக்கோடி மாணவர்களைக் கல்வி நிறுவனங்களில் சேர்த்து மிகப்பெரும் அளவில் கல்வியை விரிவுசெய்த சாதனை ஒரு புறம் இருக்க, அரசாங்கமே ஒப்புக்கொண்ட வருந்தத்தக்க உண்மை யாதெனில், பள்ளிகளை விட்டு இடையிலேயே (Drop outs) நின்று விடும் மாணவர்களின் தொகை அளவு கடந்து இருப்பதாகும். ஆண்டுதோறும் நாம் கல்விக்காக ரூ. 3,000 கோடி செலவழிக் கிறோம். பொறியியல் மற்றும் மருத்துவ விஞ்ஞானிகள் வேற்று நாடுகளுக்குச் சென்றுவிடுவதால், செலவைக் காட்டிலும் அதிகப் பயன் தரவேண்டிய தொழிலியல் உயர்கல்விக்கும் மிகுந்த செலவா வதுடன் அதனால் விளையும் சமூகப் பயன்களும் குறைந்து வந்துள்ளன.

திறமைமிக்க கல்வியாளர் டாக்டர் ஆதிசேஷய்யா கூறுகிறார்: ''நம் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கல்வியின் தரமும், ஒழுக்கத்தின் தரமும் மிக மிகச் சீர்குலைந்துவிட்டன. தேர்வுகளில் காப்பியடிப்பது மாணவர்களின் உரிமையென்று கூறுகின்றனர். சில பல்கலைக்கழகங்களில் மூன்று முதல் நான்கு ஆண்டுகள் தேர்வு களே நடைபெறவில்லை. மாணவர்களின் சேர்க்கையிலும் ஆசிரியர்களின் நியமனத்திலும் ஊழல்கள் புகுந்துவிட்டன. வேலையில்லாத் திண்டாட்டம் மாணவனை அச்சுறுத்துகிறது. கடந்த கல்வி ஆண்டில் சில பல்கலைக்கழகங்கள் ஒரு வாரகாலங் கூடப் பணியாற்றவில்லை. வேலை நிறுத்தங்கள், தர்ணாக்கள், கெரோக்கள், பல்கலைக்கழகச் சொத்துக்களைச் சேதப்படுத்துதல் பேருந்துகளையும் ரயில்களையும் கடைகளையும் சேதப்படுத்துதல் போன்ற வன்முறைகள் சர்வ சாதாரணமாகிவிட்டன. கல்வி நிறுவனங்களுக்கு இடையிலுள்ள பூசல்களைத் தீர்ப்பதற்குக் கொலை போன்ற வன்முறைகள் பின்பற்றப்படுகின்றன. சிறந்த கல்விச் சிந்தனையாளர்கள் கல்வியைப் பற்றிக் கண்ட கனவுகள் சிதைந்து வருகின்றன.''

'கல்வியின் மூலம் சமூக, அறநெறி, ஆன்மிக நற்பண்புகளை வளர்த்தல்' என்ற பொருள் பற்றிச் சமீபத்தில் வித்யாலயத்தில்

தேசியக் கருத்தரங்கில், நம் கல்வி முறையின் குறைபாடுகளுக்குக் கீழ்க்கண்ட காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டன :

1. குறுகிய மனப்பான்மை, தீயவழியிலான போட்டிகள், சமூக நலன்கள் புறக்கணிக்கப்படுதல், வெறும் நூலறிவு, ஆகிய தீமைகளுக்கு இட்டுச்செல்லும் கல்விமுறை. சமூகக் குறிக்கோள்களான கூட்டுறவு, உடலுழைப்பு, திறமைகளை வளர்த்தல், நல்லொழுக்கம் ஆகியவற்றைப் புறக்கணிக்கும் கல்விமுறை. மனப்பாடம் செய்தல், குறிப்பிட்ட பாடத்திட்டம் ஆகியவற்றுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து மனவர்ச்சிக்குச் சிறப்பிடம் கொடுக்காத கல்வித்திட்டம்.

2. கல்வி நிறுவனங்கள் சமூகத்திலிருந்து விடுபட்டுச் செயல்புரியும் நிலைமை.

3. கல்வி முறையில் உள்ள, ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலைமை. நல்ல கல்வித்தரத்தை நிலைநிறுத்திவரும் சில சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களில் பெரிய அலுவலர்கள் மற்றும் பணக்காரக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமே சேரமுடிகிறது. இக்கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் கல்விச் செலவும் அதிகமாகிறது. இக்கல்வி நிறுவனங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, தரக்குறைவான கல்வியளிக்கும், பெரும் எண்ணிக்கையிலான கல்வி நிறுவனங்கள். சமூகத்தில் வசதிக்குறைவானவர்களே இவற்றில் சேர்கின்றனர். இவ்வாறான இரட்டைத்தரம் சமூகத்தில் ஏழை பணக்கார வேற்றுமையை அதிகரிக்கச்செய்கிறது.

4. கல்வியின் நல்ல தரம், தரக்குறைவு ஆகியவற்றுக்கு ஆசிரியர்களே இறுதிப் பொறுப்பு என்ற நிலைமை (Accountability) இல்லாதிருப்பது.

5. கல்வியில் அறநெறி, சமூக, ஆன்மிகப் பண்புகள் குறைந்தமையே இக்குறைபாடுகள் அனைத்திற்கும் காரணம்.

இக்குறைபாடுகள் அனைத்தையும் நீக்கி நல்லதொரு கல்வி முறையை உருவாக்குவதில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பொறுப்பு அதிகமாகும். ஆயினும், நல்ல கல்வித்தரத்தை நிலை நிறுத்துவதிலும், அறநெறி, சமூக, ஆன்மிகப் பண்புகளை வளர்ப்பதிலும், கீழ்க்கண்ட அமைப்புகளின் பங்கும், பணியும் மிகவும் முக்கியமானவை என்பதையும் மறந்துவிடக்கூடாது.

1. வீடும், குடும்பமும்.
2. சமூகம்.

3. அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் போன்ற தலைவர்களின் பேச்சுக்கள், நடத்தை, செயல்கள், ஒழுக்கம் போன்றவை.
4. மருத்துவர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், உயர் அலுவலர்கள், தொழிற்சாலை நிர்வாகிகள், தொழில் அதிபர்கள்.
5. சமய நிறுவனங்கள்.
6. வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், செய்தித்தாள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஒலி மற்றும் ஒளி-ஒலி நாடாப் பதிவுகள், போன்ற தகவல் தொடர்பு மற்றும் பொழுது போக்குச் சாதனங்கள்.
7. ஆசிரியர்களும், ஆசிரியர் அணிகளும்
8. கல்வி நிறுவனங்கள்.

அறநெறி மற்றும் சமூக நற்பண்புகளின் வளர்ச்சி என்பது அனைத்துச் சமயங்களின் சாரம் ஆகும். ஆன்மிகப் பண்புகளை வளர்ப்பதன் வாயிலாகவே இவற்றைப் பெறமுடியும்.

அறநெறி, சமூக, ஆன்மிகப் பண்புகளை வளர்ப்பதில் வித்யாலயம் தன் தொடக்க நாளிலிருந்தே அக்கறை கொண்டு வருகின்றது. 'கல்வியின் மூலம் அறநெறி, சமூக, ஆன்மிகப் பண்புகளை வளர்த்தல்' என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு ஒன்று (வித்யாலயப் பொன்விழாவின் நிகழ்ச்சிகளுள் ஒன்றாக) 1980 ஆம் ஆண்டு மே மாதம் வித்யாலயத்தில் நடைபெற்றது. இந்திய அரசின், தேசியக்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (NCERT) கூட்டுறவுடன் இக்கருத்தரங்கு நடைபெற்றது. பாலர் பள்ளிகள், தொடக்கப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் போன்ற கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களிடம் அறநெறி மற்றும் சமூக நற்பண்புகளை வளர்க்கும் வழிமுறைகள் அடங்கிய பாடத்திட்டங்களை இக்கருத்தரங்கு வகுத்தது. மேற்குறிப்பிட்ட அனைத்து நிலைக் கல்வி நிறுவனங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் இப்பாடத்திட்டங்களைச் சரிபார்த்து முடிவு செய்தனர். இக்கருத்தரங்கின் அறிக்கை இரண்டு பதிப்புகள் வெளிவந்துள்ளன.

பொன்விழாவின் ஒரு பகுதியாக, ராமகிருஷ்ண மிஷனைச் சார்ந்த கல்வி நிறுவனங்களின் மாநாடு ஒன்றும் 1979 ஏப்ரல் 30 ஆம் நாளிலிருந்து மே 2 ஆம் நாள் வரை நடைபெற்றது. இம்

மாநாட்டை, ஹைதராபாத் ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி ரங்கநாதானந்தர் தொடங்கி வைத்தார். இந்தியா முழுவதிலுமுள்ள நம் மையங்களிலிருந்து முப்பது சாதுக்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

வித்யாலயத்தின் பொன்விழா, 50 மணி நேர அகண்ட பூஜையுடன் தொடங்கிறது. இந்த அகண்ட பூஜையில், பஜனைகள், பக்திப்பாடல்கள், அர்ச்சனை, ஆரதி ஆகியவை அடங்கும். அகண்ட பூஜை 9-10-1979 அன்று காலை 6-00 மணிக்குத் தொடங்கி 11-10-1979 அன்று காலை 8 மணியுடன் நிறைவுற்றது. இவ்வகண்ட பூஜையைத் தொடர்ந்து, வயது வந்தோர் கல்வி, முறைசாராக் கல்வி, சுவாமி விவேகானந்தரின் போதனைகள், கல்வியில் சமூக, ஆன்மிகப்பண்புகள் ஆகியவைப் பற்றிய கருத்தரங்குகளும் மாநாடுகளும், ராமகிருஷ்ண மிஷன் நிறுவனங்களின் மாநாடும் நடைபெற்றன. பொன் விழா நிகழ்ச்சிகளின் நிறைவு விழா 1980 செப்டம்பர் 15 ஆம் நாள், அழகுற அமைக்கப்பட்ட பந்தலில் எளிமையுடனும், பொலிவுடனும் நிகழ்ந்தது. அவ்விழாப் பந்தலின் மேடையில் அழகுற அலங்கரிக்கப்பெற்ற குருதேவரின் திருவுருவப் படம் வைக்கப்பெற்றிருந்தது. இந்நிறைவு விழாவிற்கு ராமகிருஷ்ண மிஷனின் துணைத்தலைவர் சுவாமி பூதேஷாநந்தர் தலைமை வகித்தார். இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. N. சஞ்சீவரெட்டி நிறைவு விழா உரை நிகழ்த்தினார். தமிழ்நாடு அரசின் சார்பில் ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், கல்வியமைச்சர் திரு. அரங்கநாயகமும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் அதன் சிண்டிகேட் உறுப்பினர் டாக்டர் திருமதி ராஜம்மாள் பி. தேவதாஸ் அவர்களும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் சார்பில் அதன் துணைவேந்தர் திரு A. வெங்கட்ராமனும் இந்திய அரசின் சார்பில் அதன் தொழில்நுட்பக் கல்வியின் பிராந்திய இயக்குநர் திரு. ஜி. சதாசிவமும், மற்றும் நீதிபதி திரு. R. செங்கோட்டு வேலனும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இவர்களைத் தவிர சாதுக்கள் பலர், பக்தர்கள், முன்னாள் மாணவர்கள், அன்பர்கள், பொதுமக்கள் ஆகியோர் பெருந்திரளாக விழாவில் கலந்துகொண்டனர்.

விழாவில், ராமகிருஷ்ண மிஷன் தலைவர், இந்தியப் பிரதமர் ஆகியவர்களிடமிருந்தும் உலக விவசாய நிறுவனம், யுனெஸ்கோ ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நல நிறுவனம், உலக சுகாதார நிறுவனம் ஆகிய நிறுவனங்களிலிருந்தும் வந்த வாழ்த்துச்செய்திகள்

வாசிக்கப்பட்டன. அதன்பின், வித்யாலயத்தில் 25 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய ஊழியர்கள் பாராட்டப்பெற்றனர். அவர்கள் அனைவர்க்கும் நினைவுப் பரிசாக அழகிய தஞ்சாவூர் வெள்ளித் தட்டுகள் வழங்கப்பெற்றன. இவர்களுடன் வித்யாலயத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்த ஆதரவாளர்கள், அன்பர்கள் ஆகியோரும் நினைவுப் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர், அவர்களுள் சுவாமி சர்வக்ஞானந்தர், சுவாமி சோமானந்தர், சுவாமி அவ்யயானந்தர், திரு. T. S. தண்டபாணி, டாக்டர் K. குழந்தைவேல், டாக்டர் H. விசுவேஸ்வரன், டாக்டர் ராவ், திரு. N. பெருமாள், திரு. V. சீனிவாச அய்யர், திரு. N. கிருஷ்ண மூர்த்தி, திரு. புகழும்பெருமாள், திரு. M. A. ராஜகோபால் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

வித்யாலயத்தின் ஐம்பதாண்டுச் சேவையை நினைவுகூரும் வகையில் 50 உயர்நிலைப்பள்ளிகளுக்கு வேதியியல் துணைக் கருவிகள் அடங்கிய பெட்டிகளும், 50 தொடக்கப்பள்ளிகளுக்கு விஞ்ஞானக்கருவிகள் அடங்கிய பெட்டிகளும், 50 பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்களும் வழங்கப்பட்டன. வித்யாலயத்தின் பொன்விழாக் கட்டிடத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. N. சஞ்சீவரெட்டி அவர்கள் திறந்து வைத்தார்கள். பொன் விழாவின் நினைவாக, கவுண்டம்பாளையம், பூச்சியூர், பழனிக் கவுண்டன்புதூர், பழைய புதூர் ஆகிய கிராமங்களில் தொடக்கப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தரப்பட்டன; திரு-மலைநாயக்கன்பாளையத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது.

பொன்விழா பற்றிய வெளியீட்டில் குறிப்பிட்டபடி, 'வித்யாலயத்திற்கு ஆண்டவனின் அருள் பல வழிகளில் கிடைத்தது. அந்த அருளினால், வித்யாலயத்தின் நிறுவனர், இன்னல்களை எதிர்த்து நின்று வெற்றிபெறுவதற்குத் தேவையான வலிமை, மனஉறுதி, தைரியம் ஆகியவற்றைப் பெற்றார். பிரம்மச்சரிய வாழ்க்கை வாழும் அவர் வித்யாலய வளர்ச்சிக்கும், நாட்டு விடுதலைக்கும், நல்வாழ்வுக்கும், நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கும் தம் வாழ்க்கையை அர்ப்பணித்து வருகிறார். ஆண்டவன் அருளால் வித்யாலயத்திற்கு பக்தி மிக்க நண்பர்களும், ஈடுபாடு மிக்க ஊழியர்களும் வாய்த்துள்ளனர். நிறுவனங்கள், வெறும் கட்டிடங்களால் மட்டும் வளர்வதில்லை; மாறாக, அர்ப்பணிப்பு மனப்பான்மையும், கடின உழைப்பும், கொள்கைப்பிடிப்பும் கொண்டு நீண்டநாட்கள் தொடர்ந்து உழைக்கும் ஊழியர்களாலேயே நிறுவனங்கள் வளர்கின்றன. இந்தியா தன் பண்டைப் பெருமையைப்

பெறவேண்டுமென்றால் இதயபூர்வமான உணர்ச்சியும், கடின உழைப்பும் கொண்ட மனிதர்கள் தேவை என்று சுவாமிஜி கூறுகிறார். ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், காந்தியடிகள் ஆகியோரின் அருள் மொழிகளில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு, வெளியிலிருந்து உயர்பதவிகளுக்கான வாய்ப்புகள் வந்தபோதும் அவற்றை ஏற்காமல், வித்யாலயத்தின் மீது பக்திகொண்டு தங்களின் தொடர்ச்சியான ஈடுபாடுமிக்க சேவையினால் அதனை வளர்த்து அந்தச் சேவையில் அளவற்ற மகிழ்ச்சியும் மனநிறைவும் அடையும் ஊழியர்களுக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

## 56. மனையியல் கல்லூரி வெள்ளி விழா

பெண்ணுரிமை மிகவும் அதிகம் உள்ள நாடுகளில்கூட குடும்ப வாழ்க்கையில் கணவனும், மனைவியும் வெவ்வேறு கடமைகளைத் தாம் ஆற்றுகின்றனர். குடும்பத்தின் நல்வாழ்க்கைக்குத் தேவையான புற அமைப்புகளைச் செய்து தருகிறான் கணவன். குடும்பத்தின் அகச் செயல்களான குடும்ப நிர்வாகம், வீட்டின் அழகு, பொருள்களின் ஒழுங்கு, நளினம், ஆகியவற்றை நிர்வகித்து குடும்பத்தில் அன்பு, பாசம் ஆகியவற்றை நிரப்பி, அக்குடும்பத்தில் குழந்தைகள் முதல் அனைவரும் மகிழ்ச்சியுடனும், சுதந்திரமாகவும், திறமையுடனும் வளர உதவி செய்பவள் மனைவியே ஆவாள். இது உண்மையில் ஒரு சிறந்த கலையாகும். இவ்வாறு மகிழ்ச்சி மிக்க குடும்பத்தை அமைப்பதற்குக் கல்வியும், பயிற்சியும் அவசியம். ஆனால் நாட்டின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு குடும்பத்தோடு நிற்பதில்லை. இதுவரை ஆண்கள் மட்டும் ஈடுபட்ட துறைகளான பொறியியல், நிர்வாகம், சட்டம் ஒழுங்கு ஆகியவற்றில் ஒரு சில பெண்கள் ஈடுபட்டாலும் பெருவாரியான பெண்கள் மனையியல், ஆசிரியத்துறை, மருத்துவம், சத்துணவு, குழந்தை வளர்ச்சி, நல் வாழ்வு ஆகிய துறைகளிலேயே ஈடுபட்டுள்ளனர்.

பண்டைய இந்தியாவில் ஆண்களோடு பெண்களும் சரிநிகராகச் சமூகத்தில் வாழ்ந்தனர். ஆனால் மத்திய காலத்தில் இதில் குறைபாடு தோன்றிற்று. பெண்களுக்கான கல்வி வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காக, சுதந்திரத்திற்குப்பின் பல ஆய்வுக்குழுக்களும், ஆணையங்களும் அமைக்கப்பட்டன. உயர்கல்வியைப் பற்றி ஆராய்வதற்காக முதன்முதல் அமைக்கப்பட்ட ஆணையம் ராதா கிருஷ்ணன் ஆணையமாகும். அதைத் தொடர்ந்து, பெண்களின் கல்வி பற்றி ஆராய்வதற்காக 1958 ல் துர்க்காபாய் தேஷ்முக் தலைமையில் தேசியக் கல்வி ஆணையமும், ஹன்சா மேதா குழுவும் அமைக்கப்பட்டன. பெண்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்யவும், பெண்களுக்குரிய கல்விமுறை ஒன்றை வகுக்கவும் 1955 ஆம் ஆண்டில் அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளையும், 1957 ல் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியும் நிறுவப்பட்டன.

இந்தியக் கலாச்சாரப் பின்னணியுடன் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அடிப்படையில் இக்கல்வி முறையை அமைப்பதே இவற்றின் நோக்கமாகும். ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், தூய அன்னை சாரதாமணி தேவியார், காந்தியடிகள் ஆகியோரின் கல்விக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்கள் நடைபெற்று வருகின்றன.

1957ல் டாக்டர் S. ராதாகிருஷ்ணன் இக்கல்லூரியைத் தொடங்கி வைத்தார். 1961ல் டாக்டர் ராஜேந்திரபிரசாத் முதுகலை வகுப்புகளைத் தொடங்கிவைத்தார். தொடர்ந்து வந்த ஆண்டுகளில் இந்திய ஜனாதிபதிகள் டாக்டர் ஜாகிர் உசேனும், திரு. V. V. கிரியும் மனையியல் கல்லூரிக்கு வருகை தந்தனர். மனையியல் கல்லூரி வளாகத்தில் உள்ள கோயிலை பெங்களூர் ராமகிருஷ்ண ஆசிரமத்தின் தலைவர் சுவாமி யதீஸ்வரானந்தர் திறந்துவைத்தார். அறிவியல் முதுகலைக் கட்டிடங்களையும், நூல்நிலையக் கட்டிடத்தையும் முறையே, ராமகிருஷ்ண மிஷன் தலைவர்களாக இருந்த சுவாமி மாதவானந்தர், சுவாமி வீரேசுவரானந்தர் ஆகியோர் திறந்து வைத்தனர். சுவாமி விவேகானந்தர் அரங்கினை, பிரதமர் இந்திரா காந்தி திறந்துவைத்தார். இந்தியாவின் முன்னாள் கல்வி அமைச்சர்களான திரு. ஹுமாயூன் கபீர், டாக்டர் K. L. ஸ்ரீமாலி, டாக்டர் V. K. R. V. ராவ், டாக்டர் சக்ளா ஆகியோரும், மாநில முதல்வர்களான திரு. K. காமராஜர், திரு. பக்தவத்சலம், டாக்டர் M. G. ராமச்சந்திரன் ஆகியோரும், மாநிலக் கல்வி அமைச்சர்களான திரு. K. மாதவ மேனன், திரு. C. சுப்பிரமணியம், டாக்டர் V. R. நெடுஞ்செழியன், திரு. C. அரங்கநாயகம் ஆகியோரும், பல்கலைக்கழக மானியக்குழுவின் தலைவரான டாக்டர் மாதுரிஷா, துணை வேந்தர்கள் பலர், UNO, FAO, UNICEF, UNESCO, WHO போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்கள் மனையியல் கல்லூரிக்கு வந்து சென்றுள்ளனர்.

முதுகலைப்பட்டம், M. Phil பட்டம், டாக்டர் பட்டம், ஆகியவற்றுக்கான 9 சிறப்புப் பாடங்களையும், இளங்கலை பட்ட வகுப்புகளுக்கான 18 சிறப்புப் பாடங்களையும் பெற்றுள்ள இக்கல்லூரியின் மிகச் சிறந்த அம்சம் அதன் விரிவுப்பணித் துறையேயாகும். இளங்கலை மற்றும் முதுகலைப்பட்ட வகுப்புகளில் சமூகப்பணியை ஒரு பாடமாக வைத்திருப்பது மட்டுமன்றி, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தும் மத்திய மற்றும் மாநில அரசின் அலுவலர்களுக்குப் பல்வகையான குறுகியகாலப் பயிற்சி வகுப்புகளை மனை

யியல் கல்லூரி நடத்தியுள்ளது; நடத்தி வருகிறது. இக்கல்லூரி மேற்கொண்ட ஆய்வுகள் பற்றியும், கிராமவளர்ச்சித் திட்டங்கள் பற்றியும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றை இக்கல்லூரி வெளியிட்டுள்ளது. இவ்வாராய்ச்சிகளின் பயனாக, Research Journal on Nutrition and Dietitics என்ற ஆராய்ச்சிச் சஞ்சிகை வெளிவரத் தொடங்கிற்று; விரிவுப் பணியின் விளைவாகத் தமிழில் விஞ்ஞானச் சுடர் என்ற சஞ்சிகை வெளிவருகிறது.

கடந்த முப்பதாண்டுகளில், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து, ஸ்ரீலங்கா, மலேசியா, பிஜி, புரூனி, எதியோப்யா, மாளவி, உகாண்டா, பிரேசில், இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா போன்ற வெளி நாடுகளிலிருந்தும் மாணவர்கள் இக்கல்லூரியில் பல்வேறு துறைகளில் பயின்று பயன்பெற்றுச் சென்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் பலதுறைகளிலும் உயர்ந்த பொறுப்புகளில் பணிவாய்ப்புகள் பெற்றுச் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

1978 ல் பல்கலைக் கழக மானியக்குழு, இக்கல்லூரிக்குத் தன்னாட்சி நிலை வழங்கிற்று. அதன்பின் இக்கல்லூரி ஒரு சிறு பல்கலைக் கழகம் போன்று பணியாற்றி வருகின்றது. தேவைக் கேற்பக் கலைத்திட்டங்களை வகுத்துக்கொள்ளும் உரிமை, பல்வேறு பாடத்துறைகளுக்கிடையே தொடர்பு கொண்ட அணுகு முறை, உண்மையான வாழ்க்கைத் தேவைகளுக்கும், வாழ்க்கைச் சூழ்நிலைகட்கும் பாடத்துறைகளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு, சிறந்த போதனா முறைகள், தேர்வுகள் மற்றும் மதிப்பீட்டு முறைகள் ஆகியன தன்னாட்சி முறையின் சிறப்பு அம்சங்களாகும்.

இக்குறிக்கோள்களை எய்த, கல்வியோடு இணைந்த வேலை யனுபவம், கிராம வளர்ச்சிக்குச் சிறப்பிடம், ஆதார ஊழியர்களுக் கான பயிற்சிகள், கிராமப் பிரச்சனைகள் பற்றிய ஆய்வுகள், இந்திய அரசு, மாநில அரசு ஆகியவற்றுடன் ஒத்துழைப்பு, போன்ற வற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரியாக, இக்கல்லூரி செயல்பட்டபொழுதே புதிய முறைகளைக் கையாண்டு ஆராய்ச்சி, விரிவுப்பணி ஆகியவற்றைச் சிறப்பாகச் செய்து வந்தது. தன்னாட்சி முறையினால் இந்த முயற்சி மேலும் சிறப்படைந்துள்ளது. இக் கல்லூரியின் வெள்ளி விழா நிகழ்ச்சிகளுள் கீழ்க்கண்டவை குறிப்பிடத்தக்கவை: (1) 25 மணி நேர அகண்ட பூஜை (2) இக்

கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் அடிப்படையில் ஆறு ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடுதல் (3) பல்வேறு வகையான கிராம வளர்ச்சித் திட்டங்கள், விவேகானந்தபுரம் பகுதியில் 25 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளுதல் (4) 25 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய ஊழியர்களைப் பாராட்டிக் கௌரவித்தல் (5) சத்துணவு பற்றிய சர்வதேசக் கருத்தரங்கு நடத்துதல் (6) வெள்ளிவிழாக் கட்டிடம் ஒன்று கட்டுதல். இவ்வெள்ளி விழாச் சமயத்தில் இக்கல்லூரி நிறுவனரின் 81 வது ஆண்டு நிறைவும் ஒன்றாக இணைந்தது மகிழ்ச்சிமிக்க செய்தியாகும்.

1984 செப்டெம்பர் 17 ஆம் நாள் நடைபெற்ற, வெள்ளி விழாவை அன்றைய இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் கியானி ஜெயில்சிங் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அவரையும், வெள்ளி விழாவில் கலந்து கொண்ட மற்றவர்களையும் வரவேற்கும் நற்பேறு எனக்கு வாய்த்தது. இந்த விழாவிற்கு நல்வாழ்த்துக் கூறி, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவற்றின் தலைவர் சுவாமி வீரேஸ்வரானந்தர் அவர்களிடமிருந்தும் மற்றும் பல இந்தியத் தலைவர்கள், உலகப்பிரமுகர்கள் பலரிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

தமிழ் நாட்டின் அப்போதைய கல்வியமைச்சர் திரு. C. அரங்கநாயகம் அவர்கள், நூறு மையங்களைக் கொண்ட, வெள்ளிவிழா வயது வந்தோர் கல்வித் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். வெள்ளி விழா நினைவுக்கட்டிடத்திற்கும், தியாகிகள் மண்டபத்திற்கும் இந்தியக் குடியரசுத் தலைவர் அடிக்கல் நட்டார். அப்போது அவர் தம் உரையில், ''தென்னகத்தில் பெண்களுக்குரிய கல்வி நிலையங்களுள் இது மிகப்பெரிய ஒன்றாகும். மனையியல் துறையில் இக்கல்லூரி நம் நாட்டிலேயே மிகப்பெரிய கல்லூரியாகும். இக்கல்லூரியின் நிறுவனர் திரு. T. S. அவினாசிலிங்கம் அவர்கள் மிகப் பெரும் சுதந்திரப் போராட்டவீரரும், காந்தியவாதியும் ஆவார். சுதந்திரத்திற்குப் பின் சென்னை மாநிலத்தின் கல்வியமைச்சராக அவர் பொறுப்பேற்று, சிறந்த நிர்வாகி என்று பெயர் பெற்றவர்; கல்வியுலகிற்கு மிகப்பெரிய சேவைசெய்தவர் பெண்களிடம் உடல், உள்ளம், நல்லுணர்வு, ஆன்ம வளர்ச்சியை ஏற்படுத்தவே இக்கல்வி நிறுவனத்தை அவர் தொடங்கினார்'' குடியரசுத் தலைவர் தம் உரையை நிறைவு செய்யும் முன், இக்கல்லூரி ஒரு பல்கலைக் கழகத்தின் அந்தஸ்தைப் பெறவேண்டும் என்று வாழ்த்தினார். அவர் வாழ்த்துரைக்கேற்ப சில ஆண்டுகளில் இக்கல்லூரி பல்கலைக்கழகமாக உயர்ந்தது.

வெள்ளி விழாவின் மற்றொரு முக்கிய நிகழ்ச்சி, 1983 டிசம்பரில் நிகழ்ந்த, அகில உலக அளவிலான 'பள்ளி மதிய உணவுத் திட்டமும் கல்வியும்' என்பது பற்றிய செயலரங்கு (Workshop) ஆகும். இச்செயலரங்கில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 47 பிரதிநிதிகள் பங்கு கொண்டனர். மதிய உணவும்-கல்வியும் பற்றிப் பல்வேறு கோணங்களில் ஆய்வு நடத்தி, இச் செயலரங்கு பயனுள்ள முடிவுகளைப் பரிந்துரைத்தது.

இக்கல்லூரிகளில் தொடர்ந்து 25 ஆண்டுகள் பணியாற்றிய ஊழியர்களைப் பாராட்டிக் கௌரவித்தது வெள்ளி விழாவின் மற்றொரு சிறப்பு அம்சமாகும். இவ்வாறு பக்தியுடனும், அர்ப்பணிப்பு மனப்பான்மையுடனும் இருபத்தைந்து ஆண்டுகட்கு மேல் பணியாற்றி வரும் ஊழியர்கள் வித்யாலயத்திலும், சாரதாலயத்திலும் இருப்பது குறித்து நாங்கள் மிகவும் பெருமைப்பட்டுப் பெருமிதம் அடைகிறோம். அப்போது உப ஜனாதிபதியாக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்களும், அவரது துணைவியார் திருமதி ஜானகி வெங்கட்ராமன் அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு ஊழியர்களைப் பாராட்டினார்கள். திரு. வெங்கட்ராமன் தம் உரையில், இக்கல்லூரியின் நிறுவனரையும், ஊழியர்களையும், மாணவர்களையும் மனமாரப் பாராட்டினார். இக்கல்லூரி பெண்கள் கல்விக்கு ஆற்றிவரும் ஈடு இணையற்ற நற்பணியையும் பாராட்டிப் புகழ் மாலை சூட்டினார். ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கிராமியக் கல்வி நிறுவனத்திற்குப் பல்கலைக் கழக அந்தஸ்து வழங்கவிருந்தபோது அதன் நிறுவனர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை; ஆனால் அந்த அந்தஸ்து மனையியல் கல்லூரிக்கு விரைவில் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். அவருடைய ஆசிமொழி சில ஆண்டுகளுக்குள்ளேயே உண்மையாயிற்று.

# 37. ஸ்ரீ ராமகிருஷ்ணர் குருபூஜை

'கல்வியென்பது ஒருவனுடைய மூளையில் பல கருத்துக் களைத் திணிப்பதன்று. கற்கும் கருத்துக்கள் உயிரூட்டுவனவாய், ஊக்கம் அளிப்பனவாய், மனிதத்தன்மை தருவனவாய், ஒழுக்கம் அளிப்பனவாய் இருத்தல் வேண்டும்,' என்று சுவாமி விவேகா னந்தர் கூறுகிறார். வெறும் நூலறிவு மட்டும் உண்மையான கல்வியாகாது. கல்வியினால் மாணவனின் பல்வேறு திறமைகளும், நல்லொழுக்கமும் வளர்க்கப்பட வேண்டும். இக்கருத்துக்களை மனதிற்கொண்டு வித்யாலயம், மாணவர்களின் சிறப்பான வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்து கின்றது. இத்திட்டங்களுள் பல்வேறு விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடுவதும் அடங்கும். வித்யாலயத்தில் கொண்டாடப் பெறும் பல்வேறு விழாக்களுள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் குருபூஜை விழா தலையாயதாகும்.

ஒவ்வோர் ஆண்டும் அவ்வாண்டின் முதல் ஞாயிற்றுக் கிழமையன்று வித்யாலயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் குருபூஜை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவதைப் பலரும் நன்கு அறிவர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாழ்ந்து காட்டி அருளிச் செய்த அமுத மொழிகள் மக்களை அடைந்து அவர்களது வாழ்க்கை இறை யுணர்வு, அன்பு, கருணை, ஆன்மநேய ஒருமைப்பாடு, நல்லொ ழுக்கம் போன்ற அறப்பண்புகள் நிறைந்ததாக அமைய, குருபூஜை விழா பெரிதும் துணை செய்து வருகின்றது; இதுவே இந்த உற்சவம் கொண்டாடப்படுவதன் தலையாய நோக்கமும் ஆகும்.

வித்யாலயம் தொடங்கிய நாளிலிருந்து ஏறக்குறைய இந்த அறுபதாண்டுக் காலமும் குருபூஜை விழா தவறாமல் சிறப்புற நடந்து வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். ஒரு கல்வி நிலையம் இத்தகைய பெரிய விழாவைக் கொண்டாடுவது, இந்தியாவிலேயே வித்யாலயம் ஒன்று தான் என்றால் அது மிகை யாகாது. ஆண்டுதோறும் நடைபெறும் இப்பெருவிழாவில்,

ஏறக்குறைய இருபத்தையாயிரம் பக்தர்கள் கலந்து கொண்டு குருதேவரின் திருவருளுக்குப் பாத்திரமாகின்றனர். பெரியவர்கள், இளைஞர்கள், ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர், படித்தவர் கள், பாமரர்கள், செல்வர்கள், ஏழைகள் ஆகிய அனைவர்க்கும் மகிழ்ச்சியும் இன்பமும் தருகின்ற விழா இது. வித்யாலய முன்னாள் மாணவர்கள் பலர் ஒவ்வோர் ஆண்டும் ஒருவரை ஒருவர் சந்தித்துத் தங்களது பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளவும், குருதேவரின் திருவருளைப் பெற்று மனநிறைவு எய்தவும், பெரிய வர்களைச் சந்தித்து ஆசிபெறவும் இவ்விழா ஒரு நல்வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் திரளாகக் கலந்து கொள்ளும் இப்பெருவிழா மிகவும் அமைதியாகவும், கட்டுப்பாட்டுடனும் நடை பெறுவதற்குக் காரணம், இதன் பல்வேறு அம்சங்களையும் நன்கு திட்டமிட்டு முறைப்படுத்திச் செய்வதேயாகும். இத்துணைப் பெரிய விழாவிற்குக் கூலி கொடுத்து எந்தவிதப் பணியாட்களை யும் நியமிப்பதில்லை. அனைத்துப்பணிகளையும் உயர்வு தாழ்வு பாராது, மாணவர்களும் ஆசிரியர்களும் பங்கிட்டுக் கொண்டு கூட்டுறவுடன் சிறப்புறச் செய்கின்றனர்.

இப்பெருவிழாவுக்குரிய அனைத்துப் பணிகளும், ஆயத்தங் களும் ஏறக்குறை ஒருவார காலம் நடைபெறும். அந்த நாட்களில் வித்யாலய மாணவர்களும், ஆசிரியர்களும், மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும், சேவையுணர்வோடும் தேனீக்கள்போல் சுறு சுறுப்புடன் செயலில் ஈடுபடுவார்கள்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறும் பெரிய விழாப் பந்தல், அன்னதானத்திற்குரிய பெரிய பந்தல், ஆன்மிக நூல்கள் விற்பனையாகும் இடத்திற்கான பந்தல்கள், மற்றும் சில சிறிய பந்தல்களை அமைத்தல், சிற்றுண்டிச்சாலை ஏற்பாடு, சைக்கிள் கள், ஸ்கூட்டர்கள், கார்கள் போன்ற வாகனங்களைப் பாது காத்துக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள், செருப்பு, குடைகள், பக்தர் களின் பொருள்கள் ஆகியவற்றைப் பாதுக்காத்துத் திருப்பிக் கொடுப்பதற்கான ஆயத்தங்கள், அன்னதானத்திற்கு வேண்டிய உணவு வகைகள் தயாரிப்பு, அவற்றுக்குரிய பாத்திரங்கள் சேகரித்தல், சுத்தப்படுத்தல், அன்னதான சமாராதனையில் பரி மாறுவதற்கான ஏற்பாடுகள், பொருட்காட்சி அமைத்தல், உற்சவத் திற்கான பொருட்கள் சேகரிப்பு, விழாப்பந்தல் முகப்பு அலங்காரம், விழாப்பந்தலில் குருதேவர் திருவுருவப்பட அலங்காரம், விழாவிற்கு வரும் வாகனங்களின் போக்குவரத்தை ஒழுங்கு

படுத்தல், விழாவையொட்டி, வியாபாரிகள் அமைக்கும் கடைகளை ஒழுங்குபடுத்தல், கூட்டத்தில் அமைதியைப் பாதுகாத்தல், தண்ணீர்ப்பந்தல் ஏற்பாடு, துப்புரவுப்பணிகளை மேற்கொள்ளல், சிறப்பு விருந்தினர்களை உபசரித்தல், முதல் உதவி ஏற்பாடு, உற்சவத்திற்கு முன் இரவும், உற்சவத்தன்று பகலிலும், இரவிலும் காவல் காத்தல் போன்றவை இவ்விழாவின் பல்வேறு பணிகளாகும். இவ்வனைத்துப் பணிகளையும் மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து பேசி, நன்கு திட்டமிட்டு விழாவைச் சிறப்புற நிறைவேற்றுவதே இவ்விழாவின் சிறப்பாகும்.

குருபூஜை, முற்பகல் விழா, பிற்பகல் விழா என்று இருபெரும் பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது. முற்பகல் விழா அதிகாலை 5.30 மணிக்கு வித்யாலயக் கோயிலில் குருதேவர் சந்நிதியில் பூஜையுடன் தொடங்குகின்றது. பின்னர் விழாப்பந்தலில் மிகவும் அழகுடனும், கலைநேர்த்தியுடனும் அலங்கரிக்கப் பெற்றுள்ள குருதேவர் திருவுருவப்படத்தின் முன் பஜனைகள் தொடங்கி 9-00 மணி வரை தொடர்ந்து நிகழும். வித்யாலயத்தின் பல்வேறு பகுதிகளின் மாணவர்கள், சுற்றுப்புறக் கிராமங்களின் பஜனைக் குழுவினர், கோவை ஸ்ரீ அவினாசிலிங்கம் பல்கலைக்கழக மாணவியர், சேவாநிலையம், சிரமிக் வித்யாபீடம், விவேகானந்த புரம் போன்ற பகுதியினர் தனித்தனியாகத் தொடர்ந்து அற்புதமாகப் பஜனைகள் நிகழ்த்துவார்கள். காலை 7.00 மணிக்கு வித்யாலயக் கொடியேற்றப்பட்டுக் கொடிவணக்கம் நிகழும். பாண்டு வாத்திய இசையுடன் வித்யாலய மாணவர்கள் அணி வகுத்துவந்து, கொடியேற்ற நிகழ்ச்சியை நடத்துவது அழகான காட்சியாக இருக்கும்.

காலை 9.00 மணி வரையிலும் தொடர்ந்து நடைபெறும் பஜனை நிகழ்ச்சிக்குப் பின், பந்தல் மேடையில் கல்விப்பொருட்காட்சித் திறப்புவிழாக் கூட்டம் நடைபெறும். கல்விப் பொருட்காட்சி என்பது குருபூஜை விழாவின் முக்கிய அங்கமாகும். உற்சவத்திற்கு வரும் பக்தர்களும், அன்பர்களும் இறையருள் பெற்று ஆன்ம வளர்ச்சி பெறுவதுடன், தங்கள் அறிவுக்கும் விருந்து பெற்றுச் செல்வதற்கு இக்கல்விப் பொருட்காட்சி நல்லுதவி செய்கிறது. வித்யாலயத்தின் பல்வேறு நிறுவனங்களின் மாணவர்களும், ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே இப்பொருட்காட்சியில் இடம் பெறும் காட்சிப் பொருள்களைத் தயாரிப்பதில் ஈடுபடுவார்கள். ஒவ்வொரு நிறுவனமும் தனக்கென ஒரு பொருளை (Topic) எடுத்துக் கொண்டு, அதனை விளக்குவதற்குரிய படங்கள், வரைபடங்கள், மாதிரிகள் போன்றவற்றை

அழகுறவும், கலை நுணுக்கத்துடனும் தயாரித்துக் காட்சிக்கு வைக்கும். வளர்ந்துவரும் அறிவியல், பொறியியல், விவசாயம், தொழில்கள், கலைகள், சமூகவளர்ச்சி, சமயக் கருத்துக்கள், நாட்டு நலப்பணிகள், ஆன்றோர்களின் வாழ்க்கை வரலாறுகள் போன்றவை பற்றி இப்பொருட்காட்சி அமையும். வித்யாலய நிறுவனங்களைத் தவிர, கோவை மனையியல் பல்கலைக்கழகம், மற்றும் சில நிறுவனங்களின் காட்சிப் பகுதிகளும் இப்பொருட் காட்சியில் இடம்பெறும். மாணவர்களின் சிந்தனைத் திறன், படைப்பாற்றல், கலையுணர்ச்சி, அழகுணர்ச்சி போன்றவை வளர்வதற்கு இப்பொருட்காட்சி சிறந்த சாதனமாக அமைகின்றது என்பதில் ஐயமில்லை. பொருட்காட்சித் திறப்பு விழாவில் திறப்பு விழாத் தலைவரும், திறப்பாளரும் சிறப்புரைகள் ஆற்றுவார்கள்.

பொருட்காட்சித் திறப்பு விழாவைத் தொடர்ந்து, ஸ்ரீ ராம கிருஷ்ணர் அஷ்டோத்திர அர்ச்சனை நிகழும். பந்தலில் குழுமி யுள்ள பக்தர்கள் அனைவரும் இவ்வர்ச்சனையில் கலந்து கொள்வர்.

அர்ச்சனை முடிந்தவுடன், மகேஸ்வர பூஜை - அன்னதான சமாராதனை தொடங்கும். உயர்ந்தவர் - தாழ்ந்தவர், செல்வர் - வறியவர், படித்தவர் - பாமரர் என்ற வேறுபாடின்றி அனைவரும் ஒன்றாக அமர்ந்து உண்பதே இந்த அன்னதானத்தின் சிறப் பாகும். அன்னதான சமாராதனை காலை சுமார் 10-30 மணிக்குத் தொடங்கி, பிற்பகல் சுமார் 3-00 மணி வரையும் தொடர்ந்து நடைபெறும். இந்தச் சமாராதனைக்கு வேண்டிய உணவு வகைகளைத் தயாரிப்பது, அதனைப் பக்தர்களுக்குப் பரிமாறுவது போன்ற கடினமான, ஆனால் இன்பம் நிறைந்த பணியினை நூற்றுக்கணக்கான வித்யாலய மாணவர்களும், ஆசிரியர்களும் நன்கு திட்டமிட்டுச் சிறப்புற, எந்தவிதக் குழப்பமும் இன்றி அமைதியாக நிறைவேற்றுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த அன்னதான சமாராதனை நடைபெறும் அதே சமயத்தில் விழாப்பந்தலில், சிறப்புப் பஜனை நடைபெறும். பஜனைப் பாடல் நிகழ்ச்சி நடத்தும் குழுவினர், தாங்கள் பாடுவ துடன் பந்தலில் குழுமியுள்ள பக்தர்களையும் ஒன்று சேர்ந்து பாடுமாறு செய்வார்கள். பஜனை நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஹரிகதை அல்லது கதா காலட்சேபம் ஏறக்குறைய இரண்டு மணி நேரம் நிகழும். ஒவ்வோர் ஆண்டும் இராமாயணம், மகாபாரதம், பெரிய புராணம் போன்ற பக்திக் காவியங்களி லிருந்து ஏதேனும் ஒரு பொருள் பற்றியும், சமயச் சான்றோர்கள் வாழ்க்கை பற்றியும் ஹரிகதை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படுகிறது.

மேற்குறித்த நிகழ்ச்சிகள் முற்பகல் நிகழ்ச்சிகளாகும். பிற்பகல் நிகழ்ச்சிகளில் 'குருதேவர் வாழ்வும் - வாக்கும்' பற்றிய இரண்டு சிறப்புச் சொற்பொழிவுகளும், இதற்குத் தலைமை தாங்குபவரின் பேருரையும் இடம் பெறுவதுடன், மாலை வழிபாடும் அதனைத் தொடர்ந்து நாதஸ்வர இன்னிசை நிகழ்ச்சியும் நிகழும். மங்கள கரமான நாதசுர இசையுடனும், குருதேவருக்குச் செய்யும் மங்கள ஆரதியுடனும் விழா இனிது நிறைவுறும். மேற்குறித்த சிறப்புச் சொற்பொழிவுகளுக்கு, ஆழ்ந்த புலமையும், சொல்லாற்றலும், பக்தியும் நிறைந்த தலைசிறந்த அறிஞர்கள் அழைக்கப்படுவர். அதே போன்று, நாதசுர இசைக்குத் தமிழ்நாட்டின் தலைசிறந்த நாதசுரக் கலைஞர்கள் அழைக்கப்படுவர்.

இவ்விழாவின் பல்வேறு செலவுகளுக்குத் தேவையான பணம் முழுதும் வித்யாலயத்தின் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், வித்யாலயத்தில் சேவை யாற்றும் சாதுக்கள் மற்றும் வெளியிலிருக்கும் அன்பர்கள், பக்தர் கள் ஆகியோரால் பொதுமக்களிடமிருந்து வசூலித்த நன்கொடை களின் மூலமாகவே கிடைக்கிறது. உற்சவத்திற்கு ஏறக்குறைய ஓரிருமாதங்களுக்கு முன்பு வரும் தீபாவளி விடுமுறையில் மாணவர் கள் தங்கள் ஊருக்குச் செல்லும்போது தங்கள் பகுதிகளில் இந்த உற்சவ நன்கொடை திரட்டுவதைத் தங்களுக்குக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாகவும், நற்பேறாகவும் கருதுகின்றனர். இவ்வாறு திரட்டப்படும் நன்கொடை விவரங்களும் விழாச் செலவுகளும் ஒவ் வோர் ஆண்டும் விழா அறிக்கையில் இடம் பெற்றுப் பொதுமக்கள் அறியுமாறு செய்யப்படுகின்றன.

இவ்வாறாக, குருபூஜை விழா வித்யாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பிற ஊழியர்கள் ஆகியோரிடம் இறைபக்தி, அன்பு, அருள், நல்லொழுக்கம் உழைப்புக்கு மதிப்பு, கடமையுணர்வு, தலைமைப்பண்புகள், கலையுணர்வு, அழகுணர்வு. ஆன்மப்பயிற்சி, கூட்டுறவு, வேலையில் ஏற்றத்தாழ்வு பாராமை போன்ற நற்பண் புகளை ஏற்படுத்தவும், ஸ்ரீ ராமகிருஷ்ணர், அன்னை சாரதாமணி தேவியார், சுவாமி விவேகானந்தர் போன்ற ஆன்றோர்களின் நற்கருத்துக்கள் மக்களிடம் சென்று சேர்ந்து அவர்களின் பண்பட்ட வாழ்க்கைக்குத் துணைநிற்கவும் உதவி வருகின்றது என்றால் அது மிகையாகாது.

# 38. வித்யாலய வைர விழா

எனது 'The Sacred Touch' என்ற நூல் 1986ல் வெளி வந்தது. அதையடுத்து இந்த ஐந்து ஆண்டுகளில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், கோவை ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி, விவேகானந்தபுரம் விவசாய அறிவியல் மையம் (கிருஷிக் விஞ்ஞான் கேந்திரம்), கோவை ஸ்ரீ அவினாசிலிங்கம் சிரமிக் வித்யாபீடம் ஆகிய நான்கு நிறுவனங்களிலும் பலவகையான முன்னேற்றப் பணிகள் நடைபெற்றுள்ளன. இக்கல்வியாண்டில் நாம் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தின் வைரவிழாவைக் கொண்டாட இருக்கிறோம். இந்த வைரவிழாவை நினைக்கும் போது, என் இதயம் கடந்த அறுபது ஆண்டுகளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் எண்ணங்களில் நிரம்பி, இறைவனுடைய பேரருளை நினைத்து பூரிப்பு அடைகின்றது நான், ராமகிருஷ்ண-விவேகானந்த இயக்கத்தில் ஈடுபட்டது, சுவாமி சிவானந்தரின் அருளுக்குப் பாத்திரமானது, அந்த அருளின் ஆற்றலால் இவ்வளவு பெரிய கல்விப்பணியை ஆற்ற முடிந்தது போன்ற நற்செயல்களுக்காக இறைவனுக்கு என் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளத்திலே உறுதியும், உற்சாகமும் நிரம்பியிருந்த போதும், கடந்த சில நாட்களாகவே என் உடல் தளர்ச்சியுற்று வருவதை நான் உணர்கிறேன். என்னுடன் கூடவே இருந்து வரும் ஆஸ்த்மா நோயும் எனக்குப் பலவகையில் தொந்தரவு கொடுத்து வருகின்றது. வயதான இக்காலத்தில் என்மேல் நிறைந்த அன்பு கொண்டு, ராமகிருஷ்ண சங்கத்தின் தலைமையகம் எனக்கு உறு துணையாக இருந்து வித்யாலயப் பொறுப்புகளை ஏற்று நடத்துவதற்காக சுவாமி தன்மயானந்தரையும், மற்றும் பல சாதுக்களையும் அனுப்பிவைத்துள்ளதை நினைக்கும் போது என் உள்ளம் நன்றிப் பெருக்கால் நிரம்புகிறது. ராமகிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த எட்டுத்துறவியர்கள் வித்யாலயத்தில் சேவை புரிகின்றனர். மிகுந்த அன்புடனும், பொறுப்புடனும் அவர்கள் எல்லாப் பணிகளையும் மிகச் சிறப்பாக ஆற்றி வருகின்றனர். இது எனக்கு

மனநிறைவையும், உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளித்து நன்றிப்பெருக்கைத் தருகிறது. வித்யாலயம் ஆயிரம் காலத்துப் பயிர். இது, வாழையடி வாழையாக வளர்ந்து நின்று நிலவி, கல்வித் தொண்டு, ஆன்மிகப்பணி, நாட்டுமுன்னேற்றப்பணிகள் போன்றவற்றில் ஈடுபட்டுப் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கும், ஊழியர்களுக்கும் பல தலைமுறைகளுக்குச் சேவை செய்து வரும் என்று நான் மனதார நம்புகிறேன்.

வித்யாலயம், தன் அறுபது ஆண்டுகளை நிறைவு செய்து வைர விழாக் கொண்டாடுவதைக் கண்டுகளிக்கும் நற்பேற்றை இறைவன் எனக்கு நல்கியமைக்கு நான் மட்டற்ற மகிழ்ச்சியும், பூரிப்பும் அடைந்து என் இதயம் நிறைந்த நன்றி மலர்களை அவன் மலரடியில் சமர்ப்பிக்கின்றேன். பயனுள்ள பல நிகழ்ச்சிகளுடன் விழா இனிதே நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. மாணவர்கள், ஆசிரியர்கள், இங்குத் தொண்டாற்றும் துறவியர்கள், முன்னாள் மாணவர்கள், பக்தர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இவ்விழாவை வெற்றிகரமாக நடத்த உள்ளனர். வித்யாலயப்பணிகளிலும், கல்விப்பணிகளிலும் நாம் நம்மை மேன்மேலும் ஈடுபடுத்திக் கொள்வதற்கு இவ்விழா நமக்கு உற்சாகத்தையும், உத்வேகத்தையும் அளிக்கும் என்பதில் ஐயமில்லை. நாட்டிலேயே மிகச் சிறந்ததோர் இலட்சிய நிறுவனமாக வித்யாலயம் திகழ வேண்டும் என்ற என் கனவு நனவாவதை நினைத்துப் பூரிப்படைகிறேன்.

மனையியல் கல்லூரி ஒரு பல்கலைக்கழகமாக (Deemed University) உயர்வடைந்தது ஓர் அற்புதமான நிகழ்ச்சியாகும். டாக்டர் திருமதி ராஜம்மாள் P. தேவதாஸ் அவர்களின் அயரா உழைப்பும், ஈடு இணையற்ற உற்சாகமும் என்னுடைய இக் கனவை நனவாக்கின. இச்சமயத்தில் நான் திரு. P. V. நரசிம்ம ராவ் அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். அவர், மத்தியக் கல்வியமைச்சராக இருந்தவர். அவருடைய உதவியும், ஒத்துழைப்பும் இன்றி இப்பல்கலைக்கழகம் உருவாகியிருக்க முடியாது. ஏறக்குறைய இரண்டு-மூன்று ஆண்டுகள், இதற்காக டாக்டர் திருமதி ராஜம்மாள் P. தேவதாஸ் அவர்களும் நானும் பெருமுயற்சி எடுத்துக்கொண்டோம். இதன்பொருட்டு அடிக்கடி டில்லி செல்ல வேண்டியிருந்தது. என்னுடைய உடல்நிலை சரியில்லாமல் இருந்தபொழுது 1988-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நான் டில்லிக்குச் சென்றிருந்தேன். என்னை மிகுந்த அன்புடனும், அக்கறையுடனும் கவனித்துக் கொள்ளும் டாக்டர் சீனிவாசனும், டாக்டர் திருமதி ராஜம்மாள் P. தேவதாஸ் அவர்

களும் என்னுடன் டில்லிக்கு வந்திருந்தனர். அப்பொழுது நாங்கள் கல்வியமைச்சர் திரு. P. V. நரசிம்மராவ் அவர்களை நேரில் சந்தித்து அவருடைய ஒப்புதலைப் பெற்றோம். இவ்வொப்புதல் அளித்த சில நாட்களிலேயே அவர் கல்வித்துறையிலிருந்து வெளி விவகாரத் துறைக்கு மாற்றப்பட்டார். என்னே இறைவனுடைய அருள்!

இன்று பல்கலைக்கழகம் உருவாகி மனத்திற்கு மகிழ்ச்சியை அளித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இதற்காக அன்று எத்தனை இன்னல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது! டாக்டர் திருமதி ராஜம்மாள் P. தேவதாஸ் அவர்களின் விடாமுயற்சியும், டாக்டர் K. குழந்தைவேலு அவர்களின் அயரா உழைப்பும் இதைச் செயலாக்கின. ஆகஸ்ட் மாதம் பல்கலைகழகத் தொடக்க விழா விற்கு, இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. R. வெங்கட்ராமனும் அவரது துணைவியாரும் வந்திருந்து சிறப்பித்தனர். தமிழ்நாடு ஆளுநர் திரு. P. C. அலெக்ஸாண்டர் அவர்களும், திரு. P. V. நரசிம்மராவ் அவர்களும் இதில் பங்கேற்றுப் பெருமைப் படுத்தினர். இந்த நாள், மனையியல் கல்லூரிக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாக அமைந்தது.

இந்த ஐந்து ஆண்டுகளில் கோவை ஸ்ரீ அவினாசிலிங்கம் சிரமிக் வித்யாபீடமும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளது. சர்வோதய ஊழியரும், காந்தியவாதியுமான திரு. ராமச்சந்திரன் அவர்கள் தம் சீரிய உழைப்பால் ஓரளவுக்கு வளர்ந்திருந்த இந்த நிறுவனத்தை, ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய மாருதி உடற்கல்விக் கல்லூரியின் ஓய்வு பெற்ற முதல்வர் திரு N. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இயக்குனராக இருந்து அரும்பாடு பட்டுச் சிறப்பாக வளர்த்துள்ளார்; வளர்த்தும் வருகிறார். ஏழை மக்களுக்கும், ஓரளவு கல்வி கற்றவர்களுக்கும் இந்நிறுவனம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இளைஞர்களாக இருக்கும் ஆண்-பெண் இருபாலரும் பல்வேறு வகையான தொழிற் பயிற்சிகளைப்பெற்று எதிர்காலத்தில் பெரும்பாலும் சுயவேலை யில் ஈடுபட்டுத் தங்கள் வருவாயைப் பெருக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கான நல்வாய்ப்புகளை வழங்கி நற்பணியாற்றி வருகின்றது. இவ்வகையான தொழிற் பயிற்சிகள் அளிப்பதுடன் இங்குப் பயிலும் மாணவர்களுக்கு நாட்டுப்பற்று, நல் லொழுக்கம், ஆன்மப்பயிற்சி ஆகியவற்றிலும் இந்நிறுவனம் பயிற்சியளித்து வருகின்றது. இந்நிறுவனத்தில் அமைந்துள்ள தியாகிகள் மண்டபத்தில் சுதந்திரப் போராட்டத்தில் என்னுடன் இணைந்து ஈடுபட்டுப் பணியாற்றிய தியாகிகள் படம் வைக்கப்

பட்டுள்ளது. இங்கு, பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருக்கு அழகானதொரு வழிபாட்டுக் கூடமும் உள்ளது. நம் ராம கிருஷ்ண மடத்தின் துறவிகள் இங்கு மாதம் இருமுறை, கோவை நகரத்தின் பக்தர்களுக்குப் பயன்படும் வகையில் அந்தர்யோகம், பஜனை, கீதை வகுப்புகள் போன்ற ஆன்மிக நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினவிழா ஆண்டுதோறும் ஜனவரி 12 ஆம் நாளில் 'இளைஞர் தினமாக' வெகு சிறப்பாக இங்குக் கொண்டாடப்பட்டு வருகின்றது. 1988-ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தரின் 125 ஆவது பிறந்தநாள் விழாவையொட்டி, கோவை நகரில் நடத்தப்பட்ட மிகப் பெரிய ஊர்வலத்தில் ஏறக்குறைய 3,000 மாணவர்களும், மற்றும் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தது மறக்க முடியாத ஓர் அற்புத நிகழ்ச்சியாகும்.

விவேகானந்தபுரத்தில் அமைந்திருக்கும் வேளாண்மை விஞ் ஞான மையம் (கிருஷிக் விஞ்ஞான் கேந்திரா) இந்த ஐந்து ஆண்டுகளில் உழவர்கள் மற்றும் கிராம மக்களின் முன்னேற்றத் திற்கான தன் பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றி நல்ல வளர்ச்சி பெற்றுள்ளது; பெற்றுவருகின்றது. கடந்த ஐந்து ஆண்டுகளில் அந்நிறுவனத்திற்குப் பொறுப்பாக இருந்துவரும் திரு. முத்தையா மனோகரின் பெரும் முயற்சியால் அது சீரிய வளர்ச்சி பெற்றுள் ளது. இந்த நிறுவனத்தில் மூன்று ஆண்டுகளுக்கு முன், நீர் வளப் பராமரிப்புப் பிரிவு தொடங்கப்பட்டது. பெரியநாயக்கன் பாளையம், காரமடை, மேட்டுப்பாளையம் போன்ற, குறைந்த மழைப் பகுதிகளில், மழை பெய்யும்போது கிடைக்கும் நீரை எவ்வாறு சேமித்து வைத்து நன்முறையில் விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியும் என்பதைப் பற்றி ஆய்வு செய்து, அதனை மக்களுக்கு எடுத்துக் கூறும் நோக்கத்துடன் இப்பிரிவு செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவின் தொடக்க விழாவில், ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் துணைத் தலைவர் சுவாமி ரங்கநாதானந்தர் அவர் களும், திரு C. சுப்பிரமணியம் அவர்களும் கலந்துகொணடு சிறப் பித்தனர். திரு. செல்வரங்கராஜ் அவர்கள் இப்பிரிவிற்குப் பொறுப்பாக இருந்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

இந்தியா ஒரு வேளாண்மை நாடு. ஆகவே, இந்தியாவின் பல பகுதிகளில் வேளாண்மை விஞ்ஞான மையங்கள் (கிருஷிக் விஞ்ஞான கேந்திரங்கள்), வேளாண்மை விரிவுப் பணிகளிலும், கிராம முன்னேற்றத்திலும் ஈடுபட்டு நற்பணியாற்றி வருகின்றன. இவற்றுள், நமது மையம் முதன்மையாக நின்று நாட்டுப் பணியில் ஈடுபட்டுத் தன் பங்கை ஆற்ற வேண்டுமென்பதுதான் என் ஆவல்.

கண்பார்வையற்ற மாணவர்களுக்கு வித்யாலயம் செய்துவரும் தொண்டு மகத்தானதாகும். கிறிஸ்டபல் பிளைண்டன் மிஷன் (Christoffel Blinden Mission) என்ற ஜெர்மானியத் தொண்டு நிறுவனத்தின் ஆதரவுடன் பணிபுரிந்துவரும் 'பார்வையற்றவர் களுக்கான ஒருங்கிணைந்த கல்வி மையம்', (Integrated Education Centre for the Visually Handicapped) மனிதாபிமான அடிப் படையில் எண்ணற்ற மாணவர்களுக்கு நல்ல சேவை செய்து வரு கின்றது. கிறிஸ்டபல் பிளைண்டன் மிஷனின் கிழக்காசியப் பிரதி நிதியான திரு. ஞானதுரை மைக்கேல், மற்றும் இத்துறையில் சிறப்பான பயிற்சி பெற அமெரிக்கா சென்று டாக்டர் பட்டம் பெற்றுத் திரும்பியுள்ள டாக்டர் M N.G. மணி ஆகியோரும், இவர்களுடன் இணைந்து இப்பணியில் ஈடுபட்டிருக்கும் அனைவ ருக்கும் என் அன்பும் நல்வாழ்த்துக்களும் இதற்கென நம் வித் யாலயக் கல்வியியல் கல்லூரியுடன் இணைந்த Resource and Development Centre பல்வேறு நற்பணிகளுடன், பார்வையற்ற வர்களுக்கான பிரெய்லி பாடநூல்களை வெளியிடும் சிறப்பான பணியினையும் ஆற்றி வருகின்றது. அண்மையில் Computerised Braille System என்ற முன்னேற்றமான முறையின் மூலம் புத்தக வெளியீட்டுப் பணி மேலும் சிறப்படைந்து வருகின்றது. இம்முறை யின் மூலம் நம் நாட்டின் அனைத்து மொழிகளில் புத்தகங்கள் தயா ரிக்கலாம். நம் மாநில அரசு இதன் அவசியத்தையும், மேன்மை யையும் புரிந்து கொண்டு பார்வையற்ற மாணவர்கள், பார்வை யுள்ளவர்களோடு ஒன்றாக ஒரே வகுப்பில் அமர்ந்து கல்வி கற் பது நல்லது என்பதை உணர்ந்து இதற்கு உதவி செய்தால் இப் புதிய முயற்சி மேலும் சிறக்கப் பேருதவியாக அமையும். பார்வையற்றவர்கள், பார்வையுள்ளவர்களுடன் சேர்ந்து படிக் கும் போது அவர்களின் தன்னம்பிக்கை, மனஉறுதி போன்ற சீரிய பண்புகள் வெளிப்படுகின்றன. இயற்கையாக இவர்களிடம் காணப்படும் தாழ்வு மனப்பான்மையும், எதிர்மறை எண்ணங்க ளும் மெல்ல மெல்ல இவர்களிடமிருந்து மறைந்துவிடுகின்றன. இதுமட்டுமல்ல. பார்வையற்றவர்கள் இவ்வாறு பல பள்ளிகளில் சேர்ந்து படிக்கும்போது அரசாங்கத்திற்கும் செலவு குறையும். இப்பொழுது அரசாங்கம் இவர்களுக்காகத் தனிப் பள்ளிகள் நடத்தும் பொழுது கட்டிடம், தனி ஆசிரியர்கள் என்று பலவற் றிற்குப் பெரும் தொகை செலவிட வேண்டியிருக்கிறது. மற்றுமொரு மகிழ்ச்சியான செய்தி : இந்தப் பார்வையற்றோர் கல்விமையத் திற்காகக் கட்டப்பட்டுள்ள மூன்று மாடிக் கட்டிடத்தை வித்யா லய வைர விழாவையொட்டி அண்மையில், மகாராஷ்டிர மாநில ஆளுநரான திரு. C. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில், நம்

ராமகிருஷ்ண மடத்தின் துணைத் தலைவர் சுவாமி ரங்கநாதானந்தாஜி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

வைர விழாவையொட்டி வித்யாலயத்தில், முன்னேற்றத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றத் திட்டமிட்டுச் செயல்பட்டுவருகிறோம். வித்யாலயத்தில் உள்ள சாலைகள் அனைத்தும் செப்பனிடப்பட்டுத் தார்ச்சாலைகளாக மாற்றப்படுகின்றன. 'அருளின் ஆற்றல்' என்ற நூல் வைரவிழா வெளியீடாகத்தான் வெளிவருகின்றது. நம் வித்யாலயத்தின் முன்னாள் மாணவர்கள், இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கான செலவு முழுவதையும் ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளது அவர்கள் என் மீதும், அவர்களை உருவாக்கிய வித்யாலயத்தின் மீதும் கொண்டுள்ள ஒப்பற்ற அன்பையும், ஈடுபாட்டையும் காட்டுகின்றது. முன்னேற்றப் பாதையில் நாம் மேலும் பல சாதனைகளைச் செய்து முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதுதான் வைர விழாவின் முக்கிய நோக்கமாகும். அதற்கு நம் அனைவருக்கும் போதிய சக்தியை இறைவன் அருள வேண்டுமென்று நாம் மனமாரப் பிரார்த்திப்போமாக. அதுவே அவனுடைய அருளின் ஆற்றலாக அமையும்.

---

## 39. இந்தியத்தாய் அழைக்கிறாள்!

தற்சமயம் உலகம் பல பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளது. அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக அழிவை ஏற்படுத்தும் அணுக்குண்டுகளும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மூன்றாவது உலகப்போர் மூண்டால் இவ்வழிவுச் சாதனங்களால் உலகமே அழிந்துவிடும் என்ற அச்சம் உலகைச் சூழ்ந்துள்ளது. இவ்வாறான போர் ஏற்பட்டால் வெற்றிபெற்றவர்கள், அழிக்கப்பட்டவர்கள் என யாரும் இருக்கப்போவதில்லை; அனைவரும் ஒன்றாக அழிந்துபடுவர். ஆர்னால்டு டாயின்பி கூறுகிறார்; ''மேற்கத்தியத் தொழில்நுட்ப அறிவின் காரணமாக, தற்கால உலகம் பொருளியல் அடிப்படையில் ஒன்றுபட்டுள்ளது. இந்த மேற்கத்தியத் திறன், காலத்தையும் தூரத்தையும் வென்றுள்ளது மட்டுமன்றி, உலக மக்களிடம் பயங்கரமான போர்க் கருவிகளையும் யும் கொடுத்துள்ளது. மக்கள் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து கொண்டு அன்பு காட்டுவதற்கு முன்பே இவ்வாயுதங்களால் அழிக்கப்படும் சூழ்நிலையும் தோன்றியுள்ளது. மனிதகுல வரலாற்றின் இத்தகைய பெரும் ஆபத்தான தருணத்தில், இதிலிருந்து விடுபட இந்தியாதான் கதிமோட்சம். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சர்வசமயநோக்கும் அசோகர் மற்றும் காந்தியடிகளின் அகிம்சைத் தத்துவமுமே, உலகைக் காக்கும். மனிதகுலத்தை ஒன்றுபடுத்தத் தேவையான மனப்போக்கும், நல்லுணர்வும் இவற்றிலேயே உள்ளன.'' இச்செய்தியை உலகிற்கு அளிக்க வேண்டுமென்றால் இந்தியா ஒன்றுபட்டு வலிமைபெற வேண்டும். ரஷ்யாவிலும், சீனாவிலும் உள்ளது போன்று, அரசியல் தத்துவத்தின் அடிப்படையில் நம் தேசீய ஒருமைப்பாடு அமையலாகாது. மொழிகள் அல்லது சமயங்களின் ஒருமைப்பாடும் தேசிய ஒருமைப்பாடு ஆகாது. நம் ஒருமைப்பாடு 'வேற்றுமையில் ஒற்றுமை' என்பதாகும். வேறுபாடுகளைப் பொருட்படுத்தாது தேசிய உணர்வை அடிப்படையாகக் கொண்டு இந்த ஒருமைப்பாடு

அமைய வேண்டும். சமயம், பிராந்தியம் போன்ற குறுகிய உணர்வுகளைக் கடந்த ஒரு தேசியத்தன்மை நம்மிடையே மலர வேண்டும். சாதி, இனம், சமயம் போன்றவற்றைக் கடந்து இந்திய மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்திய பெருமை நம் சுதந்திரப் போராட்டத்திற்கு உண்டு. இதனை மேலும் நாம் வலுப்படுத்த வேண்டும். நம்மைப் பிரிக்கக்கூடிய எண்ணங்களையும், செயல்களையும் நாம் அறவே ஒதுக்க வேண்டும். அவை தலையெடுக்காமல் செய்ய வேண்டும். வெறும் சட்டங்களினால் இதனைச் சாதிக்க முடியாது. நம் மக்களின் மன உறுதியினாலேயே இது சாத்தியமாகும்.

ஒன்றுபட்ட பெருமை மிக்க இந்தியாவை உருவாக்க உதவும் வழி முறைகள்:

1. நாட்டிற்கும் மக்களுக்கும் நாம் ஆற்றவேண்டிய கடமையைப் பற்றி எப்பொழுதும் நாம் நினைக்க வேண்டும். ''நாடு நமக்கு என்ன செய்தது என்று கேட்காதீர்கள்; நாட்டிற்கு நாம் என்ன செய்கிறோம் என்றே கேளுங்கள்,'' என்று திரு. கென்னடி கூறியதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

2. இச்செயலை முதலில் இளைஞர்களிடமிருந்து தொடங்க வேண்டும். நாட்டுப்பற்று, அற உணர்வு, சமூக உணர்வு, ஆன்ம உணர்வு ஆகியவற்றை வளர்க்கும் கல்விமுறை வகுக்கப்பட வேண்டும். அன்பு, சகிப்புத் தன்மை, நம் பண்பாட்டைப் பற்றிய பெருமை, எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த சிறந்த குடிமைப் பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

3. அரசியல்வாதிகள், அமைச்சர்கள், நிர்வாகிகள், தொழில் துறையினர் ஆகியவர்களுக்கான அறநெறி விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். இளைஞர்களுக்கு இவர்கள் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும்.

4. சமூக மற்றும் பொருளாதார வேறுபாடுகள் மிகக் குறைவாகவே உள்ள சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. மகத்தான இந்தியாவை உருவாக்கும் பெரும்பணியில் இளைய தலைமுறையினரை ஈடுபடுத்தவேண்டும். நம் தேசிய வாழ்வின் தரம் உயரவேண்டுமென்றால், நாட்டுப்பற்று, நம் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் ஈடுபாடு, ஏழைகள் தாழ்த்தப்பட்டோர் ஆகியோரிடம் அன்பு, கருணை, அவர்களுக்காகத் தியாகம் செய்யும் உணர்வு, பொறாமை, பகைமை போன்ற தீய உணர்வுகள் இன்மை போன்றவை மக்களிடம் வளர்க்கப்பட வேண்டும்.

சுவாமி விவேகானந்தர் சென்னையில் பேசிய தம் உணர்ச்சி மிக்க உரையில் குறிப்பிடுகிறார்: ''இந்தத் தேசியக் கப்பல் எனப் படும் நமது நாடானது கோடிக்கணக்கான மக்களை வாழ்க்கையெனும் கடலைக் கடந்து அக்கரை சேர்க்க உதவியுள்ளது; இதன் மூலம் கோடிக்கணக்கான மக்கள் கரைசேர்ந்து அருள் பெற்றுள்ளனர். ஆனால் இன்றைக்கு, நாம் செய்த தவற்றின் காரணமாக இந்தக் கப்பல் சிறிது பழுதடைந்துள்ளது; அதில் சிறிய துவாரங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தக் காரணத்திற்காக அதை நாம் வெறுத்து ஒதுக்கமுடியுமா? நம் தேசியக் கப்பலில் துவாரம் விழுந்து விட்டால் அதை இந்தத் தேசத்தின் குழந்தைகளான நாம்தான் அடைக்க வேண்டும். நம் இதயத்தின் குருதியால் அதை மகிழ்ச்சியுடன் அடைப்போம். நம் அறிவைப் பயன்படுத்தி அத்துவாரத்தை மூடுவோம். அக்கப்பலை எக்காரணம் கொண்டும் நாம் தூற்றக் கூடாது. உங்களுக்குக் கடவுள் அருள்புரிவாராக!''

இந்த ஆழ்ந்த அன்பு, பக்தி, அர்ப்பணிப்பு ஆகியவற்றிலிருந்து புதிய இந்தியா பிறக்கட்டும்! பெருமையும் நல்வாய்ப்பும் கொண்ட இப்புனிதப்பணியில் நாம் ஒவ்வொருவரும் ஈடுபட்டு, இந்தியாவின் ஆன்மிகச் செய்திகள் உலகெங்கும் பரவிப் புதியதோர் உலகம் பிறக்க வழிவகுப்போமாக! இந்தியாவின் மூலைமுடுக்குகளில் வாழும் விவசாயிகள், தொழிலாளர்கள், ஏழைகள், செல்வர்கள் அனைவரும் இம்மகத்தான அருஞ்செயலில் ஈடுபடுவோம். ஆழ்ந்த பக்தியுடனும், இடையறாத முயற்சியுடனும், பெரிய இன்னல்கள் யாவையும் வென்று நம் குறிக்கோளை அடைய உழைப்போமாக. இப்புனிதப் பணியில் ஈடுபட இந்தியத் தாய் நம்மை அழைக்கிறாள்.

வலிமையும் நேர்மையும் உடையவர்கள், ஆண்மையும் பக்தியும் கொண்டவர்கள், இளைஞர்கள், முதியவர்கள், ஆண்கள்

பெண்கள் அனைவரும் இந்த அழைப்பை ஏற்க முன்வருவார்களாக! இப்புனிதப் பணியில் ஈடுபட்டு அருளும் புகழும் பெறுவார்களாக!

நாம் ஒன்று படுவோம்
நாம் ஒன்று பட்டுப் பேசுவோம்
நம் சிந்தனைகள் ஒன்றாகட்டும்
நம் பிரார்த்தனை பொதுவாகட்டும்
நம் ஆர்வங்கள் ஒன்றாகட்டும்
நம் உணர்வுகள் ஒன்றுபடட்டும்
நம் இதயங்கள் இணையட்டும்
நம் எண்ணங்கள் இணையட்டும்
நம் ஒற்றுமை நிறைவு பெறுக
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

—ரிக்வேதம்

## வித்யாலய ஆரம்பம்/வளர்ச்சி

கோவை
ரேஸ்கோர்ஸ்
சாலையில்
இக்கட்டிடத்தில்
வித்யாலயம் 1930-ல்
ஆரம்பிக்கப்பட்டது





அடுத்து
வெள்ளக்கிணருக்கு
வித்யாலயம்
மாற்றப்பட்டது

போத்தனூரில்
வித்யாலயம் ;
காந்தியடிகள்
அடிக்கல் நாட்டியது
இங்குதான்



# வித்யாலய ஆரம்பம்/வளர்ச்சி



காந்தியடிகள்
வித்யாலய அடிக்கல்
நாட்டல்

பெரியநாயக்கன்
பாளையத்தில்
வித்யாலயம் (இன்று):
முகப்புத்தோற்றம்





வித்யாலயக் கோவில்

# வித்யாலயத்திற்கு வருகை புரிந்த பெரியோர்கள்

தவத்திரு
சுவாமி
மாதவானந்தர்
(ஸ்ரீராமகிருஷ்ண
இயக்கத்தின்
அந்நாள் தலைவர்)





தவத்திரு சுவாமி
வீரேசுவரானந்தர்
(ஸ்ரீராமகிருஷ்ண
இயக்கத்தின்
அந்நாள் தலைவர்)

தவத்திரு சுவாமி
பூதேசானந்தர்
(ஸ்ரீ ராமகிருஷ்ண
இயக்கத்தின் அந்நாள்
உப தலைவர் மற்றும்
இந்நாள் தலைவர்)
திரு சஞ்சீவரெட்டி
(அந்நாள் குடியரசுத்
தலைவர்) மற்றும்
திரு பிரபுதாஸ் பட்வாரி
(அந்நாள் தமிழக
ஆளுநர்)



# வித்யாலயத்திற்கு வருகை புரிந்த பெரியோர்கள்



தவத்திரு சுவாமி
ரங்கநாதானந்தர்
(ஸ்ரீ ராமகிருஷ்ண
இயக்கத்தின்
உபதலைவர்)

தவத்திரு சுவாமி
சித்பவானந்தர்
மற்றும்
திரு சி. சுப்ரமணியம்
(அந்நாள்
மத்திய அமைச்சர்,
மற்றும் இந்நாள்
மகாராஷ்டிர மாநில
ஆளுநர்)





ஆச்சாரிய
திரு வினோபா பாவே
திரு அய்யா
அவர்களுடன்

# வித்யாலத்திற்கு வருகை புரிந்த தேசத்தலைவர்கள்

அந்நாள்
குடியரசுத் தலைவர்
Dr ராஜேந்திரபிரசாத்
மற்றும்
திரு காமராஜர்





அந்நாள்
குடியரசுத் தலைவர்
Dr ராதாகிருஷ்ணன்

அந்நாள்
குடியரசுத் தலைவர்
திரு ஜாகீர் ஹுசேன்



## வித்யாலத்திற்கு வருகை புரிந்த தேசத்தலைவர்கள்



அந்நாள் பிரதமர் திரு
லால்பகதூர் சாஸ்திரி
அவர்கள்



வித்யாலய
மாணவர்களுடன்
திரு அய்யா
அவர்கள்



அந்நாள்
குடியரசுத் தலைவர்
திரு வி. வி. கிரி
அவர்கள்

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் குருபூஜை விழா

ஸ்ரீ ராமகிருஷ்ண
பரமஹம்ஸர்
குருபூஜை





குருபூஜை பந்தல்
நுழை வாயில்

பஜனைக் குழு



## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் குருபூஜை விழா



மகேஸ்வர பூஜை
(அன்னதானம்)
திரு அய்யா அவர்கள்
துவக்கி வைத்தல்



திரு அய்யா அவர்கள்
நன்றி நவிலல்